தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

மைய-மாநில உறவு ஆய்வுக் குழு அறிக்கை


1971

மைய-மாநில உறவு ஆய்வுக் குழு

1971

©
தமிழ்நாடு அரசு
1971

தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு எழுதுபொருள்
அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டது
1971



பாராட்டுரை

திரு மு. கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், முதலமைச்சர் என்னும் முறையில் 1969 மார்ச்சு 17-ம் நாள் முதன் முதலாகப் புது டில்லிக்குச் சென்றிருந்தார். அவ்வமயம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளி வரும் பத்திரிகைகளின் ஐம்பதுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் பற்பல பொருள்கள் குறித்துத் துருவித் துருவி வினாக்களை எழுப்பினர். அவ்வினாக்களுக்கு விடையளிக்கையில், மைய-மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு

மாற்றப்படக் கூடிய அதிகாரங்களைப் பரிந்துரைப்பதற்காக வல்லுநர் குழு ஒன்றினை அமைப்பது பற்றித் தமது அரசு ஆலோசித்து வருவதாகக் குறிப்பிட்டார். சட்ட நுட்பமும் அரசமைப்புச் சட்ட நுணுக்கமும் அறிந்த வல்லுநர்களையும் திறமை மிக்க கல்வி நிபுணர்களையும் இக் குழுவில் சேர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.


அவ்வாறு மாற்றப்படுவதில், அதன் அதிகாரங்கள் சரணடையப்பட்டதாக மைய அரசு கருதாமல் அதன் சுமை குறைக்கப்படுவது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டுமென்று அவர் மேலும் கூறினர்.

அடுத்து, 1969 ஆகஸ்டு 19-ம் நாள், என்னைத் தலைவராகவும் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்களையும் திரு பி. சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்ட மூவர் குழு ஒன்று அமைக்கப்பட்டதாகச் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார். மாநிலங்களுக்கு முழுமையான தன்னுட்சி உரிமை அளிக்கப்படும் வகையில் மாநிலங்களின் அதிகாரங்கள் எந்த வகையில் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதை இக் குழு ஆராயுமென்றும் அவர் கூறினர். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்படும் அவசியம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமன்றி பிற மாற்றுக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளனவென்றும் குறிப்பிட்டார். உண்மையில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்கள் சிலரும் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று விரும்பினர்.

மக்கள் பாராட்டிற்குரிய முதலமைச்சர் இந்தியாவிலேயே முதல் முறையாக இக் குழுவை அமைக்க எடுத்த இம் முடிவு, அவரது மதி நுட்பம் மிக்க அரசியல் மேதைத் திறனுக்கும் தேசியச் சிக்கல்களை அணுகும் சீரிய தன்மைக்கும் எதிர்கால நிகழ்வுகளைத் தெளிந்துணர்ந்து நோக்கும் வல்லமைக்கும் சான்று பகர்வதாகும். பிறரை ஈர்க்கும் சக்திவாய்ந்த இவர், பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம் பெற்றுள்ளார். நமது பரந்த நாட்டில் உண்மையான, என்றும் நிலைத்திடும் இணைப்பாட்சி அமைப்பை உருவாக்கிட அவரது குறிப்பிடத்தக்க தொண்டு, அதன் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்திடுமென்பதில் ஐயமில்லை.

சென்னை,
மே 27, 1971.

ராஜமன்னார்



டாக்டர் பி. வி. ராஜமன்னர்



டாக்டர் ஏ. எல். முதலியார்



திரு பி. சந்திரா ரெட்டி

தலைவர்

டாக்டர் பி. வி. ராஜமன்னார், D.LITT., LL.D.

உறுப்பினர்கள்

டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்,
M.D., LL.D., D.SC., D.C.L., D.LITT., F.R.C.O.G., F.A.C.S.

திரு பி. சந்திரா ரெட்டி, B.A., B.L.

அலுவலர்களும் பணியாளர்களும்

செயலாளர்

திரு வா. ஆ. வேங்கடாசலபதி

உதவிச் செயலாளர்

திரு சா. கஜேந்திரன்

தலைவரின் நேர்முகச் செயலாளர்

திரு என். கே. ராமசாமி

உதவியாளர்கள்—

திரு சா. பே. ஜெகந்நாதம்
(1970 ஏப்ரல் 21-ம் நாள் வரையில்).

திரு சு. சரவணவேலு

திரு சி. த. பாலசுப்ரமணியன்
(1970 மே 2-ம் நாளிலிருந்து).

திரு மா. பாலையா

சுருக்கெழுத்துத் தட்டச்சர் (ரகசியம்)—

திரு எஸ். ரகுநாதன்

சுருக்கெழுத்துத் தட்டச்சர்—

திரு டி. எஸ். சண்முகவேலு
(1969 டிசம்பர் 4-ம் நாள் வரையில்).

தட்டச்சர் (தமிழ்)—

திரு ப. பலராமன்

உள்ளடக்கம்

		பக்கங்கள்
	பாராட்டுரை	i–ii
	முன்னுரை	xi–xiii

அத்தியாயம்

I.	தோற்றுவாய்	1–12
II.	இணைப்பாட்சி அமைப்பு	13–26
III.	ஆட்சி உறவுகள்	27–34
IV.	சட்டமியற்று துறை	35–77
V.	நிதிபற்றிய உறவுகள்	78–139
VI.	மையம் திட்டமிடுதலும் திட்ட ஆணைக் குழுவும்.	140–147
VII.	நீதித் துறை	148–159
VIII.	ஆளுநர்	160–174
IX.	நெருக்கடி நிலை வகையுரைகள்	175–192
X.	பொதுமை ஊழியங்கள்	193-205
XI.	மாநிலத்தின் நிலவரை	206–215
XII.	நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம்.	216–220
XIII.	மொழி	221–229
XIV.	வர்த்தகமும் வாணிகமும்	230–236
XV.	பொது ஒழுங்கமைதி	237–253
XVI.	மாநிலச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான அமைப்பு	254–255
XVII.	மாநிலங்களிடையே நீர்த் தகராறுகள்	256–260
XVIII.	நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள கடற்படுகை	261–265
XIX.	மைய அரசு நிர்வாகம்	266–270
XX.	அரசமைப்புச் சட்டத் திருத்தம்	271–283
XXI.	பரிந்துரைகளின் சுருக்கம்	284–299

இணைப்புகள்

இணைப்பு

		பக்கங்கள்
I.	விருப்பட்டியல்	303–333
II.	குழுவினால் விருப்பட்டியல் அனுப்பப் பெற்றவர்களின் பட்டியல்.	334–336
III.	தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் மைய-மாநில உறவுகள் குறித்துச் சிலர் ஆற்றிய உரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்.	337–344
IV.	வெள்ளை .. அறிக்கையிலும் பிரிட்டிஷ் பாராளுமன்ற இணைக் குழுவின் அறிக்கையிலும் 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் இருந்த சட்டமியற்று பொது அதிகாரப் பட்டியல் பற்றி உள்ளதன் சுருக்கங்கள்.	345–347
V.	ஆளுநரை நியமித்தல் குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.	348
VI.	நெருக்கடிநிலை குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்:—	
	பிரிவு அ—ஒரு மாநிலத்தில் அரசமைப்புச் சட்ட நிர்வாகம் செயல்படாமல் நின்றுவிடுதல்	349–354
	பிரிவு ஆ—தேசிய நெருக்கடிநிலை	355–357
	பிரிவு இ—நிதி நெருக்கடி நிலை.	357–361
VII.	மாநிலத்தின் நிலவரை குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.	362–366

இணைப்பு

இணைப்பு		பக்கங்கள்
VIII.	வர்த்தகமும் வாணிகமும் குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.	367–373
IX.	மைய அரசின் இராணுவப் படைகள் குறித்து விளக்குகின்ற மைய அரசு அதிகாரப் பட்டியலின் 2-வது பதிவை வரைந்தது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.	374–376
X.	அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவது குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.	377–383

குறிப்பு:—இந்நூலுள் 'அ.ச.ம.வி.' என்னும் எழுத்துக்கள் வருமிடங்களில், அவை அரசமைப்புச் சட்டமன்ற விவாதங்கள் என்று பொருள்படும்.

முன்னுரை

மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவுகளை ஆராய்ந்து அந்த உறவுகளை மேம்படுத்துவதற்கான பரிவுரைகளைச் செய்யும் சிறப்பு வாய்ந்த சீரிய பணியை எங்களிடம் ஒப்படைத்தமைக்குத் தமிழ்நாடு அரசுக்கு நாங்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அரசமைப்புச் சட்ட வகையுரைகளையொட்டி, மைய-மாநில உறவுகளின் பல்வேறு அம்சங்களை ஆராய்கையில், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கக் காரணமாயிருந்த திறம்மிக்க, அனுபவம் செறிந்த அரசியல் வல்லுநர்கள், அரசியல்வாதிகள், சட்ட நிபுணர்கள் ஆகியோரைக் குறை காண்பது எங்கள் உள்நோக்கமன்று ; இச்சிக்கலை நாங்கள் அணுகியுள்ள முறையும் அவ்வாறில்லை. ஏனெனில், நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் அவர்கள் அதை முடிவாக்கியுள்ளனர் என்பதை அறிவோம். இணைப்பாட்சி அமைப்பிற்கு அடிப்படையான சில பொதுக் கோட்பாடுகளை மட்டும் அறிவிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரையறுக்க, அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களைப் போல், அரசமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இல்லையென்பதைப் புறக்கணிக்க முடியாது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தை அவர்கள் தம்முன் கொண்டிருந்தனர். இந்த நாட்டின் ஆட்சிக்கான அதன் விரிவான வகையுரைகளைப் புறக்கணிப்பதும் ஒதுக்குவதும் புதிய சுவடியைத் தொடங்குவதும் அவர்களுக்கு எளிதானதாக இல்லை.

நாடு உரிமையடைந்த அதே சமயத்தில் நாட்டுப் பிரிவினையும் நிகழ்ந்தது ; இதனால் அப்போதைய சிக்கல்களும் எதிர்காலச் சிக்கல்களும் உருவாயின. நாட்டின் ஒற்றுமையே பாதிக்கப்படுமோ என்ற அச்சம் இருந்தது. வெளிநாட்டுப் படையெடுப்பு அபாயமும் இருந்தது. அரசமைப்புச் சட்ட வகையுரைகளில் சில, அத்தகைய எதிர்நோக்கும்அபாயங்களை வெளிப்படுத்துகின்றன.

இந்த அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வந்து இருபது ஆண்டுகள் கழிந்துவிட்டன ; பெற்ற அனுபவத்தையொட்டியும் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பு, பல

மாநிலங்களில் பல்வேறு கட்சிகள் ஆளுங்கட்சியாகப் பொறுப் பேற்றல் போன்ற நிகழ்ச்சிகளை யொட்டியும் அதன் வகை யுரைகளை மறுஆய்வு செய்வதற்கான காலம் வந்துள்ளது.

மைய-மாநில உறவினைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டதற் கான மற்றொரு முக்கியச் சூழ்நிலை யாதெனில், மைய அரசின் நிர்வாக ஆணைமூலம் திட்ட ஆணைக்குழு உருவாக்கப்பட்ட தாகும்; அரசமைப்புச் சட்டத்தை வரையும்போது இத் திட்ட ஆணைக்குழு பற்றிச் சிறப்பு அம்சமாகக் கருதப்பட வில்லை; ஆனால், அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படை யாக வகை செய்யப்பட்ட நிதி ஆணைக் குழுவின் முக்கியத்து வத்தை இத்திட்ட ஆணைக்குழு குறைத்துள்ளது. மைய-மாநில உறவுகளில் திட்ட ஆணைக்குழுவின் செயல் விளைவு மிக முக்கியமானது; இதுபற்றி முழுமையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

பிற தொடர்பான அம்சங்களுடன் மேற்சொன்னவற்றை யும் கருத்தில் கொண்டு, மைய-மாநில உறவு குறித்த பல விவகாரங்களையும் இக்குழு ஆராயவேண்டியுள்ளது.

குழுவின் பரிந்துரைகளைச் செய்யும்போது, அரசமைப் பின் இன்றியமையா அடிப்படையினைக் குலைக்கவோ நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு உண்டாக்கவோ இல்லை. இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை அழித்து அதற்குப் பதிலாக மற்றொன்றினை உருவாக்குவது எங்கள் நோக்கமாக இல்லை. இத்தகைய சீர்குலைந்த நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு அரசமைப்பைச் சிதறச் செய்து பின்னர் விருப்பத்திற்கேற்றவாறு மீண்டும் உருவாக்கிட வேண்டுமென்பதும் எமது உள்ளக்கிடக்கையன்று.

மாநிலங்களின் தன்னாட்சி உரிமைக்கு, நாட்டின் ஒருமைப் பாட்டுக்கு உடன்பட்ட தன்னாட்சிக்கு, ஆதரவாக எங்கள் பரிந்துரைகள் பொதுவாக அமைந்துள்ளன என்பது உண்மையே; இது நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளதுமாகும். எங்கள் பரிந்துரைகள் ஏற்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டால் நமது நாட்டு அரசமைப்புச் சட்டம், சீரிய இணைப்பாட்சி அரசு முறைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வினாப்பட்டியலுக்கான விடைகள் எங்களுக்குப் பெரிதும் துணையாயிருந்தன; சர் ஏ. ராமசாமி முதலியார், திரு என்.ஏ. பால்கிவாலா, திரு கே. சந்தானம், திரு எம். பக்தவத்சலம்,

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, திரு ம. பொ. சிவஞான கிராமணியார் முதலிய பொதுவாழ்வில் சிறந்து விளங்கு பவர்களிடமிருந்தும் சட்ட வல்லுநர்களிடமிருந்தும் மற்றவர் களிடமிருந்தும் எங்களுக்குப் பெருந் துணை கிடைத்தது; அவர்கள் எங்களை நேரில் சந்தித்தும் விளக்கம் அளித்தனர்.

எங்களுக்குப் பெருந்துணையாயிருந்த இக்குழுவின் செய லாளர், உதவிச்செயலாளர், ஊழியர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். நன்கு நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்த பின்னர் செயலாளர் தயாரித்து அளித்த குறிப்புகளில் எங்கள் ஆய்வுக்கு ஏற்ற எல்லா விவரங்களும் அடங்கியிருந்தன.

அத்தியாயம் I.

தோற்றுவாய்.

பொது (அரசியல்) துறையில் வெளியான 1969, செப்டம்பர் 22-ம் நாளிட்ட 1741-ம் எண் அரசு ஆணையினால் இக் குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்தது. அரசு ஆணை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

'' 1969, ஆகஸ்டு 19-ம் நாள் சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சரின் அறிவிப்பையொட்டி, இந்திய அரசமைப்புச் சட்ட வகையுரைகளை வைத்துக்கொண்டு ஓர் இணைப்பாட்சி அமைப்பில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிலவ வேண்டிய உறவு பற்றிய அனைத்தையும் ஆராய்ந்து மாநில அரசுக்கு உச்ச அளவு தன்னாட்சி உரிமை கிடைக்கச் செய்யும் வகையில் அரமைப்புச் சட்டத்தில் செய்ய வேண்டிய தக்க திருத்தங்கள் எவையெனக் கூறுமாறு கீழ்க் காண்பவர்கள் அடங்கிய குழுவினை அரசு இதனால் அமைக்கிறது.

(1) டாக்டர் பி. வி. ராஜமன்னார்—தலைவர்.

(2) டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்
(3) திரு பி. சந்திரா ரெட்டி
} உறுப்பினர்கள்.

2. இக்குழுவின் விரிவான பணிவரையறைகள் சம்பந்தப்பட்ட ஆணைகள் உரிய காலத்தில் வெளியிடப்படும்.''

இக்குழுவின் பணிவரையறைகள், 1969, நவம்பர் 15-ம் நாளிட்ட பொது (அரசியல்) துறையின் 2836-ம் எண் அரசு ஆணையில் அறிவிக்கப்பட்டன.

அவையாவன :—

'' மைய-மாநில அரசுகளின் உறவு பற்றி ஆராய்வதற்கான குழுவை அமைத்து வெளியான அரசு ஆணையில் இக் குழுவின் விரிவான பணிவரையறைகள் குறித்த ஆணைகள் உரிய காலத்தில் வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. அந்த அரசு ஆணையில் குறிப்பிட்டபடி, இணைப்பாட்சி அமைப்பில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிலவ வேண்டிய உறவு பற்றிய பிரச்சினை முழுமையையும் இக்குழு

ஆராய வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் தற்போதைய் வகையுரைகளை ஆராயுமாறும் மாநிலத்தின் வரவினங்களைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளைக் கூறு மாறும் இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் நிர்வாகத் துறை, சட்டமியற்று துறை, உயர்நீதி மன்றம் உட்பட நீதித் துறை ஆகியவற்றில் மாநிலத்தின் உச்ச அளவு தன்னாட்சி உரிமையை அடைவதற்கும் கருத்துரை நல்குமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.''

இத் துறையில் ஆர்வம் கொண்டு இது குறித்துப் படித் தறிந்துள்ளவர்களின் கருத்துரைகளைப் பெறும் நோக் கில் இக்குழு வினாப்பட்டியல் ஒன்றினை வெளியிட்டது. இவ் வினாப் பட்டியல் இணைப்பு I-ல் விவரிக்கப்பட்டுள்ளது. வினாப் பட்டியலின் படிகள் விரிந்த அளவில் அனுப்பப்பட்டன. உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள், நிதி ஆணைக் குழுக் களின் முன்னாள் தலைவர்கள், திறம் மிக்க சட்ட வல்லுநர்கள், பொது வாழ்வில் சிறந்த பிற தலைவர்கள், இம் மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், இம்மாநிலத்தின் சார்பில் நாடா ளுமன்றத்துக்குச் சென்றுள்ள உறுப்பினர்கள் ஆகியோருக்கு வினாப் பட்டியல் அனுப்பப்பட்டது—இணைப்பு II-ஐக் காண்க. வினாப் பட்டியலின் தமிழாக்கமும் வழங்கப்பட்டது.

2. பணிவரையறைகளைப் பொறுத்தவரையில், அரசமைப் புச் சட்ட வகையுரைகளையொட்டிக் கீழ்க்காணும் தலைப் புகளை இக்குழு ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டது. அத் தலைப்புகளையொட்டிய விவரங்கள், சம்பவங்கள், சூழ்நிலை கள் முதலியவற்றையும் இக்குழு ஆலோசித்தது. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எவ்வகையிலும் ஊறு செய்யாவண்ணம் அரசமைப்புச் சட்டத்தின் பொதுவான கட்டுக்கோப்பினுள் மாநிலங்களுக்கு முழு அளவு தன்னாட்சி உரிமை எய்தப்பெறும் சீரிய குறிக்கோளுடன் இக்குழு பணியைத் தொடங்கியது:

(1) அரசமைப்புச் சட்டத்தால் அமைக்கப்பட்டுள்ள இணைப்பாட்சி முறை ;

(2) அரசமைப்புச் சட்டத்திலுள்ள ஒற்றையாட்சிப் போக்கும் அதன் செயல்பாடும்—அப் போக்கிற்கான கார ணங்கள் ;

(3) ஆட்சி, நிர்வாகத் துறைகளில் மாநிலத் தன்னாட்சி உரிமையைப் பாதிக்கும் அரசமைப்புச் சட்ட வகையுரைகள்;

(4) அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டி யிலுள்ள I, II, III ஆகிய மைய, மாநில, பொது அதிகாரப் பட்டியல்களில் அடங்கிய சட்ட அதிகாரங்களைப் பகிர்தல் ;

(5) மாநிலத் தன்னாட்சிக்குத் தொடர்பில்லாமல் நாடாளுமன்றத்திற்கு (மையம்) வழங்கப்பட்ட சட்ட அதிகாரங்கள் ;

(6) மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் உள்ளவாறான வரிவிதிப்பு அதிகாரங்கள் பகிர்வு ;

(7) அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு வருவாய்ப் பகிர்வு ;

(8) மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் சட்ட முறையான மானியங்கள் ;

(9) மைய அரசிலிருந்து மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் விருப்பு மானியங்கள் ;

(10) நிதி ஆணைக் குழு ;

(11) மைய அரசிலிருந்து மாநில அரசுகளுக்குக் கடன்கள் (மைய அரசுக்கு மாநில அரசுகள் கடன்பட்டிருத்தல்) ;

(12) மைய அரசு திட்டமிடுதல், திட்ட ஆணைக் குழு ;

(13) உச்ச நீதி மன்றமும் உயர் நீதி மன்றங்களும் ;

(14) ஆளுநரின் பங்கு—அவரது அதிகார அளவும் வரையறையும் ;

(15) நெருக்கடி நிலை வகையுரைகள்—

(அ) 356, 357-வது உறுப்புகள்;

(ஆ) 352, 353, 354-வது உறுப்புகள்;

(இ) 360-வது உறுப்பு;

(16) பொதுமை ஊழியங்கள் ;

(17) மாநிலங்களின் நிலவரை ஒருமைப்பாடு ;

(18) மாநிலங்கள் அவையிலும் மக்கள் அவையிலும் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் ;

(19) மொழிப் பிரச்சினை;

(20) வர்த்தகம், வாணிகம் சம்பந்தப்பட்ட வகையுரைகள்—மாநிலத்திற்குள்ளும் மாநிலங்களுக்கு இடையிலும் ;

(21) மாநிலங்களில் மைய அரசு ரிசர்வ் காவற்படையை அமர்த்துதல் ;

(22) தேர்தல்கள்;

(23) மாநிலங்களுக்கு இடையிலான நீர்த்தகராறுகள் ;

(24) கடற்படுகை ;

(25) மைய நிர்வாகம் ;

(26) அரசமைப்புச் சட்டத் திருத்தம்.

3. அரசமைப்புச் சட்ட வகையுரைகளையும் அவை குறித்து நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளையும் ஆராய்ந்ததுடன்வினுப்

பட்டியலுக்கு அளிக்கப்பட்ட விடைகளையும் திறமையானவர்களும் முதுநிலை அரசு அலுவலர்களும் அளித்த சாட்சியம், சட்ட வல்லுநர்களும் அரசியல் மேதைகளும் புத்தகங்களில் எழுதியுள்ள கருத்துகள், பத்திரிகைகளிலும் பிற இதழ்களிலும் வெளியான கட்டுரைகள் ஆகியவற்றையும் இக்குழு ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டது. இக்குழுவின் பணி சம்பந்தமாக எழும் வினாக்களுக்குத் தெளிவு நல்கக்கூடிய உலகின்பிற அரசமைப்புச் சட்ட வகையுரைகளையும் இக்குழு ஆய்ந்தது.

4. ஆட்சிமுறை, நிர்வாகம், சட்டம், நீதி, பொருளாதாரம் ஆகிய பல துறைகளில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே எழுந்துள்ளதும் எழக்கூடியதுமான பல தகராறுகளை இக்குழு ஆராய்ந்தது. மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிலவவேண்டிய தொடர்புகள் குறித்து முடிவுக்கு வந்துள்ளது. அத்தகைய முடிவுகளின்படி, மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே இணக்கமான உறவை ஏற்படுத்தவும் தேசீய ஒருமைப்பாட்டிற்கு ஊறுநேராவண்ணம் மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பாதுகாக்கவும் இக்குழு பரிவுரைகள் செய்துள்ளது. இப்பரிவுரைகளில் சிலவற்றின்படி அரசமைப்புச் சட்டவகையுரைகளில் சிலவற்றை நீக்கியும் சேர்த்தும் அல்லது மாற்றியமைத்தும் திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கும். பிறவற்றின்படி வழி துறைகள் வகுப்பது உட்பட சட்ட பூர்வமாக இல்லாவிட்டாலும் கட்டுப்படுத்தும் தன்மையதான மரபுகளை உருவாக்கவேண்டியிருக்கும்.

5. நிலைமைகளைச் சமாளிக்க அல்லது சிக்கல்களுக்குத் தீர்வு காண, அரசமைப்புச் சட்டத்தின் மைய—மாநில உறவுகள் பற்றிய வகையுரைகள் போதுமானவையாக இல்லாததாலும், மையத்திலும் மாநிலங்களிலும் பல்வேறு அரசியல் கட்சிகள் ஆட்சிபுரிவதாலும் அண்மைக் காலத்தில் மைய-மாநில உறவுகள் குறித்த விவகாரத்திற்குப் புதிய முக்கியத்துவம் ஏற்பட்டபோதிலும் மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே சரியான, இணக்கமான உறவுகள் இருப்பதற்குத் தேவையான உரிய பாதுகாப்புகள் வேண்டுமென்ற கோரிக்கைகள் உள்ளன. அரசமைப்புச் சட்டம் செயல்படத் தொடங்கியதும் பொதுக் கோட்பாடுகளில் மைய அரசு ஆதிக்கம் செலுத்துகின்றதென்பதுடன் மாநிலங்களுக்கு மட்டுமே சொந்தமான துறைகளிலும் மைய அரசின் ஆதிக்கமிருப்பதாக உணரப்பட்டது. மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பெரிதும் பாதிக்கும் வகையில் மாநிலங்கள் மீது

மைய அரசு ஆதிக்கம் செலுத்தும் போக்கும் உணரப்பட்டது. அரசமைப்புச் சட்டத் தொடக்கத்திற்கு முன்னர் மாநிலங்கள் அனுபவித்து வந்த வரிவிதிப்பு அதிகாரத்தையும் குறைக்கும் மைய அரசின் போக்கிற்கு எதிராக உரத்த குரலெழுப்பப் பட்டது. அப்போதிருந்த மாநிலங்களின் நடவடிக்கையில் மைய அரசு தலையிடுவதற்கு எதிராகவும் கருத்து தெரிவிக்கப் பட்டது. இச் சிக்கல்களால் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பெரிதும் தகராறுகள் எழாவண்ணம் தடுப்புச் சக்திகள் இருந்தன. ஏனெனில், மைய அரசும் மாநில அரசுகளும் ஒரே கட்சியால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.*

6. அரசியல் சார்பற்ற திறம்மிக்க சட்ட நிபுணர்களும் அரசியல் அறிஞர்களும் இந்த உண்மையில் கவனம் செலுத்தினர்.

ஓய்வுபெற்ற இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியும் மூன்றாவது நிதி ஆணைக்குழுவின் தலைவருமான திரு அசோக் சந்தா, '' இந்தியாவில் இணைப்பாட்சி முறை '' என்ற தலைப்புள்ள தமது நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :

''மையத்திலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியின் ஆட்சி இயங்கியதனால் சட்டமியற்றுவதிலும் நிர்வாகப் பொறுப்பிலும் நாடாளுமன்றமே உச்ச அதிகாரம் கொண்டதாகக் கருதப்பட ஊக்கமளிக்கும் நிலை இருந்தது. அரசமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்களின் பொறுப்பாகவுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதிலும் முடிவு செய்வதிலும் தலைமை அமைச்சரும் பிற அமைச்சர்களும் மறைமுகமாகவும் சில வேளைகளில் நேரடியாகவும் நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்கவில்லை, இவ்வாறுமாநிலங்களுக்குஅளிக்கப்பட்ட குறைந்தஅளவுஆட்சி வரம்பும் பழக்கத்தில் சரணடையப்பட்டு வந்தது. பின்னர், ஒரு மாநிலம் அரசமைப்புச் சட்டத்தில் அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை வலியுறுத்தவோ மீளப்பெறவோ முடியா நிலைக்குட்பட்டு விடுகிறது. மைய அரசின் அமைச்சர்கள் காங்கிரசின் உயர்மட்ட அமைப்பில் உறுப்பினர்களாக இருப்பதால் 'அறிவுரை' நல்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது; மாநிலங்களின் ஆதிபத்தியத்திற்கு இதனால் தலையீடோ பாதகமோ இல்லையென்றும் சொல்லப்படுகிறது. இந்தப்

* இது போன்ற கருத்தை திரு பாபடோஷ் தத்தா 1970 டிசம்பர் 31-ம் நாளிட்ட 'காபிடல்' என்ற இதழின் இணைப்பில் வெளியிடப்பட்ட 'மைய மாநில நிதி உறவுகளை மறு ஆய்வு செய்வதன் அவசியம்' என்ற தலைப்புள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

புரட்டுவாதத்தினால் எவரும் ஏமாற்றமடைய மாட்டார்கள்''

1967, ஏப்ரல் 23-ம் நாளிட்ட 'மெயில்' ஏட்டின் தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது :

'' மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையி லான உறவுகளில் எழக்கூடிய இடர்ப்பாடுகள், இந்த நாடு முழுமையிலும் காங்கிரசு கட்சியின் மேலோங்கிய ஆட்சி நிலவியபோதும் இருந்துவந்துள்ளன என்பதை இங்கு நினைவு கூர்வது சிறப்பாகும் . . . ''

1967, ஜனவரி 26-ம் நாளிட்ட, 'இந்து' நாளிதழில், ' மைய-மாநில உறவுகளில் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய நிலைகள்' என்ற தலைப்பின்கீழ் திரு சி. வி. எச். ராவ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் : '' நிர்வாகத்திற்கும் நிதிப் பொறுப்பிற்கும் குறிப்பிட்ட பகுதியில் தன்னாட்சி உரிமையை அரசமைப்புச்சட்டம் மாநில அரசுக்கு வழங்கியிருக்கும்போது, நிதி வேண்டப்படும் தறுவாயிலும் திட்டமிடும் இடரான வேளையிலும் மைய அரசு முனைந்து, நடைமுறையில் இந்த உரிமையைக் குறைக்கின்றதென பல மாநில அரசுகள் கருது கின்றன. உள்நாட்டு அமைதியையும் சட்ட ஒழுங்கையும் பாதுகாத்தல் போன்ற மாநிலங்களுக்கே உரித்தான பொறுப் புகளில் மைய அரசு தலையிட்டதனால் ஓரளவு மாநிலங்கள் அதிருப்தி அடைந்துள்ளன. அடுத்து, உணவுக் கொள்கையும் நிர்வாகப் பிரச்சினையும் உள்ளன. இவற்றில் நாட்டின் நலனை முன்னிட்டு மாநில அரசுகளின் செயல்களில் மைய அரசின் தலையீடு தவிர்க்க முடியாததாகிறது. கடந்த சில ஆண்டுகளில் இச் சிக்கல்களில் சில கடுமையான நிலைக்குச் சென்றுள்ளன. ஆனால் மைய அரசிலும் மாநில அரசுகளிலும் காங்கிரசு கட்சியே ஆதிக்கத்திலிருந்ததால் இச் சிக்கல்கள் பெரும் தகராறுகளாக விரிவடையாது போயின.

அடுத்த தேர்தலுக்குப் பின்னர் மாநில அரசுகள் சில வற்றில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற தால் இச் சிக்கல்கள் பெரிதும் வளரும் என்பதை மறுத் துரைக்க முடியாது ''.

1969, செப்டம்பர் 27-ம் நாளிட்ட 'மெயில்' இதழில் ' இணைப்பாட்சிக்கூறுகள் செயல்படுதல்—வலிவின் அடிப்படையில் கலந்து பேசுதல் ' என்ற தலைப்பின்கீழ் திரு ஏ. என். சட்டநாதன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

'' மைய அரசின் அதிகாரம் எல்லா நேரங்களிலுமே காங்கிரசு அமைச்சரவைகளால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை

இருந்ததில்லை. அவர்கள் வினா எழுப்பியே வந்துள்ளனர். காங்கிரசு கட்சி உயர் மட்டத்தில் மைய-மாநில உறவுகளைத் தீர்த்து வைக்கும் நிலைமையும், சில மாநிலங்களில் காங்கிர சல்லாத அமைச்சரவை இடம் பெற்றிருப்பதால் நடைமுறைக்கு ஒத்து வராது.

ஒரு பொருள் குறித்து ஏற்கனவே காங்கிரசு கட்சியின் அல்லது மைய அரசின் குறிப்பிட்ட கொள்கை இருக்குமானால், தமிழ் நாட்டிலிருந்த முன்னைய காங்கிரசு அரசு அதன் கொள்கையை வலியுறுத்தத் தயங்கியது என்பது யாவரும் அறிந்ததே ''.

'இந்தியாவில் அரசுகளுக்கிடையிலான உறவு' என்ற நூலில் திரு அமல் ரே, இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார் :

'' மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவில் மைய அரசின் கட்டுப்பாடு சிக்கலை உருவாக்கக் கூடியதேயாகும். மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே தகராறு எதுவும் பரவலாக ஏற்படவில்லை. இதற்குக் காரணம், மையத்திலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியின் ஆட்சி இருப்பதுதான் . . .''.

'' மாநிலங்களிலுள்ள காங்கிரசு அரசுகளுக்குச் சில கொள்கைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டளையிடும் கட்சித் தீர்மானங்கள், செயற்குழுவினால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் ; இவை, மைய அரசின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன. எனவே, மாநிலங்களில் காங்கிரசு அரசுகளின் நடவடிக்கைகளின் அடிப்படையைச் செயற்குழுவே பெருமளவிற்கு வகுக்கிறது. கட்சி அமைப்பின் உயர்மட்டத்தில் அடிப்படைக் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன ; இக் கோட்பாடுகள் நிறைவேற்றத்திற்காக மாநில அரசுகளுக்கு அனுப்பப்படுகின்றன '' (பக்கங்கள் 127,128).

மாநில ஆட்சிகளை மைய ஆட்சிக்கு உட்படுத்தும் கூறுகள் இந்திய இணைப்பாட்சியில் செயல் முறையில் உள்ளன. அக்கூறுகளைப் பகுத்தாய்ந்த பின்னர் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :

'' இந்திய இணைப்பாட்சியில் செயல் முறையிலுள்ள மைய அரசை வலுப்படுத்தும் சக்திகளைக் கூர்ந்தாராய்ந்தோம். இச் சக்திகள் மாநிலத் தன்னாட்சி உரிமை கோரும் அதிகாரப் பகிர்வுச் சக்திகளால் தொடர்ந்து எதிர்க்கப்படவில்லையெனினும் இடையிடையே எதிர்க்கப்பட்டு வருகின்றன. தேசியத்

திட்டம், பெருமளவு மானியங்கள், கட்சி ஆகிய மூவகைச் சக்திகளால் உருவாக்கப்பட்ட ஒருமித்த ஒருமைப்பாட்டை அதிகாரப் பகிர்வு சக்திகள் தடுத்து நிறுத்துகின்றன. அதிகாரப் பகிர்வுச் சக்திகளில் ஒன்று, கே. சி. வியர் குறிப்பிடும் மாநில அரசுகளின் விழிப்புணர்ச்சியும் தனித்தியங்கும் உறுதிப்பாடும் ஆகும். இந்த நிலை இந்தியாவில் மெதுவாக, ஆனால் தொடர்ந்து உறுதியாக, வளர்ந்து வருகிறது. தன்னாட்சி உரிமைத் தகுதி வேண்டுமென்ற உணர்ச்சியும் செயலும் மேற்கு ஆஸ்திரேலியா அல்லது குபெக் ஆகிய நாடுகளில் உள்ளது போன்று அடிக்கடி இயங்காமலும் வலிவடையாமலும் தொய்ந்து விடுகின்றன....(பக்கம் 129).

1967-ம் ஆண்டில் தேர்தலுக்கு முன்னர் தமிழ் நாடு சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில் மைய-மாநில உறவுகளின் திருப்தியற்ற தன்மையைக் குறிப்பிட்டும் மைய அரசின் ஆதிக்கத்தை எதிர்த்தும் மாநிலத்திற்கே உரிய துறைகளிலும் மைய அரசு தலையிட்டு வரும் போக்கைக் கண்டித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் உரை நிகழ்த்தியுள்ளதைக் காணலாம். (டாக்டர் ஏ. எல். முதலியார், டாக்டர் வி. கே. ஜான் ஆகியோரும் மற்றவர்களும் ஆற்றிய உரையின் பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு III-ஐக் காண்க.)

7. எனவே, மாநிலத்திற்கு அதிக அளவில் முழுமையான அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கையும் அவசியமான அளவுக்கு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற தேவையும் தமிழ்நாடு அரசின் ஆட்சிப் பொறுப்பில் நிகழ்ந்த அரசியல் கட்சி மாற்றத்தால் புதிதாக எழுப்பப்பட்ட கோரிக்கையல்லவென்பது தெரியவரும். அரசமைப்புச் சட்டம் செயல்படத் தொடங்கியதிலிருந்தே இச் சிக்கல்எழுப்பப்பட்டு வந்துள்ளது; தமிழ்நாட்டின் மறைந்த முதலமைச்சர் டாக்டர் சி. என். அண்ணதுரை அவர்கள், தாம் முதலமைச்சர் பதவியேற்றதும், அமைச்சர் மட்டத்தில் இப் பிரச்சினைக்கு அதிகார பூர்வமான முக்கியத்துவம் அளித்தார். 1967, ஏப்ரல் 8-ம் நாள் புதுடில்லியில் இந்தியப் பத்திரிகையாளர் கழகத்தில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில், மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அவசியமான அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கு அரசமைப்புச் சட்டம் செயல்படுவதை ஆராய்வதற்காக உயர் அதிகார ஆணைக் குழு ஒன்றினை அமைக்கும் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின்படி

மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் வரும் அதிகாரங்களும் மைய அரசினுல் மெதுவாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர்கூறினுர்.

மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்களை வழங்கி விட்டு நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாது காப்பதற்குப் போதுமான அதிகாரத்தை மட்டும் தன்ன கத்தே வைத்துக் கொண்டுள்ள ஒன்றுதான் சீரிய மைய அரசாகும் என்ற கருத்தினையும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1967-68-ம் ஆண்டுக் கான திருத்தியமைத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடந்த பொது விவாதத்திற்குப் பதிலளிக்கையில், 1967, ஜூன் 27-ம் நாளன்று டாக்டர் சி. என். அண்ணுதுரை அவர்கள் ஆற்றிய உரையின் பகுதி, கீழே கொடுக்கப்பட் டுள்ளது :

'' மாநில அரசு மைய அரசுடன் கொண்டுள்ள நிதித் தொடர்பில் மூன்று வகைகள் இருக்கின்றனவென்பதை நினைவில் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முதல் வகை, இங்கு மைய அரசு வசூலிக்கும் வரிகளை ஒதுக்கீடு மூலம் அளிப்பது ; இரண்டாவது, மானி யம் வழங்குவது, மூன்ருவது, திட்டநிதி ஒதுக்கீடு செய்வது. நீங்கள் 1950 முதல் 1967 வரையிலான புள்ளி விவரங்களை ஆழ்ந்து பகுத்தாராய்ந்தால், காலம் செல்லச் செல்ல முதல் இரண்டு இனங்களுக்கும் உள்ள சிறப்புக் குறைந்து மூன்ருவது இனமான திட்ட ஒதுக்கீடு மட்டும் அதிக முக்கியத்துவம் அல்லது மிகுந்த ஆதிக்கம் அடைந்து வருவது அறியப்படும். இது, நிதி ஆணைக் குழுவின் அதிகார வரம்பிற்குள் வருவ தில்லை.

மானியங்கள் என்ற போர்வையில் மைய அரசு அதனி டம் சாட்டையை வைத்துள்ளது ; ஏனெனில், மைய அரசு அதன் உளத்தேர்வின்படி மானியங்களை வழங்குகிறது. திட் டக்குழு உறுப்பினர்கள் எனப்படுவோரின் விருப்பு வெறுப் பிற்கேற்ற வகையில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு வரு கின்றதென்பதைக் கூறிக்கொள்கிறேன். நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தேவைப்படும் பெருமளவுத் தொகை, மற்ருெரு குழுவின் விருப்பு வெறுப்பிற்கேற்ப விடப்பட்டால், இவற்றை மறு ஒதுக்கீடு செய்யும் அவசரத் தேவை எழுந் துள்ளதென்று நான் கருதுகிறேன். இந்தக் குழு, எந்த ஓர் அதிகாரபூர்வமான அமைப்பின் நிர்வாகத்தின் கீழும் இல்லை. திட்டத் தொகையைப் பொறுத்த வரையில் நிதித் தொடர்பு

கள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்; மிக விரைந்து செய்யப்பட வேண்டும். நமக்குச் சேர வேண்டியது நம்மிடமிருந்து கொள்ளை போகக்கூடாது. மாநில அரசுக்கும் மைய அரசுக்குமுள்ள தொடர்பு, மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். நாடாளு மன்றத்தில் அளிக்கப்பட்ட பதில்கள் ஒன்றில் தலைமை அமைச்சர் மேற்சொன்ன கருத்துரையைப் புறக்கணித்துள்ளார். ஆணைக்குழு எதுவும் இதற்கு அவசியமில்லையென்று அவர் தெரிவித்துள்ளார். தலைமை அமைச்சர் இதன் மூலமே இது குறித்த எல்லா விவரங்களையும் அறிந்து இதற்கு நீதி வழங்க முடியுமெனக் கொள்வாரெனில், அந்தக் கூற்றை நான் வரவேற்கிறேன். இன்றுள்ள நிலையினை மறு ஆய்வு செய்வதற்கு அவசியமில்லையாதலால் அத்தகைய ஆணைக்குழு அமைப்பிற்கும் அவசியமில்லையெனத் தலைமை அமைச்சர் கருதுவாரெனில் அப்போது நான், தலைமை அமைச்சரின் கருத்திலிருந்து வேறுபட வேண்டியவனாக உள்ளேன். இந்த மன்றத்திலிருந்து நான் வலியுறுத்த விரும்புகிறேன்—மாநில-மைய அரசு உறவு முறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப்பட வேண்டிய காலம் அவசரமாக வந்துள்ள நிலையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாதென்பதைக் கூறிக்கொள்கிறேன்''.

சட்டமன்றத்தில் 1967, ஜூன் 17-ம் நாளன்று வரவு-செலவுத்திட்டத்தை அளிக்கையில் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

'' இது குறித்து அரசமைப்புச் சட்ட வகையுரைகள் தீர்மானிக்கப்பட்டதிலிருந்து மைய-மாநில நிதி உறவு நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருந்துவந்துள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் எதிர்நோக்கியிருக்கமுடியாத பல புதிய போக்குகளும் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. மைய அரசிடம் ஏற்கனவே பெருமளவு அதிகாரங்கள் குவிந்திருக்க அரசமைப்புச் சட்டம் வகை செய்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எண்ணியிராத புதிய வகைப்பாடு மூலம் மாநிலங்களின் நிலை குறித்துக் கவலை கொள்ளும் அளவுக்கு மைய அரசு மேலும் பெருமளவு அதிகாரங்களை அடைந்துள்ளது.

இப் புதிய போக்கு பொருளாதாரத் திட்டம் சம்பந்தப்பட்டதாகும். திட்டத்திற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், ஒதுக்கீடு செய்தல் அதைப் பயன்படுத்தல் சம்பந்தமாக மைய அரசு கொண்டுள்ள அதிகாரங்கள், மைய அரசிடம் உதவிக்காக இறைஞ்சி வேண்டுபவர்களின் நிலைக்கு மாநிலங்களின் தகுதியைக் குறைத்துள்ளன. கட்சிக் கட்டுப்பாட்டுக்கு

உட்பட்டுச் சிலர் இச் சிக்கலை விவாதிக்காமல் ஒதுங்கியிருந்தாலும், பொருளாதார ரீதியில் இச்சிக்கலை நோக்குபவர்கள் அனைவரும் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே நிதித் தொடர்பு சம்பந்தப்பட்ட போக்குகள் குறித்துக் கவலை கொண்டுள்ளனர்.

மாநிலங்கள் அவற்றின் விருப்பப்படி நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் முழு உரிமையுடன் வருவாய்ப் பெருக்க வாயில்களை ஏற்படுத்திக் கொண்டும் ஒப்புக் கொண்ட அடிப்படையில் திட்ட ஆதாரங்களை ஒதுக்கீடு செய்தும் மாநிலங்களின் நிதி அடிப்படை பெருமளவு வலிவாக்கப்பட்டாலன்றி புதிய சமுதாயம் காண வேண்டுமென்னும் மக்களின் வளர்ந்து வரும் விருப்பத்தினைச் சமாளிப்பதில் மாநில அரசுகள் அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்றிட இயலாதென்பதைப் பல மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் உணர்ந்துள்ளனர்.

மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவுகள் குறித்து மறு ஆய்வு செய்யும் அவசியம் குறித்து என்னைப் போன்றே இத் தலைவர்களும் குறிப்பிட்டுள்ளதை அவையினர் அறிவார்கள். இந்த உறவுகளைத் திருப்திகரமான அடிப்படையில் ஏற்படுத்துவதற்கான அவசியம் உருவாகியுள்ளதை யாவரும் ஏற்பர் என்பதில் ஐயமில்லை. வருவாய்ப் பங்கீடு, அதிகாரப் பிரிவினை, திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஆகிய செயல்களில் இது வரையில் ஏற்பட்ட அனுபவம் கசப்பை அளிப்பதாகவே இருந்து வந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது. இக் கசப்புணர்ச்சியைப் போக்கி மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பயன் தரத்தக்க உறவுகளை வளர்ப்பதற்கான வழிவகைகளை உருவாக்குவது அவசரத் தேவையாகி விட்டது. நான் கூறியுள்ள சிக்கல் குறித்து எவரும் அச்சம் கொள்ளவோ தவறாகப் பொருள் கொள்ளவோ தேவையில்லை ; இது குறித்து சிந்தித்துப் பார்த்தல் இன்றியமையாததாகும். இணக்கமான நல்லெண்ணத்தின் மூலமும் உண்மை நிலையைப் புரிந்து கொள்வதன் மூலமும் நிலையானதும் நலன் தரத்தக்கதுமான முடிவை நாம் காண வேண்டுமென்பதே என் வேட்கையாகும்''.

1970, நவம்பர் திங்களில் மைசூர் மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல், மைய-மாநில உறவுகளில் ஏற்பட்டுள்ள பொதுவான சீர்கேட்டினைக் குறிப்பிட்டு புது டில்லியிலுள்ள மாநிலங்களின் மாளிகைகளும், பவனங்களும்

தூதரகங்களின் தன்மையைப் பெறும் நாள் வரக்கூடுமென்று கூறுமளவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மைய-மாநில அரசு உறவுகள் குறித்த சிக்கல் ஏற்கனவே கடும் வாதத்திற்கு உட்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொண்டாக வேண்டிய உண்மையென்று அவர் கூறியுள்ளார். (1970, நவம்பர் 29-ம் நாளிட்ட 'மெயில்' இதழைக் காண்க.)

அத்தியாயம் II.

இணைப்பாட்சி அமைப்பு

1950, ஜனவரி 26-ம் நாளன்று செயற்படுத்தப்பட்ட அரசமைப்புச் சட்டத்தால் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட அரசு முறை யாதென்பதை முதற்கண் முடிவு செய்ய வேண்டும். இவ்வினாவிற்கு விடைகாண்பதற்கு முன்னர், அரசமைப்புச் சட்ட மன்றத்தால் 1947, ஜனவரி 22-ம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேருவின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்மானத்தையொட்டித் தொடங்குவது சிறப்புடைத்தாகும். இத் தீர்மானத்தின் சிறப்புப்பகுதி வருமாறு :—

" தற்போது பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய ஆட்சிப் பகுதிகளும் இந்திய சமஸ்தானங்களாக அமைந்துள்ள ஆட்சிப் பகுதிகளும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியிலுள்ள இந்தியாவின் பிற பகுதிகளும் சுதந்திர ஆதிக்கமுள்ள இந்தியாவில் அமைய விரும்பும் மாநிலங்களும் பிற ஆட்சிப் பகுதிகளும் ஒன்றியமாக இருக்கும் ;

இப்போதுள்ள அவற்றின் எல்லைகளுடனோ அல்லது அரசமைப்புச் சட்டமன்றத்தாலும் பின்னர் அரசமைப்புச் சட்ட விதிகளின் படியும் தீர்மானிக்கப்படக்கூடிய பிற எல்லைகளுடனோ மேற்சொன்ன ஆட்சிப் பகுதிகள் தன்னாட்சி உரிமைத் தகுதியைப் பெற்று தன்னகத்தே வைத்திருக்கும் எஞ்சிய அதிகாரங்களுடன் அமைந்து அரசின் எல்லா அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றும். மைய அரசிடம் நிலைபெற்றுள்ள அல்லது மைய அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களும் கடமைகளும் நீங்கலாக அல்லது மைய அரசிடம் உள்ளடங்கியுள்ள அல்லது பொருள் கொள்ளத்தக்க அதிகாரங்கள் நீங்கலாக மேற்சொன்ன ஆட்சிப் பகுதிகள் ஆட்சி செலுத்தும்;

மேலும், சுதந்திர ஆதிபத்தியமுள்ள இந்தியாவின் எல்லா அதிகாரமும் நிர்வாகமும் அதிலமைந்துள்ள பகுதிகளும் அரசின் அங்கங்களும் மக்களிடமிருந்து பெறப்பட்டவை. "

1948-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் வெளியிடப்பட்ட வரைவு அரசியலமைப்புச் சட்டத்தில் இத் தீர்மானத்திலிருந்து முக்கிய மாறுதல் காணப்பட்டது. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் இருந்திடவும் குறிப்பிட்ட அதிகாரங்கள் மட்டும் மைய அரசிடம் ஒப்படைக்கப்படவும்வேண்டுமென்று அத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தபோதிலும், வரைவு அரசமைப்புச் சட்டத்தில் (இந்திய சமஸ்தானங்கள் தவிர) அவ் வெஞ்சிய அதிகாரங்கள் மைய அரசிடமே இருக்க வகை செய்யப்பட்டிருந்தது. அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது உறுப்பில் இந்தியா அதாவது, பாரதம் மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் எங்ஙணும் இணைப்பாட்சி என்ற சொல் இடம் பெறவேயில்லை. ஒன்றியம் என்ற சொல்லுக்கு குறிப்பிட்ட முக்கியத்துவம் எதுவும் இல்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசமைப்புச் சட்டத்திற்கான தோற்றுவாயில் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இணைப்பாட்சி முறைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் தோற்றுவாயிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் இதைக் குறிப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :—

" 'இணைப்பாட்சி' என்பதற்குப் பதிலாக 'ஒன்றியம்' என்ற சொல்லைக் குழு பயன்படுத்தியுள்ளது என்பது அறியப்படலாம். இப் பெயரில் குறிப்பிடத்தக்கதொன்றுமில்லை. ஆனால், இக்குழு, 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்திற்கான தோற்றுவாயில் காணும் சொல்லையே பின்பற்ற முடிவுசெய்தது. அரசமைப்பு இணைப்பாட்சி அமைப்பாக இருந்தபோதிலும் இந்தியாவை 'ஒன்றியம்' என்று விவரிப்பதில் சாதகங்கள் இருப்பதாக இக் குழு கருதியது."

* " வரைவு அரசமைப்புச் சட்டத்தில் 1-வது உறுப்பில் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று விவரித்திருப்பதைச் சிலர் எதிர்த்தனர். மாநிலங்களின் இணைப்பாட்சியென்பதே சரியான சொற்றொடராகுமெனக் கூறப்பட்டது. ஒற்றையாட்சி மாநிலமான தென் ஆப்பிரிக்கா ஒன்றியம் என்று அழைக்கப்படுவது உண்மையே. ஆனால், இணைப்பாட்சியாகிய கனடாவும் ஒன்றியம் என்று அழைக்கப்படு

* அ. ச. ம. வி. VII, பக்கம் 43.

கிறது. எனவே இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் இணைப் பாட்சி முறையாயினும் இந்தியாவை ஒன்றியம் என்று விவரிப்பது நடைமுறைக்கு முரண்பட்டதாக இல்லை.''

2. ஏற்கனவே உள்ள நிலைமைகளையும் அரசியல் முறையையும் பொறுத்து இரண்டினுள் ஏதேனுமொரு வகையில் இணைப் பாட்சி அமைப்பு அமைக்கப்படலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அமைந்துள்ளது போன்று பொதுவான சில விவகாரங்களின் ஆட்சிமுறைக்காக ஆதிபத்திய, சுதந்திர மாநிலங்களுக்கு இடையே அவைகளே விரும்பி ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் இணைப்பாட்சி அமைப்பு அமைக்கப்படலாம்; அல்லது கனடாவில் உள்ளதுபோன்று ஒற்றையாட்சி மாநிலத்தின் மாகாணங்களை அல்லது பகுதிகளை இணைப்பாட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் செய்வதன் மூலம் அமைக்கப்படலாம். இந்தியா, 1937-ம் ஆண்டு வரையில் ஒற்றையாட்சி அரசாக இருந்தது ; அப்போது 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் செயலுக்கு வந்தது. அப்போதுவரை மாகாண அரசுகள் உண்மையில் மைய அரசின் முகவர்களாக (agents) இருந்தன. ஆனல், 1935-ம் ஆண்டுச் சட்டப்படி, கனடாவில் உள்ளதுபோன்றே அதே முறையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இணைப்பாட்சி முறையை அமைத்தது. 'தன்னுட்சி உரிமைப் பகுதிகளை உருவாக்கி, ஒரே சட்டத்தின் மூலம் அவற்றை இணைப்பாட்சி அமைப்பாக ஒருங்கிணைத்து' ஆட்சியை ஏற்படுத்தியது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசால் செலுத்தப்பட்டு வந்த எல்லா அதிகாரங்களும் மன்னரால் மேற்கொள்ளப்பட்டு நேரடியாக இணைப்பாட்சி அமைப்புக்கும் மாகாணங்களுக்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1935-ம் ஆண்டுச் சட்டப்படிக்கான மாகாணங்கள் அவற்றின் அதிகாரத்தை மன்னரிடமிருந்து நேரடியாகப் பெற்றன. இச் சட்டத்தினுல் அவற்றுக்கு வழங்கப்ட்டுள்ள சட்ட, நிர்வாக அதிகாரங்களைச்செலுத்தி வந்தன. இந்திய மக்களால் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டப்படிக்கான அரசுமுறை பலவகைகளில் 1935-ம் ஆண்டுச் சட்டத்தால் அமைக்கப்பட்ட இணைப்பாட்சி வகைக்கு ஒத்ததாகவே உள்ளது.

3. அரசமைப்புச் சட்டம் குறித்துக் கருத்தறிவித்த திறம்மிக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் இணைப்பாட்சியின் சாரம், ஒன்றியத்து அமைப்பின் வரலாற்று முறையான செயற்பாட்டில் அமையவில்லை ; ஆளும் முறையில்தான் அமைந்துள்ளது. ஒன்றியம் அமைக்கப்பட்டதும் தேசிய அரசும் மாநில அரசுகளும்

ஒத்த தரமுடைய ஆள்வையைப் பெறுகின்றன—ஒவ்வொன்றும் ஒரே ஆதாரத்திலிருந்து, அதாவது அரசமைப்புச் சட்டத்திலிருந்து, அதன் அதிகாரத்தைப் பெறுகிறது. இதனல், ஒவ்வொன்றின் பிரதிநிதியாகவோ முகவராகவோ மற்றென்று இருக்கவேண்டியதில்லை. எனவே, கனடா ஒன்றியம் எவ்வாறு இணைப்பாட்சியாக உள்ளதோ அதுபோன்றே இந்திய ஒன்றியமும் ஓர் இணைப்பாட்சி அமைப்பாகும். இந்திய ஒன்றியத்திலுள்ள மாநிலங்கள் ஒற்றையாட்சி அரசிலுள்ள உள்ளாட்சிப் பகுதிகள் போன்றில்லை. நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம், 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் நோக்கத்தை ஒத்ததாகும். அச்சட்டத்தின் நோக்கம் வாட்சன் பிரபுவால் கீழ்க்கண்டவாறு விளக்கப் பட்டுள்ளது [கனடா மேரிடைம் வங்கியின் கலைப்பு செய்வோர்—நியூபிரன்ஸ்விக்கின் ரிசீவர்-ஜெனரல் (1892 மேல் முறையீட்டு வழக்கு 437)]:

" மாகாணங்களை ஒரே அமைப்பாகச் செய்வதோ மைய அரசிற்கு மாகாண அரசுகளைக் கீழ்ப்படியச் செய்வதோ இச் சட்டத்தின் நோக்கமன்று; இணைப்பாட்சி அரசை ஏற்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். இதில் எல்லா அரசுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் ; அவற்றிற்குப் பொது அக்கறையுள்ள விவகாரங்களின் முழு நிர்வாகமும் அவற்றிடம் ஒப்படைக்கப்படும்; ஒவ்வொரு மாகாணமும் அதன் சுதந்திரத்தையும் தன்னுரிமையையும் கொண்டு திகழும் ".

முன்னைய ஒரு வழக்கில்—ஹாட்ஜ் என்பவருக்கும் பிரிட்டிஷ் அரசுக்குமிடையே நடைபெற்ற 1883-ம் ஆண்டு மேல்முறையீட்டு வழக்கு 177-ல்—ஒரு மாகாணத்தின் சட்டப்பேரவை, அந்த மாகாணத்திற்காகவும் 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் 92-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் சம்பந்தமாக மாகாணக் காரியங்களுக்காகவும் சட்டமியற்றுவதற்கு முழு அதிகாரம் கொண்டதென்றும் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துகையில் அந்த மாகாணச் சட்டப் பேரவை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரதிநிதியாகவோ அல்லது முகவராகவோ எவ்வகையிலுமில்லை என்றும் நீதி மன்றக் குழு குறிப்பிட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் அதன் முழுமையான அதிகாரத்தில் கொண்டிருந்து அளிக்கக் கூடுமளவிற்கு 92-வது பிரிவினல் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் முழுமையானதும் போதுமான அளவுக்குமான அதிகாரம் அதற்கிருந்தது. இப்பொருளின் வரம்பிற்குள்ளும் பகுதியின் வரம்பிற்குள்ளும் அந்தச் சட்டப் பேரவை தலைமை அதிகாரமுடையதாகும். பிரிட்டிஷ் பாராளுமன்றம் அல்லது டொமி

னியன் நாடாளுமன்றம் போன்று அதே அதிகாரம் இதற்கும் உள்ளதாகும். முன்னைய வழக்கைக் குறித்து பின்னர், 1892-ம் ஆண்டு மேல்முறையீட்டு வழக்கில் வாட்சன் பிரபு கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் :

" எனவே, புதிய பிரன்ஸ்விக்கின் மாகாணச் சட்டப் பேரவை, மேல்முறையீட்டார்களின் வாதத்தில் அதற்கு அளிக்கப்பட்ட கீழ்ப்படிதலான நிலையைக் கொண்டிருக்க வில்லையென்பது தெளிவாகும். இது, கனடா அரசிடமிருந்து அதிகாரம் எதையும் பெறவில்லை. அதன் தகுதி, உள்ளாட்சிக் காரியங்களுக்காக நிறுவப்பட்ட ஆள்வையாகிய நகராட்சி நிறுவனத்திற்கு எந்தவகையிலும் ஒப்பிட்டுக் காணக் கூடியதன்று. சரியாகச் சொன்னால், ஆட்சி அதிகாரம் மட்டுமன்றி சட்டமியற்றும் அதிகாரமும் அதற்கு உண்டு. 1867-ம் ஆண்டுச் சட்டத்தின் 92-வது பகுதியில் வழங்கப்பட்ட வரம்பிற்குள் இந்த அதிகாரங்கள் தனித்தவையும் மேலோங்கியவையுமாகும்."

நமது அரசமைப்புச் சட்டப்படி, மாநிலங்களின் சட்ட மன்றங்களுக்கு ஏழாவது இணைப்பட்டியிலுள்ள II-வது அதிகாரப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் சம்பந்தமாக அதே அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன ; இந்த வகையுரைகள், இந்திய அரசமைப்புச் சட்டம் இணைப்பாட்சி முறை அரசைச் செயற்படுத்தியதான கருத்தையே வலியுறுத்துகின்றன.

4. சர் ராபர்ட் கர்ரான், "மைய அரசும், மாநில அரசுகளும் ஆதிபத்தியத்தை அல்லது அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் அரசு அமைப்பே இணைப்பாட்சியாகும் ; இவ்வகையில் அவை ஒவ்வொன்றும் அவற்றின் சொந்த முறைமையில் மற்றொன்றிலிருந்து சுதந்திரமுடையதாக இருக்கும்." என்று கூறுகிறார். பேராசிரியர் வியர், இணைப்பாட்சிக் கோட்பாட்டைப் பின்வருமாறு விளக்குகிறார்: "மைய அரசும் வட்டார அரசுகளும் குறிப்பிட்ட வரம்பிற்குள் சமநிலையிலும் சுதந்திரமாகவும் இருக்குமாறு அதிகாரங்களைப் பங்கிடு செய்யும் முறையையே நான் இணைப்பாட்சிக் கோட்பாடு என்று குறிப்பிடுகின்றேன் ".

இணைப்பாட்சி அரசு அரசமைப்புச் சட்டத்திலிருந்து அதன் இயக்கத்தைப் பெறுகிறது. எனவே, மைய அரசுக்கு அல்லது தனிப்பட்ட மாநிலங்களுக்குச் சொந்தமான எந்த ஒரு சட்டமியற்றல், நிர்வாகம் செய்தல் அல்லது நீதிவழங்கல் அதிகார

மும் அரசமைப்புச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்ததாகவும் அத்தால் நிர்வகிக்கப்படத்தக்கதாகவும் உள்ளது [டய்சி (Dicey) எழுதிய 'அரசமைப்புச் சட்டத் தொகுப்பு'].

வெளிநாட்டுச் சட்ட வல்லுநர்கள் நமது அரசமைப்புச் சட்டத்தால் நிறுவப்பட்ட அரசின் தன்மையைப் பலவாறாக விவரித்துள்ளனர். பேராசிரியர் வியர், நமது அரசமைப்புச் சட்டத்தை ஓரளவு இணைப்பாட்சித் தன்மையுள்ளதாகக் குறிப்பிட்டு ஒற்றையாட்சித் துணைக்கூறுகள் அமைந்து இணைப் பாட்சி அரசாக உள்ளதைவிட இணைப்பாட்சித் துணைக் கோட்பாடுகளுடன்கூடிய ஒற்றையாட்சி அரசாக உள்ள தென்று கூறியுள்ளார். 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சில பண்புகள்' என்ற புத்தகத்தில் சர் ஐவர் ஜென்னிங்ஸ், மைய அரசிடம் அதிகாரக் குவியல் எனும் போக்கு மிகுந்த இணைப்பாட்சியென்று நமது அரசமைப்புச் சட்டத்தைக் குறிப்பிட்டுள்ளார். கிரான்வில் ஆஸ்டின், இதைக் கூட்டுறவு இணைப்பாட்சியென்று குறிப்பிடுகிறார். ஆட்டோமொபைல் போக்குவரத்து நிறுவனத்திற்கும் ராஜஸ்தான் அரசுக்கும் இடையில் நடந்த வழக்கில் (A.I.R. 1962 உச்ச நீதிமன்ற வழக்கு 1406) உச்ச நீதிமன்றம் இந்த இணைப்பாட்சி அமைப் பையும் நமது அரசமைப்புச் சட்ட முறையின் இணைப்பாட் சிப் பின்னணியையும் குறிப்பிட்டுள்ளது. மேற்கு வங்காள அரசுக்கும் இந்திய அரசுக்கும் நடைபெற்ற வழக்கில் அளித்த தீர்ப்பில் நீதிபதி சுப்பாராவ் அவர்கள் இப் பிரச் சினை பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (A.I.R. 1963 உச்ச நீதி மன்ற வழக்கு 1241). அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரசமைப்புச் சட்ட வகையுரைகளுடன் ஒப் பிட்டுப்பார்த்து நமது அரசமைப்புச் சட்ட வகையுரைகளை விரிவாக விவாதித்த பின்னர் அவர் கீழ்க்கண்ட முடிவிற்கு வந்துள்ளார் :

'' இந்திய அரசமைப்பு இணைப்பாட்சி முறை அமைப் பாகுமென்பதில் எனக்கு ஐயமில்லை. ''

ஒவ்வொரு இணைப்பாட்சி அமைப்பிலும் சில ஒற்றையாட் சிக்கூறுகள் உள்ளன என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, கீழ்க்கண்ட கருத்தைக் கூறியுள்ளார் :

''குறிப்பிட்ட ஒரு அரசமைப்புச் சட்டம் இணைப்பாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளதா இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் உண்மைச் சோதனை யாதெனில், மேற் சொன்ன அரசமைப்புச் சட்டம், பொதுவானதும் வட்டாரத் தன்மையுள்ளதுமான அரசுகள் ஒவ்வொன்றும் அதன் வரம்

பிற்குள் மற்றொன்றிலிருந்து சுதந்திரமாக உள்ள வகையில் அதிகாரப் பிரிவினைக்கு வகை செய்கிறதா என்பதாகும்.'' (பக்கம் 1269, பத்தி 82).

இந்த நோக்கத்தில், எஞ்சிய அதிகாரங்கள் ஒதுக்கப்படுவது அல்லது நெருக்கடி நிலைகளில் மாநில விவகாரங்களில் தலையிடுவதற்கு மைய அரசிடம் உள்ள அதிகாரம், இணைப்பாட்சி ஒன்றில் அதிகாரம் சமநிலைப்படுத்தப்படுவதைப் பாதிக்கக்கூடும்; ஆனால் அதன் தன்மையை அழித்துவிடாது. அவற்றின் சம்பந்தப்பட்ட வரம்பிற்குள் அதாவது சட்டமியற்றும் துறையிலும் நிர்வாகத் துறையிலும் அவை உயர் அதிகாரமுடையவையாகும்; அவற்றின் உறவு, குறிப்பிட்ட வகையுரைகளால் முறைப்படுத்தப்படுகின்றது. மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையிலான உறவு, அதிகாரப்பட்டியல் மூலம் வரம்பு வகுக்கப்பட்ட சட்டமியற்றும் துறைகளில் காணமுடியாது. அவற்றை இணைப்பதாகவுள்ள குறிப்பிட்ட அரசமைப்புச் சட்ட வகையுரைகளில் கண்டுபிடிக்கப்பட முடியும். அசாதாரண நிலைமைகளைச் சமாளிக்க மைய அரசுக்குள்ள நெருக்கடி நிலை அதிகாரங்கள், சாதாரண காலங்களில் அதற்கென்று நிர்ணயிக்கப்பட்ட துறைகள் செயல்படுவதைப் பாதிக்காது.

ஒற்றையாட்சி முறைக்கும் இணைப்பாட்சி முறைக்குமுள்ள அடிப்படை வேறுபாடு, ஒற்றையாட்சி முறையில் மைய அரசிற்கும் மாகாண அரசுகளுக்குமிடையிலான அதிகாரப் பாகுபாடு மைய அரசினால் செய்யப்படுகிறது; இணைப்பாட்சி முறையில் அதிகாரப் பாகுபாடு அரசமைப்புச் சட்டத்தினால் செய்யப்படுகிறது; இந்த அரசமைப்புச் சட்டம் இரண்டு அரசுகளின் அதிகாரவாயிலாகும். அரசமைப்புச் சட்டத்திற்குப் பொருள் கொள்வதில் நீதிமன்றங்களுக்குள்ள உயர்நிலையும் மைய, மாநில அரசுகளின் நடவடிக்கையின் செயல்திறனை ஆராயும் அதிகாரமும் இணைப்பாட்சி முறை ஒன்றில் முக்கிய அம்சமாகும். இந்த அம்சம் நமது அரசமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ளது. இரட்டைக் குடியுரிமை, மாநிலங்களிடம் எஞ்சிய அதிகாரங்கள் போன்று அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தில் காணப்படும் சில அம்சங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் இல்லையெனினும் நமது அரசமைப்பு, இணைப்பாட்சி முறை அரசை அமைத்துள்ளது என்று கருதுகிறோம். நீதிபதி சுப்பாராவ் இந்த அம்சங்கள் இல்லாமையினால் அவரது முடிவு பாதிக்கப்படமாட்டாது என்று கருதுகிறார்.

5. அரசமைப்புச் சட்டத்தால் அமைக்கப்பட்ட அரசின் தன்மையை ஆராய்கையில் ஒரு முக்கிய உண்மையைப் புறக் கணிக்க முடியாது. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் சமயத்தில் ஒரு பகுதி மாகாணங்கள் அடங்கியதாகவும் மற்றொரு பகுதி இந்திய சமஸ்தானங்கள் அடங்கியதாகவும் இந்தியா இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சுமார் 600 சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதிகள் மூலம் அவருடைய நேரிடை ஆட்சியின்கீழ் இருந்தன. பிரிட்டிஷ் மன்னரின் மேலாட்சிக்குட்பட்டு சமஸ்தானங்கள் இந்திய அரசர்களின் ஆட்சியில் இருக்க அனுமதிக்கப்பட்டன. மன்னருக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் இடையிலான இந்த உறவு சிலவேளைகளில் மேலாதிபத்தியம் என்று வருணிக்கப்பட்டுள்ளது. 1947-ம் ஆண்டு இந்திய சுதந்திரச்சட்டம் நிறைவேற்றப் பட்டபோது, இந்திய சமஸ்தானங்கள் மீது பிரிட்டிஷ் மன்னருக்குள்ள ஆதிக்கம் கழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆதிக்கம் கழிந்த பின்னர் இந்திய சமஸ்தானங்கள் கொள்கையளவில் சுதந்திரமுள்ளவையாகவும் கோன்மையுடையனவாகவும் திகழ்ந்தன. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து தனித்து அவற்றின் தன்னாட்சித்தகுதியை நிலைநிறுத்திக்கொள்வது இயலாதென சமஸ்தானங்கள் உணர்ந்தன; எனவே, பெரும்பான்மை சமஸ்தானங்கள் இந்திய ஒன்றியத்துடன் இணைந்தன. ஐதராபாத், ஜம்மு—காஷ்மீர் சமஸ்தானங்கள் விதிவிலக்காயின. அடுத்து, இந்த இரண்டு சமஸ்தானங்களும் இந்தியாவுடன் இணைந்தன. இந்த சமஸ்தானங்கள், இந்திய அரசமைப்புச் சட்டவரம்புக்குள் கொண்டுவரப்படுவதற்கு அச்சட்டம் வகை செய்தது. மூன்று வகைச் செயல் முறையில் (three-fold process) இந்நோக்கம் எவ்வாறு எய்தப் பெற்றதென்பதை விரிவாக ஆராய்வது அவசியமற்றதாகும். எனினும், சமஸ்தானங்கள் இணைந்த வேளையில் நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், போக்குவரத்து ஆகிய மூன்று பொருள்கள் குறித்து அவற்றுக்குள்ள உரிமைகளை மட்டுமே இந்திய ஒன்றியத்திடம் ஒப்படைத்தன. அதற்குப் பின்னர்தான், மைய அரசிடம் சேர்க்கப்பட்டுள்ள எல்லா விவகாரங்கள் சம்பந்தமாகவும் வரிவிதிப்பு சம்பந்தப்பட்டவை நீங்கலாகப் பொது அதிகாரச் சட்டமியற்றும் பட்டியல்கள் சம்பந்தமாகவும் சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைந்தன. தனிநிலை, பிரச்சினைகள் ஆகியவற்றை முன்னிட்டு காஷ்மீரத்திற்கு மட்டும் சிறப்பு வகையுரை செய்யப்படவேண்டியிருந்தது. இம்மாநிலங்கள் ஆ—பாகம் (Part B) மாநிலங்க

ளாகப் பெயர் பெற்றன. மூல அரசமைப்புச்சட்டத்தில் அவை சம்பந்தமாகத் தனியான பாகம் இருந்தது. தன்னுட்சித் தகுதியின்றி நிர்வாகப் பிரிவுகளாக இயங்கிவந்த பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள் மட்டுமின்றி இந்திய ஒன்றியத்துடன் இணைந்த வேளையில் தன்னுட்சி உரிமையுடனும் கோன்மைத் தகுதிப் பிரிவுகளாகவும் இயங்கிய இந்தியச் சமஸ்தானங்களும் இந்திய ஒன்றியத்தில் அடங்கின என்ற சூழ்நிலை, அரசமைப்புச் சட்டத்தில் அடங்கிய அரசு முறையின் தன்மையைப்பொறுத்த வரையில் முற்றுப்பெற்றதாகும். இது அடிப்படையில் இணைப் பாட்சி முறையாகும். *

6. அரசமைப்புச் சட்டம் இணைப்பாட்சி முறையை அமைத்தபோதிலும் இணைப்பாட்சிக் கோட்பாடுகளுக்கு முரணான பலவகையுரைகளும் உள்ளன என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். ஒற்றையாட்சிப் போக்குகள் இதில் காணப்படுகின்றன; அதிகாரப் பிரிவினையில் மைய அரசின் பக்கம் சார்ந்துள்ள ஒருசார்பு நிலையே உள்ளது. இணைப்பாட்சியில் தேசீய, மாநில அரசுகள், சமத்துவ அடிப்படையில் இயங்குகின்றன; மற்றொன்றின் வரையறுத்த அதிகாரத்திலும் கடமைகளிலும் ஒருசார்பாகத் தலையிடுவதற்கு எதற்கும் அதிகாரமில்லை. இருப்பினும், இந்தியாவில் மாநிலங்களின் சட்டமியற்றும் அதிகாரத்திலும் நிர்வாக ஆதிக்கத்திலும் சில சமயங்களில் தலையிடுவதற்குத் தேசீய அரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்கள் கீழ்ப்படிதல் என்ற போக்கு பரவிக் காணப்படுகிறது. மாநில விவகாரங்களில் மைய அரசு தலையிடப் பெருமளவு வாய்ப்புகள் காண்கின்றன; இதன்மூலம் மாநிலங்களின் தன்னுட்சி உரிமை பாதிக்கப்படுகின்றது. மாநில அதிகாரப் பட்டியலில் தெளிவாகவும் விளக்கமாகவும் அறுதியிட்டுக் குறிப்பிடப் பட்ட விவகாரங்களிலும் மாநிலங்கள் மீது மேலாட்சி செலுத்தும் அதிகாரம் மைய அரசுக்கு வழங்குவதாகத் தெரியும் சில வகையுரைகள் அரசமைப்புச் சட்டத்தில் உள்ளன. இதனுல் மட்டுமே மாநிலங்களின் தகுதி பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்தது போன்ற ஒற்றையாட்சி அரசியல் நிர்வாகப்

* திரு பாபடோஷ் தத்தா என்பவரின் கருத்தும் இதுவாகும். 1970, டிசம்பர், 31-ம் நாளிட்ட 'காபிடல்' என்ற இதழின் இணைப்பில வெளியிடப்பட்ட ''மைய மாநில நிதி உறவுகளை மறு ஆய்வு செய்வதன் அவசியம்'' என்ற தலைப்புள்ள அவரது கட்டுரையைக் காண்க.

பிரிவுகளின் தகுதிக்குக் குறைக்கப்படவில்லை. ஆனால், மைய அரசும் நாடாளுமன்றமும், மாநிலப் பட்டியல் விவகாரங்களில் ஆர்வம் கொண்டு தலையிடும் விதமும் அடிக்கடி அவ்வாறு தலையிடும் செயலும், நாடு முழுமைக்குமான ஆட்சியின் மேலதிகாரத்தைப் பயன்படுத்த மைய அரசிற்குத் துடிப்புள்ளதென்ற எண்ணத்தையே ஏற்படுத்துகிறது.

7. மாநிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்த மைய அரசு பயன்படுத்தும் பல வழிகளும் அதனால் நியமிக்கப்பட்ட முகமைகளும் (agencies) கீழ்க்காணும் தலைப்புகளின்கீழ்ப் பகுத்து ஆராயப்படலாம் :—

(1) மாநில அரசுகளுக்குக் கட்டளைகள் பிறப்பித்தலும் அத்தகைய கட்டளைகளுக்கு இணங்காமைக்குக் கடும் தண்டனை அளிப்பதற்கான வகைசெய்தலும் (உறுப்புகள் 257, 365, 356).

(2) ஏழாவது இணைப்பட்டியிலுள்ள மாநில அதிகாரப் பட்டியலில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்கள் மீதும் சட்டமியற்ற 249-வது உறுப்பின்கீழ் நாடாளுமன்றத்துக்குள்ள அதிகாரம்.

(3) மாநிலங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மைய அரசின் கடமைகளை நிகரான கடமைகளுடன் மாநிலங்களுக்கு ஒப்புவித்தல்.

(4) மாநில அரசுகளை மைய அரசு முழுதும் ஒதுக்கி விடுவதற்கு ஏற்பாடு செய்யும் நெருக்கடிநிலை வகையுரைகள் (உறுப்புகள் 352, 356, 360).

(5) 275-வது உறுப்பின்கீழ் உள்ள மானிய உதவியும் 282-வது உறுப்பின்கீழ் உள்ள விருப்ப மானியங்களும்.

(6) அனைத்திந்திய ஊழியங்கள்.

(7) சட்டமன்றப் பேரவைகள் நிறைவேற்றிய மசோதாக்களைக் குடியரசுத் தலைவருக்குப் பணிந்தனுப்ப ஒதுக்குதல்.

(8) திட்ட ஆணைக்குழு போன்ற அரசியல் சட்டத்திற்குட்படாத முகமைகள்.

இந்த அறிக்கையின் அடுத்துவரும் அத்தியாயங்களில் மேற்சொன்ன பொருள் ஒவ்வொன்றும் விவாதிக்கப்படும்.

ஒற்றையாட்சிப் போக்குகள் புகுந்து வளர்ந்தமைக்கான காரணங்கள் சிறப்பாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) மைய அரசுக்குத் தனி அதிகாரங்கள் வழங்கும் அரசமைப்புச் சட்டத்திலுள்ள சில வகையுரைகள்;

(ஆ) மைய அரசிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி செய்தல் ;

(இ) மாநிலங்களின் நிதி வருவாய் போதுமானதாக அமையாமையும் அதன் விளைவாக நிதி உதவி கோரி மைய அரசைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையும்;

(ஈ) மையம் திட்டமிடும் அமைப்பை ஏற்படுத்தலும் திட்ட ஆணைக்குழுவின் பங்கும்.

மைய அரசுக்கு மிகைப்பட்ட அதிகாரங்களை வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளில் சில, மேலே சொல்லப்பட்டுள்ளன ; பின்னர் அவைபற்றி விவாதிக்கப் படும்.

மையத்திலும் மாநிலங்கள் அனைத்திலும் ஒரே கட்சி ஆட்சியில் தொடர்ந்து இருந்தமையால் ஒற்றையாட்சிப் போக்கு வளர்ந்துள்ளதென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

1969, மார்ச்சு திங்களில் லால்பகதூர் சாஸ்திரி நினைவுச் சொற்பொழிவுகளில் ஓய்வுபெற்ற இந்தியத் தலைமை நீதிபதி டாக்டர் கோ. சுப்பாராவ் குறிப்பிட்டுள்ளது எமது முடிவை ஆதரிப்பதாக அமைந்துள்ளது:

“அண்மைக்காலத்திய தேர்தல்கள் வரை ஒற்றையாட்சி வகையான அரசினைப் போலவே அரசமைப்புச் சட்டம் செயல் படுத்தப்பட்டு வந்தது. ஏற்கனவே மெலிந்து போன நிலையில் உள்ள மாநிலங்களின் அதிகாரங்களை அடியோடு ஒழித்து விடுகின்ற மனப்போக்கு இருந்தது. தொடர்ச்சியான நீண்ட காலமாக ஒரே கட்சி மையத்திலும் மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருந்ததே இதற்கு முதன்மையான காரணமாகும். இதன் விளைவாக, ஆட்சித் துறையிலும் அமைப்புத் துறையிலும் மைய அரசு மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்து வந்தது. கட்சியின் உயர் அதிகாரக் குழுவின் (High command) முன்னணி உறுப்பினர்கள் சிலர் அமைச்சரவையிலும் இடம் பெற்றிருந்தனர். உண்மையில், தலைமை அமைச்சர் மைய அரசின் அமைச்சரவையை மட்டும் அல்லாமல்

* கோ. சுப்பாராவ் எழுதிய “இந்திய இணைப்பாட்சி” என்னும் ஆங்கில நூலில் பக்கம் 18.

உயர் அதிகாரக் குழுவையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். உயர் அதிகாரக் குழுவின் மூலமாக மாநில அரசியல் அமைப்புகளையும் மற்றும் வட்டார அமைப்புகளுக்கு நடைபெறும் தேர்தல்களையும் சட்ட மன்றத்துக்கு தகுந்த வேட்பாளர்களைத் தெரிந்தெடுப்பதையும் அவர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இடங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் உயர் அதிகாரக் குழுவின் வாயிலாக மாநிலச் சட்ட மன்றங்கள் மீதும் மாநில அமைச்சர்கள் மீதும் மைய அரசு ஆதிக்கம் பெற்றிருந்தது. இந்தச் செயல்முறையின் காரணமாக, நடைமுறையில் மாநிலங்கள் மைய அரசின் ஆட்சி உறுப்புகளாக ஆகிவிட்டன.

புதிய தேர்தல்களுக்குப் பின்னர் நாடு முழுவதிலும் அரசியல் அமைப்பு மாறிவிட்டது. வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றின ; ஆனால், மையத்தில் மட்டும் காங்கிரசுக் கட்சி அதிகாரத்தில் உள்ளது''.

பல மாநிலங்களில், ஆட்சியை நடத்துகின்ற கட்சிகள் மையத்தின் அதிகாரத்தில் உள்ள அதே கட்சியல்ல. மாநிலங்களில் உள்ள காங்கிரசல்லாத அரசுகள் தங்களுடைய தன்னாட்சித் தன்மையை வற்புறுத்தத் தொடங்குவதில் வியப்பொன்றுமில்லை. இந்திய இணைப்பாட்சி அமைப்பில் மாநிலங்கள் வகிக்கின்ற நிலை குறித்து அவை மேலும் மேலும் மனநிறைவை இழந்து கொண்டே வந்துள்ளன ; கூடுதலான தன்னாட்சி நிலைக்கான அவற்றின் கோரிக்கைகள் மேலும் மேலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

8. சில தரப்புகளில் இந்தக் கோரிக்கைக்கு காணப்படும் எதிர்ப்புகள் வன்மை வாய்ந்த மைய அரசு அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையிலேயே உள்ளன. வன்மை வாய்ந்த மைய அரசு என்னும் இந்தக் கூற்று உள்ளபடியாகக் கருதப்படும் வரையறையின்றியும் தெளிவற்றதாகவும் உள்ளது. மைய அரசிடம் எத்தகைய வன்மை இருக்க வேண்டும்? நாட்டு நலனை முன்னிட்டு எவற்றை அதனிடமிருந்து பறித்துவிடக்கூடாது ? அரசமைப்புச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த காலந்தொட்டே நாட்டின் அரசியல் பிரச்சினைகளை ஆராய்வதில் தொடர்ந்து அக்கறை கொண்டுள்ள அறிஞர் ஒருவர் வன்மை வாய்ந்த மைய அரசு பற்றிய வாதத்தை நுட்பமாக ஆராய்கின்றார் ; அவர் கூறுவதாவது :—

''. இந்தியா உருக்குலைந்து அழிந்து ஒழிந்து போகாமல் இருக்கவேண்டுமென்றால் வன்மை வாய்ந்த மைய

அரசு இருக்கவேண்டுவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் வன்மையையும் முறையான அரசமைப்புச் சட்டபடியான அதிகார அளவுகளையும் ஒன்றுபடுத்துவோர் கருத்தை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். மாருக, இந்தியா முழுவதிலும் பரவிக் காணப்படும் மாபெரும் எண்ணிக்கையில் உள்ள மக்களின் பொருட்டான மிகப் பலவாகிய பொறுப்புகளைத் தன்னிடமே எடுத்துக்கொள்வதன் மூலம் மைய அரசு செப்பனிட முடியாத வகையில் மெலிவடைந்துவிடும் என்று நான் திடமாகக் கருதுகிறேன். இன்றியமையாத அனைத்திந்தியக் காரியங்களில் அதிகாரத்தை ஒருமுகப்படுத்தி அந்தக் காரியங்களில் பொறுப்புகளை மாநிலங்களுடன் பங்கிட்டுக்கொள்ள மறுப்பதுடன் அதே நேரத்தில் எஞ்சிய அரசுத் துறைகளில் மாநிலங்களுக்கு முழுமையான தன்னுட்சியைக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே நாடாளுமன்றமும் மைய அரசும் உண்மையாகவே வன்மையுடையனவாக இருக்க முடியும். வரையறையில்லாத நலிவுற்ற தந்தைத் தன்மை ஆட்சி முறையை நோக்கிச் செல்லும் போக்கு, விடுதலைபெற்ற முதல் இரண்டு பத்தாண்டுகளின் போது ஒரே கட்சி ஆதிக்கம் செலுத்தியதன் விளைவாக இந்திய இணைப்பாட்சி முறையே மறைந்து விடச் செய்யுமளவுக்கு வந்திருப்பது மைய அரசுக்கு நல்லதல்ல; அது மாநிலங்களுக்கு வெறுப்பூட்டுவதாகவும் எரிச்சலூட்டுவதாகவும் உள்ளது.''*

தமிழ் நாட்டின் முதலமைச்சர மறைந்த டாக்டர் சி. என். அண்ணுதுரை அவர்கள் 1967, ஜூன் 27-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆற்றிய பின்வரும் உரையில் வன்மையான மைய அரசினுல் ஏற்படும் விளைவுகள் பற்றிய கடும் கண்டனம் அடங்கியுள்ளது:—

''மைய அரசு, இன்று கூறப்படுவது போல் இந்தியாவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தப் போதுமான அளவுக்கு வலிமையுடையதாக இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதை நான் வேறு வகையாகவும் கூற முடியும். இந் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக மைய அரசு வலிமையுடையதாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேன். இந் நாட்டின் பாதுகாப்பிற்கு மைய அரசைப் பொறுப்புடையதாகச் செய்யத் தேவையான இந்த

* 1970, ஏப்ரலில் புது டில்லியில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசிய மாநாட்டிற்கு திரு க. சந்தானம் அளித்த அறிக்கையைக் காண்க.

அதிகாரங்கள் மைய அரசிடம் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று தயக்கமின்றியும் வருத்தமின்றியும் எவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று கூறத் தயங்கமாட்டேன். இந்தியாவை பாகிஸ்தான் அபாயத்திலிருந்தோ சீன, பலுச்சிஸ்தான் அபாயத்திலிருந்தோ பாதுகாப்பதற்கு மைய அரசு இங்கே ஒரு சுகாதாரத் துறையை வைத்திருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அது, எந்த வகையில் இந்தியாவின் இறைமையையும் சுதந்திரத்தையும் வலுவுடையதாக்கும்? அவர்கள் இங்கே ஒரு கல்வித் துறையை வைத்திருக்க வேண்டுமா? அங்கே இராணுவத்தினருடன் போரிடும் திறனை இது எந்த வகையில் அதிகப்படுத்தும்.''

மைய-மாநில உறவு பற்றிச் சிந்திக்கின்றபோது எழும் பல்வேறு சிக்கல்களை ஆராய்கையில், சரியான வகையில் பொருள் கொள்ளப்பட்ட வலிவான மைய அரசின் அவசியத்தை கருத்தில் கொண்டுள்ளோம்.

அத்தியாயம் III

ஆட்சி உறவுகள்.

மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் அதனுடைய சட்டமியற்றும் அதிகாரத்துடன் இணைந்த அளவினதாகும் (உறுப்பு 162). அதாவது, மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் மாநிலக் காரியத் துறைகளுக்கு மட்டும் உரியதாகும்; அது, அரசமைப்புச் சட்டத்தில் அல்லது நாடாளுமன்றத்தின் ஒரு சட்டத்தில் வேறு வகையுரை செயயப்படவில்லையென்றால், பொது அதிகாரக் காரியத் துறைகளுக்குங்கூட விரிவடையும். மைய அரசின் காரியத்துறைகள் தொடர்பாக மாநிலத்திற்கு நிர்வாக அதிகாரம் இல்லை என்பது கூறாமலே புலனாகும். இங்கே, 298-வது உறுப்பும் தொடர்புடையதாகும். இந்த உறுப்பின்கீழ், மாநிலத்தின் நிர்வாக அதிகாரம், வர்த்தகம் அல்லது வாணிகம் நடத்துதற்கும் சொத்துரிமை பெறல், சொத்தினை வைத்திருத்தல், பிறர்க்குக் கொடுத்தல் ஆகியவற்றுக்கும் ஒப்பந்தங்கள் செய்தற்கும் விரிவடைகின்றது. மாநிலத்தின் விரிவான இந்த அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தின் மற்ற வகையுரைகளால் குறுக்கப்படுகிறது. மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தைப் பாதிக்கின்ற வகையுரைகள் மைய அரசு, மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்களை நடைமுறையில் தானே மேற்கொள்வதற்கு இயலுமாறு செய்கின்றன. மைய அரசின் அதிகாரத்தைப் பெரிதாக்குகின்ற உறுப்புகள் 256, 257 ஆகிய இரண்டு உறுப்புகளாகும்.

மைய அரசு மாநிலங்களுக்குக் கட்டளையிடுதல்

2. மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே ஆட்சி உறவுகள் பற்றி 256 முதல் 261 வரையுள்ள உறுப்புகள் ஏற்பாடு செய்கின்றன. 256, 257 ஆகிய உறுப்புகள், மாநில அரசுகள் தம்முடைய அதிகாரங்களைச் செலுத்துவதில் மைய அரசின் நிர்வாகத்திற்கு அல்லது மைய அரசின் அல்லது மைய நிர்வாகத்தின் சட்டங்களுக்குத் தடங்கல் அல்லது ஊறு செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவற்றுக்குக் கட்டளைகள் பிறப்பிக்க மைய நிர்வாகத் துறைக்கு அதிகாரமளிக்கின்றன. இந்த இரண்டு உறுப்புகளும் 1935-ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தில் (பிரிவுகள் 122, 126) இவை போன்றுள்ள வகையுரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

3. இந்த இரண்டு உறுப்புகளுக்கும், அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களில் முன்மாதிரி ஏதுமில்லை. மாநிலத்திற்குக் கட்டளையிடுவதற்கு மைய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரம், அமெரிக்க ஐக்கியநாடுகள் போன்றவற்றின் இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டத்திற்கு முரணனதும் இணைப்பாட்சிக் கொள்கைக்கு எதிரானதுமாகும். II-வது அதிகாரப்பட்டியலில் அடங்கிய காரியங்களில்கூட மைய நிர்வாகம் மாநில நிர்வாகத்திற்குக் கட்டளையிடுவதற்கு அதிகாரம் உண்டு என்பது போன்று தோன்றுகிறது. இந்த அதிகாரம் அவ்வாறு முரணுக இருப்பது மட்டுமல்லாமல், அந்தக் கட்டளைகளை நிறைவேற்றத் தவறிடும்போது ஒரு மாநிலத்திற்குக் கடுமையான விளைவுகள் உண்டாவதற்கான கூடுதல் வகையுரையும் உள்ளது. தொடர்புடைய மாநில அரசின் அதிகாரங்களை 356-வது உறுப்பின்கீழ் மைய அரசு தானே மேற்கொள்வதன்மூலம் மாநில அரசை அகற்றுவதற்கும் 365-வது உறுப்பு உரிமையளிக்கின்றது. 256, 257 ஆகிய உறுப்புகளின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்கி நடக்கச் செய்வதற்கு அரசமைப்புச் சட்ட வரைவில் வகையுரை ஏதும் இருக்கவில்லை. பின்னர்தான் அரசமைப்புச் சட்டத்தில் 365-வது உறுப்பு அமைக்கப்பட்டது. 365-வது உறுப்பு, மாநிலங்களின் சார்புநிலையினை நன்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றது. ஒரு நிகழ்வில் மைய அரசு, தன்னுடைய கட்டளைகளுக்கு மாநில அரசு இணங்க இயலாமையை அறிகின்றது என்றாலும் 256, 257 ஆகிய உறுப்புகளின் கீழ் மைய அரசு கட்டளைகளைப் பிறப்பித்து, தன்னுடைய கட்டளைகளை மாநில அரசு செயற்படுத்தத் தவறிவிட்டது என்னும் காரணங்காட்டி 365-வது உறுப்பின்கீழ்த் தன்னுடைய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலச் செய்வதற்கான சூழ்நிலையை உண்டாக்க முடியும். இதன் வெளிப்படையான விளைவு யாதெனில், மாநிலத்தின் சட்டமியற்றும் அதிகாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் மைய அரசினுல் மேற்கொள்ளப்படுவதாகும். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, 256, 257 ஆகிய உறுப்புகள், மறுக்கப்படத் தக்கனவாகத் தோன்றுவதுடன் மாநிலத்தின் நிர்வாகத் துறையில் ஒரு கடுமையான தலையீடாகவும் அமைகின்றன. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய காலத்திலுங்கூட, 365-வது உறுப்புக்கு அரசமைப்புச் சட்ட

மன்றத்தில் * பண்டிததாகூர் தாஸ் பர்க்காவா, பண்டித எச். என். குன்ஸ்ரு ஆகியோர் உட்பட பல உறுப்பினர்களால் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அந்த உறுப்பின் '' கடுமையான அதிகாரம்'' பற்றி அவர்களுடைய மனக் கலக்கத்தை வெளிப்படுத்தி, வரைவுப் பணி ஏறத் தாழ முடிவுற்றிருந்தபோது இந்த வகையுரையைப் புகுத்தியதன் வாயிலாக வரைவுக் குழு தன்னுடைய அதிகாரத்தை மீறி விட்டது என்றும் வாதிட்டனர்.† அரசமைப்புச் சட்டம், சட்டமன்றத்தினுல் ஏற்கப்பட்டதற்கு 11 நாட்களுக்கு முன்பு தான் 365-வது உறுப்பு புகுத்தப்பட்டது. இந்த உறுப்பினை எதிர்த்த மற்றவர்கள் 1935-வது சட்டத்தின் வெறுக்கப்பட்ட 93-வது பிரிவுக்கு '' அதன் மறைவற்ற தன்மையிலும் கொடும்பான்மையிலும் '' ஒப்பாக இருந்ததாகக் குறை கூறினர்.‡ ஆயினும், இறுதியாக 365-வது உறுப்பு சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 365-வது உறுப்பு தான், 256, 257 ஆகிய உறுப்புகளை மிகவும் மறுக்கத் தக்கனவாக ஆக்குகின்றன. இந்த உறுப்புகள் முன்னோடி ஆதாரமற்றவையாக இருப்பதுடன் மாநிலங்களின் தன்னாட்சியினையும் பாதிக்கின்றன. 257-வது உறுப்பு, நாடாளுமன்ற அலுவல் மீது நிர்வாக ஆக்கிரமிப்புக்கு அதிகாரமளிக்கின்றது.

4. 257-வது உறுப்பின்கீழ், போக்குவரத்து பற்றிய வகையுரை குறித்து, திரு அசோக் சந்தா பின்வருமாறு குறிப்பிடுகின்ருர் :—

'' மைய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கையில் தேசீய நெடுஞ்சாலைகள் எனவும் தேசீய நீர் வழிகள் எனவும் நாடாளுமன்றத்திஞல் அறிவிக்கப்பட்டவை மட்டுமே மைய அரசின் பொறுப்பிற்குள் வந்தன. ஆயினும், இவ்வாறு பகிர்ந்திருப்பினும், தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவையாக மைய அரசினுல் கருதப்படும் போக்குவரத்து வசதிகளை அமைத்துப் பேணிவருமாறு மாநிலங்களுக்குக் கட்டளையிடுவதற்கு மைய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில், சில போக்குவரத்து அமைப்புகளை முறைப்படி

* அ.ச.ம.வி. XI, பக்கங்கள் 506, 510, 513, 518–520.

† அ. ச. ம. வி. XI, பக்கங்கள் 512, 510.

‡ அ.ச.ம.வி. XI, பக்கங்கள் 515–516.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவிக்கப்படுவதற்கு நாடாளுமன்றத்தின் சட்டமியற்று அதிகாரத்தின் துணை இன்றியே மைய நிர்வாகம் அந்தப் போக்குவரத்து அமைப்புகளை ஏற்படுத்திப் பேணி வருவதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்கு இந்த வகையுரை இயலச் செய்கின்றது. நாடாளுமன்றத்தின் அலுவலில் இவ்வகையான நிர்வாக ஆக்கிரமிப்பின் நோக்கம் மிகவும் தெளிவாக இல்லை ''.*

256, 257 ஆகிய உறுப்புகளின் மிகவும் மறுப்புக்கிடமான கூறு யாதெனில், அத்தகைய கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு முன்பு நிறைவேற்றப்பட வேண்டியுள்ள ஒரே நிபந்தனை இந்திய அரசு ஒருதரப்பாக மன நிறைவு கொள்வதாகும். இந்த இரண்டு உறுப்புகளிலும் 'அந்தக் காரியத்திற்காக இந்திய அரசுக்கு அவசியமெனத் தோன்றக்கூடிய கட்டளைகளை மாநிலத்திற்கு இடலாம்' என்னும் வாசகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மைய அரசின் நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துவதற்கு ஊறு செய்யக்கூடாது என்னும் கடப்பாடு மாநிலங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போதிலும், அதற்கொப்பாக, மாநிலங்களின் நிர்வாக அதிகாரத்திற்கு மைய அரசு ஊறு செய்யக்கூடாது என்று மைய அரசின்மீது கடப்பாடு விதிக்கும் அறிவிப்பு ஏதுமில்லை என்பதையும் காணலாம்.

5. இதனைத் தவிர்க்க இருவகை வழிகள் உள்ளன. ஒன்று, 256, 257 ஆகிய இரண்டு உறுப்புகளை முற்றிலும் நீக்கிவிடுவது. மற்றொன்று, இந்திய அரசுச் சட்ட அமைச்சகத்தின் சட்ட அலுவல் துறைச் செயலாளர் திரு ஆர். எஸ். கே (R. S. Gae) தெரிவித்துள்ள கருத்து மாற்று ஏற்பாடாகக் கொள்ளத்தக்கதாகும். 'மைய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான ஆட்சி உறவுகள்' என்னும் தலைப்பில் 'அரசமைப்புச் சட்டம் மற்றும் நாடாளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின்' 1969, அக்டோபர்-டிசம்பர் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையில், அவர் தெரிவித்துள்ள கருத்தாவது: மாநிலம் தனக்கிடப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றத் தவறியுள்ளபோது,

* அசோக் சந்தாவின், '' இந்தியாவில இணைப்பாட்சி முறை '' என்னும் ஆங்கில நூலின் 107-108 பக்கங்கள்.

இந்திய அரசினால் இடப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுமாறு மாநில அமைச்சர்களையும் மாநில ஆள்வைகளையும் கோருவதற்கும் அவ்வாறு செய்யத் தவறுவதற்காக தண்டம் விதிக்கவும் மைய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம். இந்தக் காரியத்திற்காக 258 (2) உறுப்பினைத் துணையாகக் கொள்வதை அவர் ஆதரிக்கிறார். அவருடைய கருத்துரையின்படி மாநிலச் சட்டமன்றமும் மாநில அமைச்சரவையும் தொடர்ந்து இருக்கக்கூடும். மாநில அமைச்சரவை தொடர்ந்து பதவி வகிக்க இயலும்; ஆனால், நிலைமையானது சிலவகைகளில், 356-வது உறுப்பு செயற்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் நிலவும் நிலைமையை விட மிகவும் மோசமாக இருக்கும். மாநில அமைச்சரவை, சட்டப் பேரவைக்குக் கூட்டாகப் பொறுப்புடையதாகும்; அது திரு கே கருதும் சூழ்நிலையில் தொடர்ந்து செயலாற்றும்.

மைய அரசின் கட்டளைகளை நிறைவேற்றாதவாறு அமைச்சரவையினை மாநிலச் சட்டமன்றம் வெளிப்படையாகத் தடை செய்யுமானால் என்ன செய்யப்பட வேண்டும்? மைய அரசின் செயலாளர் கருத்துப்படி, அப்போது 365-வது உறுப்பின் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்பதும் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டால் அதன் விளைவாக 356-வது உறுப்பின்படிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதும் வெளிப்படை. சுருங்கக்கூறினால், அவர் கருத்துப்படி, மாநில அமைச்சரவை இரண்டு எசமானர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டும் இருவருக்கும்—மைய அரசுக்கும் மாநிலச் சட்டமன்றத்துக்கும்—பொறுப்பாளியாகவும் இருக்கவேண்டியுள்ளது. இந்த நிலை இயலக்கூடியதன்று. மேலும், சட்டமியற்றும் அதிகாரங்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் நாடாளுமன்றம், மாநிலத்தின் இசைவின்றி மாநிலத்திற்கு அதிகாரம் வழங்குவதோ கடமையினை விதிப்பதோ கூடாது என்பதற்கு வகைசெய்யும் பொருட்டு உறுப்பு 258 (2)-ஐ மாற்றியமைப்பதற்கு யோசனை கூறியுள்ளோம். எனவே, உறுப்புகள் 256, 257 ஆகிய இரண்டையும் வைத்திருப்பதென்றால், அதற்குரிய ஒரே மாற்று ஏற்பாடு யாதெனில், மாநிலங்களிடை உறவு மன்றத்தினைக் கலந்து அதன் ஒப்புதலுடனன்றி 256 அல்லது 257-வது உறுப்பில் கருதியுள்ளவாறு கட்டளை எதையும் பிறப்பிக்கக்கூடாது என்பதற்கு வகை செய்வதேயாகும்.

இந்த உறவு மன்றம் அமைக்கப்படவேண்டிய முறையும் அதன் அலுவல்களும் எங்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. *

எந்தக் கருத்தின்படிப் பார்த்தாலும் 365-வது உறுப்பை நீக்கிவிட வேண்டுமெனப் பரிந்துரைக்கின்றோம்.

6. 256, 257 ஆகிய உறுப்புகளைத் தவிர, பின்வரும் உறுப்புகளும்கூட கட்டளையிடுவதற்கு மைய அரசுக்கு அதிகாரமளிக்கின்றன; அவை குறித்து கீழே ஆராயப்படுகின்றது :—

உறுப்பு 339 (2).—மாநிலத்தில் உள்ள பட்டியல் பழங்குடியினரின் (Scheduled Tribes) நலவசதிக்கு இன்றியமையாததாகவுள்ள வரைதிட்டங்களைக் கட்டளையில் குறிப்பிட்டு அவற்றைவகுத்து நிறைவேற்றும்படி இந்த உறுப்பு, மைய அரசு மாநிலத்திற்குக் கட்டளையிட இயலுமாறு செய்கிறது. பட்டியல் பழங்குடியினரின் நலவசதி குறித்து மாநிலங்கள் மிக முக்கியமாக அக்கறை கொண்டுள்ளன. உள்ளபடியாக, இந்தப் பழங்குடியினரின் நலனுக்காக மேற்கொள்ளும் நலவசதி வரைதிட்டங்களுக்கு ஏற்படும் செலவினை மாநிலங்கள்தாம் ஏற்றுக்கொள்கின்றன. 256, 257 ஆகிய உறுப்புகளைப் பற்றிய எமது குறிப்புரை இங்கும் பொருந்தும்.

உறுப்பு 344 (6).—நாடாளுமன்றத்தின் ஆட்சி மொழிக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில் கட்டளை பிறப்பிப்பதற்கு இந்த உறுப்பு குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கின்றது. மொழி குறித்து கட்டளைகள் பிறப்பிப்பது மையஅரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் கட்டாயம் நல்லுறவுக்குக் கேட்டினை உண்டாக்கும். எனவே, இந்த வகையுரையை நீக்கிவிட வேண்டும்.

எந்த உறுப்பின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட எந்தக் கட்டளையை நிறைவேற்றத் தவறினாலும் அதன் விளைவாக 365-வது உறுப்பின் துணைகொண்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியினை ஏற்படுத்துவது கூடாது என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

* திரு க. சந்தானம் அவர்களும், 1970 ஏப்ரலில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசிய மாநாட்டில் வெளியிட்ட அவருடைய அறிக்கையில், 256, 257 ஆகிய உறுப்புகளின் கீழ்க் கட்டளையிடுவதற்கான அதிகாரத்தை மாநிலங்களிடை உறவுமன்றத்தினைக் கலந்தறிந்த பின்னரே பயன்படுத்த வேண்டுமென யோசனை கூறியுள்ளார்.

மாநிலங்களிடை உறவு மன்றம்

7. மாநிலங்களிடை உறவு மன்றம் அமைக்கப்படுவதற்கு 263-வது உறுப்பு வகை செய்கிறது. மைய-மாநில உறவுகள் பற்றிய தேசீய மாநாட்டில் திரு. க. சந்தானம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், இந்த மன்றம் விரைவில் அமைக்கப்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு முன்பு, நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் கற்றறி குழுவுங்கூட, 263-வது உறுப்பின்கீழ் மாநிலங்களிடை உறவு மன்றத்தை ஏற்படுத்துவதற்குப் பெரிதும் பரிந்துரைத் துள்ளது. இந்த உறவு மன்றம், தலைமை அமைச்சர் (இந்தியப் பிரதமர்), மத்திய நிதி அமைச்சர், உள்துறை அமைச்சர், நாடாளுமன்றப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஐந்து மண்டலக்குழுக்களின் ஐந்து பிரதிநிதிகள் மற்றும் தனி அழைப்பாளர்கள் ஆகியோரைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பது நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் யோசனையாகும்.

8. மாநிலங்களிடை உறவு மன்றம் உடனடியாக அமைக்கப்படுவதற்கு இக்குழு பரிந்துரைக்கிறது. இந்த உறவுமன்றத்தில், எல்லா மாநிலங்களுக்கும் சமமான பிரதி நிதித்துவம் இருக்கவேண்டும். முதலமைச்சர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும், இந்தியப் பிரதமர் அதன் தலைவராகவும் இருக்கலாம். மைய அரசின் அமைச்சர் எவரும் இந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கக்கூடாது.

9. தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய ஒவ்வொரு மசோதாவும் அதனை நாடாளு மன்றத்தில் முன்னுரைப்பதற்கு முன்பு, இந்த உறவு மன்றத்தின்முன் வைக்கப்பட்டு அதுபற்றிய அதன் கருத் துரைகளும் பரிந்துரைகளும் அந்த மசோதாவை முன்னு ரைக்கும்போது நாடாளுமன்றத்தின்முன் வைக்கப்பட வேண்டும்.

10. மைய அரசு தேசீய முக்கியத்துவம் வாய்ந்த எந்த முடிவெடுப்பதற்கு முன்பும் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களைப் பாதிக்கின்ற எந்த முடிவை எடுப்பதற்கு முன்பும் மாநிலங்களிடை உறவு மன்றத்தை கலந்தறிய வேண்டும் எனத் திட்டவட்டமாக வகை செய்யப்படவேண்டும்.

நாட்டுப்பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள் போன்ற காரியங்களில் விலக்களிக்கப்படலாம். ஆனால், அந்தக் காரியங்களிலும்கூட மைய அரசின் முடிவு அடுத்தபடியாக தவிர்க்கத்தக்க எவ்விதத் தாமதமுமின்றி மாநிலங்களிடை உறவு மன்றத்தின்முன் வைக்கப்படவேண்டும்.

11. மாநிலங்களிடை உறவு மன்றம் உண்மையாகவே பயனுடையதாக இருக்கவேண்டுமெனில், அதனுடைய பரிந்துரைகள் மைய அரசு மாநிலங்கள் ஆகிய இரண்டையும் இயல்பாகக் கட்டுப்படுத்தக்கூடியனவாகச் செய்யப்படவேண்டும்.

எந்தக் காரணம் பற்றியேனும், மாநிலங்களிடை உறவு மன்றத்தின் பரிந்துரை யாதேனும் தள்ளுபடி செய்யப்படுமானால், அந்தப் பரிந்துரை, அது தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணங்களுடன் நாடாளுமன்றத்தின் முன்பும் மாநிலச் சட்டமன்றங்களின் முன்பும் வைக்கப்படவேண்டும்.

அத்தியாயம் IV

சட்டமியற்று துறை

சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்தல்

1919-ம் ஆண்டுக்கு முன்பு செயலில் இருந்த அரசமைப்புச் சட்டங்கள் ஒற்றையாட்சி முறை அரசுக்கு மட்டுமே வகை செய்திருந்தன. எனவே, பல்வேறு மாகாண அரசுகளுக்கும் மைய அரசுக்குமிடையே சட்டமியற்றும் அதிகாரப் பகிர்வு பற்றிய பிரச்சினை ஏற்படவில்லை. 1919-ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் 45-அ பிரிவும், அச்சட்டத்தின் 129-அ பிரிவும் சேர்ந்து மாகாண அரசுகள் மாகாணச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் அலுவல்களை, ஆளுநர் தலைவரின் (கவர்னர் ஜெனரல்-இன்-கவுன்சில்) அலுவல்கள், இந்தியச் சட்டமன்றத்தின் அலுவல்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு, அரசின் அலுவல்கள் தொடர்பாக மைய அரசுக் காரியங்கள் மாகாண அரசுக் காரியங்கள் என வகைப்பாடு செய்வதற்கு வகை செய்யும் பொருட்டு இந்திய விவகார அமைச்சரின் (செக்ரெட்டரி ஆப் ஸ்டேட்-இன்-கவுன்சில்) இசைவாணையுடன் விதிகளை இயற்றத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளித்திருந்தன. 45-அ பிரிவின்கீழ் இயற்றப்பட்ட அதிகார ஒப்படைப்பு விதிகள், காரியங்களை, மையக் காரியங்கள், மாகாணக் காரியங்கள் என இரண்டு இனங்களாக வகைப்படுத்த வகை செய்தது. பொது அதிகாரப் பட்டியல் என்று அப்போது ஏதுமில்லை. மையக் காரியங்களில் அல்லது மாகாணக் காரியங்களில் சேர்க்கப்பட்டிராத பொருள் மையக் காரியமாகக் கொள்ளப்பட்டது——ஒப்படைப்பு விதிகளுக்கான (Devolution Rules) இணைப்பட்டி I-ன் பாகம் I-ல் இனம் 47-ஐக் காண்க. அதிகாரப் பிரிவினை எவ்வாறு இருந்த போதிலும், மாகாணப் பொருள் பற்றிச் சட்டமியற்ற மையச் சட்டமன்றத்திற்கும் மையப் பொருள் பற்றிச் சட்டமியற்ற மாகாணச் சட்டமன்றத்திற்கும் 1919-ம் ஆண்டுச் சட்டத்தின் 84 (2)-வது பிரிவு அதிகாரங்களை வழங்கியது. ஒப்படைப்பு விதிகளிலுள்ள காரியத்துறை வகைப்பாடு, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியில் குறித்துள்ள மூன்று அதிகாரப் பட்டியல்களுக்கும் அடிப்படையாக அமைந்தது.

அரசமைப்புச் சட்டம் இந்த மூன்று பட்டியல்களையும் மாறுதல்களுடன் ஏற்றுக் கொண்டது. மைய அரசு அதிகாரப் பட்டியலில் 97 பதிவுகள் உள்ளன; அவற்றில் 12 வரி விதிப்பு பற்றியனவாகும். மாநில அதிகாரப் பட்டியலில் 65 பதிவுகள் அடங்கியுள்ளன ; அவற்றில் 19 வரி விதிப்பு பற்றியனவாகும். பொது அதிகாரப் பட்டியல் 47 பதிவுகளைக் கொண்டுள்ளன. இவற்றில் வரி விதிப்பு பற்றியது என்று சொல்லக் கூடிய ஒரே பதிவு நீதித் துறை முத்திரைத்தாள்கள் மூலம் திரட்டப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் அல்லாத பிற முத்திரைத் தீர்வை பற்றிய பதிவாகும்.

2. சட்டமியற்றல் மற்றும் வரி விதிப்பு பற்றிய எஞ்சிய அதிகாரம் மைய அரசுக்கு உரியதாக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் அவை, தேவையான பெரும்பான்மையின் மூலம் நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளிக்குமானால், சாதாரண நிலைமைகளின் போது கூட நெருக்கடி நிலைக்கான காரணம் இல்லாமலேயே நாடாளுமன்றம் மாநிலக் காரியத்துறை குறித்து சட்டமியற்றலாம். இன்னும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலச் சட்ட மன்றங்கள் அது குறித்து அதிகாரமளிக்குமானால் நாடாளுமன்றம் மாநிலக் காரியத்துறை மீது சட்டமியற்ற இயலும்.

3. சில முக்கிய இணைப்பாட்சிகளின் அரசமைப்புச் சட்டத்தில் இப்பொருள் பற்றிய வகையுரைகளைச் சுருக்கமாக ஆராய்வது இந்த சந்தர்ப்பத்தில் பயனுடையதாக இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசமைப்புச் சட்டம் அறுதியிடப்பட்ட அதிகாரங்களையுடைய இணைப்பாட்சி அரசு என்று கூறப்படுகிறது. உறுப்பு I-ன் 8-வது பிரிவில் பேரவையின் (Congress) அதிகாரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய அரசுக்கு அரசமைப்புச் சட்டத்தால் வழங்கப்படாத அல்லது அதனால் மாநில அரசுகளுக்கு விலக்கப்படாத அதிகாரங்கள் முறையே மாநில அரசுகளுக்கு அல்லது மக்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனவாக பத்தாவது திருத்தம் கூறுகின்றது. இணைப்பாட்சி அரசுக்கு வழங்கப்படாத எல்லாப் பொருள்கள் குறித்தும் சட்டங்களை இயற்றுவதற்குரிய அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்திற்கு உள்ளது. பேரவை, மாநிலச் சட்ட மன்றங்கள் ஆகிய இரண்டின் பொது அதிகாரத்திற்குட்பட்டதாக எந்தப் பொருளையும் அரசமைப்புச் சட்டம் வகைப்படுத்தவில்லை. '' பொது '' (Concurrent) என்னும் சொல் பதினெட்டாவது திருத்தத்தில் பிரிவு 2-ல் முதல் தடவையாக காணப்

படுகின்றது. ஆயினும், மாநிலங்களிடையான வர்த்தகம் இணைப்பாட்சியின் உரிமை அதிகாரத்திற்குட்பட்டது என்ற போதிலும் வழிகாட்டுங் கூலி (pilotage), கப்பல் துறைகள், துறைமுகங்கள் முதலியவை போன்ற பொருள்கள் பற்றி மாநிலங்கள் சட்டமியற்றலாம் என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், மாநிலங்களிடை வர்த்தகம் நடத்துதலை நேரடியாகப் பாதிக்கின்ற அல்லது முறைப்படுத்துகின்ற வகையான எந்த நடவடிக்கையையும் அவை மேற்கொள்ள இயலாது.

கனடாவில், 91-வது பிரிவு நாடாளுமன்றத்தின் தனியுரிமையான அதிகாரங்களை எண்ணிட்டுக் குறிப்பதுடன் எஞ்சிய அதிகாரங்களையும் கூட அதற்கே உரித்தாக்குகின்றது. மாநிலங்களுக்குத் தனி உரிமையாக ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள்கள் 92-வது, 93-வது பிரிவுகளில் குறிக்கப்பட்டுள்ளன. டொமினியன் நாடாளுமன்றம் மாகாணச் சட்டமன்றங்கள் ஆகிய இரண்டின் பொது உரிமை அதிகாரத்துக்குள் சேர்க்கப்பட்டிருப்பவை, முதியோர் ஓய்வூதியம், வேளாண்மை, குடியேற்றம் ஆகிய பொருள்கள் மட்டுமேயாகும்—94-அ, 95 பிரிவுகளைக் காண்க.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, காமன்வெல்த் அரசமைப்புச் சட்டத்தின் 51-வது பிரிவு பொது அதிகாரங்களை எண்ணிட்டுக் குறிக்கின்றது. 52-வது பிரிவு நாடாளுமன்றத்தின் தனித்த அதிகாரங்களை எண்ணிட்டுக் குறிக்கின்றது. 107-வது பிரிவின் பயனாக மாநிலச் சட்ட மன்றங்களுக்குப் பொது அதிகாரத்தைத் தவிர, சட்டமியற்றும் எஞ்சிய அதிகாரங்களுங்கூட உள்ளன.

சுவிட்சர்லாந்தில், சில பொருள்கள் கூட்டரசிடம் (confederation) தனியுரிமையாக உரித்தாக்கப்பட்டுள்ளன ; ஏனைய பொருள்களின் அதிகாரம் மாகாணங்களுக்கே (cantons) உரித்தாக்கப்பட்டுள்ளன. பொதுத் துறையில் குடியேற்றம், தொற்றுத்தடை, வங்கித் தொழில், வேளாண்மை ஆகியவை அடங்கியுள்ளன.

4.. அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியில் உள்ள அதிகாரப் பட்டியல்கள் I, III ஆகியவற்றின் பதிவுகளை ஆராய்ந்து அப்பதிவுகளை மறு பகிர்வு செய்வதற்கான யோசனைகளைக் கூறும்பொருட்டு திறமை வாய்ந்த வழக்கறிஞர்கள், சட்ட அறிஞர்கள், ஆட்சி அனுபவமுடைய அரசியல் மூதறிஞர்களையும் கொண்ட உயர் அதிகார

ஆணைக் குழு ஒன்றை அமைப்பது விரும்பத்தக்கதென இக் குழு கருதுகின்றது. இருப்பினும், இக்குழு இப்பிரச்சினை குறித்து மிக விரிவாக ஆராய்ந்துள்ளது ; இதன் கருத்துரைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

5. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல், மைய அரசுப் பட்டியல் 1935-வது ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் இணைப்பாட்சிப் பட்டியலின் பதிவுகளைக் கணிசமான அளவில் அப்படியே எடுத்துக் கொண்டுள்ளது. ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் மாகாணச் சட்ட மன்றத்தின் அதிகார வரம்பிற்குள் இருந்த சில இனங்கள் இப்போது நாடாளுமன்றத்தின் தனித்த அதிகாரத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. பின் வரும் இனங்கள் இந்த அம்சம் பற்றியனவாகும்:—

48-வது பதிவு, பங்கு வாணிக்க் களங்கள், எதிர்நோக்கு வாணிகங்கள் ஆகியவை பற்றிக் குறிப்பிடுகின்றது. இதற்கு ஒப்பான பதிவு 1935-வது சட்டத்தில் ஏதுமில்லை. தூனி சந்துக்கும் புவால்கா சகோதரர்களுக்குமிடையில் நடைபெற்ற வழக்கில் [(1955)I SCR 1071], எதிர்நோக்கு வாணிகங்கள் பற்றிச் சட்டமியற்றல் II-வது பட்டியலின் 27-வது பதிவுக்குள் அதாவது, வர்த்தகமும் வாணிகமும், வாணிகக் களங்கள் முதலியவை என்பதற்குட்பட்டது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தற்போதுள்ள பதிவின் பயனாக, வருங்கால ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1952 (மையச் சட்டம் 74/1952), உறுதிச் சீட்டு ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956 (மையச் சட்டம் 42/1956) ஆகியவற்றை நாடாளுமன்றம் சட்டமாக இயற்றியது. வேவர்லி சணல் ஆலைக்கும் ராய்மன் கம்பெனிக்கும் (A.I.R. 1963 உச்ச நீதி மன்ற வழக்கு 90) இடையில் நடைபெற்ற வழக்கில், இந்தச் சட்டங்கள் செல்லத் தக்கவை என உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சாராயம் அடங்கிய மருந்து வகை மற்றும் ஒப்பனை வகைத் தயாரிப்புகள் உள்ளிட்ட சில பொருள்கள் மீதான ஆயத் தீர்வைகள் பற்றிச் சட்டமியற்றும் அதிகாரத்தை 84-வது பதிவு மாநிலங்களுக்கின்றி நாடாளுமன்றத்துக்கு மட்டுமே அளித்துள்ளது. இது, இந்திய அரசுச் சட்டத்தின் இணைப்பாட்சிப் பட்டியலின் 45-வது பதிவுக்கு ஒப்பானதாகும், அந்தச் சட்டத்தில், மாகாணப் பட்டியலின் 40-வது பதிவு

சில ஆயத் தீர்வைகளை விதிக்க மாகாணச் சட்டமன்றத்துக்கு அதிகாரமளித்துள்ளது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ், சாராயம் அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைவகைத் தயாரிப்புகள் மீது மாகாணச் சட்டமன்றங்கள் மட்டுமே தீர்வை விதிக்க இயலும் என்று இருக்கையில், அரசமைப்புச் சட்டத்தின் கீழ், அதனை மாநிலச் சட்டமன்றங்கள் விதிக்க இயலாது; அதனை நாடாளுமன்றம் மட்டுமே விதிக்க முடியும். டிங்ச்சரை (tinctures) ஒரு மாகாணத்திலிருந்து மற்றொன்றுக்குக் கப்பலில் அனுப்புகையில் இடர்ப்பாடு ஏற்பட்ட காரணத்திற்காக பூனாவிலுள்ள மகோரா ரசாயனப் பொருள் கம்பெனி ஆயத் தீர்வைகள் அதிகாரத்தை மைய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைத்து அரசமைப்புச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கடிதத்தைச் சுற்றனுப்பியதே இந்த மாற்றத்திற்குக் காரணம் என்று கிரான்வில் ஆஸ்டின், "இந்திய அரசமைப்புச் சட்டம்—தேசத்தின் மூல அமைப்பு" என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். 'மருந்தாக்கும் தொழிலின் வளர்ச்சியை முன்னிட்டு' 'ஒருபடித்தான ஆயத் தீர்வைக்கு வகை செய்வதற்காக இது மையப் பட்டியலில் சேர்க்கப்பட்டது', என்று அந்தப் பதிவுக்கு அடிக்குறிப்பு உள்ளதையும் அந்த ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மாநிலச் சட்டமியற்றும் அதிகார எல்லைக்குட்பட்டதும் பொது அதிகார எல்லைக்குட்பட்டதுமான அதிகாரங்கள் சில தற்போது மைய அரசின் அதிகார எல்லைக்குள் கொண்டு போகப்பட்டு அவற்றிற்கும் மாநிலங்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லாதவாறு செய்யப்பட்டிருப்பதும் மேற் கூறியவற்றால் விளங்கும். 'மாகாணப்பட்டியலிலிருந்தும் பொது அதிகாரப்பட்டியலிலிருந்தும் பெரும்பாலான அதிகாரங்கள் களவாடப்பட்டு மைய அரசின் சட்டமியற்ற வகை செய்யும் பதிவுகளுக்குள் சேர்க்கப்பட்டுள்ளன' என்ற கருத்து அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் காலத்திலேயே நிலவியது என்பது சுவைமிக்கச் செய்தியாகும். இந்த எண்ணத்தைப் போக்க சர் என். கோபாலசாமி ஐயங்கார் முயன்றார் என்பது உண்மையே. அதிகாரப் பட்டியல்களையும் 1935-ம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்தையும் ஒப்பு நோக்கிக் கூர்ந்து ஆய்ந்து பார்த்தால், மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்புகள், ஒன்றிரண்டு தவிர, ஆக்கிரமிக்கப்படவில்லையென்பது புலனாகுமென அவர் கூறியுள்ளார்.*

* அ. ச. ம. வி. V, பக்கம் 40.

6. மூன்று பட்டியல்களும் கீழே யோசனை கூறியுள்ள முறையில் மாற்றியமைக்கப்படவேண்டுமென இக்குழு கருதுகின்றது :—

(1) மைய அரசுப் பட்டியல்

பட்டியல் I

7. பாதுகாப்பின்பொருட்டு அல்லது போர் நடத்துவதற்காக அவசியமானவை எனச் சட்டத்தினுல் நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட தொழில்கள்.

இந்தப் பதிவின் மொழியமைப்பு திட்டமின்றி உள்ளது ; எனவே, பாதுகாப்புக்கு நேரடித் தொடர்பற்ற தொழில்கள் கூட இதில் அடங்கியுள்ளன என்று வாதிடுவதற்கு இடமேற்படுகிறது. இந்தப் பதிவிற்குப் பதிலாக படைக்கலத் தொழில்களுக்கு மட்டுமே வரையறுக்கும் மிகவும் திட்டவட்டமான விவரிப்புடைய பதிவை அமைத்தல் விரும்பத்தக்கதாகும். *

32. ஒன்றியத்தின் சொத்தும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயும்; ஆனுல் ஒரு மாநிலத்தில் அமைந்துள்ள சொத்தினைப் பொறுத்தவரை, நாடாளுமன்றத்தினுல் சட்டத்தின் மூலம் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி அவை குறித்து மாநிலம் சட்டமியற்றுவதற்குட்பட்டனவாகும்.

இந்தப் பதிவு நாடாளுமன்றத்திற்குப் புறக்கணிப்பு அதிகாரம் வழங்குகிறது. 285-வது உறுப்பு, ஒன்றியத்துக்கு மாநிலத்தினுல் வரி விதிக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கின்றது. இந்த விலக்கு நீக்கப்பட வேண்டுமென இக் குழு பரிந்துரைக்கின்றது.

40. இந்திய அரசினுல் அல்லது மாநில அரசினுல் நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டங்கள்.

பெரும்பாலும் எல்லா மாநிலங்களும் பரிசுச் சீட்டு திட்டங்களை நடத்துகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, ஒரு மாநிலத்தில் மற்ருெரு மாநிலத்தின் பரிசுச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதை அந்த மாநில அரசு தடை செய்ய இயலாது. ஆனுல், பம்பாய் உயர்நீதிமன்றம் மாருன கருத்துடையதாகத் தெரிகிறது. மாநில அரசுகளால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டங்கள் தனியாரால் நடத்தப்படும் பரிசுச்

* இதுவே திரு க. சந்தானம் அவர்களின் கருத்துமாகும். 1970 ஏப்ரலில் புது டில்லியில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசிய மாநாட்டில் அளிக்கப்பட்ட அவருடைய அறிக்கையைக் காண்க.

சீட்டு திட்டங்களினின்றும் வேறுபட்டவையாகும். பரிசுச் சீட்டுகளின் ஆதாயங்கள் மாநிலங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதாக உள்ளன. மைய அரசினுல் நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டங்கள் மையப் பட்டியலில் தொடர்ந்திருப்பதும் அதே நேரத்தில் மாநிலங்களால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டங்கள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் என்பதும் நியாயமானதாகத் தோன்றுகிறது. நீதிமன்றங்களின் கருத்து வெவ்வேருக இருக்கின்ற காரணத்தினுல், மற்ற மாநிலத்தினுல் நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டத்தை தம்மிடத்தில் தடை செய்ய அல்லது அது குறித்த நடவடிக்கையை ஒழுங்குபடுத்த மாநிலங்களுக்கு வெளிப்படையாக அதிகாரம் அளிப்பது அவசியமாகும்; எனவே, இந்த அதிகாரம் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்படலாம்.

48. பங்கு வாணிகக் களங்களும் எதிர்நோக்கு வாணிகங்களும்.

1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, "எதிர்நோக்கு வாணிகங்கள்" மாகாணங்களுக்கு மட்டும் உரிய பொருளாக இருந்தது. பங்கு வாணிகக் களங்கள் ஏறத்தாழ செலாவணிப் பத்திரங்களுக்கு ஒப்பான காரியங்களில் ஈடுபடுகின்றன. எனவே, அது மையப் பட்டியலில் இருந்து வரலாம். எதிர்நோக்கு வாணிகங்கள் முக்கியமாக, மாநிலத்திற்கு மட்டுமுரிய இனமான வர்த்தக வாணிக ஒப்பந்தங்கள் பற்றியனவாகும். எதிர்நோக்கு வாணிகங்களை மாநிலப் பட்டியலுக்கு மாற்றப் பரிந்துரைக்கிறேம்.

52. பொது நலனுக்காக மைய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உகந்ததென்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தினுல் அறிவிக்கப்பட்ட தொழில்கள்.

இந்தப் பதிவைத் தனிக் கவனத்துடன் ஆராய வேண்டியுள்ளது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் இணைப்பாட்சிப் பட்டியலின் 34-வது பதிவின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டுள்ளது. 52-வது பதிவுக்கேற்ப, நாடாளுமன்றத்தினுல் 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சியும் ஒழுங்கு முறையும்) சட்டம் (மையச் சட்டம் 65/1951) இயற்றப்பட்டுள்ளது. பொது நலனுக்காக மைய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உகந்ததென நாடாளுமன்றத்தினுல் அறிவிக்கப்பட்ட பல்வேறு தொழில்களை அந்தச் சட்டம் இணைப்பட்டியில் குறிக்கின்றது. அந்த இணைப்பட்டி அவ்வப்போது பெரி

தாக்கப்பட்டு தொழில்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் பட்டுள்ளது. தவிர, பல்வேறு தொழில்களைப் பொது நலனுக்காக மைய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உகந்த தென பல சட்டங்கள் அறிவிக்கின்றன. அவற்றில் சில— 1942-ம் ஆண்டு காப்பிச் சட்டம் (மையச் சட்டம் 7/1942), 1947-ம் ஆண்டு ரப்பர் சட்டம் (மையச் சட்டம் 24/1947), 1948-ம் ஆண்டு இந்திய எரி சாராயச் சட்டம் (மையச் சட்டம் 22/1948), 1948-ம் ஆண்டு மையப் பட்டு வாரியச் சட்டம் (மையச் சட்டம் 61/1948), 1953-ம் ஆண்டு தேயிலைச் சட்டம் (மையச் சட்டம் 29/1953), 1953-ம் ஆண்டு கயிறுத் தொழில் சட்டம் (மையச் சட்டம் 45/1953), 1958-ம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (ஒழுங்கு முறை) சட்டம் (மையச் சட்டம் 21/1958), 1965-ம் ஆண்டு ஏலக்காய் சட்டம் (மையச் சட்டம் 42/1965).

பல்வேறு சட்ட முறை நடவடிக்கைகள் குறிப்பாக, 1951-ம் ஆண்டு 65-வது மையச் சட்டத்தின் இணைப்பட்டி, மாநிலங்களின் தொழில் முன்னேற்றத்துக்குக் கணிசமான அளவில் இடையூறு செய்வதுடன் அவற்றின் தொடங்கும் முயற்சியையும் அழித்து விடுகின்றது.

1951-ம் ஆண்டுச் சட்டத்தின் இணைப்பட்டியில் உண்மையிலேயே தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லாத தொழில்கள் அடங்கியுள்ளன என்பது இக் குழுவின் கருத்தாகும்; இக் கருத்தை பொது மக்களில் பொறுப்பு வாய்ந்தவர்களும் ஆதரிக்கின்றனர். இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு, அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் ஏதும் தேவையில்லை. உண்மையிலேயே தேசீய முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களுக்கு மட்டும் வரையறுக்கும் வகையில் 1951-ம் ஆண்டுச் சட்டத்தின் இணைப்பட்டியலை மாற்றியமைப்பதே போதுமானதாகும். இது ஒருவகை மாற்று வழியாகும். ஆனல், மேலே குறிப் பிடப்பட்ட மற்றச் சட்டங்கள் இருக்கின்றன; அந்தச் சட்ட மியற்ற வகை செய்யும் பதிவு அரசமைப்புச் சட்டத்தில் உள்ளவரை, நாடாளுமன்றம் வருங்காலத்தில் எந்தத் தொழிலையேனும் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த தொழில் என அறிவிப்பதைத் தடுக்கக் கூடியது ஒன்றுமில்லை.

52-வது பதிவு தெளிவற்றதாக உள்ளது; 1951-ம் ஆண்டு 65-வது மையச் சட்டம் செயல்படுத்தப்பட்ட வகை பற்றியும் அதன் எல்லை விரிவுபடுத்தப்பட்டது பற்றியும் மாநிலங்கள் குறை கூறி வந்துள்ளன. தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியத் தன்மையுடைய தொழில்

களுக்கு மட்டும் அல்லது நூறு கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் கொண்ட தொழில்களுக்கு மட்டும் 52-வது பதிவு பொருந்துவதாக வரையறுக்கப்படுவதற்கு இக் குழு பரிந்துரைக்கின்றது.

53. எண்ணெய் வயல்களையும் கனிம எண்ணெய் ஆதாரங்களையும் ஒழுங்குமுறைப்படுத்துவதும் வளர்ச்சி பெறச் செய்தலும்; நில எண்ணெயும் (பெட்ரோலியம்) நிலஎண்ணெய்ப் பொருள்களும்; அபாயத் தன்மையில் தீப்பற்றக்கூடியவை என நாடாளுமன்றத்தினுல் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட ஏனைய நீர்மங்களும் பொருள்களும்.

54. சுரங்கங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதும் கனிம வளர்ச்சி செய்வதும் மைய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பது பொது நலன் பொருட்டு உகந்ததெனச் சட்டத்தினுல் நாடாளுமன்றம் அறிவிக்கின்ற அளவிற்கு அவ்வாறு முறைப்படுத்துவதும் வளர்ச்சி பெறச் செய்தலும்.

55. சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் உழைப்பு வேலையை ஒழுங்கு முறைப்படுத்தல்.

இந்தப் பதிவுகள், மாநிலங்களின் வளர்ச்சி நடவடிக்கைகள் பற்றியனவாகும். இந்தப் பதிவுகளில் குறித்துள்ள காரியங்களின் பொறுப்புச் சுமையினை நாடாளுமன்றம் ஏற்கத் தேவையில்லை. உழைப்பு வேலையை ஒழுங்கு முறை செய்தலை மாநிலங்களிடமே விட்டுவிடலாம். இந்த உழைப்பு வேலை, சுரங்கங்களுக்கும் எண்ணெய் வயல்களுக்கும் சம்பந்தப்பட்டவையென்பதனுல் வேறுபாடு ஏதுமில்லை. இந்தப் பதிவுகள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப் பரிந்துரைக்கிறோம்.

67. நாடாளுமன்றத்தினுல் இயற்றப்பட்ட சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிவிக்கப்பட்ட பண்டைக்காலத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் ஆவணங்களும் மற்றும் தொல்பொருளிடங்களும் சிதைவுகளும்.

இந்தப் பதிவு, மாநிலப் பட்டியலின் 12-வது பதிவு, பொதுப் பட்டியலின் 40-வது பதிவு ஆகியவற்றிலிருந்து, பண்டைக் காலத்திய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளிடங்கள், சிதைவுகள் ஆகியவை பற்றிய அதிகாரங்கள் மையத்திற்கும் மாநிலங்களுக்கும் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகும் :—

(1) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பண்டைக் காலத்திய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்

சின்னங்களும் ஆவணங்களும் தொல்பொருளிடங்களும் சிதைவுகளும் நாடாளுமன்றத்தின் தனித்த வரம்பிற்குள் உள்ளன.

(2) ஏனைய தொல்பொருளிடங்கள், சிதைவுகள் பற்றிச் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கும் மாநிலச் சட்ட மன்றங்களுக்கும் அதிகாரம் உள்ளது.

(3) தேசீய முக்கியத்துவம் வாய்ந்ததல்லாத பண்டைக் காலத்திய, வரலாற்று முக்கியத்துவமுடைய நினைவுச் சின்னங்கள் மற்றும் ஆவணங்கள் பற்றிச் செயல்பட மாநிலத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.

இந்தப் பொருள் மாநிலங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டியதே பொருத்தமானதாகும். * இந்தப் பொருள் வட்டார வரலாற்றுடனும் பண்பாட்டுடனும் இணைந்துள்ளது. பண்டைக் கால நினைவுச் சின்னங்களை நல்ல நிலையில் வைத்திருக்கவும் பராமரிக்கவும் மாநிலம், மைய அரசுக்கு மேலான அக்கறை காட்டாவிடினும் மைய அரசு அக்கறை காட்டும் அளவிற்கு மாநிலமும் அக்கறை காட்டுகின்றது. பண்டைக் காலத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் ஆவணங்கள், தொல்பொருளிடங்கள் மற்றும் சிதைவுகள் ஆகிய அனைத்தும் பற்றிய செயலதிகாரம் மாநிலத்திற்கு மட்டுமே உரியதென ஆக்கப் படுமானல் பிணக்கையும், தப்பெண்ணத்தையும் உண்டாக்கும் ஓர் நிலை அகற்றப்பட்டுவிடும். அண்மையில் இந்த மாநிலத்திற்கும் மையஅரசுக்கும் இடையில் தஞ்சாவூர் பெரிய கோயில் பற்றித் தகராறு இருந்து வருகிறது. இந்தப் பொருளை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதன் மூலம் இது போன்ற தகராறுகளைத் தவிர்க்க இயலும்.

76. மைய அரசுக் கணக்குகளையும் மாநிலங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்தல்.

1947, அக்டோபரில் அரசமைப்புச் சட்ட ஆலோசகரால்தயாரிக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட வரைவில், மாநிலச் சட்ட மன்றம் சட்டத்தின் வழி ஏற்பாடு செய்யுமானல்,

*திரு க. சந்தானம் அவர்கள் முன்னர் குறிப்பிட்ட அவருடைய அறிக்கையில் இக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மாநிலத்திற்குத் தனியே ஒரு தணிக்கை முதல்வரை நிய மிப்பதற்கான வகையுரை அடங்கியிருந்தது. மாநிலங்க ளால் தனியே தணிக்கைத் தலைவர்கள் நியமிக்கப்படுவதற் கான வகையுரை ஒன்றை வரைவுக் குழுவும் சேர்த்திருந்தது. ஆனால், மாநிலங்களுக்குத் தனியே தணிக்கைத் தலைவர்கள் நியமிக்கப்படுவது பற்றிய வகையுரையை அரசமைப்புச் சட் மன்றம் * விட்டுவிட்டது. மாநிலங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் காரியம் இயல்பாகவே மாநிலச் சட்ட மன்றங்களுக்கு விட்டுவிடப்பட வேண்டியதாகும். மாநில அரசு, கண்டிப்பான நிதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இருக் கிறது. எனவே, மாநிலங்களின் கணக்குத் தணிக்கை பற்றிய அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு உரியதாக்க நியாய மிருப்பதாகத் தோன்றவில்லை. மாநிலங்களின் கணக்குத் தணிக்கையினை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிவிடலாம்.

84. பின்வருபவை நீங்கலாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை மற்றும் ஏனைய சரக்குகள்மீது ஆயத் தீர்வை.

(அ) குடிக்கப்படுவதற்கான போதைச் சாராயங்கள் ;

(ஆ) அபினி, இந்தியச் சணல் மற்றும் ஏனைய மயக்க மருந்துப் பொருள்களும் மயக்க மருந்துகளும்;

இந்தப் பதிவின் (ஆ) உட்பத்தியில் சேர்க்கப்பட்டுள்ள பொருள் அல்லது சாராயம் அடங்கிய மருந்துப் பொருள் களும் ஒப்பனைத் தயாரிப்புகளும் உட்பட.

1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் மாகா ணங்களின் தனித்த அதிகாரத்திற்குள் இருந்த மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள் மீது ஆயத் தீர்வை விதிக்கும் அதி காரம் மையப் பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கான சூழ் நிலையை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். 1919-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்திலுங்கூட இந்த ஆயத் தீர்வைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்திற்குப் பொறுப்பாளியாக இருந்த அமைச்சர்களுடன் செயல் புரியும் ஆளுநரின் கட்டுப் பாட்டின்கீழ் இருந்தன என்பதை அறிதல் நலம் பயக்கும். இந்த ஆயத் தீர்வைகள் மாநிலங்களால் வசூலிக்கப்பட்டுக்

* அ.ச.ம.வி. IX, பக்கம் 63.

கிடைக்கும் ஆதாயம் முழுவதையும் மாநிலங்களே எடுத்துக் கொள்கின்றன. எனவே, சாராயம் அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள் முதலியவற்றின் மீது ஆயத் தீர்வை விதிக்கும் அதிகாரத்தை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிவிடுவது பொருத்தமுடையதாகும்.

97. பட்டியல் II அல்லது பட்டியல் III-ல் எண்ணிட்டுக் காட்டப்படாத ஏனைய பொருள்கள்—அந்தப் பட்டியல்களில் குறிப்பிடப்படாத வரி உட்பட.

மாநிலப் பட்டியலையும், பொதுப் பட்டியலையும் முடித்த பின்னர் இந்தத் தலைப்பை ஆராய்வோம். மையப் பட்டியலின் ஏனைய பதிவுகளுக்கு மாற்றந் தேவையில்லை எனக் கருதுகிறோம்.

(2) மாநில அரசுப் பட்டியல்

பட்டியல் II

எவரும் இந்தப் பட்டியலில் உள்ள எந்தப் பதிவையாவது மையப் பட்டியலுக்கு அல்லது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமென இதுவரை கருத்துரைக்கவில்லை.*

மாநிலப் பட்டியல், 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அதனோடு ஒத்ததாக இல்லை. மாகாணப் பட்டியலின் சில பதிவுகள் மையப் பட்டியலுக்கோ பொதுப் பட்டியலுக்கோ மாற்றப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கின்றி மையத்திற்கு மட்டும் தனித்த வகையில் அல்லது மாநிலங்களுடன் பொதுவாக அதிகாரத்தை உரியதாக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ள மாகாணப் பட்டியலின் பதிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

8. போதையூட்டும் சாராயங்கள், அதாவது போதையூட்டும் சாராயங்களின் உற்பத்தி, தயாரிப்பு, வைத்திருத்தல், அவற்றைக் கொண்டு செல்லல், கொள்முதல் மற்றும் விற்பனை.

இந்திய அரசுச் சட்டத்தில் இதற்கு ஒப்பான பதிவு, அதாவது மாகாணப் பட்டியலின் 31-வது பதிவு மயக்க

* முன்னர் குறிப்பிட்ட திரு க. சந்தானம் அவர்களின் அறிக்கையையும் காண்க.

மருந்துப் பொருள்களையும் குறிக்கின்றது. இது இப்போது அரசமைப்புச் சட்டத்தின் பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது—19-வது பதிவைக் காண்க. பொதுப் பட்டியல் பற்றி ஆராய்கையில் அப் பட்டியலின் 19-வது பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளோம்.

18. நிலம், அதாவது, நிலத்தில் அல்லது நிலத்தின்மீது உள்ள உரிமை, நிலக்கிழாருக்கும் குத்தகைதாரருக்கும் உள்ள தொடர்பு உட்பட நிலக்குத்தகை உரிமைகள் மற்றும் குத்தகை வசூல்; வேளாண்மை நிலத்தை பிறர்க்கு மாற்றலும் கொடுத்துவிடலும்; நிலமேம்பாடும் வேளாண்மைக் கடன்களும்; குடியேற்றம்.

இதற்கு ஒப்பாக மாகாணப் பட்டியலில் உள்ள பதிவு, அதாவது 21-வது பதிவு, வேளாண்மை நிலங்களின் முறையுரிமை பற்றியும் குறிப்பிடுகின்றது. அரசமைப்புச் சட்டத்தின்கீழ், வேளாண்மை நிலத்திற்கு முறையுரிமை அடைதல் பொதுப் பட்டியலின் 5-வது பதிவினால் முறைப்படுத்தப்படுகின்றது. ஆகவே, 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் மாகாணச் சட்ட மன்றத்திற்கு உரியதாக இருந்த அதிகாரம் இப்போது பொதுவானதாக நாடாளுமன்றத்திற்கும் உரியதாக்கப்பட்டுள்ளது. பொதுப் பட்டியலின் 5-வது பதிவு பற்றி ஆராய்கையில் அந்த 5-வது பதிவு முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப் பரிந்துரைத்துள்ளோம்.

23. சுரங்கங்களை ஒழுங்குமுறைப்படுத்துவது, கனிம வளர்ச்சி ஆகியவை குறித்து I-வது பட்டியலின் வகையுரைகளுக்குட்பட்டு அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தலும் வளர்ச்சி பெறச் செய்தலும்.

1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் மாகாணப் பட்டியலின் 23-வது பதிவில் எண்ணெய் வயல்களும் அடங்கியிருந்தன. இது, இப்போது மாநிலச் சட்டமன்றத்தினின்றும் முற்றிலும் நீக்கப்பட்டு நாடாளுமன்றமே எண்ணெய் வயல்கள் குறித்து தனி அதிகாரம் பெற்றுள்ளது (மையப் பட்டியலின் 53-வது பதிவு).

எங்களுடைய பரிந்துரையின் விளைவாக, மையப் பட்டியலின் 53, 54, 55-வது பதிவுகள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்; மாநிலப் பட்டியலின் 23-வது பதிவு தக்கவாறு மாற்றியமைக்கப்படலாம்.

51. மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பின்வரும் சரக்குகள் மீது ஆயத் தீர்வையும் இந்தியாவில் வேறெங்காயினும் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட இவை போன்ற சரக்குகள் மீது அதே வீதங்களில் அல்லது குறைந்த வீதங்களில் சமன்செய் தீர்வையும்—

(அ) குடிக்கப்படுவதற்கான போதைச் சாராயங்கள்;

(ஆ) அபினி, இந்தியச் சணல் மற்றும் ஏனைய மயக்க மருந்துப் பொருள்களும் மயக்க மருந்துகளும்;

ஆனல், இந்தப் பதிவின் (ஆ) உட்பத்தியில் சேர்க்கப் பட்டுள்ள பொருள் அல்லது சாராயம் அடங்கிய மருந்துப் பொருள்களும் ஒப்பனைத் தயாரிப்புகளும் நீங்கலாக.

சாராயம் அடங்கிய மருந்துப் பொருள்கள் அல்லது ஒப் பனைத் தயாரிப்புகள் மீது ஆயத் தீர்வை விதிக்க மாநிலச் சட்ட மன்றத்திற்கு அதிகாரமில்லை. இது குறித்து மையப் பட்டியலின் 84-வது பதிவு பற்றி ஆராயப்பட்டுள்ளது. சாராயம் அடங்கிய மருந்துப் பொருள்கள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் முதலியவை மீது ஆயத் தீர்வை விதிக்க மாநிலச் சட்ட மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மாநிலப் பட்டியலின் 51-வது பதிவு மாற்றியமைக்கப்படலாம்.

புதிய பதிவு.—*மாநிலப் பட்டியலில் உள்ள எப்பொருள் பொருட்டேனும் ஆய்வுகள், புள்ளி விவரங்கள் பற்றி புதிய பதிவு ஒன்று மாநிலப் பட்டியலில் சேர்க்கப்படலாம். 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ், மாகாணப் பட்டிய லின் எப்பொருளின் பொருட்டேனும் ஆய்வுகள் புள்ளி விவ ரங்கள் ஆகியவை மாகாணங்களின் தனித்த அதிகார வரம் பிற்குள் இருந்தன—மாகாணப் பட்டியலின் 38-வது பதிவைக் காண்க.*

(3) பொதுப் பட்டியல்

பட்டியல் III

பொதுப் பட்டியல், சில கூடுதல்களுடன் 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் உள்ளவாறே அமைக்கப்பட்டுள்ளது. 1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட தருவாயில் பிரிட்டிஷ் அரசின் பரிவுரைகளை எடுத்துரைத்த வெள்ளை அறிக்கையும் பிரிட்டிஷ் பாராளுமன்ற இணைக் குழுவின் அறிக்கையும் சட்டமியற்று

வதில் ஒருபடித்தான நிலையை உறுதிப்படுத்தும்பொருட்டு பொதுப் பட்டியல் சேர்க்கப்பட்டது என்னும் காரணங் காட்டி அப்பட்டியல் சேர்க்கப்பட்டதற்கு நியாயங் காட்டின.

அரசமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியல் கணிசமான கூடுதல்களுடன் 1935-வது சட்டத்தின் பொதுப்பட்டியலின் மறுபதிப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டமன்றத்தினுல் பொதுப் பட்டியல் ஆராயப்பட்ட போது மாநிலப் பட்டியலிலிருந்து சில பொருள்களை மாற்றியதனுல் அல்லது புது இனங்களைச் சேர்த்ததனுல் அது மேலும் பெரிதாக்கப்பட்டது.

பொதுப் பட்டியலின் இந்தப் பெருக்கத்தை அரசமைப்புச் சட்டமன்றத்தில் திரு க. சந்தானம் அவர்கள் எதிர்த்தார்கள். †

பொதுப் பட்டியல் தேவை என்றே வைத்துக்கொண்டால் கூட, அந்தப் பட்டியலில் 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மாகாணப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த பல இனங்கள் உள்ளன என்பதைக் காணலாம். அவை கீழே ஆராயப்படுகின்றன :—

நாடு முழுவதும் அக்கறை கொள்ளத் தக்க அல்லது அனைத்திந்திய அடிப்படையுடைய பதிவுகள் மட்டுமே பொதுப் பட்டியலில் அடங்கியிருக்க வேண்டும் ; ஏனைய பதிவுகள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

பொதுப் பட்டியல் பற்றி நாங்கள் பரிந்துரைப்பவை வருமாறு :—

5. திருமணமும் மணவிலக்கும்; இளங்குழந்தைகளும் இளவர்களும்; மகவேற்பு; விருப்புறுதிகள், விருப்புறுதி செய்யா இறப்பும் முறையுரிமையும்; கூட்டுக் குடும்பமும் பாகப்பிரிவினையும்; இந்த அரசமைப்புச் சட்டம் அமுலுக்கு வருமுன் நீதிமன்ற நடவடிக்கைகளில் தரப்பினர் தம் இனமுறைச் சட்டத்திற்கு உட்பட்டிருந்த அனைத்துக் காரியங்கள்.

மாநிலப் பட்டியலின் 18-வது பதிவு குறித்து ஆராய்கையில் 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் வேளாண்மை நிலத்திற்கான முறையுரிமை மாகாணச் சட்டமன்றத்தின்

* இணைப்பு IV-ல் வெள்ளை அறிக்கை, பாராளு மன்ற இணைக் குழுவின் அறிக்கை ஆகியவற்றின் சுருக்கங்களைக் காண்க.

† (உ-ம்) அ.ச.ம.வி. IX, பக்கங்கள் 888, 911—913, 913—914, 946, 948—949, மற்றும் அ.ச.ம.வி. VII, பக்கம் 263.

த்னித்த வரம்பிற்குள் இருந்தது என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இது இப்போது பொதுப்பட்டியலின் பொருளாக ஆக்கப்பட்டு உள்ளது.

இனமுறைச் சட்டம் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றது. எனவே, நாடாளுமன்றத்தின் தலையீடு இன்றி மாநிலங்கள் மட்டுமே இந்தப் பொருள் குறித்துச் செயல்படுமானால் ஆட்சித் திறன் மேன்மையடையும். இந்தக் கருத்தில், இந்தப் பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப் பரிந்துரைக்கிறோம்.

8. வழக்கிற்குரிய தீங்குகள்.

1935-ம் ஆண்டுச் சட்டத்தின் பொதுப் பட்டியலின் இதற்கொப்பான பதிவு அதாவது 14-வது பதிவு, மாகாணப் பட்டியலின் ஒரு பொருள் பற்றிய சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள வழக்கிற்குரிய தீங்குகளை நாடாளுமன்றத்தின் எல்லையிலிருந்து விலக்கியுள்ளது. அதாவது, பொதுப் பட்டிடியலின்கீழ் வருகின்ற சட்டங்களில் அடங்கிய வழக்கிற்குரிய தீங்குகள் மட்டுமே இணைப்பாட்சிச் சட்டமன்றத்தின் அதிகார வரம்பின் கீழும் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகார வரம்பின் கீழும் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிவிடலாம்.

17. விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுத்தல்.

இது 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது என்பதில் ஐயமில்லை.

ஆனால், இது முற்றிலும் வட்டாரப் பிரச்சினை பற்றியதாகும்; எனவே, இந்தப் பதிவை மாநிலப் பட்டியலுக்கு மாற்றி விடலாம்.

19. மருந்துச் சரக்குகளும் நஞ்சுகளும், அபினி பற்றி பட்டியல் I-ன் 59-வது பதிவின் வகையுரைகளுக்குட்பட்டு.

மாநிலப் பட்டியலின் 8-வது பதிவு பற்றி குறிப்பிட்டுள்ளது போல, "மயக்க மருந்துப் பொருள்கள்" மாகாண வரம்பிற்குள் இருந்தது. 19-வது பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம்.

22. தொழிற் சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிலாளர் தகராறுகள்.

23. சமூகக் காப்புறுதியும் சமூக ஈட்டுறுதியும்; வேலை வாய்ப்பும் வேலை வாய்ப்பு இன்மையும்.

24. வேலை முறைமைகள் உட்பட தொழிலாளர் நலன், வருங்கால சேமநிதி, பணிதருவோர் பொறுப்பு, தொழிலாளர் இழப்பீடு, ஏலாமை மற்றும் முதியோர் ஓய்வூதியங்களும் மகப்பேறு நலன்களும்.

25. தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியும் தொழில் நுட்பப் பயிற்சியும்.

இவை, சமூக நலன் மற்றும் தொழிலாளர் அமைப்பு பற்றியன. இந்தப் பொருள்கள் பற்றி எழுகின்ற பிரச்சினைகள் மாநில ஆள்வைகளினுல் முடிவு செய்யப்பட வேண்டியனவாகும்; இந்தப் பொருள்கள் குறித்து நாடாளுமன்றத்தினுல் இயற்றப்பட்ட சட்டங்கள் கூட மாநில ஆள்வைகளின் மூலமாகவே செயல்படுத்தப்படுகின்றன. எனவே, இப் பதிவுகளை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிவிடலாம்.

28. அறங்களும் அற நிலையங்களும், அறக்கட்டளைகள் மற்றும் சமயக் கட்டளைகளும் சமய நிலையங்களும்.

1919-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் கீழ்க் கூட, மாகாண அதிகார வரம்பிற்குள் இருந்த இந்தப் பதிவின் பொருள், அரசின் ''மாற்றப்பட்ட பாதி''யினிடம் ஒப்படைக்கப்பட்டது; அதாவது சட்டமன்றத்திற்கு பொறுப்பான அமைச்சர்களுடன் செயலாற்றும் ஆளுநரின் ஆளுகைக்குரிய பொருளாக இருந்தது.

1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் இது முற்றிலும் மாகாணத்தின் பொருளாக இருந்தது—மாகாணப் பட்டியலின் 34-வது பதிவைக் காண்க. அறக் கட்டளைகளையும் சமயக் கட்டளைகளையும் ஒழுங்குமுறைப்படுத்துவதில் இந்த மாநிலம் எப்போதும் மிகுந்த அக்கறை காட்டியுள்ளது. இந்தப் பொருள் குறித்து 1926-ம் ஆண்டில் இயற்றப்பட்ட அடங்கல் வகைச் சட்டத்திற்குப் பதில் அடுத்தபடியாக 1951-ல் தனிச் சட்டமொன்று இயற்றப்பட்டது; அச்சட்டம் மறுபடியும் 1959-ல் நீக்கப்பட்டு வேறொரு சட்டம் இயற்றப்பட்டது. சமயக் கட்டளைகளின் நிலைமைகள் குறித்து ஆய்வு செய்ய காலஞ்சென்ற சர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களின் தலைமையில் ஆணைக் குழு ஒன்றை இந்திய அரசு நியமித்தது; அந்த ஆணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வரைவு மசோதா ஒன்று மக்கள் அவையில் முன்னுரைக்கப்பட்டது. மாநிலங்களின் தனித்த வரம்பிற்குள் இருந்த ஒரு பொருள் இப்போது பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது; இயல்பாக, மாநிலங்களிடமே விட்டுவிடப்பட வேண்டிய ஒரு பொறுப்பினை

மைய அரசு தன் தோளில் ஏற்றிக்கொள்ள முயல்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.* இந்தப் பதிவை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிவிடலாம்.

30. பிறப்பு, இறப்புப் பதிவு உட்பட மக்கள் பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள்.

1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின்கீழ், பிறப்பு இறப்புப் பதிவு மாகாணங்களின் தனித்த பொறுப்பாக இருந்தது (மாகாணப் பட்டியலின் 14-வது பதிவு). மாகாணப் பட்டியலின் காரியத்திற்கான புள்ளி விவரங் கூட, மாகாணங்களின் தனித்த அதிகாரத்திற்குள் இருந்தது (மாகாணப் பட்டியலின் 38-வது பதிவு). 1899-ஆம் ஆண்டு தமிழ் நாடு பிறப்பு இறப்புப் பதிவு சட்டம் (தமிழ் நாடு சட்டம் 3/1899) பிறப்பு இறப்புப் பதிவுக்காக இந்த மாநிலத்திற்குத் தனியாக இருந்தது. இது இப்போது 1969-ம் ஆண்டு பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தினால் (மையச் சட்டம் 18/1969) நீக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு மட்டுமே உரியதான ஒரு பொருள் பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு இதுவும் மற்றொரு எடுத்துக்காட்டாகும். புள்ளி விவரம் பற்றி 1953-ம் ஆண்டு புள்ளி விவரத் தொகுப்புச் சட்டமும் (மையச்சட்டம் 32/1953) கவனிக்கத்தக்கதாகும். இந்தச் சட்டங்கூட, 1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாகாணங்களின் தனித்த வரம்பிற்குள் இருந்த பொருள் குறித்துச் செயல்படுகிறது.

சமய நிலையங்கள் மற்றும் அறநிலையங்களுக்கு இருந்ததைப் போலவே இந்தப் பதிவின் பொருட்காரியம் கூட 1919-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் 'மாற்றப்பட்ட' பொருள்களின்கீழ் இருந்தது. இது மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படலாம்.

31. நாடாளுமன்றத்தினால் அல்லது அதனால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது இருக்கின்ற சட்டத்தின்கீழ் பெருந்துறைமுகங்கள் என அறிவிக்கப்பட்டவை நீங்கலான மற்ற துறைமுகங்கள்.

சிறு துறைமுகங்கள்' 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மாகாணங்களின் தனித்த அதிகாரத்தின் கீழ் இருந்தன— மாகாணப் பட்டியலின் 18-வது பதிவைக் காண்க.

* திரு க. சந்தானம் முன்னர் குறிப்பிடப்பட்ட அவருடைய அறிக்கையில இந்தப் பதிவு மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படுவது நல்லதென்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் கீழ், பெருந்துறைமுகங்கள் மையத்தின் அதிகார வரம்பிற்குள் இருக்கின்றன ; சிறு துறைமுகங்கள் பொது அதிகார வரம்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறு துறைமுகங்களை மாநிலப்பட்டியலுக்கு மாற்றி விடலாம்.

32. விசையால் இயக்கப்படும் கலங்கள் தொடர்பாக உள் நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்தும் நாவாய்ப் போக்குவரத்தும்; அந்த நீர் வழிகளில் சாலைகளின் விதிகளும்; தேசிய நீர்வழிகள் பற்றி பட்டியல் 1-ன் வகையுரைகளுக்குட்பட்டு உள்நாட்டு நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

இந்தப் பதிவு, 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் பொதுப் பட்டியலின் 32-வது பதிவுக்கு ஒப்பானது ; ஆனால் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் தேசிய நீர்வழிகள் பற்றிய குறிப்பு இல்லாததாகும். அதாவது, 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் பொதுப் பட்டியலின் 32-வது பதிவினால் மாகாணச் சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் தேசிய நீர்வழிகள் பற்றிச் செயல்படுவதில் மையச் சட்டமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டதன்று. அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரம் தேசிய நீர்வழிகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும்.

உள்நாட்டு நீர்வழிகள், சாலைகளோடு உள்நாட்டுப் போக்குவரத்து அமைப்பாக உள்ளன. இந்தப் பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப் பரிந்துரைக்கிறோம்.

33. கீழ்க்கண்டுள்ளவற்றில் வர்த்தகமும் வாணிகமும், அவற்றின் உற்பத்தி, வழங்கல் மற்றும் பங்கீடும்.—

(அ) பொது நலனுக்காக மைய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உகந்ததென நாடாளுமன்றத்தினால் சட்டத்தினால் அறிவிக்கப்பட்ட தொழில்களின் உற்பத்திப் பண்டங்கள் மற்றும் அந்தப் பண்டங்களின்வகையைச் சேர்ந்த இறக்குமதிச் சரக்குகள்.

(ஆ) உணவு எண்ணெய் வித்துகள் மற்றும் உணவு எண்ணெய் உட்பட உணவுப் பொருள்கள்;

(இ) பிண்ணாக்குகள் மற்றும் ஏனைய கெட்டித் தீனிகள் உட்பட கால்நடைத் தீவனங்கள்;

(ஈ) கொட்டை நீக்கப்பட்டதும் கொட்டை நீக்கப்படாததுமான கச்சாப் பருத்தியும் பருத்தி விதையும்;

(உ) கச்சாச் சணல்;

34. விலைக் கட்டுப்பாடு.

இந்தக் காரியங்கள் 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ், மாகாணப்பட்டியலில் 27-வது, 29-வது பதிவுகளில் இருந்தன. 33-வது 34-வது பதிவுகளில் குறிப்பிடப்பட்டவை *தேசீய நலனுக்குக் கடுமையான தீங்கேதுமின்றி மாநிலப்பட்டிய லுக்கு மாற்றப்படலாம்.

35· இயந்திர விசையால் இயக்கப்படும் வண்டிகள்மீது வரிகள் விதிக்கப் படுவதற்குரிய கோட்பாடுகள் உட்பட அவ்வண்டிகள்.

முதலில் இயற்றப்பட்ட 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில், பொதுப்பட்டியலின் 20-வது பதிவு, இயந்திர விசையால் இயக்கப்படும் வண்டிகளை மட்டுமே குறிப்பிட்டது; அவை மீதான வரிகள் பற்றிக் குறிப்பிடவில்லை. 1940-ம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய இந்தியா-பர்மா (பல்வகைத் திருத்தங்கள்) சட்டத்தின் 3 (2) பிரிவின் மூலம் 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் மாகாணப் பட்டியலில் புதிய பதிவு, அதாவது, 48-அ பதிவு சேர்க்கப்பட்டது ; அப்பதிவு, சாலை இருப்பூர்திகள் (டிராம் வண்டிகள்) உட்பட இயந்திர விசையால் இயக்கப்படுவதென்றாலும் அத்தகைய தல்ல என்றாலும் சாலையில் பயன்படுத்தத் தகுந்த வண்டிகள் மீது வரிகள் விதிக்க மாகாணச் சட்டமன்றத்திற்கு அதிகார மளித்தது. அரசமைப்புச் சட்டத்தின் மாநிலப் பட்டியலி னுடைய 57-வது பதிவு 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் மாகா ணப் பட்டியலின் 48-அ பதிவுக்கு ஒப்பானதாக உள்ளது. ஆனால், 48-அ பதிவானது கட்டுப்பாடு அல்லது வரையறை எதற்கும் உட்படாமல் மாகாணச் சட்ட மன்றத்தினால் செயல் படுத்தக் கூடியதான தனி நிலை வகையுரையாக இருந்தது ; அதற்கு மாறாக, மாநிலப் பட்டியலின் 57-வது பதிவு பொதுப் பட்டியலின் 35-வது பதிவுக்கு உட்பட்டதாகும். ஆகவே, பொதுப் பட்டியலின் 35-வது பதிவு, 1935-ம் ஆண்டுச் சட்டத் தின் கீழ் மாகாணங்களின் தனித்த வரம்பிற்குள் இருந்த ஒரு காரியத் துறையையும் உள்ளடக்கியதாகவுள்ளது. மேலும், இயந்திர விசையால் இயக்கப்படும் வண்டிகள்—அவை பற்றிய சட்டம் மையச் சட்டமாக இருந்தபோதிலும்—இப்போதுங்கூட மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன. இவைபற்றிய பல்வேறு அதிகாரங்களும் அலுவல்களும் மாநில அரசினாலும் அதன் சார்நிலை அலுவலர் களாலும் செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

* முன்னர் குறிப்பிடப்பட்ட திரு க. சந்தானம் அவர்களின் அறிக் கையைப் பார்க்க.

36. தொழிற்சாலைகள்.

37. கொதிகலங்கள்.

38. மின்னாற்றல்.

இவை, மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு தொழில்களை அமைப்பது மற்றும் ஏனைய நடவடிக்கை பற்றியனவாகும். இவற்றை மாநிலப் பட்டியலில் சேர்ப்பது பொருத்தமானதென்பது எங்கள் கருத்து.

39. செய்தித் தாள்கள், நூல்கள் மற்றும் அச்சகங்கள்.

ஒரு கருத்தின்படி, இவை மாநிலப் பட்டியலின் 1-வது பதிவில் சேர்க்கப்பட்டுள்ள காரியமாகிய பொது ஒழுங்கிற்குச் சம்பந்தப்பட்டவை எனக் கூறப்படலாம். மற்றொரு கோணத்தில் பார்த்தால், மறைமுக முறையிலென்ற போதிலும் அவை கல்வி சம்பந்தப்பட்டதெனக் கூறப்படலாம். இதன் மற்றொரு கூறு, செய்திப் பத்திரிகைகள், நூல்கள் ஆகியவற்றின் விளம்பர மதிப்புடையதாகும். எந்தக் கோணத்தில் பார்த்தாலும், இவை முக்கியமாக மாநிலம் அக்கறை கொள்ளத்தக்க காரியங்களாகும். பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய பல காரியங்களில் உள்ளது போலவே, இவற்றிலுங்கூட, இவை தொடர்பான சட்டங்களைச் செயல்படுத்துகின்ற ஆட்சி இயந்திரம் மாநிலத்தின் ஆட்சி இயந்திரமேயாகும். ஆகவே, இந்தப் பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாம்.

40. நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வழி தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிவிக்கப்படாத ஏனைய தொல்பொருள் இடங்களும் சிதைவுகளும்

மையப் பட்டியலின் 67-வது பதிவு பற்றி ஆராய்கையில் இதுபற்றி ஆராய்ந்துள்ளோம். பொதுப் பட்டியலின் 40-வது பதிவு மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படலாம்.

42. சொத்தின் உரிமை பெறலும் சொத்தினைக் கைப்பற்றலும்.

இப்பொருள், 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் மாகாணப் பட்டியலின் 9-வது பதிவில் சேர்க்கப்பட்டிருந்தது. முதலில் இயற்றப்பட்டவாறான அரசமைப்புச் சட்டத்தில் இந்தப் பொருள் மையப் பட்டியலின் 33-வது பதிவு, மாநிலப் பட்டியலின் 36-வது பதிவு, பொதுப் பட்டியலின் முன்னர் இருந்த 42-வது பதிவு ஆகியவற்றினிடையே பரவியிருந்தது. 1956-ம் ஆண்டு அரசமைப்பு (ஏழாவது திருத்தச்) சட்டத்தினால் மையப் பட்டியலின் 33-வது பதிவும் மாநிலப் பட்டியலின் 36-வது பதிவும் நீக்கப்பட்டன ; பொதுப் பட்டி

யலில் தற்போதுள்ள 42-வது பதிவு, முன்பு அதற்கொப்பாக இருந்த பதிவுக்குப் பதிலாக அமைக்கப்பட்டது. 1956-க்கு முன்பு, சொத்துரிமை பெறலும் சொத்தினைக் கைப்பற்றுதலும் எக்காரியத்திற்காகச் செய்யப்படுகிறதோ அதற்கேற்ப, சொத்துரிமை பெறுவதற்கும் சொத்தினைக் கைப்பற்றுவதற்கும் சட்டமியற்றுவதற்குரிய தனி நிலை அதிகாரம் மையச் சட்டமன்றம் மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றுக்கிடையில் பிரித்தளிக்கப்பட்டிருந்தது. வேறு வகையில் கூறினால், முன்பு மையக் காரியங்களுக்காக சொத்துரிமை பெறுதல் அல்லது சொத்தினைக் கைப்பற்றுதல் பற்றி மாநிலச் சட்டமன்றம் சட்டமியற்ற இயலாது. அதுபோலவே, மாநிலக் காரியங்களுக்காக சொத்துரிமை பெறுதல் அல்லது சொத்தினைக் கைப்பற்றுதல் பற்றி நாடாளுமன்றம் சட்டம் இயற்ற முடியாது. 1956-ம் ஆண்டுக்கு முன்பு, மையக் காரியங்களுக்கு சொத்துரிமை பெறுவதற்காக அல்லது சொத்தினைக் கைப்பற்றுவதற்காக அவசியமான சட்டத்தை இயற்ற நாடாளுமன்றம் மட்டுமே அதிகாரமுடையதாக இருந்தது; அதுபோலவே அது மாநிலக் காரியத்திற்காகவெனில், மாநில சட்ட மன்றத்திற்கு மட்டுமே தனித்த அதிகாரம் இருந்தது; இழப்பீட்டை முடிவு செய்வதற்குரிய கொள்கைகள் மற்றும் அந்த இழப்பீடு வழங்கப்பட வேண்டிய வகையும் முறையும் ஆகியவை மட்டுமே பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தன. 1956-ம் ஆண்டுத் திருத்தத்தினால், இந்த நிலைமை அடியோடு மாற்றப்பட்டு மாநிலக் காரியத்திற்காக இருந்தாலுங்கூட சொத்துரிமை பெறலும் சொத்தினைக் கைப்பற்றுதலும் இப்போது பொது வரம்புக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. மையக் காரியத்திற்குக் கூட சொத்துரிமை பெறுவது சொத்தினைக் கைப்பற்றுவது ஆகியவை பற்றிய சட்டம் மாநில அரசினால் நிருவகிக்கப்படுகின்றன என்பது பலரும் அறிந்ததாகும். எனவே, இந்தப் பொருள் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்படலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

45. II-வது பட்டியலில் அல்லது III-வது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எப்பொருள்களின் பொருட்டேனும் விசாரணைகளும் புள்ளி விவரங்களும்.

மாநிலப் பட்டியலில் உள்ள எப்பொருளின் பொருட்டேனும் விசாரணைகள் மற்றும் புள்ளி விவரங்கள் பற்றிய புதிய பதிவு ஒன்று அப்பட்டியலில் சேர்க்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளோம். இந்தப் பரிந்துரையின் விளைவாக, மாநிலப் பட்டியல் பற்றிய குறிப்பு நீக்கப்பட்டு

45-வது பதிவு பொதுப் பட்டியலில் குறித்துள்ள பொருள்களுக்கு உரியதாக வரையறுக்கப்படலாம்.

மேலே கூறப்பட்டதிலிருந்து பொதுப்பட்டியலின் பல பதிவுகள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டியுள்ளன என்பதை அறியலாம்.

7. நமது அரசமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியல் 1935-ம் ஆண்டுச் சட்டத்திலிருந்து தருவிக்கப்பட்ட புதிய கூறாகும். 246, 254-வது உறுப்புகள், மாநிலங்களின் சட்டங்கள்மீது நாடாளுமன்றச் சட்டத்தின் ஆதிக்கத்திற்கு வகை செய்வது பொதுப் பட்டியல்பற்றி மாநிலங்களுக்குள்ள குறைபாடாகும். கனடாவில் பொதுப் பட்டியல் மிகவும் குறுகியதாக உள்ளது ; அதில் மூன்று பொருள்களே அடங்கியுள்ளன. ஆஸ்திரேலியாவில், பொதுப் பட்டியல் நீளமானதாக உள்ளதென்பதில் ஐயமில்லை ; ஆனால், சட்டமியற்றுதற்கான எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு உரித்தாக்கப் பட்டுள்ளன. அமெரிக்காவில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளின் பயனாக சில குறிப்பிட்ட காரியங்களில் பொது அதிகாரங்கள் உய்த்துணரப் பட்டுள்ளன என்றபோதிலும், அங்கே பொதுப் பட்டியல் என்று ஏதுமில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்ற இணைக் குழுவும்கூட* பொதுத் துறையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் உண்மையாகவே மாநிலத் தன்மை வாய்ந்ததென்னும் உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளது. 1935-ம் ஆண்டு அரசமைப்பு சட்டத்தின் கீழ், பொதுப் பொருள் ஒன்றின்மீது நாடாளுமன்றத்தினால் சட்டமியற்றப்படுவது குறித்து ஒரு பாதுகாப்பு இருந்தது. பொது அதிகாரப் பட்டியல் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். பொதுப்பட்டியலின் II-ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள் பற்றி மசோதா அல்லது திருத்தம் எதையும் மையச் சட்ட மன்றத்தில் முன்னுரைக்கப்படுவதற்கு முன்பு தவறாமல் மாகாண அரசுகள் தக்கவாறு கலந்தறியப்பட வேண்டுமென ஆளுநர் தலைவருக்குப் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைத் தொகுப்பில் பத்தி 11-ல் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அரசமைப்புச் சட்டம் அத்தகைய பாதுகாப்பு எதற்கும் வகை செய்யவில்லை. அத்தகைய பாதுகாப்பு அவசியமென இக்குழு கருதுகின்றது. பொதுப் பட்டியலில் கண்டுள்ள ஓர் இனம்பற்றி ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் முன்னுரைப்பதற்கு முன்பு

* இணைப்பு IV-ல் உள்ள கருக்கங்களைக் காண்க.

மாநிலங்கள் முதலில் கலந்தறியப்பட்டு அவற்றின் கருத்து களை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை* வலியுறுத்துவதன் மூலம் இந்தப் பாதுகாப்புக்கு வகை செய்ய லாம். மாநிலங்களை அவ்வாறு கலந்தறிவது, ஒரு மசோதா மீது மாநிலங்களிடை உறவு மன்றத்தின் கருத்துரைகளைப் பெறுவதற்குக் கூடுதலாக இருக்கவேண்டும்.

நாடாளுமன்றத்தில் முன்னுரைக்கப்பட்ட மசோதாவில் அவ்வாறு கலந்தறியப்பட்டதைக் காட்டும் அறிக்கையொன் றும் அடங்கியிருக்க வேண்டும். மசோதா ஒன்றை முன்னு ரைக்கும் போது, அதன் மீது மாநிலங்களிடை உறவு மன்றம் பரிந்துரை யாதேனும் செய்திருந்தால் அதனையும் அதன் மீது பல்வேறு மாநில அரசுகள் தெரிவித்துள்ள கருத்துகளின் சுருக்கத்தினையும் அந்த மசோதாவுடன் இணைக்க வேண்டும். தமிழ் நாட்டின் முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள் 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் நாளிட்ட தன்னுடைய வரவு-செலவு திட்ட உரையில் தெரிவித்துள்ள பின்வரும் கருத்துரைகள், தேசீய கொள்கையின் எல்லாக் காரியங்களி லும் குறிப்பாக பொருளாதாரக் கொள்கைகளில் மைய அரசு மாநிலங்களைக் கலந்தறிய வேண்டுவதன் அவசியத்தை சிறப் பாகப் புலப்படுத்துகின்றது :—

“ . . . இன்றைய சமுதாயத்தில் ஒரு மாநிலத் தில் உள்ள உற்பத்தி அமைப்பின் இயக்கத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை முடிவு செய்யும் கருவிகளான வங்கிகள், நாணயச் செலாவணி, நிதிக் கொள்கை ஆகிய அனைத்தும் இந்திய அரசினாலேயே கட்டுப்படுத்தப் படுகின்றன . . . எனவேதான் மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளின் துரதிர்ஷ்டவசமான விளைவுகளை மாநில அரசு அடிக்கடி எதிர்நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. . . . நாட்டில் அண்மையில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதற்கு மத்திய அரசின் பணக் கொள்கைகளும் நிதிக் கொள்கைகளும் ஓரளவு காரணமாகும். இதன் காரண மாக நாட்டில் வாங்கும் சக்தி பெரிதும் குறைந்து ஒரு தொழி லிற்குப் பின், பிறிதொன்றாக நின்று போகும் ஒரு நச்சுவட்டம் தோன்றியது. உணவு உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படை யில் நாடு முன்னேறியிருக்க வேண்டிய நேரத்தில் நாட்டின்

* திரு க. சந்தானம் அவர்கள் முன்னர் குறிப்பிட்ட அவர் தம் அறிக்கை யில் ஓரளவு இது போன்ற விதிமுறையைக் குறிப்பிட்டுள்ளார்,

பொருளாதார நிலை உண்மையாகவே அசைவற்று நின்று விட்டதை நாம் கண்டறிந்தோம். பஞ்சாலைத் தொழில் முடங்கி விட்டது. பொறியியல் தொழிலின் உற்பத்திப் பொருள்களை வாங்குவோரின்மையால் அது பெரிதும் மெலிந்தது. ஐந்தாண்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதால் அரசு முதலீடு செய்யும் அளவு குறைந்து நிலைமை மேலும் சீர்கேடடைந்தது. மேற்சொன்ன நிலைமைக்குக் காரணமான இந்த முக்கிய முடிவுகள் குறித்து மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்கவில்லை. மற்றும், விலைவாசிக் கொள்கைகள் பற்றியவரை, மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளில் பெரும்பாலானவை, பற்பல மாநிலங்களில் நிலவிவரும் சூழல்களைக் கருத்தில் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் நிலவும் விலைவாசி நிலை மொத்தத்தேவையையும் வழங்கலையும் (demand and supply) பெரும்பாலும் எதிரொளிக்கின்றது. வாங்கும் சக்தியை நிர்ணயிப்பதில் மத்திய அரசின் நிதிக் கொள்கைக்கு முக்கிய இடம் உண்டு. வழங்கல் நிலையைப் பொறுத்த மட்டில் உருக்கு, பருத்தி, நெட்டிழை (staple fibre) போன்ற முக்கியமான மூலப்பொருள்களை உரிய காலத்தில் இறக்குமதி செய்வதற்கு வகை செய்யும் வகையில் மத்திய அரசு கொள்கை முடிவு எடுத்திருந்தால், வாணிகத்துறையில் சூதாட்டப் போக்குகளைத் தடுத்திருக்கலாம். மத்திய அரசு, அவ்வப்போது மேற்கொள்ளும் கொள்கைகளின் சீரமைப்புப் பற்றி மாநில அரசுக்கு ஏதும் தெரிவதில்லை.'' '

எஞ்சிய அதிகாரங்கள்.

8. 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம், சட்டமியற்றுவதற்கான எஞ்சிய அதிகாரத்தை ஆளுநர் தலைவருக்கு உரியதாக்கியிருந்தது—104-வது பிரிவை காண்க. இந்த அலுவல்களை அவர் தம்முடைய உளத்தேர்வின்படி ஆற்ற வேண்டியிருந்தது முக்கியமான பாதுகாப்பாக இருந்தது: அதன் பொருள் யாதெனில், அவர் இணைப்பாட்சி அமைச்சரவையைக் (Federal Ministry) கலந்தறியக் கடமைப்பட்டவராக இல்லை; மற்றும் அமைச்சர்தம் அறிவுரைக்கும் அவர் கட்டுப்பட்டவராக இல்லை. 104-வது பிரிவின்கீழ் கடமைகளை ஆற்றுவதில் அவர் பிரிட்டிஷ் அமைச்சரவையின், அதன் மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின், இறுதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராக இருந்தார். ஆளுநர் தலைவர் எக்காரியம் பற்றியேனும் எஞ்சிய அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இணைப்பாட்சிச் சட்ட மன்றத்திற்கோ மாகாணச் சட்ட மன்றத்திற்கோ

அதிகாரம் அளிக்க முடியும். அரசமைப்புச் சட்டத்தின் கீழ் சட்டம் இயற்றுவதற்கான எஞ்சிய அதிகாரம் நாடாளு மன்றத்திற்கு உரியதாக்கப்பட்டுள்ளது (248-வது உறுப்பும் மையப்பட்டியலின் 97-வது பிரிவும்). எனவே மாநிலங்களின் நலன்களைப் காப்பதற்கு பாதுகாப்பு ஏதுமில்லை.

9. மூன்று பட்டியல்களில் விவரமாகவும் விரிவாகவும் பொருள்கள் எண்ணிட்டுக் குறிக்கப்பட்டுள்ளதனால் எஞ்சிய அதிகாரத்தைச் செலுத்துவதற்குரிய வாய்ப்பும் அந்த அதி காரத்தின் அளவும் மிகவும் குறைந்ததாகவே காணப்படுகின் றது. சட்ட மியற்றுவது மற்றும் வரி விதிப்பதற்கான எஞ் சிய அதிகாரம் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகியவற்றின் அரமைப்புச் சட்டங்களால் மாகாணங்களுக்கே வெளிப்படையாக உரித்தாக்கப் பட்டுள் ளது. கனடாவில், பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத் தின் 91-வது பிரிவு டொமினியன் நாடாளுமன்றம், 'இந்தச் சட்டத்தினுல் மாகாணச் சட்டமன்றங்களுக்கே தனித்து ஒப் படைக்கப்பட்டுள்ள பொருள் வகைக்குள் வராத எல்லாக் காரியங்கள் சம்பந்தமாகவும் கனடாவின் அமைதிக்காகவும் ஒழுங்கிற்காகவும் நல்லாட்சிக்காகவும்' சட்டமியற்றலாம் என்று கூறுகின்றது என்பதில் ஐயமில்லை. ஆனுல், நீதித் துறையின், குறிப்பாக பிரிவி கவுன்சிலின் பொருள் விளக்கத் தின் பயனுக தற்போதுள்ள நிலைமையின்படி, டொமினிய னுக்குத் தனியாக இரண்டு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன என்று கூறப்படுகிறது. ஒரு காலத்தில் எஞ்சிய அதிகாரம் எனக் கருதப்பட்டது, அதாவது, நாட்டின் அமைதிக்கும் ஒழுங்கிற்கும் நல்லாட்சிக்கும் சட்டமியற்றுவதற்கான அதி காரமானது, அமைதிக் காலங்களில் செயல்பட்த் தக்கதன்று எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது; மேலும், டொமினியன் எஞ் சிய அதிகாரம் முக்கியமாய் தேசப் பேரிடர்க் காலங்களில் மட்டுமே செயலுக்கு வரும் என்று கூறப்படுகிறது. இயல் பான காலங்களில், ஓரளவுக்கு மாகாணங்களின் சொத்துரி மைகளையும் மக்கள் உரிமைகளையும் பாதிக்காத (மாகாண வர ம்பிற்குள் உள்ள ஓர் இனம்) பொதுச் சட்டம் எதனையும் எண்ணுவதற்கு இயலாது எனவும் மாகாண அதிகாரத்தின் அடங்கல் தன்மை, அவ்வகையில் டொமினியனுக்குக் குறித்துள்ள அதிகாரங்களுக்கும் மாகாணங்களுக்குக் குறித் துள்ள அதிகாரங்களுக்கும் இடையில் விடப்பட்ட இடை வெளியை ஏறத்தாழ முற்றிலும் நிரப்பியுள்ளது என்றும் கூறப் படுகின்றது. ஆகவே, எல்லா இணைப்பாட்சிகளிலும் சட்ட மியற்றல் மற்றும் வரிவிதிப்புக்கான எஞ்சிய அதிகாரம் மாகா

ணங்களிடமே உரித்தாக்கப்பட்டுள்ளதை அறியலாம். எனவே, 248-வது உறுப்பாலும் மையப்பட்டியலின் 97-வது பதிவாலும் வழங்கப்பட்டுள்ள சட்டமியற்றுதல் மற்றும் வரிவிதிப்புக்கான எஞ்சிய அதிகாரம் மாநிலச் சட்டமன்றங்களுக்கு உரியதாக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கின்றோம்.

ஏனைய சட்டமியற்றும் வகையுரைகள்.

10. ஏற்கனவே கூறப்பட்டது போல, சட்டமியற்றும் பட்டியல்களைத் தவிர, கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகளும் நாடாளுமன்றத்துக்குச் சட்டமியற்றுவதற்கான தனி நிலை அதிகாரங்களை வழங்குகின்றன:—

உறுப்பு 154 (2) (ஆ).—இது, ஆளுநரின் கீழ்உள்ள ஆள்வைகளிடம் அலுவல்களை ஒப்படைக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. இக் காரியத்திற்கு மாநிலச் சட்டமன்றத்தின் இசைவோ மாநில அரசின் இசைவோ தேவை இல்லை. உறுப்பு 258 (2) பற்றிய குறிப்புரை இங்கும் பொருந்தும்.

உறுப்பு 169 (1).—இது, மாநிலங்களில் சட்டமன்ற மேலவைகளை நீக்குவது அல்லது ஏற்படுத்துவது பற்றியதாகும். இது, சட்டத்தின் மூலம் ஒரு சட்டமன்ற மேலவையை நீக்க அல்லது இல்லாத மாநிலத்தில் ஒன்றை ஏற்படுத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. தொடர்புடைய மாநிலத்தின் சட்டமன்றப்பேரவையினால் தீர்மானம் நிறைவேற்றப்படுவது இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குரிய முன் நிபந்தனையாகும். மாநிலச் சட்ட மன்றப் பேரவை அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றிய காரணத்திற்காக மட்டுமே நாடாளுமன்றம் இந்த உறுப்பின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டதன்று. மாநிலச் சட்டமன்றத்தின் அமைப்பு மாநில மக்களால் முடிவு செய்யப்பட வேண்டிய காரியமாகும்; மக்களின் பிரதிநிதிகளாக உள்ள சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் மக்களின் விருப்பங்களுக்கேற்ப செயல்படுவார்கள் என எதிர்பார்க்கப்படலாம். உண்மையில், அரசமைப்புச் சட்டத்தினை உருவாக்கிய தொடக்க நிலைகளில், மாநிலச் சட்டமன்றத்தின் அமைப்பு பற்றியுள்ள அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை மாற்றுவதற்கு மாநிலச் சட்டமன்றத்திலேயே மசோதா ஒன்றை முன்னுரைப்பதற்கு வகை செய்வதற்காக அரசமைப்புச் சட்ட வரைவில் வகையுரை ஒன்று சேர்க்கப்பட்டது. மாநிலத்தின் சட்டமன்றத்தினால் நிறை

றைவேற்றப்பட்ட மசோதா நாடாளுமன்றத்தினால் ஏற்கப்பட்டு அந்த மசோதா ஆளுநருக்கு, அவர் தம் இசைவுக்காக அல்லது குடியரசுத் தலைவரின் இசைவுக்காக தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று அந்த வரைவு முதன் முதல் ஏற்பாடு செய்தது. ஆயினும் அடுத்தபடியாக, இந்த வகையுரை குடியரசுத் தலைவரிடம் மட்டுமே இசைவு பெறப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. ஆனால், அந்த மசோதா மாநிலச் சட்டமன்றத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பின்னர், நாடாளுமன்றத்தினால் ஏற்கப்படவேண்டியிருந்தது. 1948, பிப்ரவரி மாதத்தில் வரைவுக் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டவரைவில், அந்த வகையுரை உறுப்பு 304 (2) எனக் காணப்பட்டது. அந்த வரைவு உறுப்பின்படி, மாநிலத்தின் சட்ட மன்ற அவைகளின் எண்ணிக்கை குறித்து அரசமைப்புச் சட்டத்தில் யாதேனும் மாற்றஞ்செய்ய முனையும் ஒரு மசோதா மாநிலச் சட்டமன்றத்திலேயே தொடங்கப்பட வேண்டியிருந்தது; மேலும், அதனால் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தினால் அது ஏற்கப்பட்டு அதற்கு குடியரசுத் தலைவரால் இசைவளிக்கப்பட வேண்டியிருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து ஆஸ்திரேலியா ஆகியவற்றில் மாநிலத்தின் சட்ட மன்ற அவைகளின் எண்ணிக்கையை முடிவு செய்வது அந்த மாநிலமேயாகும்; அதில் இணைப்பாட்சி அரசுக்கு அல்லது பொது அரசுக்கு தொடர்பு ஏதுமில்லை. ஆகவே, சட்டமன்ற மேலவையை நீக்குவதற்கு அல்லது ஏற்படுத்துவதற்கு வகை செய்ய மாநிலச் சட்டப் பேரவைக்கு அதிகாரமளிக்கும் வகையில் உறுப்பு 169 (1) திருத்தப்படலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

உறுப்பு 249.—மரபு வகையான நான்கு இணைப்பாட்சிகளில் எதிலும் 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திலும் இந்த உறுப்புக்கு முன்மாதிரி காணப்படவில்லை. அரசமைப்புச் சட்ட ஆலோசகர் சர் பி. என். ராவ் 1947, நவம்பரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றது இந்த உறுப்பு உருவாக்கக் காரணமாகியது. அந் நாட்டில் வெளியிடப்பட்ட மக்கள் உரிமை பற்றிய குடியரசுத் தலைவரின் குழுவினுடைய அறிக்கை, அமெரிக்கர்கள் அனைவருடைய மக்களுரிமைகளைப் பாதுகாப்பதற்கு தேசிய அரசு முன்னிற்க வேண்டுமெனவும் அதற்கு அவசியமான சட்டத்தைப் பேரவை இயற்ற வேண்டுமெனவும் பரிந்துரைத்தது. சர் பி. என். ராவ் 249-வது உறுப்புக்கு ஒப்பான வகையுரை ஒன்றை எடுத்

துரைத்தார்; அதன்படி தேசீய அளவில் ஒரு மாநிலக் காரியத்தின் மீது சட்டமியற்றத் தேவை ஏற்படும் போது, அதனை இயற்ற மையச் சட்டமன்றத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய போதுங்கூட, இந்த உறுப்புக்குக் கணிசமான அளவில் எதிர்ப்பு இருந்தது. திருவாளர்கள் எச். வி. படாஸ்கர், ஒ. வி. அளகேசன், பி. எம். குப்தா ஆகியோர் இந்த உறுப்பு மறுப்புக்கிடமானதென்றும் இணைப்பாட்சி முறை அதிகாரப் பகிர்வுக்குப் பொருத்தமற்றது என்றும் கருதினார்கள். அரசமைப்புச் சட்டத்தில் உள்ள மற்ற வகையுரைகளின் காரணமாக இது தேவையற்றது என அவர்கள் எண்ணினார்கள். மாநிலங்களவையின் தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு நாடாளுமன்றம் மாநிலப் பட்டியலில் அத்து மீறுவதற்கு இந்த உறுப்பு இயலும்படிச் செய்கின்ற காரணத்தினால் இது 'தீங்கானது' *என்று அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. திரு. ஜயப்பிரகாஷ் நாராயணன் இந்த உறுப்பை நீக்கிவிட வேண்டும் என்று விரும்பினார். பம்பாய் மற்றும் கிழக்குப் பஞ்சாப் சட்டமன்றங்கள் இதனை மாநிலங்களின் உரிமைக்கு இழைக்கப்பட்டுள்ள கடுமையான தீங்கு என்று கருதி இதனை நீக்கிவிடுவதற்கு ஆதரவு தெரிவித்தன.† திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ‡ இந்த உறுப்புக்கு ஆதரவு தெரிவிக்கையில், மாநிலங்கள், மாநிலங்களவையில் உள்ள தங்கள் பிரதிநிதிகள் மூலமாக தடைகளைப் பயன்படுத்த முடியும் எனவும் எனவே மாநிலங்களவையில் உள்ள தங்கள் பிரதிநிதிகளிடம் மையத்தின் அதிகாரம் புதுப்பிக்கப்படக் கூடாது என்று கூறுவதற்கு மாநிலங்களுக்குப் போதிய வாய்ப்பு உள்ளது என்றும் வாதிட்டார். மாநிலங்களவையானது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் என்பதையும் அதிலேயுங்கூட மக்கள் அவையில் உள்ளது போன்ற மக்கள் தொகையின் அடிப்படையிலேயே பிரதிநிதித்துவம் உள்ளது எனவும் இங்கே கூற வேண்டியுள்ளது. மாநிலங்களவையில் மக்கள் தொகை மிகுந்த மாநிலங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. மாநிலங்களுக்கு மாநிலங்களவையில் சமமான பிரதிநிதித்துவம் இருக்குமானால் இந்த உறுப்புக்கு ஓரளவு நியாயம் இருந்திருக்கும். இந்த உறுப்பு இணைப்பாட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு எதிர்ப்பானதாகத் தோன்றுகின்றது.

* அ.ச.ம.வி. VIII. பக்கங்கள் 801–802, 806.

† கிரான்வில் ஆஸ்டின் எழுதியுள்ள, இந்திய அரசமைப்புச்சட்டம்—சேசத்தின் மூல அமைப்பு என்னும் ஆங்கில நூலின் பக்கம் 203.

‡ அ.ச.ம.வி. VIII, பக்கம் 205.

249-வது உறுப்பில் உள்ள வகையுரையினுல் இணைப்பாட்சிக் கொள்கை திடுமென உலுக்கப்படுகின்றது.*

மாநிலங்களவையில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றப்படுகின்ற ஒரு தீர்மானம் ஏற்பளித்தால், மாநிலப்பட்டியலில் உள்ள ஒரு பொருள் பற்றிச் சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கின்கின்ற 249-வது உறுப்பு இணைப்பாட்சிக் கோட்பாட்டை முற்றிலும் குறைவுபடுத்துவதுடன் மாநிலத் தன்னுட்சியைக்† கடுமையாகத் தாக்குவதாகும்.

'தேசீய நலன்' என்பது நாடு முழுவதும் அக்கறை கொள்ளத்தக்க எந்தக் காரியத்தையும் உள்ளடக்குமளவுக்கு அகன்ற அளவுகோலாகும். மேலும் மாநிலப்பட்டியலின் காரியங்களில் நாடாளுமன்றம் சட்டமியற்ற வேண்டியது தேசீய நலனுக்கு உகந்ததா என்பதற்கு மாநிலங்களவையின் தீர்மானமே முடிவானதாகும்.

அரசமைப்புச் சட்டத்தினுல் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை தேசீயச் சட்டமன்றம் ஒருதரப்பாகத் தன்னிடம் மாற்றிக்கொள்ள அனுமதிப்பது ஒப்புக்கொள்ளப்பட்ட இணைப்பாட்சிக் கொள்கையிலிருந்து அடியோடு விலகிச் செல்வதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பேரவை, மாநிலங்களுக்குச் சொந்தமான அதிகாரங்களை தன்னிடம் முறையாக மாற்றிக் கொள்ள இயலாது. அதற்குரிய ஒரே வழி அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதேயாகும். இதே நிலை தான் ஆஸ்திரேலியாவிலும் உள்ளது. கனடாவில், எஞ்சிய அதிகாரத்தின் கீழ் மிகவும் குறிப்பாக, ''கனடாவின் அமைதி, ஒழுங்கு மற்றும் நல்லாட்சி'' சம்பந்தமான அதிகாரத்தின் கீழ் டொமினியன் நாடாளுமன்றம் மாகாணக் காரியங்கள் தேசீய முக்கியத்துவம் அடையும் போதெல்லாம் அவை குறித்துச் சட்டமியற்றலாம். ஆனுல், இந்த அதிகாரம் நீதிமன்றத் தீர்ப்புகளால் மிகவும் குறுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு காரியம் தேசீயத் தகுதி நிலைகளை அடைந்துள்ளதா என்பதை இறுதியாக முடிவு செய்வது நீதித் துறையே அல்லாமல் டொமினியன் நாடாளுமன்றமல்ல—1946-ம் ஆண்டில் ஏ. ஜி. ஒண்டாரியோவுக்கும் கனடா டெம்பரன்ஸ் பெட

*. அசோக் சந்தாவின், 'இந்தியாவில் இணைப்பாட்சி முறை' என்னும் ஆங்கில நூலில் 89-வது பக்கத்தைக் காண்க.

† முன்னர் குறிப்பிடப்பட்ட திரு க. சந்தானம் அவர்களின் அறிக்கையையும் காண்க.

ரேஷனுக்கும் இடையில் நடைபெற்ற வழக்கைக் (1946 A. C. 193) காண்க. இந்தியாவில், அத்தகைய பிரச்சினைகளை முடிவு செய்ய நீதித் துறைக்கு அதிகாரமில்லை என்னும் கருத்தினை உச்ச நீதிமன்றம் மேற்கொண்டுள்ளது.* ஆகவே, அதிகாரங்களின் இயல்பான பகிர்வைப் புறக்கணிக்க 249-வது உறுப்பு மாநிலங்களவையின் பெரும்பான்மைக்கு இயலுமாறு செய்கிறது. இக்குழுவிற்கு வரப்பெற்ற பதில்கள் இந்த உறுப்பினை நீக்குவதை ஆதரிக்கின்றன. எனவே, இதனை நீக்கிவிடலாம்.

உறுப்பு 252.—இது 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 103-வது பிரிவின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டு வகையுரைகளுக்கும் இடையில் முக்கிய ஒரு வேறுபாடு உள்ளது. 103-வது வகையுரையின் கீழ், இணைப்பாட்சி சட்டமன்றத்தால் சட்டமியற்றப்படுவதற்கு இணங்கிய அல்லது இணைப்பாட்சிச் சட்டமன்றத்தின் சட்டத்தினை ஏற்றுக்கொண்ட மாகாணச் சட்டமன்றம் அந்த மையச் சட்டத்தில் திருத்தம் செய்யலாம் அல்லது அதனை நீக்கவும் முடியும் என்றிருந்தது; ஆனால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்களின் தீர்மானத்தைப் பின்பற்றி இயற்றப்பட்ட மையச் சட்டத்தினை, அந்தச் சட்டத்தின் பொருள் முற்றிலும் மாநில வரம்பிற்குட்பட்டதாக இருந்தபோதிலும் கூட, மாநிலச் சட்டமன்றம் திருத்தம் செய்யவோ நீக்கவோ கூடாது என்று 252-வது உறுப்பின் கீழ் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உறுப்பு ஆஸ்திரேலியா அரசமைப்புச் சட்டத்தின் 109-வது பிரிவுடன் இணைந்து பொருள்படும் அதன் 51 (XXXVII) பிரிவிற்கு ஏற்ப அமைக்கப்பட்டதாக வரைவுக் குழு கூறியது. ஆஸ்திரேலியா அரசமைப்புச்சட்டத்தின் 51-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் காமன்வெல்த் நாடாளுமன்றத்திற்கு மட்டும் தனியுரிமையானதன்று; மாநிலச் சட்டமன்றமும் அந்த அதிகாரத்தைச் செலுத்த முடியும். வேறு வகையில் சொல்வதென்றால், 51 (XXXVII)-வது பிரிவின் துணை கொண்டு காமன்வெல்த் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட எந்தச் சட்டமும் மாநிலச்சட்ட மன்றத்தால் திருத்தப்படவோ நீக்கப்படவோ முடியும் (பிரிவு 107). எனவே, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் இருந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்தலாம் என்று பரிந்துரைக்கின்றோம்.

*மேற்கு வங்க அரசுக்கும் இந்திய ஒன்றியத்துக்கும் நடைபெற்ற வழக்கை (A.I.R. 1963, உச்ச நீதி மன்ற வழக்கு 1241) காண்க.

உறுப்பு 258 (2).—இது, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 124 (2)-வது பிரிவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், இணைப்பாட்சி அரசும் மாநிலங்களும் தத்தமக்குரிய சட்டமியற்றும் அதிகாரங்களை ஒன்றற்கொன்று மாற்றிகொள்ள முடியாது. ஒப்புவிக்கப் பட்ட அதிகாரத்தினை ஒப்புவிக்கலாகாது என்னும் பொதுக் கோட்பாட்டின் அடிப்படையில் சட்டமியற்றும் அதிகாரங்களை அவ்வாறு ஒப்புவிப்பது தடை செய்யப்படுகிறது. கனடாவின் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் டொமினியனோ மாகாணமோ தன்னுடைய சட்டமியற்றும் அதிகாரத்தினை மற்றதற்கு ஒப்புவிக்க முடியாது. 258-வது உறுப்பின் (1)-வது பகுப்பிற்கிணங்க மாநிலத்திற்கு எந்த அலுவலையேனும் ஒப்படைப்பதற்கு முன்பு குடியரசுத் தலைவர் அந்த மாநிலத்தின் இசைவைப் பெறவேண்டியுள்ளதென்பதை இங்கே குறிப்பிடலாம். இதுபோன்ற நிபந்தனை அந்த உறுப்பின் (2)-வது பகுப்பின் பொருட்டும் விதிக்கப்படலாம். நாடாளுமன்றம், மாநிலத்தினிடமாவது அல்லது அதன் அலுவலரிடமாவது அல்லது ஆள்வை எதனிடமாவது அதிகாரங்களை வழங்குவதற்கு முன்பு அல்லது கடமைகளை ஒப்படைப்பதற்கு முன்பு அந்த மாநிலத்தின் இசைவைப் பெறவேண்டும் என்று வகைசெய்யப்படலாம்.

குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக மாநில மசோதாக்களை ஒதுக்குதல்

11. மாநிலத்திற்கு உரியதாக்கப்பட்டுள்ள சட்டமியற்று அதிகாரத்துக்குச் சார்புடையதாக அரசமைப்புச் சட்டத்தில் பல்வேறு உறுப்புகளில் அடங்கியுள்ள வகையுரைகளின்படி மாநில மசோதாக்கள் சிலவற்றைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கென ஒதுக்க வேண்டும். இவ்வகையுரைகள் பற்றிக் கீழே ஆராயப்படுகிறது.

சொத்தின் உரிமை பெறுவதற்காக அல்லது சொத்தினைக் கைப்பற்றுவதற்காக வகை செய்யும் சட்டம் எதுவும் குடியரசுத் தலைவரின் இசைவைப்பெற்ருலன்றி செல்லத்தக்கதாகாதென்று உறுப்பு 31 (3)-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வகையுரைக்குக் காரணம் வெளிப்படையாகத் தெரியவில்லை. அச்சட்டம் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரத்துக்குட்பட்டதாயிருந்து, அடிப்படை உரிமைகளுக்கு ஒத்ததாயிருந்தால், அப்போது அது செல்லத்தக்கதாகும். அதற்கு மாருக, அச் சட்டம் மாநிலச் சட்ட மன்றத்தின் சட்ட

மீயற்றும் தகுதிக்குப் புறம்பானதாயிருந்தால், அல்லது அடிப்படை உரிமைகளில் எதற்கேனும் ஒத்திராவிட்டால் குடியரசுத் தலைவரின் இசைவு அதனைச் செல்லத்தக்கதாகச் செய்ய முடியாது. கிரான்வில் ஆஸ்டின் இவ்வகையுரைக்குக் காரணம் எதுவாயிருக்குமெனப் பின்வருமாறு ஊகிக்கிறார்:—

''சொத்து பற்றிய சட்டங்களையெல்லாம் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு ஒதுக்குகின்ற பகுப்புகூட படேல் அவர்களின் கோரிக்கையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், படேல் உயிரோடிருந்த வரையில், நியாயமற்றது என்று தாம் கருதும் எச் சட்டத்தையும் தான் தடை செய்துவிட முடியும் என்பதேயாகும். 'குடியரசுத் தலைவர்' என்பது அமைச்சரவையைக் குறிக்கும் என்று சொல்லாமலே விளங்கும். அமைச்சர் அவையில் படேல் அவர்களுக்குத் தடுப்பு அதிகாரம் இருந்தது. நேரு அவர்கள் கூட மாநிலங்களில் பொருத்தமற்ற பற்றுர்வக் கிளர்ச்சியை அடக்குவதற்கான வாய்ப்பினை ஒன்றிய நிர்வாகத்தினர் பெற்றிருத்தலை எதிர்க்கவில்லையென ஊகிக்கலாம்''.

உறுப்பு 31.—இந்திய அரசுச் சட்டம் 1935-ன் பிரிவு 299-ஐ ஒத்திருக்கிறது. நிலம் முதலியவற்றைக் கட்டாயமாய் உரிமை பெறுவதற்கு மாகாணச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் சட்டங்களை ஆளுநர் தலைவரின் அல்லது பிரிட்டிஷ் மன்னரின் ஓர்வுக்காக ஒதுக்குதல் பற்றி பிரிவு 299-ல் வகையுரை எதுவும் இருக்கவில்லை. அப்பொருள்பற்றிய மசோதா அல்லது திருத்தம் எதையும், ஆளுநரின் உளத்தேர்வுக்கேற்ப அவருடைய முன் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டல்லாமல் மாகாணச் சட்டமன்றத்தில் முன்னுரைக்கக் கூடாதென உட்பிரிவு (3)-ல் சொல்லப்பட்டிருந்தது உண்மைதான். மசோதாயாதேனும் பிரிவு 299-ஐ மீறுகிறதா இல்லையா என்பதுபற்றி ஆளுநர் தலைவருக்கோ ஆளுநருக்கோ ஐயப்பாடு ஏதேனும் தோன்றுமானல், அந்த மசோதாவை அவர்கள் பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஓர்வுக்காக ஒதுக்க வேண்டுமென்று ஆளுநர் தலைவருக்கும் ஆளுநருக்கும் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைத் தொகுப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் தலைவருக்குப் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைத்தொகுப்பின் XIII (இ) பத்தியையும் ஆளுநருக்குப் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைத் தொகுப்பின் XVII(இ) பத்தியையும் காண்க. ஆளுநர் தலைவரின் அல்லது பிரிட்டிஷ் அமைச்சரவையின் இசைவுக்காக மசோதாக்களை ஒதுக்குவது பற்றிய இந்தத் தேவை, 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இருக்கவில்லை. அது ஓர் ஆட்சித்துறை ஏற்பாடேயாகும்; தொகுப்புகள் எவற்றையாகிலும் மீறுவது நீதிமன்ற

விசாரணைக்குட் பட்டதன்று; அவ்வாறு மீறுதலும், ஆளுநர் தலைவர் தம் அல்லது ஆளுநர் தம் செயலின் செல்திறனைப் பாதிக்கவில்லை—1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 13 (2), 53(2) பிரிவுகளைக் காண்க. அந்தத் தொகுப்புகளில் இருந்த இந்த வகையுரைக்கான காரணம், பாராளுமன்ற இணைக் குழுவின் பரிந்துரையில் காணப்படுகிறது. ''அண்மையில் சில ஆண்டுகளில் சில இந்தியர்களால் வாய்மொழியால் எழுப்பப் பட்டிருக்கிற ஐயப்பாடுகளைத் தணிக்கும் பொருட்டு தனியார் சொத்துக்கள் பறிக்கப்படுவதனின்றும் பாதுகாப்பதற்காக'' அரசமைப்புச் சட்டத்தில் பொதுவான வகையுரை புகுத்தப்பட வேண்டுமென அக்குழுவினர் தங்களுடைய அறிக்கையில் 369-ம் பத்தியில் கூறியுள்ளனர். ஆகவே, ''சட்டமியற்றுவதனுல் யாருடைய நலங்கள் பாதிக்கப்படுமோ அவர்களுக்கு இழப்பீடு செய்வதற்காகச் செய்யக் கருதியுள்ள வகையுரைகளின் தன்மையைத் தொடர்புடைய காரணக் கூறுகக் கருத்தில் கொள்ளும்படி'' அந்தத் தொகுப்பு ஆளுநருக்கு அல்லது ஆளுநர் தலைவருக்குப் பணிக்க வேண்டுமென்று அக்குழு பரிந்துரைத்தது. ஆகவே, இதிலிருந்து தெரிவது என்னவென்றுல் சொத்துரிமை பெறுவதைப் பொறுத்த மாகாண மாசோதாக்கள் ஆளுநர் தலைவரின் இசைவையும் அவருக்கு ஐயப்பாடுகள் எவையும் இருந்தால் மன்னரின் இசைவையும் பெற வேண்டுமென்னும் தேவை, சொத்து பறிக்கப்படுவதனின்றும் காப்பதற்காகவும், இந்நாட்டின் தேசத் தலைவர்கள் வெளிப்படுத்திய உணர்ச்சிகளை ஒட்டியும் 1935-ம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்தில் புகுத்தப்பட்டது என்பதை அறியலாம். பொதுவாக மையத்திலும் மாநிலங்களிலும் உள்ள அரசுகள் பொதுக் கருவூலத்தின் மீது மட்டுமீறிய சுமை ஏற்றுமல், சமூகப்பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் கடப்பாடு உடையனவாகும். மேலும், 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் படி, சொத்துரிமை பெறுவதைப் பொறுத்த மசோதா ஒன்று, ஆளுநர் தலைவரின் அல்லது பிரிட்டிஷ் அரசின் ஓர்வுக்காகவும் இசைவுக்காகவும் ஒதுக்கப்படாத போதிலும் தொடர்புடைய சட்டத்தின் செல்திறன் ஐயப்பாட்டுக்கு இடந்தரவில்லை. ஆயினும், அரசமைப்புச் சட்டத்தின் கீழ், அத்தகைய சட்டம் எதுவும், குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றுலன்றி செல்லத்தக்கதாகாது.

மைய-மாநில உறவு பற்றி, 1970 ஏப்ரலில் புது டில்லியில் நடைபெற்ற தேசீய மாநாட்டுக்கு அளிக்கப்பட்ட கட்டுரை ஒன்றில், மாநில மசோதாக்களுக்கு குடியரசுத்

தலைவரின் இசைவு பற்றி ஆராயப்படுகிறது. கட்டுரையாளர்கள் உறுப்பு 31 (3)-ஐப் பற்றிக் கருத்து தெரிவிக்கையில், பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள். அதாவது, அவ்வுறுப்பின்படி, இழப்பீடு போதுமானதா என்பதைப் பற்றி நீதிமன்றங்களில் எதிர்த்திட முடியாது; மேலும் நீதித் துறையின் கூர்ந்தாய்வு இல்லாத போது, மைய அரசு இசைவு வழங்குகையில் மாநிலங்கள் தனிப்பட்டவர்கள் சொத்தினை இழப்பீடு வழங்காமல் எடுத்துக் கொள்ளாதபடியும், நாடெங்கணும் குறிப்பிட்ட ஒரே சீரான கொள்கைகளின் பேரில் இழப்பீடு வழங்கப்படுவதற்கும் காப்புறுதி செய்யலாம். வங்கிகளை அரசுடைமையாக்கியது பற்றிய வழக்கில், அரசு, உரிமை பெற்றுகொண்ட சொத்துக்கான இழப்பீடு போதுமானதா என்னும் பிரச்சினை குறித்து ஆய்தற்குரியது நீதித் துறைதான் என்று உச்ச நீதிமன்றம் ஆணித்தரமாகக் கூறியுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். இழப்பீட்டின் அளவு குறித்து சட்டமன்றத்தின் முடிவை நீதிமன்றங்கள் விசாரணை மேற்கொள்ள முடியாது என்று வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும்கூட மைய அரசின் கூர்ந்தாய்வு எவ்வாறு நிலைமையைச் சீர்திருத்துமென்பது தெளிவாகத் தெரியவில்லை. முன்னரே சொல்லியுள்ளவாறு, சட்டமியற்றுதலை மேற்கொள்ள மாநிலச் சட்டமன்றத்துக்குள்ள தகுதிப் பாட்டினையொட்டியும், அடிப்படை உரிமைகளுக்கு அது ஒத்திருப்பதைப் பொறுத்துமே அதன் செல்திறனை நிலைநாட்ட வேண்டியதாகும். இழப்பீடு வழங்குவதில் ஒருபடித்தான நிலைமை இருக்க வேண்டுமென்பதைப் பொறுத்தவரை மாநாடுகள் மூலமாகவும் தேசிய வளர்ச்சி மன்றம் போன்ற வேறு பல கருத்தரங்குகள் மூலமாகவும் இதனை எளிதில் அடைய முடியும். பெருவாரியான மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்பாடு செய்வதற்காகச் சட்டமியற்றும் நடவடிக்கைகள் பலவற்றை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. சொத்துரிமை பெறுவது சம்பந்தப்படும் ஒவ்வொரு நேர்விலும் மைய அரசை அணுக வேண்டும் என்னும் தேவையிருப்பது காரியங்களைக் கட்டாயமாகத் தாமதப்படுத்துகின்றது. உறுப்பு 31 (3)ஐ நீக்கி விடுவது நல்லதென்று தோன்றுகிறது.

இங்கே, அடுத்து ஆராய்வதற்குரியதாக உள்ளது, உறுப்பு 31-அ (1)-ன் முதல் வரம்புரையாகும். இங்கேயுங்கூட, தேசிய மாநாட்டுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகளின் ஆசிரியர்கள், கீழ்நிலையாளர் ஒருவரை விசாரணை செய்யும் உரிமையை மேற்கொண்டு, அவரைக் கண்டிக்க மூய

லும் மேல் நிலையாளர் ஒருவருடைய பங்கினை மையத்துக்கு வழங்க விரும்புகிறார்கள். நாட்டின் பல்வேறு பாகங்களில் நிலவும் வட்டாரப் பிரச்சினைகளை மைய அரசு நன்கு தெரிந்து கொண்டிருக்க முடியாது. எடுத்துக் காட்டாக, உறுப்பு 31-அ (2) (அ) 'நிலச் சொத்து' என்னும் பதத்துக்கு விளக்கம் கூறத் தொடங்கி, குடிமுறை நிலவரித் திட்டத்தின்கீழ் வைத்திருக்கப்படும் நிலங்களும் அதில் அடங்கும் என்று குறிப்பிடுகிறது. எது எப்படியானாலும், தமிழ் நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும், சாதாரண மனிதனைப் பொறுத்த வரையிலும், சட்ட வரைவினைப் பொறுத்த வகையிலும்கூட, குடிமுறை நிலங்கள், நிலச் சொத்து ஒன்றில் அடங்கியுள்ள நிலங்களினின்றும் முற்றிலும் வேறுபட்டவையாகும். நாட்டில் இந்தப் பகுதியிலே, 'நிலச் சொத்து' என்னும் பதம் குடிமுறை நிலங்களினின்றும் வேறான ஜமீன்தாரி, இனும் நிலங்கள் தொடர்பாகப் பயன்படுத்தப்படுகிறது. இக்காரியம் பற்றி மாநில அரசே நடவடிக்கை மேற்கொள்ள விட்டு விட்டிருந்த தால், இந்த செயற்கையான பொருள் விளக்கத்தை நன்கு தவிர்த்திருக்கலாம்.

நாட்டின் இந்தப் பகுதியில் நிலவுகின்ற குடிமுறை நில உரிமை முறைக்கும் ஜமீன்தாரி முறைக்கும் உள்ள வேற்றுமையை, டில்லியில் உள்ள அதிகாரிகள் தெரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

மசோதாக்களுக்குக் குடியரசுத் தலைவர் இசைவு வழங்கத் தேவையில்லாதபடி உறுப்பு 31-அ திருத்தப்படலாம்.

உறுப்பு 200, பல இனங்கள் கொண்ட வகையுரையாகும். இது, மசோதா எதுவாயினும் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கும்அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்குகிறது. இவ்வுறுப்பின் முதன்மைப் பகுதி, இயல்விக்கும் (enabling) பகுதியாகும். அதாவது அவருடைய விருப்பத்திற்கு உட்பட்டதாக மட்டுமே உள்ளது. ஆளுநர் மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கலாம்; அல்லது தாமே அம்மசோதாவுக்கு இசைவு வழங்கலாம். இரண்டாவது வரம்புரை கட்டளை இயல்புடையதாகும்; அதில் குறிக்கப்பட்டுள்ள மசோதாவை குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கவேண்டிய கடப்பாட்டினை அது ஆளுநர் மீது சுமத்துகிறது. இங்கே, உறுப்பு 201-ஐப் பற்றிக் குறிப்பிடுவது கூட பயனுடையதாகும். இவ்விரண்டு உறுப்புக்களையும் சேர்த்துப் படித்தால் தெரிய வருவது என்னவென்றால், ஆளுநர் மாநில

மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கிவைத்த பிறகு அம்மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் இசைவளிப்பதை நிறுத்தி வைக்கலாம்; மற்றும் மாநில சட்டமன்றம் அம்மசோதாவை இரண்டாவது முறையாக நிறைவேற்றிய போதிலும், அவர் அம்மசோதாவுக்கு இசைவு வழங்கும் கடப்பாடு உடையவர் அல்லர். இது 111-வது உறுப்பினின்றும் தெளிவாக வேறுபடுகின்றது. உறுப்பு 111-ன் படி, நாடாளுமன்றத்திஞல் நிறைவேற்றப் பட்ட மசோதா ஒன்றை மறுஆராய்வுக்குக் குடியரசுத் தலைவரால் திருப்பி அனுப்பப்பட்டு நடாளுமன்றம் அதை மறுபடியும் நிறைவேற்றிஞல், குடியரசுத் தலைவர் அதற்கு இசைவு வழங்க வேண்டுவது அவசியமாகும். குடியரசுத் தலைவர் என்ருல் மைய அமைச்சரவையேயாகும். ஆகவே, மாநிலம் சட்டமியற்றுதலை உறுதியாகத் தடுத்துவிட மைய அமைச்சரவை விரும்பிஞல் அது அவ்வாறே செய்துவிடக் கூடும். உறுப்புகள் 200, 201-ஐப் பற்றி ஆராயும் போது கிரான்வில் ஆஸ்டின் சொல்வதாவது :—

''கோட்பாட்டளவில் அதிகாரப் பகிர்விலை அவை செல்லமாட்டாதவையாக்குகின்றன. எப்படியென்ருல், 'மாநிலம் சட்டமியற்றுவதைக் குடியரசுத் தலைவர் தடுத்து நிறுத்துவதைப் புறக்கணிப்பதற்கு எந்த வழியும் இல்லை'.''

மாநிலத் தன்ஞட்சிக்குப் பொருந்துவதாகச் செய்ய வேண்டுமெனில் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக எந்த மசோதாவையும் ஒதுக்க ஆளுநருக்கு இப்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை எடுத்துவிட வேண்டும் என்பது தெளிவாகும்.

200-வது உறுப்பின் இரண்டாவது வரம்புரை, ஆளுநருக்குத் தேர்வுரிமை எதையும் விட்டு வைக்கவில்லை ; மசோதா ஒன்று உயர் நீதி மன்றத்தின் அரசமைப்புச் சட்ட முறையான நிலைக்குக் கேடு நேரிடும் அளவுக்கு உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களின் மதிப்பைக் குறைக்கக் கூடும் போல் இருந்தால் ஆளுநர் அந்த மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்க வேண்டுமென அவ்வரம்புரையில் சொல்லப்பட்டிருக்கிறது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் சரி நேரான வகையுரையாகிய பிரிவு 75-ல், உறுப்பு 200-ன் இரண்டாம் வரம்புரையைப் போன்ற வகையுரை

எதுவும் அடங்கியில்லை. ஆனால், மசோதா யாதேனும் சட்டமாகிவிட்டால் 1935-ம்ஆண்டு இந்திய அரசுச்சட்டத்தின் நோக்கத்தின்படி உயர் நீதி மன்றம் வகித்தற்குரிய நிலைக்குக் கேடு சூழும் அளவுக்கு அந்நீதிமன்றத்தின் அதிகாரங்களின் மதிப்பைக் குறைத்துவிடுமென்று ஆளுநர் கருதினால், ஆளுநர் தலைவரின் ஓர்வுக்காக அதை ஒதுக்க வேண்டுமென்று ஆளுநருக்குப் பிறப்பிக்கப்பட்ட தொகுப்பின் XVII (ஆ) பத்தியில் நிபந்தனை குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயினும் ஆளுநரால் செய்யப்பட்ட செயல் எதுவும், அவருக்குப் பிறப்பிக்கப்பட்ட அறிவுறைத் தொகுப்பின்படியல்லாமல் பிற வகையில் செய்யப்பட்டதென்னும் காரணத்தின் மேல் அதன் செல்திறனை எதிர்க்கக்கூடாதென 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 53 (2)-ல் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, நீதித் துறைக் கூர்ந்தாய்வுக்கு உட்படாத ஆட்சி ஏற்பாடாக மட்டும் இருந்த ஒன்று, இப்போது அரசமைப்புச் சட்டமுறையான கட்டளை அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளதையும் அவ்வகையில் அது, மாநிலம் இயற்றிய சட்டத்தின் செல்திறனையே பாதிக்கின்றது என்பதையும் இதிலிருந்து அறியலாம். இந்த வகையுரை, மைய அரசிற்குத் தந்தைத் தன்மையைக் கற்பித்து அது மாநிலங்களின்மீது மேலாண்மை அதிகாரத்தைப் பெறுகின்ற வாய்ப்பினை வழங்குகிறது. மாநிலங்களில் வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசுகள் தோன்றி மையத்துக்கும் மாநிலங்களுக்குமிடையே இணக்கமான உறவைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளது. உயர்நீதி மன்றத்தின் நிலையையும் தகுதியையும் பேணிக் காப்பதில் மையத்துக்கு உள்ள அக்கறை மாநிலங்களுக்கும் உண்டு. ஆகவே, 200-வது உறுப்பின் இரண்டாவது வரம்புரையை நீக்கிவிடலாம்.

மாநில சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதா ஒன்றை ஆளுநர், குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கலாம். ஆளுநர் அவ்வாறு ஒதுக்கி அனுப்புகையில், தமது அமைச்சரவையின் ஆலோசனைக்கிணங்க அவர் செயலாற்ற வேண்டுமென எங்கும் ஆணை விதிக்கப்படவில்லை. தாம் சொந்தமாகச் செயலாற்ற ஆளுநருக்கு அதிகாரம் இல்லையென அரசமைப்புச் சட்ட வல்லுநர்கள் கருதுகின்ற போதிலும், அரசமைப்புச் சட்டத்தின் வெளிப்படையான வகையுரைகளில் இந்தப் பொருள் விளக்கம்

உய்த்துணரக்கூடியதாக இல்லை. அவ்வாறு ஒதுக்கு கையில் ஆளுநர் தம் சொந்தப் பொறுப்பில் செயலாற்று பவராயிருந்தால், அதைத்தடுக்க வகை எதுவும் செய்யப் படவுமில்லை.*

ஒன்றியத்திலுள்ள மாநிலம் ஒன்று மையத்தில் அதிகாரத் திலிருக்கிற கட்சிக்கு எதிர்க் கட்சி ஒன்றின் கட்டுப்பாட்டிற் குள் வருவது இயல்வதேயாகும் (உள்ளபடி இவ்வாறு ஒரு முறை நேர்ந்திருக்கிறது). அம் மாநிலத்தின் சட்டமன்றம், அக்கட்சியின் அரசியல் பொருளாதாரக் கோட்பாட்டிற்கு உருவம் கொடுப்பதற்காக—அது தன்னுடைய சட்டமியற் றும் வரையறுத்த எல்லைக்குள் இருக்கின்றவரையில்—எந்தச் சட்டத்தையும் இயற்றத் தகுதி வாய்ந்ததாகும்; அந்தச் சட்டத்தின் வகையுரைகள் மைய அரசின் நடைமுறைக் கோட்பாட்டுக்கு ஒவ்வாதனவாய் இருக்கலாம். ஆளுநர் அத்தகைய மசோதா ஒன்றைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக் காக ஒதுக்கினால், குடியரசுத் தலைவர் தாமே செயலாற்ற வேண்டுமா அல்லது தமது அமைச் சரவையின் அல்லது அந்த மாநில அமைச்சரவையின் ஆலோசனையின்மேல் செயலாற்ற வேண்டுமா என் னும் பிரச்சினை உடனே ஏற்படும். கருத்துரைக்கப் பட்டுள்ளவாறு அமைச்சரவையினர் கூறும் ஆலோசனைக்கு ஏற்பக் குடியரசுத் தலைவர் செயற்படவேண்டுமென்றால், அவர் தமது இசைவை நிறுத்திக் கொள்ளலாம்; அல்லது தாம் அனுப்புகிற செய்திக்கேற்ப மறு ஆய்வு செய்யும்படிக் கேட்கலாம். அதாவது மையத்தில் அதிகாரத்திலிருக்கும் கட்சியினர், குடியரசுத் தலைவரின் தடுப்பு அதிகாரத்தை, எதிர்க்கட்சியின் மதிப்பைக் கெடுப்பதற்காகப் பயன்படுத்த லாம். இதனால், மாநிலங்களில் மக்களாட்சியின் அடிப்படையில் எதிர்க் கட்சிகள் வளர்ச்சி அடைவது தடைப்பட்டு, இந்தி யாவின் நிலவரைகள் எங்கணும் ஒரே கட்சியின் ஆட்சி தொடர்ந்து நடப்பதற்கு வசதி ஏற்படலாம்.*

குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கெனக் காலவரை எதுவும் குறிக்கப்படவில்லையென்பது, கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய செய்தியாகும். அவர், தாம் விரும்பினால் அல்லது அவ்வாறு ஆலோசனை கூறப் பெற்றால், மசோதாவைக் கால வரையின்றி வைத்துக் கொள்ளலாம். இரண்டாவதாக, மாநிலச் சட்டமியற்றுவதில், குடியரசுத் தலைவரின் தடுப்பு

* அசோக் சந்தா எழுதிய, 'இந்தியாவில் இணைப்பாட்சி முறை' என் னும் ஆங்கில நூல், பக்கங்கள் 98, 99.

அதிகாரத்தைப் புறக்கணிப்பதற்கான வகையுரை எதுவுமில்லை. அவருடைய தடுப்பு அதிகாரம் வரம்பற்றது; தமக்கு அனுப்பப்பட்ட மசோதா எதையும் அவர் தடுத்து நிறுத்திவிடலாம்; அந்தத் தடுப்பு அதிகாரத்தைப் பயன் படுத்துவதற்கான காரணங்களையும் அவர் தெரிவிக்கவேண்டிய தில்லை. குடியரசுத் தலைவர் ஒன்றிய நிர்வாகத்தின் ஆலோசனையின்மேல் செயலாற்றுகிறபடியால், மாநிலத்தின் சட்டமியற்று அதிகாரங்கள், குடியரசுத் தலைவரின் தடுப்பு அதிகாரம் பயன்படுத்தப்படுவதனுல், ஓரளவுக்குத் தலையீட்டுக்கு உள்ளாகலாம்.* இவ்வாருக, கோட்பாட்டளவிலும் செயல் முறையிலும், மாநிலத்தின் சட்டமியற்றும் செயல் ஒன்றிய நிர்வாகத்தின் மேலாதிக்கத்துக் கீழ்ப்பட்டதாக உள்ளது.

மைய-மாநில உறவில் ஆளுநரின் பங்கு சிக்கல் மையமான கூறு ஆகும். ஆளுநர், மாநில மசோதா ஒன்றை ஒதுக்குகையில், தமது அமைச்சரவையின் ஆலோசனையின்மேல் செயலாற்றுகிருர் என அரசமைப்புச் சட்டத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. ஆளுநர், அரசமைப்புச் சட்டப்படியான மாநிலத் தலைவர் என்பது உண்மைதான். அதே சமயத்தில், அரசமைப்புச் சட்டம் அவரை, குடியரசுத் தலைவரின், பிரதிநிதியாக ஆக்குகிறது. குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சரின் ஆலோசனையின்மேல் ஆளுநரை அமர்த்துகிருர்; குடியரசுத் தலைவர் விரும்பும்வரை ஆளுநர் தமது பதவியை வகிக்கிருர். அதிகாரத்திலிருக்கிற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களிலிருந்து ஆளுநர்கள் பெரும்பாலும் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள்; தோல்வியடைந்த அரசியல் வாதிகளுக்கு மாநில ஆளுநர் பதவிகள் கொடுக்கப்படுவது அடிக்கடி நிகழ்ந்து வந்தது. கருத்தளவில், ஆளுநர்கள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்கள் என்று கருதப்பட்டபோதிலும், அவர்கள் அடிப்படையில் கட்சிக்காரர்களாகவே இருந்து, தங்கள் மாநிலங்களில் ஏற்பட்டுவரும் அரசியல் நிலைமைகளைக் கவனித்து வருகிருர்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையில், தங்கள் கட்சிக்கு ஊறு உண்டாக்கும் மாநிலச் சட்டத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்போது, தங்கள் மாநில அமைச்சரவையின் ஆலோசனையை அவர்கள் கேட்காமலிருந்து விடலாம். உறுப்புகள் 200, 201 ஆகியவற்றை நீக்கிவிடலாமெனப் பரிந்துரைக்கிருேம்.

* அசோக் சந்தா எழுதிய, 'இந்தியாவில் இணைப்பாட்சி முறை' என்னும் ஆங்கில நூல், பக்கம் 102.

உறுப்பு 254 (2).—இந்த உறுப்பு, ஒரு மையச் சட்டமும் ஒரு மாநிலச் சட்டமும் பொதுப் பட்டியலில் உள்ள ஒரு பொருள் பற்றியனவாயிருக்கும்போது அவற்றிடையே ஏற்படக்கூடிய முரண்பாடு பற்றியதாகும். பொதுப் பட்டியலிலுள்ள பொருள் ஒன்றைப்பற்றிய ஒரு மாநில சட்டத்துக்குக் குடியரசுத் தலைவர் இசைவு கொடுத்திருப்பதுங் கூட, குடியரசுத் தலைவர் இசைவு வழங்கியுள்ள அதே சட்டத்தை நாடாளுமன்றம் நீக்குவதைத் தடை செய்யாது. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, உறுப்பு 254 (2)-ல் கண்டுள்ள வகையுரைக்குரிய தேவை என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. மாநிலங்களிடை உறவு மன்றத்தைப் பற்றியும், நாடாளுமன்றத்தில் முன்னுரைக்கப்படவிருக்கும் மசோதாக்கள் எல்லாவற்றையும் அம்மன்றத்தின் முன் வைப்பதைப்பற்றியும் நாங்கள் பரிந்துரைத்துள்ளதன் காரணமாக, குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக மசோதாவை ஒதுக்கும் பிரச்சினைக்கே இடமில்லாமற் போகலாம். வேறெந்த இணைப்பாட்சியின் அரசமைப்புச் சட்டத்திலும், உறுப்புச் சட்ட மன்றங்களின் மசோதாக்கள் ஒன்றிய அல்லது இணைப்பாட்சி நிர்வாகத்தின் ஓர்வுக்காக ஒதுக்கப்படுவதற்கான வகையுரை எதுவும் இல்லை. உறுப்பு 254-ன் (2)-வது பகுப்பை நீக்கி விடலாம்.

இணைப்பாட்சி அமைப்பு ஒன்றில், தரப்பினர்களில் ஒன்றாகிய ஒன்றியம், அரசமைப்புச் சட்டத்துடன் இணக்கத்தை உறுதிப் படுத்துவதற்கு ஒருவகை வழிகாட்டியாகச் செயலாற்றுவதற்கு வாய்ப்பில்லை. இந்த அலுவல் உயர் நீதி மன்றங்களிடமும் உச்ச நீதி மன்றத்தினிடமும் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் ஓர்ந்து பார்க்கையில், குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக மாநில மசோதாக்களை ஒதுக்குவதற்கான வகையுரை மிகை என்று சொல்வதில் தவறில்லை; சில நேர்வுகளில் அது எரிச்சல் ஊட்டக்கூடியதாக இருக்குமெனவும் கூறலாம். உறுப்பு 288 (2)-ல் உள்ள வகையுரையைத் தவிர, மேற்காட்டிய பிற வகையுரைகள் எல்லாவற்றையும் நீக்கி விடலாம்.

அவசரச் சட்டம் செய்ய ஆளுநருக்குள்ள அதிகாரம் குடியரசுத் தலைவரிடமிருந்து முன்னதாக ஆணை பெறுவதன் தேவை:

12. அரசமைப்புச் சட்டத்தில், மாநிலச் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காகவும் இசைவுக்காகவும் ஒதுக்கப்பட

வேண்டுமென்கிற வகையுரையைத் தொடர்ந்து உறுப்பு 213 (1)-ன் வரம்புரையில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலை களில் குடியரசுத் தலைவரிடமிருந்து ஆணையைப் பெரு மல், ஆளுநர்கள் அவசரச் சட்டங்களை வெளியிடக்கூடா தெனத் தடை செய்யும் வகையுரை ஏற்பட்டுள்ளது. அந்த வரம்புரையின்படி, பின்வரும் மூன்று நேர்வுகளில், குடியரசுத் தலைவரின் முன் ஆணை தேவைப்படுகின்றது :—

(1) அதே வகையுரைகள் அடங்கியுள்ள ஒரு மசோ தாவை மாநிலச் சட்டமன்றத்தில் முன்னுரைப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தின்கீழ் குடியரசுத் தலைவரின் முன் ஏற்பாணை வேண்டியிருப்பது;

(2) அதே வகையுரைகள் அடங்கியுள்ள ஒரு மசோ தாவைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கென ஒதுக்குதல் தேவையென ஆளுநர் கருதியிருப்பது ;

(3) அதே வகையுரைகள் அடங்கியுள்ள மாநிலச் சட்ட மன்றத்தின் சட்டம் ஒன்று குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றிருந்தாலொழிய, அரசமைப்புச் சட்டத் தின்கீழ்ச் செல்லாதிருப்பது.

அரசமைப்புச் சட்டத்தில், மாநிலச் சட்டமன்றத்தில் மசோதா ஒன்றை முன்னுரைப்பதற்குக் குடியரசுத் தலைவ ரின் முன் ஏற்பாணை பெறவேண்டுமென்கிற ஒரே வகையுரை வாணிகத்தையும், வர்த்தகத்தையும் பற்றிய உறுப்பு 304-ன் பகுப்பு (ஆ)-வின் வரம்புரையாகும். இப்பொருள்பற்றி ஆராய்ந்தபோது இவ்வரம்புரையை நீக்கிவிடலாமென்று கருத்துரைத்தோம். எனவே, எந்த வகையுரைகளை மசோதா ஒன்றில் சேர்த்திட்டால் அதனை மாநிலச் சட்டமன்றத்தில் முன்னுரைப்பதற்காகக் குடியரசுத் தலைவரின் முன் ஏற்பாணை வேண்டியிருக்குமோ அந்த வகையுரைகளைக் கொண்ட அவசரச் சட்டம் ஒன்றை வெளியிடுவதற்கு முன் குடியரசுத் தலைவரின் முன் ஆணையை ஆளுநர் பெறுவதற்கான தேவை இல்லாமற் போய்விடும் என்பது புலனாகும்.

உறுப்பு 254 (2)-ஐப் பற்றி ஆராய்ந்த போது, அந்த வகையுரை தேவையற்றதெனவும், அதனை நீக்கிவிடலா மெனவும் எடுத்துக் காட்டினோம். ஆகையால், எந்த வகை யுரைகளை மசோதா ஒன்றில் சேர்த்திட்டால் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக அது ஒதுக்கப்பட்டிருக்குமோ அந்த வகையுரைகளைக் கொண்ட அவசரச்சட்டம் ஒன்றை ஆளுநர்

வெளியிடுவதற்கு முன் அவர் குடியரசுத் தலைவரின் முன் ஆணையைப் பெறவேண்டுமென்னும் நிபந்தனை, உறுப்பு 213 (1)-ன் வரம்புரையில் இருப்பது இனிமேலும் தேவையற்றதாகும். உறுப்பு 288 (2)-ன் கீழ் வரும் நேர்வுகளில் தவிர, பிறவற்றில் மாநில மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்குதல் பற்றிய வகையுரைகள் எல்லாவற்றையும் நீக்கிவிட வேண்டுமென்றுங்கூட கருத்துரைத்துள்ளோம்.

உறுப்பு 288 (2)-ன் கீழ்வரும் நேர்வுகளுக்கு மட்டும் பொருந்தும் வகையில், உறுப்பு 213 (1)-ன் வரம்புரை மாற்றி அமைக்கப்படலாம்.

அத்தியாயம் V.

நிதி பற்றிய உறவுகள்.

பொது.

மைய-மாநில உறவின் மிக முக்கியமான கூறுகளில் ஒன்று நிதி பற்றியதாகும். ஆட்சி, காவல்துறை, சமூகப்பணிகள், பொருளாதார முன்னேற்றம் போன்ற பல காரியங்களுக்கு மாநிலங்களுக்கு நிதி தேவைப்படுகிறது.

மைய, மாநிலங்களின் அரசுகள் அதனதன் கடமைகளை நிறைவேற்றத் தனித்தனி நிதி வாயில்களைக் கொண்டதாயிருக்கவேண்டும் என்பது அரசமைப்புச் சட்டப்படி வகுக்கப்பட்ட அதிகாரங்களாலும் அலுவல் முறைகளாலும் பெறப்படுகின்றது.

பேராசிரியர் வியர் கருத்துப்படி, '' பொது அரசும் மற்ற வட்டார அரசுகள் ஒவ்வொன்றும் தனது சொந்தப் பொறுப்பின் கீழ் தனிப்பட்ட அலுவல்களை ஏற்று நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வாயில்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ''.*

2. இணைப்பாட்சிக் கோட்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் மைய-மாநில அரசுகள் நிதிவகையில் தன்னாட்சி உரிமை பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். எனவே, மைய அரசின் தேவைகளைக் குறித்துப் பேரரசு தனிமுறை அதிகாரம் பெற்றிருத்தல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு மாநில அரசுகளும் அதனதன் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் மாட்சியைப் பெற்றிருக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தில் மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மீண்டும் சரிப்படுத்திச் சீரமைத்துக் கொள்வதற்கு நிதித்துறையில் சுதந்திரப் போக்கும், நெகிழ்வு மனப்பான்மையும் இருக்க வேண்டியது மிக முக்கியமானது. ஆகவே, சுதந்திரக் கொள்கையும் உடன்பட்ட பொறுப்புணர்வும், இணைப்பாட்சி அமைப்பில் நிதிபற்றிய கொள்கை வகுப்பதில் மிக முக்கியமானவை எனக் கருதப்படுகிறது. '' நிதிபற்றிய ஏற்பாடுகளில் பின்பற்றவேண்டிய மூல முதற்கொள்கை

* வியர் எழுதிய 'இணைப்பாட்சி அரசு' என்னும் ஆங்கில நூலின் 93-வது பக்கத்தை காண்க.

என்னவெனில், கூடியமட்டில், இணைப்பாட்சி அரசிடமும், மாநிலங்களிடத்தும், தனித்தனியே வருவாய் வாயில்களைத் தேடும் உரிமை பரஸ்பர தலையீடு இன்றி ஒப்படைக்கப்பட வேண்டும். ஆங்காங்கே, குறைபாடுகளை நீக்கும் வகையில் மட்டுமே மைய ஆட்சியின் தலையீடு இருக்க வேண்டும்'' என்று பேராசிரியர் அதர்கார் குறிப்பிடுகிறார்.

இணைப்பாட்சி அமைப்பில் நிதிபற்றிய கொள்கை வகுப்பதில் போதிய நிறைவும், நெகிழ்வுத் தன்மையும் இன்றியமையாத கூறுகளாக இருக்க வேண்டும். தரமான ஆட்சிமுறையைப் பேணி வரவும், அந்தந்த அரசுக்குரிய எல்லைக்கோட்டில் நிதிபற்றிய அலுவல்களை ஆற்றவும் மைய அரசிலும் மாநிலங்களிலும் போதிய நிதிவாயில்கள் இருக்க வேண்டுமென்பதே நிறைவு என்பதன் உட்கிடக்கையாகும். நெகிழ்வுத் தன்மை என்பதன் உட்பொருள், சம்பந்தப்பட்ட அரசின் வளர்ந்துவரும் தேவைகளுக்கிணங்க வாயில்களைப் பெருக்குவதாகும்.

3. நிதி வாயில்கள் வகைப்பாட்டினால் நடைமுறையில் காணும் விளைவு, மாநிலங்கள் மைய அரசையே அதிகமாக நம்பியிருக்கும் நிலைமை இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறு அதிகமாக மைய அரசையே நம்பியிருப்பதற்குரிய மூல காரணங்களாவன :—

(i) மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதிகளைத் திரட்டுவதில் உள்ள வாயில்கள் மீள்திறனற்றதாகவும், பற்றாக்குறையாகவும் உள்ளன ;

(ii) மாநிலங்களுக்கு ஒதுக்கியுள்ள அலுவல்கள் விரிவடைந்து வரும் பொறுப்புக்களைக் கொண்டதாகும். குறிப்பாக பேரார்வத்துடன் வளங்கெழு திட்டங்கள் தீட்டப்படுகிற சந்தர்ப்பங்களில் செலவு பெருகிவரத்தான் செய்யும்;

(iii) தேசீய நிதித்திட்டம் தயாரிப்பதற்கு முக்கியமான வாயில்கள் அயல்நாட்டு உதவியும், பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமுமாகும். இவை இரண்டும் மைய அரசை பலப்படுத்துமே ஒழிய மாநிலஅரசு வாயில்களைப் பலப்படுத்தாது.

மாநில அரசு இணைப்பாட்சி அரசையே பெரிதும் நம்பியிருக்கக்கூடாது. மாநிலங்களின் தன்னாட்சித் தன்மையை இது மிகவும் குறைத்துவரும். மேலும், இது மாநில ஆட்சியில் பொறுப்பின்மையையும் வளர்த்துவிடும்.

அதனதன் எல்லைக்கோட்டில் தன்னாட்சிபெற்ற இருவகையான அரசுகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுதான் இணைப் பாட்சி அமைப்பின் உட்பொருளாகும். அதனதன் அலுவ வல்களைச் செய்யவும், அவ்வவற்றிற்குரிய அதிகாரங்களைச் செலுத்தவுமுள்ள பொறுப்பை இவை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். மையத்தில் அதிகாரங்கள் குவிவதால், இணைப்பாட்சி அரசையே மாநிலங்கள் மேன் மேலும் நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டு இணைப்பாட்சி அரசு மறைந்து ஒற்றையாட்சி அரசு (unitary state) அமையும். அந்தந்த அரசு அலுவல்களின் தேவைகள் அதிகரித்து வருவதற்கு ஏற்றவாறு போதிய அளவுக்கு அதி காரங்கள் இருவகை அரசுகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.*

மைய-மாநில உறவு பற்றி ஆய்வதற்கு நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவால் (Administrative Reforms Commission) நியமிக்கப்பட்ட கற்றறி குழுவினர் தெரிவித்த பின்வரும் கருத்துக்கள் பொருத்தமானவை யாகும்:—

"மைய அரசையே பெருமளவுக்கு நம்பியிருப்பதால் மாநிலங்களில் பொறுப்பின்மை வளரவும், திறமையற்ற நிர்வாகம் ஏற்படவும் வழி உண்டாகிறது. மாநிலங் களைக் காட்டிலும் மையத்தில் மேலோங்கிய நிதி அதிகாரம் இருப்பதால், மையத்தில் உள்ள அதிகாரிகளுக்குத் தங்க ளுக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம் ஏற்படு கிறது. மேலும் அவர்கள் மாநிலங்களின் கருத்துக்களுக்குச் செவிசாய்ப்பதில்லை. எனவே, நிதி குறித்து மாநிலங்கள் மையத்தையே நம்பியிருக்கும் நிலை, குறைந்த அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். ஏனெனில் தேசீய ஒரு மைப்பாட்டைக் காப்பதில் மட்டும் கட்டுப்பாட்டு அதி காரங்களை மைய அரசுக்குக் கொடுக்கலாம் என்னும் கருத்துப் படி இந்தக் குறைந்த அளவு சார்புநிலை போதுமானதாகும்" (தொகுதி I, பக்கம் 23).

4. மைய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே செய்யப் படும் நிதி ஒதுக்கீடு இரு முக்கிய குற்றச்சாட்டுகளை எழுப்பி யுள்ளது :—

(i) அரசமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கீடு நியாயமானதன்று.

*திரு எஸ். எம். வீரராகவாச்சார் எழுதிய, 'இந்தியாவில் மைய-மாநில நிதி பற்றிய உறவுகள்' என்னும் ஆங்கில நூலில் 8-வது பக்கத்தில் காண்க.

(ii) மாநிலங்களின் சார்பில் வசூலிக்கப்பட்ட வரிகளைப் பகிர்ந்தளிப்பதிலும், மைய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் விருப்ப மானியங்களின் விஷயத்திலும் (discretionary grants) ஒருசார்பாக நடப்பதற்கு வாய்ப்புள்ளது.

நலங்கெழு நடவடிக்கைகள் பெரும்பாலானவற்றிற்கு மாநிலங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் நிதி திரட்டுவதற்கு அவற்றிடமுள்ள வாயில்கள் போதுமானதாயில்லை. அவை, மானியத் தொகைக்கும், அதிகப் பற்றுக்கும் (over drafts) மைய அரசையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியுள்ளது. நீடித்த கடனுற்ற நிலையும், மைய அரசின் கொடையை நம்பியிருக்கும் நிலையும், படிப்படியாக மாநிலங்களைத் திறமையற்றவைகளாக்கி விட்டன. மாநிலங்கள், எவ்விதப் பொறுப்பும் எடுத்துக் கொள்ளாமல் தங்கள் தவறுகளுக்கு மைய அரசைச் சுட்டிக் காட்டுகிற போக்கை வளர்த்துக் கொள்கின்றன.

5. அரசமைப்புச் சட்டம் இயற்றுகையில், வளர்ந்து வருகிற சமுதாயத்தின் நிதித் தேவைகளை உணர்ந்து இயற்றினார்களா என்பது பெரிதும் ஐயப்பாடாக உள்ளது. மைய அரசிடமிருந்து மானியங்களுக்கும் கடன்களுக்கும் பெரிதும் நம்பியிருப்பதற்குப் பதிலாக மாநிலங்களிடம் போதிய நிதி வாயில்கள் வைத்திருக்கப்படவேண்டுமென்பது இப்போது நன்கு தெளிவாகிறது. இத்தகைய மானியங்களையும் கடன்களையும், தவிர்க்க முடியாத அரசியல் நிர்ப்பந்தங்களின் பேரில் இவை பெறுகின்றன. சமநிலை வட்டார வளர்ச்சி அடையும் நோக்கங்களுக்காக, மைய அரசு பகிர்ந்தளிக்கக் கூடிய பொது நிதி ஒன்றை வைத்து வருவது மிகவும் அவசியமாகும்.*

6. மாநிலங்களின் விருப்பங்களுக்கும் அவற்றுக்குள்ள நிதி வாயில்களுக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வைச் சரிப்படுத்த, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பொருத்தமான உறுப்புகளில், மாநிலங்களுக்குப் போதுமான நிதி வாயில்களை உண்டாக்கித் தரும் வகையில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. நாட்டை வளம்படுத்துவதற்கான பொறுப்பு, அதை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் ஆகியவை இணைந்து செயல்படும். மானியங்

* 1970 டிசம்பர் 31-ம் நாளிட்ட 'காபிடல்' என்னும் இதழின் இணைப்பில் வெளியிடப்பட்ட "மைய-மாநில நிதி உறவுகளை மறு ஆய்வு செய்வதன் அவசியம்" என்ற தலைப்புள்ள திரு. பாபடோஷ் தத்தா அவர்களின் கட்டுரையில் தெரிவித்துள்ள கருத்தையும் காண்க.

களுக்கு மைய அரசை நாடுவதும் பெருமளவு அவசிய மில்லாமல் போகலாம். ஆக இதனால், நியாயமான, நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நிதி உதவியளிப்பதற்கு மைய அரசு நிதி சேமித்து வைக்கவும் வழி ஏற்படலாம். *மாநிலங்களின் தேவைகள், அவற்றின் நிதிவாயில்களைக் காட்டிலும் பெருகிவருவதையும், எவ்வகையிலாயினும் மைய அரசு நிதிகொடுக்க வேண்டியிருப்பதையும் கருத்தில் கொள்வதாயின், நிதி பங்கிடும் அடிப்படைக் கொள்கையை விரிவுபடுத்தி, நிதி பங்கிடும் அமைப்புக்குள் ஏனைய வரிகளையும் கொண்டுவரவேண்டும் என்னும் கூற்றுக்கு அனுமதி அளிப்பது முற்றிலும் சரியே. வரி விதிப்பு முறையும், ஆட்சியும் சீரடையவும் இது வழிகோலும். (நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு நியமித்த கற்றறி குழுவினரின் அறிக்கை தொகுதி 1—பக்கங்கள் 41—42).

7. மைய அரசு விதிக்கக்கூடிய வரிகள், மைய அரசு அதிகாரப்பட்டியலின் 82 முதல் 92-அ வரையுள்ள பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மாநில அரசு விதிக்கக்கூடிய வரிகள், மாநிலப் பட்டியலின் 45 முதல் 63 வரையுள்ள பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பொது அதிகாரப் பட்டியலின் 44-வது பதிவு, நீதித் துறை முத்திரைத் தாள்கள் நீங்கலாக முத்திரைத் தாள் தீர்வைகளைக் குறிக்கிறது. ஆனால், இதில் முத்திரைத் தாள் தீர்வை வீதங்கள் சேரா. மைய அதிகாரப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மூன்று வகையான வரிகள் மைய அரசின் தனிப் பயனுக்காகவே உள்ளன. அவையாவன :—(1) ஏற்றுமதித் தீர்வைகள் உட்பட சுங்கத் தீர்வைகள் (பதிவு 83); (2) கூட்டுரும வரி (பதிவு 85); (3) தனியார்களுக்கும், கம்பெனிகளுக்கும் சொந்தமான, விளை நிலம் நீங்கலான இருப்புகளின் மூலதன மதிப்பின்மீது வரிகள்; கம்பெனிகளின் மூலதனத்தின் மீது வரிகள் (பதிவு 86); மைய அரசு விதிக்கக்கூடிய எஞ்சியுள்ள வரித் தலைப்புகளுள், வேளாண்மை வருமானமல்லாத ஏனைய வருமானங்கள் மீதுள்ள வரி வருவாய்களை மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். மைய, மாநில அரசுகளுக்கிடையே கட்டாயமாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டியிராத புகையிலை போன்ற

* 1970 ஏப்ரலில் புது டில்லியில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசீய மாநாட்டில் டாக்டர் சி. டி. தேஷ்முக் அவர்களால் அளிக்கப்பட்ட நடைமுறை அறிக்கை எண் III D.

சரக்குகள்மீது ஆயத்தீர்வைகள், நாடாளுமன்றம் சட்டத்தின் மூலமாக ஏற்பாடு செய்திருப்பின் மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படலாம். நிதி ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இவை உண்மையில் இதுவரையில் பகிர்ந்தளிக்கப்பட்டுவருகின்றன.

8. வரிவிதிப்புச் சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றி விவரிக்கையில் மைய அதிகாரப் பட்டியலின் 84-வது பதிவின்கீழ், சாராயம் அடங்கிய மருந்து, ஒப்பனைத் தயாரிப்புகள் மீது ஆயத்தீர்வை விதிக்கும் அதிகாரம் 1935-வது ஆண்டுச் சட்டத்தின்படி மாநில அரசுகளிடம் நிலைபெற்றிருந்தது எனக் குறிப்பிட்டிருந்தோம். இதைப் போலவே, பங்கு வாணிகக் களங்களிலும், எதிர்நோக்கு வாணிகங்களிலும் நடைபெறும் பற்று வரவுகள் மீதும், பத்திரிகைகள், அவற்றில் வெளியாகும் விளம்பரங்கள், விற்பனை அல்லது கொள்முதல் மீதும், மாநிலங்களிடை வர்த்தகம் அல்லது வாணிக நடைமுறையில் சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதல் மீதும் வரிவிதிக்கும் தனித்த அதிகாரத்தை மாநில அரசுகள் தம்மிடம் கொண்டிருந்தன. இந்த வரிவிதிப்புகள் யாவும் மைய அதிகாரப் பட்டியலைச் சேர்ந்த 90, 92, 92-அ பதிவுகளில் இப்போது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நான்கு பதிவுகளைப் பின்னர் கவனிப்போம்.

9. மைய அரசின் விருப்பப்படிக்கல்லாமல் இயல்பாகவே மாநிலங்களுக்குச் சட்டப்படி நிதி வழங்கும் வாயில்கள் வந்தடைவது மாநில தன்னாட்சியில் மிகவும் இன்றியமையாதது என்பது இணைப்பாட்சி நிதித் திட்டத்தில் வரவேற்கத்தக்கதொரு கொள்கையாகும். ஏனெனில், இது, நிதி குறித்து மைய அரசையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையை முற்றிலும் அகற்றுவிட்டாலும் கணிசமான அளவுக்கேனும் குறைக்கும்.

முன்னரே உறுதிபெற்ற நிதி ஒதுக்கும் முறையில் உள்ள வாய்ப்பை மேலும் விரிவுபடுத்தவேண்டியதன் அவசியத்தை நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவைச் சேர்ந்த கற்றறி குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பின்வரும் பகுதி மேற்சொன்ன கருத்தை நன்கு விளக்குகிறது :—

"மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு நிதி உதவி முக்கியமாக இருவாயில்கள் மூலமாகக் கிடைக்கிறது. இதில் ஒன்று முன்னரே உறுதிபெற்ற நிதி உதவியாகும்.

இதில் மாநிலங்களுக்கு என்ன கிடைக்குமென்பது குறித்து எவ்வித ஐயத்துக்கும் இடம் வைக்கவில்லை. இவ்வாறு கிடைக்கும் நிதி உதவியில் மாநிலங்கள் எவ்வளவு செலவு செய்கின்றன, எப்படிச் செலவு செய்கின்றன என்பதைப் பற்றிக் கருதாமலே அவர்களுக்கு உரிய பங்கு இவ்வகையில் கிடைக்கிறது. 275-வது உறுப்பின்படி, பகிர்ந்தளிக்கப்படும் வரிகள், உதவி மானியங்கள் ஆகியவை இவ்வகுப்பின்கீழ் வருகின்றன. முன்னரே உறுதிபெற்ற நிதி உதவி வகையின் முக்கியமான கூறுகளில் ஒன்று, தொகைகள் நிதி ஆணைக்குழுவின் ஓரளவு நீதி முறையான தீர்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. மற்றொரு நிதி வாயிலில் தான், அலுவலர் தலையீடு, விருப்பம்போல் நிதிஉதவி அளித்தல் ஆகியவை எழுகின்றன. மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை பெருவாரியாக இருந்தாலும், அதன் அளவிலேயே கிடைக்கும் என்பது உறுதியாகச் சொல்வதற்கில்லை. ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும் ஐந்தாண்டுத் திட்ட மானியங்கள் இந்த வகையின்கீழ் வருகின்றன. முன்னரே உறுதிபெற்ற நிதிவாயில்கள் மூலமாக மேலும் நிதிஉதவி மாநிலங்களுக்குக் கிடைக்குமாறு மையச் சார்புநிலையைக் குறைக்கத்தக்க சிறந்த முறை அமையவேண்டும்'' (தொகுதி I, பக்கம் 24).

''....பங்கீட்டு வரிகள் பட்டியலில் மேலும் பல மைய வரிகளைச் சேர்த்து நிதி வழங்கும் முறையை விரிவாக்க வேண்டும் என்பதே எங்கள் கருத்து'' (தொகுதி I, பக்கம்38).

''ஏற்கனவே சொல்லியபடி, உறுதிப்பட்ட நிதிவாயில்களைப் பெறும் வாய்ப்பினை விரிவுபடுத்துவதற்கான வழிமுறை வகுக்கப்படவேண்டும். அதிலும் குறிப்பாக, நிதி ஆணைக்குழுவுக்கும், திட்ட ஆணைக்குழுவுக்குமிடையே நடைபெறும் அலுவல்களின் சீரமைப்பு, மாநிலங்கள் பாதகமடையும் வகையில் இருக்கக்கூடாது. மாநில அலுவல்கள் பலவாறு விரிவடைந்து வருவதால் குறிப்பாகப் பொருளாதாரத் துறையில் பெருகிவருவதை முன்னிட்டு, மாநிலங்களுக்கு வரித் தொகைகளைப் பங்கிட்டுப் படிப்படியாகப் பெருவாரியாக ஒதுக்க வேண்டுமென்று நிதி ஆணைக்குழுக்கள் பரிந்துரைத்துள்ளன. இருந்தபோதிலும், ஒரு சில மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்கள் யாவும், திட்டத்தில் சேராத பணிகளின் வருவாய்ப் பற்றுக்குறையை நிரப்ப உதவி மானியங்கள்

தொடர்ந்து கேட்டுவரும் நிலையில் உள்ளன. எனவே, பின் வருவனவற்றிற்கு வழிவகை செய்யவேண்டியது அவசிய மெனத் தோன்றுகிறது :—

(i) இப்போது கொடுப்பதை விட வரிகளில் அதிக நிதி ஒதுக்கம் மாநிலங்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். இதனுல் நடைமுறையில் நாளாவட்டத்தில் 275-வது உறுப்பின் படி அளிக்கப்படுகிற உதவி மானியங்களின் தேவை முழு வதும் அற்றுப்போவதோ அல்லது குறைந்தோ விடலாம். இதற்காக (அ) நிதி ஒதுக்க அடிப்படை விரிவடைய வேண்டும். (ஆ) பங்கீட்டு வரிகளில் மாநிலத்தின் பங்கைப் போதிய அளவுக்கு உயர் மட்டத்தில் நிச்சயிக்க வேண்டும்.

(ii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 269-வது உறுப்பில் சொல்லியுள்ள ஒப்படை வரிகளை (assigned taxes) முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(iii) மாநிலங்களுக்குச் சம்பந்தப்பட்ட மைய வரி களைப் பொறுத்தமட்டில் அவற்றுக்குள்ள உரிமை நலன் களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தங்களுக்குள்ள பொதுப் பிரச்சினைகளை ஏற்றுத் தீர்வு காண்பதற்கு வசதி யாக மைய, மாநில அரசுகளுக்கிடையே கலந்து ஆலோசனை களை நடத்துவதற்கு நிறுவன அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் ''.

''மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்குவதன் மூலமாக, அவை மைய அரசைப் பெரிதும் நம்பியிருப்பதை ஒருவழியில் குறைக் கலாம். மாநிலங்களில் இன்றியமையாத செலவுகள் இயல்பாகவே பெருகிவருவதோடு, தொடர்ந்து துரித வேகத்தில் செல்கின்றன. எனவே, பங்கீட்டு முறையில் மற்ற வரிகளையும் சேர்த்து, நிதி ஒதுக்க அடிப்படை முறையை விரிவுபடுத்துவதற்கு நியாயமில்லையா என்பது குறித்து ஆராயவேண்டியுள்ளது '' (தொகுதி I, பக்கம் 41).

மைய அரசுக்கெனவே ஒதுக்கப்பட்ட வரிகள்.

கூட்டுரும வரி.

10. மைய அரசே முழுமையாகப் பயன்படுத்திக் கொள் ளும் வரி வருவாய் இனங்களை முதற்கண் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம். அவையாவன: ஏற்றுமதித் தீர்வை கள் உள்ளிட்ட சுங்கத்தீர்வைகள், நிறுவன வரி, சொத்து வரி

ஆகியவை. 1947 ஜுலை 4-ம் நாளிட்ட மைய அரசமைப்புச் சட்டக் குழு அறிக்கையில், ஒருசில வரி இனங்களுடன் சுங்கம், மற்றும் ஏற்றுமதித் தீர்வைகள், கம்பெனிகள் மீதான வரிகள் ஆகியவை விதிக்கப்பட்டு அவசியமாயின், பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்னும் செயற்குறிப்பு இருந்தது. அரசமைப்புச் சட்ட மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசமைப் புச்சட்டக் குறிப்பில் இந்த ஏற்பாடு மீண்டும் கொண்டுவரப் பட்டது. இந்தக் குறிப்பை அரசமைப்புச் சட்டமன்றம் 30—7—1947 அன்று ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டது. ஆனல், சர் என். கோபாலசாமி ஐயங்கார் தெரிவித்த கருத்துப்படி இந்த வகையுரை பற்றி ஓர்ந்து முடிவு எடுக்கும் பணி ஒத்திப்போடப்பட்டது. இணைப்பாட்சியில் மைய, மாநில அரசுகளுக்கிடையே வரி வருவாய்களைப் பங் கிட்டுக் கொள்ளும் பிரச்சினை முழுவதையும் விரிவாக, ஆராய் வதற்கு வல்லுநர் குழு ஒன்று நியமிக்கப்பட உத்தேசித்திருப்ப தாக அவர் தெரிவித்தார்*. அரசமைப்புச் சட்ட ஆலோச கர் சர் பி. என். ராவ், 1947 அக்டோபரில் தயாரித்த வரைவு அரசமைப்புச் சட்டத்தில் ஏற்றுமதித் தீர்வைகளை மைய அரசு மாநில அரசுகளுடன் விருப்பம் போல் பங்கிட்டுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற் கிடையில், சர் என். கோபாலசாமி ஐயங்கார் ஆலோ சனைப்படி, வல்லுநர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மைய வரிகளில் சிலவற்றைத் தாங்கள் வசூலித்துக்கொள்ளவும், பகிர்வு நிதியில் சில வரி இனங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி பகிர்ந்து கொடுக்கக்கூடிய வரிகளில் பெருவாரியான பங்கு அளிக்குமாறும் அப்போதிருந்த மாகாணங்கள், வல்லுநர் குழுவிடம் வலியுறுத்தின. பகிர்வு நிதியில் நிறுவன வரியும், ஏற்றுமதித் தீர்வைகளும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டு மென்று வற்புறுத்திய மாகாணங்களில் சென்னை மாகாண மும் ஒன்று. வல்லுநர் குழு தனது அறிக்கையை 1947 டிசம்பரில் அனுப்பியது. நிறுவன வரி நிகர வருவா யில் ஒரு பகுதியை மாநிலங்களுக்கு ஒதுக்கித் தரவேண்டு மென்று வல்லுநர் குழு அந்த அறிக்கையின் 38-வது பத்தி யில் கருத்து தெரிவித்திருக்கிறது. ஆனல், சுங்கவரி, ஏற்றுமதித் தீர்வைகள், மதிப்புடைய மூலதன இருப்பு களின்மீதான வரிகள் ஆகியவற்றின் வருவாயைப் பகிர்ந்தளிப் பதை வல்லுநர் குழு வரவேற்கவில்லை.

* அ. ச. ம. வி. IV, பக்கம் 987.

11. கூட்டுரும வரி குறித்து வல்லுநர் குழு பரிந்துரையை அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு ஏற்றுக்கொள்ளவில்லை. மைய, மாநில அரசுகளுக்கிடையே நிதி நிலை உறவு பற்றிய திட்டத்தில் கண்டுள்ள வகையுரைகளுக்கு அரசமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்கள் பல திருத்தங்களை அனுப்பி வைத்தனர். கூட்டுரும வரிவருவாயும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்னும் ஏற்பாடு செய்யும் வகையில் திருத்தங்கள் செய்வதற்கு திருவாளர்கள் க. சந்தானம், எம். அனந்த சயனம் ஐயங்கார், டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், இம்மாநிலத்து அன்றைய நிதி அமைச்சர் திரு பி. கோபால ரெட்டி ஆகியோர் கருத்து தெரிவித்தனர். 1949 ஜூலையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் வரைவு நிதி வகையுரைகள்பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. அம் மாநாட்டில் இம் மாநிலத்தின் அன்றைய நிதி அமைச்சர், பகிர்வு நிதியில் கூட்டுரும வரியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று விரும்பினர். 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கூட்டுரும வரி மைய அரசுக்கும் மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்து கொள்ள உத்தேசிக்க வேண்டிய வரி இல்லை என்னும் காரணத்தினுல் திரு கே. சி. நியோகியால் இந்தக் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. 1949-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசமைப்புச் சட்ட மன்றத்தால் வகையுரைகள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்தப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது.* கூட்டுரும வரியை மாநிலங்களுடன் மைய அரசு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று திரு பி. தாஸ் வலியுறுத்தினர். ஆகவே, கூட்டுரும வரி மைய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டுமென்பதைத் தொடக்கக் கால முதற்கொண்டு, குறிப்பாக நமது மாநில பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது. கூட்டுரும வரி விதிப்பு பற்றிக்கருதுகையில், இணைப்பாட்சி ஏற்பட்ட பத்தாண்டுக்குப் பின்னர் இந்திய சமஸ்தானங்களுக்கு அவ்வரி நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் இணையான மொத்தத் தொகை ஒன்றை மைய அரசுக்குச் செலுத்த சமஸ்தானத்திற்கு உரிமை அளித்து அந்த வரியை சமஸ்தானமே விதிக்கும் அதிகாரத்தை அளிக்கவேண்டுமென்றும் பாராளுமன்ற இணைக் குழு கருத்து தெரிவித்தது. இது, அப்போதிருந்த நிலைமையை உத்தேசித்து பாராளுமன்ற இணைக்குழுவால் அளிக்கப்பட்ட தனிச் சிறப்புச் சலுகையாகும்.

* அ. ச. ம. வி. IX, பக்கங்கள் 210—223.

12. பகிர்வு நிதியிலிருந்து கூட்டுரும வரியை நீக்குவது பற்றி மாநிலங்கள் யாவும் குறை கூறி வந்துள்ளன. வருமான மீதான வரி என்பதில் கூட்டுரும வரியைச் சேர்த்துக் கொள்ளுமாறு நிதி ஆணைக்குழுக்களின் முன் மாநிலங்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வந்துள்ளன. ''1959—ம் ஆண்டு நிதிச் சட்டத்தினுல் வருமானவரிச் சட்டத்தில் செய்த மாற்றத்தின் விளைவாக, கம்பெனியார் செலுத்திவரும் வருமானவரி இப்போது கூட்டுரும வரியாக வகைப்படுத்தப் பட்டு, பகிர்வு நிதியில் இதுவரை இருந்து வந்த வருமான வரி நீக்கப்பட்டு விட்டது என்று எல்லா மாநிலங்களும் சுட்டிக்காட்டின'', என்று மூன்ருவது நிதி ஆணைக்குழு கூறியுள்ளது. மேலும், ''அரசமைப்புச் சட்டப்படி தங்களுக்கு உரிய பெருகிவரும் வரி வருவாயைத் தாங்கள் இழக்க நேரிட்டது என்பதாகவும் எல்லா மாநிலங்களும் முறையிட்டன''. நிதி ஆணைக்குழு செய்யும் பரிந்துரைகள் அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளுக்கும் பணி வரையறைகளுக்கும் அவசியமானவகையில் இணக்கமாகவே இருக்குமென்பதை மூன்ருவது நிதி ஆணைக்குழு மாநில அரசுகளுக்குத் தெளிவுற எடுத்துக்கூறியுள்ளது. நான்காவது நிதி ஆணைக்குழுவின் முன்னிலையில் மீண்டும் இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. மாநிலங்களுக்கு இணக்கமாக, பெருகி வரக்கூடிய எத்தகைய வரிவருவாய் இருக்கவேண்டுமென்று அரசமைப்புச் சட்டத் தயாரிப்பாளர்கள் கருதினுர்களோ அத்தகைய வரி விதிப்பின் முக்கியத்துவமே இப்போது அற்றுப்போய்விட்டதாக மாநிலங்கள் முறையிட்டன. மேலும், கூட்டுரும வரி வருவாய் 12 ஆண்டு காலத்தில் 600 சதவீதத்திற்கு மேல் பெருகிவந்திருக்கையில், வருமான வரிப் பகிர்வு நிதியில் இதற்கான நிகரான வளர்ச்சி 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது என்றும் ஆணைக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. ''கம்பெனிகள் செலுத்தும் வருமான வரியை மறுவகைப்பாடு செய்ததன் விளைவாகத் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை எவ்வகையிலாயினும் குறைப்பதன் அவசியத்தைப் பற்றி மாநிலங்கள் செய்துகொண்ட முறையீட்டுக்கு உரிய கவனம் செலுத்தவேண்டும்'' என்று நான்காவது ஆணைக்குழு குறிப்பிட்டது. ஐந்தாவது ஆணைக்குழுவின் முன்பும் மாநிலங்கள் இதைப்பற்றி மீண்டும் எடுத்துச் சொல்லின. மைய-மாநில அரசுகளுக் கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நிகர வருவாய், கூட்டுரும வரியில் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ கொண்டிருக்க வேண்டுமென்று மாநிலங்கள் சில கருத்து

தெரிவித்தன. மாநிலங்களின் இக்கருத்தை ஐந்தாவது ஆணைக்குழு நிராகரித்துவிட்டது. மேலும் மூன்றாவது, நான்காவது நிதி ஆணைக்குழுக்கள் மாநிலங்களுக்கு அதிகப்பங்கு ஒதுக்கியுள்ளதாகவும், இந்தக் காரணத்தினால் மட்டுமே மாநிலப் பங்குத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியமில்லைஎன்றும்மாநிலங்களுக்குநிதிஆணைக்குழுஎடுத்துச் சொல்லியது. ஐந்தாவது நிதி ஆணைக் குழுவுக்குக் குறிப்பிட்ட பணி வரையறைகளுள் ஒன்றின்படி, சில மாநிலங்கள் இந்திய ரிசர்வ் வங்கியிடம் அதிகாரமின்றி அதிகப்பற்று பெறும் பிரச்சினை குறித்து கருத்து அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கையில் கூட்டுரும வரியைப் பங்கிட்டுக் கொள்வது பற்றி ஐந்தாவது ஆணைக்குழு மீண்டும் குறிப்பிட்டது. இவ்வகையில் மைய அரசு எடுத்துக்கொண்ட ஒருதரப்பான நடவடிக்கையினால் தங்களது நிதிப்பற்றுக்குறை மேலும் அதிகமாகியது என்றும், கம்பெனி வருமான வரியிலிருந்து தங்களுக்கு சட்டப்படி உரித்தான பங்கை இழக்க நேரிட்டது என்றும் ஒருசில மாநில அரசுகள் நிதி ஆணைக்குழுவுக்கு எடுத்துக்கூறின. கூட்டுரும வரியாகக் கம்பெனிகள் செலுத்தும் வருமானவரி மறுவகைப் பாடு செய்யப்பட்டதால் பகிர்வு நிதி குறைந்து விட்டது என்பதை ஏற்றுக் கொள்கையில் ஆணைக்குழு, இதனால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் வகையில் மாநிலங்களுக்கு மைய அரசு மானியம் வழங்கியது என்று தெரிவித்தது. மூன்றாவது, நான்காவது நிதி ஆணைக்குழுக்கள் நிச்சயித்தபடி வருமானவரியில் அதிகப்பங்கு அளிக்கப்பட்டிருப்பதையும் மீண்டும் குறிப்பிட்டது. மைய—மாநில அரசுகளுக்கிடையே கூட்டுரும வரியிலிருந்து கிடைக்கும் வருவாய்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதற்காக நீண்டகாலமாகவே மாநிலங்கள் போராடி வந்திருப்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

13. அரசமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையில் (1969 அக்டோபர்-டிசம்பர்) வெளியான "இந்தியாவில் இணைப்பாட்சி முறையும், திட்டமிடுதலும்: அவற்றின் பரஸ்பர விளைவு" என்னும் தலைப்பிட்ட கட்டுரையில் திரு அமல் ரே, அரசமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருவதன் மூலம் பகிர்வு நிதியில் கூட்டுரும வரியையும் கொண்டு வரவேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார். வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தினால் ஏற்படும் வருமான அதிகரிப்பு பெரும்பாலும் பொருளாதாரக் கூட்டுருமத் துறையில் இருக்கும் என்றும், திட்டம் எனப்படுவது

ஒரு தேசியக்கூட்டு முயற்சியே என்றும், இதில் மைய, மாநில அரசுகள் இணைந்து செயல்படும் கூட்டாளிகள் என்றும் ஆகவே, அவர்கள் முன்னேற்றத்தின் பலன்களைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவதற்கு உரிமை உண்டு என்றும் குறிப்பிடுகிறார்.

திரு ஏ. கே. சந்தா கூறுவதாவது :—

* "வருமான வரி ஆதாயத்தைவிட கூட்டுரும வரி ஆதாயம் இப்போது (மேல்வரியால் தோராயமாகக் கிடைக்கும் ரூ. 11 கோடி உட்பட) அதிகமாகவே உள்ளது. இது முறையே ரூ. 222 கோடியும், ரூ. 218 கோடியும் ஆகும். வேறுவகையில் கூறுவதாயின், சொத்து வரி, நன்கொடை வரி போன்றவற்றைத் தவிர்த்து, வருமானத்தின் மீது கிடைக்கும் வரியிலிருந்து ஓராண்டில் கிடைக்கும் நிகர ஆதாயம் ரூ. 400 கோடியாகும். இதில் ரூ. 168 கோடி பகிர்வு நிதியாக அமையும். எனவே, மாநிலங்கள் வருமான வரி ஆதாயத்தின் மீதே நாட்டமாயிருப்பதில் வியப்பொன்றுமில்லை. நீக்கப்பட்ட இனங்களைப் பகிர்வு நிதி எல்லைக்குள் கொண்டு வருவதற்கான பல்வேறு ஆதாரங்களை எடுத்துக் காட்டி மாநிலங்கள் விவாதிக்கின்றன".

" 1961-ல் வருமான வரி மறு வகைப்பாடு கம்பெனி வருமான வரியை, கூட்டுரும வரியினத்திற்கு மாற்றிவிட்டது. இதனால் பகிர்வு நிதி கரைந்து மைய அரசின் வருவாய் கூடியுள்ளது. எதிர்பார்த்தபடி, இது மாநிலங்கள் மனக்கசப்பு அடையக்கூடிய விவகாரமாகிவிட்டது. சம்பந்தப்பட்ட அரசமைப்புச் சட்ட வகையுரையை மீறுவதாகிறது என்று சில மாநிலங்கள் குறைபடும் அளவுக்குச் சென்றுவிட்டது. எல்லா நிதிஆணைக் குழுக்களாலும் இது பயனற்ற முறையீடு என்று கைவிடப்பட்டது".

புது டில்லியில் 1970 மே 3-ம் நாள் மைய, மாநில அரசுகள் உறவு பற்றி இந்தியன் பார்லிமெண்டரி சங்கம் நடத்திய கருத்தரங்கில் திரு ஜி. எஸ். பட்டாச்சாரியா பேசுகையில், கூட்டுரும வரியும் கட்டாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். அவரது கருத்துப்படி, இப்போதுள்ள சமுதாய அமைப்பில்,

* அசோக் சந்தா எழுதிய "இந்தியாவில் இணைப்பாட்சி முறை" என்னும் ஆங்கில நூலில் (1965) 243-வது பக்கத்தைக் காண்க.

† அரசமைப்புச் சட்டம் மற்றும் நாடாளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகை (1969 அக்டோபர்-டிசம்பர்) 140-வது பக்கம் காண்க.

நமது பொருளாதாரத்தில் நிறுவனங்கள் அல்லது கம்பெனிகளின் செல்வாக்கு மேலும் மேலும் பெருகிவருகிறது; கம்பெனி வரிகள் மாநிலங்களால் கைவிடப்பட்டு மைய அரசுக்கென்றே ஒதுக்கப்படுமாயின், மாநிலங்கள் மேலும் பலவீனமடையும்.

14. தனிநபர் வருமானத்தின் மீது கிடைக்கும் வரி வருவாயைக் காட்டிலும் கூட்டுரும வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகமாகவே உள்ளது. வருமான வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் வருவாயில் கணிசமான பகுதி கூட்டுருமத் துறையினுல் கிடைக்கிறது. கூட்டுரும வரி என்பதன் கருப்பொருள் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிற ஒரு வரியாகும். 366 (6) உறுப்பில் 'கூட்டுரும வரி' என்னும் சொற்ருெடருக்கான பொருள்விளக்கத்திலிருந்து இது நன்கு தெரியவரும். வருமானத்தின்மீது விதிக்கப்படும் ஒருவரி என்று கூறி, பொருள்விளக்கம் தொடங்குகிறது. கூட்டுரும வரி முழுவதையுமே மாநிலங்களுக்கு ஒதுக்கவேண்டுமென்ருே அல்லது இந்த இனத்தை மாநில அதிகாரப்பட்டியலுக்கு மாற்றவேண்டுமென்ருே நாங்கள் கூறவில்லை. நாங்கள் கூறுவதெல்லாம், வருமானவரி எந்த நிலையில் கருதப் படுகிறதோ அதே நிலையில் கூட்டுரும வரி வைத்து எண்ணப் படவேண்டும்.

இக்கருத்து பற்றிய எமது பரிந்துரைக்கு நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறி குழுவினரது அறிக்கையிலும் ஆதரவு காணப்படுகிறது. கூட்டுரும வரி மாநில அரசுகளுடன் பங்கிட்டுக்கொள்ளக் கூடாதா என்பது ஆலோசிக்கப்படவேண்டுமென்றும் கம்பெனிகள் செலுத்தும் வருமான வரியைப் பகிர்வு நிதியிலிருந்து நீக்கியதன் அடிப்படையில் கூட்டுரும வரியைப் பங்கிடுவது குறித்து மீண்டும் கருதிப் பார்க்க வேண்டுமென்றும் கற்றறி குழு கருத்து தெரிவித்தது. இந்தப் பிரச்னை குறித்து ஆராய்வதற்காக வல்லுநர்கள் கொண்ட அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கற்றறி குழு பரிந்துரைத்தது. ஆராய்ச்சி செய்வதற்கான இனங்களில் கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி நிகர வருவாய்களை மாநிலங்கள் பங்கிட்டுக்கொள்வது பற்றிய இனமும் சேர்ந்திருக்க வேண்டும் என்று அக்குழு கருத்து தெரிவித்துள்ளது.

ஏற்றுமதித் தீர்வைகள் உள்ளிட்ட சுங்கவரிகள்

15. சுங்க வரியும் ஏற்றுமதித் தீர்வைகளும் சரக்குகள் மீதே நேரடியாக விதிக்கப்படுவது இல்லை. வரி விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் சரக்குகளின் போக்குவரத்தில் அதாவது அவற்றின் இறக்குமதி அல்லது ஏற்றுமதியின் போது தான் ஏற்படுகிறது. சம்பந்தப்பட்ட சரக்கின் மதிப்பின்பேரில் வரிவிதிப்பு அமைகிறது; ஆனால் இங்குக் கவனிக்கவேண்டியது என்னவெனில், வரிச்சுமை கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை மீது தான் விழுகிறது என்பதே. சுங்கவரியும் ஏற்றுமதித் தீர்வைகளும், ஆயத்தீர்வைகள் போன்றவையேயாம். ஆயத்தீர்வைகள் கட்டாயமாக இல்லாவிடினும் பகிர்ந்தளிக்கப்படக்கூடியவையே. நிதி ஆணைக் குழுக்கள்யாவும், பல்வேறு ஆயத்தீர்வைகளைப் பங்கிடுவது பற்றித் தீர்மானித்துள்ளன.

16. இந்திய அரசுச் சட்டத்தின் 140 (1) பிரிவின்படி, ஏற்றுமதித் தீர்வைகள், இணைப்பாட்சியால் விதிக்கப்பட்ட போதிலும், மைய அரசுச் சட்டம் ஏற்பாடு செய்தால் மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படத் தக்கவையாகும். ஆனால், நாங்கள் ஏற்கனவே தெரிவித்த படி அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய நிதி வகையுரைகளைப் பற்றி ஆலோசிக்க அரசமைப்புச் சட்ட மன்றம் நியமித்த வல்லுநர் குழு, ஏற்றுமதித் தீர்வைகளை பங்கிட்டுக்கொள்வது பற்றி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவே, இக்குழுவின் கருத்தை ஒரு கட்டத்தில் ஒப்புக்கொண்டது. நாடாளுமன்றம் ஏற்பாடு செய்தால், ஏற்றுமதித் தீர்வைகள் பங்கிடப் பெறுவதற்கு வகைசெய்து திருத்தம் கொண்டுவரவும் வரைவுக் குழு, அடுத்ததொரு கட்டத்தில் உத்தேசித்தது. செய்ய வேண்டியதைச் செய்யத் தவறியதைத் திருத்திக் கொள்ளவே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று குறிப்பிடப் பட்டது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 140 (1) பிரிவில் கண்டுள்ள வகையுரையைப் பின்பற்றி உறுப்பு இயற்றுவதுதான் இதன் கருத்தாகும். ஆனல், பகிர்வு நிதியிலிருந்து ஏற்றுமதித் தீர்வைகளை நீக்க வேண்டுமென்னும் மாறுபட்ட கருத்தை நிதி அமைச்சகம் உடையதாயிருந்தது. வரைவுக் குழு கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில், உத்தரப்பிரதேச முதலமைச்சரும், இம்மாநிலத்தின் அன்றைய நிதி அமைச்சரும் 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி அப்போதிருந்த நிலைமையே நீடித்து இருக்கலாம் என வாதிட்டனர்.

இதன்படி, இணைப்பாட்சிச் சட்டமன்றம் விரும்பினால் ஏற்று மதித் தீர்வைகள் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாம் என்பதாகும். அசாம் மாநில முதலமைச்சர் ஒருபடி மேலேயே சென்று ஏற்றுமதித் தீர்வை கடமையாகவே கருதப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென வாதிட்டார். எனினும், இக் கருத்துக்கு திரு கே. சி. நியோகி அவர்களும் மத்திய நிதி அமைச்சகமும் மறுப்பு தெரிவித்தனர். பகிர்வு நிதியிலிருந்து ஏற்றுமதித் தீர்வைகளை நீக்கவேண்டுமென்பதற்கு ஆதரவாகவே ஒருமித்த பொதுக் கருத்து, இருப்பதாக கூறி விவாதம் முடிக்கப்பெற்றது. ஆகவே, இந்திய அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்ட காலத்திலேயே, ஏற்றுமதித் தீர்வைகளில் ஒரு பகுதியை மாநிலங்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்னும் கோரிக்கை இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

17. ஏற்றுமதி மற்றும் சுங்க வரித் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருவாய்களையும் மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதுதான் நியாயமெனப்படுகிறது. இவை கணிசமான அளவு வருவாய் தேடிக்கொடுக்கக்கூடிய தீர்வைகளாகும். ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பெருகிவரும் பொருளாதார வளர்ச்சியில், சுங்க ஏற்றுமதித் தீர்வைகளிலிலிருந்து கிடைக்கும் ஆதாயமும் பெருகத்தான் செய்யும். இவ்விரு தீர்வைகளிலும் மாநிலங்கள் பங்கு பெறக்கூடாது என்பதில் நியாயமில்லை. சுங்கத் தீர்வையை மாநிலங்களுக்கு மாற்றலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. மாநிலங்களுக்கிடையிலும் அயல்நாடுகளுடனும் நடைபெறும் வர்த்தக நலனை முன்னிட்டு, சுங்கத் தீர்வைகளை மாநில அதிகாரப் பட்டியலுக்கு மாற்றுவது என்பது விரும்பத் தக்கதன்று. எனவே, ஏற்றுமதி மற்றும் சுங்கத் தீர்வைகள் மைய, மாநில அரசுகளுக்கிடையே கட்டாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கிறோம்.

இருப்பு மூலதன மதிப்பின்மீது வரி.

18. மைய அரசால் விதிக்கப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்படும் ஏனைய வரிகளில், விளை நிலம் நீங்கலான இருப்புகளின் மூலதன மதிப்பின்மீது விதிக்கப்படும் வரியும் ஒன்றாகும். 86-வது பதிவு விளை நிலங்களை மேற்படி வரி விதிப்பிலிருந்து திட்டவட்டமாக நீக்கியுள்ள போதிலும், அண்மையில் நாடாளுமன்றம், விளை நிலங்களுக்கும் சொத்து வரி விதிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இருப்பு மூலதன

மதிப்பின்மீது விதிக்கப்படுகிற வரி ஏறக்குறைய எஸ்டேட் வரி, முறையுரிமை வரி போன்றதேயாம். மைய அரசு விதித்து வசூலித்த போதிலும், எஸ்டேட் வரியும், முறையுரிமை வரியும் முழுவதும் மாநில அரசுகளாலேயே பயன்படுத்துபவையாகும். இயங்கா சொத்தின் பேரில் விதிக்கப்படுகிற எஸ்டேட் வரி இருப்பிட அடிப்படையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது நிதி ஆணைக் குழு பரிந்துரைக்கிணங்க எஸ்டேட் வரி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுவருகிறது. இதையேதான் அடுத்துவந்த மூன்று ஆணைக் குழுக்களும் பின்பற்றி வந்துள்ளன. மைய அதிகாரப்பட்டியலைச் சேர்ந்த 86-வது பதிவில் குறிப்பிட்டுள்ள வரிகள் பங்கிடப்படவேண்டியவை என்று பரிந்துரைக்கிறோம்.

1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி மாகாணத் துறையில் சேர்க்கப்பட்டு ஆனால் அரசமைப்புச் சட்டத்தின்படி மையத் துறையில் சேர்க்கப்பட்டுள்ள வரிகள்.

19. இதுவரையில் நாம், மைய அரசு விதித்து வசூலிக்கின்ற வரிகளைப்பற்றி விவரித்து வந்தோம். இவற்றின் வருவாய் முழுமையும் மைய அரசாலேயே பயன்படுத்தப்படுகிறது. இவ்வதிகாரத்தில் ஏற்கனவே சுட்டிக்காட்டியவாறு, 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி மாகாணத் துறையில் இருந்துவந்த பதிவுகளில் குறைந்தது நான்கு பதிவுகள் மைய அதிகாரப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அவை 84, 90, 92, 92-அ பதிவுகளாகும். சட்டமியற்றும் அதிகாரப் பகிர்வு பற்றி விவரிக்கும் அத்தியாயத்தில் சாராயம் கலந்த மருந்துகள், ஒப்பனைத் தயாரிப்புகள்மீது 84-வது பதிவுப்படி ஆயத்தீர்வை விதிப்பது பற்றி விவரித்துள்ளோம். இவ்வினத்தை மட்டும் மைய அதிகாரப் பட்டியலில் சேர்த்தது பற்றி இந்திய அரசமைப்புச் சட்டம் தயாரிக்கையில் சொல்லப்பட்ட காரணம் முடிவானதல்ல. அது மனநிறைவு தரக்கூடிய காரணமாகவுமில்லை. உட்கொள்ளத்தக்க சாராயம் கலந்த மதுவகைகள்மீது மாநிலங்கள் ஆயத்தீர்வை விதிக்கலாம். சாராயம் கலந்த மருந்து, ஒப்பனைத்தயாரிப்புப் பொருள்கள்மீதுள்ள ஆயத்தீர்வைகளை மாநிலங்களின் ஆளுகையிலிருந்து நீக்கியிருப்பதில் எவ்வித நியாயமுமில்லை. இந்த இனத்தைத் தாராளமாக மாநில அதிகாரப் பட்டியலுக்கு மாற்றலாம்.

20. பங்கு வாணிகக் களங்களிலும், எதிர்நோக்கு வாணிகங்களிலும் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்மீது, முத்திரைத்தாள் தீர்வை நீங்கலாக விதிக்கப்படும் வரி பற்றி 90-வது பிரிவு குறிக்கிறது. சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய அத்தியாயத்தில், 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி பங்குவாணிகக் களங்களும், எதிர்நோக்கு வாணிகங்களும் மாகாண அதிகாரப்பட்டியலின் 27-வது பிரிவின்கீழ் வந்திருப்பதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். 1935-ம் ஆண்டு சட்டத்தின்படி, பத்திரிகை விளம்பரங்கள் மீதான விற்பனை வரி விதிப்பு மாநில அதிகாரத்துறைக்கென்றே இருந்தது. 90, 92 பதிவுகளின்படி விதிக்கப்படும் வரிகள் இவ்வத்தியாயத்தின் பிறிதோரிடத்தில் ஆராயப்படுகின்றன.

21. உறுப்பு 286-ஐச் சேர்ந்த பகுப்புகள் (2), (3) ஆகியவற்றைத் தொடர்ந்தே பதிவு 92-அ இயற்றப்பட்டது. இப்பதிவின்கீழும், மேற்சொன்ன உறுப்பின்படியும், 1956-ம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தை (மையச் சட்டம் 74/1956) நாடாளுமன்றம் இயற்றியது. 1956-ம் ஆண்டு 74-வது மையச் சட்டத்தின் 9-வது பிரிவின்படி, மாநிலங்களிடையே வர்த்தகம் அல்லது வணிகத்தின் போது வணிகர் செய்யும் சரக்கு விற்பனைமீது அவர் செலுத்தக்கூடிய வரியை மைய அரசு விதித்து வாங்குகிறது. ஆனால் ஒரு மாநிலத்தில் இச் சட்டத்தின்படி ஒரு நிதி ஆண்டில் விதித்து வசூலிக்கப்படும் அபராதத் தொகை உட்பட வரியின் வருவாய் அந்த மாநிலத்திற்கே ஒதுக்கப்பட்டு அதுவே வைத்துக் கொள்ளவேண்டும். மாநிலங்களிடையே வர்த்தகம் அல்லது வாணிகத்தின்போது நடைபெறும் கொடுக்கல் வாங்கல்மீது இவ்வரி விதிக்கப்படுகிறது. எனவே, இப்பொருள் குறித்து அரசமைப்புச் சட்டத்திலோ மையச் சட்டத்திலோ திருத்தம் எதுவும் அவசியமில்லை. இப்போதுள்ள ஏற்பாடே தொடர்ந்து இருந்துவரலாம்.

22. மைய அதிகாரப்பட்டியலில் 84, 90, 92, 92-அ பதிவுகளில் ஒரு குறிப்பிட்ட கூறு பற்றி, அதாவது அவை மைய அதிகாரப் பட்டியலில் தொடர்ந்து இருந்துவருவதில் நியாயமுள்ளதா இல்லையா என்பது பற்றி நாம் இதுவரை ஆராய்ந்தோம். 84-வது பதிவு பற்றி விவரிக்கையில் பதிவில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் விவரிப்பதோடு, அதாவது சாராயம் கலந்த மருந்து, ஒப்பனைத்தயாரிப்புப்

பொருள் மீது வரிவிதிப்புகளை ஆராய்ந்ததோடு நிறுத்திக் கொண்டோம். மேற்சொன்ன பதிவுகளை மற்றொரு கோணத்திலிருந்தும் கருதிப்பார்க்கவேண்டியுள்ளது. 84-வது பதிவில் சொல்லிய மருந்துகள் மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள் மீதான ஆயத்தீர்வை, 91-வது பதிவில் சொல்லிய முத்திரைத் தாள் தீர்வை முழுவதையும் மாநிலமே பயன்படுத்துவதாயிருக்கையில், 84-வது பதிவிலுள்ள ஏனைய ஆயத்தீர்வைகள், மைய-மாநில அரசுகளுக்கிடையில் கட்டாயமாகப் பங்கிடுதற்கில்லை. (சட்டத்தின் மூலமாக) நாடாளுமன்றம் விருப்பப்பட்டால்தான் 272-வது உறுப்பின்படி அவை பங்கிடப் பெறலாம். 90, 92, 92-அ பதிவுகளிலும், 87, 88, 89-வது பதிவுகளிலும் சொல்லிய வரிகள்யாவும் ஒரு வகுப்பின் கீழ் அமைகின்றன. ஒரு நிதி ஆண்டில் இத்தகைய வரிகளின் நிகர வருவாய் முழுமையும் 269-வது உறுப்பின்படி, மாநிலங்களிடையே பகிர்ந்துகொள்ள ஒதுக்கப்படுகின்றன. ஆகவே இந்தப் பிரச்சினையை 272, 269 உறுப்புகளை வைத்தே கருதிப் பார்க்கவேண்டும்.

ஆயத் தீர்வைகள்.

23. இந்தியாவில் தயாரிக்கப்படுகிற அல்லது உற்பத்தி செய்யப்படுகிற புகையிலை மற்றும் ஏனைய பொருள்கள் மீதான ஆயத்தீர்வை, 84-வது பதிவின்கீழ் விதிக்கப்படத் தக்கவையாகும். ஆனால் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ள விலக்குகளுக்குட்பட்டு, நாடாளுமன்றம் சட்டம் இயற்றி ஏற்பாடு செய்தால் மைய மாநில அரசுகளுக்கிடையே 272-வது உறுப்பின்படி பகிர்ந்தளிக்கப்படலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படவேண்டிய நிதி பற்றிய வகையுரைகளை ஆய்ந்தவல்லுநர்குழு, புகையிலை மீதானஆயத்தீர்வை நிகர வருவாயில் 50 சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. வல்லுநர் குழுவின் இந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயத்தீர்வைகளை மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள அனுமதித்து வரைவு அரசமைப்புச்சட்டத்தில் வரைவுக் குழு வகையுரை ஏற்படுத்தியது. வரைவு உறுப்புபற்றிக் குறிப்பிடுகையில் திரு பி. கோபால ரெட்டி, மைய அதிகாரப் பட்டியலிலிருந்து மாநில அதிகாரப்பட்டியலுக்கு எல்லா ஆயத்தீர்வைகளையும் மாற்றவேண்டுமென்று கருத்து தெரிவித்தார். திருவாளர்கள் க. சந்தானம், எம். அனந்தசயனம் ஐயங்கார், திருமதி துர்காபாய் ஆகியோர் மைய ஆயத்தீர்வைகள் மைய அரசால் விதித்து வசூலிக்கப்பட்ட

போதிலும், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அவை கொடுக்கப்படவேண்டும் என்று கருத்து தெரிவித்தனர். இந்த உறுப்பைப் பற்றி அரசமைப்புச் சட்ட மன்றம் ஆலோசனை செய்த போது அசாம் மாநில முதலமைச்சர் திரு கோபிநாத்பர்தோலாய், வகையுரையில் உத்தேசித்துள்ள வருவாய்ப் பங்கீடு, ஒரு கடமையாகக் கருதிப் பங்கிடப்பட வேண்டுமேயன்றி நாடாளு மன்றச் சட்டத்தைப் பொறுத்துப் பங்கிடப்படக் கூடாது என்று கூறினர்.* இக்கருத்துக்கு மற்றும் இரு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.† ஆனால், இந்த வகையுரை தற்போதுள்ள வடிவில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. 272-வது உறுப்பின்படி ஆயத்தீர்வைப் பங்கீடு உரிமைக் கட்டளை முறையில் இருக்க வேண்டுமேயல்லாமல் இசைந்து தரும் பான்மையில் இருக்கக் கூடாது என்னும் கோரிக்கை தொடக்ககட்டங்களிலேயே எடுத்துச் சொல்லப் பட்டு வந்துள்ளது.

24. மாநிலங்களுக்கு உதவி செய்ய 272-வது உறுப்பை மேலும் விரிவாகப் பயன்படுத்துவதற்கு நிதி ஆணைக்குழுக்கள் பரிந்துரைத்துள்ளன. வளர்ச்சிப் பணிகள் மற்றும் இன்றியமையாத பணிகளுக்காக மாநிலங்களுக்கு நிதித் தேவை பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு, 272-வது உறுப்பில் சொல்லிய பங்கீட்டு முறை நியாயமானது மட்டுமல்லாமல் அவசியமானதுமாகும் என்னும் கருத்தை முதல் மூன்று நிதி ஆணைக்குழுக்கள் ஏற்றுக்கொண்டன. இக்கருத்தை நான்காவது நிதி ஆணைக்குழுவும் அப்படியே ஏற்றுக்கொண்டது. வருமான வரியைப் போலவே ஆயத் தீர்வையை ஒரே நிலையில் வைத்து அதாவது மைய-மாநில அரசுகளுக்கிடையே கட்டாயமாகப் பங்கிட்டுக் கொள்ளக் கூடியவையாக ஏற்று அரசமைப்புச்சட்டத் திருத்தம் கொண்டுவரலாம் என்பதை நான்காவது நிதி ஆணைக்குழுத் தலைவர் துணைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். ஐந்தாவது ஆணைக்குழு, தனது அறிக்கையின் 31-ம் பக்கத்தில் பத்தி 4.3-ல் இதுபற்றி ஆராய்ந்துள்ளது. வரிப்பங்கீடு எந்த அளவுக்குச் சுருங்கி விரியும் தன்மையுடையதோ (elasticity) அத்தன்மையில் மைய அரசும் மாநில அரசுகளும் பங்கு பெறமுடிகிறது என்றும் 275-ம் உறுப்பின்கீழ் அளிக்கப்படும் மானியங்கள் குறைந்த அளவிற்கே தேவைப்படும் என்றும் ஆணைக்குழு கருதுகிறது.

* அ.ச.ம.வி. IX, பக்கம் 228.

† அ.ச.ம.வி. IX, பக்கங்கள் 231, 237

25. ஆயத் தீர்வைக்குட்பட்ட பொருள்களின் எண்ணிக்கை பெருகி வருவதாக ஐந்து நிதி ஆணைக்குழுக்களின் அறிக்கையிலிருந்து காணலாம். ஆயத் தீர்வைகளில் மாநிலங்களின் பங்கும் அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதி ஆணைக் குழுக்களினால் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், சிறப்பு ஆயத் தீர்வைகள் விதிமுறைத் தீர்வைகள், 'செஸ்' வரிகள் ஆகியவை பகிர்வு நிதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. 1972–73, 1973–74 ஆண்டுகளுக்காக சிறப்பு ஆயத்தீர்வைகளும் பங்கிடப்படவேண்டுமென்று ஐந்தாவது நிதி ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. சிறப்பு ஆயத் தீர்வைகள் விதியாகக் கருதப்படக்கூடாது என்றும் அவை விதிவிலக்காகவே இருக்க வேண்டும் என்றும் நான்காவது, ஐந்தாவது ஆணைக்குழுக்கள் தெரிவித்துள்ளன. விதிமுறை ஆயத் தீர்வைகள், 'செஸ்' வரிகள் பகிர்வு நிதியில் சேர்க்கப்படாமலே வைக்கப்பட்டிருக்கின்றன. *ஆயத் தீர்வைகள் விற்பனை வரியைப் போன்றதே. மாநிலங்கள் பங்குபெறுவதனின்றும் சிறப்பு ஆயத் தீர்வைகளும் விதிமுறை ஆயத் தீர்வைகளும் நீக்கப்படுதற்குக் காரணமில்லை. புது டில்லியில் 1970 மே 3-ம் நாள் மையமாநில அரசுகள் உறவு பற்றிய இந்தியன் பார்லிமென்ட்டரி சங்கக் கருத்தரங்கில் திரு. ஜி. எஸ். பட்டாச்சாரியா பேசுகையில், ஆயத்தீர்வைகள் மாநிலங்களுக்கிடையே கட்டாயமாகப் பங்கிடப்பெறவேண்டும் என்று தெரிவித்தார். ஆயத் தீர்வைகள் உரிமைக் கட்டளைப்படி மாநிலங்களுக்கிடையே பங்கிடப்பெறுதல் வேண்டும் என்று இக்குழுவிற்கு கிடைத்த விடைகளிலிருந்து தெரிய வருகிறது. ஆயத் தீர்வைகள், சிறப்பு, விதிமுறை மற்றும் பிறவகை ஆயத் தீர்வைகள் யாவும் மாநிலங்களுடன் பங்கிடப்பெறும் பொருட்டு, பங்கீட்டு முறையைக் கட்டாயமாக்குகின்ற வகையில் 272-வது உறுப்புக்குத் திருத்தம் கொண்டுவரப்படலாம் என்று பரிந்துரைக்கிறோம்.

26. 'கூடுதல் ஆயத் தீர்வைகள்' தொடர்பான வரியாகும். இது. 1957-ம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (சிறப்பு முக்கியத்துவம் பெற்ற சரக்குகள்) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் இரண்டாவது இணைப்பட்டியைச் சேர்ந்த 2-வது பத்தியின் வரம்புரைக்கிணங்க சம்பந்தப்பட்ட பொருள்கள் மீது ஒரு மாநிலத்தில் விற்பனை

* [அக்டோபர்—டிசம்பர், 1969] அரசமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையில் (Journal of Constitutional and Parliamentary Studies Vol. III, No 4) பக்கம் 145-ல் திரு. எ. கே. சந்தா கூறியிருப்பதைக் காண்க.

வரி விதிக்கப்படுமாயின் இச்சட்டத்தின்படி அந்த மாநிலத்திற்குத் தொகை எதுவும் கொடுக்கப்படக் கூடாது. இந்த ஏற்பாட்டின் படி விற்பனை வரிகளை ஒப்படைத்து அவற்றிற்குப் பதிலாக மைய அரசு விதிக்கும் கூடுதல் ஆயத் தீர்வைகளை எடுத்துக் கொள்ள மாநிலங்கள் ஒப்புக் கொள்ளுவதென்னும் இந்த ஏற்பாடு தேசீய வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. திரு க. சந்தானம், இந்தியாவின் மைய-மாநில அரசுகள் உறவு பற்றி இந்தியப் பொது நிர்வாக நிறுவனத்தின்(Indian Institute of Public Administration) ஆதரவில் 1959 மார்ச்சில் ஆற்றிய பேருரைகள் ஒன்றில், தேசீய வளர்ச்சி மன்றம் எந்த முறையில் இந்த முடிவு எடுத்தது என்பது பற்றி விவரித்துள்ளார். அவர் கூறுவதாவது :—

''இத்தகைய வரிகளை ஒப்படைத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகக் கூடுதல் ஆயத் தீர்வைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் முடிவு (தேசீய வளர்ச்சி மன்றத்தின்) ஒரே கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக அறிகிறேன்; இதில் முதலமைச்சர்களில் பலர் தங்கள் அமைச்சரவைகளைக் கூட முழுவதும் கலந்து கொள்ளவில்லை. இவை அந்தரங்கச் செய்தியாகக் கருதப்படுவதால் உண்மை விவரம் தெரியவில்லை. ஆனால்,பொதுமக்களுக்கு ஏற்பட்ட எண்ணம் இதுதான். மாநிலச் சட்ட மன்றங்களின் கருத்தைத் திரட்ட எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. பத்திரிகை உலகிலும் இதைப் பற்றிய விவாதம் நடைபெறவில்லை.''*

'மாநில விற்பனைவரிக்குப் பதிலாக ஒரு பகிர்வுத் திட்டமுடன் உள்ள ஒரு மைய ஆயத்தீர்வைத் திட்டத்தை' 'ஒரு இன்றியமையாத வரிவார ஒப்பந்தமாக' இருப்பதாக நான்கவது நிதி ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. கூடுதல் ஆயத் தீர்வைகள் விதிப்பதில் பொதுவாக மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதை ஐந்தாவது நிதி ஆணைக்குழு குறிப்பிட்டு எதிர்காலத்தில் ஏனைய தீர்வை இனங்களுக்கு இந்த ஏற்பாட்டை நீட்டிப்பதற்கான வாய்ப்பு எதுவுமில்லை என்று கூறியுள்ளது. மைய-மாநில அரசுகள், தக்க மாறுதல்களுடன் இத் திட்டத்தைத் தொடர்ந்து வைத்து வர ஒப்புக் கொண்டாலொழிய இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து வைத்திருப்பது விரும்பத்தக்கதல்ல என்றும்தெரிவித்துள்ளது. இதுகாரியமாக விவாதங்களைத் தொடங்கிவைக்க வேண்டுமென்று அதுஆலோசனை கூறியுள்ளது. தேசீய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதல

* திரு க. சந்தானம் எழுதிய ''இந்தியாவில் மைய-மாநில உறவுகள்'' என்ற ஆங்கில நூலில் பக்கங்கள் 46—47.

லமைச்சர்கள் யாவரும், கூடுதல் ஆயத் தீர்வை நீக்கப்பட வேண்டும் என்றும், விற்பனை வரியை மீண்டும் விதிக்க வேண்டும் என்றும் கோரினர். இதுபற்றி, திட்ட ஆணைக் குழுத் துணைத் தலைவரை தலைவராகவும், அனைத்து மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது என்று 1970-ம்ஆண்டு ஜூன் மாதம் 12-ம் நாளிட்ட 'இந்து' பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருமனப்பட்ட வழிமுறைக் கொள்கை எதுவும் உருவாகாவிடினும், முதலமைச்சர்கள் விற்பனை வரி விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினாலும் மைய அரசு இந்தச் செயற்குறிப்புக்கு மாறாக நடக்காது என்றும் நிதிஅமைச்சகத்தின் அன்றைய ராஜாங்க அமைச்சர் திரு பி.சி. சேத்தி கூறியதாகவும் அதே பத்திரிகைச் செய்தியிலிருந்து தெரிகிறது. மாநில விற்பனை வரிக்குப்பதிலாக வரிவீதம் 10·8 சதவீதத்துக்கு உயர்த்தப்பட வேண்டுமென்னும் நிபந்தனைக்குட்பட்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் தொடர்ந்து விதிக்கப்படுவதற்கு முதலமைச்சர்கள்குழு ஒப்புக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது (1970-ம் டிசம்பர் மாதம் 29-ம் நாளிட்ட 'இந்து' பத்திரிகையைக் காண்க).

27. கூடுதல் ஆயத் தீர்வைகள் எடுக்கப்பட்டு, இங்குக் குறிப்பிட்டுள்ள சரக்குகளின் மீது விற்பனை வரியை மாநிலங்கள் மீண்டும் விதிப்பதற்கு அனுமதித்திருந்த போதிலும் மாநிலங்கள் வரி விதிப்பதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. 1956-ம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 74/1956) 15-வது பிரிவின்படி, மாநிலத்திற்குள்ளும், அறிவிக்கப்பட்ட சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதல் குறித்து ஒரு மாநிலத்தின் விற்பனைவரிச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வரிகள், விலையில் 3 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது. அத்தகைய வரிவிதிப்பு ஒரு கட்டத்திற்குமேற்படவும்கூடாது. இச் சட்டத்தின் 14-வது பிரிவு அறிவிக்கப்பட்ட பொருள்களைக் குறிப்பிடுகிறது. அவை, நிலக்கரி, பருத்தி, பருத்தித் துணிகள், தோலும் பதனிட்ட தோலும், இரும்பும், எஃகும் சணல், சர்க்கரை, புகையிலை, பட்டுத் துணிகள் முதலியனவை. இன்னும் கூறப்போனல், மாநிலத்துக்குள்ளேயே நடைபெறும் விற்பனை அல்லது கொள்முதல்களுக்கும் மேற்சொன்ன கட்டுப்பாடுகள் உள்ளன. ஆக, மாநிலங்களுக்கிடையேயும் மாநிலத்துக்குள்ளேயும் நடைபெறும் விற்பனை அல்லது கொள்முதல் மீதான வரி, 1956-ம் ஆண்டு மையச்சட்டத்தில் சொல்லிய நிபந்தனைகளுக்கு இணங்கியதாக இருக்கவேண்டும். கூடுதல்

ஆயத் தீர்வைகள் நீக்கப்படுவதால் மாநிலங்கள் முழுப் பலனை யும் அடையவேண்டுமானால், இத்தகைய கட்டுப்பாடுகள் நீக்கப்படுவது அவசியமாகிறது.

28. மையச் சட்டத்தின் 14, 15-வது பிரிவுகள், அரசமைப் புச் சட்டத்தைச் சேர்ந்த 286-வது உறுப்பின் (2), (3)பகுப்பு களுக்குச் சம்பந்தப்பட்டவையாகும். இந்தப் பகுப்புகள், (1)-வது பகுப்பில் சொல்லியவழிகளில் சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதல் எப்போது நடைபெறுகிறது என்பதை அறுதியிடும் கோட்பாடுகளைச் சட்டத்தின் மூலமாக இயற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்குகின்றன. மாநிலங் களுக்குஇடையேநடைபெறும் வர்த்தகம்அல்லதுவாணிபத்தில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் என்று சட்டத்தின் மூலம் அறிவிக்கிற அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட பிறகு, ஒரு மாநிலத்தின் விற்பனை வரிச்சட்டம், நாடாளுமன்றம் சட்ட மியற்றிக் குறிப்பிடுகிற வரிவிதிப்புமுறை, வரிவீதம் குறித்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டுள்ளதாகும். மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரே வரி வருவாய் விற் பனை வரியாகும். இது மேலும் ஆதாயம் விரிவாகக் கூடிய வரியும் ஆகும். (3)-வது பகுப்பின்படி நாடாளுமன்றத்தின் அதிகாரம் மாநிலங்களுடன் கலந்தாலோசிக்காமல் செயல் படுத்தப் படக்கூடாது. அன்றியும் அவ்வாறு கலந்தாலோ சிக்காமல் இப்பகுப்பின்படி புதிய அறிவிப்பும் வெளியிடக் கூடாது. ஒரு மாநிலத்தை அல்லது பல மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய மசோதா நாடாளுமன்றத்தில் முன்னுரைக்கப் படுவதற்கு அத்தகைய மசோதாக்களை ஆய்ந்து பார்க்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பெறும் மாநிலங்களிடை உறவு மன்றம் அமைக்க வேண்டுமென்றும் தனியே பரிந்துரைத் துள்ளோம். இந்தப் பரிந்துரை செயல்படுத்தப்படுமாயின், 286 (3) உறுப்பு குறித்த எமது பரிந்துரையின் நோக்கம் நிறைவேறும்.

வசூல் பிரச்சினை எளிதாகும் என்னும் காரணத்தால், பல பொருள்கள் மீதான விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டும் என்னும் வகையில் நான்காவது நிதிஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப் பட்ட பரிந் துரைகளைப் பற்றி அதன் குழுத் தலைவர் தமது துணைக் குறிப் பில் தெரிவித்துள்ளார். இந்த வழிமுறைகளுக்கு மாநிலங் களில் ஆதரவு இருக்காது என்பதையும் அவர் தெரிவித்துள் ளார். பொறுப்பு அடிப்படையில் ஆயத் தீர்வைகள் அனைத்

தும் பங்கிடப்படும் தீர்வைகளாக அரசமைப்புச் சட்டத் திருத்தம் மூலமாகச் செய்யப்படுமாயின், விற்பனை வரி ஆயத் தீர்வைகள் இணைப்புக்கு மாநிலங்கள் ஒப்புக்கொள்ளக் கூடும் என்னும் கருத்தையும் இச் சந்தர்ப்பத்தில் அவர் குறிப்பிட்டார்.

மைய அரசு விதித்து, வசூலித்து, ஆனால் மாநிலங்களுக்கு ஒப்படைக்கும் வரிகள்.

29. 87, 88, 89, 90, 92, 92அ பதிவுகளின்கீழ் விதிக்கப்படத்தக்க தீர்வைகள், வரிகள் பற்றி நாம் இப்போது ஆராய்வோம். இத்தகைய தீர்வைகளும் வரிகளும், 269-வது உறுப்பின்படி இந்திய அரசால் விதித்து வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்த உறுப்புக்கு நிகராக, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 137-வது பிரிவு உள்ளது. வரிவீதம் ஒரே சீரான அடிப்படையில் வைப்பதற்காக, 137-வது பிரிவு அவசியமாகிறது என்று பாராளுமன்ற இணைக்குழு தெரிவிக்கிறது. உண்மையிலேயே இத்தகைய வரிகள் மாநில வரிவருவாய்க்கான சிறந்த வாயில்களாகும். ஆனால், அவற்றின் வரிவிதிப்பு, வரி வீதங்கள் சுமை, வசூலிப்பு குறித்த சட்டம் ஒரே சீரானதாக இருக்கும்பொருட்டு இத்தகைய வரிகள் மைய அதிகாரப் பட்டியலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 269-வது உறுப்பில் சொல்லியுள்ள இனங்களில், இரண்டுவரி விதிப்புகள் மட்டுமே இப்போது நடைமுறையில் உள்ளன : அவை, எஸ்டேட் வரி, மாநிலங்களுக்கிடையில் நடைபெறும் வர்த்தகம் அல்லது வாணிகத்தின்போது விற்பனை அல்லது கொள்முதல் மீது வரிகள் ஆகும். 269-வது உறுப்பில் சொல்லியுள்ள ஒப்படை வரிகள் போதியவாறு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதாக மாநிலங்கள் குறைகூறி வந்திருக்கின்றன. நான்காவது நிதி ஆணைக்குழுவும் இந்தக் குறையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் இந்தக் கருத்தை நன்கு விளக்கியுள்ளது. இதை ஒரு நியாயமான வாதமாகவும் கருதியது. இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநிலங்களின்தேவைகளை மைய அரசு புறக்கணிக்கத் தூண்டுகிற எண்ணம் தவிர்க்க முடியாததாகிறது என்ற கருத்தைச் சில மாநிலங்கள் கொண்டுள்ளன என்பதையும் ஆணைக்குழு குறிப்பிடுகிறது. அரசுகளுக்கிடையே நிதி உறவு பொதுவாக மறு ஆய்வு செய்யப்படவேண்டுமென்றும், அவசியப் பட்டால் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் செய்யப்படவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பொதுவாக

நிதிநலன் குறித்த எல்லா விவகாரங்களிலும், மாநிலங்களுக்கு இடையேயும், மைய-மாநில அரசுகளுக்கிடையேயும் அடிக்கடி கலந்து பேசி ஆலோசனைகள் நடைபெற வேண்டும் என்கிற பொதுவான கருத்து நிலவுகிறதாகவும் ஆணைக்குழு குறிப்பிடுகிறது. மைய-மாநில உறவு பற்றி ஆய்வதற்கு நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவால் 1967-ல் நியமிக்கப்பட்ட கற்றறி குழு, 269-வது உறுப்பில் சொல்லிய வரிகளை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்கான சாத்தியக் கூறு பற்றியும், நாட்டின் பொருளாதாரத்தில் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் விரிவான ஆராய்ச்சி நடத்தப்படவேண்டுமென்று கருத்து தெரிவித்தது. இந்த ஆராய்வுப் பணியை நிதிவிசாரணைக் குழுவிடமாவது அடுத்த நிதி ஆணைக்குழுவிடமாவது ஒப்படைக்குமாறு இது பரிந்துரைத்தது. 269-வது உறுப்பில் சொல்லிய வரிகள் தீர்வைகளிலிருந்து வருவாய் திரட்டுவதற்கான வாய்ப்பு குறித்துப் பரிந்துரைகள் செய்யுமாறு ஐந்தாவது நிதி ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆணைக்குழுவும் அதன் அறிக்கையில் இதற்கென்று ஒரு முழு அத்தியாயத்தையே ஒதுக்கி விளக்கியுள்ளது. ஏற்கனவே விதிக்கப்பட்டு வருகிற வரிகள் நீங்கலாக 269-வது உறுப்பில் சொல்லிய வரிகளை விதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் என்னும் தலைப்பில், ஐந்தாவது நிதி ஆணைக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் ஆராய்ச்சி நடத்துவது அனுகூலமாகும்.

(1) முறையுரிமை வரிகள்.

எஸ்டேட் வரிகளோடு முறையுரிமை வரிகள் விதிப்பதில் குறிப்பாக எவ்வித அனுகூலமும் இல்லை என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. முறையுரிமை வரியும், எஸ்டேட் வரியும் ஒரே பொருளின் மீது அதாவது சொத்துரிமையாளர் இறப்பதன் பேரில் மற்றொருவருக்கு போய்ச்சேருகிற சொத்தின் மீது விழுகின்ற காரணத்தை ஆணைக்குழு காட்டுகிறது. ஆணைக்குழு ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, முறையுரிமையர் ஒவ்வொருவருக்கும் வந்தடைகிற சொத்தின் பகுதிகள் மீது விதிக்கப்படுவது முறையுரிமை வரியாகும்; ஆனால் எஸ்டேட் வரியென்பது, எஸ்டேட் முழுவதற்கும் மொத்தமாக விதிக்கப்படும் வரியாகும். இவ்விரு நேர்வுகளிலும் ஏற்படும் வரிச்சுமை முற்றிலும் வேறுபட்டதாகும். ஒரே பொருளுக்கு இருமுறை வரி விதிப்பு கூடாது என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். இந்த வாதத்தை அப்படியே ஏற்றுக்கொண்டாலும், முறையுரிமை வரிகள் விதிக்காமலிருப்

பதற்கு ஒரு காரணமாக அமையாது. இப்போதுள்ள வரி விதிப்பு அமைப்புமுறைப்படி, ஒரே பொருளுக்குப் பலமுறை, பல்வேறு ஆள்வைகளால் வரிவிதிக்கப்படுகிற நிகழ்வுகளும் உண்டு. எடுத்துக்காட்டாக ஆயத்தீர்வைகளும், விற்பனை வரிகளும் ஒரே பொருளுக்கு விதிக்கப்படுகின்றன. மேலும் இயங்காச் சொத்தின்மீது உள்ளாட்சி மன்றத்தால் சொத்துவரி விதிக்கப்படுகிறது ; நகர்ப்புற நிலவரி இருந்தால், அது மாநில அரசால் விதிக்கப்படுகிறது ; மீண்டும் செல்வ வரி, வருமான வரி ஆகியவை அதே சொத்துக்கு விதிக்கப் படுகின்றன. ஆகவே, முறையுரிமை வரி குறித்து விரிவாக ஆராயப்படுவது அவசியம் என்பதே எமது கருத்து.

(2) இரயில், கப்பல், விமானம் மூலம் செல்லும் சரக்குகள் அல்லது பயணிகள் மீது விதிக்கப்படுகிற பயண முடிவிடத்து வரி.

(அ) ரயில்மூலம் செல்லும் சரக்குகள் மீது வரி.—ரயில் மூலம் செல்லும் சரக்குகள் மீது விதிக்கப்படும் பயண முடிவிடத்து வரி விதிக்கக்கூடாது என்று ஆணைக்குழு சொல்வதற்கு ஒரே காரணம், சரிவர வசதியாக வரிவிதித்து வசூலிக்கமுடியவில்லை என்பதே. முடிவிடங்களுக்கு ஏற்றவாறு பல்வேறு வீதங்களில் வரி வசூலிக்கவேண்டியுள்ள தனித்தனி வரவுக் கணக்குகள் ஒவ்வொரு மாநிலத்துக்கும் மாற்றப்பட வேண்டும். ஆனல் இதற்குமாருக, நகரடைப்பொருள்வரி (octroi) அல்லது பயணமுடிவிடத்து வரிகளைத் தக்கவாறு மாற்றியமைப்பது அல்லது தங்கள் எல்லைக்குள் வந்துசேரும் சரக்குகளின் விற்பனை அல்லது பயன்மீது யாதேனும் வரியோ விதிப்பது என்பது நகராட்சி மன்றங்களுக்கு மிகவும் எளிதாக இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளது. இந்த வரிவருவாய் முழுவதும் உள்ளாட்சி மன்றங் களுக்குப் போய்ச்சேருகிறது என்றும், அதிலிருந்து எந்த விதமான பலனையும் மாநில அரசுகள் பெரு என்றும் அனுமானித்துக் கொண்டே ஆணைக்குழு இது பற்றி ஆராயத் தொடங்கிற்று. இந்த அனுமானம் எந்த அளவுக்குச் சரி என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. வரி வருவாயை உள் ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்குவதாகவே வைத்துக் கொண்டாலுங்கூட, அந்த அளவுக்கு அம் மன்றங் களுக்கு மாநில அரசு நிதி கொடுக்கவேண்டிய பொறுப்பு குறையும். இக்கருத்து ஆணைக்குழுவாலும் ஏற்றுக்கொள் ளப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு ஒதுக்கப்படவேண்டி யுள்ள, அதிலும் முக்கியமாக 269-வது உறுப்பில் குறிப்

பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த ஒரு வரியை விதித்து வசூலிப்பதில் நிர்வாகச் சிக்கலும், கணக்குவைப்பும் ஓரளவு இருக்கத்தான் செய்யும். ஆனால், வரிவிதிக்கக் கூடாது எனச் சொல்வதில் நியாயமில்லை.

(ஆ) ரயில்மூலம் செல்லும் பயணிகள் மீது விதிக்கப்படும் பயண முடிவிடத்து வரி.—இந்த வரிவிதிப்பின் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 5 கோடி வருவாய் கிடைக்குமென்று ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது. ஆனால், வரிவிதிப்பிலுள்ள நிர்வாக இடர்ப்பாடுகள், வசதிக்குறைவு காரணமாகவும், சாலை வழியாகச் செல்லும் பயணிகள் மீது வரிவிதிக்க வேண்டிய அவசியத்தாலும், இந்த வரிவிதிப்பதில் பயனேதுமிருக்காது என்று தெரிவித்துள்ளது. இம்மாநிலத்தில் சாலைப்போக்குவரத்து ஏற்கனவே பல வரிவிதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. குறைந்தது சோதனை அடிப்படையிலாவது இந்த வரிவிதிப்பது அவசியமாகும். சாலைப் போக்குவரத்துமீது இதற்கு நேர் நிகரான வரி விதிக்கப் படாத காரணத்தை முன்னிட்டு, ரயில் பயணப்போக்குவரத்து இந்த வரி விதிப்பால் பாதிக்கப்படுமாகில், ஐந்தாண்டுக்குப் பிறகு இதைப் பற்றி மீண்டும் கருதிப் பார்க்கலாம். சாலைப்போக்குவரத்தின் மீதும் மாநிலங்கள் ஒரே சமயத்தில் வரி விதிக்க வேண்டும் என்னும் ஒரே காரணத்தினுல், வரி விதிப்பே கூடாது என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. புண்ணியத்தலங்களிலிருந்து அல்லது புண்ணியத்தலங்களுக்கு அல்லது கண்காட்சிகள், பெருவிழாக்கள் அல்லது பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களிலிருந்து அல்லது இடங்களுக்கு ரயிலில் பயணம் செய்பவர்கள்மீது, 1956-ம் ஆண்டு ரயில் பயணிகள் சட்டத்தின் (மையச் சட்டம் 69/1956) படி விதிக்கப்படுகிற பயணமுடிவிடத்து வரி நடைமுறையில் உள்ளது. இச் சட்டத்தைப் பற்றியும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. ஏற்கனவே வரி ஒன்று நடைமுறையில் உள்ளதால் எமது கருத்து மேலும் வலிவுறுகிறது. நாம் வேண்டுவது எல்லாம், ரயிலில் செல்லும் எல்லா வகையான பயணிகளுக்கும் இவ்வரி விதிக்கப்படவேண்டும் என்பதே.

(இ) கடல்வழி செல்லும் சரக்குகள் மற்றும் பயணிகளுக்கு விதிக்கப்படுகிற பயண முடிவிடத்து வரி.—கப்பல் தளப் பயணிக்கு ரூ. 2-லிருந்து ரூ. 5 வரையிலும், கப்பல் முதல் வகுப்பு அல்லது கப்பலறைப் பயணிகளுக்கு ரூ. 10-லிருந்து 15 வரையிலும் இவ்வரி விதிக்கப்படுமாகில் இதனால்

கிடைக்கக்கூடிய வரி வருவாய் அரைகோடி ரூபாய்க்கு மேற்படாது. ஆகவே. இத்தகைய போக்குவரத்துக்கு மட்டுமே இந்த வரி விதிப்பதில் நியாயம் எதுவுமில்லை என்று ஆணைக்குழு கூறியுள்ளது. இந்தப் பரிந்துரையை, ரயில் வழி செல்லும் சரக்குகள் மீதும் பயணிகள் மீதும் விதிக்கப்படுகிற பயணமுடிவிடத்து வரி குறித்த பரிந்துரையுடன் சேர்த்துக் கருதிப்பார்க்கவேண்டும். மற்ற இருவரிகளையும் கருதிப்பார்க்கையில், கடல் வழி செல்லும் சரக்குகளுக்கும் பயணிகளுக்கும் பயணமுடிவிடத்து வரி விதிப்பதில் நியாயமுள்ளது. கடல்வழி செல்லும் சரக்குகள் அல்லது பயணிகள் மீது பயணமுடிவிடத்து வரி கூடாது என்பதற்கு ஆணைக்குழு சொல்லும் மற்றொரு காரணம் கடல் வழி செல்லும் சரக்குகளுக்கு துறைமுகக்கட்டணமும் ஏனைய கட்டணங்களும் ஏற்கனவே விதிக்கப்படுகின்றன என்பதாகும். முறையுரிமை வரி விதிப்பு குறித்து இதைப்போன்ற வாதமொன்றைப் பற்றி இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் எங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளோம்.

(ஈ) விமானத்தில் செல்லும் சரக்குகள், மற்றும் பயணிகள் மீது விதிக்கப்படுகிற பயண முடிவிடத்து வரி.—தற்போது முக்கியமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பல்லோரைக் கவர்ந்து சிவில் விமானப் போக்குவரத்து வளரவேண்டிய இச் சந்தர்ப்பத்தில் இந்த வரிவிதிப்புக்கு எந்தவித வாய்ப்புமில்லை என்று இந்திய அரசும் விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் கூறும் வாதம் பற்றி இந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. மிதமாக வரிவிதிப்பதைக் கைவிடுவதற்கில்லை என்பதை ஏற்றுக்கொண்டாலும், ஆண்டுவருவாய் ரூ. 2½ கோடி மட்டுமே கிடைக்கிறது என்னும் காரணத்தினல் இந்த வரிவிதிப்பை ஆணைக்குழு பரிந்துரைக்கவில்லை. இந்த வாதமும் ஏற்புடையதாயில்லை. இங்குக் கருத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினை ஆதாயத்தை மட்டுமே பொறுத்ததன்று. வரி ஒரு முறை நடைமுறைக்கு வந்தபின், வரி அதிகரிப்புக்கும் வரி மாற்றத்திற்கும் வாய்ப்பு எப்போதுமே உள்ளது. இந்த முடிவைச் செயற்படுத்தத் தொடங்க வேண்டும். விமானவழி செல்லும் சரக்குகளைப் பொறுத்த வரையில், விமானச் சரக்குப் போக்குவரத்து இன்னும் போதுமான அளவு வளர்ச்சியுறுத இந்தக் கட்டத்தில் வரிவிதிப்பு அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. விமான மூலம் சரக்குப் போக்குவரத்து நடைமுறையில் நிலைத்துவிட்டது. எனவே, இந்த வரித்துறையை பயன்படுத்தாமலிருக்கக் காரணமில்லை ; சிறிது தொடங்கியாவது வைக்கலாம்.

(3) ரயில்வே கட்டணங்கள் மற்றும் சரக்குக் கட்டணங்கள் மீது வரிகள்.

(i) ரயில்வே கட்டணங்கள் மீது வரி.—ரயில் கட்டணங்கள் மீது வரி, 1957-ம் ஆண்டு ரயில் பயணிக் கட்டணங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/1957) விதிக்கப்பட்டது. இந்த வரி வருவாய், 1957-ம் ஆண்டு எஸ்டேட் வரி மற்றும் ரயில் பயணிக்கட்டணங்கள் (பகிர்ந்தளித்தல்) சட்டத்தின் (மையச் சட்டம் 57/1957) 5-வது பிரிவில் விதித்துள்ள சதவீதங்களின்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்துள்ளன. 1961-ம் ஆண்டு ரயில் பயணிக் கட்டணங்கள் (ரத்து) சட்டத்தினால் (மையச் சட்டம் 8/1961) இந்த வரி நீக்கப்பட்டது. இச் சட்டம், 25/1957-ம் எண் மையச் சட்டத்தை ரத்து செய்து, 57/1957-ம் எண் மையச் சட்டத்தை மாற்றியமைத்தது. எஸ்டேட் வரி பகிர்ந்தளிக்கப் பொருந்தும் வகையில் மட்டுமே 57/1957-ம் எண் மையச் சட்டம் மாற்றியமைக்கப் பட்டது. 57/1957-ம் எண் மையச் சட்டம், 9/1962-ம் எண் மையச் சட்டத்தினால் ரத்து செய்யப்பட்டது. எஸ்டேட் வரியின் நிகர வருவாய் மாநிலங்களுக்கிடையே பங்கிடப் பெறுவதற்குத் தற்போது இச் சட்டம் வகை செய்கிறது.

1957-ம் ஆண்டு 25-ம் எண் மையச் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்படுவது பற்றிய கோட்பாடுகள் குறித்து பரிந்துரைகள் அளிக்குமாறு இரண்டாவது நிதி ஆணைக்குழு முதன்முதலாகக் கேட்டுக் கொள்ளப் பட்டது. இதன்படி, இது வரி வருவாய் மாநிலங்களுக் கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தது. பல்வேறு மண்டல ரயில்வேக்களுக்கும், ஒவ்வொரு மண்டலத்திலுமுள்ள பல்வேறு வகை இருப்புப் பாதைகளுக்குமிடையே போக்குவரத்துச் செறிவில் ஏற்படுகிற வேறுபாட்டுக்கு உரிய இடமளித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் ரயில் வழித்தட மைல் அடிப்படையில் சரிநிகராக முடிவு செய்யும் விகிதாச்சாரங்களின்படி கட்டண ஆதாயங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். வரிவருவாய், மாநில வாரியாகக் கிடைக்கும் ஆதாயங்களின் விகிதாச்சாரப்படி பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்னும் கருத்து தெரிவித்துள்ளது. மேலும், 1957–58-ல் இருந்து ஐந்தாண்டு காலத்திற்கு பொருந்துகிற ஒவ்வொரு மாநிலத்தின் பங்குச் சதவீதத்தையும் குறிப்பிட்டுள்ளது.

மூன்றாவது நிதி ஆணைக்குழு அமைக்கப்பட்ட பிறகு 1961-ல் சட்டம் இயற்றியதன் மூலம் பயணக் கட்டணவரி நீக்கப்பட்டதை ஏற்கனவே நாம் தெரிவித்துள்ளோம்.

1958–59, 1959–60 ஆகிய இரு ஆண்டுகளின் சராசரி வசூலிப்பைக் குறிப்பிட்டு 1961–66 ஐந்தாண்டுக் காலத்திற்காக ஆண்டொன்றுக்கு இதற்கெனத் தனி மானியமாக ரூ. 12.5 கோடி மாநிலங்களுக்கு ஒதுக்குவதென்று மைய அரசு முடிவு செய்தது. பணி வரையறைகளில் ஒன்றிற்கிணங்க, மூன்றுவது நிதி ஆணைக்குழு, இழப்பீடு அடிப்படையில், மாநிலங்களை ஒரே நிலையில் முன்பிருந்தவாறே வைத்து வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. மாநிலங்கள் 269-வது உறுப்பின்கீழ், சட்டப்படித் தங்களுக்கு உரித்தான வரிவருவாயை இழக்க நேரிட்டதாகக் குறைபடுவதையும் மூன்றுவது நிதி ஆணைக்குழு குறிப்பிட்டது. இத் தனி மானியம் (*ad hoc* grant) விருப்ப மானியமாகையால், கொடுப்பதை எச்சமயத்திலும் நிறுத்திக் கொள்ளலாம் என்று ஆணைக்குழுவிடம் மாநிலங்கள் முறையிட்டன.

இம்மானியம் இழப்பீடு அடிப்படையில் அமையவேண்டுமென்று மூன்றுவது நிதி ஆணைக்குழு கொண்டுள்ள கருத்தை நான்காவது ஆணைக்குழு ஒப்புக்கொண்டது. ஒரு குறிப்பிட்ட அளவில் மானியத்தை முடிவு செய்ததால் விரிவடையக் கூடிய வளமிக்க வரிவருவாயைத் தாங்கள் இழக்க நேரிட்டது என்று மாநிலங்கள் ஒருமித்து நான்காவது நிதி ஆணைக்குழுவிடம் முறையிட்டுக்கொண்டதுடன், இணைப்புக் காலம் தொடங்கி ரயில் பயணிக் கட்டணம் அதிகரித்த விகிதாச்சாரத்தின்படி மானியத்தின் அளவு உயர்த்தப்படவேண்டுமென்றும் வலியுறுத்தின. ஆண்டு மானியத் தொகை முடிவு செய்யப்பட்டு விடுவதால், விரிவடையக்கூடிய வளமிக்க வருவாயைத் தாங்கள் இழப்பதாக மாநிலங்கள் ஐந்தாவது நிதி ஆணைக்குழுவிடமும் முறையிட்டன. பயணக் கட்டணங்களிலிருந்து கிடைக்கும் ஆதாயங்களின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு மானிய அளவை ஆண்டு தோறும் அதிகப்படுத்த வேண்டும் என்று இவை வலியுறுத்தின. மாற்று ஏற்பாடாக இந்த வரியை மீண்டும் கொண்டு வருவதற்குக்கூட சில மாநிலங்கள் கருத்து தெரிவித்தன.

இந்த முறையீடுகளைப்பற்றி விவரிக்கையில் ஐந்தாவது நிதி ஆணைக்குழு, முதல் மூன்று ஆண்டுகளில் கிடைத்த வரித் தொகை அடிப்படையில் மானியம் முடிவு செய்யப்பட்டிருக்குமாயின் மானியத்தின் அளவு ரூ. 12.5 கோடிக்கும் அதிக

மாகவே இருந்திருக்கவேண்டும் என்று தெரிவித்தது. அடுத்து இந்த மானியத்தின் அளவு 1965-ல் மாற்றியமைக்கப் பட்டது. இதுவும் பயணக் கட்டண ஆதாயங்களின் அதிகரிப்பைப் பொறுத்து அமையாமல் பொதுவாக பயணி களின் போக்குவரத்து அடிப்படையில் முடிவுசெய்யப்பட்டது. வரிக்குப் பதிலாக அறுதியிட்ட மானியம் கொடுக்கப்படுவ தால், 269-வது உறுப்பின்படி விதிக்கப்பட்டு கிடைக்கும் வருவாய் முழுவதும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படக்கூடிய அளவுக்கு மாநிலங்கள் இதனல் பலன் பெறுவதில்லை என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வரியை மீண்டும் கொண்டு வந்து விதிப்பதில் நியாயமிருக்கிறது என்று மாநிலங்கள் விருப்பப்படுவதை இது கருத்தில் கொண்டது. ஆனல், ரயில்வே நிதி நிலை நிறைவளிப்பதாயில்லையென்றும், அவர் களுக்குச் செலவு அதிகரித்து வருகிறதென்றும் குறிப்பிட்டு, முடிவாக, ரயில் பயணக் கட்டணங்கள்மீது வரி மீண்டும் விதிப்பதற்கான வாய்ப்பு எதுவுமில்லை என்று ஆணைக்குழு தெரிவித்தது. எனினும், தக்கதொரு சமயத்தில் மைய அரசு இது குறித்து மீண்டும் மறு ஆய்வு செய்யலாம் என்று கருத்தறிவித்தது.

269-வது உறுப்பில் குறிப்பிட்டுள்ள ஏனைய வரிகளைப் போலவே, ரயில் கட்டணங்கள்மீதான வரி மாநிலங்கள் பயன் பெறுவதற்கென்றே உத்தேசிக்கப்பட்ட வரியாகும். ரயில்வே நிதி நிலை நிறைவளிப்பதாயில்லை என்னும் காரணத்துக்காக மாநிலங்கள், அரசமைப்புச் சட்டப்படி தங்களுக்குரிய வரியை இழக்க நியாயமில்லை. இவ்வாறு விதிக்கப் பட்டு வசூலிக்கப்படுகிற வரி மாநிலக் கருவூலத் திற்குச் செல்கிறது. எனவே, வரி மீண்டும் விதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இந்த வரிக்குப் பதிலாக, மானிய அளவை அதிகரிப்பது பொறுத்தமட்டில், மாநிலங்கள், ரயில்வே துறையினர் ஆகியோரது கருத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு இவ்வாணைக்குழு ரயில்வே மாநாட்டுக் குழுவை விரும்பிக் கேட்டுள்ளது. இந்த வரி ஒரு காலத்தில் நடைமுறையில் இருந்துவந்திருக்கிறது. அதை நிறுத்திவிடுவதில் எவ்வித நியாயமுமில்லை. மாநிலங்களின் நலனுக்கென்றே செலுத்தக்கூடியதும் மைய அரசிடம் நிலை பெற்றுள்ளதுமான ஓர் அதிகாரம் மாநிலங்கள் குந்தகம் அடையும் வகையில் பயன்படுத்தப்படுவதற்கு இதுவே வெளிப்படையான சான்று.

(ii) ரயில் சரக்குக் கட்டணங்கள் மீது வரி.—இதிலும் வரி விதிக்கப்படாததற்குரிய ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை ஆணைக்குழு அளிக்கவில்லை. ரயில்வே நிதிநிலைமையும் உணவு தானியங்கள், நிலக்கரி போன்ற இன்றியமையாத பொருள்கள் சிலவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்படவேண்டு மென்பதையும் அது குறிப்பிட்டுள்ளது. வரி ஏற்பாடு ஒன்றில், வரி விலக்குகள் தவிர்க்க முடியாதவையாகும். ஆனால், இந்தக் காரணத்துக்காகவே, வரி விதிக்காமல் விடுவதற்கு எவ்வித நியாயமுமில்லை. ரயில்வே நிதிநிலையைப் பற்றிய மட்டில், மாநிலங்களைப் போலன்றி இது ஒரு வணிக நிறுவனமாகும் என்பதைக் குறிப்பிட வேண்டியதாயுள்ளது. மாநிலங்கள் அந்தந்த வட்டாரங்களின் பொருளாதார வளர்ச்சியைக் கவனித்துக்கொள்ள வேண்டும். வணிக நிறுவனத்தையும் மாநில அரசையும் ஒன்றைக் கொண்டு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ரயில் சரக்குக் கட்டணம்மீது விதிக்கப்படும் வரி, ரயில் பயணக் கட்டண வரியின் நிலையில் உள்ளது.

(4) முத்திரைத்தாள் வரி நீங்கலாக பங்கு வாணிகக் களங்களிலும் எதிர்நோக்கு வாணிகங்களிலும் நடைபெறும் கொடுக்கல், வாங்கல் மீது விதிக்கப்படும் வரிகள்.

(i) பங்கு வாணிகங்கள் கொடுக்கல் வாங்கல்மீது வரி.—இந்த வரி விதிப்புக்கு ஆதரவாக சில மாநிலங்களின் கருத்து உள்ளதை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. வேறு சில மாநிலங்கள், தங்கள் பகுதிகளில் இத்தகைய பங்கு வாணிகக் களங்கள் அல்லது எதிர்நோக்கு வாணிகங்கள் இல்லாததால், வரி வருவாய் கணிசமான அளவு கிடைக்காது அல்லது இவ்வரி விதிப்பினுல் எவ்வித அனுகூலமும் இல்லை என்று கருதின. வரி விதிக்கப்படாத தற்கு, ஒரு சில பகுதிகளில் பங்கு வாணிகக் களங்களும் எதிர்நோக்கு வாணிகங்களும் இல்லை என்பதுதான் காரணமாகும் என்பதை வலியுறுத்துவதற்கில்லை. ஓர் இணைப் பாட்சி அமைப்பில், மாநிலங்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய வரி வருவாய் வாயில்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் இருக்கவேண்டும். அவற்றுக்கு தகுந்ததாகவும், ஆதாயமுள்ளவையாகவும் உள்ள வாயில் களைப் பயன்படுத்துவதற்கு எவ்வித கட்டுப்பாடுமிருக்கக் கூடாது. இந்த விஷயத்தில் கட்டுப்பாடு புகுத்துவதில் எவ்விதப் பயனுமில்லை. ஆண்டொன்றுக்கு இந்த வரி வாயிலி

லிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பங்கு வாணிகக்காரர் கொடுக்கல் வாங்கல் குறித்து மாநில அரசுகள் விதிக்கின்ற முத்திரைத் தாள் தீர்வைகள் பற்றி இது குறிப்பிட்டுள்ளது. மேலும், முத்திரைத் தாள் தீர்வை வீதங்கள் உயர்த்தப்படலாம் என்பதாகவும் முடிவாகக் கூறியுள்ளது. முறையுரிமை வரிகள் குறித்து நாங்கள் கூறியுள்ளது போல், பங்கு வாணிகங்கள் கொடுக்கல் வாங்கல் மீது முத்திரைத்தாள் தீர்வை விதிக்க மாநில அரசுக்கு உரிமை உண்டு என்பதே மைய அரசு வளமிக்க வரி வருவாயை பயன்படுத்த மறுப்பதற்குக் காரணமாக ஆகாது. இதன் வரி வருவாய் முழுவதும் மாநிலங்களுக்கே போய்ச் சேருகிறது. எனவே, குறைந்தது சோதனை அடிப்படையிலாவது இந்த வரி புகுத்தப்படவேண்டும் என்றும் கருதுகிறோம்.

(ii) எதிர்நோக்கு வாணிகங்களில் கொடுக்கல், வாங்கல் மீது வரி.—ஆணைக்குழுவின் கருத்துக்கிணங்க, இவ்வினத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் ஆதாயம் ரூ. 16 லட்சமே ஆகும். விற்பனை வரி முதன்முதல் கொண்டுவரப்பட்டபோது, இதிலிருந்து ஓரளவு கணிசமான தொகையே கிடைத்தது. எதிர்நோக்கு வாணிகங்கள் யூகத்தின் அடிப்படையில் அமைந்த வாணிகமாகும். இது நன்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வரி வாயிலாகும்.

(5) பத்திரிகை விற்பனை கொள்முதல், விளம்பரங்கள் மீது வரி.

பத்திரிகை விற்பனை மீது விதிக்கப்படுகிற வரி வாசகர்கள் மீது விழுவதால், இந் நாட்டின் மக்கள் தொகையில் ஓராயிரம் பேருக்கு விற்பனையாகும் செய்தித்தாள்கள் பிரதிகளின் எண்ணிக்கையைப் பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகு பத்திரிகை வாசிப்போர் எண்ணிக்கை பாதிக்கப்படக்கூடும் என்னும்முடிவுக்கு ஆணைக்குழு வந்துள்ளது. இதனால் கிடைக்கக் கூடிய வருவாய் ரூ. 3½ கோடியென்று மதிப்பிடப்படுகிறது. இது பற்றிப் பொருத்தமான வகைப்பாடு செய்யலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். பத்திரிகை விற்பனை அல்லது கொள்முதல் மீதான வரிச் சுமையை ஆங்கிலச் செய்தித் தாள்களை வாசிக்கின்ற வகையினர் தாங்கிக் கொள்ளக்கூடும் என்று கருதுகிறோம். முதன்மையான ஆங்கில நாளேடுகள் பல மாநிலங்களிலும் பரவலாக விற்பனையாகின்றன. இந்திய மொழியில் வெளியாகும்

நாளேடுகளுக்கு மட்டும் இந்த வரி விதிப்பினின்றும் விலக்களிக்கலாம். ஆகவே, இந்த அடிப்படையில் பத்திரிகைகள் மீது வரி விதிக்கலாம் என்று கருதுகிறோம்.

ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதும் 269-வது உறுப்பில் குறிப்பிட்டுள்ளதுமான ஒரே வரியினம் பத்திரிகை விளம்பரங்கள் மீது விதிக்கப்படுகிற வரியாகும். இது பொருத்தமான வரி வாயிலாகும். இந்த வரி வாயிலிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய கூடுதல் வருவாயை வசதியாக உயர்த்தவும் கூடும். பத்திரிகை விளம்பர வரி விதிப்பு, கட்டண வீதம், வரி விலக்கு மற்றும் ஏனைய பொருத்தமான விஷயங்களை இந்திய அரசின் பரிசீலனைக்கு ஆணைக்குழு விட்டு விட்டது.

ஆகவே, இதிலிருந்து 269-வது உறுப்பில் சொல்லியுள்ள வரிகள் கணிசமான அளவுக்கு முழுவதும் பயன்படுத்தப்படவில்லை எனத் தெரிய வருகிறது. அத்தகைய ஒவ்வொரு வரியும் விதித்து வசூலிக்கப்படவேண்டும் என்பதே இக்குழுவின் கருத்தாகும்.* மைய அரசு இந்த வரியை வசூலிப்பது நிர்வாகக் கண்ணோட்டத்தில் வசதிப்படாது என்றோ அல்லது எந்த ஒரு காரணத்திற்காகவும் உசிதமில்லை என்றோ கருதினாலும், மைய அரசு சார்பிலே, மாநில அரசின் முகமை மூலமாக 269-வது உறுப்பில் சொல்லிய இவ்வரிகளை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்து நாடாளுமன்றத்தில் பொதுச் சட்டம் கொண்டுவரப்படலாம் என்று கருதுகிறோம். மாநிலங்களிடையே நடைபெறும் வர்த்தகம் அல்லது வாணிகத்தில் சரக்கு விற்பனை வரி விஷயத்திலும் இதுதான் நிலை. 269-வது உறுப்பில் குறிப்பிட்டுள்ள ஏனைய வரியினங்கள் பொறுத்தும் இந்த நடைமுறையைப் பின்பற்றக் கூடாது என்பதற்குக் காரணம் எதுவுமில்லை. இது சரி எனப்படுமாயின், நாம் கூறிய பொதுச் சட்டத்தின் மூலமாக, ஒரு மாநிலம் விரும்பிக் கேட்டுக்கொண்டால் மட்டுமே அம்மாநிலத்தில் மைய அரசால் இத்தகைய வரிகள் விதித்து வசூலிக்கப்படலாம். இன்னின்னவற்றிற்கு வரி எனத் தெரிந்தெடுக்கும் உரிமை மாநிலத்திடமும், மாநில அரசு கேட்டுக் கொள்வதன் பேரில் வரி விதித்து வசூலிக்கும் உரிமை, மைய அரசின் முகமை என்னும் முறையில் மாநில அரசிடமும் இருக்கும்.

*31—12—1970 நாளிட்ட "காபிடல்" என்னும் ஆங்கில இதழின் இணைப்பில் வெளியிடப்பட்ட "மைய-மாநில நிதி உறவுகளை மறு ஆய்வு செய்வதன் அவசியம்" என்னும் தலைப்புள்ள திரு பாபடோஷ் தத்தா அவர்களின் கட்டுரையில் தெரிவித்துள்ள கருத்தைக் காண்க.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ள, ''இந்தியாவில் இணைப் பாட்சிமுறையும் திட்டமிடுதலும்—அவற்றின் பரஸ்பர விளைவு'' எனத் தலைப்பிட்ட கட்டுரையில் திரு அமல் ரே, மாநிலங்களின் நிதி வாயில்களைப் பெருக்கக்கூடிய சிறந்த செவ்விய வழி, 269-வது உறுப்பின் வரி ஆதாய சாத்தியக் கூறுகளை உரிய அளவுக்குப் பயன்படுத்துவதாகும் எனத் தெரிவித்துள்ளார். புது டில்லியில் 1970-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியில் நடைபெற்ற இந்தியன் பார்லிமெண்டரி சங்கத்தின் கருத்தரங்கில் பேசுகையில், திரு ஜி. எஸ். பட்டாச்சாரியா, 269-வது உறுப்பின்கீழ் வரும் வரிகளும் தீர்வைகளும் வசூலிக்கப் பெறுவதால் மைய அரசுக்கு எவ்வித பலனும் கிடைக்காது என்னும் காரணத்தினால், அவற்றின் வசூலிப்பு குறித்து மைய அரசு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என மாநிலங்கள் குறைகாண்பதைக் குறிப்பிட்டார். எமது வினாப் பட்டியலுக்குக் கிடைத்த விடைகளில் அநேகமாக எல்லாமே, ஒருமித்த கருத்து உடையனவாக உள்ளன. 269-வது உறுப்பில் குறிப்பிட்டுள்ள வரிகள் மாநிலங்களுக்கு மாற்றப்படவேண்டும் என்பதே இக் கருத்து. எனினும், இக்கருத்துக்கு நாங்கள் உடன்படவில்லை. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் காலம் முதற்கொண்டே, இவ்வகையைச் சேர்ந்த வரிகள், மேலே சொல்லியுள்ள காரணங்களினால் மைய அரசின் அதிகாரத்தில் இருந்து வந்துள்ளன. இந்தப் பட்டியலுக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வரியினங்கள், 90, 92, 92-அ ஆகிய பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும். இத்தகைய வரிகள் மாநிலங்களுக்கிடையே விதிக்கப் பெறுகின்ற தன்மையதால் இவை மைய அதிகாரப் பட்டியலிலேயே தொடர்ந்து இருந்து வரலாம். அதே நேரத்தில், நாங்கள் கருத்துரைத்தவாறு இத்தகைய வரிகளை முழு அளவுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கூறுகிறோம்.

வருமான வரி மீது மேல்வரி

30. 269-வது, 270-வது உறுப்புக்களுக்கு உறுப்புகள் 271, 274 ஆகியவை துணையான உறுப்புகள் எனலாம். 269-வது உறுப்பில் குறிப்பிட்ட தீர்வைகள் அல்லது வரிகள் (இத்தகைய வரி வருவாய்கள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன) 270-வது உறுப்பில் குறிப்பிடப்பட்ட (வருமான வரி) வரிகள் ஆகியவற்றை மைய அரசுக் காரியங்களுக்காக விதிக்கப்படுகிற மேல் வரியினால் உயர்த்து

வதற்கு 271-வது உறுப்பு நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. மேல்வரி வருவாய் முழுவதும் இந்தியத் தொகு நிதியை அடைகிறது. 271-வது உறுப்பின்கீழ் விதிக்கப்படுகிற மேல்வரியையும் பகிர்வுநிதித் திரட்டில் சேர்க்கப்படவேண்டுமென்று மாநிலங்கள் வலியுறுத்தி வருகின்றன.

31. கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகச் செயலில் இருந்து வருவதும் 271-வது உறுப்பின்கீழ் விதிக்கப்படுகிறதுமான வருமான வரி மீதான மேல்வரி, அடிப்படை வரி வீதங்களில் இணைக்கப்பட வேண்டும் என்னும் கருத்து மூன்றுவது நிதி ஆணைக் குழு முன்பு வைக்கப்பட்டது. இது விலக்கப்பட்ட ஒரு தொகையினை பகிர்வு நிதித் திரட்டுக்குள் மறைமுகமாகக் கொண்டு வந்துவிடுமாகையால், ஏற்பட்ட இழப்பின் விளைவை ஓரளவிற்கேனும் இது குறைத்துவிடும் என்று கூறப்பட்டது. எனினும் இது இந்திய அரசமைப்புச் சட்ட வகையுரைக்கு முரணானது என்பதாலும் பணிவரையறைகளுக்கு அப்பாற்பட்டது என்பதாலும், மூன்றுவது ஆணைக் குழு இது பற்றி மேலும் விவரிக்க இயலாது எனத் தெரிவித்துக்கொண்டது.

32. சாதாரண காலங்களில், மைய அரசுக்கெனத் தனிப்பட மேல்வரி எதுவும் இருக்கக்கூடாது என்றும், அப்படி மேல்வரி விதிக்கப்பட வேண்டுமாயின், மூன்றுண்டு காலத்திற்குப் பிறகு அடிப்படை வரி வீதங்களில் சேர்த்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் நான்காவது நிதி ஆணைக் குழுவின் முன் வாதிடப்பட்டது. இது குறித்து மூன்றுவது நிதி ஆணைக் குழுவின் கருத்துக்கு பொதுவாகத் தாம் உடன்படுவதாக நான்காவது ஆணைக்குழு தெரிவித்தது.

33. ஐந்தாவது நிதி ஆணைக்குழுவும் இதுகுறித்து ஆராய்ந்தது. மைய அரசுக் காரியங்களுக்கு தற்போது விதிக்கப்படுகிற மேல்வரி வருவாய் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ 'வருமான வரி' என்னும் தலைப்பின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நிகர வருவாயில் சேர்க்கப்பட வேண்டும் அல்லது இதற்கு மாற்றுஏற்பாடாக, மைய மேல்வரி, வருமான வரி அடிப்படை வீதங்களில் இணைக்கப்பட வேண்டும் என்று மாநிலங்கள் கருத்து தெரிவித்தன. அறிக்கையில் 25-வது பக்கத்தில் 3·21 பத்தியில் ஐந்தாவது ஆணைக்குழு, வருமான வரி மீதான மேல்வரி குறித்து மாநிலங்கள் குறைபடுவதை விவரித்துள்ளது. இது சட்ட நுணுக்கநிலையைக் கொண்டுவிட்டது. 271-வது உறுப்பின்கீழ் வரும்

மேல்வரியை விதிப்பதில் மைய அரசுக்குள்ள அதிகாரத்தைத் எவரும் மறுப்பதிற்கில்லை. இருப்பினும், மாநிலங்களின் குறைகளைக் கருதி முடிவு எடுக்க இதை இந்திய அரசுக்கே ஆணைக்குழு விட்டுவிட்டது. இதன் அடிப்படையிலேயே மாநிலங்களின் குறை ஐந்து நிதி ஆணைக்குழுக்கள் அனைத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், எந்த ஆணைக்குழுவும் இதற்குப் பரிகாரம் கூறவுமில்லை; மைய அரசும் எவ்விதமான நடவடிக்கை எடுக்கவுமில்லை.

34. உறுப்பு 271, 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் 137-வது பிரிவின் வரம்புரையையும் 138 (1) பிரிவின் (ஆ) வரம்புரையையும் போன்றதே. குடியரசுத் தலைவரின் பரிந்துரையின்படிக்கன்றி மற்றப்படி, நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும், 271-வது உறுப்பில் குறிப்பிட்டுள்ள மேல் வரி விதிப்பதற்குரிய மசோதா அல்லது திருத்தம் எதுவும் முன்னுரைக்கப்படக்கூடாது அல்லது முன் மொழியப்படக்கூடாது என்று 274-வது உறுப்பு, மற்றவற்றுக்கிடையே, வகை செய்கிறது. 274-வது உறுப்பின் (2) பகுப்பிற்கிணங்க, 'மாநிலங்கள் பற்றுடைய வரி அல்லது தீர்வை' என்பது, ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிற நிகர முழு அல்லது பகுதி வரி வருவாய் அல்லது தீர்வை வருவாய் என்று பொருள்படும். 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 141-வது பிரிவின் அடிப்படையில் 274-வது உறுப்பு அமைந்துள்ளது. ஆனால், 141-வது பிரிவுக்கும் 274-வது உறுப்புக்குமிடையே கருப்பொருளில் இரு வேறுபாடுகள் உள்ளன. இதில் ஒன்று, மேல்வரி விதிப்புக்கான மசோதா அல்லது திருத்தம் கொண்டுவருவதற்கு 141-வது பிரிவின்படி முன் ஏற்பாணை வழங்குவதில், ஆளுநர் தலைவர் தம் விருப்பப்படி நடக்க வேண்டியிருந்தது. இவர் மைய அமைச்சரவையைக் கலந்து கொள்ள வேண்டுமென்பதில்லை என்றே இதற்குப் பொருள். அது ஆலோசனை ஏதேனும் கூறுமாயின் அதன்படி இவர் செயல்படவேண்டுமென்று தேவையுமில்லை. ஆனால், 274-வது உறுப்பின்படி, வரி விதிப்பது குறித்து இறுதியாக முடிவெடுப்பது மைய அரசே ஆகும். மாநிலங்களுடன் கலந்து முடிவு எடுக்கவேண்டும் என்பதற்குக்கூட வகை எதுவும் செய்யப்படவில்லை. 141-வது பிரிவுக்கும், 274-வது உறுப்புக்குமிடையே காணும் இரண்டாவது வேறுபாடு, அப்பிரிவின் (2) உட்பிரிவின்படி, ஆளுநர் தலைவர் ஏற்பாணை அளிக்குமுன், "இணைப்பாட்சி வரி விதிப்பின் நிகர

ஆதாயங்களை அல்லது இணைப்பாட்சி வைத்துக்கொள்ளத்தக்க அதன் பகுதியை பிறவகையில் அதிகரிப்பதற்கான சாத்திய மான நடவடிக்கைகள் யாவற்ருலும் சாத்தியமான சிக்கன முறைகள் யாவற்ருலும் வருவாய்க் கணக்கில் இணைப்பாட்சி யின் வரவினங்களையும் செலவினங்களையும் சரிக்கட்ட இய லாது என்று அவர் மனநிறைவு கொள்ளவேண்டியிருந்தது''. ஆனல், உறுப்பில் அதைப் போன்ற வகையுரை எதுவுமில்லை. இது சம்பந்தமாக மைய அரசு எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் அல்லது நிபந்தனைக்கும் உட்பட்டதாகாது. ஆளுநர் தலைவ ருக்குப் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைத் தொகுப்பிற்கிணங்க, அவர் தமது ஏற்பாணையை அளிக்குமுன்பு, மாநிலங்களின் கருத்துகளைக் கேட்டறிய வேண்டியிருந்தது.

35. குடியரசுத் தலைவர் 274-வது உறுப்பின்படி நாடாளுமன்றத்திற்குப் பரிந்துரைப்பதற்கு முன், மாநிலங் களுடன் கலந்து பேசவேண்டியதன் அவசியத்தைப் பற்றி நான்காவது ஆணைக்குழு விரிவாக ஆய்ந்துள்ளது. இந்த உறுப்பின் நடைமுறைத் தேவைகள் யாவும் அனுசரிக்கப் பட்டு வந்திருப்பதாகக் குறிப்பிடுகையில், இந்த உறுப்பின் நோக்கத்தை முழுவதும் நிறைவேற்றும் முறையிலும், மாநிலங்களுக்கு உறுதி அளிக்கும் வகையிலும் இந்த உறுப்பின் நடைமுறை மேலும் சீரமைக்கப்படலாம் என்று இது தெரிவித்துள்ளது. இந்நோக்கத்தையே கருத்தில்கொண்டு மைய, மாநில அரசுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் கொள்கை அளவிலும், திட்ட நிறைவேற்று மட்டத்திலும் அவ்வப் போது கூட்டங்கள் நடத்தப்படவேண்டுமென்று ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இத்தகைய கூட்டங்களின் நட வடிக்கைகள் குடியரசுத் தலைவருக்கு பேருதவியாக இருக்கும் என்றும் ஆணைக்குழு கருதுகிறது. மேல்வரி விதிப்பு பற்றி மாநிலங்கள் பெரிதும் மனக் கசப்புற்றிருப்பது நிதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளிலிருந்து தெரியவரும்.

36. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, திரு ஏ. கே. சந்தா தமது அறிக்கையில், நிதி ஆணைக்குழுக்கள் எடுத்துச்சொல்லிய கோட்பாடுகளின்படி வருமான வரியில் மைய அரசின் பங்கு படிப்படியாகக் குறைந்து வந்தபோதிலும், அது விதிக்கிற மேல்வரியுடன் மைய அரசின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவே இன்னும் இருந்துவருகிறது என்றுதெரிவித்துள்ளார். 1965-ம் ஆண்டில், அவர் கூறுவதாவது : '' 15 ஆண்டுகளுக்கு

மேலாக விதிக்கப்பட்டு வருகிற மேல்வரியை அடிப்படை வரி வீதங்களில் இணைக்கவேண்டுமென்னும் கோரிக்கையில் ஓரளவு நியாயம் இருப்பதாகக் குறிப்பிடத்தான் வேண்டும். ஒரு சில ஆண்டுகளாக வருமான வரி மீது விதிக்கப்படுகிற மேல்வரி, இரண்டாவது உலகப் போருக்குப் பின் தொடக்கத்திலேயே அடிப்படை வீதத்தில் இணைக்கப் பட்டது. கோரிக்கைக்கு இதுவே ஒரு முன் நிகழ்வாக அமைந்துவிட்டது ''.* அரசமைப்புச் சட்டப்படி விதிக்கப் படுவதாயிருந்த போதிலும், நீண்ட காலமாகத் தொடர்ந்து மேல்வரி விதிப்பது நியாய்மாகத் தோன்றவில்லை. அதிலும் முக்கியமாக, மேல்வரி வருவாயில் மாநிலங்கள் பங்கு பெற முடியாமல் போனுல் அதில் நியாயமில்லை. எனவே, மேல்வரி மாநிலங்களிடையே பகிர்ந்துகொள்ளப்படும் வகையில், அடிப்படை வருமான வரிவீதத்துடன் மேல் வரி இணைக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு நியமித்த கற்றறி குழு கூறுவதாவது : '' தொடர்ந்து குறிப்பாக மூன்றாண்டுகளுக்கும் மேலாக விதிக்கப்பட்டு வருகிற இத்தகைய மேல் வரிகள் மாநிலங்களுடன் பகிர்ந்துகொள் ளப்படக்கூடாதா என்பது பற்றி மீண்டும் கருதிப் பார்க் கப்படவேண்டும்........ '' எதிர்காலத்தில் பெரும்பான் மையான மாநிலங்களின் சம்மதமின்றி மேல்வரி எதுவும் விதிக்கப்படக்கூடாது.

மின்சாரப் பயன் அல்லது விற்பனை மீது வரி

37. வரிகள் குறித்து மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள பதிவுகள் பற்றி ஆராயுமாறு இக் குழு கேட்டுக்கொள்ளப் படவில்லை. ஒரு சில இனங்களைக் குறித்தமட்டில், மாநிலம் வரி விதிக்கும் அதிகாரம், மைய அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும் என்பதைத் தெரிவிக்கவேண்டியுள்ளது. இத் தகைய இனத்தில் ஒன்றுதான் மாநில அதிகாரப் பட்டியலின் 53-வது பதிவாகும். மின்சாரப் பயன் அல்லது விற்பனை மீது வரி விதிப்பதற்கு இப் பதிவு மாநிலத்திற்கு அதிகார மளிக்கிறது. ஆனுல், இவ்வதிகாரம் 287-வதுஉறுப்பில் குறிப் பிட்டுள்ள விலக்குக்கு உட்பட்டதாகும். மைய அரசு பயன் படுத்துகிற அல்லது அதன் பயனுக்கென்று விற்பனை செய்

* அசோக் சந்தா எழுதிய, "இந்தியாவில் இணைப்பாட்சி முறை" என்னும் ஆங்கில நூலின் 243-244 பக்கங்கள் (1965).

யப்பட்ட அல்லது ரயில்வே கட்டுமானம், பராமரிப்பு அல்லது இயக்கம் ஆகியவற்றுக்குப் பயன்படுகிற மின்சாரத்துக்கு வரி எதையும் விதிக்க இயலாது. முதலில் இயற்றப்பட்ட படியான 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில், 287-வது உறுப்பிற்கு நிகராக வகையுரை எதுவுமில்லை. 1940-ம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய இந்தியா-பர்மா (பல்வகைத் திருத்தங்கள்) சட்டத்தின் 3 (3) பிரிவுதான் 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் 154-அ பிரிவை நுழைத்தது. 287-வது உறுப்பு இந்தப் பிரிவுக்கு இணை யானது. இதன்படி 1939-ம் ஆண்டு தமிழ் நாடு மின்சாரத் தீர்வைச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1939) 3(1)(4) -வது பிரிவு, மைய அரசின் பயனுக்காக அல்லது அந்த அரசுக்கு அல்லது ரயில்வே கட்டுமானம் அல்லது இயக்கத்திற்குத் தே வைப்படுகிற ஒரு ரயில்வே கம்பெனிக்கு விற்பனை செய்யப் படுகிறமின்சாரத்திற்கு வரி விதிப்பினின்றும் விலக்களிக்கிறது. மேலும், அத்தகைய விற்பனைக்கு விதிக்கப்படுகிற விலை கணிச மான மின்சக்தி பயன்படுத்தும்பிறருக்கு விதிக்கப்படுகிற விலை யைக்காட்டிலும் தீர்வைத் தொகை அளவில் குறைவாக இருக்க வேண்டும் என்றும் இப்பிரிவு வகை செய்கிறது. மேலும், 1962-ம் ஆண்டு தமிழ் நாடு மின்சார (பயன்மீது வரி) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1962) 4-வது பிரிவு, இந்திய அரசு பயன்படுத்தும் அல்லது அந்த அரசின் அல்லது ரயில்வேயை இயக்குகிற ரயில்வே கம்பெனியின் கட்டு மானம் அல்லது இயக்கம் முதலியவற்றிற்குப் பயன்படுத்தப் படும் மின்சக்தி மீது மேற்படி சட்டத்தின்கீழ் மின் வரி விதிப்பதற்குத் தடைசெய்கிறது. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரித் தலைப்புகள் தங்களுக்குள்ள பொறுப்புக்களைச் சரிக்கட்டு மளவுக்குப் போதுமானதாயில்லை என்பதே மாநிலங்களில் குறையாக இருந்துவந்துள்ளது. மைய மாநில அரசுகளுக் கிடையே நிதி வகையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கிச் சமாளிக்க இக்குழுவே, இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் சில பரிகாரங்களைக் கூறியுள்ளது. மைய அதிகாரப்பட்டி யலைச் சேர்ந்த 32-வது பதிவுகுறித்து, சட்ட மியற்றும் அதி காரங்களை பகிர்வது பற்றி விவாதிக்கையில், 285-வது உறுப் பில் கண்டுள்ள மாநில அரசு வரி விதிப்பினின்றும் மைய அரசின் சொத்துக்கு அளிக்கப்படும் விலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்றுஇக்குழு பரிந்துரைத்தது. 287-வது உறுப்பில் வகை செய்துள்ள வரி விலக்கும் இதைப்போன்றதே இதுவும் ரத்து செய்யப்படலாம்.

வரிப் பகிர்வு குறித்த முடிவான கருத்துகள்

38. இந்தியாவில் நிதி அமைப்பு முறை மைய அரசுக்குச் சாதகமாகவே பெரிதும் அமைந்துள்ளது. மூன்று பெரிய, விரிவான வரிவருவாய் வாயில்கள் மைய அதிகாரப் பட்டியலில் தான் உள்ளன. அவை சுங்கத்தீர்வை, ஆயத்தீர்வை, வருமானவரி ஆகியவையாகும். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரிவருவாய் வாயில்கள் மைய அரசுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது முக்கியத்துவம் குறைந்தவை; தொகைபெருகக் கூடிய வரி வருவாய்களுமன்று. எனவே, மாநிலங்களுக்கு ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்கும், திட்டத்தில் சேராத வேலைகளுக்கும் ஆகின்ற மொத்தச் செலவுக்கும், கிடைக்கக்கூடிய வரிகள் மற்றும் வருவாய்களுக்கும் இடையில் உள்ள பற்றுக் குறை பெரிதாக உள்ளது. இப்போது உள்ளவாறு, ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி வாயில்கள் அதன் நிர்வாகப் பொறுப்புக்களுக்கு இணையாக இருக்கவேண்டும் என்னும் சிறந்த கோட்பாட்டை இந்திய அரசமைப்புச் சட்டம் புறக்கணிக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கியதும் நிலைமை மேலும் மோசமடைந்தது. ஏனெனில், அயல் நாட்டுஉதவியும், பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டமும் மைய அரசின் நலனுக்கே உள்ளன*.

மானியங்கள்

39. மாநில அரசுகள் தங்கள் வருவாய்களை அதாவது மைய அரசு விதித்து மைய அரசோ அல்லது மாநில அரசோ வசூலிக்கக்கூடிய வரிகள், விதிமுறை வரிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கிடைக்கும் நிதி உதவியைப் பற்றி சிறிதளவு ஏற்கனவே விவரித்துள்ளோம். இப்போது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள வகையுரைகளுக்கிணங்க, மைய அரசு விதித்த போதிலும் சில வரிகளின் நிகர வருவாய்களை மாநிலங்கள் பெறுவதற்கு உரிமையுண்டு. வேறு சில வரிகள் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. பகிர்வு நிதித் திரட்டில் கூட்டுரும வரி, செல்வ வரி, ஆயத்தீர்வைகள், சுங்க வரி, ஏற்றுமதித் தீர்வைகள் ஆகியவற்றைச் சேர்த்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் அடிப்படை முறையை விரிவுபடுத்துமாறு மற்றவற்றுக்கிடையே பரிந்துரைகள் செய்துள்ளோம்.

* புது டில்லியில் 1970 ஏப்ரலில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசிய மாநாட்டில் திரு அஜித் பிரசாத் ஜெயின் வாசித்தளித்த நடைமுறை அறிக்கை.

40. இந்த வாயில் மட்டுமல்லாமல், மாநிலங்களின் வாயில்களைப் பெருக்கக் கூடிய மற்றொரு வழியுமுள்ளது. இதுதான் மைய அரசிடமிருந்து கிடைக்கின்ற மானியங்களாகும். இத்தகைய மானியங்களுக்கு அனுமதியளிக்கிற வெளிப்படையான ஏற்பாட்டை 275-வது உறுப்பில் காணலாம். இந்த உறுப்பின் கருப்பொருள் பகுதி பின்வருமாறு:—

" நாடாளுமன்றம் சட்டம் இயற்றுவதன் மூலமாக குறிப்பிடும்தொகைகள், உதவி தேவையென நாடாளுமன்றம் முடிவு செய்கின்ற மாநிலங்களின் உதவி மானிய வருவாய்கள் என்று ஒவ்வோர் ஆண்டிலும் இந்தியத் தொகு நிதியின் செலவினமாக ஒதுக்கப்பட வேண்டும். வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு தொகை முடிவு செய்யப்படலாம்."

280 (3) உறுப்பின்படி, நிதி ஆணைக்குழுவின் கடமைகளில் ஒன்று, " இந்தியத் தொகு நிதியிலிருந்து மாநிலங்களின் வருவாய்க்கு உதவி மானியங்களை வழங்க அனுசரிக்கப்படவேண்டிய கோட்பாடுகள்" யாவை என்பது குறித்து குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைகள் செய்வதாகும். 280 (3)-வது உறுப்பில்குறிப்பிட்டுள்ள உதவி மானியங்களில் 275-வது உறுப்பின்கீழ் வரும் மானியங்களும் அடங்கும் என்றபோதிலும் 275-வது உறுப்பில் வெளிப்படையான குறிப்பு எதுவுமில்லை என்பதைக் காணலாம். நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்பேரில் 275-வது உறுப்பின்கீழ் கொடுக்கப்படும் மானியங்கள், சட்டபூர்வமான மானியங்கள் என விவரிக்கலாம். நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு, மைய அரசையும், மாநில அரசுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பு வழங்கும் தகுதி அளிக்கப்படவில்லை. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மைய, மாநில அரசுகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்று கூறியுள்ளோம்.

41. சட்டப்படிக்கான மானியங்களைத் தவிர அதாவது, அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவையும், அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளின்படி நியமிக்கப்பட்ட தனி அமைப்பின் பரிந்துரைகளுக்கிணங்க வழங்கப்படுவனவையுமான மானியங்களைத் தவிர மாநிலங்களுக்கு மைய அரசால் வழங்கப்படுகிற ஒரு சில மானியங்களும் உண்டு. இவை பொதுவாகத் திட்ட மானியங்கள் எனப்படும்-திட்ட ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணித்திட்டங்களை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு உதவுகின்ற வகையில் அளிக்கப்படுகின்ற மானியங்களாகும். இத்தகைய

மானியங்கள் விருப்பு முறையில் அளிக்கப்படுகிற மானியங்களாகும். இவை திட்ட ஆணைக்குழு பரிந்துரைகளின் பேரில் கொடுக்கப்படுகின்றன.

42. நிதி ஆணைக் குழு திட்ட மானியங்களுக்கும் பரிந்துரைப்பதைத் தடைசெய்ய இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஏதுமில்லை. நான்காவது நிதி ஆணைக் குழுவின் தலைவர் இத்தகைய மானியங்களை நிதி ஆணைக்குழுவே அரசமைப்புச் சட்டப்படி,வழங்குவதற்கு வகை செய்யலாம் என்னும் கருத்து கொண்டிருந்தார். ஆனால், அது திட்டத்தில் சேராத பணிகளுக்கு மட்டுமே பரிந்துரைகள் செய்யப்படுமாறு நிதி ஆணைக் குழுவுக்குப் பணிக்கப்பட்டது.

43. மைய அரசு மாநிலங்களுக்குத் திட்ட மானியங்கள் வழங்குவதற்கு உதவியாகவுள்ள ஒரே உறுப்பு 282-வது உறுப்பாகும். எந்தப் பொதுக்காரியத்திற்கும் மைய அரசோ, மாநில அரசோ மானியம் வழங்க இயலச் செய்வது இந்த உறுப்பே. இப்பொதுக் காரியம் நாடாளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ சட்டமியற்றத்தக்க பொதுக் காரியமாக இல்லாமலிருக்கலாம். அத்தகைய காரியங்களுக்காகவும் மானியம் வழங்க மைய அரசு, மாநில அரசுகளுக்கு உரிமையை இவ்வுறுப்பு வழங்குகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் சம்பந்தமாக மாநிலங்களுக்கு நிபந்தனையுடனோ, நிபந்தனையில்லாமலோ மானியங்கள் வழங்க மைய அரசு இந்த உறுப்பைத்தான் பயன்படுத்தி வருகிறது. இந்த உறுப்பு, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 150-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் அடிப்படையில் அமைந்தது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, 275-வது உறுப்பின்கீழ் வரும் மானியங்கள் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன ; 282-வது உறுப்பின்கீழ் வரும் மானியங்கள் திட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்பேரில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஐந்தாவது நிதி ஆணைக்குழு சுட்டிக்காட்டியபடி, திட்ட வேலைகளின் பராமரிப்புச் செலவுகளுக்கான மானியங்களை வழங்குவதற்கெதிராகவோ அல்லது மூலதனச் செலவுகளுக்கு மானியம் வழங்கக் கூடாதென்றோ உறுப்பு 275-ல் உள்ள வாசகம் அமைந்திருக்கவில்லை. முதல் நிதி ஆணைக்குழுவின் பணி வரையறைகளில், திட்டச் செலவு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாநிலங்களின் பராமரிப்புச் செலவுத் தேவைகளை மட்டும் அந்த ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத்

திட்டத்தின் தேவைகளையும், மாநிலங்கள் கூடுதல் வருவாய் திரட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளையும் ஆராயுமாறு இரண்டாவது நிதி ஆணைக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. மூன்றாவது நிதி ஆணைக்குழுவின் பணிவரையறைகளும் இவ்வாறே அமைந்திருந்தன. திட்ட மூலதனச் செலவில் பராமரிப்புச் செலவிற்கான 75 சதவீதம் 275-வது உறுப்பின்கீழ் வரும்மானியமாகத்தரப்படவேண்டுமென்று இந்த ஆணைக்குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. நான்காவது திட்டத் தேவைகளைக் கருத்திற்கொள்ளுமாறு நான்காவது நிதி ஆணைக்குழு குறிப்பாகக் கேட்டுக்கொள்ளப்படவில்லை. திட்ட மானியங்களைப் பற்றிப் பரிந்துரைக்கத் தனக்குத் தகுதியிருந்தும், இந் நிதி ஆணைக்குழு, பரிந்துரை எதுவும் செய்யவில்லை. ஏனெனில், திட்ட ஆணைக் குழு திட்டமிடுவதில் தங்குதடையில்லாத அதிகாரம் உடையதாக இருப்பது விரும்பத்தக்கது என்று இது கருதிற்று. ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் பணிவரையறைகளில், ஐந்தாண்டுத் திட்டத் தேவைகள் நீங்கலாக மற்றத் தேவைகளைப் பற்றி மட்டும் பரிந்துரை செய்வதோடு நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. திட்டப்பணித் தேவைகளைப்பற்றிப் பரிந்துரைக்க இடமில்லையென வரையறை இருந்தபோதிலும், திட்டத்திற்குப் புறம்பான குறிப்பிட்ட சில சமூகப் பணிகளைச் சீரமைக்கும் பணிக்காக ஏற்பட்ட அதிகச் செலவினை ஆராய்வதற்குத் தடையேதுமில்லை என்று ஐந்தாவது நிதி ஆணைக்குழுவின் முன் வாதிடப்பட்டது. இக்கருத்துக்கு ஆணைக் குழு உடன்படவில்லை. இந்த வாதம் இரு ஆணைக் குழுக்களுக்கிடையே உள்ள அலுவல் பிரிவினைமுறைக்கே உலைவைத்து விடும் என்று இந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

44. திட்டப் பணிகளுக்காக மாநிலங்களுக்கு சட்டப்படிக் கல்லாத மானியங்களை ஒதுக்குவதற்கு 282-வது உறுப்பைப் பயன் படுத்தலாமா என்பது இங்குக் கவனிக்கப்பட வேண்டிய கருத்தாகும். இரண்டாவது நிதி ஆணைக் குழுத் தலைவராயிருந்த திரு க. சந்தானம், இந்தியப் பொது நிர்வாக நிறுவனத்தின் ஆதரவில் மைய-மாநில உறவுகுறித்து 1959, மார்ச்சில் தொடர் விரிவுரைகள் ஆற்றுகையில், 282-வது உறுப்பின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு விளக்கினார்:—

"மைய, மாநில அரசுகளுக்கிடையே சரிக்கட்டுதல் செய்து கொள்வதற்கென்று அமைக்கப்பட்ட பெரிய வகை

யுரைகளில் ஒன்ருக இதைக் கருதுவதற்கில்லை. கருத்து அவ்வாருயின், பங்குகள், ஒதுக்கீடுகள், மானியங்கள் கொண்ட ஒரு சிக்கலான தொகுதியை வகுப்பதற்கு அவசியமே இல்லை. மைய அரசு மாநிலங்களுக்கு உதவிசெய்ய இரு உறுப்புக்கள் இருக்கத் தேவையேயில்லை—நிதி ஆணைக்குழு மூலமாக அளிக்கப்படும் உதவி ஒன்று; மற்ருென்று நிர்வாக விருப்பத்தின்படி அளிக்கப்படும் உதவி. பின்சொல்லிய வற்றில் நாடாளுமன்றச் சட்டம் இயற்றவும் கூடத் தேவை யில்லை. இருந்தாலும், வரவு-செலவுத் திட்டத்தில் இது சேர்க்கப்படத்தான் வேண்டும். ஆனுல், வரவு-செலவுத் திட்டத்தில் ஓரினமாக இருப்பதோடு சரி. அதற்குமேல், மேற்கொண்டு அனுமதி எதுவும் தேவையில்லை. எனவே, என் கருத்துப்படி, இந்த உறுப்பு, எதிர்பாராச் செலவினங் களுக்கு மைய அரசு வகை செய்வதற்கு உதவியாக உள்ள எஞ்சிய அல்லது ரிசர்வ் உறுப்பாக இருக்கலாம். இவ்வாருகத் தான் இந்த உறுப்பு பிரிட்டிஷ் அரசாலும் பயன்படுத்தப் பட்டது. மற்றும் அதிகாரம் மாறிய பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுக்கு முன்பாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த உறுப்பின்படி, உணவு உற்பத்திப் பெருக்க மானியங்களும், சில மறுவாழ்வு வசதி மானியங்களும் கொடுக்கப்பட்டன '*.

45. நான்காவது நிதி ஆணைக்குழுத் தலைவர் தாம் எழுதி வைத்த தனிக்குறிப்புரையில் இதைப் பற்றிக் குறிப்பாக ஆராய்ந்துள்ளார். 282-வது உறுப்பின்படிக்குரிய மானியம் ஒரு பொதுக்காரியத்துக்கான மானியம். குறிப்பிட்டதொரு பொதுக்காரியத்துக்குப் பிணையிடாமல் இத்தகைய மானியங் களை 282-வது உறுப்பின்படி வழங்கமுடியாது என்று இவர் குறிப்பிட்டுள்ளார். 282-வது உறுப்பின் மானியம் இப் போது பயன்படுத்தப்படுகிற காரியத்துக்காக உத்தேசிக்கப் படவே இல்லை என்று இவர் கூறுகிருர். இந்த உறுப்பின் ஓரக்குறிப்பையும் இவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், இதன்படி, ஒரு மாநிலத்துக்கு மைய அரசு மானியம் வழங்கு வதற்கு வசதியாக இருப்பதற்காக இந்த உறுப்பு உத்தேசிக் கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். திட்ட வேலை,

* திரு க. சநதானம் எழுதிய "இந்தியாவில் மைய-மாநில உறவுகள்" என்னும் ஆங்கில நூலில் 40-41 பக்கங்கள் 1970 டிசம்பர் 31 நாளிட்ட "காபிடல்" ஆங்கில இதழின் இணைப்பில் வெளியான "மைய-மாநில நிதி உறவுகளை மறு ஆய்வுசெய்வதன் அவசியம்" என்னும் தலைப்பில் திரு பாபடோஷ்தத்தா தமது கட்டுரையில் தெரிவித்துள்ளகருத்தும் இதுவே.

திட்டப் பணிக்குட்பட்டதாயினும் புறத்ததாயினும் அந்தத் திட்ட வேலையை நிறைவேற்றுவதற்காக மைய அரசு மாநில அரசுகளுக்கு நிபந்தனைகளுடன் கூடிய மானியங்கள் வழங்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்ட வகையுரை இயற்றலாம் என்று இவர் கருத்து தெரிவித்துள்ளார். இதனால் மானியங்களும் செவ்விய வகையில் பயன்படுத்தப்படுவதற்கு வழி ஏற்படும். இவர் கருத்துப்படி, தொடக்கத்தில் உத்தேசித்த காரியத்திற்காகத் 282-வது உறுப்பு தொடர்ந்து பயன்படுத்தப்படலாம்.

46. மைய-மாநில அரசு உறவுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறி குழு, 282-வது உறுப்பின் நோக்கத்தையும், வரலாற்றுப் பின்னணியையும் பற்றி விவரித்துள்ளது. அதன்கருத்துப்படி, இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், 282-வது உறுப்பு, மைய அரசு மாநில அரசுக்கு முறையான மானியங்களை வழங்குவதற்கு வகை செய்வதற்காக மட்டுமல்லாமல், 'பொதுக்' காரியங்களுக்கு மைய அரசும் மாநில அரசுகளும் மானியங்கள் வழங்குவதற்கு வகை செய்கிற எஞ்சிய வகையுரையாகப்பயன்படுவதற்கென்று உத்தேசிக்கப்பட்டது. மைய அல்லது மாநில அரசு தனது நிர்வாக அதிகார வரம்புக்குள் வராத ஒரு பொருள் குறித்து மேற்கொள்ளும் செலவைச் செல்திறனுக்குவதே 282-வது உறுப்பின் நோக்கமாகும் என்றும், அச்செலவு நேரடிச் செலவாக இருக்க வேண்டுமேயன்றி மானியங்கள் கொடுக்க வரையறைப் படுத்தியதாக இருக்கக்கூடாது என்றும் வாதிப்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில், அது தவறான வாதமென்று கூறி, இந்த உறுப்பு நேரடிச்செலவைச் செல்திறனுக்காது என்றும் கற்றறி குழு தெரிவித்துள்ளது. 282-வது உறுப்பு பற்றி, நான்காவது நிதி ஆணைக்குழுத் தலைவரின் கருத்துக்களை கற்றறி குழு 74-வது பக்கத்தில் 4.7 பத்தியில் ஆராய்ந்துள்ளது. 282-வது உறுப்பின்படி தற்போது செயல்படுவதை சட்டமுரண்பாடுடையது எனக்கூற இயலாது என்று கூறி கற்றறி குழு முடித்துள்ளது. ஆனால், இந்த உறுப்பின் ஓரக் குறிப்புக்கு மட்டும் இது திருத்தம் கூறியுள்ளது. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவும் தனது அறிக்கையில், அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டபோது, ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக மானியங்கள் ஒதுக்கும் பணிக்கு, 282-வது உறுப்பைப் பயன்படுத்தலாம் என்ற எண்ணமே தோன்றியிருக்காது எனக் கூறியுள்ளது,

47. அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி பாசு அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்த உறுப்பின் நோக்கத்தைப் பற்றியும் நன்கு விவரித்துள்ளார். அவரது கருத்துப்படி, 282-வது உறுப்பில் உள்ள ''மானியங்கள்'' என்னும் சொல், 273, 275-வது உறுப்புகளில் உள்ள ''உதவி மானியங்கள்'' என்பதற்கு ஒப்பானதன்று. ஆனால், 282-வது உறுப்பில் ''மானியம்'' என்னும் சொல்லுக்குச் செலவு என்பது பொருளாகும். 113 (2), 203 (2), 204 (2) ஆகிய உறுப்புக்களில் என்ன பொருள் கூறப்பட்டுள்ளதோ அதே பொருளேயே இந்த உறுப்பில் இந்தச் சொல் உடையது. மாநிலங்களுக்கு ஆதரவாக மைய அரசு உதவி மானியங்கள் வழங்க 282-வது உறுப்பு அதிகாரமளித்தால், இந்த உறுப்பு இருக்கவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இந்த அதிகாரத்தை 275 (1) உறுப்பு ஏற்கனவே வழங்குகிறது. இவரது கருத்துப்படி, 282-வது உறுப்பு, மைய அரசுக்கு அல்லது இணைப்பாட்சி அதிகாரப் பிரிவினைப்படி தமக்கு ஒதுக்கப்பட்டிராத காரியங்களுக்காக நேரடிச் செலவு செய்ய ஒரு மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. ஆனால், அத்தகைய காரியங்கள் பொதுக்காரியங்களாக இருக்கவேண்டும்.

48. நிபந்தனைகளோடு கூடிய மானியங்களை மாநில அரசுகளுக்கு 'வழங்குவதற்காக' 282-வது உறுப்பு எண்ணப் படவில்லை என்று இக்குழு கருதுகிறது. எந்தப் பொதுக் காரியத்திற்கும் அப்பொதுக் காரியம் செலவு செய்யும் அரசின் சட்டமியற்றும் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டதாயிருப் பினும் மைய அரசும் மாநில அரசும் செலவு செய்ய வகை செய்யவே இந்த உறுப்பு பயன்படவேண்டும். இப்பிரச்சினையின் விவாதம் கோட்பாட்டளவினதாகத் தோன்றலாம். இக்குழு வலியுறுத்த விரும்புவதெல்லாம், மைய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் முறை மைய அரசின் ஏகபோக விருப்பப்படி இருக்கக்கூடாது என்பதேயாம்.

49. இதே கருத்தை திரு சந்தா அவர்களும் கொண்டிருக்கிறார்: ''ஒரு பொதுக்காரியம், சட்டமியற்றும் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாயின், அக்காரியத்துக்காக, மானியம் வழங்க மைய அல்லது மாநில அரசுக்கு 282-வது உறுப்பு அதிகாரமளிக்கிறது. 'பல்வகை நிதி வகையுரைகள்' என்பதை விவரிக்கிற பிரிவில் இந்த உறுப்பு வருகின்றபோதிலும், இது, மைய-மாநில அரசுகளுக்

கிடையே நிதி பற்றிய உறவுகளை முறைப்படுத்துவதற்கு விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. வேறு வகையில் ஏற்பாடு செய்திராத ஒரு நிலைமையைச் சரிக்கட்ட அனுமதிக்கும் வகையுரையாகவே கருதியபோதிலும், அந்தந்த மாநில அரசுகள் தங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற மைய அரசு அளிக்கும் எல்லா மூலதன மானியங்களும் 'பொதுக் காரியங்கள்' என்னும் நோக்கில் இந்த உறுப்பின் கீழே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 'மைய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும் வருவாய்கள்' என்ற தலைப்பின்கீழ் அளிக்கப்படும் மொத்த நிதி உதவியைக் காட்டிலும் இந்த உறுப்பின்கீழ் வழங்கப்படும் மானியங்கள் மிகவும் அதிகமே. மூலதன மானியம் என்பது அரசு வருவாயைப் பிரித்துக் கொடுப்பதல்ல என்னும் இந்த நடைமுறையை மெய்ப்பித்துக் காட்டவே இந்த நுட்பக்கருத்து கொடுக்கப்பட்டுள்ளது''*.

நடைமுறையில், திட்டப்பணிகளுக்கான எல்லா மானியங்களுமே 282-வது உறுப்பின்படி விருப்ப மானியங்களாகும். இத்தகைய விருப்ப மானியங்கள், நிதி ஆணைக்குழுவில் பரிந்துரைத்துள்ளவற்றை விட அதிகமாகவே உள்ளன. மைய அரசு உதவியை கெஞ்சி வேண்டுவனவாக இருக்கும் நிலையில் மாநிலங்களை வைத்துவிட்டது. மேலும் இந்த மானியங்கள் நிபந்தனைகளுடன் அளிக்கப்படுகிற மானியங்களாகும். அந்த நிதி மானியங்களின் தேவைகளுக்கேற்ப திட்டங்களை வகுப்பதில் அவற்றின் சுதந்திரத்தை இவை கட்டுப்படுத்துகின்றன.

† சட்டப்படிக்கல்லாத மானியங்களும் விருப்ப மானியங்களும் சட்டப்படிக்கான வரிகளை முழுவதும் மறைத்துவிட்டன என்பதைக் கவனிக்கும்போது இது மிகவும் கவலையுறத்தக்க போக்காக உள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கு மைய அரசால் அளிக்கப்பட்ட மொத்த மானியங்களில் 71·3 சதவீதம் விருப்ப மானியங்களாகும். மைய அரசிலிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்டவாயில்களின் மொத்தப் பகுதி கிட்டத்தட்ட 70 சதவீதம் விருப்ப மானியங்களும் கடன்களுமாகும். மூன்றுவது

* அசோக் சந்தா எழுதிய, "இந்தியாவின் இணைப்பாட்சி முறை" என்னும் ஆங்கில நூலின், 185–186 பக்கங்கள்.

† 1970 ஏப்ரலில் புதுடில்லியில் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய தேசீய மாநாட்டிற்கு திரு ஜி. ராமச்சந்திரன் அவர்களால் அளிக்கப்பட்ட நடைமுறை அறிக்கை III-B.

திட்டத்தில் மாற்றப்பட்ட மொத்தம் நிதித்தொகையாகிய ரூ. 5,600 கோடியில், நிதி ஆணைக்குழு மூலம் மாற்றப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,488 கோடியாகும். விருப்ப மானியங்களின் மேலாதிக்கம், அரசமைப்புச்சட்டப்படி மாநிலங்களின் ஆளுகைக்குட்பட்ட கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம் போன்ற துறைகளிலும்கூட மாநில அரசுகளின் கொள்கைகளிலும் திட்டங்களிலும் மைய அரசு தலையிடுதற்கு இடமளித்து விட்டது. நிதி, திட்டம் முதலிய ஆளுகைக்குட்பட்ட விஷயங்களில் மைய—மாநில அரசுகளுக்கிடையே எப்போதும் மனக்கசப்பு இருந்து வருவதற்குரிய பல்வேறு காரணங்களில் ஒன்று விருப்ப மானியங்களில் மேலாண்மைக்கு முக்கிய இடம் அளித்திருப்பதுமாகும். அரசமைப்புச் சட்டத்தின் 282-வது உறுப்பின்படி அளிக்கப்படுபவையே இத்தகைய விருப்ப மானியங்களாகும். ' பல்வேறு வகையுரைகள் ' என்பதன்கீழ் வருகிற இவை, மாநில நிதிகளுக்கு முதன்மை ஆதாரமாக வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

*மைய-மாநில அரசுகளுக்கிடையே நிதிவாயில்களை முறையாகப் பரிமாற்றிக்கொள்வதை அரசமைப்புச் சட்டத்தில் முதலில் எதிர்பார்த்த இத்திட்டம் நிறைவற்றது என்பது தெளிவாகிறது. மைய நிதிவாயில்களில் குறிப்பிட்ட பகுதிதான் திட்ட ஆணைக் குழு பரிந்துரைகளின் பேரில் தரப்படுகிறதென்பதும், அவ்வாறு தரப்படுகிற தொகை விருப்பத்திற்குட்பட்டதும் நிபந்தனையுடன் கூடியதுமாகும் என்பதும், அதுவும் மைய நிதிநிலைமை பொறுத்து இத்தொகை ஏறவும் இறங்கவும் கூடுமென்பதும் மாநிலங்கள் மைய அரசையே பெரிதும் சார்ந்திருக்கும் நிலையை மேலும் உறுதியாக்கிவிட்டன.

50. மாநிலங்களுக்கு மைய அரசு அளிக்கும் மானியங்கள், நிதி ஆணைக்குழு அல்லது அது போன்ற சட்டப்படிக்கான தனிப்பட்ட சார்பற்ற குழுவின் பரிந்துரைகளின் பேரில் வழங்கப்படவேண்டும்.

நிதி ஆணைக் குழு.

51. இந்த அத்தியாயத்தின் முந்திய பத்திகளிலிருந்து, அரசமைப்புச் சட்டம் நிதி ஆணைக்குழுவிற்கு அளித்துள்ள முக்கிய பணி விளங்கும். அரசமைப்புச் சட்டத்தின்படி கட்டாயம் பிரித்துக் கொடுக்க வேண்டியவை, பிரித்துக்

* திரு ஜி. ராமச்சந்திரன் அவர்களின் நடைமுறை அறிக்கை எண் III-B

கொடுக்கப்படலாம் எனக் கருதப்படுபவை ஆகிய வரிகள் பங்குத் தொகைகளை மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் பிரித்துக் கொடுக்கும் நுட்பமும் சிக்கலும் மிகுந்த பணியை மேற்கொண்டுள்ளது இவ்வாணைக் குழு. மற்ற இணைப்பாட்சி களில் காணப்படாத ஆள்வையாக உள்ளது இவ்வாணைக்குழு. மைய—மாநில உறவுகளைப் பொறுத்தவரை, மைய அரசையும் மாநில அரசுகளையும் இணைக்கும் பாலமாக இருந்து, இவற்றிற்கிடையே கோபதாபங்கள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளும் சிறப்பு மிக்கதோர் இடத் தைப் பெற்றுள்ளது இவ்வாணைக் குழு. ஒன்று மாற்றி ஒன்றாகத் தங்கள் குறைகளை மாநிலங்கள் ஒவ்வொரு நிதி ஆணைக் குழுவிடமும் குவித்து விடுகின்றன. இக்குறைகள் ஒவ்வொன்றையும் தீர்த்து வைக்கும் எண்ணத்துடன் ஆராய்ந்து மிக நுட்பமாக சிக்கலையும் தீர்த்துவைக்கும் பெருமையை இவ்வாணைக் குழு பெற்றுள்ளது. போட்டி போட்டுக்கொண்டு உரிமைகளை நிலைநாட்ட முயலும் சூழ்நிலை களில், நடுவு நிலைமை தவறாமலும், ஒருதலைப்பட்சமாகச் செயற்படாமலும், சுதந்திரமாகவும் செயற்படும் ஆற்றல் இவ்வாணைக் குழுவிற்கு இருப்பதால்தான் மாநிலங்களின் நம்பிக்கைக் குரியதாக இக்குழு விளங்குகிறது. எனவே தான் இவ் வாணைக் குழுவின் அமைப்பு, பணிகள் ஆகியவை பற்றி எமது அறிக்கையில் ஆராய்வது பொருத்தமெனக் கருதுகிறோம்.

52. ஒரு நிதி ஆணைக் குழுவையோ அதற்கு இணையான ஓர் அமைப்பையோ ஏற்படுத்துவதற்கு 1935-ம் ஆண்டு இந்தியச் சட்டம் வகை எதுவும் செய்யவில்லை. இந்த எண்ணத்தை முதன் முதலாக உருவாக்கியதே மேற்கு வங்காளம் தான் எனத் தெரிகிறது. நிதி வகையுரைகள் குறித்து வல்லுநர் குழுவுக்கு அளிக்கப்பட்ட குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் காமன்வெல்த் மானிய ஆணைக் குழு அமைந்துள்ளதன் அடிப்படையில் நிதி ஆணைக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று மேற்கு வங்காளம் வற்புறுத்தியது. நிதி ஆணைக் குழு என அழைக் கப்படும் உயர் மட்டத் தீர்ப்பாயம் ஒன்றை நியமிப்ப தற்கு அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்படவேண்டு மென்பது வல்லுநர் குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும். இந்த ஆணைக் குழு சாதாரணமாகத் தொடர்ந்து பணியாற்று வதற்கான போதிய வேலை இருக்காது என்றும், உறுப்பினர் கள் இந்த வேலைக்கு முழு நேரம் ஒதுக்கவேண்டிய தேவை

யுமிராது என்றும் வல்லுநர் குழு தெரிவித்தது. அக்குழுவின் கருத்துப்படி, குடியரசுத் தலைவர் தம் உளத்தேர்வின்படி உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். இதற்குக் குழு கூறும் காரணமாவது, மைய-மாநில அரசுகளுக்கிடையே தகராறு ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண ஆணைக் குழுவுக்கு அடிக்கடி சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்பதே. இதன் தலைவர் பதவியிலுள்ள அல்லது ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் ஏனைய நான்கு உறுப்பினர்களுள், இருவர் மாநில அரசுகள் அனுப்பும் பட்டியலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் மற்றுமிருவர் மைய அரசு அனுப்பும் பட்டியலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருந்தாக வேண்டும் என்று அக்குழு தெரிவித்தது.

53. 1948 பிப்ரவரியில் வரைவுக்குழு தயாரித்த வரைவு அரசமைப்புச் சட்டத்தில், ஆணைக் குழுத் தலைவர் உட்பட உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை நாடாளுமன்றம் குறிப்பிடுவதற்கு 260-வது உறுப்பு வகை செய்துள்ளது. நிதி ஆணைக் குழுவில் மாநிலப் பிரதிநிதித்துவம் குறித்து வல்லுநர் குழுவின் பரிந்துரை, வரைவு அரசமைப்புச் சட்டத்தில் செயல்படுத்தப்படவில்லை. வல்லுநர் குழு கருத்து, நிதி ஆணைக்குழு நிலையான அமைப்பாக இருக்கவேண்டும் என்பதும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மீண்டும் புதுப்பிப்பதற்குட்பட்டு, ஐந்தாண்டு காலம் என வரையறுக்கப்படவேண்டும் என்பதுமாகும். மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிற வரி வருவாய்த் தலைப்புகளை மாற்ற அதாவது, புதிய தலைப்புகளை மாற்றவும், இப்போதுள்ள தலைப்புகளைத் திரும்பப் பெறவும் ஆலோசனை கூறும் அதிகாரம் நிதி ஆணைக்குழுவிடம் இருக்கவேண்டும் என்று வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. நிதிக்குழுவின் பரிந்துரைகள் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் எதையும் ஏற்படுத்தாத வரையில் அவை குடியரசுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆணை மூலம் அவரால் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைகள் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதாயிருந்து, குடியரசுத் தலைவரால் அவை ஏற்கப்பட்டால் அரசமைப்புச்சட்டத்தில் கொண்டுவர உத்தேசிக்கப்படுகிற ஏனைய திருத்தத்திற்குப் பின்பற்றப்படுகிற நடை முறையே அந்தப் பரிந்துரைகளுக்கும் பின்பற்றப்படவேண்டும் எனவும் வல்லுநர் குழுவின் அறிக்கையில் மேற்கொண்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரைவுச் சட்டம் இந்த உறுப்பில் இத்தகைய விவரங்களைச் சேர்க்கவில்லை.

54. 1948 நவம்பர் தொடக்கத்தில், அரசமைப்புச் சட்டமன்றத்தில் வரைவு அரசமைப்புச் சட்டம் விவாதிக்கப் படுகையில், திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி* நாட்டின் நிதி அமைப்பு முழுவதையும் ஆய்ந்து, சட்டமியற்றும் பட்டியல் களில் எடுத்துச் சொல்லியுள்ள வரித் தலைப்புகளைக் குறித்தும் பரிந்துரைகள் செய்வதற்கு நிதி ஆணைக் குழுவிற்கு வசதி யுண்டாக்கவேண்டுமென்னும் தம் கருத்தைத் தெரிவித் துள்ளார். நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளும் மைய மாநில அரசுகளைக் கட்டுப்படுத்துவதாக அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 1949 ஆகஸ்டில் வரைவு அரசமைப்புச் சட்டம் X-வது பாகத்தின் வகையுரைகள் அரசமைப்புச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, திரு கிருஷ்ணமாச்சாரி, மாநிலங்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்னும் நோக்கத்துடனேயே நிதி ஆணைக்குழு அமைக்கப்படுகிறது என்றும் அந்த ஆணைக்குழுவின் பரிந்துரை களின் பேரில் வரிப்பங்கீடு நிருவாகத்தினரால் பங்கிடப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.†

55. உறுப்பு 280-ன் (2)—வது பகுப்பையொட்டி, நாடாளு மன்றம் 1951-ம் ஆண்டு நிதி ஆணைக்குழு (பல்வகை வகை யுரைகள்)சட்டத்தை (மையச் சட்டம் 33/1951) இயற்றியது. இச்சட்டம், ஆணைக்குழு உறுப்பினரின் பதவிக்குரிய தகுதி கள், தகவின்மைகள், உறுப்பினர்களின் பதவிக் காலம், அவர் களுடைய ஊழிய நிபந்தனைகள், ஆணைக் குழுவின் அதிகாரங் கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதை 280-வது உறுப்பிலும், 1951-ம் ஆண்டுச் சட்டத்திலும் காணலாம். நிதிவகையுரை பற்றிய வல்லுநர் குழு, ஐந்து உறுப்பினர்களுள் இருவர் மாநில அரசுகள் தயாரிக்கும் பட்டியலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்பதை வெளிப்படையாகப் பரிந்துரைத்துள்ளதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும். வல்லுநர் குழு கருத்துப்படி ஆணைக் குழு உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் உளத்தேர்வுப்படி நியமிக்கப்படவேண்டும் என்பதையும் காணலாம். மேலே சொல்லிய அரசமைப்புச் சட்டம், ஏனைய சட்டதிட்டங் களின் வகையுரைகளின்படி, ஆணைக்குழுத் தலைவர் ஏனைய

* அ. ச. ம. வி· VII, பக்கம் 233

† அ. ச. ம. வி. IX, பக்கம் 326

உறுப்பினர்கள் ஆகியோரின் நியமனம் மைய அமைச்சரவை யாலேயே செய்யப்படவேண்டும். நிதி ஆணைக் குழுவின் தனித்தன்மை குறித்தும் பாரபட்சமின்மை பற்றியும் மறுப்பு கூறுவதற்கில்லை என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்; நிதி ஆணைக் குழு நியமனம் குறித்து தற்போதுள்ள ஏற்பாட்டில் மாற்றம் எதுவும் தேவையில்லை எனக் கருதுகிறோம். திரு க. சந்தானம் தமது அறிக்கையில் ஏற்கனவே கூறியபடி, மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் கலந்தாலோசித்த பிறகே ஆணைக் குழு உறுப்பினர் நியமனம் முடிவு செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துள்ள கருத்து ஆலோசித்தற்குரியதே.

56. ஆணைக்குழுவின் அலுவல் 280-வது உறுப்பின் (3)-வது பகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மைய-மாநில அரசுகளுக்கிடையே பங்கிடப்படவேண்டிய அல்லது பங்கிடப்படக்கூடிய வரிகள் மாநிலங்களுக்கு உதவி மானியங்களை வழங்குவதற்குரிய கொள்கைகள், இவை தவிர சிறந்த நிதி நலன் குறித்து குடியரசு தலைவர் ஆணைக் குழுவுக்குத் தெரிவிக்கக்கூடிய வேறு பொருள்கள் ஆகியவை குறித்து இந்த ஆணைக் குழு குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்து வருகிறது. மேற்சொன்ன (3)-வது பகுப்பு, 'உறுதியளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்' என்பது பற்றி விவரிக்கிறது. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறி குழுவினர் தெரிவித்தவாறு, பகிர்ந்தளிக்கவேண்டிய வரிகளும், 275-வது உறுப்பின்படி தரப்படும் உதவி மானியத் தொகைகளும் "நிதி ஆணைக் குழுவினுல் ஓரளவு நீதி முறையான தீர்ப்பின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகின்றன".

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கட்டுப்படுத்துவன அல்ல. சட்டப்படிப் பார்த்தாலும், அமைச்சரவை ஆலோசனையின்பேரில் குடியரசுத் தலைவர் ஆணைக்குழு ஆலோசனைக்குப் புறம்பாக நடக்கலாம். ஆனுல், ஆணைக்குழு ஓரளவுக்கு ஒரு நடுவர் மன்றமாக இருப்பதாலும் மைய-மாநில அரசுகளுக்கிடையே நியாயம் வழங்குவதே இதன் பணியாகையாலும், ஆணைக்குழு பரிந்துரைகளுக்கு மாருக நடக்குமாறு குடியரசுத் தலைவருக்கு எந்த அமைச்சரவையும் ஆலோசனை கூருது என்பது சட்ட ஆலோசகர் சர் பி. என். ராவ் கருத்தாகும். இது பற்றி பேராசிரியர் அலெக்ஸாண்ட்ரோவிஷ் என்பவர் தாம் எழுதிய "இந்தியாவில்அரசியலமைப்பு வளர்ச்சி" என்னும் ஆங்கில நூலில் தெரிவிக்கும் கருத்தானது:—"குடியரசுத்

தலைவர் அமைச்சரவை ஆலோசனையின் பேரில் தான் நடக்கவேண்டும் என்றிருந்த போதிலும்கூட, அந்த ஆலோசனைக்கும், நிதி ஆணைக்குழு அளித்த ஆலோசனைக் குமிடையே முரண்பாடு எழுமானால், முடிவு எடுப்பதில் அமைச்சரவை, ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் புறக் கணிக்க இயலாது''. ஆனால், இப்போது உள்ளவாறு இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மைய அமைச்சரவை மாற்றி யமைப்பதையோ அல்லது முற்றிலுமே தள்ளி விடுவதையோ எதுவும் தடுக்காது. 275-வது உறுப்பின்படி அளிக்கப்படும் மானியத் தொகைகள், உபரி வரி நிதி ஒதுக்கீடுகள் உட்பட மாநிலங் களின் மொத்தத் திட்டச் செலவில் 75 சத வீதம் செலவினங் களுக்காகும் வகையில் இருக்க வேண்டும் என்கிற மூன்றுவது ஆணைக் குழுவின் பெரும்பான்மையோர் கருத்து மைய அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அரசமைப்புச் சட்ட மன்றத் தலைவரால் அமைக்கப்பட்ட நிதிவகையுரை பற்றிய வல்லுநர் குழு, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் எல்லாத் தரப்பினர்களையும் கட்டுப்படுத்துவதாய் அமையவேண்டும் என்று தெரிவித்துள்ளது என்பதை ஏற்கனவே குறிப்பிட் டோம். அரசமைப்புச் சட்ட மன்றத்தில் ஒரு கட்டத்தில் இதே கருத்தைத் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் கூறியுள்ளார். திரு க. சந்தானம், மேலே குறிப்பிட்ட அவர் தம் அறிக்கையில், நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தீர்ப்புகளாகக் கருதப்பட வேண்டும் என்றும் இதனால் அரசியல் காரணங்களுக்காக, மாநிலங்களுக்கிடையே பார பட்சமாக மைய அரசு நடந்துகொள்வதற்கு வாய்ப்பு எதுவுமிருக்காது என்றும் தெரிவித்துள்ளார். நிதி ஆணைக் குழுக்கள் நீண்ட காலமாகவே நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. அவற்றினுடைய பரிந்துரைகள் எல்லாத் தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாக அமைந்திருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்வது விரும்பத்தக்கதாகும்.

57. வரி விதிப்பு முயற்சிகளையொட்டி மாநிலங்களின் தேவைகளை மதிப்பிடுவது, செலவில் சிக்கனம், மக்கள் நல நடவடிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட பணி, கவனிப்புக் குரிய தொடர்ந்ததொரு பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை குறித்த ஆராய்ச்சி எதுவும், பயன் தரத்தக்க வகையில் அமைய வேண்டுமாயின், அது நிலையான செயலகத்தின் துணைகொண்டு திறன் மிக்க நிலைக் குழு ஒன்றால் மேற்

கொள்ளப்பட வேண்டும். பல்வேறு வாயில்களிலிருந்து சேகரிக்கப்படவேண்டிய விவரங்களும் விரிவானதொரு பரிசீலனையும், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் கணிசமான அளவு துணை புரியும். ஆகவே, நிதி ஆணைக்குழு தனக்குரிய செயலகத்துடன் நிலையான அமைப்பாக இருக்கவேண்டும் என்று இக் குழு பரிந்துரைக்கிறது.*

58. இத்தகைய திட்ட மானியங்களினாலேயே நிதி ஆணைக் குழுவின் அமைப்பும் அதன் முக்கியத்துவமும் கணிசமான அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. 'பொருளாதார சமூக முறையில் திட்டமிடுதல்' என்பது பொது அதிகாரப் பட்டியலின் 20-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பதிவுக்கு இணையாகச் சட்டம் எதுவும் இல்லை. மைய அரசின் நிர்வாக அதிகாரமும் சட்டமியற்றும் அதிகாரமும் இணையாகவே பரவி வந்த போதிலும், திட்டமிடுவதைப் பொறுத்த அதிகாரம், அரசமைப்புச் சட்டத்திலாயினும், நாடாளுமன்றச் சட்டம் எதிலாயினும் வெளிப்படையான வகையுரை எதுவும் காணாத வரையில், மாநிலங்களுக்கு விரிவடையாது— உறுப்பு 73 (1)-ன் வரம்புரையைக் காண்க. திட்ட ஆணைக் குழு அமைக்கப்பட்ட பிறகு, அக்குழுவின் ஆலோசனையின் பேரில், மைய அரசு, மாநில அதிகாரப் பட்டியலுக்கே உரிய துறைகளிலும் கூட மாநிலங்களின் திட்ட வளர்ச்சிக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. திட்டக் காரியங்களுக்காக மாநிலங்களுக்குச் செய்யப்படும் நிதி மாற்றம், ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காக விருப்ப மானியங்கள் மற்றும் கடன்கள் வடிவில் அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன அரசமைப்புச் சட்டத்தின் நிலை எவ்வாறாக இருந்த போதிலும், மாநிலங்கள் அனைத்திற்கும் ஒருங்கே எல்லாவற்றையும் உள்ளிட்டு திட்டமிடும் பணியை மைய அரசு ஏற்றுச் செய்கிறது.

59. ஏற்கனவே தெரிவித்தபடி, அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதி ஆணைக் குழுக்கள் திட்ட ஆணைக் குழு மூலமாக நிதி ஒதுக்கிடுவதால் நிதி ஆணைக் குழுவின் அலுவல் எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுள்ளன. மூன்றாவது நிதி ஆணைக்குழு இதற்கு ஒரு தீர்வு கூறியது. இதற்குரிய மாற்று ஏற்பாடு இரண்டினை எடுத்துச்

* 1970 டிசம்பர் 31 நாளிட்ட 'காபிடல்' என்னும் ஆங்கில இதழின் இணைப்பில் வெளியிடப்பட்ட தமது கட்டுரையில் திரு பாபடோஷ் தத்தா அவர்களும் இதே கருத்தையே தெரிவித்துள்ளார்.

சொல்லியது. இதிலொன்று, கடன் மூலமாகவாயினும், வருவாய்களை ஒதுக்கும் வகையிலாயினும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மொத்த நிதி உதவியை உள்ளிட்டு நிதி ஆணைக் குழு அலுவல்களை விரிவுபடுத்துவது. இது, அரசமைப்புச் சட்டத்தின் வெளிப்படையான வகையுரைகளின் பொது இயல்புக்கு இணக்கமானதாகும் என்று மூன்றாவது ஆணைக் குழு கூறியது. ஆணைக்குழு தெரிவித்த இரண்டாவது மாற்று ஏற்பாடு, பொருத்தமான சமயத்தில் திட்ட ஆணைக் குழுவை நிதி ஆணைக்குழுவாக மாற்றுவதாகும்.

60. மைய-மாநில உறவுகள் பற்றி ஆய்ந்துள்ள நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் கற்றறி குழு நிதி ஆணைக்குழுவுக்கும் திட்ட ஆணைக் குழுவுக்குமிடையே முரண் பாட்டைத் தவிர்ப்பதற்கான பல வேறு மாற்று ஏற்பாடு களை ஆராய்ந்து பார்த்தபிறகு, பின்வருமாறு பரிந்துரைத்தது: திட்ட ஆணைக்குழுவிடம் வரவு-செலவுத் திட்டத் தேவைகளை முடிவு செய்யும் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டும்; நிதி ஆணைக்குழு, மைய வரிகளைப் பங்கிட்டுப் பகிர்ந்தளிப்பதைப் பொறுத்தமட்டிலும் கவனிக்க வேண்டும். திட்ட ஆணைக்குழு, திட்ட உதவியையும் திட்டப் பணிக் கல்லாத மானியங்களையும் முடிவு செய்யவேண்டும். எனினும், மாநிலங்களுக்குத் திட்டமானியங்களைப் பகிர்ந் தளிப்பதை அனுசரித்த கோட்பாடுகளைப் பரிந்துரைக்கு மாறும் நிதி ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்படவேண்டும் என்றும் தாம் பரிந்துரைக்கையில் தமக்கு முன்பு திட்ட ஆணைக்குழு தயாரித்த ஐந்தாண்டுத் திட்ட வரைவு வைக்கப் பட்டிருக்கும் வகையில் உரிய காலத்தில் நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு பரிந்துரைத்தது. ஐந்தாண்டுகட்கு ஒரு முறை திட்டமானியங்களை முடிவுசெய்யுமாறு நிதி ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்னும் கருத்தையே திரு க. சந்தானம் அவர்களும் கொண்டுள்ளார்—ஏற்கனவே குறிப்பிட்டுள்ள அவரது அறிக்கையைக் காண்க. இக்குழு முன்பு இதே கருத்தையே திரு என். ஏ. பால்கிவாலா வும் தெரிவித்துள்ளார். நிதி திட்ட ஆணைக்குழுக்களிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுதற்கு வகைசெய்யும் பொருட்டு, திட்ட ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரை நிதி ஆணைக்குழு உறுப்பின ராக நியமிக்கவேண்டும் என்று நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழு கருத்து தெரிவித்துள்ளது. அக் குழுவின் பரிந்துரை இதற்குச் சிறந்ததொரு தீர்வு எனக்கருதப்படுகிறது.

இதையே ஏற்றுக்கொள்ளலாம் என்று நாங்களும் பரிந்துரைக்கிறோம். இதன்படி நிதி ஆணைக்குழு நியமிக்கப்படுகையில், அதன் உறுப்பினர்களுள் ஒருவர், திட்ட ஆணைக்குழு உறுப்பினர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படவேண்டும். நிதி ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுகிற திட்ட ஆணைக்குழு உறுப்பினர் மைய அமைச்சராகவோ மைய அரசுடன் எவ்வகையானும் சம்பந்தப்பட்டவராகவோ இருக்கக்கூடாது என்று கருதுகிறோம். மாநிலங்களின் நம்பிக்கை பெற்ற ஒருவராகவும் இவர் இருக்க வேண்டும்.

61. திட்ட ஆணைக்குழு, அரசமைப்புச் சட்டத்தின் அல்லது ஏதாவது ஒருசட்ட திட்டத்தின் அடிப்படையில் அமையப்பெற்ற ஓர் அமைப்பு அன்று; மைய அரசு நிர்வாக சம்பந்தப்பட்ட ஆணை ஒன்றினால் அமைக்கப்பெற்றது. புதுடில்லியில் 1970 மே 3-ம் நாள் நடைபெற்ற மைய-மாநில உறவுகள் பற்றிய இந்தியன் பார்லிமென்டரி சங்கக் கருத்தரங்கில், பேசுகையில் திரு. மொரார்ஜி தேசாய், திட்டவாயில்களின் நிதி ஒதுக்கம், நிலைச்சட்டம் ஒன்றால் முறைப்படுத்தப்படக்கூடாதா என்பது குறித்து விவாதித்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தில், இவர், இது குறித்து முந்திய ஆண்டுகளிலெல்லாம் ஒழுங்குமுறை எதுவுமில்லை என்பது உண்மையென்றும், மக்களின் ஒருதலையான விருப்பம் அமைந்தவாறு சிலருக்கு மட்டும் சில சமயங்களில் சலுகைகள் காட்டப்பட்டுவந்தன என்றும் தெரிவித்துள்ளார். நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு கூறியபடி, நிதி ஆணைக்குழு மூலமாக மாநிலங்களுக்கு 282-வது உறுப்பின்படி மானியங்கள் ஒதுக்கப்படுவதாயின், மைய அரசு ஒருசார்பாக நடந்துகொள்கிறது என்னும் குறைபாட்டிற்கு இடமே இருக்காது.

நிதிகளைப் பகிர்ந்தளிப்பது, மானியங்களை ஒதுக்குவது யாவும், நிதி ஆணைக்குழு அல்லது அரசுச் சார்பற்றவர்களைக் கொண்ட வேறு ஒரு குழு போன்ற பாரபட்சமற்ற அமைப்பு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இத்தகையவற்றில் இது எடுத்த முடிவையே மைய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை திட்ட மானியங்களையும், திட்டப் பணிகளுக்கல்லாத மானியங்களையும் முடிவுசெய்யும் பொறுப்பு நிதி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டும். மைய அரசு இதன் பரிந்துரைகளை ஒரு தீர்ப்பாகவே

கருதவேண்டும். இதனால், அரசியல் காரணங்களுக்காக மாநிலங்களுக்கிடையே மைய அரசு பாரபட்சம் காட்டவும் வாய்ப்பு இருக்காது.

கடன்களும் மாநிலங்கள் கடன்பட்டிருத்தலும்.

62. நிதிபற்றி விவரிக்கையில், இத்துடன் தொடர்புடைய மற்றொரு பொருள் தலைப்பை அதாவது மாநிலங்கள் கடன்பட்டிருக்கும் நிலை பெருகி வரும் நிலையையும் கவனிக்காமல் விடுவதற்கில்லை. கடன் வடிவில் மைய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கும் உதவி, அதாவது நிதி ஆணைக்குழு பரிந்துரைகளின் பேரிலோ அல்லது வேறு வகையிலோ மானிய வடிவில் அளிக்கப்படுகிற உதவியைக் காட்டிலும் மிகவும் அதிகமே. மாநில அரசுகளிடம் நிலுவையாகவுள்ள கடன் பொறுப்புகளில் பெரும் பகுதி, மைய அரசிடமிருந்து பெற்ற கடனை முன்னிட்டதே. இந்தக் கடன் பிரச்சினை பற்றியும், மைய-மாநில உறவு குறித்த தனது அறிக்கையில் நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு விவரித்துள்ளது. திட்டப்பணிகளுக்குரிய கடன்கள் ஆதாயவகையைச் சேர்ந்தவையாக இருந்தால் மட்டுமே கொடுக்கப்படவேண்டும் என்றும் திட்டப்பணி ஆதாய முடையதா இல்லையா என்பது குறித்து திட்ட ஆணைக்குழு, நிதி மற்றும் பிற மைய அமைச்சகங்களுடன் கலந்து கொண்டு முடிவு செய்யவேண்டும் என்றும், ஆதாயமல்லாத மூலதனக் கடன்கள் பற்றிய உதவி மூலதன மானியங்கள் வடிவில் இருக்கவேண்டும் என்றும் இது பரிந்துரைத்துள்ளது.

திட்டப்பணிகளுக்காக மாநிலங்களுக்கு அளிக்கப்படுகிற மைய அரசுக் கடன்களை விவரிக்கும் பிரச்சினையையும், கடனைக்கரைக்க கடன்கரைப்பு நிதி ஒன்றை ஏற்படுத்துவதையும் வல்லுநர் குழு ஆராய்ச்சிக்கு விடவேண்டுமென்றும் இது கூறியுள்ளது. சில மாநிலங்கள் இந்திய ரிசர்வ் வங்கியிடம் மைய அரசு அனுமதி பெறாத அதிகப்பற்று வாங்கும் பிரச்சினையையும், அத்தகைய அதிகப்பற்றுகளைத் தவிர்க்கப் பின்பற்ற வேண்டிய நடைமுறையையும் குறித்துத் தக்க பரிந்துரைகளை அளிக்குமாறு ஐந்தாவது நிதி ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு இந்த ஆணைக்குழு தனது அறிக்கையின் 247-வது பக்கத்தின் 43-வது பத்தியில் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளது : பொதுவாக மைய நிதிகள் கொடுக்கப்படுகிற நேரத்திற்கும் வெளிச்சந்தைக் கடன் திரட்டுகின்ற காலத்திற்கும் நிகரான காலங்களில்

தவணைகளில் கடனைத் திருப்பிச்செலுத்துவதற்கு ஏற்றவாறு மாநிலங்களுக்கு உரித்த கடன்களைத் தொகுக்கின்ற நடைமுறையைத் தக்கவாறு மாற்றியமைப்பதற்கான சாத்தியக் கூறினை மைய அரசு ஆராய வேண்டும்.

63. 1970-71-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தை 1970 பிப்ரவரி 26-ம் நாள் முன்வைத்து தமிழ்நாட்டின் முன்னாள் நிதி அமைச்சர் பேசுகையில், மாநிலங்கள் வாங்கிய கடனை மைய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு 20 முதல் 25 ஆண்டுகள் என மீண்டும் வரையறுக்கப்பட வேண்டும்; இது எந்த நோக்கங்களுக்காக கடன் தொகை பயன்படுத்தப்படுகிறதோ அந்த நோக்கங்களுக்கு ஒத்ததாக அமையும் என்று குறிப்பிட்டார். கடனளித்தல், கடனைத் திருப்பிச் செலுத்தல் முறையை முற்றிலும் சீரமைக்கும் நோக்குடன் இந்த பிரச்சினையை முழுவதும் ஆராய்வதற்கு இணைப்பாட்சிக் கடன் ஆணைக்குழு ஒன்றை மைய அரசு அமைக்கும் தருணம் வந்துவிட்டது என்று மேலும் அவர் வற்புறுத்தினார்.

64. ஆஸ்திரேலிய காமன்வெல்த்திற்கும் காமென்வெல்த்தில் அங்கம் வகிக்கும் மாநிலங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையை யொட்டி, ஆஸ்திரேலிய கடன் மன்றம் முதன் முதலில் ஏற்பட்டதை கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். அரசமைப்புச் சட்டத்தின் 105-அ பிரிவின்படியும், காமன்வெல்த்தும் மாநிலங்களும் இயற்றிய சட்டங்களின் படியும், காமன்வெல்த்தையும் மாநிலங்களையும் கட்டுப்படுத்துகின்ற வகையில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த மன்றம் காமன்வெல்த் பிரதமரையும், மாநிலங்களின் முதல் அமைச்சர்களையும், அல்லது அவர்களின் பிரதிநிதிகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு வாக்கு உண்டு. ஆனால், காமன்வெல்த்திற்கு இரு வாக்குகளும் முடிவு வாக்கு ஒன்றும் உண்டு. காமன்வெல்த்தினுடையதும், ஒவ்வொரு மாநிலத்தினுடையதுமான கடன் திட்டம் ஒவ்வோர் ஆண்டிலும் மன்றத்திற்கு அனுப்பப்படுகிறது. நியாயமான வீதங்களிலும் நிபந்தனைகளின்படியும் பணிகளுக்குரிய மொத்தத் தொகை பெறமுடியாது என்று கடன் மன்றம் முடிவுசெய்தால், கடன் திட்டத்திற்கான குறிப்பிட்டதொரு தொகையை அது நிச்சயிக்கிறது. ஒவ்வொரு கடனாளிக்கும் ஒதுக்கப்படுகிற பங்குத் தொகை குறித்து மாநிலங்களும் காமன்வெல்த்தும், ஒருமித்த தீர்மானம் மூலமாக, உடன்பட

வில்லையானல், உடன்படிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்ட வழிமுறைக் கிணங்கவும், ஒவ்வொரு மாநிலமும் முந்திய ஐந்தாண்டுகளில் வாங்கிய கடனைப் பொறுத்தும் தொகை ஒதுக்கப்படுகின்றது.

65. மாநிலங்கள் கடனாளியாகவுள்ள பிரச்சினை, மைய மாநிலங்கள் உறவு நிலையில் மிகுந்த மனக்கசப்புக்கு இடமளிக்கிறது. இந்தப் பிரச்சினை முழுவதையும் ஆராய்ந்து பார்க்க நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுபரிந்துரைத்தவாறு வல்லுநர் குழுவை அமைக்கலாம் என்பதை வலியுறுத்துகிறோம். இக்குழு, மாநிலங்களிலிருந்து முறையீடுகளை கேட்டுப் பெற்று, கருத்துப் பாங்குடனும், பாரபட்சமற்ற முறையிலும் பரிசீலனை செய்யும் என்பதில் சந்தேகமேயில்லை. இந்நோக்கத்திற்காக அமைக்கப்படவிருக்கிற குழு, கடனுக்காக, மாநிலங்கள் மைய அரசுக்குச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களைக் கருதிப் பார்ப்பதற்கு ஆஸ்திரேலிய கடன் மன்ற அடிப்படையில் ஓரமைப்பையாவது அல்லது உலக வங்கியின் அடிப்படையில் வங்கி அமைப்பதையாவது ஆலோசித்துப் பார்க்கலாம்.

நிவாரண நிதி

66. வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடரின் போது, மைய அரசு உதவிவேண்டி அந்தந்த மாநிலங்கள் கோரிக்கொள்வது தற்போதுள்ள நடைமுறையாகும். மைய அரசு மாநில அரசுகளிடம் பாரபட்சம் காட்டுகிறது என்னும் குறைபாட்டுக்கு இந்த நடைமுறை இடமளித்துவிட்டது. இந்த நெருக்கடி நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, இயற்கை உற்பாதங்களினல் ஏற்படுகிற இன்னல்தனைத் தணிப்பதற்கு ஒவ்வொரு மாநிலமும் நிதியொன்றை அமைக்க வேண்டுமென்று இக் குழு கருதுகிறது. இம்மாநிலத்திலே ஏற்கனவே பஞ்சத் துயர் தணிப்பு நிதி ஒன்று உள்ளது. இது 1936-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சத் துயர்தணிப்பு நிதிச் சட்டத்தினல் (தமிழ்நாடு சட்டம் 16/1936) ஏற்படுத்தப்பட்டு முறையாக வைத்துவரப்படுகிறது. கடுமையான பஞ்சம் வெள்ளம் இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றல் ஏற்படுகிற கடுமையான பஞ்சத்தை அல்லது துயர்தனைத் தணிப்பதற்காக அன்றி மற்றப்படி, இந்நிதியிலிருந்து செலவு எதுவும் செய்யக் கூடாது என்று இச் சட்டம் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. ஆனல் பஞ்சம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக

பாதுகாக்கப்பட்ட பாசன வேலைகள் மற்றும் ஏனைய வேலைகளுக்காக செலவு செய்ய இந் நிதியில், 40 லட்சத்திற்கு மேற்பட்டுள்ள தொகையைப் பயன்படுத்த இச்சட்டம் அனுமதிக்கிறது. இம்மாநிலத்தில் பஞ்சத் துயர்தணிப்பு நிதியைப் போன்றதொரு நிதியை ஏனைய மாநிலங்களும் கொண்டிருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது. எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகையதொரு நிதி அமைக்கப்படவில்லையாயின், அத்தகையதொரு நிதியை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கிறது. செம்மைப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்த நிதியைப் பயன்படுத்த அனுமதித்து சட்ட வகையுரைகளை திருத்த வேண்டியிருக்கும்.

அத்தியாயம் VI.

மையம் திட்டமிடுதலும் திட்ட ஆணைக் குழுவும்

திட்டமிடுதலுக்கான சட்டமியற்றும் பதிவு, 1935-ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தில் இல்லை. தற்போது இப்பதிவு பொது அதிகாரப் பட்டியலில், பொருளாதார, சமூகத் திட்டமிடுதல் என்னும் தலைப்பின்கீழ் உள்ளது. ஆனால், இந்தப் பதிவால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், இதுவரை நாடாளுமன்றத்தால் சட்டமொன்றும் இயற்றப் படவில்லை. பொருளாதார சமூகத் திட்டமிடுதலுக்குப் பொறுப்புடைய திட்ட ஆணைக் குழுவே, சட்டத்தின் அடிப் படையில் நியமிக்கப்பெறவில்லை. நிதி ஆணைக் குழுவை நிய மிப்பதற்கு உறுப்பு 280-ல் உள்ளது போன்ற வழிவகை, திட்ட ஆணைக்குழுவை நியமிப்பதற்கு இல்லை. திட்ட ஆணைக் குழுவிற்குச் சட்ட அடிப்படையிலான நிலை தரப்பட வேண்டிய இன்றியமையாமை பற்றி, நான்காம் நிதி ஆணைக் குழுவின் தலைவர் தமது அறிக்கையின் துணைக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார் :—

" திட்ட ஆணைக்குழு போன்ற ஓர் அமைப்பிற்கு அர சமைப்புச் சட்டத்தில் இடமில்லை. இந்திய அரசால் நிறை வேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்மீது அது அமைக்கப் பெற்றது. அக்குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை பற்றியோ, உறுப்பினர்கள் தகுதிகள் பற்றியோ வரையறை செய்யப் பெறவில்லை. தனது விருப்பப்படி, அக்குழுவின் எண்ணிக்கையை மாற்றியமைக்கவும், யாரை வேண்டுமானா லும் உறுப்பினராக நியமிக்கவும் அரசு சுதந்திரம் பெற் றுள்ளது. அக்குழு செயற்படும் கால எல்லை பற்றிய வரை யறையுமில்லை. அது நியமிக்கப்பட்ட காலத்தில், ஒரு தற் காலிக அமைப்பாகச் செயற்பட்டு வரும் என்றுதான் கருதப் பட்டிருக்க வேண்டும். ஒரு விதத்தில் அவ்வாறே அது இப் போது செயற்பட்டும் வருகிறது. எனினும், அது நின்று நிலைத்துவிட்டது என்பது வெளிப்படை. இக்குழுவின் அமைப்பு வழக்கத்திற்கு மாறாக உள்ளது. இதன் தலைவராக தலைமை அமைச்சர் உள்ளார். இதன் உறுப்பினர்களிடையே மூத்த அமைச்சர்களும் காணப்படுகின்றனர். அரசினின்றும் சுதந்திரமாகச் செயற்படும் நிதி ஆணைக்குழு போன்ற ஒரு சட்ட முறையான அமைப்போடு ஒப்ப நோக்கும்போது,

திட்ட ஆணைக்குழுவை அரசியல் சார்புடைய அமைப்பு என்று கூடச் சொல்லிவிடலாம். இக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையிலும் உறுப்பினர்கள் நியமனத்திலும் அவ்வப் போது மாறுதல்கள் இருந்து கொண்டே வந்துள்ளன. அறிவுரை வழங்கும் ஓர் அமைப்பாகச் செயற்பட்டாலும், இக் குழு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கதும் முக்கியமானதுமான இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வளவு முக்கியத்துவம் இருந்தும், அரசிற்கும் இதற்கும் உள்ள தொடர்பு என்ன என்று தெளிவாக வரையறுக்கப் படவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் அல்லது சட்டமியற்றும் அதிகாரத்தின் ஆதரவின்றி இன்றுவரை இது ஒரு வெறும் அமைப்பாகவே இயங்கி வருகிறது. திட்டமிடுதல் பற்றிய கொள்கை வகுத்தல், செயல்முறை வகுத்தல் ஆகியவை திட்ட ஆணைக் குழுவின் அதிகார வரம்பிற்குள் வருகின்றன. மானியங்களாகவும், கடன்களாகவும் திட்டப் பணிகளுக்கு மைய அரசு உதவி செய்வது, திட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளைப் பொறுத்தே நடைபெறுகிறது. எனவே, இதே துறையில் நிதி ஆணைக்குழுவும் செயற்படுவது இயலாதது என்பது தெளிவு. ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படும் வருவாய் இடைவெளியைத் தீர்மானித்து, அவ்விடைவெளியைப் போக்கத்தக்க விதத்தில், வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தல், மானி உதவிகள் செய்தல் ஆகியவையே தற்போது நிதி ஆணைக் குழுவின் முக்கிய பணிகளாக அமைந்துள்ளன. இவ்வாறு ... களைப் பிரித்துச் செயற்படுவதைப் பற்றித் தனிப்பட்ட முறையில் நான் சொல்லுவதற்கொன்றுமில்லை. ஆனால், இந்த இரண்டு ஆணைக் குழுக்களின் அதிகார எல்லை, பணிகள் ஆகியவற்றைத் தெளிவாக வரையறை செய்திடல் வேண்டும். இதற்கென அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும். அரசோடு தொடர்பில்லாத வகையில், சுதந்திரமாகச் செயற்படும் சட்ட முறை அமைப்பாகத் திட்ட ஆணைக் குழு செயற்பட வேண்டும்'' (பக்கங்கள் 89–90).

1959-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் திரு க. சந்தானம் நிகழ்த்திய சொற்பொழிவுகளைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும்போது, எந்த அடிப்படையின்மீது திட்ட ஆணைக் குழு செயற்படத் தொடங்கியது என்பதை அவர் நினைவுபடுத்தியுள்ளார். ''மாநிலங்கள், மைய அரசு ஆகியவற்றின் நிர்வாகத்தைப் பொறுத்த கொள்கையில் ஒருமைப்

பார்டும், எல்லா மாநிலங்களும் ஒரே சீரானவையல்லவென்று லும் அநேகமாக ஒன்று போன்றவையாகும்'' என்ற அடிப் படைதான் அது என்பது அவரது கருத்தாகும். மேலும், '' எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலைமைகள் ஒரே சீரானவை ; எனவே ஒன்றுபோன்ற செயல் திட்டங்களை உருவாக்கும்போது ஒரே மாதிரியாக நிதியுதவியை எல்லா மாநிலங்களுக்கும் அளித்தல் வேண்டும் '' என்பதும் அடிப் படையாகும் என அவர் கருதுகிறார். அவருடைய கருத்துப் படி, திட்ட ஆணைக்குழுவானது அரசமைப்புச் சட்டமன்றம் ஏற்படுத்திய பல பகுதிகளைத் தழுவிய அல்லது பற்பல வட் டாரங்களை உள்ளடக்கிய இணைப்பாட்சியை ஒதுக்கித்தள்ளி விட்டு, செங்குத்தான ஒரு இணைப்பாட்சியை உருவாக்கி யுள்ளது. திட்டமிடுங் கொள்கை, இணைப்பாட்சியை ஒதுக்கி விட்டது என்றும், அநேக விதங்களில், நம் நாடு ஒற்றை யாட்சி முறையில் இயங்குகிறதென்றும் அவர் கருதுகிறார். மைய அரசு மாநில அமைச்சரவைகளுக்குக் கட்டளையிடுவ தென்பது, மாநிலத் தன்னாட்சியென்னும் உணர்விற்கு மாறு பட்டதாகும். குறிப்பிடத்தக்க வகையில் வலுவுடன் மைய அரசு செயற்படவும் மிக முக்கியமான எல்லாக் காரியங்களி லும் மாநிலங்களைக் கட்டுப்படுத்தவும் வேண்டிய அதிகாரத் தினை அரசமைப்புச் சட்டம் மைய அரசுக்கு வழங்கியுள்ளது. திட்டமிடுதல், இச்செயற்பாட்டை மேலும் வலுவாக்கியது. பொருளாதார வளர்ச்சிக்காகவும் நிதியுதவிக்காகவும் மைய அரசை ஒற்றையாட்சி அரசாகச் செய்துவிட்டது திட்ட மிடுதல் எனும் செய்கை. அரசியல் செல்வாக்குகளும் மையத் தில் அதிகாரங்கள் குவியத் துணை செய்துள்ளன.

திட்டமிடுதலின் விளைவுகளைப்பற்றி, நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு நியமித்த கற்றறி குழு கீழ்க்கண்டவாறு கருத் தறிவித்துள்ளது :—

'' மைய அரசின் அதிகாரப்பட்டியல், மாநில அரசின் அதிகாரப்பட்டியல், பொது அதிகாரப்பட்டியல் என்று பரந்து நின்ற நிர்வாக முறையைத் திட்டமிடுதலானது திட்டப்பகுதி, திட்டத்திற்கப்பாற்பட்ட பகுதியென்று இரண்டு செங்குத்துக் கூறுகளாகப் பிரித்துவிட்டது....திட்ட மிடுதலின் பின்விளைவுகளும் நிர்ப்பந்தங்களும் திட்ட உலகில் இந்த மூன்று பகுதிக் கூறுகளையும் ஒன்றாக்கி, ஒருமுகம் படைத்த பாளமாக்கி மாநில அரசின் அதிகாரப்பட்டியல் களுக்காகவும் பொது அதிகாரப்பட்டியல்களுக்காகவும்

மாநிலங்களில் செயற்படுத்தப்பட்டாலும் இது மைய அரசின் கட்டுப்பாட்டிற்கே உரியதாகிவிட்டது''.

2. திட்டமிடுதலுக்கான அதிகாரம் அரசமைப்புச் சட்டத்திலும் பிற சட்ட வகையுரைகளிலும் இல்லாத காரணத்தால், மாநிலங்கள் கையறு நிலையில், மைய அரசு இடும் நிதி உதவியை நம்பி இருக்கவேண்டியுள்ளது. இதன் விளைவாக, மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பெற்ற அதிகாரங்களில், மைய அரசு ஊடுருவல் செய்ய வாய்ப்பேற்பட்டுவிட்டது.

திட்ட ஆணைக் குழுவின் பங்கு பற்றி, 1969-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தாம் நிகழ்த்திய லால்பகதூர் சாஸ்திரி நினைவுச் சொற்பொழிவுகளில், டாக்டர் கோ. சுப்பா ராவ் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

''. . . இந்தியாவில் அமைக்கப்பெற்ற திட்ட ஆணைக் குழு, அரசமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்பட்டது. ஒரே கட்சி, மாநிலங்களிலும், மையத்திலும் அதிகாரத்தில் இருந்ததால் இது சாத்தியமாயிருந்தது. மைய அரசின் அமைச்சர்கள் பலருடைய நெருங்கிய தொடர்பைப் பெற்றிருந்ததாலும், தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியாளும் அதிகாரத்தைப் பெற்றிருந்ததாலும், இது மதிப்பில் உயர்ந்து நின்றது. ஆண்டு பலவாக, இது அமைச்சரவைக்கும் மேற்பட்ட ஓர் அமைப்பாக உருவெடுத்து விட்டது. . . . திட்ட ஆணைக் குழுவின் மூலமாக, மாநிலப் பகுதிக்கான திட்டத்தையும் அதைச் செயற்படுத்தும் அதிகாரத்தையும் மைய அரசு தன்னிடமே வைத்துக் கொண்டது''. *

திட்ட ஆணைக் குழு தயாரித்த வரைவு திட்டத்தில் கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலங்கள் தங்கள் பகுதிகளுக்குத் திட்டங்களை வகுத்த போதிலும், திட்ட ஆணைக் குழுவும் மாநிலங்களின் பிரதிநிதிகளும் கலந்து பேசியபின்பே திட்டங்கள் இறுதியாக்கப்பெறுகின்றன. திட்டங்களை உருவாக்குவதிலும், அவற்றைச் செயற்படுத்துவதிலும் மாநிலங்களை ஆட்டிவைக்க மைய அரசால் இயலுகிறது. காரணம், உறுப்பு 282-ன் கீழ் மாநிலங்களுக்கு மைய அரசு தன் விருப்பப்படி வழங்கலாகும் மானியங்களே. எனவே, திட்டமிடுதலுக்கான நடைமுறையும் திட்ட ஆணைக் குழுவின் நடவடிக்கைகளும், பொதுவாக மாநிலத் தன்னாட்சிக்கும்,

* இந்திய இணைப்பாட்சி எனும் ஆங்கில நூலில்—பக்கம் 51-ஐக் காண்க.

குறிப்பாக, அரசமைப்புச் சட்டத்தால் மாநிலங்களுக்கெனத் தனியே ஒதுக்கப்பட்ட அதிகார எல்லைகளுக்கும் வேண்டத் தகாத விளைவை உண்டாக்குகின்றன என்பதைத்தெளிவாக அறியலாம்.

3. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழு, திட்டமிடுதலுக்கான செயற்பாட்டு முறைபற்றிய தனது அறிக்கையில், திட்டமிடுதலுக்கென மாநிலங்களுக்கு மைய அரசு வழங்க வேண்டிய உதவி பற்றி சில யோசனைகளைக் கூறியுள்ளது. மைய மாநில உறவு பற்றிய அதனுடைய அறிக்கையின் பக்கங்கள் 10–11-ல் பத்தி 4-ல் இப்பரிந்துரைகள் காணப் பெறுகின்றன. மாநிலத் திட்டவேலைகளுக்காக மைய அரசு வழங்கும் உதவி எந்த அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பது 1969-ம் ஆண்டுத் தொடக்கத்தில் தேசீய வளர்ச்சி மன்றத்தின் முதலமைச்சர்கள் குழுவால் மாநில அரசுகளின் விருப்பத்திற்கிணங்க ஆராயப் பெற்றது. தேசீய வளர்ச்சி மன்றத்தால் வரையறுக்கப்பெற்ற நிதி உதவிக் கொள்கைகள் மைய அரசால் ஏற்றுக் கொள்ளப் பெற்றன. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான நிதி உதவி கீழ்க்கண்ட அடிப்படையில் பங்கீடு செய்யப்பெறவேண்டும்:—

(அ) மக்கள் தொகை அடிப்படையில் 60 சதவீதம்.

(ஆ) பத்து சத வீதம் கீழ்க்கண்ட அடிப்படையில் :—

(1) தேசீய சராசரிக்குக் கீழே இருந்தால், ஓராளுக்குள்ள வருமானம்;

(2) ஓராள் வருமானத்தைப் பொறுத்த வரி முயற்சிகள்;

(3) மின்சார, நீர்ப்பாசனப் பெருந் திட்டங்களுக்கான செலவுகள் ;

(4) வெள்ளங்கள், என்றும் வரண்ட பகுதிகள், மலைவாசிகள் பகுதிகள் ஆகியவை கொண்ட மாநிலங்களின் தனிப் பிரச்சினைகள்.

1969–70 முதல் செயற்படத் தொடங்கியுள்ள புதுத் திட்டப்படி, தேசீய வளர்ச்சி மன்றம் நிர்ணயித்துள்ள அடிப்படையில் மாநிலங்களுக்கு மைய அரசு திட்ட உதவி செய்யும். இவ்வுதவி, மானியங்களாகவும் கடன்களாகவும் மொத்தமாகக் கொடுக்கப்பட்டுவிடும். குறிப்பிட்ட திட்டங்களுக்குத்தான் செலவிட வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எனினும், கல்வி, வேளாண்மை போன்ற துறைகளைச் சார்ந்த

பெருந்திட்டங்களாயின், மைய அரசின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். மாநிலங்கள் தத்தம் திட்டங்களை உருவாக்கு வதிலும் செயற்படுத்துவதிலும் சுதந்திரமாய்ச் செயல்பட வேண்டும் என்ற நோக்கோடு, மைய அரசு முன்னின்று செயற்படுத்தும் திட்டங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. பகுதிவாரியான திட்டமிடுதல், தனிப்பட்ட திட்டங்களையும் அவற்றிற்கான செயல்முறை களையும் உருவாக்கிச் செயற்படுத்துதல் ஆகியவை மாநிலங் களுக்கே விடப்பட்டுள்ளன.

4. மைய அரசால் முழுமையாக உதவி செய்யப்பெற்று மைய அரசு செயற்படுத்தும் திட்டங்களைப் பொறுத்த வரையில், மாநில அரசுக்கும் தனது திட்டங்களிடம் இருப்பது போன்ற அக்கறை மைய அரசின் திட்டங்களிடமும் உண்டு. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்ச் செயற்படுத்தப்பெறும் எந்தத் திட்டமும், குறிப்பிடப்பட்ட வட்டாரத்திற்கு நன்மை விளைவிப்பதோடு, தேசத்தின் பொருளாதார நிலையை உயர்த்தவும் பயன்படுகிறது. மைய அரசின் திட் டங்களுக்கும் இது பொருந்தும். எனவே, இத் திட்டங் களில் மாநிலங்கள் பங்கு கொள்ளாதவாறு செய்வது தேவை யற்றதும் வேண்டத் தகாததுமாகும். திட்டங்கள் நிறை வேற்றப்படும் இடங்கள் மாநிலங்களிலே இருக்கின்றன. எனவே, இத்திட்டங்களை நிறைவேற்றும் போது, தேவையான மனைகளைச் சட்டப்படிப் பெற்றுத் தருதல், பொது சுகாதா ரத்தைக் கவனித்தல், இவற்றிற்கும் மேலாக, சட்ட ஒழுங்கை நிலைநாட்டுதல் போன்ற பல பொறுப்புகளை மாநி லங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மைய அரசின் திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றும் போது, மாநில அரசுக்கும் அவற்றில் தொடர்பிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டுவது இன்றியமையாதது எனப் பரிந்துரைக் கின்றோம். தேவையானால், மாநிலங்களின் சக்திக்கு ஏற்ற வாறு மைய அரசின் திட்டங்களுக்கு நிதிஉதவி கூடச் செய்யு மாறு பார்த்துக் கொள்ளலாமென்றும் யோசனை கூறுகிறோம்.

5. நிதி ஆணைக் குழு பற்றியும் உறுப்பு 282-ன் வரம்பு பற்றியும் ஆராயும் போது, திட்ட ஆணைக் குழு பற்றியும் ஆராய்ந்துள்ளோம். உறுப்பு 282-ன் கீழ் வழங்கப் பெறும் மானியங்களை, நிதி ஆணைக் குழுவின் மூலமாக வழங்க வேண்டுமென்ற எமது யோசனையை ஏற்றுக் கொண்டாலே திட்ட ஆணைக் குழுவின் பெரும் பொறுப்புகளில் ஒன்று

அதனை விட்டு நீங்கிவிடும். அப்படியானால், திட்ட ஆணைக் குழுவின் மற்றைய பணிகள் என்ன என்ற கேள்வி எழும். தற்போதுள்ளபடி, திட்டங்களை உருவாக்கும் பணியில் திட்ட ஆணைக் குழு தொடர்ந்து செயற்படலாம். முந்தைய பத்திகளில், ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில், இந்தப் பொருள் குறித்து சட்டமியற்றும் அதிகாரப் பதிவு பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். இது, பொது அதிகாரப் பட்டியலில் உள்ள இனமாகும். இந்த பதிவின்கீழ், எந்தவொரு சட்டமும் இது வரை இயற்றப்படவில்லை. திட்ட ஆணைக் குழு எந்த முக்கிய நோக்கத்துடன் முதன் முதலில் உருவாக்கப்பெற்றதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாயின், இதனுடைய உள்ளமைப்பும், பணிகளும், மைய அரசின் பிடிப்பிலிருந்தும், அரசியல் செல்வாக்குகளிலிருந்தும் விடுபட்டுத் தன்னந்தனியாகச் செயற்படத் தொடங்கவேண்டும். இந்த எண்ணம் நிறைவேற வேண்டுமாயின், இக்குழு சட்டபூர்வமான ஓர் அமைப்பாக அமைக்கப்பெறுதல் வேண்டும். திட்ட ஆணைக்குழு நியமிப்பதற்கான ஒரு சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டும். இக்குழுவில், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், வேளாண்மை ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும், தேசீய நடவடிக்கைகளைச் சார்ந்த மற்றப் பிரிவுகளின் நிபுணர்களும் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும். மைய அரசு அமைச்சர் யாரும் அதன் உறுப்பினராக இருக்கக் கூடாது. இக்குழுவைத் தோற்றுவிக்கும் சட்டத்திலேயே, குழுவின் உறுப்பினர்களது பதவி உரிமை, பதவிக் காலம், பணி வரையறைகள் ஆகியவை பற்றியும் ஏற்பாடு செய்யலாம். இதற்கெனத் தனியே ஒரு செயலகம் இருத்தல் வேண்டும். தற்போதுள்ள திட்ட ஆணைக்குழுவைக் கலைக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

6. திட்ட ஆணைக் குழுவின் பணி, மாநிலங்கள் உருவாக்கும் திட்டங்களுக்கான அறிவுரைகளை வழங்குவதாகும். மைய அரசில் உள்ள திட்ட ஆணைக் குழு அமைந்துள்ள அடிப்படையில், ஒவ்வொரு மாநிலமும் ஒரு திட்ட வாரியத்தை நிறுவிக் கொள்ளலாம். மாநிலங்கள் தொடங்கும் தொழில் திட்டங்களுக்கான வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத் தருவது பற்றிய பரிந்துரைகளை, மையத் திட்ட ஆணைக் குழு, நிதி ஆணைக் குழுவிற்கு எடுத்துச் சொல்லலாம்.

திட்ட மிடுதலும் வளர்ச்சியும்.

7. திட்டமிடுதலில், தொழில் வளர்ச்சியும் ஒரு முக்கிய நோக்கமாகும். இத்தகைய வளர்ச்சி பற்றிய நடவடிக்கைகள் யாவும் பெரும்பாலும் 1951-ம் ஆண்டின் தொழில்கள் (வளர்ச்சியும் ஒழுங்கு முறையும்) சட்டத்தின் வழியே மேற்கொள்ளப் பெறுகின்றன. சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்பது பற்றிய அத்தியாயத்தில், மைய அரசின் அதிகாரப்பட்டியலில் உள்ள பதிவு 52-ஐப் பற்றி ஆராயும்போது, இச்சட்டத்தின் தன்மை பற்றி நாம் தொட்டுக்காட்டியுள்ளோம். தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்திய நிலையில் உள்ள அல்லது நூறு கோடி ரூபாய்கள் மூலதனங் கொண்ட தொழில்களுக்கு மட்டும் பொருந்துமாறு பதிவு 52 திருத்தி அமைக்கப்பெறுதல் வேண்டுமென்று பரிந்துரை கூறியுள்ளோம். இப்பரிந்துரையின் விளைவாக, தற்போது இருக்கின்ற இச்சட்டம் ரத்து செய்யப் படவேண்டுமென்பது தெளிவு. இச்சட்டத்திற்குப் பதிலாக, மேலே குறிப்பிட்டுள்ள தொழில்களை மட்டும் மைய அரசு கட்டுப்படுத்தும் விதத்தில் ஒரு புதுச் சட்டம் இயற்றப் படவேண்டும். உரிமங்கள் வழங்குவதற்குரிய அதிகார மளிக்கும் பகுதி, இச்சட்டத்திலிருந்து அறவே நீக்கப்பட வேண்டும். தனியார் துறையிலேனும், கூட்டுறவுத் துறையிலேனும் மாநிலத்திற்குள் புதுத் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்குரிய உரிமங்களை வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்குத் தரப்படவேண்டும். வெளிநாட்டு உதவி பெற்றோ அல்லது பெறுமலோ (மைய அரசுக்கென ஒதுக்கப் பெற்ற இனங்கள் தவிர) பொதுத் துறையில் மாநிலங்கள் தாமே தொழில் நிறுவனங்களைத் தோற்றுவித்து நடத்துவதற்கான அதிகாரமும் தரப்பட வேண்டும். உரிமம் வழங்கப் பெற்ற அல்லது மாநில அரசே தொடங்கிய தொழில் நிறுவனங்களுக்கு வெளிநாட்டு உதவி தேவையானல், ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்கப் பெறும் மொத்த மானிய வடிவில் அவ்வுதவி அளிக்கப் பெறுதல் வேண்டும். திட்ட ஆணைக் குழுவைக் கலந்து, நிதி ஆணைக் குழு இந்தப் பங்குத் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தால், அவ்வாறே அதிகரிக்கலாம்.

அத்தியாயம் VII

நீதித் துறை.

உச்ச நீதிமன்றம்

உயர் நீதிமன்றம் உட்பட நீதித்துறைக்கு, மாநில அளவில், முழு சுதந்திரம் பெற்றுத்தருவதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுத்தலும் இக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் ஒன்ருகும். நீதித்துறையின் உச்ச நிலையில் உச்ச நீதிமன்றம் உள்ளது. 1937-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை, இந்திய அரசு சகல அதிகாரங்களையும் கொண்டதாயிருந்தது. உச்ச நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடமில்லாமலிருந்தது. பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மாநிலத் தலைநகர்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. இவற்றைத் தாண்டி, மேல்முறையீடுகள், இங்கிலாந்திலிருந்த முதன்மை நீதிமன்றத்தைச் (Privy Council) சேர்ந்த நீதிக்குழுவிற்குச் சென்றன. 1931-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளையறிக்கையின் வாயிலாக, பிரிட்டிஷ் அரசு வெளியிட்ட இந்திய அரசியல் சட்டச் சீர்த்திருத்த யோசனைகளில், இணைப்பாட்சி நீதிமன்ற அமைப்பும் ஒன்ருகும். அந்த வெள்ளையறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:—

''பல அரசியற் கூறுகள் ஒன்ருக இணைப்பாட்சி அமைக்கும் அரசியற் சட்ட அடிப்படையில், மையச் சட்டமன்றமும், நிர்வாக இயந்திரமும் ஒருபுறமும், மற்ற சட்டமன்றங்களும் நிர்வாக இயந்திரங்களும் மற்ருெரு புறமும் அமைந்து, அதிகாரங்களைப் பகிர்ந்து செயற்படும் நிலை வரும்போது, ஒரு இணைப்பாட்சி நீதிமன்றம் இன்றியமையாததாகிறது. இத்தகைய நீதிமன்றம், இணைப்பாட்சியின் அரசமைப்புச் சட்டத்தைப்பற்றி அதிகார பூர்வமான விளக்கங்களைத் தருவதற்குத் தேவைப்படுகிறது.*'' இணைப்பாட்சி நீதிமன்றத்திற்கு, நேரடி வழக்குகளையும் மேல்முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் அளிக்கப்படவேண்டுமென வெள்ளையறிக்கை கூறியது. இணைப்பாட்சிக்கும் இணைப்பாட்சியைச் சார்ந்த உறுப்புக்கும் இடையே ஏற்படும் வழக்குகள், இணைப்பாட்சியைச் சார்ந்த

* பாராளுமன்ற இணைக் குழுவின் அறிக்கை தொகுதி I, பக்கம் 303.

இரண்டு உறுப்புகளிடையே எழும் அரசமைப்புச் சட்ட வழக்குகள் ஆகியவற்றை இந்த இணைபபாட்சி நீதிமன்றம் நேரடியாக விசாரிக்க அதிகாரம் பெற்றிருக்கும். மாநில நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்டதும் அரசமைப்புச் சட்ட நுணுக்கம்பற்றியதுமான வழக்குகளின் மேல்முறையீடுகளை இந்த இணைப்பாட்சி நீதிமன்றம் விசாரிக்கும்.

2. மேற்குறித்த யோசனைகளை ஆராய்ந்த பாராளுமன்ற இணைக் குழு '' அரசமைப்புச் சட்டத்திற்கு விளக்கம் தரவும், அதனைப் பாதுகாக்கவும் இணைப்பாட்சியின் உறுப்புகளிடையே எழுகின்ற அரசமைப்புச் சட்டப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும் '' ஒரு இணைப்பாட்சி நீதிமன்றம் தேவை என்பதை கொள்கையளவில் ஒப்புக்கொண்டது. மேலும், இந்த நீதி மன்றத்திற்கு நேரடி வழக்கு விசாரணை அதிகாரம் தேவை என்பதையும் பாராளுமன்ற இணைக்குழு ஒப்புக் கொண்டது. ஆனல், மேல்முறையீடு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பொறுத்தவரை, அரசமைப்புச் சட்டப் பிரச்சினைகளை மட்டும் விசாரிக்கும் அளவிற்கு அதிகாரம் இருந்தால் போதும் என்று கருதியது. மேலும், இணைப்பாட்சிமுழுவதும் நடைமுறையிலுள்ள சட்டங்கள் பற்றிய விளக்கந்தரும் அதிகாரமும் மேல்முறையீட்டு எல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. குற்ற இயல் வழக்குகளின் மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் படைத்த ஒரு நீதிமன்றம் தேவையா என்பது பற்றியும் இக்குழு ஆராய்ந்தது. குற்றவியல் விதித்தொகுப்பில் பலவித பாதுகாப்புகள் இருப்பதாலும், ஆளுநருக்கோ, ஆளுநர் தலைவருக்கோ விண்ணப்பங்கள் அனுப்பும் உரிமை இருப்பதாலும் தனியே ஒரு குற்றவியல் மேல் முறையீடு நீதிமன்றம் தேவையில்லையென்று கருதியது.

3. அரசமைப்புச் சட்டப்படி, பலவித வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பெற்றுள்ளது. மைய அரசுக்கும் மாநிலங்களுக்கும் அல்லது மாநிலங்களுக்கிடையேயும் எழுகின்ற சட்டப் பிரச்சினைகள் பற்றி விசாரிக்கும் அசலும் தனிப்பட்டதுமான அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் பயன்படுத்துகிறது (உறுப்பு 131). சொத்து மதிப்பு பற்றிய வரம்பின்றி, அரசமைப்புச் சட்டப் பிரச்சனைகளைப்பற்றித் தீர்ப்புக்கூறும் இறுதி விசாரணை மன்றமாக இது விளங்குகிறது.

இந்த அதிகாரம், உரிமை இயல், குற்ற இயல் மற்ற எல்லா வழக்குகளுக்கும் செல்லுபடியாகும் (உறுப்பு 132). உரிமையியல் வழக்குகளைப் பொறுத்தவரை, உறுப்பு 133-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு வழக்குகளை எடுத்துச்செல்லலாம். குற்ற இயல் வழக்குகளில் அதன்மேல் முறையீட்டு அதிகாரத்தை உறுப்பு 134 வழிமுறைப்படுத்துகிறது. குற்றவியல் வழக்குகளில் உச்சநீதி மன்றத்தின் மேல் முறையீட்டு அதிகார வரம்பு 1970-ம் ஆண்டு உச்ச நீதிமன்ற (குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு விரிவாக்கச்) சட்டத்தினால் (மையச்சட்டம் 28/1970) விரிவாக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், குற்றஞ்சாட்டப்பெற்ற ஒருவனுக்குக் கீழ் நீதிமன்றத்தால் விடுதலையளிக்கப்பெற்ற வழக்கில், உயர் நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்து அவனுக்கு மரண தண்டனையோ, ஆயுள்தண்டனையோ, பத்தாண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனையோ வழங்கினாலும், கீழ் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்துவரும் வழக்கொன்றினைத் தான் எடுத்துக்கொண்டு உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு மேற்குறித்த தண்டனை வழங்கினாலும், உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். உறுப்புகள் 131 முதல் 134 வரை கூறப்பட்டுள்ளவைக்கும் மேலாக, தனி அனுமதி வழங்கி, மேல்முறையீடுகளை எடுத்துக்கொள்ளும் தீர்ப்புரிமையும் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு. அடிப்படை உரிமைகள் தவிர, மற்ற உரிமைகளைப் பொறுத்தவரை, தனிச்சிறப்பு நீதிப் பேராணை விடுக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்குவதற்கான வழிவகை, உறுப்பு 139-ல் உள்ளது. அடிப்படை உரிமைகள் பற்றிய தனிச்சிறப்பு நீதிப்பேராணைகளை விடுக்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு உறுப்பு 32 வழங்குகிறது.

4. ஒரு இணைப்பாட்சி அமைப்பில், உச்ச நீதிமன்றத்திற்குத் தற்போது இருக்கும் அதிகாரங்கள் தேவைதானா என்பதுதான் கேள்வி. 1931-ம் ஆண்டின்வெள்ளையறிக்கையில் கூறப்பட்டபடியும், பாராளுமன்ற இணைக்குழு கூறியவாறும், ஒரு இணைப்பாட்சி அமைப்பில் இணைப்பாட்சிக்கும் அதன் உறுப்புகளுக்கும் தொடர்பில்லாத வகையில் சுதந்திரமாகச் செயற்படும் ஒரு நீதிமன்றம் தேவைதான். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் இதுதான் நிலை. அமெரிக்காவில், மாநிலம்

உள்ளான வழக்குகளிலும், தூதுவர்கள், அமைச்சர்களுக்கு நிகரான அலுவலர்கள் (other public ministers) அமைச்சர்கள் உதவித் தூதர்கள், ஆகியோரைப் பாதிக்கும் வழக்குகளிலும் நேரடி விசாரணை செய்யும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு உறுப்பு III, பிரிவு 2 (2), வழங்குகிறது. சுவிட்சர்லாந்தில் உறுப்பு 110-ன் படி, இணைப்பாட்சிக்கும் அதன் உறுப்புகளுக்கும் அல்லது உறுப்புகளுக்கிடையேயும் எழுகின்ற உரிமை இயல் வழக்குகளை, இணைப்பாட்சி நீதிமன்றம் விசாரணை செய்கிறது. ஆஸ்திரேலியா நாட்டு அரசமைப்புச் சட்டப் பிரிவு 75, உயர்நீதிமன்றத்திற்கு, மற்ற அதிகாரங்களோடு, பின்வரும் வழக்குகளை விசாரிக்கும் அசல் விசாரணை அதிகாரத்தையும் அளிக்கிறது: இரண்டு மாநிலங்களுக்கிடையில் எழும் வழக்குகள் அல்லது பல்வேறு மாநிலங்களில் வசிப்போர்க்கிடையே எழும் வழக்குகள், அல்லது ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்தில் வசிப்போர்க்கும் எழும் வழக்குகள், அல்லது காமன்வெல்த் அல்லது அதனைச்சார்ந்த ஒருவர் காமன்வெல்த்தின் சார்பாக வழக்கில் ஈடுபட்டால், அல்லது அதைச் சார்ந்த அலுவலர் ஒருவர்க்கெதிராக, செயலுறுத்தும் நீதிப் பேராணை அல்லது தடையுறுத்தும் நீதிப்பேராணை அல்லது நிறுத்தப்பேராணை ஆகியவை சம்பந்தப்பட்டிருக்கும் வழக்குகள்.

5. 131-வது உறுப்பால் வழங்கப்பெற்றுள்ள உச்ச நீதிமன்றத்தின் அசல் அதிகார எல்லை, தொடர்ந்து இருக்க வேண்டியது தேவை. அரசமைப்புச் சட்டத்திற்கான விளக்கங்களைத்தரும் அதிகாரமும் உச்ச நீதிமன்றத்திற்கு இருக்கவேண்டுவது இன்றியமையாதது.

மாநிலச்சட்டங்களைப் பொறுத்தவரையில், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டிருந்தாலொழிய, ஏனைய சட்டங்களின் அடிப்படையில் எழுகின்ற வழக்குகளின் மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குத் தேவைதானா என்பது ஆராய்வதற்குரியது. மேலும், உரிமை இயல் வழக்குகளின் சொத்தின் மதிப்பு ரூ. 20,000-மும் அதற்கு மேலும் உள்ள நிலையில், மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என்ற பொது அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குத் தேவைதானா? மேலும், குற்றவியல் வழக்குகளிலும் தற்போதுள்ள மேல்முறையீடு விசாரிக்கும் அதிகாரம் தேவைதானா என்பதும் கருதுவதற்

குரியது; அமெரிக்க ஐக்கிய நாடுகளில், குற்றஇயல், உரிமை இயல் வழக்குகளில் மேல்முறையீடு விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குக் கிடையாது—அதாவது, அரச மைப்புச் சட்டப்பிரச்சினை பற்றித் தொடர்பில்லாதிருந்தால் இந்த நிலை. சாதாரண உரிமை இயல் வழக்குகளில், இணைப்பாட்சி நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு விசாரணை அதிகாரம் அளிக்கப்பெறவேண்டுமென வெள்ளையறிக்கையும் கூறவில்லை: பாராளுமன்ற இணைக்குழுவும் கருதவில்லை. அரசமைப்புச் சட்டப் பிரச்சினை கலக்காமலிருக்கும் உரிமை இயல் வழக்குகளின் மீது, மேல்முறையீட்டு விசாரணை அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குத் தேவையில்லையென்பது எமது கருத்து. உரிமை இயல் வழக்குகளுக்குப் பொருந்தக் கூடிய வாதம், குற்றவியல் வழக்குகளுக்கு இன்னும் வலுவாகப் பொருந்தும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், உச்ச நீதிமன்றம் சாதாரண குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடுகளை எடுத்துக்கொள்வதில்லை. சாதாரணக் குற்றவியல் மேல்முறையீடுகளை எடுத்துக்கொள்வதன் மூலம் உச்ச நீதிமன்றத்தின் வேலைப்பளுவை அதிகரித்துக்கொள்ளுவதைத் தேவையற்றதும் வேண்டத்தகாததுமாகும் எனக் கருதுகிறோம். குற்றவியல் விதித் தொகுப்பில் ஏற்கனவே பாதுகாப்புகள் இருப்பதால், அரசமைப்புச் சட்டப்பிரச்சினை கலந்திருந்தாலொழிய, சாதாரணக் குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடு விசாரிக்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்க அரசமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யவேண்டியதில்லையெனக் கருதுகிறோம்.

6. 1956-ம் ஆண்டின் 33-ம் எண்ணுள்ள மைய அரசின் சட்டமாகிய மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறுகள் சட்டத்தைச் செயற்படுத்த ஒரு தீர்ப்பாயம் உள்ளது. இந்த ஆயத்தின் தீர்ப்புகளைச் செயற்படுத்தும் இறுதி அதிகாரம், உச்ச நீதிமன்றத்திற்கு இருத்தல் இன்றியமையாதது என்று. மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறு பற்றி உறுப்பு 262-ஐப் பற்றி ஆராயும் போது எடுத்துக்காட்டியுள்ளோம். இதற்கென 1956-ம் ஆண்டின் மைய அரசுச் சட்டத்தில் தகுந்த வழிவகைகள் செய்யவேண்டுமெனக் கூறியுள்ளோம். இவ்வாறாக, உறுப்பு 131 வழங்கியுள்ள அசல் விசாரணை அதிகாரம், உச்ச நீதிமன்றத்திற்கே தொடர்ந்து இருக்கவேண்டுமென்பது தெளிவு. மேல்முறையீடு விசாரணை அதிகார எல்லையைப் பொறுத்த

வரை, சட்டப்பிரச்சினை கலந்துள்ள வழக்குகளுக்குமட்டும் இவ்வதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது எமது எண்ணம். இதுவே, நமது அரசமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள இணைப்பாட்சிக் கருத்துக்கொத்ததாயும், மாநிலங் களின் தன்னுட்சித் தன்மையைக் காட்டுவதாகவும் அமையும்.

7. மாநிலங்கள் இயற்றும் சட்டங்கள், மாநில அளவி லேயேதான் செயற்பட இயலும். மாநிலச் சட்டம், அந்த மாநில எல்லையைக் கடந்து செயற்படக் கூடிய நிலை இருக்க இயலாது. எனவே, மாநிலச் சட்டங்களைப் பற்றி உச்ச நீதி மன்றம் விளக்கங்கள் தந்து கொண்டிருக்க வேண்டிய வீண் சுமை தேவையில்லை. அரசமைப்புச் சட்டப் பொருள் விளக்கம் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் வகையுரை எதற்கேனும் மாநிலச் சட்டம் முரண் படுகிறது என்று வாதிடப்பட்டால் உச்ச நீதி மன்றத்திற்கு மேல்முறையீடுசெய்யும் உரிமைக்கு ஏற்பாடு செய்யப்படலாம்; இன்றேல், உயர் நீதி மன்றத்தின் முடிவே இறுதியானதாக இருக்கவேண்டும். ஆனால் மைய அரசுச் சட்டங்கள் நாடு முழு வதும் செயற்படத்தக்கவை. வெவ்வேறு உயர் நீதி மன்றங் கள் வெவ்வேறு விதமான தீர்ப்புகளை வழங்கிய நிகழ்ச்சிகள் உண்டு. அப்போதெல்லாம் உச்ச நீதி மன்றம் தலையிட்டு சரியான முடிவை வழங்க நேர்ந்துள்ளது. இதற்கு வருமான வரிச் சட்டமே போதிய சான்றாகும். மைய அரசுச் சட்டம் பற்றிய வழக்காயின், அரசியல் சட்டப் பிரச்சினை இருந்தாலும் இல்லாவிட்டாலும், உயர் நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் வசதி இருக்கவேண்டும். 131-ம் உறுப்பின் கீழும் 32-ம் உறுப்பின் கீழும் வழங்கப் பெற்றுள்ள அதிகாரங்களும், அரசமைப்புச் சட்டப்பிரச்சினை கலந்திருந்தால் அல்லது மைய அரசின் சட்டங்கள் சம்பந் தப்பட்டிருந்தால், உயர் நீதி மன்றங்களின் தீர்ப்பின் மீது எழுகின்ற மேல்முறையீடுகளையும் உச்ச நீதி மன்றம் விசாரிக்கலாம். ஏனைய உரிமை இயல், குற்ற இயல் வழக்குகளில் மேல் முறையீடு கூடாது.

8. உச்ச நீதி மன்றம், உயர் நீதி மன்றங்கள் ஆகிய வற்றின் குறிப்பிட்ட சில நீதிபதிகளைத் தம் விருப்பப்படிக் கலந்தாலோசித்து பிறகு, குடியரசுத் தலைவர், உச்ச நீதி மன்ற நீதிபதிகளை நியமனம் செய்கிறார். சாதாரண நீதி இயல் கருத்துப்படி, உயர் நீதி மன்றங்களைப் போன்றே, உச்ச நீதி மன்றமும் சட்டத்திற்கு விளக்கம் தருகிறது.

சட்டம் என்ன சொல்லுகிறது என்பதை அது எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் இன்னொரு விதத்தில் பார்க்கப் போனால், உச்ச நீதிமன்றம் சட்டமியற்றுகிறது. அடிப்படை உரிமைகளைப் பொறுத்து, அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த நாடாளுமன்றத்திற்கு உள்ள அதிகாரம் பற்றிய கருத்து வேறுபாடு இதற்கு எடுத்துக் காட்டாகும். உச்ச நீதி மன்றத்தால் பிரகடனம் செய்யப்பெற்ற சட்டமானது நாடு முழுவதும் செல்லத்தக்கது. மற்ற எல்லா ஆள்வைகளும் அதற்குக் கட்டுப்பட்டவையே. அதிமுக்கியத்துவம்வாய்ந்த அனைத்திந்திய நிறுவனமாக அது விளங்குகிறது. சட்டமியற்றும் பகுதியில் நாடாளுமன்றத்திற்குரிய பெருமித இடம், நீதித் துறையில் அதற்குண்டு. இதற்குகந்த முறையில் தலைமை நீதிமன்ற நீதிபதிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல் விரும்பத்தக்கதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், தேசத்துச் சிறுபான்மை மதத்தினருக்கும் விரிவான முறையில் பிரதிநிதித்துவம் தருதலென்பது மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. சிறுபான்மையினரின் நிர்ப்பந்தம் காரணமாக இவ்வாறு செய்ய நேரிடுகிறது என்றும் கூறப்படுகிறது. மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீதிமன்றத்தில், நாட்டின் பல்வேறு பகுதியினருக்கும் பிரதிநிதித்துவம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளக் குடியரசுத் தலைவர்கள் முயற்சி மேற்கொள்கிறார்கள். சுவிட்சர்லாந்து நாட்டில், கூட்டரசாட்சியைச் சார்ந்த மூன்று ஆட்சி மொழியினரும் (ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலியன்) கூட்டாட்சி நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் (உறுப்பு 107). தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் நியமனத்தின்போது, வட்டார நலன்களையும் கருத்தில் கொள்கிறார்கள். எனவே, உச்ச நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை நியமனம் செய்யும்போது, திறமைக்கேடு இல்லாத வகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள உயர் நீதிமன்றங்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் இருக்குமாறு பார்த்துக்கொள்வது இன்றியமையாதது என்று இக்குழு பரிந்துரைக்கிறது.

உயர்நீதி மன்றங்கள்.

9. மற்றைய இணைப்பாட்சிகளில், உறுப்பின் மிக உயர்ந்த நீதி மன்றம் வட்டார ஆள்வையின் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இருக்கின்றது. அமெரிக்க ஐக்கிய

நாடுகளில், பெரும்பாலான மாநிலங்களில், நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பெறுகின்றனர். ஆஸ்திரேலியாவில், மாநிலங்களில் நீதிபதிகள் மாநில ஆள்வைகளாலேயே நியமிக்கப் பெறுகின்றனர். கிரான்வில் ஆஸ்டின் தாம் எழுதிய, ''இந்திய அரசமைப்புச் சட்டம்—தேசத்தின் மூல அமைப்பு'' என்ற நூலில், ''அரசமைப்புச் சட்டத்தில் இருப்பதைவிட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், உயர்நீதி மன்றங்களைப் பற்றிச் சட்டங்கள் இயற்ற மாகாணச் சட்ட மன்றங்களுக்கு அதிக அதிகாரம் இருந்தது'' எனக் குறிப் பிடுகிறார். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள், படிகள், முதலியவை மாநிலத்தின் தொகு நிதியிலிருந்து செலவழிக்கப் பெறுகின்றன. எனவே, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதிலும், அவர்களது பதவி உரிமை, பணி முறைமைகள் ஆகியவை பற்றி வரையறை செய் வதிலும் மாநில அரசுக்கு உரிய பங்கு இருக்கவேண்டும் என்பது விரும்பத்தக்கதும் தேவையுமாகும். ஒழுங்கான நடத்தை உள்ளவர்களாக இருக்கும் வரைதான் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பதவியில் நீடிக்க இயலுகிறது. இதில் எவ்வித மாற்றமும் தேவையில்லை. உறுப்பு 217-ன்படி, ஆளுநரைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. உறுப்பு 217 (1)-ன்கீழ், குடியரசுத் தலைவர் ஆளுநரைக் கலந்தாலோசிக்கும்போது, ஆளுநர், அமைச்சரவையின் துணையோடும் அறிவுரையோடும்தான் செயற்பட வேண்டும். எனவே, தற்போதுள்ள வழக்கம் தொடர்ந்து நடைபெறலாம் என்பதும் இதில் எவ்வித மாற்றமும் தேவையில்லை யென்பதும் தெளிவாகும்.

10. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்யும் யோசனைகளை ஒட்டியே, அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவது பற்றிய நிலைபற்றியும் ஆராய வேண்டியுள்ளது. உறுப்பு 218, உறுப்பு 124 (4), (5) ஆகிய இரண்டையும் சேர்த்துப்பார்த் தால்நாடாளுமன்றத்தின்அவை ஒவ்வொன்றும் தனித்தனியே தேவையான பெரும்பான்மையோடு யோசனை தெரிவித்தால், உயர்நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கும் அதி காரத்தைக் குடியரசுத் தலைவர் பெறுகிறார். இதற்கான நடைமுறையை நாடாளுமன்றம் வரையறைசெய்துள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஒழுங்கு தவறி நடந்ததை ஆராய்தல் அல்லது அவர்களது திறமையின்மை பற்றி நிரூபணம் செய்தல், பின்னர் நாடாளுமன்ற அவைகள்

குடியரசுத் தலைவருக்கு அறிவித்தல் போன்ற நடவடிக்கைகள் பற்றிய விவரம் 1968-ம் ஆண்டு நீதிபதிகள் (விசாரணை) சட்டத்தில் (மையச் சட்டம் 51/1968) உள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட உறுப்புகளையும், மையச் சட்டத்தின் வகையுரைகளையும் பார்த்தால், பதவி நீக்க நடவடிக்கைகளில் மாநிலத்திற்கு எவ்வித உரிமையுமில்லாமல் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். மாநிலத்துடன் கலந்தாலோசித்தல் கூட எங்கும் கூறப்படவில்லை. மைய அரசினைப் போலவே, மாநில அரசும், உயர் நீதிமன்றம் நடுநிலைமை தவறாமலும், நாணயத்துடனும், சுதந்திரமாகவும் செயற்படவேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளது. எனவே, இணைப்பாட்சிக் கொள்கை, மாநிலச் தன்னாட்சி என்ற கருத்துக்களுக்கிணங்க, மாநிலச் சட்ட மன்றங்கள் தகுந்த பெரும்பான்மையோடு பதவி நீக்கம் செய்யக் கோரி குடியரசுத் தலைவருக்கு விண்ணப்பித்தால், அவர் செயற்படவேண்டும் என வழிவகை செய்யப்பெற வேண்டும். மைய அரசின் சட்டத்தில் தற்போது நாடாளுமன்றத்திற்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பெற்றுள்ளனவோ அவையாவும் மாநிலச் சட்டமன்றங்களுக்கு மாற்றப் பெறுதல் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம், படி முதலியவை, மாநிலத்தின் தொகு நிதியிலிருந்து செவழிக்கப் பெறுவதால், நீதிபதிகளின் சம்பளம், பணிமுறைமைகள் முதலியவற்றைக் கவனிக்கும் பொறுப்புகளையும் மாநிலச் சட்ட மன்றங்களிடமே விட்டுவிடலாம். முதல் வரைவு அரசமைப்புச் சட்டத்தில், நீதிபதிகளின் சம்பளம், படி, ஓய்வூதியம் முதலியவை பற்றித் தீர்மானிக்கும் அதிகாரங்கள் மாநிலச் சட்ட மன்றங்களுக்கே இருந்தன. தலைமை நீதிபதிக்குச் சம்பளம் ரூ. 4,000-க்குக் குறையாதவாறும் இதர நீதிபதிகளுக்கு ரூ. 3,500-க்குக் குறையாதவாறும் இருக்க வேண்டுமென்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதே போன்ற நிலையை இப்பொழுது உருவாக்கலாம். தேவையானால், குறுமச் சம்பளத்தை உயர்த்தலாம்.

11. உயர்நீதிமன்ற நீதிபதிகளை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்கான அதிகாரம் உறுப்பு 222-ல் உள்ளது; நீதிபதியின் சம்மதம் தேவையில்லை. இத்தகைய மாற்றல் செய்வதற்கு முன்னர், முதலமைச்சர்களுடன் கலந்தாலோசிக்கவேண்டியது இன்றியமையாதது என்பது உள்துறை அமைச்சகம் வகுத்துள்ள நடைமுறை

களில் உள்ளது. இந்த அதிகாரம் பெருமளவில் கையாளப் பட்டதாகத் தெரியவில்லை. உயர்நீதிமன்ற நீதிபதியின் பதவிக்கான கௌரவம், பெருமை ஆகியவற்றிற்கு இழுக்குண் டாக்கும் வகையில் அமைந்துள்ளது இந்த வகையுரை. எனவே, இந்த உறுப்பு நீக்கப்படவேண்டும் என்று உறுதியாகக் கருதுகிறோம்.

12. உறுப்புகள் 223, 224, 224-அ ஆகியவற்றை ஒருங்கே ஆராயலாம். தற்காலிகத் தலைமை நீதிபதியை நியமனம் செய்தல், கூடுதலாக அல்லது தற்காலிகமாக உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமனம் செய்தல், ஓய்வுபெற்ற நீதிபதிகளை உயர்நீதிமன்றங்களில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக நியமித்தல் போன்றவற்றிற்கு இவ்வுறுப்புகள் வழிவகை செய்கின்றன. சம்பந்தப்பட்ட மாநிலத்தின் ஆளுநரைக் கலந்தறிய வேண்டுமென்று இந்த உறுப்புகள் ஒன்றில் கூடச் சொல்லப்பெறவில்லை. உயர்நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியை நியமிக்கும்போது கையாளப்படுவதுபோல் உறுப்புகள் 223, 224, 224-அ ஆகியவற்றின் கீழ்ச் செய்யப் பெறும் நியமனங்களின் போதும், ஆளுநரைக்கலந்து செயற் படவேண்டும். ஆளுநரும் அமைச்சரவையைச் கலந்து செயற்படுவார். சொல்லப்போனால், உள்துறை அமைச்சகம் வகுத்துள்ள விதிமுறைக் குறிப்பின்படி, இந்த மூன்று உறுப்புகளின்கீழ்ச் செய்யப்பெறும் நியமனங்களில் முதலமைச் சருக்கு நெருங்கிய தொடர்புண்டு. இத்தகைய மரபு தொடர்ந்து கையாளப்பெறவேண்டும் என்று இக்குழு பரிந் துரை செய்யும் அதே வேளையில் உறுப்பு 217 (1)-ல் உள்ளபடி குடியரசுத் தலைவர், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் ஆளுநரைக் கலந்தே செயற்படுமாறும், ஆளுநரும் அமைச்சரவையின் யோசனைப்படியே நடக்குமாறும் மேற்குறித்த உறுப்புகள் மூன்றினையும் திருத்தி அமைக்கவேண்டுமென இக்குழு கருது கிறது.

13. தற்போது, ஒரு மாநிலச் சட்டம், அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்ற நிலைவரும்போது, எந்த வகையுரைபற்றி வழக்கு எழுகின்றதோ அவ்வகையுரையைப் பற்றி மட்டுமே உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. அத் தீர்ப்பின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடு அல்லது விடுபட்ட பகுதி பின்னர் சரிப்படுத்தப்பெறுகிறது. ஆனால் சிலகாலம் கழித்து அதே சட்டத்தின் மற்றொரு பிரிவு அல்லது வகையுரை செல்லத்தக்கதா என்ற வழக்கு எழுகிறது.

இவ்வாறு அச்சட்டத்தின் வகையுரைகளைப் பற்றிய வழக்குகள் பன்முறை தோன்றலாம். ஒரு சட்டத்தின் குறிப்பிட்ட யாதேனும் ஒரு வகையுரை அரசமைப்புச் சட்டப்படிச் செல்லத்தக்கது என்பதை முடிவாகத் தீர்த்து வைக்குமாறு ஓர் ஏற்பாடு செய்தல் நலம் என இக்குழு கருதுகிறது. மாநிலச் சட்டம் ஒன்றின் குறிப்பிட்ட யாதேனும் ஒரு வகையுரை அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்ற வழக்கு ஏற்பட்ட உடனேயே மாநில அரசு, தலைமை நீதிபதி உட்பட மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட ஒரு முழு நீதிஆயத்திடம் இவ்வழக்கை அனுப்புமாறு உயர்நீதி மன்றத்தைக்கோர வகை செய்ய வேண்டும் என இக்குழு பரிந்துரைக்கின்றது. இந்த நீதி ஆயம், அச்சட்டத்தின் ஒவ்வொரு வகையுரையையும் ஆராய்ந்து, அச்சட்டம் முழுவதும் பற்றிய தனது முடிவைத் தருதல் வேண்டும். இவ்வாறு முடிவு கூறியபிறகு அச்சட்டத்தின் எந்த வகையுரையும் அரசமைப்புச் சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல என்று வழக்காட இடமிருக்கக் கூடாது.

14. உறுப்பு 143 (1). உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது போன்ற அதிகாரங்கள் உயர்நீதிமன்றங்களுக்கு இல்லை. பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் பற்றிய அல்லது பொருண்மை பற்றிய பிரச்சினை குறித்து உச்ச நீதி மன்றத்தின் கருத்தினை அறியும் அதிகாரம் குடியரசுத் தலைவர் ஒருவருக்கே உண்டு. ஆனால், எடுத்துக்காட்டாக சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்படாமல் உள்ள அல்லது சட்ட மன்றத்தில் முன்னுரைக்கப்பட இருக்கின்ற ஒரு மசோதாவின் சட்டப் பிரச்சினை அல்லது அரசமைப்புச் சட்டப் பிரச்சினைபற்றி மாநிலத்தின் உயர்நிலை நீதி மன்றத்தின் கருத்தை மாநில அரசு அறிய விரும்பினாலும் அல்லது தேவையென்று கருதினாலும், இதற்கான வழிவகை தற்போது இல்லை. இந்த மசோதா சட்டமான பிறகுதான் இதைப்பற்றி நீதிமன்றங்களில் வழக்காட இயலும்; அதுவும் அச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட தனியார்களால்தான் இயலும். இந்த நிலை, தேவையற்ற வழக்காடல்களுக்கு இடமளிக்கிறது. சட்டங்கள் இயற்றப்படும் முன்பே அவை செல்லத்தக்கவைதானா என்பதை முன்கூட்டியே அறியும் வாய்ப்பு மாநிலங்களுக்கு இருந்தால், பல சட்டங்கள் செல்லத் தக்கவையல்ல என்று ஒதுக்கப்பெற்ற நிலையைத் தவிர்த்திருக்க இயலும். எனவே, உறுப்பு 143 (1)-ல் உள்ளவாறு,

பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் பற்றிய அல்லது பொருண்மை பற்றிய பிரச்சினைகளை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் கருத்தினைப் பெறுவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமெனப் பரிந்துரை செய்கிறோம். அமெரிக்க ஒன்றியத்தைச் சார்ந்த பல மாநிலங்களில், அரசோ அல்லது சட்டமன்றங்களோ வேண்டிக்கொண்டால் அம்மாநிலத்து உயர்நிலை நீதிமன்ற நீதிபதிகள் அம்மாநிலம் மேற்கொள்ளவிருக்கின்ற சட்டங்கள் பற்றியோ அல்லது நடவடிக்கைபற்றியோ அரசமைப்புச் சட்டப்படிநிலைமையை விளக்கக் கடமைப் பட்டவர்கள்; இதற்கான வழிவகை அரசமைப்புச் சட்டத்திலேயே உள்ளது. மற்ற மாநிலங்களில், சட்டமன்றங்கள் எவ்வாறு சட்டத்தை நன்முறையில் திருத்தியமைக்கலாம் என்பது பற்றி நீதிபதிகளே அறிவுரை வழங்குகின்றனர். மேற்குறித்தவாறு வழிவகை செய்தால், அது மிகவும் பயனுள்ளதாக இருப்பதோடு, வழக்காடல்களையும் பெருமளவு குறைத்துவிடும்.

அத்தியாயம் VIII

ஆளுநர்.

ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி ஆராய்ந்து, திரு அசோக் சந்தா 1970 மார்ச்சுத் திங்கள் 15-ம் நாளிட்ட "இல்லஸ்ட்ரேட்டட் வீக்கிலி ஆப் இந்தியா" என்ற இதழில் தான் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்டவாறு கருத்தறிவித்திருக்கிறார் :—

"மையத்திலும், மாநிலங்களிலும் காங்கிரசு கட்சி அதிகாரத்திற்கு வந்தபோது, முதலமைச்சர்கள்தாம் உண்மையான அதிகாரத்தின் இருப்பிடங்கள் என்று கருதப்பட்டனர். அவர்களது விருப்பப்படி ஆடுகின்ற கைப்பாவைகளே ஆளுநர் என்ற கருத்தும் நிலவியது.

ஆனால் காங்கிரசின் தோல்வியைத் தொடர்ந்து மாநிலங்களில் நிலையற்ற தன்மை மிகுந்தபோது, நிலைமை மாறி, ஆளுநர்கள் உண்மையிலேயே செயற்பாட்டிற்குரியவர்களானார்கள். சூழ்நிலைகள் காரணமாக, அமைச்சரவை அமைப்பதிலும் அவர்கள் பங்கு பெற வாய்ப்பேற்பட்டது. ஆளுநருக்குள்ள உளத்தேர்வு அதிகாரத்தை மறுத்தவர்கள் கூட, தங்கள் மாநிலங்கள் முன்னேற்றம் அடைவதிலும், அவை நிலையான தன்மை பெறுவதிலும் ஆளுநருக்குச் சிறப்பான பங்கு உண்டு என்ற கருத்தைத் தற்போது ஏற்றுக்கொள்கின்றனர். ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தைக் குடியரசுத் தலைவர் எடுத்துக்கொள்ளும் போது ஆளுநர் பதவியின் இன்றியமையாமை உணரப்படுகிறது. இப்போதுள்ள மாறிய சூழ்நிலையில், ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதோடு, அவருக்குள்ள அதிகார வரம்பினையும் ஐயமறத் தெளிவாக்கிடவேண்டுவதும் இன்றியமையாததாகும். மைய அரசின் கட்டளைக்குப் பணிந்து, அதன் விருப்பப்படி அல்லது அதனுடைய அரசியல் நலன்களுக்குகந்தவாறு நடக்க வேண்டிய கட்டாயத்திலுள்ள கைப்பாவைகள் அல்லர் ஆளுநர்கள் என்ற தற்போதைய நிலைமை நம்பிக்கையளிக்கக்கூடியதாயிருக்கிறது".

மாநிலத்தின் தலைவர் ஆளுநரே. அவர் குடியரசுத் தலைவரால், அதாவது மைய அரசால், நியமிக்கப்படுகிறார். அவர்களால் பதவியில் இருந்து நீக்கவும் படலாம். ஆளுநர் பதவியைப் பொறுத்த கீழ்க்கண்ட இனங்கள் ஆய்வுக்குரியன :—

(1) ஆளுநரை நியமனம் செய்வதில் மாநில அமைச்சரவையிடம் எந்த அளவிற்குத் தொடர்பு கொள்ளவேண்டும்?

(2) ஆளுநருக்கும் மைய அரசுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவென்ன ?

(3) ஆளுநருக்கும் மாநில அமைச்சரவைக்கும் இடையே நிலவ வேண்டிய உறவென்ன ?

(4) தம் உளத்தேர்வுப்படி ஆளுநர் எந்த அதிகாரத்தையும் கையாள அரசமைப்புச் சட்டம் இடந்தருகிறதா—அதாவது, அமைச்சரவையைக் கலக்காமல், அல்லது அமைச்சரவையின் அறிவுரைக்கு மாறாகத் தம் அதிகாரங்களை ஆளுநர் கையாளலாமா ?

2. இனம் (1).—குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப் பெற்று அவரால் விரும்பப்படும்வரை ஆளுநர் பதவி வகிப்பார் என்று மட்டும் அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ளது. மாநில அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஆனால், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் காலத்தில், வரைவுக்குழுவின் உறுப்பினராயிருந்த ஒருவர் (சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்), ஆளுநரைத் தேர்ந்தெடுக்குமுன், மாநில அரசைக் கலந்தாலோசிக்கும் மரபு தோன்றும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.* இத்தகைய கலந்தாலோசித்தலுக்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாக வழிவகுக்கப்படவில்லை எனினும், ஆளுநரை இறுதியாகத் தேர்ந்தெடுக்குமுன் முதலமைச்சரைக் கலந்தாலோசிக்கும் வழக்கம் தற்போது இருந்து வருகிறது. ஆளுநரை நியமனம் செய்வது பற்றிய வகையுரை அரசமைப்புச் சட்டத்தின் அங்கமாக ஆவதற்கு முன்னர், பல மாறுதல்களுக்குள்ளானது.**

ஆளுநரை நியமனம் செய்யுமுன், முதலமைசசரைக் கலந்தாலோசிக்கும் மரபு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பெற வேண்டுமென்று, மைய-மாநில உறவுகளைப்பற்றி ஆராய

* அ.ச.ம.வி. VIII, பக்கம் 431.
** இதற்குரிய விவாதச் சுருக்கத்தை இணைப்பு V-ல் காண்க.

நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு நியமித்த கற்றறி குழு கருத்துத் தெரிவித்துள்ளது. ஆனல், இதன் மூலம், திறமையும், தகுதியும் வாய்ந்த ஒருவரை ஆளுநராக நியமிக்கும் தனது முதன்மைப் பொறுப்பை மைய அரசு குறையுடையதாகச் செய்துவிடக் கூடாது என்றும் அக்குழு கருத்தறிவித்துள்ளது. மைய அரசின் முதன்மைப் பொறுப்பைக் குறையுடையதாகச் செய்துவிடக் கூடாது என்று இந்தக் கற்றறி குழு கூறுவதைப் புரிந்து கொள்வது கடினமாயுள்ளது. சாதாரணமான சூழ்நிலையில், அரசமைப்புச் சட்ட ரீதியான தலைவர் என்ற முறையில் ஆளுநர் செயற்பட வேண்டும். அதாவது, அமைச்சரவையின் அறிவுரைகளுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும். மாநிலத்தலைவருக்கும் மாநில அமைச்சரவைக்கும் இடையே சுமுகமான உறவு நிலவவேண்டுமாயின் அமைச்சரவையை எப்போதும் கலந்து செயற்படுவதே முறையானதும் விரும்பத்தக்கதுமாகும். அப்படி இல்லையெனில், புகழ்மிக்க சட்ட நிபுணர்களையும் வழக்கறிஞர்களையும் நிர்வாக அனுபவம் பெற்றவர்களையும் கொண்ட ஓர் உயர் மட்டக்குழுவினை நியமித்து அதன் ஆலோசனை பேரில் ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வதற்குரிய வழிவகைகள் அரசமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற வேண்டும். நீதிபதிகளை நியமனம் செய்வதிலும், அது போன்ற மற்றவை குறித்தும் குடியரசுத்தலைவருக்கு அறிவுரை வழங்க இத்தகைய குழு ஒன்றினைத் தோற்றுவிக்கலாமென்று அரசமைப்புச் சட்ட ஆலோசகர் சர் பி. என். ராவ் தாம் தயாரித்த குறிப்பில் (Memorandum of May-June 1947) கூறியுள்ளார். திரு. க. சந்தானம்* அவர்களும் டாக்டர் கோ. சுப்பாராவ்** அவர்களும் ஓர் உயர்மட்டக் குழுவை கலந்தாலோசித்தே ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கவேண்டும் என்று கூறியுள்ளனர்.

3. இனம் (2).—மைய அரசிற்கு ஆளுநரை நியமனம் செய்யவும் பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் இருப்பதால் ஆளுநர் மைய அரசின்சொற்படி நடப்பவராகவே இருக்கிருர். இவ்வாறு உள்ள நிலைமையும் மைய அரசுக்கு ஆளுநரின்

* 1970-ம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற மைய மாநில உறவுகள் பற்றிய தேசீய மாநாட்டில் அவரால் அளிக்கப்பட்ட நடைமுறை அறிக்கையைக் காண்க.

** கோ. சுப்பாராவ் எழுதிய 'இந்திய இணைப்பாட்சி' என்ற ஆங்கில நூலின் பக்கம் 27-ஐக் காண்க.

பதவிக்காலத்தை நீட்டிக்க அல்லது அவரை வேருெரு தக்க பதவியில் அமர்த்த இயலும் நிலை இருப்பதாலும் ஆளுநர் தம் உளத் தேர்வுப்படி நடுநிலை தவருமல் மாநிலத்தின் தலைவர் என்ற முறையில் செயல்பட முடியாமல் போய்விடுகிறது. அரசமைப்புச் சட்டத்தின் சில வகையுரைகள் ஆளுநரை மைய அரசின் பிரதிநிதி என்ற நிலையை உண்டாக்கி இருந்த போதிலும் எந்தெந்த சமயங்களில் ஆளுநர் மைய அரசைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதைப் பற்றியும் அல்லது எந்தெந்த சமயங்களில் மைய அரசு ஆளுநருக்குக் கட்டளைப் பிறப்பிக்கலாமென்பது பற்றியும் தெளிவுற விளக்குவது விரும்பதக்கதாகும்.

4. இனங்கள் *(3)-ம், (4)-ம்.*—இந்த இரண்டு இனங்களும் ஒன்ருெடொன்று தொடர்புடையவை. எனவே, அவற்றை ஒருங்கே ஆராயலாம். அமைச்சரவைக்கும் ஆளுநருக்கும் இடையே உள்ள உறவு, அரசமைப்புச் சட்டப்படி ஆளுநருக்குத்தம் உளத்தேர்வுப்படிசெயற்படும் அதிகாரம் உள்ளதா என்பதைப் பொறுத்துள்ளது. உளத்தேர்வு அதிகாரங்கள் எனப்படுபவை 1935-ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தில் முதல்முறையாகக் கொண்டுவரப்பட்டன. 1937-ம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று மாகாணத் தன்ஞட்சியைத் தொடங்குவதற்கு முன்னர் ஆளுநர் பின்வரும் இரண்டு வகையான ஆலோசகர்களுடன் செயல்பட்டார். (1) அக்காலத்தில் '' மாற்றப்பட்ட பொருள்கள் '' என்று அழைக்கப்பட்ட இனங்கள் பற்றித் தமக்கு ஆலோசனை கூற ஓர் அமைச்சரவை; (2) '' ஒதுக்கப்பட்ட பொருள்கள் '' என்று அழைக்கப்பட்ட இனங்கள் பற்றி ஆலோசனை கூற ஒரு நிர்வாகக் குழு. 1935-ம் ஆண்டின் சட்டமானது ஆளுநரின் பணிகளை மூன்று வகையாகப் பிரித்தது. அவை யாவன :—(1) ஆளுநர் தமது உளத்தேர்வின்படி கையாளக் கூடிய பொறுப்புகள், (2) தம் முடிவுப்படி செயற்படக்கூடிய பொறுப்புகள், (3) அமைச்சரவையின் அறிவுரையின்பேரில் செயற்பட வேண்டிய பொறுப்புகள். ஆளுநருக்கு விடுக்கப்பட்ட அறிவுரைத் தொகுப்பின்படி அவர் தமது உளத்தேர்வு அதிகாரத்தைப் பயன்படுத்தும்முன் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்கத் தேவையில்லை. அவர் தனது முடிவுப்படி செயற்படும் பொறுப்புகளை நிறைவேற்றுமுன் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனல், அமைச்சரவையின் அறிவுரையை அவர் நிராகரிக்கலாம். எஞ்சியுள்ள பொறுப்புகளைப் பொறுத்தவரைதான் ஆளுநர்

அமைச்சரவையின் அறிவுரையின்படி நடத்தல் வேண்டும். ஆளுநர் தம் உளத்தேர்வு அதிகாரங்களைப் பயன்படுத்தும் வழிவகைகளைப் பற்றி வரைவு அரசமைப்புச் சட்டத்தில் பல்வேறு வகையுரைகள் இருந்தன. 1948-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்த வரைவு அரசமைப்புச் சட்டத்தை ஆராய்ந்த தனிக் குழு, ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவதால் ஆளுநரது உளத்தேர்வு அதிகாரங்களை நீக்கிவிடலாம் என்று யோசனை கூறியது. இத்தனிக்குழு மாற்றி அமைத்த வரைவு அரசமைப்புச் சட்டத்தை மேலும் ஆராய்ந்த போது, ஆளுநர் தமது உள்தேர்வுப்படி எந்த அதிகாரத்தையும் கையாளமாட்டார் என்று டாக்டர் அம்பேத்கார் தெளிவுபடுத்தினார். மேலும் அன்று முன்மொழியப்பட்ட அரசமைப்புச் சட்டப்படி, எல்லா நிலைகளிலும் அமைச்சரவையைக் கலந்தாலோசித்தே ஆளுநர் செயற்படுவார் என்று அவர் கூறினார்.

5. ஆளுநருக்கு ஆணைகள் பிறப்பிப்பதற்குரிய அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தில் இல்லை. சில குறிப்பிட்ட நிலைகளில் தவிர்த்து ஆளுநருக்கு எந்த விதமான உளத்தேர்வு அதிகாரத்தையும் அரசமைப்புச் சட்டம் தரவில்லை. ஆனபோதிலும், நிருவாகச் சீரமைப்புக் குழு அமைத்த கற்றறி குழுவின் முடிவுப்படி ஆளுநர் தாம் சரியென்று கருதினால் மசோதாக்களுக்குத் தம் இசைவினை நிறுத்திவைக்கக்கூடும். மேலும், சட்டரீதியாகவே ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை (எடுத்துக்காட்டு பல்கலைக் கழக வேந்தர்) அவர் தமது உளத்தேர்வின்படிப் பயன்படுத்தலாம். மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஆளுநர் தமது உளத் தேர்வின்படி இசைவினைத் தர மறுக்கலாம் என்ற கருத்தை, 1948, பிப்ரவரியில்இருந்தவாறான வரைவு அரசமைப்புச் சட்டத்தின் 175-வது உறுப்பின் வரம்புரையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மசோதாக்களை மாநிலச் சட்டமன்றத்துக்குத் திருப்பியனுப்பலாம்என்ற நிலைஇருப்பது தெரியும். முன்னரே கூறியவாறு ஆளுநர் தமது உளத்தேர்வின்படி கையாளும் அதிகாரங்கள் யாவற்றையும் நீக்கவேண்டுமென்று தனிக் குழுகூறியுள்ளது. இந்தநிலையில் ஆளுநர்சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களைத் திருப்பியனுப்பலாம் என்று கற்றறிகுழு எந்த அடிப்படையில் கருதுகிறது என்பதைப் புரிந்து கொள்ள இயலவில்லை. வரைவு அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநருக்கு அளிக்கப்படவிருந்த உளத்தேர்வு அதிகாரங்கள் இறுதியில் நீக்கப்பட்டு விட்டன. சட்ட மன்றங்களுக்கு மசோதாக்களைத்

* அ. ச. ம. வி. VIII, 467 பக்கம்.

திருப்பியனுப்பும் அதிகாரத்தையும் ஆளுநர் அமைச்சரவையின் அறிவுரையின்படியே செலுத்தக் கடமைப்பட்டவர். சட்ட பூர்வமாக அமைந்த பொறுப்புகளை நிறைவேற்றும் பணி பற்றி கற்றறிகுழு கூறியுள்ள கருத்து, அலாகாபாத் உயர் நீதிமன்றத்தில் ஜோதி பிரசாத் என்பவருக்கும் கல்கா பிரசாத் என்பவருக்கும் (A.I.R. 1962 அல. 128) நடந்த வழக்கில் தரப்பட்ட தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும். இத்தீர்ப்பில் மாநிலத்துக்கான அதிகாரத்தைப் பயன்படுத்தும்போதுதான் அவர் ஆளுநர் என்ற தகுதியைப் பெறுகிறார்; சட்ட பூர்வமான அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது அவர் ஆளுநர் என்ற தகுதியிலிருந்து செயற்பட்டவராகக் கருதக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இந்த அலாகாபாத் உயர் நீதி மன்றத் தீர்ப்பைப் பற்றி திரு. துர்கதாஸ் பாசு கீழ்க் கண்டவாறு கூறியுள்ளார் :—

'' இந்தச் சூழ்நிலையில் ஆளுநர் தமக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நியமனம் செய்த நபரின் தகுதி பற்றி நமக்கு அக்கறையில்லை. இத்தகைய சட்ட அதிகாரத்தைக் கொண்டு ஆளுநர், பல்கலைக் கழகத்திற்கோ அல்லது சட்ட பூர்வமாக அமைந்த பிற நிறுவனங்களுக்கோ ஒரு அலுவலரை நியமிக்கும் அதிகாரம் எத்தகையது என்பதே நம் முன் உள்ள பிரச்சினை. இத்தகைய அதிகாரத்தை உறுப்பு 163-ல் கூறியபடி அமைச்சரவையின் அறிவுரையின் பேரில் கையாளவேண்டுமா ? இந்த அதிகாரங்களை உறுப்பு 166 (3)-ன் கீழ் அமைச்சர்களுக்குக் கொடுத்து விடலாமா?

ஆளுநரின் சொந்த தகுதி பற்றி நம்பிக்கை கொண்டு இத்தகைய அதிகாரங்களை அவருக்கு சட்ட மன்றம் வழங்கியுள்ளது என்று எடுத்துக் கொண்டால், இது ஆளுநரை ஒருவர் அவரது தனித்தகுதி பற்றி தனக்கு அறங்காவலராக நியமித்ததை ஒக்கும். எனவே, இத்தகைய சட்டப்பணி உறுப்பு 166 (3)-ன் கீழ் வரும் அரசின் பணியாகாது.

மேற்குறித்த கருத்து ஒத்துக்கொள்ளக் கூடியதன்று. ஏனெனில், பல்கலைக் கழகத்திற்கான நியமனம் செய்யும் போதோ அல்லது சட்டபூர்வமாக அமைந்த நிறுவனத்திற்கு நியமனம் செய்யும்போதோ ஆளுநரின் சொந்தத் தகுதியின்பேரில் செய்யப்படுவதில்லை. ஆளுநர் என்ற பதவியில் அவர் இருப்பதால் அப்பதவியால் அவர் இந்த நியமனங்களைச் செய்யும் அதிகாரத்தைப் பெறுகிறார். இந்த

அதிகாரம் அவர் ஆளுநராக இருக்கும்வரைதான் நீடிக்க இயலும். எனவே, அத்தகைய நியமனங்களில் சட்ட மன்றத்தாலேயே ஆளுநர் பொறுப்பு பெறுகிறார் என்பது தெளிவு. ஏனெனில், மாநில அரசின் தலைவர் அவர்; மேலும் அரசின் சார்பாக இந்த நியமனங்களைச் செய்ய இயலாது. ஏனெனில், அரசே ஒரு 'பதவி'யை வகிக்க இயலாது. இக்கருத்தை ஒப்புக்கொண்டால் ஆளுநரின் சட்டபூர்வமான பணிகள் உறுப்பு 166 (3)-ன் கீழ் 'மாநில அரசின் பணி' என்பதையும் உறுப்பு 163 (1)-ன் கீழ் 'பொறுப்புகள்' என்பதையும் உள்ளடக்கியதாகும்.'' *

ஆகையால், தம் அலுவலால் சட்டபூர்வமான பொறுப்புகள் சம்பந்தப்பட்டவரை அமைச்சரவையின் அறிவுரையின் படியே ஆளுநர் செயற்படக் கடமைப் பட்டவர் ஆவர்.

6. ஆளுநரின் உளத்தேர்வு அதிகாரங்களைப் பற்றி உச்ச நீதி மன்றம், ராம் ஜவாயா என்பவருக்கும் பஞ்சாப் அரசுக்கும் நடந்த ஒரு வழக்கில் (A.I.R. 1955 உச்சநீதி மன்ற வழக்கு 549) ஆராய்ந்துள்ளது; ஆளுநர்கள் அரசமைப்புச் சட்ட முறையான தலைவர்கள் ஆவார்கள். உண்மையான நிர்வாக அதிகாரம் அமைச்சரவைக்கே உண்டு என உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதே போன்ற கருத்து டி. எம். கன்னையன் என்பவருக்கும் பாண்டிச்சேரி வருமான வரி அலுவலருக்கும் நடந்த ஒரு வழக்கில் (A.I.R. 1968 உச்ச நீதி மன்ற வழக்கு 637) தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிரான்வில் ஆஸ்டின் தாம் எழுதிய ''இந்திய அரசமைப்புச் சட்டம்—தேசத்தின் மூல அமைப்பு'' என்ற நூலில் ஆங்கில மன்னர் வகித்து வரும் இடம்தான் ஆளுநருக்கும் உள்ளது என்றும் எல்லா விஷயங்களிலும் அமைச்சரவையின் அறிவுரையின் படியே ஆளுநர் செயற்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். ஐயத்திற்கு இடமின்றி உறுப்பு 163(1)-ஐத் திருத்தியமைத்து உளத்தேர்வு அதிகாரத்தைச் சட்டம் இடம் கொடுத்தால் மட்டுமே ஆளுநர் கையாளலாம்(எடுத்துக்காட்டு அசாம்) என்று வழி வகை செய்துவிடலார்.

7. மைய-மாநில உறவைப்பற்றி ஆராய்ந்த நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறிகுழு ஆளுநருக்குள்ள (1) முதலமைச்சரை நியமித்தல், (2) அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தல், (3) சட்டமன்றத்தை கலைத்தல் ஆகியவற்றின்

* பாசுவின் இந்திய அரசமைப்புச் சட்ட விளக்க உரை தொகுதி III என்ற ஆங்கில நூலின் 280-வது பக்கம்.

தொடர்பான உளத்தேர்வு அதிகாரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இக்கருத்து விவாதத்திற்குரியது என இந்தக் கற்றறி குழுவே கூறியுள்ளது. முதலமைச்சரை நியமனம் செய்வதைப் பொறுத்த வரையில் இது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள இரண்டு பெரும் வகையுரைகளைப் பெருமளவு தழுவி நடைபெறுகிறது. அவற்றில், அமைச்சரவை கூட்டாக சட்டமன்ற பேரவைக்குப் பொறுப்புடையதாகும் என்பது ஒன்று. சட்ட மன்றத்தின் நம்பிக்கைக்குரியவரே அமைச்சராகமுடியும் என்பதுஇதன் மூலம் தெரியலாகும். இரண்டாவதாக எவரும் சட்ட மன்றத்தின் உறுப்பினராக இல்லாமல் ஆறு திங்கள்களுக்கு மேல் அமைச்சராக இருக்க முடியாது. பொதுவாக சொல்லப்போனால் பெரும்பான்மையுடைய கட்சியின் தலைவரை அழைத்து அமைச்சரவை அமைக்கும்படி ஆளுநர் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். அதே போல அமைச்சரவையை பதவி நீக்கம் செய்யும்போதும் மாற்று அமைச்சரவை ஒன்றை ஆளுநர் கண்டுபிடித்தாக வேண்டும். சட்ட மன்றத்தைக் கலைத்தலைப் பொறுத்தவரை, டாக்டர் அம்பேத்கார் குடியரசுத் தலைவரைப்பற்றி அரசமைப்புச் சட்ட மன்றத்தில் கூறியது இங்குபொருந்தும். டாக்டர் அம்பேத்கார்* இங்கிலாந்தில் உள்ள வழக்கத்தைக் குறிப்பிட்டுவிட்டு, குடியரசுத் தலைவர் மன்றத்தின் கருத்தை அறிந்து ஒரு சரியான முடிவுக்கு வரும் பொறுப்பினை அவருக்கு விட்டுவிட வேண்டும் என முடித்துள்ளார். இங்கிலாந்திலுள்ள நிலைமைகளுக்கு மாறாக, முதலமைச்சரை நியமித்தல், அமைச்சரவையை பதவி நீக்கம் செய்தல், சட்ட மன்றத்தைக் கலைத்தல் ஆகியவை பற்றிய கொள்கைகள் இருக்க இயலாது. மேற்குறித்த நிலைமைகளையொட்டி இங்கிலாந்தில் உள்ள நடைமுறைகள் நன்கு தெரிந்தவை. அவற்றை மறுபடியும் இங்கு திருப்பிக் கூறத் தேவையில்லை. வேறு எந்த வெளியார் அதிகாரத்திற்கும் வளைந்து கொடுக்காமல் ஆளுநர் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை மட்டும் இங்குச் சொல்லலாம். இந்தியக் குடியரசின் துணைத் தலைவரும் மாநிலங்கள் அவையின் தலைவருமாகிய திரு ஜி. எஸ். பதக், 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3-ம் நாளன்று புதுடில்லியில் மைய-மாநில உறவுகள் பற்றிய தேசியமாநாட்டைத் தொடங்கிவைக்கும்போது ஆளுநரின் உளத் தேர்வு அதிகாரங்களைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு விளக்கிக் கூறியுள்ளார்:—

"நியமனம் செய்யப்படும் மாநிலத்திற்கு அவர் அரசமைப்புச் சட்டமுறையான தலைவர் ஆவார். அரசமைப்புச்

* அ.ச.ம.வி. VIII, பக்கங்கள் 106-107.

சட்டத்தில்தெளிவாக அவருக்கு உளத்தேர்வுஅதிகாரம்வழங்க பட்ட இனங்கள் தவிர வேறு எதைப்பற்றியும் அமைச்சரவை யின் ஆலோசனையின்படியே அவர் செயல்பட வேண்டும். அமைச் சரவையின் ஆலோசனைப்படி செயற்படும் போது மைய அரசி னின்றும் அவர் சுதந்திரமாக இருத்தல் வேண்டும். மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு எதிரான கருத்தினை மைய அரசு இவருக்கு வழங்குகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கலாம். அரசமைப்புச் சட்டப்படி இவர் உளத்தேர்வு அதிகாரத்தைக் கையாளும் போது அந்த அதிகாரம் தன்னுடைய அதிகாரம் என்ற உணர்வோடும் வேறு ஒருவருடையது அல்ல என்றும், எனவே இவ்வதிகாரத்தில் மைய அரசு தலையிட முடியாது என்றும் அவர் நடந்து கொள்ள வேண்டும்.''

ஆளுநரின் உளத்தேர்வு அதிகாரங்கள் பற்றி வெளிநாட்டுச் சட்ட நிபுணர்களும் இது போன்ற கருத்துக்களையே தெரி வித்துள்ளனர். பேராசிரியர் அலெக்ஸாண்ட்ரோவிஷ் தாம் எழுதிய '' இந்தியாவில் அரசமைப்பு வளர்ச்சிகள் '' என்ற நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

'' ஆளுநர் (இராஜ பிரமுகர்) மாநிலத்திற்கு பெய ரளவில் தலைவராவர். நடைமுறையிலும் அவரது நிலை இதுவே. அமைச்சரவைக்கு இவரது இசைவு தரப்படுவதும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுவதும் தானாகநடை பெறு கிறதேயன்றி இவரது உளத்தேர்வுப்படி நடைபெறவில்லை.''

* * * * *

'' மாநில அளவில்மட்டும் சுருங்கிச் செயற்படும் அரசியலில், அமைச்சரவையின் அறிவுரையை இவர் புறக்கணிக்க இயலாது. அமைச்சரவையை நியமனம் செய் யும்போது பெரும்பான்மைக் கட்சியின் கொள்கையின் அடிப்படையிலோ அல்லது சட்டமன்றத்தில் உள்ள மற்றக் கூட்டுக்கட்சிகளின் கொள்கையின் அடிப்படையிலோ செயற் படவேண்டும்.''

மேலும் கிரான்வில் ஆஸ்டின் ஆளுநரின் நிலைபற்றி கீழ்க் கண்டவாறு விளக்குகிறார்:—

'' ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உளத்தேர்வு அதிகாரங்களும் ஏனைய தனி அதிகாரங்களும் நீக்கப்பட்டு அவர்களுடைய நிலை குடியரசுத்தலைவர் நிலைக்குச் சமமாகக் கொண்டு வரப்பட்டது. இவ்வதிகாரங்களில் பல மைய அரசுக்கு மாற்றப்பட்டன." அரசமைப்புச் சட்டத்தை உருவாக் கும் தொடக்க நிலைகளில் ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிக

அதிகாரங்களுக்குக் காரணம் ஒரு கட்டுக்கோப்பில்லாத இணைப் பாட்சி முறை அமையவேண்டுமென்ற கருத்து அப்போது நில வியதேயாகும். ஆனால் இதுபற்றி மன்றத்தில் தெளிவாக சொல்லப்படவில்லை. ஒரு கட்டுக்கோப்புள்ள இணைப்பாட்சி யும் சீரான நிர்வாக நடைமுறைகளும் தேவை என்ற நம்பிக்கையும் சேர்ந்து ஆளுநர் நிலையையும் குடியரசுத் தலைவரது நிலையையும் ஒன்றுபோல் ஆக்கிவிட்டன.''

8. ஆளுநர்களை நியமிக்கவும் பதவி நீக்கம் செய்யவும் உள்ள அதிகாரம் மைய அரசிடம் இருக்கும்வரை ஆளுநர் மைய அரசை எதிர் நோக்கியிருந்து அதன் விருப்பப்படி தமது கடமைகளை நிறைவேற்றுவதைத்தவிர வேறு வழியில்லை. ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் மாநிலத்தின் அரசியல மைப்புச்சட்டம் சீர்குலைந்து போகும்போது நிர்வாக அதி காரங்களையும் சட்ட மியற்று அதிகாரங்களையும் மைய அரசு மேற்கொள்ளலாம் என்ற வகையுரையைச் சொல்லலாம். இந்த வகையுரை இருக்கும்வரை மைய அரசின் கட்டளைகளை ஆளுநர் நிறைவேற்றியே தீரவேண்டியுள்ளது. எனவே, ஆளுநர் தமக்குள்ள உளத்தேர்வு அதிகாரம் எதையேனும் கையாள வேண்டியிருந்தால் அதற்குரிய வழிகாட்டியாக பொதுவான கோட்பாடுகளையாவது குறிப்பிடுவது அவசியமாகும். ஆளு நரின் உளத்தேர்வு அதிகாரங்களைப் பயன்படுத்த எழுத்து மூலமாக மரபுகளையும் ஆணைகளையும் வரையறை செய்தல் வேண்டும் என பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் வாதாடி உள்ளனர்.

ஆளுநருக்கு அறிவுரை அனுப்பலாமா என்பது பற்றி சுவை யான விவாதம் நடத்தப்பட்டுள்ளது. இந்தியன் பார்லி மென்டரி சங்கத்தின் மைய மாநில உறவு பற்றியதும் ஆளுநர்களின் நிலைபற்றியதுமான ஒரு கருத்தரங்கை தொடங்கிவைக்கும்போது குடியரசின் துணைத் தலைவர், ஆளுநர்களுக்கு ஒரேமாதிரி சமயங்களில் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய வழிவகைகள் பற்றி ஆணைகள் இடக் கூடாது என்று கருத்து தெரிவித்துள்ளார். ஆளுநர்களுடைய நிலைப்பற்றி விவாதத்தைத் தொடங்கிவைத்த அன்றைய சட்ட அமைச்சர் (காலஞ் சென்ற திரு பி. கோவிந்தமேனன்) முத லமைச்சரை நியமித்தல், அமைச்சரவையை பதவி நீக்கம் செய்தல், குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக மசோதாக்களை ஒதுக்கிவைத்தல் ஆகியவற்றில் தமது உளத் தேர்வு அதிகாரத்தை ஆளுநர்கள் பயன்படுத்தியே தீர வேண்டும் எனக் கருத்து தெரிவித்துள்ளார். முதலிரண்டு

இனங்கள் பற்றி இந்த அத்தியாயத்தில் முன்னரே ஆராய்ந்துள்ளோம். மசோதாக்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்காக ஒதுக்கிவைத்தலைப் பொறுத்தவரை, அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயல்படவேண்டும். ஏனெனில், உறுப்பு 200 எந்தவித உளத்தேர்வு அதிகாரத்தையும் ஆளுநருக்கு வழங்கவில்லை நிருவாகச்சீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவரான திரு கே. அனுமந்தையா, திரு பதக் அவர்களின் கருத்திலிருந்துமாறுபட்டுள்ளார். நியமனஅதிகாரி என்ற நிலையில் குடியரசுத் தலைவர் ஆளுநரை குறிப்பிட்ட வழியில்செயல்படச் சொல்லலாம் எனக்கருத்தறிவித்துள்ளார். 1970-ம் ஆண்டு மேதிங்கள் 6-ம் நாளிட்ட 'இந்து' இதழில் திரு க. சந்தானம் இந்தச் சிக்கல் பற்றி விரிவாக எழுதியுள்ளார். நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றி ஆளுநருக்கு மட்டுமின்றி குடியரசுத்தலைவருக்கும் பொருந்தும்படி வழி முறைகள் வகுக்கப்படலாம் எனக் கூறியுள்ளார். குடியரசுத் தலைவருக்கும் ஆளுநருக்கும் பொருந்துமாறு அரசுத் தலைவரை நியமித்தல் (தலைமை அமைச்சர் அல்லது முதல் அமைச்சர்) அரசுத் தலைவர் சட்ட மன்றத்தைக் கலைக்கக்கோரும் உரிமை, மசோதாக்களைச் சட்டமன்றத்துக்குத் திருப்பி அனுப்பி மறுபரிசீலனை செய்யக் கோருதல் ஆகியவை பற்றி வழிமுறைகள் வகுக்கலாமென்றும், ஆளுநர்களுக்கு மட்டும் பொருந்துமாறு தனி வழி முறைகள் வகுக்கலாமென்றும் அவர் யோசனை கூறியுள்ளார். 1970-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20-ம் நாளிட்ட 'மெயில்' இதழில் டாக்டர் கே. அப்பாதுரை ஆளுநருக்கு ஆணைகள் இடுவதைப் பற்றி இதே போன்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். எனவே, மைய அரசின் பிரதிநிதியாகவும் மாநில அரசின் நிர்வாகத் தலைவராகவும் ஆளுநர் செயல்படுவதற்கு வசதியாக பொதுவான வழி முறைகளை வகுத்தல் இன்றியமையாதது என்பது பொதுவாக உணரப்படுகிறது. நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் கருத்துப்படி, ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்குதற்கென அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டியதில்லை.

முதலமைச்சரை நியமித்தல், அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தல், மசோதாக்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்காக ஒதுக்குதல் ஆகியவற்றிற்கான உளத்தேர்வு அதிகாரங்கள் ஆளுநருக்கு உண்டு என்னும் அன்றைய சட்ட அமைச்சரின் கருத்திலிருந்து மேலே குறிப்பிட்ட கட்டுரையில் திரு சந்தானம் மாறுபடுகிறார். ஆளுநர் பிரிட்டிஷ் அரசின் பாராளுமன்றமக்களாட்சிமரபுகளைப் பின்பற்றி நடக்கவேண்டு

மென்று எதிர்பார்க்கப்படுவதால் மேலே கூறிய மூன்று இனங்கள் பற்றிய உளத்தேர்வு அதிகாரம் ஆளுநருக்கு உண்டு என்பது சரியல்ல என்று சந்தானம் கூறியுள்ளார்.

9. மேலே கூறியுள்ள விவாதங்களிலிருந்து ஆளுநர் (1) மைய அரசால் நியமனம் செய்யப்படுபவர், (2) அரசமைப்புச் சட்டமுறையான மாநில அரசுத் தலைவர் என்ற இரட்டைப் பணியில் உள்ளவர் என்பது தெளிவாகின்றது. ஆளுநர், தாம் மைய அரசின் பிரதிநிதி என்று கருதக்கூடாது என டாக்டர் கோ. சுப்பாராவ் கூறியுள்ளார்.* இந்தியக் குடியரசின் துணைத் தலைவரான திரு. பதக் அவர்களின் கருத்தும் இதுவே. இந்த அத்தியாயத்தின் முன் பகுதியில் அவருடைய கருத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். எமது கருத்தும் இதுவே. மைய அரசின் பிடியிலிருந்து ஆளுநரை விடுவிப்பதற்கு டாக்டர் சுப்பாராவ் சில யோசனைகளைத் தெரிவித்துள்ளார். நியமன முறை அவற்றுள் ஒன்று. இதைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆளுநர் இரண்டாம் முறையும் பதவி வகிக்காதவாறும் அல்லது அரசின்கீழ் வேறு எந்தப் பதவியும் வகிக்காதவாறும் செய்யப்படவேண்டும் என்பதும் ஒழுங்கு தவறிய நடத்தை, திறமையின்மை ஆகியவற்றிற்காக உச்ச நீதிமன்றத்தால் விசாரணை செய்து நிரூபிக்கப் பட்டால் ஒழிய வேறு எந்தக்காரணத்திற்காகவும் பதவி நீக்கம் செய்யப்படக்கூடாது என்பதும் அவரது மற்ற யோசனைகள். இந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப் படலாம் எனப் பரிந்துரைத்துரைக்கிறோம்.

10. அடுத்து, ஆளுநர் தமது உளத்தேர்வு அதிகாரத்தை பயன்படுத்தும் பொறுப்புகள் எவை என்பதைப்பற்றி ஆராய வேண்டியுள்ளது. முன்னரே கூறியுள்ளபடி ஆளுநர் தமது உளத்தேர்வு அதிகாரத்தை மூன்று சந்தர்ப்பங்களில் செயற் படுத்தலாம். அவையாவன, (1) முதலமைச்சரை நியமித்தல், (2) அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தல், (3) சட்ட மன்றத்தைக்கலைத்தல். இவற்றில் கூட ஆளுநருக்குள்ள நடை முறைக்கட்டுப்பாடுகளைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். ஆனால் பல மாநிலங்களில் நிலவும் நிலையற்ற அரசியல் சூழ் நிலையில், ஆளுநரின் நிலை மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற் றுள்ளது. அநேக அரசியல் கட்சிகள், ஆளுநர்கள் ஒருதலைப்

* 1969 மார்ச் திங்களில் நிகழ்த்திய லால்பகதூர் சாஸ்திரி நினைவுச் சொற்பொழிவுகள்—கோ. சுப்பாராவ் எழுதிய 'இந்திய இணைப்பாட்சி' என்ற ஆங்கில நூலின் பக்கம் 27-ஐக் காண்க.

பட்சமாக நடப்பதாகவும் மைய அரசுக்கு உடந்தையாக இருப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றன. இக்குற்றச் சாட்டுகள் நியாயமானவையாகவும் அல்லது நியாயமற்றவையாகவும் இருக்கலாம். ஆனல் ஆளுநர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவும் மைய அரசு தலையீடு பற்றி ஐயத்தை உண்டாக்காமல் இருக்கவும் உறுதி செய்யப்படவேண்டும். தமது உளத்தேர்வு அதிகாரங்களைக் கையாளுவதற்குரிய மரபுகளோ வரன்முறைகளோ இல்லாத காரணத்தால் நெருக்கடி நிலைமைகள் தோன்றும்போது ஆளுநர்கள் நிலைமை மிக இக்கட்டாக மாறிவிடுகிறது. மரபுகள் என்பது நெடுங்காலமாக வளரவேண்டியவையாகும். நல்ல மரபுகள் உருவாவதற்குள்ள சூழ்நிலைபற்றி ஐயப்பாடு கொண்டுள்ளோம். நாம் இரண்டு தலைமுறைகளாக அரசமைப்புச் சட்டத்தைச் செயற்படுத்திவருகிறோம். ஆனல், இதுவரை தகுந்த மரபுகள் உருவானதாகத் தெரியவில்லை. இனியாவது இத்தகைய மரபுகள் உருவாகும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக, ஒன்று சொல்லலாம். 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கூடிய சட்டமன்றத் தலைவர்களின் அவசரமாநாட்டில், அமைச்சரவைகளை ஆளுநர் பதவிநீக்கம் செய்வது பற்றி மரபுகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று மைய அரசு, மற்றவற்றுக்கிடையே, கேட்டுக் கொள்ளப்பட்டது. அச்சமயத்தில், முதலமைச்சர் சட்டப் பேரவையின் நம்பிக்கையை இழந்து விட்டாரா இல்லையா என்பதை எப்போதும் சட்டப் பேரவையிலேயே தீர்மானிக்க வேண்டும் என்று மாநாடு கருத்தறிவித்தது. அண்மையில் சில மாநிலங்களில் நடந்த நிகழ்ச்சிகளின் பின்னணியை வைத்து நோக்குங்கால் மேற்குறித்த தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்ல இயலுமா? எழுத்துமூலமாக இது குறித்து ஆளுநர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கவேண்டுமென்று கருதுகிறோம். ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்குதல் அரசமைப்புச் சட்டப்படிச் செல்லத்தக்கதுதானு என்று ஐயப்பாடு கிளப்பப்பட்டுள்ளது. கற்றறி குழு, அறிவுரைகள் வழங்கலாம் ஆனல் அரசமைப்புச் சட்டத்திருத்தம் தேவையில்லை என்று கூறியுள்ளதைத் தொடர்ந்து மற்றவர்களால் ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் கருத்தை திரு க. சந்தானம் ஏற்றுக்கொள்கிறார். ஆளுநர்களுக்கு எழுத்து மூலமாக அறிவுரைகள் வழங்குவதாயிருப்பின் அவை அரசமைப்புச் சட்ட அடிப்படை

யிலேயே செய்யப்படவேண்டும். ஏனெனில், எதிர்காலத்தில் இவைபற்றிய சட்ட நுணுக்க எதிர்ப்புகள் எழுப்பப்படாமல் இருப்பதற்கு இதுவே சரியான வழியாகும். 1935-ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தில் இத்தகைய அறிவுரைகள் ஆளுநருக்கு மட்டுமன்றி ஆளுநர் தலைவருக்கும் சேர்த்து வழங்குதற்குரிய வழிவகை இருந்தது. அச்சட்டத்தின்படி வரைவு அறிவுரைத் தொகுப்பு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முன்னதாக வைக்கப்பட்டு அதன் இசைவினைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு இசைவு பெற்றபிறகு அது வெளியிடப்படும். இத்தகைய அறிவுரைத் தொகுப்பு நமது அரசமைப்புச் சட்டத்திலும் தொடக்கத்தில் இருந்தது. பின்னர், இப்பகுதி அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. ஆளுநர்கள் உளத்தேர்வு அதிகாரங்களைப் பயன்படுத்துவது உட்பட மற்ற நடவடிக்கைகளுக்கும் பொருந்துமாறு குடியரசுத் தலைவர் அறிவுரைத் தொகுப்புகள் விடுப்பதற்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவேண்டுமென்று பரிந்துரைக்கின்றோம்.

11. இந்த அத்தியாயத்தில் திரும்பத்திரும்ப எங்களால் எடுத்துக்கூறப்பட்டபடி ஆளுநர் தமது உளத்தேர்வு அதிகாரத்தைப் பயன்படுத்தும் எல்லை மிகக்குறுகியதாகும். சட்டமன்றத்திற்குப் பொறுப்புடையதாக அமைச்சரவையை அரசமைப்புச்சட்டம்செய்துள்ளது. எனவே, ஒருஅமைச்சரவை அவையின் நம்பிக்கை பெற்றுள்ளதா அல்லவா என்ற நிலை ஏற்படுமாயின் அதனைத் தீர்மானிக்க வேண்டியது சட்டப் பேரவையே தவிரவேறு எந்த ஆள்வையும் அல்ல. அண்மையில் நடந்த சில நிகழ்ச்சிகள் பல மாறுபட்ட கருத்துகளை எழுப்பியுள்ளன. மாநிலச் சட்டப் பேரவைக்குரிய அதிகாரத்தில் மைய அரசு தலையிடுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது பற்றிய விவகாரத்தில் இந்தக் குழுவிற்குச் சம்பந்தம் இல்லை. இப் பொருள் குறித்து மறுபடியும் குறிப்பிடுவது ஏனெனில் ஆளுநருக்கு விடுக்கும் அறிவுரைத் தொகுப்பில் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள நிலைமைக்கு ஏற்ப அமைச்சரவையின் மீது உள்ள நம்பிக்கை பற்றி முடிவெடுக்கவேண்டியது சட்டப்பேரவையே என்பதை வலியுறுத்தவேண்டும் என்பதற்காகத்தான். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, விடுக்க இருக்கும் அறிவுரைத் தொகுப்புகளில் அமைச்சரவை எவ்வாறு அமைக்கப்பெறுதல் வேண்டும் என்பதைப்பற்றி விரிவாக விளக்கப்படவேண்டு

மென்று பரிந்துரைக்கின்றோம். கீழ்க்கண்டவாறு அது அமையப்பெறலாம் :—

(அ) சட்டப் பேரவையில் அறுதிப் பெரும்பான்மை யுள்ள கட்சித் தலைவரையே முதலமைச்சராக ஆளுநர் நியமிக்க வேண்டும்.

(ஆ) எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லை என்று ஆளுநர் கருதினால் சட்ட மன்றத்தைத் தாமே கூட்டுவித்து முதலமைச்சரை தேர்ந்தெடுக்கச் செய்யலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கவேண்டும்.

(இ) எந்த ஒரு அமைச்சரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் ஆளுநருக்கு அறிவுரை கூறினால் அதை ஆளுநர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(ஈ) எந்தச் சமயத்திலாவது முதலமைச்சர் சட்டப் பேரவையில்பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார் என ஆளுநர் கருதுவாரேயானால் ஆளுநர் தாமே சட்டப் பேரவையைக் கூட்டுவித்து முதலமைச்சரை அவையின் நம்பிக்கையைப் பெறுமாறு ஆணையிடலாம்.

(உ) முதலமைச்சர் நம்பிக்கை பெற முற்படாவிடினும் அல்லது அதனை முயன்று நம்பிக்கையைப் பெறத்தவறினாலும் முதலமைச்சரையும் அவரது அமைச்சரவையையும் ஆளுநர் பதவி நீக்கம்செய்யவேண்டும். *

சட்டமன்றப் பேரவையின் நம்பிக்கை இருக்கும் வரைதான் அமைச்சரவை பதவி வகிக்கலாம் என்பது பாராளுமன்ற முறை மக்களாட்சிகள் எல்லாவற்றிலும் இயல்பாக உள்ள நன்கு ஏற்கப்பட்ட அரசமைப்புச் சட்டக் கோட்பாடாகும். மேலே குறிப்பிட்டவாறு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதாக இருந்தால் மேலே குறிப்பிடப் பட்ட கோட்பாடு அரசமைப்புச் சட்டப்படிக்கான தொகுப்பில் இடம் பெறும். இதன் விளைவாக ஆளுநரின் விருப்பம் நீடிக்கும் வரைதான் அமைச்சர்கள் பதவி வகிக்கலாம் என்னும் பிரச்சனைக்கு இடமில்லை. எனவே அமைச்சர்கள் ஆளுநரின் விருப்பம் நீடிக்கும் வரைதான் பதவியில் இருக்க இயலும் என்னும் வகையுரை அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டுமென இந்தக் குழு பரிந்துரைக்கின்றது. அறிவுரைத் தொகுப்பில் வகுக்கப்பட்டபடி அல்லாது முதலமைச்சரை பதவியிலிருந்து நீக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்பது சொல்லாமலே பெறப்படும்.

* ஓரளவுக்கு இதுபோன்ற கருத்தினை டாக்டர் கோ. சுப்பாராவ் 'இந்திய இணைப்பாட்சி' என்னும் ஆங்கில நூலில் தெரிவித்துள்ளார்.

அத்தியாயம் IX

நெருக்கடி நிலை வகையுரைகள்

மூன்று விதமான நெருக்கடி நிலைகள் அரசமைப்புச் சட்டத்தில் பாகம் XVIII-ல் கூறப்பட்டுள்ளன; அவை யாவன : (1) ஒரு மாநிலத்தில் மட்டும் எழுகின்ற நெருக்கடி அதாவது அரசமைப்புச் சட்டப்படிக்கான நிர்வாகம் சீர் குலைவது; (2) தேசீய அளவில் நெருக்கடி—அதாவது போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, அல்லது உள்நாட்டுக் குழப்பம்; (3) நிதி நிலைமைக்கு ஏற்படும் அபாயம் அல்லது இந்திய நாட்டின் செலாவணி மதிப்புக்கு அல்லது அதன் பகுதி ஒன்றன் செலாவணி மதிப்புக்கு ஏற்படும் கேடு ஆகியவைபற்றிய தனி நெருக்கடி.

(1) ஒரு மாநிலத்தில் மட்டும் எழுகின்ற நெருக்கடி

2. ஒரு மாநிலத்தில் சட்டநிர்வாகச் சீர்குலைவு ஏற்படும் போது எழுகின்ற நெருக்கடி பற்றி முதலில் நாம் ஆராய்வோம். உறுப்புகள் 356, 357 ஆகியவை இதன் தொடர்பானவை.

* அரசமைப்புச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளைப் பார்த்தால், 356-வது, 357-வது உறுப்புகள் அம்மன்றத்தின் முன்னணி உறுப்பினர்களின் எதிர்ப்புக்கிடையேதான் நிறைவேற்றப்பட்டன என்பது தெரியவரும். இந்த இரண்டு உறுப்புகளில் உள்ளதுபோன்ற வகையுரை வேறு எந்த இணைப்பாட்சியின் அரசமைப்புச் சட்டத்திலும் இல்லை. 1935-ம் ஆண்டின் சட்டத்திலிருந்து இந்தப்பகுதி எடுத்துக்கொள்ளப்பட்டதாகும். உறுப்பு 356-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமுன் கவனிக்கப்படவேண்டியது; " அரசமைப்புச் சட்டப்படி மாநில அரசு செயற்பட இயலாமற் போய்விட்டது " என்று 'ஆளுநரிடமிருந்து அறிக்கை வருவது அல்லது மற்றபடி' குடியரசுத் தலைவர், அதாவது மைய அரசு, அகவுணர்வு நிலைக்குரிய வகையில் மனநிறைவு கொள்வது ஆகும். மேலே சொல்லப்பட்ட நிலைமை தோன்ற எத்தகைய சூழ்நிலை இருக்க வேண்டுமென்று அரசமைப்புச்

* இவ் விவாதங்களின் சுருக்கத்தை இணைப்பு VI, பிரிவு 'அ'வில் காண்க.

சட்டம் அறுதியிட்டு ஒன்றும் கூறவில்லை. மாநில அரசின் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது என்பதை உறுதியாக்க தெளிவான விதிமுறைகளோ, சூழ்நிலைகளோ வகுக்கப்பெறவில்லை.

3. 356-வது உறுப்பு பற்றியும் அது இதுவரை எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது பற்றியும் திரு சிவ ராஜ் நகாதா ஒரு சுவைமிகு கட்டுரை தீட்டியுள்ளார் * இந்த உறுப்பு இதுவரை பயன்படுத்தப்பட்ட விதத்திலிருந்து, கட்டுரை ஆசிரியர் கீழ்க்கண்ட மூன்று பொது அம்சங்களை ஊகித்துள்ளார்:—

(1) காங்கிரசுக் கட்சியின் பெரும்பான்மையை மையத்திலும், பெரும்பான்மையான மாநிலங்களிலும் கொண்டிருந்த மைய அரசு, அரசியல் சூழ்நிலைக்குகந்தவாறே, குடியரசுத் தலைவரின் ஆட்சியைப் புகுத்தி வந்துள்ளது.

(2) மாற்று அமைச்சரவை மாநிலத்தில் அமையாத காரணத்தால், மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள அசாதாரண அதிகாரங்களை அது கைக்கொண்டது.

(3) அநேக சமயங்களில், மாநிலங்களில் மக்களாட்சியை மீண்டும் நிலைநாட்டவே உறுப்பு 356 பயன்படுத்தப் பட்டது என்ற எண்ணம் தோன்றும்படி மைய அரசு செயற் பட்டது.

முதன்முதலாக 1951-ம் ஆண்டு ஜூன் திங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு உட்பட்ட கிழக்கு பஞ்சாப் மாநிலத்திலிருந்து தொடங்கி கட்டுரையாளர் இந்த உறுப்புப் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனித்தனியே ஆராய்ந்துள்ளார். மொத்தத்தில், பல்வேறு மாநிலங்களில் இந்த உறுப்பு பயன்படுத்தப்பட்ட 19 நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் கூறியுள்ளார். ஒன்றியத்து நிலவரை (Union territory) களான கோவா, மணிபுரி, பாண்டிச்சேரி ஆகியவைபற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், உறுப்பு 356 ஒன்றியத்து நிலவரைகளுக்குப் பொருந்தாது. அது மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். ஒன்றியத்து நிலவரைகளுக்குப் பொருந்தும் வகையுரை 1963-ம் ஆண்டின் ஒன்றியத்து நிலவரைகளின் அரசுச் சட்டத்தின் (மையச் சட்டம் 20/1963) 51-ம் பிரிவு ஆகும். இவ்வகையுரையில் கூறப்

* "அரசமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகை" என்ற இதழின் (அக்டோபர்-டிசம்பர் 1969) தொகுதி III, பக்கங்கள் 78-123ஐக் காண்க.

பட்ட ஒன்றியத்து நிலவரைகளின் ஆட்சியில் ஏற்படக்கூடிய நிலைமை மாநிலங்களில் உறுப்பு 356-ன்படி ஏற்படக் கூடிய நிலைமையை ஒத்ததாகும்.

4. கட்டுரையாளரின் கருத்துப்படி, 1951-ல் கிழக்குப் பஞ்சாபில், 'மாநிலத்தில் உள்ள கட்சிகளின் போட்டி மனப் பான்மைகளையும் நிர்வாகச் சீர்கேடுகளையும் முடிவுகட்டு வதற்கு' இந்த வகையுரை பயன்படுத்தப்பட்டது. 1953-ம் ஆண்டில் பெப்சு (பாட்டியாலா கிழக்கு பஞ்சாப் சமஸ் தானங்கள் ஒன்றிப்பு)வில் குடியரசுத் தலைவரின் ஆட்சியைப் புகுத்தியது, கட்டுரையாளரின் கருத்துப்படி, 'ஒருதலைப் பட்சமான' 'கட்சி நலன் கருதி' எடுக்கப்பட்ட நட வடிக்கையாகும். 1961-ல் ஒரிசாவில் ஏற்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பற்றிக் கூறும்போது, இடைக்காலத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை காங்கிரசுக் கட்சியினருக்கு ஏற்படும் போதெல்லாம், குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வருவதிலும் சட்டமன்றத்தைக் கலைக்கச் செய்வதிலும் ஈடு படுவது காங்கிரசுக்காரர்களின் வழக்கமாகிவிட்டது என்று அவர் கூறுகிறார். இன்னொரு நிகழ்ச்சியைப்பற்றி கூறுகையில், காங்கிரசல்லாத கட்சியினரை ஆட்சியைப் பிடிக்கவிடாமல் செய்வதன்மூலம் ஆளுங்கட்சியின் நலன் காப்பாற்றப்படுகிற தென்றும், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைத் தெளிவான பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்காவிட்டால் மக்களாட்சி அமைப்பில் தாங்கள் பழிவாங்கப்படுவதாக மக்கள் நினைப்பதில் தவறில்லையென்றும் அவர் கருதுகிறார்.

உறுப்பு 356-ன் கீழ் மாநில அரசின் அதிகாரங்களை மைய அரசு அந்தச் சூழ்நிலைகளில் எடுத்துக்கொண்டது சரிதானா என்பதைப்பற்றி இக்குழு ஆராய்வதற்கில்லை. இதை ஏன் இக்குழு குறிப்பிடுகிறதென்றால் இந்த அதிகாரம் மாநிலங் களின் தன்னாட்சியைப் பறிப்பதற்கு பயன்படும் என்பதைச் சுட்டிக்காட்டவே.

5. 356-வது உறுப்பிலுள்ள குறைபாடுகளைப் போக்குதற் குக் கீழ்க்கண்ட நான்கு விதிமுறைகளை கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவையாவன: (1) இந்த அதிகாரத் தைப் பயன்படுத்துவதற்குரிய நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது; (2) இந்த அதிகாரம் பயன்படுத்தும் நிகழ்வை உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்துதல் அல்லது குடியரசுத் தலைவர்

ஒரு மாநிலத்தைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவதற்கு முன்னர் உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெறுதல் வேண்டும் என விதிப்பது; (3) ஆளுநர் பதவியை தேர்தல் மூலம் நிறைவுசெய்வது ; (4) உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்து அதன் கருத்தைப் பெறுதல். இந்த ஆலோசனைக் குழுவின் கருத்தை, நாடாளுமன்றத்தின் தொடர் கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் அதன் முன்பும், தொடர் கூட்டம் நடைபெறுதபோது நாடாளுமன்றத்தால் இதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் முன்பும் வைத்தல் வேண்டும். நாடாளுமன்றம் அல்லது நாடாளுமன்றக் குழு ஆகியவற்றின் கருத்தின்படியே குடியரசுத் தலைவர் செயற்படுதல் வேண்டும்.

திரு. க. சந்தானம் அவர்கள் 1970-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 2-ம் நாளிட்ட ''இந்து'' இதழில் ''இடைக்காலக் கலைப்புகளின் நேர்மை'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் உறுப்பு 356-ன் விளக்கம்பற்றி கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்:—

'' ஒரு அமைச்சரவை தோற்கடிக்கப்பட்டவுடன் மாற்று அமைச்சரவை அமைக்க முடியாத நிலையில் குடியரசுத் தலைவரின் ஆட்சியை சுமத்துவது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மிகக் குறைபாடுடைய அம்சமாகும். சாதாரணமாக ஒரு அமைச்சரவை தோற்கடிக்கப்பட்டு மாற்று அமைச்சரவை அமைக்கமுடியாத நிலையில் முறையாகச் செய்யக்கூடியது சட்டமன்றத்தை உடனடியாகக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்துவதுதான். அப்போதுதான் மக்கள் தாங்களே தீர்ப்பளிக்கும் வாய்ப்பைப் பெறுவர். சட்ட ஒழுங்கமைதியை நிலைநாட்ட இயலாது, சட்டமன்றம் அமைதியாகச் செயற்பட இயலாது என்ற நிலைமை இருந்தால் மட்டுமே குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டுவருவது உண்மையிலேயே நியாயமாகும். உறுப்பு 356-ஐப்பற்றி அரசமைப்புச் சட்டமன்றத்தில் விவாதங்கள் நடந்தபோது, உள்நாட்டு அமைதிக்குலைவு இருந்தாலொழிய, சட்டமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்தாமல், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வரக்கூடாதென பல பேச்சாளர்கள் வலியுறுத்தினர் ''

6. உறுப்பு 356-ஐப்பற்றி பாசு எழுதிய விளக்கவுரையில் எந்தச் சூழ்நிலைகளில் உறுப்பு 356-ன் கீழான அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்பதற்குக் குறிப்பிட்ட வரையறை செய்

வது இயலாது என்றும் ஏனெனில் அச்செய்கையை நீதி மன்றங்கள் ஆராய இயலாது என்றும் குறிப்பிட்டுள்ளார். முடிவெடுக்கும் உரிமை ஆளுநருக்கும் மைய அரசின் நிர்வாகத்திற்கும் விடப்பட்டுள்ளதென்றும் இந்த அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வழிவகை இல்லை என்றும் அவர் கருதுகிறுர். இந்த உறுப்பின் கீழ் இரண்டு நெருக்கடி நிலைமைகளில்தான் குடியரசுத் தலைவர் ஆட்சிச் சாற்றுனை பிறப்பிக்க இயலும் எனக் கருதுகிறுர். அவையாவன : (1) அரசியல் சீர்குலைவு அதாவது ஒரு அமைச்சரவை பதவி விலகி புதுப் பொதுத்தேர்தல் நடத்தாமல் மாற்று அமைச்சரவை அமைக்க இயலாது என்ற நிலைமை இருக்கும்போதும் அல்லது பெரும்பான்மையுள்ள ஒரு கட்சி அமைச்சரவை அமைக்க மறுத்து கூட்டுக் கட்சிகள் சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருந்தும் அமைச்சரவை அமைக்கமுடியாத நிலை இருக்கும்போதும்; (2) 'அரசமைப்புச்சட்ட வகையுரைகளின்படி மாநில அரசை நடத்த முடியாத நிலையில்' என்ற சொற்களே மாநிலங்களைப் பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் மற்ற வகையுரைகளை மீறிச் செயற்படும் தன்மைபெற்றதல்ல இந்த உறுப்பு என்பதை விளக்கும்; எடுத்துக்காட்டு 163, 164 ஆகிய உறுப்புகள். எனவே, அமைச்சரவை சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் வரை அதைப் பதவியிலிருந்து விலகச் சொல்லக்கூடாது. சட்ட மன்றத்தில் ஒரு அமைச்சரவைக்கு பெரும்பான்மையிருந்தும் அது பெரும்பான்மை மக்களின் ஆதரவை இழந்துவிட்டது என்று காரணங்காட்டி பதவி நீக்கம் செய்வது நியாயமல்ல. ஏனெனில் சட்டமன்றத்தில் அதற்குள்ள ஆதரவோடு சட்ட மன்றத்திற்கு வெளியில் உள்ள மக்களின் ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்படவில்லை.

7. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களது மனதில் கருதப்படாத காரணங்களுக்காக உறுப்பு 356 பயன்படுத்தப்படுகிறதென்று புகார்கள் எழுந்தனவென்பது உண்மையே. இந்த உறுப்பைப் பயன்படுத்துவது காரணமாக ஆளுநர்களின் நிலை மிக இக்கட்டாகச் செய்யப்பட்டுள்ளது. உறுப்பு 356-ஐப் பயன்படுத்தும் போதெல்லாம் மைய அமைச்சரவையின் வெறும் முகவராக ஆளுநர் செயற்படுகிறுர் என்ற குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. மிக அண்மையில் ஆளுநர் ஒருவரைப் பலத்த கண்டனத்திற்கு ஆளாக்கிய நிகழ்ச்சி உத்திரப் பிரதேசத்தில் நடந்துள்ளது. அந்த மாநிலத்தில்

குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது. ஆனால் உடனே சில நாட்களில் அந்தப் பிரகடனம் திரும்பப் பெறப் பெற்று ஒரு புது அமைச்சரவை பதவியேற்றது. உறுப்பு 356, வேறு எந்த இணைப்பாட்சியிலும் காணப்படாத அசாதாரண வகையுரையாகும். மைய அரசும் இணைப்பாட்சியில் உள்ள ஒருகட்சியே தவிர,வேறு தனிநிலை அதற்கில்லை. எனவே மைய அரசுக்கு இத்தகைய நெறிமுறையற்ற உளத்தேர்வை வழங்கியிருப்பது மாநிலங்களின் நலனுக்கு ஊறு விளைவிக்கலாம். மைய அரசாயினும் சரி மாநில அரசாயினும் சரி, ஆட்சியை நடத்துவது ஒரு அரசியல் கட்சியோ அல்லது அரசியல் கட்சிகளின் கூட்டோ ஆகும். 1970-ம் ஆண்டு மே திங்கள் 3-ம் நாள் புதுடில்லியில் நடந்த இந்தியன் பார்லிமென்டரி, சங்கத்தின் கருத்தரங்கில் பேராசிரியர் என். ஜி. ரங்கா பேசுகையில் அதிகாரங்களை மையஅரசு தவருகப் பயன்படுத்துவதற்கு எதிராகத் தக்கப் பாதுகாப்புகள் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேசுகையில், மாநிலங்கள் தவருகச் செல்லும்போது மைய அரசும் தகாத முறையில் நடந்துகொள்ள இடமேற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். திரு அசோக் சந்தா எழுதிய ''இந்தியாவில் இணைப்பாட்சி முறை'' என்ற நூலில் இந்த உறுப்புகள் பற்றிக் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :—

''மற்ற அரசமைப்புச் சட்டங்களில் காணப்படாத அசாதாரணமான விதிமுறைகளாகும் இவை. மாநிலங்களின் சட்டமியற்றல், நிர்வாகம் செய்தல் ஆகிய அதிகார வரம்பிற்குள் ஊடுருவல் செய்வதென்பது இணைப்பாட்சி அரசமைப்புக் கொள்கைக்கே முரணானதாகும். மக்களாட்சி அரசமைப்புச் சட்டங்களின் கொள்கைகளைத் தன்னிடத்தே கொண்டிருந்த போதிலும் எதேச்சாதிகாரத் தன்மைகளிலிருந்தும் இதுமுழுமையாக விடுபட்டிருக்கவில்லை; காரணம், இவற்றை 1935-ம் ஆண்டு சட்டத்திலிருந்து இது எடுத்துக்கொண்டிருப்பதுதான்.

மாநில அரசையும் அதன் சட்டமன்றத்தையும் செயற்படாமல் அகற்றி வைப்பதற்கும் மாநிலத்தில் அரசமைப்புச் சட்டம் செயற்படாமல் செய்வதற்கும் பயன்படும் இந்த அதிகாரங்கள் வழக்கமற்றவை என்பது மட்டுமல்ல அசாதாரணமானவையுமாகும். இத்தகைய நிலை வேறு எந்த அரசமைப்புச் சட்டத்திலும் இல்லை.

* * *

இந்த உறுப்பு இந்த நோக்கத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களிலும்

பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட விஷயங்கள்பற்றி மைய அரசின் கட்டளைகளை மாநில அரசு நிறைவேற்றத் தவறினால் இவ்வுறுப்பின்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பது முன்னரே கூறப்பட்டது. ஒரு மாநில அரசு மிக மோசமான முறையில் செயற்பட்டால் மைய அரசு தலையிடுவதற்குச் சட்டப்படி தடையேதுமில்லை.' மற்றபடியும்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளதன் மூலம் ஆளுநருடைய முறையான அறிக்கையைப் பெறுமலேயே மைய அரசுத் தலையீட்டுக்கு இடம் கொடுக்கிறது.

* * *

மைய அரசில் செயற்படும் சட்ட நிர்வாகத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் இடம் இல்லை. மாநிலங்களில் மட்டும் செயற்பட இடமுண்டு. இதைக் குடியரசுத் தலைவரின் சாற்றுணை மூலம் செய்யலாம். ஒரு மாநில அரசைச் செயற்படாமல் ஒதுக்கிவைப்பதற்கான முடிவினை மைய அரசின் நிர்வாகம் மேற்கொள்ளலாம். இரண்டாவதாக, இந்த அதிகாரங்கள் ஆளுநருக்கு அளிக்கப்படாமல் குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆயினும், குறிப்பிட்ட சில பணிகளுக்காக ஆளுநரைக் குடியரசுத் தலைவர் தமது முகவராகப் பயன்படுத்திக் கொள்கிறார். இவ்வாறாக, ஒரு மாநிலத்தை மைய அரசு நிர்வாகத்திற்குக் கொண்டுவருவதற்குரிய உரிமையை முதலில் மைய அரசின் நிர்வாகத்திற்கும் பின்னர் நாடாளுமன்றத்திற்கும் அரசமைப்புச் சட்டம் அளிக்கின்றது. இந்த அதிகாரம் இதுவரை தவறாக பயன்படுத்தப்படவில்லை ; என்றாலும் எதிர்காலத்தில் இதைத் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு ஒன்றுமில்லை. மேலும், ஒரு மாநிலத்தில் நிருவாகச் சீர்குலைவு ஏற்பட்டுள்ளதா என்பது பற்றியும், அல்லது மைய அரசின் கட்டளைகளை நிறைவேற்ற மாநில அரசு தவறியுள்ளதா என்பதைப்பற்றியும் முடிவெடுப்பது மைய அரசே. பதவியிலிருந்து அகற்றிவைத்தலை எதிர்த்து அது செல்லத்தக்கதல்ல என்றோ நியாயமற்றதென்றோ வாதாட மாநில அரசுக்கு சட்டபூர்வமான வழிவகையில்லை''.

டாக்டர் கோ. சுப்பாராவ், 1969-ம் ஆண்டு மார்ச் திங்களில் தாம் நிகழ்த்திய லால்பகதூர் சாஸ்திரி நினைவுச் சொற்பொழிவுகளில் உறுப்புகள் 356, 357 ஆகியவை பற்றிக் கீழ்க்கண்டவாறு கருத்தறிவித்துள்ளார் :—

''இந்த வகையுரை மக்களாட்சியைக் காப்பதற்கும் பாதுகாப்பதற்கும் உரியவை. ஆனால் இவை தவறாகவும் பயன்படுத்தப்படலாம். இந்திய அரசமைப்புச்சட்டம் செயல்

முறைக்கு, வந்தது முதல் இந்த அதிகாரம் பல தடவைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1951-ல் பஞ்சாபிலும், 1952-ல் பெப்சுவிலும் 1954-ல் ஆந்திராவிலும், 1960-ல் கேரளாவிலும், 1961-ல் ஒரிசாவிலும், 1967-ல் ராஜஸ்தானத்திலும் அரியாணுவிலும், 1968-ல் மேற்கு வங்காளம், பஞ்சாப், பீகார் ஆகிய மாநிலங்களிலும், இந்த அதிகாரம் பயன் படுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றில் உறுப்பு 356-ல் கூறப்பட்டுள்ளபடி அரசாங்க நிர்வாகம் சீர்குலைந்து மாநில அரசுகள் செயற்படாத நிலைமை ஏற்பட்டதென்று கூற இயலாது என்று பொதுமக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

* * * *

இந்தச் சாற்றுணைகளும் அவற்றுக்கெதிரான கண்டனங்களும் மைய மாநில அரசுகளுக்கிடையே இயற்கையாக இருந்துகொண்டிருக்கின்ற போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன. எனவே, இவற்றிற்கு சரியான முறையில் தீர்வு காணுவிட்டால் இந்த உறவிற்கு அபாயம் நேரிடலாம். இந்தத் தகராறை சுமுகமாகத் தீர்ப்பதாஞல் உறுப்பு 356-ன் உண்மையான தன்மையை விளக்கிக் காட்டுவதோடு நல்ல முறையில் அமையும் மரபுகளையும் உருவாக்குதல் வேண்டும்.

மைய அரசில் ஆட்சி செய்யும் கட்சி நல்ல மரபுகளை வளர்த்து மாநில அரசின் உறவுகளைப் பொறுத்தவரை கட்சிப் பாகுபாடற்ற முறையில் நடந்தாலொழிய இணைப்பாட்சி என்பது நமது நாட்டில் நன்குசெயற்பட இடமில்லாது போகும்.'' *

8. எனவே, உறுப்புகள் 356, 357 ஆகியவை அறவே நீக்கப்பட வேண்டும். மைய அரசில் ஆட்சியில் இருக்கும் மிகப் பெரும்பான்மை பெற்ற கட்சி எதேச்சாதிகாரமாகவும் தான் நினைத்தபடியும் நடந்து, மாநிலங்களின் நலனுக்கு ஊறு விளைவிக்காதபடி தகுந்த பாதுகாப்புகள் செய்வதே தக்க மாற்று ஏற்பாடாகும். ஆனல், திரு. க. சந்தானம்† அவர்களும், பண்டித குன்ஸ்ரு†† அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளபடி, மாநிலத்தில் சட்ட ஒழுங்கமைதி சீர்குலைந்து மாநில அரசு பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க விரும்பவில்லையாயினும் அல்லது இயலாமல் போய்விட்

* கோ. சுப்பாராவ் அவர்களின் 'இந்திய இணைப்பாட்சி' என்னும் ஆங்கில நூலின் பக்கங்கள் 22, 23, 50.

† 1969-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2-ம் நாளிட்ட "இந்து".

†† அ. ச. ம. வி. IX பக்கம் 156.

டாலும் மட்டுமே குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவது நியாய மாகும். மாநிலங்களில் நிலையான சூழ்நிலைகளை உருவாக்கவும், மாநிலங்கள் 356-ம் உறுப்பைப் பற்றிய அச்ச மின்றி செயற்படவும், அரசமைப்புச் சட்டத்திலேயே தேவையான வகையுரைகளைச் செய்தல் வேண்டும்.

9. 'சம்பந்தப்பட்ட இடத்திலுள்ளவர்' என்று கருதப் படுகின்ற ஆளுநரிடமிருந்து அறிக்கை பெறுமலேயே மைய அரசின் நிருவாகம் உறுப்பு 356-ன்கீழ் செயற்படலா மென்பது தெரிந்ததே. இவ்வாறுக சம்பந்தமற்ற இடங்களிலிருந்து கிடைக்கும் ஆதாரங்களின்மேலும் குடி யரசுத் தலைவரின் ஆட்சியைச் சாற்றுணை செய்யலாம். இந்த உறுப்பிலுள்ள வாசகமாகிய 'அல்லது மற்றபடியும்' என் பதை அரசமைப்புச் சட்டமன்றத்திலேயே திரு எச்.வி. காமத் எதிர்த்தார்.* திரு. காமத் அவர்களை பேராசிரியர் சிபன்லால் சாக்சேனு ** ஆதரித்தார். 'மற்றபடியும்' என்ற சொல் குறும்புத்தனமானதும் குழப்பத்திற்கு இடந்தரு வதுமான ஒரு சொல் என திரு காமத் கூறினுர். ஆளுநரின் நியமனம், பணி, மாநில அமைச்சரவைகளோடு அவருக்குள்ள உறவு ஆகியவைபற்றி ஆராயும்போது, ஆளுநர் தம்மை மைய அரசின் கையாள் என்று கருதிக் கொள்ளக்கூடாது என்றும் மாநிலத்தின் அரசமைப்புத் தலைவர் என்ற முறையில் அவர் செயற்படும் முறையே முக்கியமானதென்றும் வலியுறுத்தி யுள்ளோம். ஆளுநர்கள் தங்கள் கடமையை நிறைவேற்று தற்கும், உளத் தேர்வு அதிகாரங்களைக் கையாளுதற்கும், அறி வுறைத் தொகுப்புகள் பிறப்பிக்கப்படுதல் வேண்டுமென, யோசனை கூறியுள்ளோம். அமைச்சரவை ஆளுநரின் விருப்பம் இருக்கும்வரைதான் நீடிக்க வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாதென்றும், சட்ட மன்றத்தில் அமைச்சரவைக்குப் பெரும்பான்மை இருக்கும் வரை அது தன் கடமைகளையும், பொறுப்புகளையும், நிறைவேற்றிவரவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளோம். இப்பரிந்துரைகளுக்கு ஏற்ப ஆளுநரிடமிருந்து அறிக்கை வந்தாலொழிய, ஒரு மாநிலத் தின் நிருவாகத் துறை, சட்டமியற்று துறை ஆகியவற்றை மைய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் அதிகாரம், குடியரசு தலைவருக்கு இருக்கக் கூடாது என்று இக்குழு கருது கிறது. மைய அரசால் நியமிக்கப்படுகின்ற மிக உயர்ந்த பிரமுகர், ஆளுநர் ஆவார். இத்தகைய ஆளுநரிட மிருந்து அறிக்கை பெறுமலேயே ஒரு மாநிலத்தில், அரசமைப்புச்

* அ. ச. ம. வி, IX, பக்கம் 140-141.
** அ.ச.ம. வி, IX, பக்கம் 143.

சட்டப்படி நிருவாகம் நடத்த இயலுமா, இயலாதா என்பதை உறுப்பு 356-ன் கீழ் குடியரசுத் தலைவர் தாமே உணர்ந்து கொள்ளலாம் என்பதைப் புரிந்து கொள்வது கடினமே. எனவே, உறுப்பு 356-ஐ வைத்துக்கொள்ள வேண்டுமானால் அதில் பகுப்பு (1)-ல் உள்ள 'அல்லது மற்றபடியும்' என்ற சொற்களை நீக்கிவிட வேண்டுமெனப் பரிந்துரைக்கிறோம்.

10. குடியரசுத்தலைவரின் ஆட்சிக்குப் பரிந்துரைப்பதற்கு முன்பு ஆளுநர், சட்டமன்றத்தின் நம்பிக்கையைப் பெறக் கூடிய அமைச்சரவையை ஏற்படுத்த தம்மால் இயன்ற எல்லா வழிகளிலும் முயன்று பார்க்க வேண்டும் என்பது மேற்கூறிய பரிந்துரைகளிலிருந்து தெரியவருகிறது. இறுதி வழியாக மட்டுமே ஆளுநர் அந்த உறுப்பின்கீழ் இயல்பாக அறிக்கையை அனுப்பியாக வேண்டும். குடியரசுத் தலைவரின் ஆட்சியை ஏற்படுத்துவதை நியாயமாக்கக்கூடிய மற்ற ஒரே நிகழ்ச்சி நாங்கள் ஏற்கனவே மேலே குறிப்பிட்டுள்ள ஒன்றாகும்; அதாவது, மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கமைதியும் முற்றிலும் சீர்குலைந்து விடுவதாகும். ஓர் அமைச்சரவை தொடர்ந்து பதவியில் இருக்கக் கூடுமா என்னும் பிரச்சினைக்கு முடிவு செய்யக் கூடிய ஒரே மன்றம் சட்டமன்றப் பேரவையாகும். யாதேனுமொரு குறிப்பிட்ட தருணத்தில், குடியரசுத் தலைவரின் ஆட்சியினை ஏற்படுத்தி ஆணை சாற்றத்தக்க சூழ்நிலை உள்ளதென ஆளுநர் தாமே கருதினாலும்கூட, குடியரசுத் தலைவர் உள்ளபடியாகச்சாற்றாணைபிறப்பிப்பதற்கு முன்பு ஆளுநரின்அறிக்கை மீது தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க மாநிலச் சட்டமன்றப்பேரவைக்கு நியாயமானதொரு வாய்ப்பு அளித்தாக வேண்டும் என கருத்துரைக்கின்றோம். ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சியை ஏற்படுத்துவதன் உடனடியான விளைவு, உள்ளபடியாக அமைச்சரவையினை விலக்குவதாகும். ஆனால், மாநிலச் சட்டப் பேரவை உடனடியாகக் கலைக்கப்படலாம் அல்லது தற்காலிகமாக விலக்கி வைக்கப்படலாம் என்னும் அம்சமே மிகமுக்கியமாகக் கருதத்தக்கதாகும். இந்த இரண்டில் எதனைச் செய்தாலும், சட்டப்பேரவை பயனற்றதாக்கப்பட்டு செயலாற்ற முடியாமற் போகும். எனவே, இயற்கை நீதிக்கோட்பாட்டின் ஒப்புமையின்படி நாங்கள் கருத்துரைப்பது 'யாதெனில், குடியரசுத் தலைவரின் ஆட்சியினை ஏற்படுத்துவதனால் பாதிக்கப்படக் கூடிய தரப்புக்கு அதாவது மாநிலச் சட்டப் பேரவைக்கு அந்தப் பிரச்சினை குறித்து ஆராயவும் அந்த உயர்ந்த மன்றம் இயங்காத

வாறு செய்யப்படுவதற்கு முன்பு அது தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கவும் ஒரு வாய்ப்பை அளித்தாக வேண்டும் எனக் கருத்துரைக்கின்றோம். ஆகவே, குடியரசுத் தலைவர் சாற்றாணை பிறப்பிப்பதற்கு முன்பு, ஆளுநரின் அறிக்கை மீது சட்டப் பேரவை, தன்னுடைய கருத்துக்களை அவர் குறிப்பிடக்கூடிய காலத்துக்குள் தெரிவிக்கும் பொருட்டு அதனை அப்பேரவைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்னும் வகையில் 356-வது உறுப்பின் (1)-வது பகுப்புக்கு வரம்புரை ஒன்றைச் சேர்க்கலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

11. குடியரசுத் தலைவரின் ஆட்சியினை ஏற்படுத்துவது மைய அமைச்சரவையினுடைய உள்ளத்து நிறைவைப் பொறுத்து இருக்கின்றது. இதன் பொருட்டு எந்தக் காரணமாயினும் போதிய நல்ல காரணமாக இருக்கலாம். அரசமைப்புச் சட்டமே 365-வது உறுப்பில் அத்தகையதொரு காரணத்தைக் குறிப்பிடுகின்றது. அந்த உறுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்நடை 356-வது உறுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஒப்பாக உள்ளது. இந்த இரண்டு உறுப்புகளும் ''இந்த அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளுக்கிணங்க மாநிலத்தின் அரசை நடத்திச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது'' என்னும் சொற்களைப் பயன்படுத்துகின்றன. மைய அரசினால் இடப்பட்ட 'கட்டளைகளின்படி அல்லது அவற்றைச் செயற்படுத்த யாதேனுமொரு மாநிலம் தவறி விடுகையில்' 365-வது உறுப்பு செயல்படுகிறது. எனவே, அது 356-வது உறுப்பினையும் தானாகவே பற்றிக்கொள்ளுகிறது. அந்தக் கட்டளைகளுக்கு ஒரு மாநிலம் இணங்கியதா அல்லது அவற்றைச் செயற்படுத்தியதா அல்லது அவ்வாறு அம்மாநிலம் செய்யவில்லையா என்பதை யார் முடிவு செய்வது? அதனைச் செய்வதும் மைய அமைச்சரவைதான். இங்கேயும்கூட, இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்தில் எதிர்க்க முடியுமா என்பது விவாதிக்கத்தக்கதாகும்.

12. ஆட்சி உறவுகள் பற்றிய அத்தியாயத்தில் 365-வது உறுப்பின் நோக்கெல்லை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம். இந்த உறுப்பினைச் சட்டமாக்க அரசமைப்புச் சட்டமன்றத்தில் இருந்த எதிர்ப்பு பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளோம். இது அந்தச் சட்டமன்றத்தின் முன்னணி உறுப்பினர்கள் பலரால் கடுமையாகத் தாக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். அவர்களில் பண்டித குன்ஸ்ரு ஒருவர். இந்த உறுப்பின் தீவிரமான அதிகாரங்களைத்

கண்டு அவர்கள் கலககமடைந்தனர். இந்த உறுப்பு 1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் வெறுக்கப்பட்ட 93-வது பிரிவு ''அதன் மறைவற்ற தன்மையோடும் கொடும்பான்மை யோடும்'' அவ்வாறே பெயர்த்து அமைக்கப்பட்டிருப்பதாகச் சிலரால் வருணிக்கப்பட்டது.* இங்கே திரும்பக் கூறவேண் டிய மற்றொன்று யாதெனில், அரசமைப்புச் சட்டமன்றத்தி ஞல் அரசமைப்புச் சட்டம் இறுதியாகஏற்றுக் கொள்ளப்பட்ட தற்கு 11 நாட்களுக்கு முன்புதான் இந்த வகையுரை சட்ட மன்றத்தில் முன்னுரைக்கப்பட்டதென்பதாகும். இந்த வகை யுரைதான், மாநிலங்களுக்குக் கட்டளை பிறப்பிக்க மைய அர சிற்கு அதிகாரம் வழங்குகின்றது; மற்ற வகையுரைகளை மிக வும் வெறுக்கத்தக்கனவாக ஆக்குகின்றது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். வேறு எந்த இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டத்திலும் இதற்கு முன்மாதிரியான வகை யுரை கிடையாது. மைய அரசினுல் மாநிலத்திற்கு இடப் பட்ட கட்டளை யாதேனும் மீறப்படும் அல்லது அதனை நிறைவேற்றத் தவறும் எந்தச் சூழ்நிலைகளிலும், குடி யரசுத் தலைவரின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான காரண மாக ஆக்கப்படக் கூடாது என்றும்கூட ஆட்சி உறவுகள் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளோம். இதிலிருந்து, 365-வது உறுப்பை நீக்கவேண்டியுள்ளது என்பதை உணரலாம்.

(2) தேசிய நெருக்கடி நிலை

13. போரினுல் அல்லது அந்நிய ஆக்கிரமிப்பினுல் அல்லது உள்நாட்டுப் பூசலினுல் இந்தியாவின் அல்லது அதன் யாதே னுமொரு பகுதியின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுகின்ற கடு மையான நெருக்கடி நிலை ஏற்பட்டு உள்ளதென குடியரசுத் தலைவரால் சாற்றுரை பிறப்பிக்கப்படுவதன்மேல், மையத் துக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான நிர்வாகம், மற்றும் சட்டமியற்றும் அலுவல்களின் ஒதுக்கீடும், அரசின் இருதிறத் தார்களுக்கிடையே நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொள்ளு வது ஆகியவை, மாற்றமடைந்து அரசமைப்புச் சட்டம் பெரும்பாலும் ஒற்றையாட்சி வகையினதாக மாறிவிடும் அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு விடுகின்றது.†

* அ. ச. ம. வி. XI, பக்கங்கள் 510, 512, 515-516, 518-519.

† இந்த உறுப்பு மீதும் மற்றும் தொடர்பான மற்ற உறுப்புகளின் மீதும் அரசமைப்புச் சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதச் சுருக்கத்திற்கு இணைப்பு VI-ன் ஆ பிரிவைக் காண்க.

14. 352-வது உறுப்பு 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 102-வது உறுப்பை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வகையுரைகளுக்குமிடையே இரண்டு வேறுபாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று, 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்102-வது உறுப்பு நாடு முழுமைக்குமான அச்சுறுத்தலைக் குறிப்பிடுகையில், 352-வது உறுப்பு நாட்டின் எப்பகுதியாவது அச்சுறுத்தப்படுவதையுங்கூட குறிப்பிடுகின்றது. மற்றொரு வேறுபாடு யாதெனில், அந்தப் பிரிவு போர் அல்லது உள்நாட்டுப் பூசல் பற்றி மட்டுமே குறிப்பிட்டது. ஆனால் இந்த உறுப்பு அந்நிய ஆக்கிரமிப்பையும்கூட குறிப்பிடுகின்றது. நாங்கள் இந்த வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவது 352-வது உறுப்புக்கு யாதேனும் மாறுதல் செய்யக் கருத்துரைக்கும் நோக்கத்திற்காக அல்ல. 352-வது உறுப்பு 1935-வது சட்டத்தில் அதற்கு நிகரான பிரிவைக் காட்டிலும் மிகவும் விரிவான நோக்கெல்லை கொண்டதாக உள்ளதென்பதை மட்டுமே நாங்கள் கூற முயல்கிறோம். மாநிலங்களைப் பொறுத்தவரை, 352-வது உறுப்பின் கீழ் நெருக்கடி நிலைச் சாற்றுரை பிறப்பிப்பதன் விளைவுகள் நிர்வாகம், சட்டமியற்றல் மற்றும் நிதி ஆகிய மூன்றுவகையினவாகும். சட்டமியற்றும் துறையில், நெருக்கடிநிலை சாற்றுரை பிறப்பிக்கப்பட்டவுடனே, எந்த மாநிலத்திற்காயினும் மாநில அதிகாரப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள எந்தக் காரியம் பற்றியேனும் கூட சட்டமியற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டு விடுகிறது [உறுப்பு 250 (1)]. மேலும், மைய அரசின் ஆள்வைகள் மற்றும் அலுவலர்களுக்கு அதிகாரங்களை வழங்கியும் கடமைகளை விதித்தும், அந்த அதிகாரங்களும் கடமைகளும்மாநிலத்தின்அதிகாரத்திற்குட்பட்ட காரியங்கள் பற்றியனவாக இருந்தபோதிலும்கூட, நாடாளுமன்றம் சட்டமியற்றுவதற்கு 353 (ஆ) உறுப்பு அதிகாரமளிக்கிறது. நிர்வாகப் பகுதிக்கு வந்தால், ஒரு மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் இன்ன முறையில் செலுத்தப்பட வேண்டும் என்று அம்மாநிலத்திற்குக் கட்டளையிடுமளவுக்கு ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரம் விரிவடைகின்றது [உறுப்பு 353 (அ)]. இந்த அதிகாரம் 256, 257 ஆகிய உறுப்புக்களால் மைய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குக் கூடுதலாக இருக்கும். 353 (அ) உறுப்பின் கீழ் இடப்படுகின்ற கட்டளைகள் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளபொருள் பற்றியும் இருக்கலாம். அந்தக் கட்டளைகளை, 356-வது உறுப்புடன் சேர்த்துப் படிக்கத் தக்க 365-வது உறுப்பின் துணை கொண்டு மைய அரசு செயற்படுத்த முடியும். மையத்திற்கும் மாநிலங்களுக்குமிடையே

வருவாயை ஒதுக்குவது பற்றிய நிலை யாதெனில், நெருக்கடி நிலைக் காலத்தின்போது, ஒன்றியத்துக்கும் மாநிலங்களுக்கும் இடையே நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொள்ளும் திட்டம் முழுவதையும் மாற்றியமைக்க ஒன்றியத்துக்கு அதாவது மைய அரசில் உள்ள அமைச்சரவைக்கு, முழு அதிகாரம் உரித்தாக்கப்பட்டுள்ளது. இந்த இருதிறப்பட்ட அரசுகளுக்குமிடையே வருவாய்ப் பகிர்வு பற்றி 268 முதல் 279 வரையுள்ள உறுப்புகளில் அமைத்துள்ள விரிவான திட்டத்தை, ஒன்றிய அமைச்சரவை விரும்பினால், தேசீய நெருக்கடி நிலை என்னும் சாக்கினை வைத்துக்கொண்டு செயலற்றதாக்கி விடலாம்.

டாக்டர் கோ. சுப்பாராவ், அவர்கள் முன்னர் குறிப்பிடப் பட்ட அவருடைய உரையில் கூறுவது யாதெனில்,—

''அரசமைப்புச் சட்டத்தின் 352-வது உறுப்பின் கீழ், போரினால் அல்லது அந்நிய ஆக்கிரமிப்பினால் அல்லது உள் நாட்டுப் பூசலினால் இந்தியாவின் அல்லது அதன் யாதேனுமொரு பகுதியின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுகின்ற கடுமையான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் குடியரசுத் தலைவர் நிறைவடைந்தால், அவர், அதனைச் சாற்றுரை மூலம் அறிவிக்கலாம். இந்தச் சாற்றுரை பிறப்பிப்பதன் விளைவாக (1) நாடாளுமன்றம், மாநிலப்பட்டியலில் கண்டுள்ள எந்தப் பொருள்பற்றியேனும் இந்திய நிலவரை முழுவதற்கும் அல்லது இந்திய நிலவரையின் எந்தப் பகுதிக்காயினும் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் பெறும். (2) மைய அரசின் நிர்வாக அதிகாரம், ஒரு மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தை இன்ன முறையில் செலுத்த வேண்டும் என்று அதற்குக் கட்டளையிடுமளவுக்கு விரிவாகின்றது. (3) மைய அரசின் பட்டியலில் சேர்க்கப்பட்டிராக் காரியங்கள் பற்றியும் மாநிலப் பட்டியலில் சேர்த்துள்ள காரியங்கள் பற்றியுங்கூட மைய அரசிடம் அல்லது பிற அலுவலர்களிடம் அதிகாரங்களை வழங்கியும் கடமைகளைச் சுமத்தியும் சட்டங்களை இயற்ற நாடாளுமன்றம் அதிகாரம் பெறும். (4) வருவாய்ப் பகிர்வு பற்றிய வகையுரைகளைப் பயன்படுத்துவதைக் கூட குடியரசுத் தலைவர் மாற்றியமைக்கலாம்.

* * * * * * * * * * * * *

இந்த மிகையான அதிகாரம் தவறுகப் பயன்படுத்தப்படக் கூடுமானதாகும். மையத்தில் ஒரு கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி மற்ற எல்லா மாநிலங்களிலும் அல்லது சில மாநிலங்களில் வேறு கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினால், எளிய முறையைப் பின்பற்றவும் அதிகாரம் முழுவதையும்

தன்னிடமே சேர்த்துக்கொள்ளவும் முன்னதற்கு ஆசை இருக்கலாம். இப்போது 5 ஆண்டுகளாக அதிகாரத்தில் உள்ள கட்சி நெருக்கடி நிலையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்ததற்கான சூழ்நிலைகள் உண்மையாகவே மேற்சொன்ன அதிகாரம் வருங்காலத்தில் தவருகப் பயன்படுத்தப்படலாம் என்னும் நியாயமான அச்சத்தைத் தோற்றுவிக்கிறது''.*

15. ஏற்கனவே குறிப்பிட்டது போல, 352-வது உறுப்புக்கோ அல்லது அந்த உறுப்பின்கீழ் நெருக்கடி நிலைச் சாற்றுணை பிறப்பித்தலின் விளைவுகளைக் குறிப்பிடுகின்ற வகையுரைகள் எதற்கேனுமோ எந்தமாற்றத்தையும் எடுத்துரைக்க நாங்கள் எண்ணவில்லை. ஆனல், உள்ளபடியான போர் அல்லது நம்முடைய எல்லைகளுக்கு யாதேனும் அந்நிய நாட்டால் அச்சுறுத்தல் காரணத்தின் மீது சாற்றுணை பிறப்பிக்கப்பட்டிராவிட்டால், மாநிலக் காரியங்கள் பற்றிச் சட்டம் இயற்றல், நிதி ஏற்பாடுகளை மாற்றியமைத்தல் முதலியவை போன்ற மைய அரசுக்கு வழங்கப்படும் தீவிரமான அதிகாரங்கள் செலுத்தப்படக் கூடாது என்ற மரபு உருவாக்கப்படவேண்டுமென கருத்துரைக்கிறேம். நாட்டின் யாதேனுமொரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே அடங்கும் உள்நாட்டுப் பூசல் காரணமாக நெருக்கடி நிலைச் சாற்றுணை பிறப்பிப்பதை இயன்றவரையில், தவிர்த்தாக வேண்டும் என்பது கருதத்தக்க மற்றொரு கருத்தாகும். இறுதியாக, 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் அமைத்துக்கொள்ளப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற இணைக்குழு அந்தச் சட்டத்தில் 102-வது பிரிவுக்கான தேவையை விளக்க ஒரு பத்தியை ஒதுக்கியுள்ளது என்பதை அறிதல் பயனுள்ளதாகும். அந்தத் தருணத்தில், 'உள்நாட்டுப் பூசல்' என்னும் சொற்றொடர் இதன் பொருட்டு, அந்நிய ஆக்கிரமிப்பை ஒழிப்பதனோடு ஒத்தக் கடுமை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில் பொருள்வரையறை செய்யப்படவேண்டும் என்று அந்த பாராளுமன்ற இணைக்குழு கருத்துரைத்தது. அந்த இணைக்குழு குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சியில் 'உள்நாட்டுப் பூசல்' (internal disturbance) நாட்டின் யாதேனுமொரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே அடங்கியுள்ளபோது, 356-வது உறுப்பின் கீழ் நடவடிக்கை எடுப்பதே பொருத்தமானதாகும். இந்த உறுப்பு பற்றி நாங்கள் முன்னர் கூறியுள்ள கருத்துரைகளுக்குட்பட்டு இதன் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

* கோ. சுப்பாராவ் அவர்களின் இந்திய இணைப்பாட்சி, என்னும் ஆங்கில நூலில், பக்கங்கள் 19-20.

16. நெருக்கடி நிலைச் சாற்றுணை செயலில் இருக்கும் போது மாநிலங்களின் நிர்வாக அதிகாரம் எந்த முறையில் செலுத்தப்பட வேண்டும் என்பது குறித்த கட்டளை பிறப்பிப் பதற்கு மைய அரசுக்கு 353 (அ) உறுப்பின்கீழ் கிடைக்கின்ற அதிகாரம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆட்சி உறவுகள்பற்றி ஆராய்கையில், அரசமைப்புச் சட்டத் தின் உறுப்புகள் 256, 257, 344 (6) முதலியவை போன்ற மற்ற வகையுரைகளின் கீழ் மைய அரசு கட்டளைகள் பிறப் பிப்பதற்கான அதிகாரம் பற்றி ஆராய்ந்துள்ளோம். 353 (அ) உறுப்பை நீக்கிவிட முடியாது என்பது வெளிப்படை. மாநிலங் களிடை உறவு மன்றத்துடன் கலந்தறிந்தாலன்றியும் அதன் ஒப்புதலைப் பெற்றுலன்றியும் 353 (அ) உறுப்பின்கீழ்க் கட்டளை எதையும் பிறப்பிக்கக் கூடாது என்று பரிந்துரைக்கிறோம். ஆயினும், நெருக்கடி நிலைக் காலத்தின்போது, உடனடி நட வடிக்கை தேவைப்படுகின்ற யாதேனும் நெருக்கடியான சூழ் நிலையைச் சமாளிப்பதற்கு 353 (அ) உறுப்பின்கீழ்க் கட்டளை பிறப்பிப்பதை மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் கலந்தறி வது தாமதப்படுத்தக்கூடுமானால், அந்தக் காரியம் குறித்து மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் கலந்தறியாமலேயே கட்டளை பிறப்பிக்கப்படலாம். ஆனால், இயன்ற விரைவில் வாய்ப்பு நேரிடும் போது, அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட கட்ட ளையை மாநிலங்களிடை உறவு மன்றத்தினிடம் தெரிவித்தாக வேண்டும். மற்றும் அவ்வாறு கட்டளை பிறப்பிக்கப்பட்ட காரியம்பற்றி அடுத்தபடியான நடவடிக்கை, மன்றத்தின் பரிந் துரைக்கிணங்க எடுக்கப்பட வேண்டும் என்னும் நிபந்தனையின் மீது மேற்கூறிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டும். மாநி லங்களுக்குக் கட்டளை பிறப்பிக்க மைய அரசுக்கு அதிகாரம் அளிக்கின்ற மற்ற வகையுரைகளின் பொருட்டு உள்ளவாறே இங்கேயுங்கூட, 353 (அ) உறுப்பின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதையேனும் நிறைவேற்றத் தவறிவிடல் எந்தச் சூழ்நிலையிலும், குடியரசுத் தலைவரின் ஆட்சியை ஏற்படுத்து வதற்குரிய ஒரு காரணமாக இருக்கக் கூடாது.

(3) நிதிப் பாதுகாப்பிற்கு அபாயம் நேர்ந்துள்ள தனி நெருக்கடி நிலை.

17. ஒரு மாநிலத்தில் அரசு இயந்திரத்தின் சீர்குலைவு பற்றியும் நெருக்கடி நிலைச் சாற்றுணைகள் பிறப்பிப்பது பற்றி யும் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள வகையுரைகள், 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் உள்ள முன் மாதிரிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், நிதிநிலை உறுதிக்கும் செலா வணி மதிப்புக்கும் அபாயநிலை உள்ளதன் விளைவாக ஏற்படும்

நெருக்கடி நிலை பற்றிய வகையுரைக்கு 1935-ம் ஆண்டுச் சட்டத்திலும் கூட முன்மாதிரி ஏதுமில்லை.* மற்ற இரண்டு உறுப்புகளாகிய 356, 352 ஆகியவற்றைப் போலவே, நிதி நெருக்கடி நிலை பற்றிய வகையுரைக்குங்கூட மற்ற இணைப் பாட்சி அரசமைப்புச் சட்டங்களில் நிகரான வகையுரை ஏது மில்லை.

18. மைய அமைச்சரவை எனப்பொருள்படும் மையஅரசு, 'கட்டளைகளில் குறிப்பிடப்படக் கூடிய நிதி ஒழுங்கு விதி களைக்' கடைப்பிடிக்க வேண்டுமென மாநிலங்களுக்குக் கட்டளை கள் பிறப்பிப்பது பற்றி 360-வது உறுப்பு குறிப்பிடுகின்றது. அந்த 'நிதி ஒழுங்கு விதிகள்' என்னவென்று அரசமைப்புச் சட்டம் கூறவில்லை. தற்போதுள்ளவாறுன அந்த உறுப்பின் படி, அந்த விதிகள் பெயரிடப்படாமலும் குறிப்பிடப்படா மலும் உள்ளன. அதோடு மட்டுமல்லாமல், 'இதன் பொருட்டு குடியரசுத் தலைவர் அவசியமெனவும் தக்கதெனவும் கருதலாகும் மற்றக் கட்டளைகளை' இடுவதற்கும் அந்த உறுப்பு மைய அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது. அந்த உறுப்பின் (4)-வது பகுப்பின் (அ) துணைப்பகுப்பில் காணப் படும் 'அத்தகைய கட்டளையில் சேர்க்கப்படலாகும் யாதே னும்' என்னும் சொற்றொடர், அந்தத் துணைப் பகுப்பில் குறிப்பிட்டுள்ள இரண்டு பொருள்களைத்தவிர, அந்தக் கட்டளை யில் மைய அமைச்சரவை 'இதன் பொருட்டு அவசியமென வும் தக்கதெனவும் கருதலாகும்' யாதேனும் மற்றும் ஒவ் வொரு வகையுரையும் அடங்கும் வகையில் மிகவும் அடங்க லானதாகும். வேறு வகையில் கூறினுல், மைய அரசில் அதி காரம் பெற்றுள்ள ஒரு அரசியல் கட்சிக்கு, அரசமைப்புச் சட்ட முறையான வகையுரை எதனுலும் கட்டுப்படுத்தப்படா மல் ஒரு மாநிலத்தில் அதிகாரத்தில் உள்ள மற்றோர் அரசியல் கட்சிக்கு, தான் விரும்புகின்ற எந்தக் கட்டளையையும் பிறப் பிக்க முழுமையான விருப்புரிமை உள்ளது. மைய அரசினுல் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை யாதேனுமொரு மாநிலம் நிறைவேற்றத் தவறினுல் இறுதியில், அந்த மாநிலத்தை ஆள் வதற்கான அரசமைப்புச் சட்டமுறையான இயந்திரம் நீக்கப் பட நேரிடுவதுடன் அந்த மாநிலம் மைய அமைச்சரவை யின் முழுமையான மற்றும் வரம்பற்ற கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்லப்படும். இந்த உறுப்பு, மைய அரசின் குற்றமான அல்லது தவறுன செயல் காரணமாக நிதி உறுதிக்கு

* இந்த உறுப்பின் தோற்றம், அரசமைப்புச் சட்ட மன்றத்தில் அதன் மீதான விவாதம் ஆகியவை இணைப்பு VI-ன் இ பிரிவில் சுருக்கமாகத் தரப் பட்டுள்ளன.

அல்லது செலாவணி மதிப்புக்கு அபாயம் நேரிடக்கூடிய சூழ் நிலை பற்றிக் குறிப்பிடவில்லை என்பதை அறியலாம். திரு க. சந்தானம், 'இந்தியாவில் மைய-மாநில உறவுகள்' என்னும் தமது நூலில் இந்த உறுப்பின்மீது கருத்துரைக் கையில் கூறுவதாவது :—

''மைய அரசின் நடவடிக்கைகளின் விளைவாக நிதி நிலை உறுதிக்குலைவு ஏற்படலாம். ஆனாலும் கூட மாநிலங்கள் அதற்குரிய தண்டனையை ஏற்கவேண்டியதாகலாம்''.

இதுவரை 360-வது உறுப்பின்கீழ் எப்போதாவது நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றவில்லை. இந்த உறுப்பினால் எண்ணப்படுகின்ற தன்மைவாய்ந்த சூழ்நிலை ஏதும் ஒருபோதும் ஏற்படவில்லை, அல்லது அத்தகைய சூழ் நிலை யாதேனும் ஏற்பட்டு அந்த உறுப்பின் துணையை நாடு வது உகந்ததன்று அல்லது விரும்பத்தக்கதன்று எனக் கருதப் பட்டது என உண்மையாகக் கருதலாம். மாநிலங்கள் மையத் துடன் கொள்ளும் உறவுகளில் எரிச்சல் உண்டாக்குவதாக மட்டுமே உள்ள வகையுரை ஒன்றை அரசமைப்புச் சட்டத் தில் வைத்திருப்பதனால் ஏற்படக் கூடிய பயன் ஏதுமில்லை. மாநிலங்களின் நிதிநிலை குறித்து, கண்காணிக்க, அதிலும் குறிப் பாக மைய அரசின் நிதிநிலை பற்றி அது போன்று செயலாற்று வதற்குத் தனிநிலை ஆள்வை ஒன்று இல்லாதபோது, ஒருவகை யான உயர்ந்த தீர்ப்பாயமாக மைய அரசை அமைக்கின்ற ஒரு வகையுரைக்குத் தேவை ஏதுமில்லை. 360-வது உறுப்பு நீக்கப்படலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

அத்தியாயம் X.

பொதுமை ஊழியங்கள்

அனைத்திந்திய ஊழியங்கள்

இந்தக் குழுவிற்குரிய பணிவரையறையின்படி, மாநில ஊழியங்கள் பற்றி அதாவது மாநில அரசினுடைய விதி இயற்றும் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஊழியங்கள் பற்றி இக் குழு ஆராயத் தேவையில்லை; மற்றும் சுங்கம், இரயில்வே முதலிய ஊழியங்கள் பற்றியும் இது ஆராயத் தேவையில்லை. மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் ஊழியங்கள் அனைத்திந்திய ஊழியங்களாகும். அரசமைப்புச் சட்டம் அதன் தொடக்கத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ பி.எஸ். எனப்படும் இரண்டு அனைத்திந்திய ஊழியங்களுக்கு மட்டுமே வகை செய்திருந்தது. இவை, அரசமைப்புச் சட்டத்திற்கு முன்பு இருந்து வந்த ஐ.சி.எஸ்., ஐ.பி. ஆகிய ஊழியங்களுக்குக் கூடுதலாக இருந்தன. ஐ.சி.எஸ்., ஐ.பி. ஆகிய ஊழியங்களுடன், வன ஊழியம், பொறியாளர் ஊழியம், மருத்துவ ஊழியம் (சிவில்), கல்வி ஊழியம், வேளாண்மை ஊழியம், கால்நடை மருத்துவ ஊழியம் ஆகியவை இந்திய விவகார அமைச்சரால் அமைக்கப்பட்டன. ஐ.சி.எஸ்., ஐ.பி. நீங்கலாக இந்திய விவகார அமைச்சரால் அமைக்கப்பட்ட அனைத்திந்திய ஊழியங்களுக்கு அவரால் பணிக்கு அமர்த்தப்படுவது 1924-ல் முடிவுற்றது. அரசமைப்புச் சட்டத்தின் 314-வது உறுப்பு இந்திய அமைச்சரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் பணிமுறைமைகளைப் பாதுகாக்கின்றது.

2. மாநிலங்கள் அவை, புதிய அனைத்திந்திய ஊழியங்களை ஏற்படுத்துவது தேசிய நலனுக்கு அவசியமானது அல்லது உகந்தது என்று, வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத ஆதரவுடன் நிறைவேற்றும் தீர்மானத்தினுல் அறிவிக்குமானுல், சட்டத்தின் மூலம் அவ்வாறு புதிய அனைத்திந்திய ஊழியங்களை ஏற்படுத்துவதற்கு 312-வது உறுப்பின் (1)-வது பகுப்பு நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. 1951-ம் ஆண்டு அனைத்திந்திய ஊழியங்கள் சட்டத்தை (மையச் சட்டம் 61/1951) நாடாளுமன்றம் இயற்றியுள்ளது. முதலில் இயற்றப்பட்ட

அந்தச் சட்டம், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகியவற்றுக்கு மட்டுமே பயன்பட்டது. இந்தியப் பொறியாளர்கள் (பாசனம், மின்சக்தி, கட்டடங்கள், சாலைகள்) ஊழியம், இந்திய வன ஊழியம், இந்திய மருத்துவம் மற்றும் சுகாதார ஊழியம் ஆகியவை அடங்கும் வகையில் அந்தச் சட்டம் 1963-ம் ஆண்டு 27-வது மையச் சட்டத்தினால் திருத்தம் செய்யப் பட்டது.

3. அனைத்திந்திய ஊழியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அல்லது அனைத்திந்திய ஊழியம் யாதேனும் ஒன்றன் ஊழிய முறைமைபற்றி மைய அரசு யாதேனும் வகையுரை செய்வதற்கு முன்பு மாநில அரசுகளுடன் கலந்தறிவதற்கோ மாநிலங்களின் இசைவைப் பெறுவதற்கோ 312-வது உறுப்பு வகை செய்யவில்லை. அந்த உறுப்பில் கண்டுள்ள ஒரே தேவை, அந்த உறுப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாநிலங்கள் அவை தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். எனவே, அது செய்யப்பட்டு விட்டால், நாடாளுமன்றம் ஒருதரப்பாக ஓர் அனைத்திந்திய ஊழியத்தை ஏற்படுத்த முடியும். 1948-ம் ஆண்டு பிப்ரவரியில் முடிவு செய்யப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், 312-வது உறுப்புக்கு ஒப்பான வகையுரை ஏதுமில்லை. 1948 அக்டோபர் 15-ம் நாளன்று உள்துறை அமைச்சகம் அரசமைப்புச் சட்டமன்றச் செயலகத்துக்குஅனுப்பிய கடிதமொன்றில், ஒரு வகையுரையைச்சேர்க்குமாறு கூறியிருந்தது. அது இப்போது 312-வது உறுப்பாகக் காணப்படுகின்றது. அப்போது அந்த உறுப்பு 282-அ என இலக்கமிடப்பட்டிருந்தது. புதிய உறுப்புக்கான ஓரக் குறிப்பில் அது, வரைவு அரசமைப்புச் சட்டத்தின் 226-வது உறுப்பினை மாதிரியாகக் கொண்டது என்று உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டது. வரைவு அரசமைப்புச் சட்டத்தின் 226-வது உறுப்பு இப்போது 249-வது உறுப்பாகக் காணப்படுகின்றது. சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் அந்தப் புதிய வகையுரை பற்றி உள்துறை அமைச்சர் என்னும் முறையில் தலைமை அமைச்சருக்கு எழுதிய தமது கடிதத்தில் தேர்ந்தெடுத்தல், ஒழுங்குமுறை, கட்டுப்பாடு முதலியவை 1946-ல் கூட்டப்பட்ட தலைமை அமைச்சர்கள் (அதாவது அப்போதைய மாகாண முதலமைச்சர்கள்) மாநாட்டில் முடிவு செய்யப்பட்டாயிற்று எனவும் அவை குறித்த நுட்ப விவரங்கள் மாகாண அரசுகளுடன் மேற்கொண்ட கடிதத் தொடர்பின் மூலம் முடிவு செய்யப்பட்டாயிற்று எனவும் கூறினார்

மாகாணங்களின் கருத்துகளும் மைய அரசின் கருத்துகளும் குறிப்பிடத் தக்க வகையில் ஒருமித்திருந்த காரணத்தினால் குறையேதும் இருக்க இயலாது என்று சர்தார் படேல் கூறினார். மேலும் அவர், மாகாணத் தன்னாட்சியின் மேன்மை பற்றி அல்லது மாகாண அமைச்சர்களின் மதிப்பையும் அதிகாரங்களையும் நிலைநிறுத்துவதற்கான தேவை பற்றி வருத்த உணர்ச்சி எதற்கும் இடமில்லை என்று குறிப்பிட்டார்.

4. ஆகவே, தொடக்கத்தில், ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ். பற்றிய விதிகள் மாகாண அரசுகளைக் கலந்தறிந்து அவற்றின் சம்மதத்துடன் செய்யப்பட்டன என்பதை அறியலாம். ஏற்கனவே கூறப்பட்டது போல, அனைத்திந்திய ஊழியம் யாதேனும் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பு மாநில அரசுகள் கலந்தறியப்பட வேண்டுமென்னும் அரசமைப்புச் சட்டப்படிக்கான தேவை ஒன்றுமில்லை. அனைத்திந்திய ஊழியப் பணியினரைத் தேர்ந்தெடுப்பதையும் அவர்தம் ஊழியமுறைமைகளையும் முறைப்படுத்துவது பற்றிய விதிகளைச் செய்வதற்கு முன்பு மாநில அரசுகள் கலந்தறியப்பட வேண்டும் என்று 1951-ம் ஆண்டுச் சட்டத்தின் 3 (1)-வது பிரிவு கூறுகிறதென்பது உண்மையே. கலந்தறிதலானது, கலந்தறியப்பட்ட ஆள்வையின் இசைவு அல்லது சம்மதத்தைப் பெற வேண்டுமென்ற பொருளாகாது. வேறு வகையாகச் சொன்னால், மைய அரசே மேலாதிக்கமுடையதாகும். மாநில அரசுகளின் யோசனைகளையும் கருத்துரைகளையும் அது சட்டத்தின்படி தள்ளிவிட்டு அனைத்திந்திய ஊழியங்கள் பற்றி மாநில அரசுகள் உடன்படாத வகையுரைகளை விதிகளில் சேர்க்க முடியும். உள்ளபடியே, மேலே குறிப்பிட்டது போல், புதிய பல அனைத்திந்திய ஊழியங்களை ஏற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கும் பொருட்டு 1951-ம் ஆண்டுச் சட்டம் 1963-ல் திருத்தப்பட்டது. அவற்றில், இந்திய வன ஊழியம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவம் மற்றும் சுகாதார ஊழியம் 1969, பிப்ரவரியில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதில் ஏழு மாநிலங்கள் பங்கு பெறுவதில்லை என்று முடிவு செய்துள்ளன; அல்லது பங்கு பெறுவதென அவை முன்னர் செய்த முடிவை மறு ஆய்வு செய்து வருகின்றன. மேலும், இந்தியப் பொறியாளர் ஊழியம் பற்றி அந்தச் சட்டத்தில் அவசியமான வகையுரை சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அது இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. இந்தியக் கல்வி ஊழியத்தையும் இந்திய வேளாண்மை ஊழி

யத்தையும் ஏற்படுத்துவதற்குப் பரிந்துரைத்து மாநிலங்கள் அவை உறுப்பு 312 (1)-ன் கீழ்த் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இந்த இரண்டு ஊழியங்களிலும் பங்கு கொள்வதில்லை என்று அநேக மாநிலங்கள் முடிவு செய்துள்ளதனால், 1951-ம் ஆண்டுச் சட்டத்தில் திருத்தம் செய்வதன்மூலம் கல்வி ஊழியத்தையும் வேளாண்மை ஊழியத்தையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்வதற்காக எவ்வித நடவடிக்கை எடுக்கவும் முற்படவில்லை (1970 மே 15-ம் தேதிய '' இந்து '' வைக் காண்க).

நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் கற்றறிகுழு, ''இணைப்பாட்சி அமைப்பில் மாநிலத் தேவைகளுக்குப் பயனுகின்ற ஆனால், இறுதியாக ஒன்றியத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற அனைத்திந்திய ஊழியம் வைத்திருப்பது வழக்கத்திற்கு மாறான நிலையாகும் '' என்று கருத்துரைத்துள்ளது (தொகுதி I, பக்கம் 237).

5. அனைத்திந்திய ஊழியங்கள் இணைப்பாட்சி அங்கங்களின் (மாநிலங்கள்) கட்டுப்பாட்டுக்குள் வருகின்ற அளவில் அவை, அந்த அங்கத்தின் இறுதி அதிகாரத்திற்கே உட்பட்டனவாக இருக்க வேண்டுமென்னும் கோரிக்கை 1935-ம் ஆண்டுஅரசமைப்புச் சட்டம் வகுக்கப்பட்ட காலத்திலேயே எடுத்துரைக்கப்பட்டது. பாராளுமன்ற இணைக்குழு அறிக்கையின் பின்வரும் பத்தி அந்தக் கோரிக்கையை விளக்குகின்றது:—

'' 296. இந்திய ஆளுகை ஊழியம் (Indian Civil Service) இந்தியக் காவற்படை (Indian Police) ஆகிய இந்தியாவின் இரண்டு முதன்மையான ஆட்சி ஊழியங்களுக்கு வருங்காலத்தில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய பிரச்சினை நாங்கள் ஆராய வேண்டியுள்ளவற்றில் மிகவும் சிக்கலானது என்பதை அறிந்துள்ளோம். நியமிக்கும் ஆள்வையே முதன்மையான ஊழிய முறைமைகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகும். எனவே, தன்னாட்சியுடைய ஒரு மாகாண அரசு, தன்னிடமே அரசு ஒப்புவிக்க வேண்டுமென எதிர்பார்க்கத்தக்க அந்தக் கட்டுப்பாடு இந்திய விவகார அமைச்சரிடம் இருக்குமானால், அந்த அளவிற்கு அவர்களின்கீழ்ப் பணியாற்றுகின்ற அலுவலர்கள் மீது செலுத்தப்படும் அதிகாரங்களின் மதிப்புக்கும் குந்தகம் உண்டாகும். புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு

முன்பு இந்திய விவகார அமைச்சரால் அமர்த்தப்பட்ட அலுவலர்களைப் பொறுத்தவரை, அத்தகைய மதிப்புக் குறைவு தவிர்க்க இயலாததாகும். ஆனால், மாகாண அரசில் ஊழியம் செய்கின்ற அலுவலர்கள் வருங்காலத்தில் இந்திய விவகார அமைச்சரால் அமர்த்தப்படுவது மாகாணத் தன்னாட்சிக்கு ஒவ்வாதது என்றும், இது முதற்கொண்டு அனைத்திந்திய ஊழியங்கள் மாகாண அடிப்படையில் நிறுவப் பட்டு முற்றிலும் மாகாண அரசுகளாலேயே ஊழியர்கள் அமர்த்தப்பட்டு கட்டுப்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் எங்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதே கருத்து மறுபடியும் பிரிட்டிஷ்-இந்தியத் தூதுக் குழுவினுடைய கூட்டு அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது'' (தொகுதி I, பக்கம் 182).

அன்றைய பிரிட்டிஷ் இந்தியாவில் 1929, 1930-ம் ஆண்டுக் காலத்திலேயே, அனைத்திந்திய ஊழியங்கள் மீதான இறுதிக் கட்டுப்பாடு மாகாண அரசுகளிடம் நிலைபெற்றிருக்க வேண்டுமென்பதற்கு ஆதரவாகவே விவரமறிந்தோரின் கருத்தும் இருந்ததென்பதை மேலே உள்ள பத்தியிலிருந்து அறியலாம். மாநிலங்கள் அவை, மாநிலங்களின் பிரதிநிதியாகச் செயலாற்றுகின்றது என்னும் வாதத்தைப் பொறுத்தவரை, இந்தக் குழு, 249-வது உறுப்பு குறித்து என்ன கூறியதோ அதுவே 312-வது உறுப்புக்கும் முற்றிலும் பொருந்தும். 249-வது உறுப்பு பற்றிக் குறிப்பிட்டதைப் போன்று, மாநிலங்கள் அவை மறைமுக வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாகும்; மற்றும் அந்த அவையில் மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்ப அவற்றுக்குப் பிரதிநிதித்துவம் உள்ளது. 312-வது உறுப்பும் 1951-ம் ஆண்டு மையச் சட்டமும் அதன்கீழ் செய்துள்ள விதிகளும் மாநிலங்களின் தன்னாட்சியை மீறுகின்றன என்னும் வாதத்திற்கு விடையே கிடையாது.

6. ஏனைய இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டங்களில் இணைப்பாட்சி அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் பொதுவாக ஊழியம் யாதேனும் இருப்பதென்னும் பிரச்சினைக்கே இடமில்லை. அவை இரண்டும், தமக்கெனத் தனித்தனியே ஊழியங்களை வைத்திருக்கின்றன. இணைப்பாட்சி அரசு தன்னுடைய திட்டப் பணிகளையும் வரை திட்டங்களையும் மாகாண அரசுகளின் முகமை (agency) வழியாகவும் மாகாண அரசுகளின் சார்நிலை அலுவலர்கள் மூலமாகவும் நிறைவேற்றலாம் என்னும் நிலை இருக்கலாம். அவ்வாறே,

மாகாண அரசுகள், இணைப்பாட்சியின் அலுவலர்கள் மற்றும் ஆள்வைகளின் உதவியையும் அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனல், வேறு எந்த இணைப்பாட்சியிலும் உறுப்பு அரசுகளுக்கு ஊழியம் புரியும் அலுவலர்கள் மீது இணைப்பாட்சி அரசு கட்டுப்பாடு செலுத்தும் பிரச்சினைக்கே இடமில்லை. நம்முடைய நாட்டில், அனைத்திந்திய ஊழியங்கள் நிலைத்துவிட்டன. அனைத்திந்திய ஊழியங்கள் இருப்பதனல் ஏற்படும் நலன்கள் அல்லது தீமைகள் குறித்து இந்தக் குழு கருத்து செலுத்த வேண்டியதில்லை; அவை பற்றி நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறி குழு மிக விரிவாக ஆராய்ந்துள்ளது.

ஊழியர் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கையிலிருந்து தொடர்புடைய எடுகுறிப்புகள் மைய-மாநில உறவு பற்றிய அதன் அறிக்கையின் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொன்னல், ஐ.ஏ.எஸ். பணியினருக்கு திட்டவட்டமான அலுவல் துறையை வரையறுக்க வேண்டும். அது, நிலவருவாய் நிர்வாகம், குற்றவியல் நீதிமன்ற அலுவல்கள், மாநிலங்களில் ஏனைய அலுவல் ஊழியங்களின் அலுவலர்களால் கவனிக்கப்படுகின்றனவை நீங்கலான மற்ற துறைகளில் ஒழுங்கு முறைப்படுத்தும் பணி ஆகியவை அடங்கியதாக இருக்க வேண்டும். அனைத்திந்திய ஊழியங்கள் பற்றி நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு மேற்கொண்ட போக்கு வன்மையாகக் குறை கூறப்பட்டுள்ளது—"பொது நிர்வாகம் பற்றிய இந்தியச் சஞ்சிகை"யின் 1969, அக்டோபர்-டிசம்பர் இதழில் வெளியிடப்பட்ட ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் இருவருடைய கட்டுரைகளைக் காண்க—அதே இதழில் வேறொரு சுவையான கட்டுரையும் அடங்கியுள்ளது. அந்தக் கட்டுரை, வேறு நோக்குடைய கருத்தினைப் புலப்படுத்துகின்றது. ஐ.ஏ.எஸ். பணித்துறையை, நில வருவாய் மற்றும் குற்றவியல் நீதிமன்ற அலுவல்களுக்கு மட்டுமே வரையறை செய்துவிட்டு ஏனைய பணியினங்களை மற்ற அலுவல் ஊழியங்களிடம் விடுவது என்று நிருவாகச் சீரமைப்புக் குழு செய்த பரிந்துரைகளை மைய உள்துறை அமைச்சகமும் செயலாளர்கள் குழுவும் தள்ளுபடி செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது (1970, ஜூலை 6-ம் நாளிட்ட 'இந்து' வைக் காண்க).

7. அனைத்திந்திய ஊழியங்களை வைத்துக் கொள்கின்ற அதே நேரத்தில் தன்னாட்சி உறுப்புகள் என்கின்ற வகையில் மாநிலங்களின் அதிகாரங்களை எந்த அளவிற்குச் சிறப்பாகப்

பாதுகாப்பது என்பது குறித்து இக்குழு ஆராய வேண்டியுள்ளது. அனைத்திந்திய ஊழியங்களுக்கு உரிய அலுவலர்களை மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக்குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. அவர்களுடைய ஊழிய முறைமைகள் மாநிலங்களையும் கலந்தறிந்து மைய அரசினால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. 1951-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளின்படி, இறுதியான அதிகாரம் மைய அரசிடமும் மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவினிடமும் மட்டுமே நிலை பெற்றுள்ளது. அனைத்திந்திய ஊழியத் திட்டங்களில் மாநிலங்கள் உறுதியாகவும் பயனுள்ள முறையிலும் பங்கு பெறக் கூடியவாறு செய்வதற்குரிய ஒரே வழி, 1930-ம் ஆண்டிலேயே பாராளுமன்ற இணைக் குழுவின் முன்பு எடுத்துரைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்குவதே யாகும். மேலே கொடுத்துள்ள எடுகுறிப்பிலிருந்து தெளிவாகின்றபடி, அனைத்திந்திய ஊழியங்கள் மாகாண (மாநில) அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்பதும் அவற்றுக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதும் அவர்கள் மீதான கட்டுப்பாடும் மாகாண அரசுகளிடம் இருக்க வேண்டுமென்பதும் அந்தக் கோரிக்கையாகும். மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் மூலமாக ஊழியர் தேர்ந்தெடுக்கப்படுவது நிறுத்தப்படலாம். மாநில ஆட்சி ஊழியத்திற்கு (State Civil Service) (மாவட்ட ஆட்சித் துணைத் தலைவர்கள்) இந்த மாநிலம் ஊழியரைத் தேர்ந்தெடுக்கின்றது. மற்ற மாநிலங்களுங்கூட இது போன்ற ஊழியங்களை வைத்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை. அதனுடன், மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் மூலமாக நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மாருக, ஐ.ஏ.எஸ். பதவிக்கு உயர்வளிப்பதற்காகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய முதன்மைக் களமாக மாநில ஊழிய வகைகளின் அரசிதழ்ப் பதிவு வரிசைகள் அமைந்துள்ளன. அவை, மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உதவியுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநிலத்தால் நேரடியாக நிரப்பப்படுகின்றன. மாநிலங்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற அரசிதழ்ப் பதிவு பெற்ற ஊழியங்களின் உறுப்பினர்களை மாற்றல் மூலமாக அல்லது நேரடியாகத் தேர்ந்தெடுத்து அனைத்திந்திய ஊழியங்களுக்கான நியமனங்களைச் செய்ய வேண்டும்; அல்லது அதற்கு இந்த இருவகையும் இணைந்த ஒரு முறை கையாளப்படலாம்; தேவையானல் ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும், அவசியம் அல்லது தக்கது எனக் கருதப்பட்டால்

தேர்வு ஒன்றும் மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் மேற்பார்வையின்கீழ் அதற்காக நடத்தப்படலாம். இவ்வாறு செய்வது, மாநிலங்களின் தன்னாட்சிக்கு ஒத்ததாக இருக்கு மென்பதுடன் ஆட்சித்திறனைப் பெருமளவுக்கு உயர்த்துவ தோடு அனைத்திந்திய ஊழியங்களையும் பலப்படுத்தும். பல்வேறு மாநிலங்களும் வட்டார மொழிகளை ஆட்சி மொழியாக ஏற்றுள்ளதன் காரணமாக, அனைத்திந்திய ஊழியங்களை நடத்துவதற்கு, வட்டார நிலைமைகளை அறிந்திராத தொலைவான மைய முகமையினால் அலுவலர்களைத் தெரிந்தெடுக்கும் முறை இணக்க உறவுக்கு கட்டாயம் ஊறு விளைவிக்கும். எங்கள் ஆலோசனை மிகவும் விரிவாக ஆராயப்படவேண்டி யிருக்கும். இங்கு முதன்மையான கொள்கையை மட்டுமே எடுத்துரைத்துள்ளோம். அது மேலும் ஆராயப்படலாம்.

8. அனைத்திந்திய ஊழியங்களில் எல்லா மாநிலங் களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதுடன் ஓர் அலுவலர், தாம் அனைத்திந்திய ஊழியத்திற்குப் போவதற்கு முன்பு மாநில அரசில் போதிய அளவுக்கு நீண்டகாலம் பணிபுரிந் திருப்பது எங்கள் ஆலோசனையின் வழி கிடைக்கும் நன்மை யாகும். புதிய அனைத்திந்திய ஊழியங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் பற்றியும் அந்த முயற்சிகள் மாநிலங்களின் எதிர்ப்பு காரணமாக எவ்வாறு கைவிடப்பட வேண்டிய தாயிற்று என்பது பற்றியும் ஏற்கனவே குறிப் பிட்டுள்ளோம். மாநிலத்தின் தனித்த வரம்புக்குட்பட்ட பொருள்களுக்குத் தொடர்புடைய அனைத்திந்திய ஊழியம் எதனையும் அமைப்பதற்கு நியாயம் இருப்பதாகத் தோன்ற வில்லை. காங்கிரசு அல்லாத மாநிலங்களுக்கு அனைத்திந்திய ஊழிய அலுவலர்கள் மைய அரசின் முகவர்கள் (agents of the Centre) என்றும் அவற்றின் கொள்கைகளை அவர்கள் நிறை வேற்றமாட்டார்கள் என்றும் அவற்றுக்கு ஓர் எண்ணம் இருக் கக்கூடும் என்பதை மறுக்க முடியாது. எனவே, வருங் காலத்தில் புதிய அனைத்திந்திய ஊழியம் எதையும் ஏற்படுத்து வதற்கான வகையுரையை நீக்கிவிடும் வகையில் 312-வது உறுப்பை மாற்றி அமைக்கலாம் என்று பரிந்துரைக்கின்றோம்.

9. பல்வேறு மாநிலங்களும் வட்டார மொழிகளை அவற்றின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதனால் தற்போதுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகிய அனைத்திந்திய ஊழியங்களுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு மொழி எம்மொழியாக இருக்க வேண்டும் என்பது பிரச்சினையாக உள்ளது. நாங்கள் கருத்துரைத்துள்ள திட்டத்தில், ஊழி

யர்களைத் தேர்ந்து எடுப்பது மாநிலவாரியான அடிப்படையில் இருக்கும். இந்த ஊழியங்களைச் சேர்ந்த அலுவலர்கள் பிற மாநிலங்களில் கூட அமர்த்தப்படுவதற்கும் மையத்தில் பணிபுரியவும் கடமைப்பட்டவர்களாவர். ஆட்சி மொழி பற்றிய எங்கள் பரிந்துரையில், மையத்திற்கும் மாநிலத்திற்கும் இடையிலும் மாநிலங்களுக்கிடையிலும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென ஆலோசனை கூறியுள்ளோம். ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பது மாநிலவாரியாக இருக்குமென்ற போதிலும் அனைத்திந்திய ஊழியங்களுக்குரிய தேர்வு மொழியாக ஆங்கிலமே தொடர்ந்திருப்பது மிகவும் நன்றென்று இக்குழு கருதுகின்றது. எவ்வாருயினும், அனைத்திந்திய ஊழியத்தில் சேருவதற்கு, ஆங்கில மொழியை போதிய அளவுக்கு செவ்வையாக அறிந்திருக்க வேண்டும் என்னும் தகுதி தொடர்ந்து இருக்க வேண்டும்.

10. மைய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு ஊதியம், படிகள் முதலியவற்றை ஒருதரப்பாக உயர்த்தும் போதெல்லாம், பல்வேறு மாநிலங்களின் மீதும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட மற்ற ஆள்வைகளின் மீதும் மன்றங்களின்மீதும் நிதிச் சுமை உண்டாக்கப் படுகின்றது என்பது பற்றி இக்குழு இங்கே கருத்துரைக்காமல் இருக்க முடியாது. இதனுல், மற்றப்படி மையத்திற்கும் மாநிலத்திற்கும் நிலவக்கூடிய இணக்க உறவுக்கு சில சமயங்களில் ஊறு நேரிடுகின்றது. மைய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு ஊதியங்களை உயர்த்துவதற்கு முன்னர், அது மாநிலங்களைக் கலந்தறிந்து அவற்றின் கருத்துக்களுக்கு உரிய மதிப்பளிப்பது இதைத் தவிர்ப்பதற்குரிய ஒரு வழியாகும். இதுவே முற்றிலும் போதுமானதாகி விடாது. இயன்றவரை மைய ஊழியர்களாயினும் மாநில ஊழியர்களாயினும் அரசு ஊழியர்களின் ஊதியங்கள் உள்ளூர் அல்லது தனி நிலைமைகளுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டு நாடு முழுவதிலும் ஒருசீராக இருக்க வேண்டும்.

மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழு

11. இந்த அத்தியாயத்தில் ஆராய்ந்த பொருள் தலைப்புக்குத் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தில் வகையுரை ஒன்று உள்ளது; அது மிகவும் ஒவ்வாததாகக் காணப்படுகிறது. அது 317-வது உறுப்பாகும். மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினர்களும் தலைவரும் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர். மாநில அரசு ஊழியர்

தேர்வு ஆணைக் குழுவினர் எண்ணிக்கையும் ஆணைக்குழு உறுப்பினர்களின் ஊழிய முறைமைகளும் ஆளுநரால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. மாநில அரசு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவரை அல்லது உறுப்பினர் எவரையேனும் பதவியிலிருந்து நீக்குவதற்காக உச்ச நீதிமன்றத்துக்குக் குறிப்பு அனுப்பப் பட்டிருப்பின் அவரைப் பதவியிலிருந்து தற்காலிகமாக விலக்க வும் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், தகாத நடத்தை காரணமாக அல்லது நொடிப்பு (insolvency) உடல் வகையில் ஏலாமை முதலியவை காரணமாக மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரை பதவி நீக்கம் செய்வதற்கான உரிய அதிகாரம் மைய அமைச்சரவை எனப் பொருள்படும் குடியரசுத் தலைவரிடம் நிலை பெற்றுள்ளது என்பது வியப்பிற்குரியதாகும். 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி மாகாண அரசு ஊழியர் தேர்வாணைக் குழுவின் உறுப்பினர்களுடைய பதவிக் காலம் ஆளுநரால் அவர்தம் உளத்தேர்வின்படிச் செய்யப் பட்ட ஒழுங்கு முறை விதிகளால் முடிவு செய்யப்பட்டது [பிரிவு 265 (2) (அ)]. வரைவு அரசமைப்புச் சட்டத்தில் இந்த வகையுரை உள்ளவாறே எடுத்துக் கொள்ளப்பட்டது. வரைவு அரசமைப்புச் சட்டத்தின் 285 (2) (அ) உறுப்பு, ஊழியர் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுடைய பதவிக் காலத்தை முடிவு செய்து தம் உளத்தேர்வுப்படி ஒழுங்கு முறை விதிகளைச் செய்ய ஆளுநருக்கு அதிகாரமளித்தது. மாகாண அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுக்கள் எல்லா வற்றினுடைய தலைவர்கள் இணைப்பாட்சி அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் மாநாடு ஒன்று 1948 மே மாதத்தில் நடை பெற்றது. உச்ச நீதி மன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படுகின்ற அதே காரணத் தின் மீதும் அதே முறையிலும் அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட அரசமைப்புச் சட்டம் வகை செய்யவேண்டும் என்பதும் அதன்படி, அத்தகைய பதவி நீக்கம் குடியரசுத் தலைவரின் ஆணையின் மூலம் மட்டுமே செய்யப்படவேண்டும் என்பதும் அந்த மாநாட்டில் கூறப்பட்ட ஆலோசனைகளில் ஒன்றாகும். ஒரு கட்டத்தில், அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவ தற்கு எதிராக அவர் தமது காரணத்தைக் காட்டுமாறு கேட்கப்பட வேண்டிய தேவையின்றியே ஆறுமாத

அறிவிப்பின் மேல் அவரைப் பதவி நீக்கம்செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்று உள்துறை அமைச்சகம் தனது கருத்தைத் தெரிவித்தது. இறுதியாக, டாக்டர் அம்பேத்கார், அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினர் தகாத நடத்தை காரணமாக, அவ்வாறு உச்ச நீதிமன்றம் கொடுக்கும் அறிக்கையின் மீது குடியரசுத் தலைவரால் அல்லது ஆளுநரால் தமது கையொப்பமிட்ட முறை ஆணையின் மூலம் நீக்கப்படலாம் என்று சமரச ஏற்பாடாக முன் மொழிந்தார். ஆனல் 1949 ஆகஸ்டில் அரசமைப்புச் சட்ட மன்றத்தின்முன் வைக்கப்பட்ட திருத்தங்களில், *நிரூபிக்கப்பட்ட தகாத நடத்தை காரண மாக மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரை நீக்குவதற்குங்கூட உரிய அதிகாரமுடையவர் குடியரசுத் தலைவரே என்று மட்டும் வகை செய்யப்பட்டது.

12. இந்த மாநிலத்தில், சென்னை மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவினை நிறுவுவதற்காக மாகாணச் சட்ட மன்றத்தினுல் இயற்றப்பட்ட தனிச்சட்டம் ஒன்று இருந்தது. 1929-ல் இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தில் அந்த ஆணைக் குழுவின் அமைப்பு மற்றும் அலுவல்கள் பற்றிய வகையுரைகள் அடங்கியிருந்தன. 1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது இந்த நாட்டிலேயே இருந்த ஒரே ஆணைக்குழு இந்த மாநிலத்தில் இருந்தது தான். பஞ்சாபில், அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவை ஏற்படுத்துவதற்காக சட்ட மன்றத்தில் சட்டமொன்று இயற்றப்பட்டது. ஆனுல், அப்போது அந்த ஆணைக் குழு நிறுவப்படவில்லை. ஆகவே, மற்ற மாநிலங் களுக்கு ஊழியர் தேர்வு ஆணைக் குழு ஒன்று எண்ணப்படாத தற்கு முன்பே வட்டாரச் சட்டத்தினுல் ஊழியர் தேர்வு ஆணைக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ள பெருமிதமான சிறப்பு இம்மாநிலத்திற்கு இருந்தது. ஆணைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைப் பதவியிலிருந்து நீக்கு வதற்கான அதிகாரத்தை அந்தச் சட்டம் ஆளுநருக்கு உரித்தாக்கியது. வரைவு அரசமைப்புச் சட்டமும் கூட, அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினர் அல்லது தலைவர் நீக்கப்படுவதற்கு ஆணையிடுகின்ற அதிகாரத்தை ஆளுநருக்கே வழங்கியது. மாநிலஅரசு ஊழியர் தேர்வு ஆணைக்

* அ.ச.ம.வி. IX, பக்கம் 573.

குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி நீக்கப்படுவதற்குத் தகாத நடத்தை காரணமாக இருந்தால், முன்னதாக ஒரு விசாரணை நடத்தி உச்ச நீதிமன்றத்தால் அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரே நீக்கப்பட வேண்டும் என்னும் தேவை உள்ளதற்குப் பதிலாக இது, குறித்து அளிக்கப்படும் தீர்ப்பு உண்மையில் முன்னதாக ஒரு விசாரணை நடத்தி உயர்நீதி மன்றம் அளிக்கும் தீர்ப்பாக இருக்கவேண்டும் என்று மாற்றியமைக்கப்படலாம். இது மாநிலத்தின் தன்மதிப்புக்கும் அதன் தன்னுட்சிக்கும் ஒத்து இருக்கும். எனவே, மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவரையும் உறுப்பினர்களையும் நீக்குவதற்கான அதிகாரம் மாநில ஆளுநருக்கே உரித்தாக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.

13. உறுப்பு 317 (1)-ல் காணப்படும் வகையுரை, அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழுவின் நடுவுநிலைமையையும் சார்பற்ற உரிமையையும் பாதுகாப்பதாக இருப்பதால் அதனை மாற்றுவது விரும்பத்தக்கதன்று எனத் தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழு கூறியுள்ளது. அந்த அதிகாரம் குடியரசுத்தலைவரிடம் நிலைபெற்றுள்ளது எனவும் மைய அரசிடமன்று எனவும் அது கூறியுள்ளது. குடியரசுத் தலைவர் என்று பொருள்படுவதும் குறிப்பிடுவதும் ஒரே ஒரு ஆள்வையைத் தான், அது மைய அரசு, அதாவது ஒன்றிய அமைச்சரவை தான். அரசு ஊழியர் தேர்வு ஆணைக்குழுவின் நடுவுநிலைமை, சார்பற்ற உரிமை ஆகியவற்றைப் பொறுத்தவரை, ஒன்றியத்துக்கு அவற்றை நிலை நிறுத்துவதில் எந்த அளவுக்கு அக்கறை உள்ளதோ அந்த அளவிற்கு மாநிலமும் அக்கறை கொண்டுள்ளது. உண்மையில், தொலைவில் உள்ள மைய அரசைக் காட்டிலும், ஆணைக் குழுவின் நேர்மையிலும் சார்பற்ற உரிமையிலும் மாநில அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மேலும், எமது ஆலோசனையின்படி, பதவி நீக்கம் செய்வது தகாத நடத்தைக்காக என்றால், முன்னதாக உயர்நீதி மன்றத்தால் விசாரணை நடத்தப்படுவதுடன் அப்பதவி நீக்கம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கிணங்கியதாக இருக்கும். தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வு ஆணைக்குழு தெரிவித்துள்ள அச்சத்திற்கு அடிப்படை ஏதுமில்லை. 'மாநில அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழு' என்னும் பொருள் மாநிலப் பட்டியலின் 41-வது பதிவில் குறித்துள்ள பொருள் என்பதை இங்கே கருத்தில் கொள்ளவேண்டும். நாங்கள் தெரிவித்துள்ள ஆலோசனையின்படி 317-வது உறுப்பின் (1), (3)

பகுப்புகளுக்குத் திருத்தம் செய்தால், இந்தப் பொருள் பற்றிய அரசமைப்புச் சட்ட வகையுரைகள் இந்தப் பொருள் குறித்து தற்போதுள்ள சட்டமியற்றும் அதிகாரப் பகிர்வுக்கு முற்றிலும் பொருத்தமுடையதாகும்.

அத்தியாயம் XI

மாநிலத்தின் நிலவரை

இந்தத் தலைப்பில் ஆராய்வதற்குரிய பொருளாக இருப்பவை அரசமைப்புச் சட்டத்தின் 3, 4 (2) ஆகிய உறுப்புகள். அந்த உறுப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளன :—

" உறுப்பு 3—புதிய மாநிலங்களை உருவாக்குதலும், இருக்கின்ற மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றியமைத்தலும்.—நாடாளுமன்றம், சட்டத்தின்மூலம்—

(அ) ஒரு மாநிலத்திலிருந்து நிலவரைப்பிரிவினை செய்தோ இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை ஒன்று சேர்த்தோ ஒரு மாநிலத்தின் பகுதியுடன் ஒரு நில வரையரையை ஒன்று சேர்த்தோ புதியதொரு மாநிலத்தை உருவாக்கலாம் ;

(ஆ) மாநிலம் ஒன்றன் பரப்பினைப் பெருக்கலாம் ;

(இ) மாநிலம் ஒன்றன் பரப்பினைக் குறுக்கலாம் ;

(ஈ) மாநிலம் ஒன்றன் எல்லைகளை மாற்றியமைக்கலாம்;

(உ) மாநிலம் ஒன்றன் பெயரை மாற்றியமைக்கலாம்;

ஆனல் இவ்வகைக்கான மசோதா ஏதும், குடியரசுத் தலைவரின் பரிந்துரை மீதல்லாமலும் அந்த மசோதாவில் அடங்கிய செயற்குறிப்பு மாநிலம் ஒன்றன் பரப்பை, எல்லையை அல்லது பெயரைப் பாதிப்பதாயின், அந்த மாநிலத்தின் சட்ட மன்றம் குடியரசுத் தலைவர் அனுப்பற் குறிப்பில் குறிக்கும் காலவரைக்குள் அல்லது அவர் அனுமதிக்கும் மறுகாலவரைக்குள் அதன்மீது கருத்து பகர்தற்கென அச்சட்டமன்றத்திற்கு அனுப்பாமலும், மேலும் அவ்வாறு குறிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடையாமலும் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகள் எதனிலும் முன்னுரைக்கப்படக் கூடாது.

விளக்கம் 1.—இந்த உறுப்பில், பகுப்புகள் (அ) முதல் (உ) வரையில் ' மாநிலம் ' என்பது ஒன்றியத்து நிலவரையை உள்ளடக்கும் ; ஆனல், வரம்புரையில் 'மாநிலம்' என்பது ஒன்றியத்து நிலவரையை உள்ளடக்காது.

விளக்கம் 2.—நாடாளுமன்றத்திற்கு (அ) பகுப்பினுல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம், மாநிலம் ஒன்றன் அல்லது ஒன்றியத்து நிலவரை ஒன்றன் பகுதியை வேறு எந்த மாநிலத்துடனே ஒன்றியத்து நிலவரையுடனே இணைத்து, புதியதோர் மாநிலத்தை அல்லது ஒன்றியத்து நிலவரையை உருவாக்கும் அதிகாரத்தை உள்ளடக்கும்.''

''உறுப்பு 4—2-வது 3-வது உறுப்புகளின்கீழ் இயற்றப்படும் சட்டங்கள், ஒன்ருவது நான்காவது இணைப்பட்டிகளைத் திருத்தியமைப்பதற்கும் துணையான, சார்பான, விளைவான காரியங்களுக்கும் வகை செய்தல்—

(1) ——————

(2) மேற்கூறிய அத்தகைய சட்டம் எதனையும் 368-வது உறுப்பைப் பொறுத்தவரையில் இந்த அரசமைப்புச் சட்டத்தின் திருத்தம் எனக் கொள்ளக்கூடாது.''

2. மாநிலத்தின் எல்லைகள், பெயர் முதலியவற்றை இந்திய அரசு மாற்ற முற்படுவதற்கு முன்பு தொடர்புள்ள மாநிலத்தின் இசைவைப் பெற்றுகவேண்டும் என்று அரசமைப்புச் சட்ட மன்றத்தில் சில முக்கியமான உறுப்பினர் களால் வன்மையாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது என்பதை அச்சட்ட மன்ற விவாதங்களிலிருந்து அறியலாம்.* அப்போது இருந்த மாநிலங்களின் எல்லைகள், பொருத்தமானவையும் அல்லது இயல்பானவையும் அல்ல; அறியப்பட்ட எந்தக் கோட்பாட்டின்மீதும் அவை அமைக்கப் படவில்லை என்பதும் எனவே, நாட்டின் அரசியல் தேசப் படத்தை, மாற்றி வரைவதற்கு மாநிலங்களின் போக்கு குந்தகமாயிராமல் ஒன்றிய அரசுக்கு அதிகாரம் பெறுவதற்கு யாதேனுமொரு ஏற்பாடு வகுக்கப்பட வேண்டும் என்பதும் அரசின் வரைவை ஆதரித்த உறுப்பினர்களின் கருத்தினைக் கவர்ந்த முதன்மையான காரணம் என்பதையும் அந்த விவாதங்களிலிருந்து அறியலாம்.

3. இறுதியாக, அரசமைப்புச் சட்டத்தில் அமைக்கப் பட்ட வகையுரை, தொடர்புடைய மாநிலத்தின் சட்டமன்றத் தினுடைய கருத்தைப் பெற்றுக வேண்டும் என்று மட்டுமே குறித்தது. இந்த வகையுரை மேற்கொண்டும் மாற்றம் செய்யப்பட்டது; அதன்படி, மாநிலத்தின் கருத்தைக் கேட் டறிவது கூட அவசியமன்று. மைய அரசு செய்யவேண்டிய

* இந்த விவாதங்களின் சுருக்கத்திற்கு VII-வது இணைப்பைக் காண்க.

தெல்லாம், குறித்த காலவரைக்குள் அந்தப் பொருள் குறித்து கருத்து தெரிவிப்பதற்காக மாநிலச் சட்ட மன்றத்துக்கு அனுப்புவதாகும். எனவே, அந்தக் காலவரை முடிந்தபின்னர் நாடாளுமன்றம், சட்ட மன்றம் கருத்து தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும், மற்றும் சட்ட மன்றம் தெரிவித்த கருத்துக்கு மதிப்பளிக்காமலும் தொடர்புடைய அந்த மசோதாவை நேரடியாகச் சட்டமியற்ற இயலும்.

4. உச்ச நீதிமன்றம், 3-வது உறுப்பின் அரசமைப்பு ரீதியான கருத்தை பாபுலால் பராடேவுக்கும் பம்பாய் அரசுக்கும் (A.I.R 1960 உச்ச நீதிமன்ற வழக்கு 51) இடையிலும், மேற்கு வங்காள அரசுக்கும் இந்திய ஒன்றியத்துக்கும் (A.I.R. 1963 உச்ச நீதிமன்ற வழக்கு 1241) இடையிலும் நடைபெற்ற வழக்குகளில் ஆராய்ந்துள்ளது. முதல் வழக்கில், நீதிபதி எஸ். கே. தாஸ், மேற்படி வகையுரைகளின் உணரும் பொருளை பின்வருமாறு விளக்குகிறார்:—

''இந்த வரம்புரை இரண்டு நிபந்தனைகளைக் குறிப்பிடுகின்றது. முதலாவது, குடியரசுத் தலைவரின் பரிந்துரை மீதல்லாமல் மசோதா எதனையும் முன்னுரைக்கக் கூடாது என்பது. அந்த மசோதாவில் அடங்கிய செயற்குறிப்பு, மாநிலம் ஒன்றன் பரப்பை, எல்லையை அல்லது பெயரை பாதிப்பதாயின் அந்த மாநிலத்தின் சட்ட மன்றம் அதன்மீது கருத்து பகர்தற்கென அதற்கு குடியரசுத் தலைவர் அந்த மசோதாவை அனுப்ப வேண்டியுள்ளது இரண்டாவது நிபந்தனையாகும். மாநிலச் சட்ட மன்றம் தன்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டிய காலவரை குடியரசுத் தலைவரால் குறிக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு குறிக்கப்பட்ட காலவரையை நீட்டிக்கலாம். ஆயினும், குறிப்பிட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட காலவரை முடிந்து, மாநிலச் சட்ட மன்றத்தின் கருத்து எதுவும் வரப்பெறவில்லை என்றால் மாநிலச் சட்ட மன்றம் கருத்து தெரிவிக்கவில்லை என்ற போதிலுங்கூட அந்த வரம்புரையில் குறிப்பிட்ட இரண்டாவது நிபந்தனை நிறைவேறிவிட்டதாகும். அனுமதிக்கும் காலவரைக்குள் மாநிலச் சட்ட மன்றம் தனது கருத்தைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு கொடுப்பதென்ற எண்ணம் தெரிகிறது. மாநிலச் சட்ட மன்றம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றால் அவ்வாறு தவறியது அந்த மசோதாவை முன்னுரைப்பதை செல்லாததாக்காது; அல்லது, நாடாளுமன்றம் மாநிலச் சட்ட மன்றத்

தின் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதன்படி நடக்கவேண்டும் என்பதைக் குறிப்பிட அந்த வரம்புரையில் எதுவும் காணப்படவில்லை.''

மக்களாட்சி நடைமுறையினையொட்டி 3-வது உறுப்புக்குப் பொருள் கொள்ள வேண்டும் என்கிற வாதம் நிராகரிக்கப் பட்டு அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைக்கும் நமது அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைக்கும் உள்ள வேறுபாடு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.—

''மசோதாவில் அடங்கியுள்ள செயற்குறிப்பு மாநிலம் ஒன்றன் பரப்பு, எல்லைகள் அல்லது பெயரைப் பாதிப்ப தாயின் அந்த மசோதாவின் மீது அந்த மாநிலச் சட்ட மன்றத்தின் கருத்தைப் பெறுவதற்காக அது குடியரசுத் தலைவரால் அச்சட்டமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று 3-வது உறுப்பின் வரம்புரை வெளிப்படையாக ஐயத் திற்கிடமற்ற மொழியில் கூறுகின்றது. அதில், தனிவகையான அல்லது மறைபொருளான 'மக்களாட்சி நடைமுறைக்' கோட் பாடு யாதேனும் அடங்கியிருப்பதாக எங்களுக்குத் தோன்ற வில்லை. மேல் முறையீட்டு வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு IV-ன் 3-வது பிரிவை நாங்கள் கவனிக்கக் கோரினார். அது, தொடர்புடைய மாநிலங்களின் சட்டமன்றங்களினுடைய இசைவும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் (Congress) இசைவும் இல்லாமல் புதிய மாநிலம் யாதேனும் மற்றொன்றன் அதிகார வரம்புக்குள் உருவாக்கப்பட அல்லது அமைக்கப்படக்கூடாது; அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை இணைத்து மாநிலம் யாதேனும் உருவாக்கப்படக்கூடாது என்று 'பிறவற்றோடு', கூறுகின்றது. அந்த வகையுரை நாம் ஆராய்கின்ற வரம்புரையிலிருந்து முற்றிலும் வேறு பட்ட தாகும். முந்தியது, மாநிலச் சட்டமன்றங்களின் இசைவு தேவை என்கிறது ; மாறாக, மசோதாவில் அடங்கிய செயற் குறிப்பின் மீது மாநிலச் சட்டமன்றம் கருத்துரைக்கக் குடியரசுத் தலைவர் அதனை மாநிலச் சட்டமன்றத்திற்கு அனுப்பவேண்டுமென்பதே நமது வரம்புரையின் இன்றி யமையாத தேவையாக உள்ளது. மாநிலங்களின் உரிமைகளி னுடைய ஏற்றத்தகாத உயர்நிலைக் கொள்கைப் பிடிவாத நோக் கில் 3-வது உறுப்பின் அமைப்பில் பொருள் கொள்வதற்கு எவ்விதக் காரணமும் எங்களுக்குத் தெரியவில்லை.''

இரண்டாவது வழக்கில் பெரும்பான்மைத் தீர்ப்பை வெளியிட்ட தலைமை நீதிபதி சின்ஹா நிலைமையைப் பின்வருமாறு விளக்குகிறார் :—

" மாநிலங்களின் இறைமை பற்றிய கோட்பாட்டிற்கு ஒவ்வாததாகத் தோன்றுவது என்னவென்றால், மாநிலங்களின் எல்லைகளை மாற்றுவதற்கு மட்டுமல்லாமல் இருக்கின்ற ஒரு மாநிலத்தை இல்லாது அழிப்பதற்கும் கூட நாடாளுமன்றத்துக்கு உரியதாக்கப்பட்டுள்ள அதிகாரமேயாகும். மாநிலங்களின் எல்லைகளை மாற்றுவதற்கு எதிராக அரசமைப்புச் சட்ட முறையில் எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. அரசமைப்புச் சட்டத்தின் 2-வது உறுப்பின்படி நாடாளுமன்றம் தான் தக்கதென எண்ணும் வரையறைகளின்மீதும் நிபந்தனைகளின் மீதும் புது மாநிலங்களை ஒன்றியத்திற்குள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது புதிய மாநிலங்களை நிறுவலாம் ; 3-வது உறுப்பின்படி, ஒரு மாநிலத்திலிருந்து நிலவரையைப் பிரிவினை செய்தோ இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை ஒன்றுசேர்த்தோ யாதேனுமொரு மாநிலத்தின் ஒரு பகுதியுடன் யாதேனுமொரு நிலவரையை ஒன்று சேர்த்தோ புதியதொரு மாநிலத்தை உருவாக்கவும், யாதேனுமொரு மாநிலத்தின் பரப்பைப் பெருக்கவும், யாதேனுமொரு மாநிலத்தின் பரப்பைக் குறுக்கவும் யாதேனுமொரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றியமைக்கவும் மற்றும் யாதேனுமொரு மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கவும் சட்டத்தின்மூலம் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் இருப்பதையே மிக முக்கியமாய்ப் பாதிக்கின்ற சட்டத்தை இயற்ற குடியரசுத் தலைவரின் பரிந்துரையின்மேல் முன்னுரைக்கலாம். குடியரசுத் தலைவரின் பரிந்துரை என்பது நடைமுறையில் மைய அமைச்சரவையின் பரிந்துரையாகும். மற்றும், அந்த மசோதாவில் உள்ள செயற்குறிப்பு மாநிலம் ஒன்றன் பரப்பை, எல்லைகளை அல்லது பெயரைப் பாதிப்பதாயின் அந்த மாநிலச் சட்டமன்றம் அதன்மீது தன்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்காக மட்டும் குடியரசுத் தலைவரால் அதற்கு அந்த மசோதாவை அனுப்பவேண்டியுள்ளது. எனவே, யாதேனுமொரு மாநிலத்தை அதன் அனைத்து அதிகாரங்கள் ஆள்வை ஆகியவற்றுடன் அழிக்கவும்கூட அதன் எல்லைகளை மாற்றியமைக்கவும் அதன் பரப்பைக்குறைக்கவும் நாடாளுமன்றத்திற்குச் சட்டத்தின்மூலம் அதிகாரம் உரியதாக்கப்பட்டுள்ளது".

நீதிபதி சுப்பா ராவ் தன்னுடைய மாறுபாட்டுத் தீர்ப்பில் கூறியதாவது :—

" அரசமைப்புச் சட்டத்தின் 3-வது உறுப்பின்கீழ் நாடாளுமன்றம் மாநிலத்தை அழிக்கலாம் என்று கூறப்படுகிறது. எனவே, இந்த வரம்புடைய அதிகாரம் அனுமதிக்கப்பட்டால் நாடாளுமன்றத்திற்கு மிகப்பெரிய அதிகாரம் ஏற்கனவே உரியதாக்கப்பட்டுள்ளதனுல், ஒரு மாநிலத்திற்கு இதைவிட மிகுந்த அவக்கேடு ஏற்படமுடியாது. சட்டத்தின் மூலம் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க, யாதேனுமொரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றியமைக்க, யாதேனுமொரு மாநிலத்தின் பரப்பைப் பெருக்க அல்லது குறுக்க மட்டுமே நாடாளுமன்றத்துக்கு 3-வது உறுப்பு அதிகாரமளிக்கிறது. அத்தகைய அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு வெளிப்படையாக அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அது அந்த உறுப்பின் கீழ்ச் செயல்பட முடியும்".

திரு. அசோக் சந்தா 'இந்தியாவில் இணைப்பாட்சி முறை' என்னும் தம்முடைய நூலில் இப் பொருள் குறித்து பின்வருமாறு கருத்துரைக்கிருர் :—

" நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படுவதற்கு முற்செயலாக மாநிலச் சட்டமன்றத்தின் ஒத்திசைவைப் பெற்ருகவேண்டும் அல்லது நேர்முக வாக்கெடுப்பின்மூலம் மக்கள் விருப்பங்கள் அறியப்படவேண்டும் என்று அந்த வகையுரை ஆணையிடவில்லை என்பதை அறிதல் முக்கியமாகும் ; அது அந்த மசோதாவைக் குடியரசுத்தலைவர் மாநிலங்களுக்கு அனுப்பவேண்டும் என்று மட்டுமே குறிப்பிடுகின்றது. சட்டமியற்றுவதற்குங்கூட, வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையினுல் அது நிறைவேற்றப்படவேண்டும் அல்லது கூடுதலாக, மொத்த உறுப்பினர்களின் முழுமையான பெரும்பான்மையைப் பெற்ருகவேண்டும் என்னும் தேவையைக் குறிக்கவில்லை. அதே குறைந்த அளவு பெரும்பான்மையினுல் நிறைவேற்றப்பட்டாலே போதுமானது. வேறுவகையில் சொன்னுல், இந்த வகையுரை சட்டமியற்றும் இயல்பான எல்லைக்குட்படுவதாகவன்றி அரசமைப்புச் சட்டவகையிலான திருத்த எல்லைக்குட்பட்டதாகக் கருதப்படவில்லை.

. . . இந்த அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்புகூட, இருந்துவந்த இந்த வகையுரை, நிருவாக வசதிக்காக பம்பாய் மாநிலத்தின் பரப்பைப் பெருக்கவும் எல்லைகளை மாற்றியமைக்கவும் மற்ற இடங்களில் உள்ள பகுதிகளை ஒன்று

சேர்த்துக்கொள்ளவும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளவும் ஆணையிட டொமினியன் அரசுக்கு அதிகாரம் வழங்கியது.

இப்போது திருத்தப்பட்டுள்ளவாறுள்ள இந்த உறுப்பு, மாநிலங்களின் இசைவின்றி மற்றும் அவற்றின் கருத்துகளைப் பெறுவதற்குக்கூட காத்திராமல் அவற்றைச் சீரமைக்கும் வேலையை மேற்கொள்ள நாடாளுமன்றத்திற்கு, அதாவது, மையத்தில் அதிகாரத்தில் உள்ள கட்சிக்கு உரிமை அளிக்கின்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில், இருக்கின்ற ஒன்று அல்லது பல மாநிலங்களின் நிலவரைகளை நேர்ந்து நிரவுவதன்மூலம் புதிய மாநிலத்தை உருவாக்குவது, பாதிக்கப்படுகின்ற மாநிலங்களின் இசைவுடன் மட்டுமே அனுமதிக்கத்தக்கதாகும். ஆஸ்திரேலியாவில், சட்டமன்றங்களின் இசைவுடன்கூட வாக்காளர்களில் பெரும்பான்மையோரின் ஒப்புதலும் தேவையாக உள்ளது. இங்கேதான் ஓர் இணைப்பாட்சியில் உள்ள ஒரு மாநிலத்தின் அழிக்கவியலாத் தன்மைக் கொள்கைக்கு அடிப்படை அமைந்திருக்கிறது. இந்திய (அரசமைப்புச் சட்ட) வகையுரை, சீரமைப்புக்கு முன் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் இசைவு பெறுவதைத் தவிர்க்கிறது. ஆகவே, அந்தவகையுரை அசாதாரணமானதாகும்.''

5. மற்ற இணைப்பாட்சிகளின் அரசமைப்புச் சட்டங்களில் உள்ள இதுபோன்ற வகையுரைகளை இதுதொடர்பாகக் கருதிப் பார்த்தல் நலமுடையதாகும். சுவிட்சர்லாந்துக் கூட்டரசின் இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டத்தின் 5-வது உறுப்பின் மூலம், மாகாணங்களின் நிலவரைக்கு கூட்டரசினால் பொறுப்புறுதி அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் IV-வது உறுப்பின் 3-வது பிரிவினுடைய (1)-வது உட்பிரிவு, தொடர்புடைய மாநிலங்களின் இசைவின்றி, வேறு யாதேனுமொரு மாநிலத்தின் அதிகார வரம்புக்குள் புதிய மாநிலத்தை உருவாக்குவதோ, நிறுவுவதோ இரண்டுஅல்லது இரண்டுக்கு மேற்பட்டமாநிலங்களை இணைத்து ஒரு மாநிலத்தை அமைப்பதோ கூடாது என்று வகை செய்கிறது. ஆஸ்திரேலிய காமன்வெல்த் அரசமைப்புச் சட்டத்தின் 123-வது 124-வது பிரிவுகள் இதற்கு ஒரு படி மேலே செல்லுகின்றன. அந்தப் பிரிவுகளின்படி, பாதிக்கப்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்களினுடைய இசைவு மட்டுமல்லாமல் அந்த மாநிலங்களின் வாக்காளர்களில் பெரும்பான்மையோரின் ஒப்புதலும்கூட தேவையாக உள்ளது.*

ஜெர்மானியக் கூட்டரசின் (German Reich) 1919-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் கூட, மாநிலங்களின் எல்லைகளை மாற்றி யமைப்பதற்கு அவற்றின் இசைவு தேவையெனக் குறித்திருந் தது. இன்னும், 1871-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் 3-வது பிரிவு, ஒரு மாகாணச் சட்டமன்றத்தின் இசைவுடன் மட்டுமே அதுவும் அந்தச் சட்டமன்றம் உடன் படுகின்ற வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது மட்டுமே அந்த மாகாணத்தின் எல்லைகளைப் பெருக்க, குறைக்க, அல்லது மற்றப்படி மாற்றியமைக்கக் கனடாவின் நாடாளு மன்றத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. தென் ஆப்பிரிக்க அரசமைப்புச் சட்டம் ஒற்றையாட்சித் தன்மையுடையதாய் இருப்பதாகக் கூறப்படுகிற போதிலும் பாதிக்கப் படுகின்ற மாகாணங்கள் ஒவ்வொன்றின் மாகாணச் சட்ட மன்றமும் கொடுக்கின்ற மனுவின் மீதல்லாமல் நாடாளு மன்றம் ஒரு மாகாணத்தின் எல்லைகளை மாற்றியமைப்பதை, ஒரு மாகாணத்தை இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்களாகப் பிரிப்பதை அல்லது ஒன்றியத்துக்குள் இருக்கின்ற மாகாணங்களைக் கொண்டு ஒரு புதிய மாகாணத்தை உருவாக்குவதைத் தடை செய்கிறது. 1909-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்கச் சட்டத்தின் 149-வது பிரிவைக் காண்க.

6. தேசம் முழுவதும் கொண்டிருந்த விருப்பங்களை நிறைவேற்றவும் அரசின் உறுப்புகள் மக்களாட்சியின் பரந்த அடிப்படையில் செயல்படுவதற்கு வசதியளிக்கவும் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. இப்போது, தொடர்புடைய மக்களுடைய எண்ணங்களுக்கிணங்க, பல்வேறு மாநிலங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டுள் ளன ; எனவே, மைய அரசு தகாதமுறையில் தலையிடுவதி லிருந்து பல்வேறு மாநிலங்களின் நிலவரை ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் பொருட்டு வகையுரை செய்யப்படவேண்டு மென்பது இயல்பானதே. இணைப்பாட்சி முறையில் நம்பிக்கையற்றதும் நாடு முழுவதற்கும் ஒற்றையாட்சி அரசை ஏற்படுத்த உறுதி கொண்டுள்ளதுமான ஒரு கட்சி மையத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு சூழ்நிலை கற்பனை செய்ய முடியாததன்று. இந்த நிகழ்ச்சி உண்மை யாக ஏற்படுமானால், மாநிலங்களின் மொழிவாரிப் பிரிவினையை அழிப்பதிலிருந்து அல்லது அதற்காக யாதேனு மொரு குறிப்பிட்ட மாநிலத்தை மட்டும் அண்மையிலுள்ள யாதேனுமொரு மாநிலத்துடன் ஒன்று சேர்ப்பதிலிருந்து

அல்லது அதனை மைய அரசின் நிர்வாகப் பகுதியாக மாற்றியமைப்பதிலிருந்து மையஅரசைத் தடுப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் ஒன்றுமில்லை. இவை அனைத்தையும் சாதாரணப் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்றத்தின் ஒரு சட்டத்தினால் சாதித்து விடமுடியும். மாநிலங்கள் எதையும் செய்யமுடியாமல்தான் இருக்கும். இணைப்பாட்சிக் கோட்பாட்டின் இன்றியமையாத கூறுகளில் ஒன்று யாதெனில், மைய அரசுக்கு அல்லது தேசீய அரசுக்கு, புதிய மாநிலங்களை உருவாக்குவதன் மூலம் அல்லது இருக்கின்ற மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைப்பதன்மூலம் நாட்டுப் படத்தை ஒருதரப்பாக மாற்றி வரையும் அதிகாரம் இருக்கக்கூடாது என்பதாகும்.

7. ஒரு மாநிலத்தின் எல்லைகள், பெயர் முதலியவற்றை மாற்றியமைப்பதற்கு முன்பு, தொடர்புடைய அந்த மாநிலச் சட்டமன்றத்தின் இசைவைப் பெற்றாக வேண்டும் என்று வரைவு அரசமைப்புச் சட்டத்தில் முதலாவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு மாநிலங்களிடையே எல்லைகள் குறித்து நடப்பிலுள்ள தகராறுகளைக் கருதுமிடத்து, அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கு மாநிலங்களின் இசைவை வற்புறுத்துவது பொருத்தமானதாக அல்லது உகந்ததாக இருக்காது. இந்தக் குழுவினால் வழங்கப்பட்ட வினாப்பட்டியலுக்கு வரப்பெற்ற விடைகளில், இரண்டு மாநிலங்களுக்கிடையான எல்லைத் தகராறுகள், ஓய்வு பெற்ற நீதிபதிகளைக் கொண்ட தனிநிலை நீதித் தீர்ப்பாயத்தினால் முடிவு செய்தாகப்படவேண்டும் எனவும் அந்தத்தீர்ப்பாயத்தின் முடிவு இறுதியானதாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருந்தாக வேண்டும் எனவும் ஓர் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. உச்ச நீதி மன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் ஓய்வு பெற்ற நீதிபதிகளின் தலைமையில் அமைந்த ஆணைக் குழுக்கள் எல்லைத் தகராறுகள் மீது அளித்த தீர்ப்புகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ள அல்லது கணிசமாக மாற்றியமைக்கப்பட்டுள்ள எடுத்துக் காட்டு நிகழ்ச்சிகள் இல்லாமல் இல்லை என்பதைக் கவனித்தாகவேண்டும். இதற்கு இரண்டு மாற்று வழிகள் உள்ளன. ஒன்று, மரபுமுறையான இணைப்பாட்சிகளின் அரசமைப்புச் சட்டங்களில் காணப்படுவது போன்ற வகையுரைகளின் ஒப்புமையின்படி தொடர்புடைய மாநிலங்களின் இசைவு பெறப்படுவதற்காக அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்வது; அல்லது மற்றொன்று, அந்தப் பிரச்சினைகளைத்

தீர்ப்பதற்காகத் தனிநிலே நீதித் தீர்ப்பாயத்தை அமைப்பது. மேற்கூறிய இரண்டு மாற்று வழிகளில் எதுவும் ஏற்புடையதாகக் காணப்படவில்லை என்றால், தொடர்புடைய பகுதியின் மக்களுடைய கருத்தினைப் பெற்றுகவேண்டும் என்பதற்கு வகை செய்யலாமா என்பது ஆராயத் தக்கது. இது போன்ற வகையுரை ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்டத்தில் காணப்படுகிறது. ஆனல், இவ்வாறு மககள் கருத்தறிவது தொடர்புடைய மாநிலத்தின் நாடாளுமன்றத்தின் இசைவைப் பெறுவதோடு கூடுதல் செயலாக உள்ளது. நமது நாட்டில், கோவாவின் நிலவரையை மராட்டியத்துடன் சேர்ப்பதா அல்லது குஜராத்துடன் சேர்ப்பதா என்னும் பிரச்சினே குறித்து கோவா மக்களின் விருப்பங்களை அறிவதற்காக இந்த முறை பயன்படுத்தப்பட்டது—1966-ம் ஆண்டு கோவா, டாமன், டையு (கருத்து வாக்கெடுப்புச்) சட்டத்தை (மையச் சட்டம் 38/1966)-க் காண்க.

அத்தியாயம் XII

நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம்.

மரபு வகையான நான்கு இணைப்பாட்சிகளாகிய அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய அனைத்திலும், கீழவையில் (நமது மக்கள் அவைக்கு நிகரானது) இணைப்பாட்சியின் உறுப்புகள் அவற்றின் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் பெறுகின்றன; மக்கள் தொகையின் மாறுதல்களுக்கு ஏற்ப இணைப்பாட்சி உறுப்புகளின் பிரதிநிதித்துவத்தை கால முறையில் சரிக்கட்டவும் ஏற்பாடு உள்ளது. கனடா நீங்கலாக, ஏனைய இணைப்பாட்சிகளின் மேலவைகளில் சமமான அடிப்படையில் இணைப்பாட்சி உறுப்புகள் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. கனடாவில், சட்டமன்ற மேலவை (செனட்) முழுவதும் நியமன உறுப்பினர்களைக் கொண்டதொரு மன்றமாக உள்ளது. மேலவை உறுப்பினர் (செனட்டர்) வாழ்நாள் முழுமைக்கும் பதவி வகிப்பார். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், மேலவையானது (செனட்) ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு மேலவை உறுப்பினர்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு மேலவை உறுப்பினருக்கும் வாக்கு ஒன்று உள்ளது. சுவிட்சர்லாந்தில், மாநிலங்கள் அவை எனப்படுகின்ற மேலவை, ஒவ்வொரு மாகாணத்தாலும் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகளைக் கொண்டதாக உள்ளது. இணைப்பாட்சிச் சட்டத்திற்குட்பட்டு காண்டன்களே (Cantons) மாநிலங்கள் அவையின் தங்களுடைய பிரதிநிதிகளின் உறுப்பினர் உரிமை, தேர்தல் முறை, பதவிக் காலம் ஆகியவற்றை தீர்மானிக்கின்றன. ஆஸ்திரேலியாவின் மேலவை (செனட்) ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்த மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேலவை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் பத்து மேலவை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

2. ஆகவே, ஓர் இணைப்பாட்சியில் பின்பற்றப்படுகின்ற இயல்பான கோட்பாடு, இணைப்பாட்சியின் உறுப்புகளுக்கு மேலவையில் சமமான பிரதிநிதித்துவம் அளிப்பது என்பதனை அறியலாம்; அதாவது, இணைப்பாட்சியின் உறுப்புகள் ஒவ்வொன்றும் சம எண்ணிக்கையில் பிரதிநிதி

களைக் கொண்டிருக்கின்றது. நமது அரசமைப்புச் சட்டத்தில், மாநிலங்கள் அவை பற்றிய வகையுரைகள் 1935-ம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தில் அடங்கியிருந்த மேலவை பற்றிய வகையுரைகளின் அடிப்படையில் அமைக்கப் பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் நான்காவது இணைப்பட்டியில் கண்டுள்ள இடங்கள் ஒதுக்கீடு, மக்கள் அவைக்கு உள்ளவாறே ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதனுடைய மக்கள் தொகையின் அடிப்படையில்தான் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நம் நாட்டினுடைய மாநிலங்களின் ' அளவிலும் மக்கள் தொகையிலும் மிகப் பெரிய வேறுபாடு உள்ள காரணத்தினால்', அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேலவையின் முன்மாதிரி நமது நாட்டிற்குப் பொருந்தாது என்று நேரு அறிக்கையில் கண்டுள்ள கருத்து பற்றி கிரான்வில் ஆஸ்டின் குறிப்பிட்டுள்ளார் ; மேலும், மேலவையில் சிறிய மாகாணங்கள் பெரிய மாகாணங்களுடன் கொள்ளும் உறவு, 'முற்றிலும் சமநிலையற்றதாக இருக்கக் கூடாது' என்பதற்காகச் சிறிய மாகாணங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கூடுதலாக்கலாம் என்று அந்த அறிக்கையில் கண்ட பரிந்துரைபற்றியும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

வட்ட மேசை மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்து பற்றியும் கூட அந்த கற்றறிந்த ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சமமான பிரதிநிதித்துவம் 'பொதுமக்கள் ஆதரவைப் பெறுமா' என்று இணைப்பாட்சி அமைப்பு உட்குழு ஐயம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சமமான பிரதிநிதித்துவம் என்னும் கொள்கையை நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியோர் தள்ளிவிட்டதற்கான காரணம், அந்த ஆசிரியரால் பின்வருமாறு கூறப்படுகிறது:—

''ஒன்றிய அரசமைப்புச் சட்டக் குழு, சமப் பிரதிநிதித்துவத்தைத் தள்ளுபடி செய்ததற்கு அதன் அறிக்கை விளக்கம் எதையும் கொடுக்கவில்லை, ஆனால், நேரு அறிக்கையிலும் வட்டமேசை மாநாட்டிலும் தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டன என்பதை நாம் ஊகிக்கலாம். அவர்கள் இணைப் பாட்சியின் அமைப்பு உறுப்புகளுக்கு சமப் பிரதிநிதித்துவம் அனுமதித்தால், மாகாணங்கள் சமஸ்தானங்களால் 'மூழ்கடிக்கப்பட்டுவிடும்' என்று பி. என். ராவ் அஞ்சியதைப் போல் அவர்களும் அஞ்சியிருக்கக் கூடும்''.

மாநிலங்கள் அவையில், மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதிகளை அறுதியிடுகின்ற தன்மை, ஏனைய இணைப்பாட்சிகளில் காணப்படாத, நமது அரசமைப்புச் சட்டத்தில் மட்டும் காணப்படுகின்ற புதுமையாகும்; இதனால் மக்கள் தொகை மிகுந்த மாநிலங்களுக்கு மிகுந்த பிரதிநிதித்துவம் கிடைக்கின்றது. மேலவையில் மாநிலங்களுக்கு சமப் பிரதிநிதித்துவம் வழங்குவது, மிகவும் பயனுள்ளதாகவும் அமைப்பு உறுப்புகள் சமமான வாக்குரிமையைப் பயன்படுத்த வகை செய்வதாகவும் இருப்பதுடன் அது, உண்மையான இணைப்பாட்சிக் கோட்பாட்டிற்கு ஏற்றதாகவும் இருக்கும்.

3. மாநிலங்கள் அவையில் மாநிலங்களுக்கு சமப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு எதிரான வாதங்கள் நேரு அறிக்கையிலும் வட்டமேசை மாநாட்டிலும் தெரிவிக்கப்பட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இணைப்பாட்சியின் உறுப்புகளின் அளவிலும் மக்கள் தொகையிலும் மிகுந்த வேறுபாடு இருந்தது என்னும் காரணத்திற்காக சமப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை நேரு அறிக்கை ஆதரிக்கவில்லை. இந்தக் காரணத்திற்காகவே மற்ற இணைப்பாட்சிகளின் மேலவையில் சமப் பிரதிநிதித்துவத்துக்கு வகை செய்யப்பட்டுள்ளது என்று இந்தக் குழு கருதுகின்றது. மற்ற இணைப்பாட்சிகளின் மேலவை, மாநிலங்களின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறது. வட்ட மேசை மாநாட்டில், இந்த ஆலோசனை பொது மக்கள் கருத்துக்கு ஏற்றதாக இருக்காது என்று அச்சம் கொள்ளப்பட்டது. பல்வேறு அமைப்பு உறுப்புகளுக்கான தன்னாட்சி இந்த நாட்டில் முதலில் 1937-ல் தொடங்கப்பட்டது. 1947-ல் விடுதலை பெற்றதும், அமைப்பு உறுப்புகள் நிலையிலும் அதிகாரங்களிலும் உயர்வு பெற்றன. 1947-ம் ஆண்டிலிருந்து இணைப்பாட்சிக் கோட்பாடு செயலில் இருந்து வந்துள்ளது. மேலவையில் சமப்பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு எதிர்ப்பு யாதேனும் இருக்குமென அஞ்சுவதற்குக் காரணம் ஏதுமில்லை. மேலவை முன்பிருந்த சமஸ்தானங்களால் மூழ்கடிக்கப்பட்டு விடுவதை கிரான்வில் ஆஸ்டின் குறிப்பிட்டுள்ளார். இந்தக் காரணம் இப்போது மறைந்து விட்டது. எவ்வாறாயினும் இந்தக் கோட்பாட்டை மற்ற மாநிலங்களுடன் கலந்து ஆராய வேண்டியுள்ளது.

மேலவைக்கு 'மாநிலங்கள் அவை' எனப் பெயரிட்டிருப்பதே, இந்த அவையில் மாநிலங்களுக்கு சமப் பிரதிநிதித்துவமும் சம உரிமையும் இருந்தாக வேண்டும்

என்பதைக் காட்டுகிறது. ஆனால், இந்தக் கொள்கையை தள்ளிவிட்டிருப்பதனால், குறைந்த மக்கள் - தொகை கொண்ட மாநிலங்களின் ஆலோசனை கவனிக்கப்படாமல் போகலாம் என்றும் தேசியத் திட்டங்களையும் கொள்கை களையும் உருவாக்குவதில் தம்முடைய தேவைகள் புறக்கணிக் கப்படலாம் என்றும் இயல்பாகவே அச்சம் உண்டாக்கப் பட்டுள்ளது.

இப்போது மாநிலங்கள் சீரமைக்கப்பட்டுள்ளதனால், மாநிலங்களுக்கு சமப்பிரதிநிதித்துவம் வழங்கி மேலவையின் அளவை வரம்பிடுவது விரும்பத்தக்கதாகும். இதனால், கொள்கைகளை உருவாக்குவதில் மேலவை மிகவும் உறுதிப் பாடும், திறனும், பயனும் வாய்ந்த கருவியாக அமையும்.

4. மாநிலங்கள் அவை இணைப்பாட்சிக் கொள்கையை மட்டுமே கொண்டதாகக்கூட காணப்படவில்லை; ஏனெனில், இலக்கியம், அறிவியல், கலை, சமூகப் பணி ஆகியவற்றின் சார்பில் பன்னிரண்டு உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். இந்த அவைக்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படக்கூடாது என்பது எமது கருத்து.

மாநிலங்கள் அவை, தன்னுடைய பெயரின் பொருளுக் கேற்ப எல்லா மாநிலங்களிலிருந்தும் சமமான பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படை. இது அமெரிக்காவில் உள்ளது போல் இரண்டாக இருக்க வேண்டுமா அல்லது இரண்டுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டுமா என்பது வேறு விஷயம். ஒரு மாநிலத்துக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை அதன் மக்கள் தொகையோடு தொடர்பு படுத்துவதற்கு எவ்வித நியாயமும் இல்லை. மாநிலங்கள் மற்ற எல்லாத் துறைகளி லும் ஒன்றற்கொன்று சமமானவையாகும். மேலவையில் அவற்றுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதில் அவற்றுக் கிடையே வேறுபாடு செய்வதற்குக் காரணமில்லை. தற்போதுள்ள பகிர்மானத்தின்படி, மிகுந்த மக்கள் தொகை உடைய சிறு எண்ணிக்கையான மாநிலங்கள், பெரும்பான்மை மாநிலங்களுக்கு எதிராகத் தம் பக்கம் காரியத்தைச் சாதிக்க முடியும்—இது மக்களாட்சி முறைக்கு ஏற்றதன்று.

அவையானது மிகச் சிறு அளவினதாக இருப்பது மேல வைக்கு மிகுந்த கண்ணியம் அளிப்பதாகும்; மேலும், அது தன்னுடைய சீராய்வு அதிகாரங்களை மிகப் பொருத்தமாக வும் எச்சரிக்கையுடனும்கூட பயன்படுத்த இயலும்.

5. எல்லா இணைப்பாட்சி அரசமைப்புகளிலும், நமது நாட்டில் உள்ள மக்களவைக்கு ஒப்பான கீழவை, உறுப்புகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதாக உள்ளது. மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப அவற்றின் பிரதிநிதித்துவத்தைக் கால முறையில் சரிக்கட்டுவதற்கு அரசமைப்புச் சட்டங்கள் வகை செய்கின்றன. நமது நாட்டிலுங்கூட இதே ஏற்பாடு இருக்கின்றது. ஆனால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டச் செயல்களை நிறைவேற்றுவதன் காரணமாக நிலைமை இப்போது மாறியுள்ளது. தமிழ் நாடு உட்பட சில மாநிலங்கள் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முன்னணியில் இருந்து வந்துள்ளன. இதன் விளைவாக, இந்த மாநிலங்களினுடைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை கீழ் அவையில் குறைக்கப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டும் நிறைவேற்றுவதற்கு இது தடங்கலாக இருக்கக்கூடும். எனவே, இதன் காரணமாக சில மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளை ஈடு கட்டுவதற்கு யாதேனுமொரு விதிமுறையை உருவாக்க வேண்டியுள்ளது. 1951-ல் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கையைக் குறைக்கத்தகாத குறும எண்ணிக்கையாக அறுதி செய்தாக வேண்டும் என்னும் ஓர் ஆலோசனை கருதத் தக்கதாகும். அதாவது, அந்த ஆண்டில் அறுதியிடப்பட்ட எண்ணிக்கை மாற்றப்படாமல் இருந்தாக வேண்டும். அதே நேரத்தில், சில மாநிலங்களில், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான வாய்ப்பையும் மறுக்க முடியாது. மக்கள் தொகை பெருகியுள்ள இடத்தில், அதற்கு ஏற்ற வீதத்தில் உறுப்பினர் இடங்களும் கூடுதலாக்கப்படலாம். ஆனால், இங்கேயுங்கூட அரசமைப்புச் சட்டம், பெரும எண்ணிக்கையை அறுதியிட்டு அதற்குமேல் அதிகரிப்பு செய்யக்கூடாதென வகை செய்ய வேண்டும். மக்களவையில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் மேற்குறிப்பிட்ட அடிப்படையில் அறுதியிடப்படலாம் எனக் கருத்துரைக்கிறோம்.

அத்தியாயம் XIII

மொழி

மொழி குறித்த அரசமைப்புச் சட்ட வகையுரைகள், 120, 210-வது உறுப்புகளும் XVII-வது பாகமும் ஆகும். நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி பற்றி 120-வது உறுப்பு கூறுகிறது. 1968-ம் ஆண்டு 1-வது மையச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்டவாறு 1963-ம் ஆண்டு ஆட்சிமொழிகள் சட்டத்தின் (மையச் சட்டம் 19/1963), 3 (1) (ஆ) பிரிவு நாடாளுமன்றத்தில் அலுவல் நடத்துவதற்கு இந்தி மொழியுடன் ஆங்கிலத்தையும் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு வகை செய்கிறது. சட்ட மன்றங்களில் பயன்படுத்த வேண்டிய மொழி பற்றி 210-வது உறுப்பு குறிப்பிடுகிறது. இம்மாநிலத்தின் சட்ட மன்றத்தில் அலுவல் நடத்துவதற்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்காக வகையுரை செய்யப் பட்டது. 1964-ம் ஆண்டு தமிழ்நாடு சட்ட மன்ற (ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துதல்) சட்டத்தைக் (தமிழ்நாடு சட்டம் 38/1964) காண்க. அரசமைப்புச் சட்டத்தின் XVII-வது பாகம் நான்கு அத்தியாயங்கள் கொண்டது. I-வது அத்தியாயம் மைய அரசின் மொழி பற்றிக் குறிப்பிடுகிறது. மாநிலங்களின் ஆட்சி மொழிகள் குறித்தும் மற்றும் மாநிலத்திற்கும் மைய அரசிற்கும் அல்லது ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றுக்கும் இடையே நடைபெறும் கடிதப் போக்கு வரத்தில் பயன்படுத்தும் மொழி குறித்தும் அத்தியாயம் II குறிப்பிடுகிறது. அத்தியாயம் III உச்ச நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றங் களிலும் பயன்படுத்தும் மொழி பற்றியும் சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களில் பயன்படுத்தப்படும் மொழி பற்றியும் குறிப்பிடுகிறது. அத்தியாயம் IV-ல் சிறப்புக் கட்டளைகள் அடங்கியுள்ளன.

'இந்திய அரசமைப்புச் சட்டமுறை' என்ற நூலில் திரு எச். எம். சீர்வை கீழ்க்கண்டவாறு குறிப்பிடு கிறார்:—

''மொழி குறித்த நமது அரசமைப்புச் சட்டவகை யுரைகள் கடுமையான சட்டச் சிக்கல்களை உருவாக்கவில்லை;

ஆனால் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு நிலவும் கடும் அரசியல் சிக்கல்களை உருவாக்கியுள்ளன''. கிரான்வில் ஆஸ்டின் அவர்களுடைய ''இந்திய அரசமைப்புச் சட்டம்— தேசத்தின் மூல அமைப்பு'' என்ற நூலில் ''மொழியும் அரசமைப்புச் சட்டமும்—ஓரளவே மனநிறைவளித்த உடன்பாடு'' என்ற தலைப்பின்கீழ் மொழி குறித்த அத்தியாயத்தை நோக்குமாறு இக்கற்றறிந்த ஆசிரியர் நமது கருத்தை ஈர்க்கிறார். திரு சீர்வை குறிப்பிட்டுள்ளது போன்று ஆஸ்டின், 'செயற்பாட்டிலுள்ள சக்திகள் குறித்து நன்கு விவரிக்கப்பட்ட தெளிவான விவரத்தை' அளித்துள்ளார். அரசமைப்புச் சட்டத்தில் மொழி சம்பந்தப்பட்ட சிக்கல் குறித்தும் அதைத் தீர்க்க அதில் கண்டுள்ள வழிகள் குறித்தும் ஆஸ்டின் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:—

''இந்தியாவின் பிரச்சினை, தேசீய முக்கியத்துவம் அற்ற வட்டார மனப்பாங்கு கொண்டதாகவும் தேசீய அளவிற்கு எட்டாத வட்டாரப் போட்டியுணர்ச்சி கொண்டதாகவும் இருந்துவந்துள்ளது; இருந்தும் வருகிறது. இவற்றினால் மொழிவாரிப் போட்டிகள் ஏற்படுகின்றன. பேரவையில் இப்போட்டிகள், இப்போது அவற்றிற்குள்ள விகிதாச்சாரத்தையோ இன்று மேற்கொண்டுள்ள பல வேடங்களையோ அடையவில்லை; இந்தி பேசுவோரின் வட்டாரத் தன்மையுள்ள பகுதியினரின் மொழி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பாகவே அவை வெளிப்படுத்தப்பட்டன. இந்தி பேசும் பகுதியினரின் பிரதிநிதிகள் தீவிரவாதிகளாக இருந்தனர். அரசமைப்புச் சட்டத்தில் மொழி சம்பந்தமான வகையுரைகள் அத்தகைய நிலையைச் சரிப்படுத்த இந்திய நாட்டிற்கேற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கென அந்நாட்டு மொழியே தேசீய மொழியாக இருக்க வேண்டுமென்று பேரவையினர் நம்பினர். இந்தி அல்லது இந்துஸ்தானி; மிகத் தகுதியுள்ளதாக இருந்தது. எனவே, அது தேசீய மொழியாக்கப்பட்டது. இருப்பினும் நடைமுறையில் இந்தி தேசீய மொழியாயிருப்பது இயலாததாகும். ஏனெனில் தேசீய மட்டத்தில் பயன்பட்டு வரும் ஒரே மொழி ஆங்கிலம் ஆகும். மேலும், மற்ற மாநிலங்கள் இந்தி மொழி புகுத்தப்படுவதைக்கண்டு அஞ்சின. தத்தம் மொழிகளில் அவை பெருமிதம் கொண்டிருந்தன. எனவே, தேசீய நோக்கம் என்னவென்பது பற்றி அரசமைப்புச் சட்டம் தெளிவாக்குகிறது. பின்னர்,

இந்த நோக்கம் எய்தப்படும் வரையிலும் மொழியடிப்படையில் நாடு எவ்வாறு இயங்கவேண்டுமென்பது குறித்து மெய்யான வழியில் உடன்பாட்டுக்கு வகை செய்கிறது. உறுப்பினர்களிடையே எழும் மிகச் சூடான விவாதங்கள் எடுத்துக் காட்டுவது போல் இதற்கும் மேலாக பேரவை எதுவும் செய்ய இயலவில்லை. இருப்பினும் மொழி குறித்த வகையுரைகள் வேண்டாத உடன்பாட்டுக்கு முயற்சியன்று ; அவற்றில் அதிக அளவில் சாதகமான கூறுகள் உள்ளன. அவையின் பெரும்பான்மையினர் இந்திய மொழிகள் பலவற்றையும் ஆங்கிலத்தையும் பயன்படுத்துவது தேசீய ஒருமைப்பாட்டுக்கும் தேசீய உணர்வு மேலோங்குவதற்கும் ஒத்துவரக்கூடியதாக நம்பினர் என்பது தெளிவாகிறது.''

2. இக்குழுவின் பணிவரையறைகளின்படி, நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொள்ளவேண்டுவதாகும். மாநிலங்கள் அவற்றின் சம்பந்தப்பட்ட ஆட்சிப் பகுதிகளுக்குள் அவை ஆட்சி முறைக்குப் பயன்படுத்தும் மொழிகள் பற்றி இக்குழு கருத்தறிவிக்கவில்லை. மைய அரசுத் தலைமைச் செயலகம் உட்பட மைய அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்படவேண்டிய மொழி குறித்தும் மைய அரசு மாநிலங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய மொழி குறித்தும் உச்ச நீதிமன்றத்திலும் உயர் நீதி மன்றங்களிலும் பயன்படுத்த வேண்டிய மொழி குறித்தும் நாடாளுமன்ற மசோதாக்களிலும் சட்டங்களிலும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி குறித்தும் இக்குழு ஆராயவேண்டியுள்ளது. 1968-ம் ஆண்டு 1-வது மையச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள 1963-ம் ஆண்டு 19-வது மையச் சட்டத்தின் 3-வது பிரிவு, மைய அரசின் ஆட்சி முறைக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி குறித்து விரிவான வகையுரைகளைச் செய்கிறது. அந்தப் பிரிவின்படி மைய அரசின் அலுவல்களுக்கு ஆங்கிலத்தையும் பயன்படுத்தலாம். மைய அரசுக்கும் இந்தி பேசாத மாநிலத்திற்குமிடையே கடிதத் தொடர்புக்கு ஆங்கில மொழி பயன்படுத்தப்படவேண்டுமென்றும் அது வகை செய்கிறது. இந்தி பேசப்படும் மாநிலத்திற்கும் இந்தி பேசாத மாநிலத்திற்கும் இடையே கடிதத் தொடர்பு கொள்ளும் காரியத்திற்கு இந்தி பயன்படுத்தப்பட்டால் இந்திக் கடிதத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இருக்க வேண்டும். மைய அரசின் ஓர் அமைச்சு அல்லது துறை

அல்லது அலுவலகத்திற்கும் அல்லது மைய அரசின் கட்டுப் பாட்டின் கீழுள்ள கார்ப்பரேஷன் அல்லது கம்பெனிக்கும் மற்றென்றுக்குமிடையே கடிதத் தொடர்புக்கு இந்தி அல்லது ஆங்கில மொழி பயன்படுத்தப்பட்டால் அக்கடிதத்தின் மொழிபெயர்ப்பு மற்ற மொழியிலும் இருக்க வகை செய்யப் படவேண்டும். பொதுமக்கள் ஆர்வம் காட்டும் மைய அரசு இயற்றும் அல்லது பிறப்பித்த விதிகளுக்கு இந்தியும் ஆங்கில மொழியும் பயன்படுத்தப்படவேண்டுமென்று இச்சட்டம் கோருகிறது. மேற்சொன்ன காரியங்களுக்கு ஆங்கில மொழி பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படுவதற்கான தீர் மானங்கள் இந்தி பேசப்படாத எல்லா மாநிலங்களின் சட்ட மன்றங்களிலும் நிறைவேற்றப்படும் வரையில் இந்த வகை யுரைகள் செயலில் இருக்கும்.

3. நாடாளுமன்றச் சட்டம் ஒன்றினல் மட்டுமே ஆங்கிலம் துணை மொழியாகத் தொடர்ந்து உள்ளதென்பதும் 1963-ம் ஆண்டுச் சட்டத்தின் வகையுரைகளைக் குறைந்த அளவு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றம் மற்ருெரு சட்டத் தால் நீக்கிவிட முடியுமென்பதும் அறியப்படும். துறை களுக்கிடையே நடக்கும் கடிதப் போக்குவரத்தில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுமிடங்களில் மொழி பெயர்ப்பு அளிப்பது சம்பந்தப்பட்ட வகையுரை, ஆங்கிலத்தைப் பயன்படுத்து பவர் இந்தியிலும் போதிய அறிவு பெற்றிருக்கவேண்டு மென்பதையே காட்டுகிறது. எட்டாவது இணைப்பட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டார மொழிகளில் இந்தியும் ஒன்ருகும். பிற வட்டார மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மைய அரசின் ஒரே ஆட்சிமொழியாகப் பயன் படுத்தப்படுவதற்கு இந்தி மட்டுமே தகுதியுடையதென்று கூற இயலாது. இது குறித்து ஆஸ்டின் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்:—

"இந்துஸ்தானி, பொதுமக்களால் பேசப்படும் மொழியாயிருக்கலாம்; ஆனுல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அரசியல் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு இது போதுமான வளர்ச்சி பெற்றுள்ளதா? வங்காளி மொழியும் தமிழும் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளன; நவீன வளர்ச்சி மிக்க நாட்டின் தேவைகளைச் சீராகச் சரி செய்யுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளன; இருப்பினும், இக்காரியங்களுக்கு இந்த இரண்டு மொழிகளும்கூடப் போதுமான அளவு வளர்ச்சிபெறவில்லை........"

அரசமைப்புச் சட்டத்திலுள்ள எந்த வகையுரையும் மொழி சம்பந்தப்பட்ட வகையுரைகள் போல் அத்தகைய சூடான வாக்குவாதத்தை உருவாக்கவில்லையென்பது வரலாரறிந்ததாகும். மாநிலங்கள் இது குறித்துக் கருத்தை வலியுறுத்த இயலாத சமயத்தில் இந்த வகையுரைகள் இயற்றப்பட்டன. மொழிவாரி மாநிலங்கள் தோற்ற மெடுத்து அவை மேலோங்கிய பின்னர், நாட்டின் ஒருமைப் பாடு வலிவாக்கப்படவேண்டுமானல் மொழி குறித்து அரசமைப்புச் சட்டத்திலுள்ள வகையுரைகளை மறு ஆய்வு செய்வது அவசியமாகும்.

4. அரசமைப்புச் சட்ட நுட்பங்களை அறிந்த வழக்கறிஞர்கள் நமது அரசமைப்புச் சட்டவகையுரைகளை விஞ்ஞான ரீதியில் பகுத்தாய்ந்து அதற்கு எவ்வாறு பொருள்கூறினும், அரசமைப்புச் சட்டம் அடிப்படையில் இணைப்பாட்சி கொண்டதாகுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இந்த அறிக்கையின் முன்னைய அத்தியாயத்தில் இந்த விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட 15 மொழிகள் கொண்ட (துளு போன்று நமது நாட்டில் பேசப்பட்டுவரும் பிற மொழிகள் இதில் சேர்க்கப்படவில்லை) இப்பரந்த இணைப்பாட்சி அமைப்பில் பல மொழி பேசுவோரின் ஒப்புதலுடன் ஏதேனுமொரு திட்டத்தை வகுப்பது வேண்டற்பாலதாகும். வெளிநாட்டு அரசமைப்புகள் சிலவற்றில் மொழி சம்பந்தப்பட்ட வகையுரைகள் குறித்து இங்கு நாட்டம் செலுத்துவது பொருத்தமுடையதாகும்; இந்த நாட்டிலுள்ளதுபோன்ற அதே சிக்கல்களை அந்த நாடுகளும் தீர்க்கவேண்டியிருந்தன. கனடா நாடாளுமன்றத்தில் நடக்கும் விவாதங்களிலும் கனடாவின் நீதிமன்றம் எதிலும் வழக்காடுதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளல் அல்லது தீர்ப்பளித்தல் காரியங்களிலும் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழி பயன்படுத்தப்படுவதற்கு 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் 133-வது பிரிவு வகைசெய்கிறது. கனடா நாடாளுமன்றத்தின் சட்டங்கள் இந்த இரண்டு மொழிகளிலுமே அச்சிடப்பட்டு வெளியிடப்படவேண்டும். கூட்டரசின் ஆட்சிமொழிகளாக ஜெர்மென், பிரெஞ்சு, இத்தாலிய மொழிகள் இருக்கவேண்டுமென்றும் இந்த மூன்று மொழிகளும் ரோமஞ்சி (Romanche) மொழியும் நாட்டின் தேசிய மொழிகளாக இருக்கவேண்டுமென்றும் சுவிட்சர்லாந்து அரசமைப்புச் சட்டத்தின் 116-வது உறுப்பு கூறுகிறது. 1909-ம் ஆண்டு

தென் ஆப்பிரிக்கச் சட்டம் ஒற்றையாட்சி அரசமைப்பை நிறுவினாலும் அச்சட்டத்தின் 137-வது பிரிவு அந்த ஒன்றியத்தின் ஆட்சி மொழிகளாக ஆங்கிலமும் டச்சு மொழியும் இருக்கவேண்டுமென்று வகைசெய்கிறது. இம்மொழிகள் சமஉரிமையும் சுதந்திரமும் சலுகைகளும் பெற்று சமமான தகுதிப்பாட்டுடன் பயன்படவேண்டுமென்றும் வகை செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் எல்லாப் பதிவேடுகளும் இதழ்களும் நடவடிக்கைகளும் இந்த இரண்டு மொழிகளிலும் இருக்கவேண்டுமென்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த அல்லது பொது ஆர்வம் மிக்க மைய அரசின் மசோதாக்கள், சட்டங்கள், அறிவிப்புகள் யாவும் இரண்டு மொழிகளிலும் இருக்கவேண்டும் என்றும் இந்தப் பிரிவு கூறுகிறது.

5. அரசமைப்புச்சட்டத்தின் எட்டாவது இணைப்பட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளையும் மைய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிப்பதில் எதிர்நோக்கக்கூடிய நிர்வாக இடர்ப்பாடுகளையும் பிறவகை இடர்ப்பாடுகளையும் உணர்கின்றோம். அரசமைப்புச் சட்டத்தில் தற்போது வகை செய்யப்பட்டுள்ளவாறு ஏதேனுமொரு மொழியை ஆட்சி மொழியாக அறிவிப்பதும் விரும்பத்தக்கதாகாது. எல்லாக் காரியங்களுக்கும் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக வைத்திருப்பதற்கு எதிராகச் சொல்லப்படும் வாதம், ஆங்கிலம் இந்நாட்டை ஆண்ட பிரிட்டிஷாரின் தாய்மொழி என்பதுதான். ஆஸ்டின் குறிப்பிட்டுள்ளதுபோல், அரசமைப்புச் சட்டமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள், 'இந்தியமொழிகள் பலவற்றையும், ஆங்கிலத்தையும் பயன்படுத்துவது தேசிய ஒருமைப்பாட்டுக்கும் தேசிய உணர்வு மேலோங்குவதற்கும் ஒத்துவரக்கூடியதாக' நம்பினர்.

மாநிலங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளே நாடாளுமன்றத்தில் உள்ளனர்; இம்மாநிலங்களின் ஆட்சி மொழிகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. எனவே, ஆங்கிலத்திலோ அல்லது அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப்பட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு மொழியிலோ அவையில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவது அவசியமாகும். மைய அரசின் ஆட்சி மொழியைப் பொறுத்தவரையில், ஆங்கில மொழியைத் தொடர்ந்து வைத்திருப்பது தவிர வேறு மாற்று இல்லையென்று அச்சம் கொள்கிறோம்.

இது போன்றே, மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும். இது, கால வரையறையின்றி இருக்கவேண்டியதில்லை. 1963-ம் ஆண்டுச் சட்டம் அவசியமான வழிமுறைகளை அளிக்கிறது. அச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள உறுதிமொழிகள், தக்க மாற்றங்களுடன் அரசமைப்புச் சட்டத்திலேயே சேர்க்கப்படவேண்டுமென்பதே இப்போது செய்யத்தக்கதாகும்.

6. அரசமைப்புச் சட்டத்தால் உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் காப்பாளர்களாக உயர்நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் செயல்படுவதுடன் தனிப்பட்டவர்களின் நடவடிக்கை சம்பந்தமாக மட்டுமன்றி, மைய-மாநில அரசுகள், சட்ட மன்றங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் சம்பந்தமாகவும் சட்ட விதிமுறையைச் செயற்படுத்தும் முக்கியப் பணியையும் மேற்கொண்டுள்ளன. உச்ச நீதிமன்றம் சம்பந்தமாக எங்கள் பரிந்துரைகளில், சாதாரண உரிமையியல், குற்றவியல் வழக்குகளில் உயர்நீதி மன்றங்கள் அளித்த தீர்ப்புகளின் மீது உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்துகொள்வதற்கான வகையுரைகள் நீக்கப்படவேண்டுமென்றும் அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் சம்பந்தமான வழக்குகளில் மட்டும் உயர்நீதி மன்றம் அளிக்கும் தீர்ப்பிற்கு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாமெனவும் கருத்தறிவித்திருந்தோம். இத்துடன், மாநிலங்களுக்கு இடையிலான தகராறுகளையும் ஒரு மாநிலத்திற்கு அல்லது மாநிலங்களுக்கும் மைய அரசுக்கும் இடையிலான தகராறுகளையும் உச்ச நீதிமன்றம் தொடர்ந்து கையாண்டுவரும். நீதி நிர்வாகத்தில் ஒரு சீரான தன்மை நிர்வகிக்கப்படவேண்டுமானால், உயர்நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் மொழி ஒரே மொழியாக இருப்பது இன்றியமையாததாகும். இந்த நோக்கத்தில், உச்ச நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் ஆங்கிலமே தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கருத்தறிவிப்பது தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

7. இப்போது நாம் மசோதாக்களையும், சட்டங்களையும் எடுத்துக்கொள்ளலாம். 348-வது உறுப்பின்படி, மைய அல்லது மாநில மசோதாக்களும், சட்டங்களும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். வேறுவகையில் வகைசெய்ய நாடாளு மன்றத்துக்கான அதிகாரத்திற்கு இவ்வகையுரை உட்பட்ட

தாகும். இந்த உறுப்பின் (3)-வது பகுப்பு, ஒரு மாநிலத்தின் மசோதாக்களிலும், சட்டங்களிலும் பயன்படுத்தப்படும் மொழியை வரையறுக்க அம் மாநிலச் சட்டமன்றத்திற்கு உரிமையுண்டென்று கருத்தறிவிப்பதாகத் தெரிகிறது. 348-வது உறுப்பின் (1)-வது பகுப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த இதுவரையில் நாடாளுமன்றம் முனையவில்லை. குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒரு மையச் சட்டத்தின் இந்தி மொழி பெயர்ப்பு இந்தியில் அதிகாரபூர்வமான சட்டமாகக் கருதப் படவேண்டுமென்று 1963-ம் ஆண்டு 19-வது மையச் சட்டத் தின் 5-வது பிரிவு குறிப்பிடுகிறது. இம்மாநிலத்தில், 1956-ம் ஆண்டு தமிழ் நாடு ஆட்சிமொழிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 39/1956), இம்மாநிலத்தின் ஆட்சிமொழி தமிழாகுமென்று அறிவிக்கிறது. இச்சட்டத்தின்கீழ் அவ்வப் போது வெளியிடப்படும் அறிவிப்புகள் மூலம் மாநில அரசின் கீழுள்ள பல்வேறு நிர்வாக அலுவலகங்களில் தமிழ் படிப்படி யாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. மாநில அரசு குறிப் பிடக்கூடிய ஒரு நாளன்றும் அது முதற்கொண்டும் மசோதாக்களிலும் சட்டங்களிலும் தமிழைப் பயன்படுத்த 1956-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் 5-வது பிரிவு வகை செய்கிறது. இப்பிரிவின்கீழ் இதுவரையில் அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. இம் மாநிலத்தின் மசோதாக் களும் சட்டங்களும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப் பட்டு வருகின்றன. உயர் நீதிமன்றங்களிலும் உச்ச நீதி மன்றத்திலும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டுமானல் மசோதாக்களிலும், சட்டங்களிலும் பயன் படுத்த வட்டாரமொழி ஒன்றினை மேற்கொள்ளும் மாநிலங்கள் அவற்றின் சட்டங்கள், மசோதாக்கள் ஆகியவற்றின் அதிகார பூர்வமான பிரதிகள் ஆங்கிலத்தில் தொடர்ந்து கிடைக்க வகை செய்ய வேண்டும். 348-வது உறுப்பின் (3)-வது பகுப்பில் இது குறித்து அவசியமான வகையுரை அடங்கியுள்ளது.

8. பல்வேறு மாநிலங்களின் ஆட்சி மொழிகள் குறித்து இக்குழு கருத்தறிவிப்பதற்கில்லை என்று ஏற்கனவே தெரிவித்துள்ளோம். மாநிலங்களிலுள்ள மைய அரசின் அலுவலகங்கள் குறித்தே கருத்தறிவிக்கக் கடமைப்பட் டுள்ளோம். இந்த அலுவலகங்களுக்குப் பொது மக்கள் நாளும் வந்து போகின்றனர். பல மாநிலங்கள் அவற்றின் வட்டார மொழிகளையே ஆட்சிமொழிகளாகக் கொண் டுள்ளன. இம்மாநிலத்தில், மாநில அரசின் கீழுள்ள

அலுவலகங்களில் தமிழ் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றுக்கும் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே கடிதத் தொடர்புக்கு ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று கூறும்போது பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள மைய அரசு அலுவலகங் களில் பொது மக்களுடன் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைத் தொடர்ந்துபயன்படுத்துவதில் பெரிய சாதகமான நிலை இருப் பதாகத் தெரியவில்லை. (பல்வேறு மாநிலங்களிலுள்ள மைய அரசின் அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஆட்சி மொழிகளைப் பயன்படுத்தினால் நிர்வாக வசதியேற்படும் மேலும் இந்த ஏற்பாட்டினால் மைய அரசின் நிர்வாக இயந்திரத்திற்கு மிக நெருக்கமாக இருப்பதாக மக்கள் மனத்தில் பிணைப்பு ஏற்படும்; மாநில அளவிலுள்ள தங்கள் நிர்வாகத்தைப் போன்றே மைய அரசு நிர்வாகமும் தங்க ளுடையதென்று அவர்கள் உணரக்கூடும். பல மாநிலங்கள் அவற்றின் வட்டார மொழிகளை அவற்றின் ஆட்சிமொழி களாக மேற்கொண்டபின்னர் ஒரு மாநிலத்திலுள்ள மைய அரசு அலுவலகங்களுக்கும் அதே மாநிலத்தின் அரசுக்கும் அதன் அலுவலகங்களுக்குமிடையே நடைபெறும் எல்லாத் தொடர்புகளும் அம்மாநில ஆட்சி மொழியிலேயே இருப்பது அவசியம். ஒரு மாநிலத்தில் அமர்த்தப்பட்ட மைய அரசுப் பணியில் உள்ளவர்கள் அம்மாநில ஆட்சி மொழியை நன்கு அறிந்திருக்கவேண்டுமென்பது இதனால் அறியப்படுகிறது.

அத்தியாயம் XIV:

வர்த்தகமும் வாணிகமும்.

வர்த்தக, வாணிக உரிமை குறித்த அரசமைப்புச் சட்ட வகையுரைகள் XIII-வது பாகத்தில் அடங்கியுள்ளன. மாநிலங்கள் சம்பந்தப்பட்ட கோணத்தில் இவ்வகையுரைகளின் முக்கியத்துவம், குழுக்களிலும் அரசமைப்புச் சட்ட மன்றத்திலும் *இது குறித்து எழுந்த விவாதங்களிலிருந்து நன்கு புலனாகும். XIII-ம் பாகத்தின் வகையுரைகளின் சுருக்கத்தைக் கீழே காணலாம்:

நாடு முழுமையிலும் வர்த்தகமும், வாணிகமும் வாணிகப் போக்குவரத்துத் தொடர்பும் சுதந்திரமாக நடைபெற வேண்டும். பொதுநலனை முன்னிட்டு நாடாளுமன்றம் சுதந்திரமான வர்த்தகம், வாணிகம், வாணிகப்போக்கு வரத்துத் தொடர்பு இவற்றின்மீது தடைகள் விதிக்கலாம். ஆனால், சட்டமியற்றும் பட்டியல்கள் ஏதேனுமொன்றில் உள்ள வர்த்தகம், வாணிகம் சம்பந்தப்பட்ட ஒரு பதிவின் காரணத்தால் நாடாளுமன்றம், நாட்டின் ஏதேனுமொரு பகுதியில் பொருள்கள் பற்றுக்குறையால் ஏற்பட்ட நிலைமையைச் சரிக்கட்ட அவசியமேற்பட்டால் மட்டும் தவிர, மற்றொரு மாநிலத்திற்கில்லாத சலுகையை ஒரு மாநிலத்திற்கு அளிக்க இயலாது, அல்லது ஒரு மாநிலத்திற்கும் மற்றொன்றுக்குமிடையே வேறுபாடு எதுவும் காட்ட முடியாது. நாடாளுமன்றம் விதிக்கத் தகுதிபடைத்த கட்டுப்பாடுகள் நியாயமானவையாக இருந்தாகவேண்டுமென்ற அவசியமில்லையென்பது அறியப்படலாம். மாறாக, வர்த்தகம், வாணிகம் சம்பந்தப்பட்ட ஒரு பதிவின் காரணத்தால் மாநிலங்கள் சலுகை அளிக்கமுடியாது அல்லது வேறுபாடு காட்டமுடியாது. ஆனால், பொதுநலனை முன்னிட்டு, மாநிலங்கள், வர்த்தகம், வாணிக உரிமைமீது நியாயமான கட்டுப்பாடுகள் சட்டம் மூலம் விதிக்கலாம்; சம்பந்தப்பட்ட மசோதாவினைச் சட்டமன்றத்தில் முன்னுரைப்பதற்குக் குடியரசுத் தலைவர் முன் ஏற்பாணை அளித்திருந்தால் மட்டுமே அல்லது அதையடுத்து அம்மசோதா சட்டமன்றத்தில் நிறைவேறிய பின்னர் அதற்கு இசைவளித்தால் மட்டுமே அவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கமுடியும். மாநிலம் பிற

* இந்த விவாதங்களின் சுருக்கத்திற்கு இணைப்பு VIII-ஐக் காண்க.

மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வேறுபாடு காட்டாமல் வரிகள் விதிக்கலாம். அரசின் சார்பாக அல்லது அரசால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் சார்பாகத் தனியுரிமையை உருவாக்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரமும் மாநிலச் சட்டமன்றங்களின் அதிகாரமும் பாது காக்கப்பட்டிருக்கின்றன. 301 முதல் 304 வரையுள்ள உறுப்புகளின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக ஓர் ஆள்வையை நிறுவுவதற்கு நாடாளுமன்றத்துக்கு அதிகார முள்ளது.

2. நமது அரசமைப்புச் சட்டத்திலுள்ள வர்த்தகம், வாணிகம் சம்பந்தப்பட்ட வகையுரைகள், 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 297-வது பிரிவில் இருந்து தோன்றியவை. மேற்குறித்த 297-வது பிரிவு, ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்டத்தின் 92-வது பிரிவை அடிப்படையாகக் கொண்டதாகும். மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம், வாணிகம், பிற தொடர்பு ஆகியவை முழுச் சுதந்திர மாக இயங்க வேண்டுமென்று ஆஸ்திரேலிய அரச மைப்புச் சட்டத்தின் 92-வது பிரிவு குறிப்பிடுகிறது. 'ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்டம்' என்ற நூலில் நிக்கோலஸ், நமது அரசமைப்புச் சட்டத்தின் 301 முதல் 307 வரையிலான உறுப்புகள் குறித்துக் கீழ்க்கண்டவாறு கருத்துரைத்துள்ளார்.

"(அரசமைப்புச் சட்ட) வரைவாளர்கள், ஆஸ்தி ரேலிய நீதிமன்றங்கள், முதன்மை நீதிமன்றம் (Privy Council) இவற்றின் தீர்ப்புகளை நன்கு ஆராய்ந்து அந்தப் பிரிவை இந்திய நிலைமைகளுக்குப் பயன்படுத்துகையில் ஆஸ்திரேலிய முரண்பாட்டு நிலைகளை நீக்கிவிடமுனைந்துள்ளதாக தெரிகிறது. பிற வகையுரைகளுக்கு உட்பட்டு, இந்திய ஆட்சிப்பகுதி முழுமையிலும் வர்த்தகம், வாணிகம், பிற தொடர்பு ஆகியவை சுதந்திரமாக நடைபெறவேண்டுமென்று 301-வது பிரிவு வகை செய்கிறது—இப்பிரிவு காமன்வெல்த் அரச மைப்புச் சட்டத்தின் 1891-ம் ஆண்டு வரைவின் 92-வது பிரிவிற்கு ஒத்ததாக உள்ளது; மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்திற்கு மட்டும் வரையறை அமையவில்லை. பொது நலனிற்காக மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம் மீது கட்டுப்பாடுகள் விதிக்க 302-வது பிரிவு நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குகிறது. மைய அரசோ மாநில அரசோ சலுகை வழங்குவதை 303-வது பிரிவு தடுக்கிறது. 304-வது பிரிவு, வரிகளில் வேறுபாடு அமைதல் குறித்துக் கூறுகிறது."

'இந்திய அரசமைப்புச் சட்டமுறை' என்ற நூலில் திரு எச். எம். சீர்வை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

''குறைபாடாக வரைவு செய்யப்பட்ட காரணத்தால் நமது அரசமைப்புச் சட்டத்தின் XIII-வது பாகத்தினால் இடர்ப்பாடானதும் குழப்பமானதுமான சிக்கல்கள் எழுந்துள்ளன''.

ஆட்டோமொபைல் போக்குவரத்து (ராஜஸ்தான்) நிறுவனத்திற்கும் ராஜஸ்தான் அரசிற்கும் இடையே நடந்த வழக்கில் [(1963) 1 S.C.R 491] நீதிபதி தாஸ் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

''XIII-வது பாகத்திலுள்ள உறுப்புகளில் விதிவிலக்குக்குமேல் விதிவிலக்குகள் விரவியுள்ளதால் முற்றிலும் வாக்கிய அமைப்பின்படிக்கான பொருள் விளக்கம் அந்த உறுப்புகளின் மெய்யான பொருள் விளக்கத்தை வெளிப்படுத்தாது''.

XIII-வது பாகத்தின் பொருள் விளக்கத்தின் மீது உச்ச நீதி மன்றத்தின் முக்கியத் தீர்ப்புகளைப் பற்றிக் குறிப்பிட்ட பின்னர் திரு சீர்வை, கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறார்:—

''எனவே, சட்ட விளைவுகள் முரண்பாடான அடிப்படையைக் கொண்டிருக்கக்கூடாது என்றால், வர்த்தக, வாணிக சுதந்திரம் பற்றிய முழுப் பொருளும் மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்பது பணிவாகத் தெரிவிக்கப்படுகிறது''.

இந்த இடர்ப்பாட்டைத் திரு ஐவர் ஜென்னிங்ஸ் எதிர்பார்த்ததாகத் தோன்றுகிறது. ''இந்திய அரசமைப்பின் சில பண்புகள்'' என்ற புத்தகத்தில் அவர் XIII-வது பாகத்தைக் கீழ்க்கண்டவாறு விமர்சித்துள்ளார்:—

''ஆஸ்திரேலிய வழக்கறிஞர்களின் புதிய தலைமுறையினர், அவர்களின் அரசமைப்புச் சட்டத்தின் 92-வது பிரிவை விட்டொழிக்க விரும்புவர் ; இப்பிரிவு செயல்படுவதனால் ஏற்படும் நலனை விடத் தீமையே அதிகம் எனக் கருதுகின்றனர். இருபதாண்டுகளில், ஆஸ்திரேலிய வழக்கறிஞர்கள் அதனால் இடர்ப்பாடு என்னவென்று அறியமாட்டார்களென இந்திய வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டக்கூடும், சட்ட மன்றங்களை நம்பத் தயங்குவதோடு, விரிவான, பொதுவான வகையுரைகளுக்குப் பொருள் விளக்கம் செய்

வதன் மூலமாக நீதிமன்றங்கள் நீதிமுறையில் சட்டம் செய்ய முற்படுவதை அனுமதிக்கத் தயங்கும் அரசமைப்புச் சட்டத்தின் பெருங் குறைபாட்டினை, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் XIII-வது பாகம் வெளிப்படுத்துகிறது. அரச மைப்புச் சட்டமன்றத்தைத் தவிர் வேறு எந்த அமைப்பும் சட்டம் இயற்றுவதற்கு நம்பத்தக்கதல்லவென்றால், "இந்தியாவின் சட்டங்களை எவரும் மாற்றக்கூடாது" என்று ஒரே பகுப்பு கொண்ட அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதன் மூலம் சட்டங்களை ஒரே மூச்சில் ஏன் இயற்றக் கூடாது?"

3. வர்த்தகம், வாணிகம் குறித்து மாநிலங்கள் கொண்டுள்ள உரிமைகள், நாடாளுமன்றம் அல்லது மைய அரசின் தலையீட்டினின்றும் எவ்வாறு பாதுகாக்கப்படுவது என்பது குறித்தே இக்குழு பொறுப்புக் கொண்டுள்ளது. எந்த ஒரு தொழிலை வர்த்தகத்தை அல்லது அலுவலைச் செய்யவும் 19 (1) (எ) உறுப்பு தனிப்பட்ட குடிமக்களுக்கு உத்தரவாதமளிக்கிறது. அரசமைப்புச் சட்டத்தின் XIII-வது பாகம், தடையின்றிப் பொருள்களின் போக்கு வரத்து நடைபெறவும் உத்தரவாதமளிக்கிறது. இப்பாகத் தின் வகையுரைகளை ஏற்கனவே குறிப்பிட்டுள் ளோம். ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்டத்தின் 92-வது பிரிவு மாநிலங்களுக்கிடையில் வர்த்தகம் நடத்துவதற்கு உரிமையளிக்கிறது. ஆனால், மாநிலங்களுக்குள் நடைபெறும் வர்த்தகம் பற்றிக் குறிப்பிடவில்லை. மாநிலங்களுக்கிடையில் வர்த்தகமும் வாணிகமும் நடைபெறுவதன் மீது கட்டுப் பாடுகள் விதிப்பதற்கு 302-வது உறுப்பினால் நாடாளுமன்றத் திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அவ்வாறே இருக்கலாம். ஆனால் மாநிலங்களுக்குள் நடைபெறும் வர்த்தகம் வாணிகம் குறித்து நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிப்பதில் எக் காரணமும் இல்லை. ஒரு மாநிலத்திற்குள் வர்த்தகம், வாணிகம் நடத்துதல் என்பது ஒரு மாநிலத்தின் தனித்த அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும் (மாநில அதிகாரப் பட்டியலின் 26-வது பதிவு). மாநிலத்தின் இந்த அதிகாரம் பொது அதிகாரப் பட்டியலின் 33-வது பதிவிற்கு உட்பட்ட தாகும். சட்டமியற்று துறை சம்பந்தமாக எம்முடைய பரிவுரைகளில் 33-வது பதிவை பொது அதிகாரப் பட்டியலி லிருந்து மாநில அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று கருத்தறிவித்துள்ளோம். எனவே, மாநிலத் திற்குள் நடைபெறும் வர்த்தகம், வாணிகம் பற்றிக் குறிப்பிடு

கத்தை நீக்கும் வகையிலும் மாநிலங்களுக்கு இடையில் நடைபெறும் வர்த்தகமும் வாணிகமும் பற்றி மட்டும் குறிப்பிடும் வகையிலும் 302-வது உறுப்பு திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கிறோம்.

4. 302-வது உறுப்பு சம்பந்தமாகக் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு அம்சம் அந்த உறுப்பின்கீழ் நாடாளுமன்றம் விதிக்கத் தகுதியுள்ள வரையறைகளின் தன்மை பற்றியதாகும். இந்த வரையறைகள் நியாயமானவையாய் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை என்று முன்பே குறிப்பிட்டுள்ளோம். 304 (ஆ) உறுப்பின்கீழ் ஒரு மாநிலச் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட வரையறைகளின் நியாயத் தன்மை குறித்து நீதிமன்றங்கள் ஆராயலாம். ஆனால், நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டம் பொது நலனை முன்னிட்டு இருப்பதாக நீதிமன்றம் திருப்தி அடைந்தால், 302-வது உறுப்பின்கீழ் நாடாளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரையறைகளின் நியாயத் தன்மையை நீதிமன்றம் விசாரணை செய்யும் வினாவிற்கு இடமில்லை என்பது 302-வது உறுப்பையும், 304 (ஆ) உறுப்பையும் ஒப்பிட்டுப்பார்ப்பதால் தெரிய வருகிறது. அத்தகைய வரையறைகளில் மெய்ப்படுத்தக்கூடிய அல்லது நடைமுறையில் காணக்கூடிய நியாயத் தன்மை இல்லை என்ற காரணத்தால் நீதி மன்றங்களின் தலையீட்டிலிருந்து நாடாளுமன்றம் விடுபட்டுள்ளது. அரசமைப்புச் சட்டம் வகுக்கப்பட்ட நேரத்தில் நாடாளுமன்றத்தினிடம் கட்டுப்பாட்டுக்குட்படாத அத்தகைய அதிகாரத்தை நிலைபெறச் செய்ததற்கு நியாயம் என்னவாக இருந்தபோதிலும், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எதிர்நோக்கியபடி மாநிலத் தன்மை வளர்ந்து இணைப்பாட்சி முறை வலுவடைந்த இந்நிலையில் மாநிலச் சட்டமன்றங்கள் 304 (ஆ) உறுப்பின்கீழ் அதிகாரத்தை செலுத்துகையில் உள்ள நிலைபோல் 302-வது உறுப்பின்கீழ் நாடாளுமன்றத்தால் விதிக்கப்படக்கூடிய வரையறைகளும் நியாயமானவையாக இருக்கவேண்டுமென இக்குழு கருதுகிறது. வர்த்தகமும் வாணிகமும் நடத்துவதற்கான உரிமை அடிப்படை உரிமையாகும்; தொடக்க நிலையில் இந்த வகையுரை அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டது ; பின்னர் தான் அந்த வகையுரை தனி அத்தியாயத்திற்கு மாற்றப்பட்டது. 19-வது உறுப்பில் குறிக்கப்பட்டுள்ள ஏழு உரிமைகளும் நாடாளுமன்றத்தாலும் சட்டமன்றங்களாலும் வரையறை விதிக்கப்பட உட்பட்டதாகும். ஆனால், அத்தகைய வரையறைகள் நாடாளுமன்றத்

தால்விதிக்கப்பட்டாலும் மாநிலச் சட்டமன்றத்தால் விதிக் பட்டாலும் 19 (2) முதல் (6) வரையுள்ள உறுப்பின்கீழ் நியாயமானவையாய் இருக்கவேண்டும். 302-வது உறுப்பில் ''நியாயமான'' என்ற வார்த்தை ''வரையறைகள்'' என்ற வார்த்தைக்குமுன் சேர்க்கப்படவேண்டும். 303 (2) உறுப்பு பற்றுக்குறை நிலைமைகள் பற்றி நடவடிக்கை எடுக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. மாநிலங்களின் நலன்களைப் பாதிக்கின்ற ஒரு மசோதா நாடாளுமன்றத்தில் அம்மசோதா கொண்டுவரப்படுவதற்கு முன்பு மாநிலங்க ளிடை உறவு மன்றத்தின் கருத்து பெறப்படவேண்டு மென்றும் அவ்வாறு கொண்டுவரப்படும் சமயத்தில் நாடாளு மன்றத்தில் அக்கருத்து வைக்கப்படவேண்டுமென்றும் இந்த அறிக்கையில் மற்றோர் இடத்தில் கருத்தறிவித்துள்ளோம். இந்நோக்கத்தில், 303-வது பிரிவு மாற்றியமைக்கப்பட வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

5. 304-வது உறுப்பு இயல்விக்கும் வகையுரையாகும் இந்த உறுப்பின்கீழ் விதிக்கத்தக்க வரிகள் வேறுபாடுள்ளவை யாக இருக்கக்கூடாது. மாநிலச் சட்ட மன்றம் விதிக்கும் வரையரைகள் நியாயமானவையாகவும் பொதுநலனை முன் னிட்டும் இருக்கவேண்டும். வர்த்தகம், வாணிகம் நடத்தும் உரிமையைக் கட்டுப்படுத்த விதிக்கும் வரையறை சம்பந்தப் பட்ட மசோதா அல்லது திருத்தம் சட்டமன்றத்தில் முன் னுரைக்கப்படுவதற்கு அல்லது கொண்டுவரப்படுவதற்கு முன்னர் குடியரசுத் தலைவரின் முன்ஏற்பாணை பெற் றிருக்க வேண்டுமென்று இந்த உறுப்பிற்கான வரம்புரை கோருகிறது. மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம், வாணிகம் குறித்து விதிக்கப்படக்கூடிய வரையறைகள் சம்பந்தமாக அத்தகைய முன்ஏற்பாணை அவசியமென்ப துடன் ஒரு மாநிலத்தின் எல்லைகளுக்குள் வர்த்தக நட வடிக்கைகளை முறைப்படுத்த அல்லது கட்டுப்படுத்தவும் முன் ஏற்பாணை தேவையென்பதை இதன் மூலம் அறியலாம். சட் டமியற்று அதிகாரங்களின் பகிர்வு சம்பந்தமாக, சட்டமன் றங்களால் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஆலோச னைக்கும் இசைவுக்கும் மசோதாக்கள் ஒதுக்கப்படுவது குறித்து அரசமைப்புச் சட்டத்திலுள்ள எல்லா வகையுரைகளும் [288(2) உறுப்பு நீங்கலாக] முழுமையும் நீக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளோம். வர்த்தக வாணிக உரிமைமீது, சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தினால் விதிக்கப்பட்ட வரையறைகள் நியாயமானவையா, 304 (ஆ) உறுப்பின் காரியங்களுக்காக

அவை பொது நலனிற்கு ஏற்றவையா என்ற வினுக்களை உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியதாகும். இந்த வரையறைகள் நியாயமற்றவையாக அல்லது பொது நலனிற்கு மாறுனவையாக நீதிமன்றம் கண்டறிந்தால் குடியரசுத் தலைவரின் முன்ஏற்பாணை அல்லது அவர் பின்னர் அளித்த இசைவு, இக் குறைபாட்டைப் போக்க இயலாது. இச்சட்டம் பிறவகையில் செல்திறனுகவும் இந்த வகையுரைகள் நியாயமானவையாகவும் பொது நலனிற்கு ஏற்றனவாகவும் இருந்தால் அவரது முன்ஏற்பாணை மிகைப்பட்டதாகும். எந்த வகையிலும், குடியரசுத் தலைவரின் முன்ஏற்பாணை பெறவேண்டுமென்று கோருவது, மாநிலச் சட்டமன்றங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத் துறையை நேரடியாக ஆக்கிரமிப்பதாக உள்ளது. எனவே, 304-வது உறுப்பிற்கான வரம்புரை நீக்கப்படவேண்டுமென்று பரிந்துரைக்கிறோம்.

6. 305-வது உறுப்பு, காப்பு வகையுரையாகவுள்ளது; இதற்கு மாற்றம் தேவையில்லை.

7. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தக ஆணைக்குழு போன்ற ஆள்வை ஒன்றினை நியமிப்பது குறித்து 307-வது உறுப்பு குறிப்பிடுகிறது. இந்த ஆள்வையை நியமிப்பது, நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். இந்த உறுப்பில் எதிர்நோக்கியுள்ள எந்த ஆள்வையும் இதுவரையில் நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாநிலங்களிடை உறவு மன்றம் ஒன்றனை அமைப்பதற்கான எங்கள் கருத்துரையையொட்டி, இந்த உறுப்பில் எதிர்நோக்கப்பட்ட ஆள்வையை அமைப்பதில் குறிப்பிடத்தக்க நன்மை எதுவும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

அத்தியாயம் XV.

பொது ஒழுங்கமைதி

பொது ஒழுங்கமைதி என்பது, மாநில அதிகாரப் பட்டியலில் 1-வது பதிவில் குறிப்பிட்டுள்ள விதி விலக்குக்கு உட்பட்டு, மாநில அதிகார வரம்புக்குள் வருகிறது. இப்போதெல்லாம் ஒரு சில மாநிலங்களில் சட்டமும், ஒழுங்கும் பற்றிய துறையில் மைய அரசும், மாநில அரசுகளும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற நேர்வுகள் பல நிகழ்ந்துவருகின்றன. ஒரு மாநிலத்தில் அமைதியையும் சமாதானத்தையும் பேணிக் காப்பதற்கு அரசுக்கு முதன்மையாகத் தேவைப்படும் சாதனம் காவற்படையாகும். ''ரயில்வே மற்றும் கிராமக் காவல் உட்பட காவலர் '' என்பது மாநில விஷயமாகும். மாநிலத்துக்குள்ளேயே ஒழுங்கமைதியைப் பேணிக்காப்பது குறித்து மாநிலங்களுக்கும் மையத்துக்கும் இடையே ஏற்படும் தகராறு, சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அனுமதி இல்லாமலும் அல்லது அதைக் கலந்துகொள்ளாமலும் மற்றும் சில நேர்வுகளில் மாநில அரசின் விருப்பத்திற்கு மாருகவும் மைய அரசு ரிசர்வ் காவற்படையினரை நிறுத்திவைப்பது குறித்து எழுகிறது. ஒரு மாநிலத்திற்குள் சட்டத்தையும், ஒழுங்கமைதியையும் பேணிக்காப்பதற்கு மைய அரசு ரிசர்வ் காவற்படையை எந்த அளவுக்கு மைய அரசு பயன்படுத்தலாம் என்னும் பிரச்சினை ஆய்வுக்குரியது என இக்குழு கருதுகிறது.

2. மைய அரசு ரிசர்வ் காவற்படை மைய அரசால் அமைக்கப்பட்டு பேணிவரப்படுகிறது. அதன் பெயரே குறிப்பிட்டுக்காட்டுவது போல, ராணுவப் படையினின்றும் தனித்தவொரு காவற்படையாக, பொதுஒழுங்கு அமைதியைப் பேணுகிற பொறுப்புடைய காவற்படையாகவே சாதாரண மனிதனுக்குத் தோன்றும். இதில் இரு கருத்துகள் ஆலோசித்தற்குரியவை. ஒன்று மைய அரசு ரிசர்வ் காவற்படை அமைக்கப்பட்டுச் செயல்படுகிற சட்டக் கோப்பு பற்றியது. மற்ருென்று இந்தப் படை மாநிலங்களின் அனுமதியின்றி மாநிலங்களிலேயே பயன்படுத்துவதில் மைய அரசின் அதிகாரப் பொருத்தம் அல்லது தகுதி பற்றியதாகும்.

3. சட்டக்கோப்பு பற்றி நாம் முதற்கண் ஆராயலாம். மைய அரசு ரிசர்வ் காவற்படையை அனுசரித்த சட்டம், 1949-ம் ஆண்டு மைய அரசு ரிசர்வ் காவற் படையினர் சட்டமாகும் (மையச் சட்டம் 66/1949). இச் சட்டத்தின் வரலாற்றுப் பின்னணி, சம்பந்தப்பட்ட மசோதா வுடன் இணைந்துள்ள காரண நோக்க விளக்கக் குறிப்பில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அக் குறிப்பு கீழ் வருமாறு:

* '' ராஜப்பிரதிநிதியின் காவற்படை' நெருக்கடி காலங் களில் சட்டம் ஒழுங்கமைதியைப் பேணிக் காப்பதற்கு இந்தியச் சமஸ்தானங்களுக்கு உதவிசெய்யும் ஒரு காவற் படையாக, முன்னுள் ராஜப்பிரதிநிதியால் திரட்டப்பட்டது. இப்படை (பிரிட்டிஷ் அரசின்) உயர்தனி அதிகாரம் முடிந்த பிறகும் மைய அரசு ரிசர்வ் காவற்படையாக நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டது.

காவற்படையை அமைத்து ஒழுங்குபடுத்துவதற்கு வகை செய்து 1937-ம் ஆண்டு வெளிநாட்டு (அதிகார வரம்பு) ஆணையின்கீழ் இயற்றப்பட்ட 1939-ம் ஆண்டு ராஜப் பிரதிநிதி காவற்படைச் சட்டம், 1947 ஆகஸ்டு 15-ம் நாள் முதற்கொண்டு செயல்படுவதனின்றும் அற்றுப்போயிற்று; ஆனால், அந்த நாளுக்குப் பிறகும் இந்தப் படையை வைத்து வருவதற்கு இந்திய அரசு எந்தச் சட்டமும் இயற்றவில்லை. உத்தேச மசோதாவின் நோக்கங்கள், 1939-ம் ஆண்டு பழைய ராஜப்பிரதிநிதிக் காவற்படைச் சட்டத்தை மாற்றியமைத்தும் அதற்குப் பதிலாக, மைய அரசு, மைய அரசு ரிசர்வ் காவற்படையொன்று அமைத்து, முறைப்படுத்துவதற்கு வகை செய்வதுமாகும். இம் மசோதாவின் காரியங்களுக்காக, இந்தப்படை, மாற்றி யமைத்துக் கொள்ளப்பட்ட 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியிலுள்ள I-வது அதிகாரப் பட்டியலின் 1-வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள 'டொமினியன் திரட்டிய அல்லது வைத்துவருகிற பிற ராணுவப் படை' என்னும் வகையின் கீழ் வருகிறது ''.

காரண நோக்க விளக்கக் குறிப்பிலிருந்து பின்வரும் கருத்துக்களை அறியலாம் :—

(1). 1947 ஆகஸ்டு 15-ம் நாளுக்குமுன், ராஜப் பிரதிநிதிக் காவற்படை அப்போதிருந்த ராஜப்பிரதிநிதியால் திரட்டப்பட்டது.

*1950 ஜனவரி 24-ம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் III-A பாகம், பக்கம் 136.

(2). அவசர நெருக்கடி காலங்களில் சட்டத்தையும் ஒழுங்கமைதியையும் நிலைநாட்டுவதற்கு இந்தியச் சமஸ்தானங்களுக்கு உதவியாகஇருக்கும்பொருட்டு ரிசர்வ்காவற்படையாக ராஜப்பிரதிநிதிக் காவல்படை அமைக்கப்பட்டது.

(3). 1937-ம் ஆண்டு இந்திய (வெளிநாட்டு அதிகார வரம்பு) ஆணையின்கீழ் இயற்றப்பட்ட 1939-ம் ஆண்டு ராஜப் பிரதிநிதிக் காவல்படைச் சட்டம் ராஜப் பிரதிநிதி காவற்படையை முறைப்படுத்தி வந்தது.

(4). 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் உயர்தனி அதிகாரம் முடிவடைந்ததும் 1939-ம் ஆண்டுச் சட்டம் செல்திறனற்றுப் போயிற்று.

(5). 1939-ம் ஆண்டுச் சட்டம் செல்திறனற்றுப் போயினும் ராஜப் பிரதிநிதிக் காவல்படை மைய அரசு ரிசர்வ் காவல் படையாக நிறுத்திக் கொள்ளப்பட்டது.

(6). 1947 ஆகஸ்டு 15-ம் நாளுக்குப் பிறகு, மைய அரசு ரிசர்வ் காவல்படையைப் பேணி வருவதற்குச் சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. 1939-ம் ஆண்டுச் சட்டத்தின் இடத்தை 1949-ம் ஆண்டுச் சட்டம் எடுத்துக் கொண்டது.

மேலே சொல்லிய 1937-ம் ஆண்டு மன்ற ஆணை (Order in Council) 1890-ம் ஆண்டு வெளிநாட்டு அதிகார வரம்புச் சட்டத்தின்படி, பிரிட்டிஷ் அரசால் இயற்றப்பட்டது என்று இங்குக் கூறுவது பொருத்தமுடையதாகும்.

4. 1890-ம் ஆண்டு பிரிட்டிஷ் சட்டத்திலிருந்தும் மன்ற ஆணையிலிருந்தும் இந்த ஆணை அப்போதிருந்த பிரிட்டிஷ் இந்தியாவிற்குச் சம்பந்தப்பட்டதில்லை என்பதும், இந்தியச் சமஸ்தானங்களுக்கு மட்டுமே இது பொருந்தியிருந்தது என்பதும் தெளிவாகத் தெரிய வரும். பிரிட்டிஷ் இந்தியாவில் அரசுத் தலைவர் என்னும் முறையில் பொறுப்புடைய ஆளுநர் தலைவரால் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதில்லை என்றும், இந்தியச் சமஸ்தானங்கள் மீது அதிகாரம் செலுத்துவதில் உச்ச அதிகாரமன்றமாகவுள்ள பிரிட்டிஷ் அரசால் இயற்றப்பட்டது என்றும் மேலும் தெளிவாகிறது. 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம், 1937 ஏப்ரல் 1-ம் நாளன்று தொடங்கும் முன்பு, ராஜப் பிரதிநிதி என்னும் அதிகாரி எவரும் இருந்திருக்கவில்லை ; ஆளுநர் தலைவர் தான் இந்தியச் சமஸ்தானங்களைப் பொறுத்த வரையில்

விரிவான அதிகாரங்களை உடையவராயிருந்தார். இந்திய சமஸ்தானங்களைத் தனியாகக் கவனிப்பதற்கென்று ராஜப் பிரதிநிதியொருவரை நியமிப்பதற்கு 1935-ம் ஆண்டுச் சட்டம் வகைசெய்தது. 1888-ம் ஆண்டு காவல்படைச் சட்டம் (மையச் சட்டம் 3/1888) அதன் விரிவுப் பகுப் பின்படி பிரிட்டிஷ் இந்தியாவிற்கு மட்டுமே பொருந்துவதா யிருந்த போதிலும், 1902-ம் ஆண்டு மன்ற ஆணையின்படி இந்தியச் சமஸ்தானங்களின் ஒரு சில பகுதிகளுக்கும் 1937 ஏப்ரல் 1-ம் நாளுக்கு முன்னமேயே பயன்படுத்தப்பட்டு வந் துள்ளது. 1888-ம் ஆண்டுச் சட்டத்தின் காரியங்களுக்காக பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளையும் இந்திய சமஸ்தானப் பகுதிகளையும் சேர்த்து காவல் மாவட்டங்கள் (Police Districts) ஏற்படுத்தப்பட்டன. 1935-ம் ஆண்டுச் சட்டம் தொடங் கியதும், காவல் என்பது, மாகாணத்தின் தனித்த விஷய மாகவே கருதப்பட்டது. காவல் சம்பந்தமாக, இந்திய அர சுக்கு அதிகாரம் ஏதும் இல்லை. 1888-ம் ஆண்டு மையச் சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் எந்தக் காவல் மாவட்டமும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள்ளேயே அமையுமாறு, அச்சட்டம் 1937-ல் மாற்றியமைக்கப்பட்டது; இந்திய சமஸ்தானங் களைப் பொறுத்த பொது காவல்படையின் அதிகாரங் களும் அதிகார வரம்பும் ராஜப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப் பட்டன. இந்திய சமஸ்தானங்கள் குறித்து ஆளுநர் தலை வரின் அதிகாரம் ராஜப்பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தமையால் இவர் 1939-ம் ஆண்டுக் காவல் படைச் சட்டத்தை இயற்றினார்.

5. சுதந்திரம் பெற்றதும் உயர்தனி அதிகாரம் முடி வடைந்தது. அத்துடன் அந்த அதிகாரத்தைக் கொண்டு ராஜப்பிரதிநிதியால் பிறப்பிக்கப்பட்ட 1939-ம் ஆண்டு காவல் படைச் சட்டமும் செல்திறனற்றுப் போயிற்று. (1939-ம் ஆண்டு காவல் படைச் சட்டத்தை இயற்றுவதற்கு மூலச் சக்தியாக இருந்த) 1890-ம் ஆண்டு வெளிநாட்டு அதிகார வரம்புச் சட்டம், இந்தியாவிற்குப் பொருந்துகிற மட்டில், 1960-ம் ஆண்டு பிரிட்டிஷ் சட்டங்கள் (இந்தியா விற்குப் பொருந்துதல்) ரத்துச் சட்டத்தினால் ரத்து செய்யப் பட்டது. 1947-ம் ஆண்டுக்குப் பிறகும் ராஜப்பிரதிநிதியின் காவல்படையை தொடர்ந்து வைத்திருந்தபடியால்; அது தொடர்ந்து இருந்து வருவதற்கு, சட்ட ஆதாரம் கல்லி எடுக்க வேண்டியதாயிற்று. இதற்காகவே, 1949-ம் ஆண்டு 66-வது மையச் சட்டம் சட்ட நூல் வரிசையில் ஏறியது.

1949-ம் ஆண்டு மையச் சட்டம், டொமினியன் சட்ட மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாவென்னும் கருத்து எழுகிறது. இதற்குப் பொருத்தமுடைய மசோதாவின் காரண நோக்க விளக்கக் குறிப்பு தெரிவிப்பதாவது: மைய அரசு ரிசர்வ் காவற்படை மாற்றியமைத்துக் கொள்ளப்பட்ட 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியில் உள்ள I-வது அதிகாரப் பட்டியலின் 1-வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள ''டொமினியன் திரட்டிய அல்லது வைத்து வருகிற பிற ராணுவப் படை'' என்னும் வகையின் கீழ் வருகிறது. நிதி ஒதுக்கல் மசோதாக்கள் போன்ற சம்பிரதாய மசோதாக்களைத் தவிர மற்ற நேர்வுகளில் நோக்கக் காரண விளக்கக் குறிப்பில் சட்டமியற்றுவதற்குரிய பதிவையோ அல்லது அரசமைப்புச் சட்ட உறுப்பையோ இயல்பாகவே குறிப்பிடுவதில்லை என்பதை இங்குக் கூறியே ஆகவேண்டும்.

6. மைய அரசு ரிசர்வ் காவல் படையை டொமினியன் திரட்டிய அல்லது வைத்து வருகிற ராணுவப்படை என்று சொல்லலாமா என்பது தான் இங்குள்ள பிரச்சினை. இப்படையினரின் கடமைகள் யாவையென இச்சட்டம் சரியாகக் குறிப்பிடவில்லை. இச்சட்டத்தின் 7-வது பிரிவு தெரிவிப்பதெல்லாம் என்னவெனில், பொருத்தமான அதிகாரி தனக்குச் சட்டப்படிப் பிறப்பிக்கும் ஆணைகள் பிடியாணைகள் ஆகியவற்றுக்கு உரிய முறையில் கீழ்ப் பணிந்து நிறைவேற்றவும், குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விசாரிக்கவும், சட்டப்படி கைது செய்ய அதிகாரமளிக்கப்பட்டு, கைது செய்வதற்குப் போதிய ஆதாரங்களும் உள்ள அத்தகையோரைக் கைது செய்வதும், இப்படையைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய கடமையாக இருக்கவேண்டும் என்பதாகும். ஆனால், மைய அரசு ரிசர்வ் காவல் படை விதிகளைச் சேர்ந்த 25-வது விதி, இந்தப் படை அமைக்கப் பட்டதன் முக்கிய குறிக்கோளைப் பற்றித் தெளிவாக நன்கு விளக்குகிறது. இந்தக் காவல் படையின் தலையாய கடமைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதே இவ்விதியின் நோக்கமாகும். ''சட்டம் ஒழுங்கமைதியைப் பேணி நிலை நாட்டவும் மைய அரசு கட்டளையிடக்கூடிய வேறு ஏதேனும் காரியத்துக்காகவும்'' இந்திய யூனியனில் எந்தப் பகுதிக்கும் இப்படையினர் அனுப்பப்படலாம் என்று இவ்விதியைச் சேர்ந்த (அ) துணைவிதி தெரிவிக்கிறது. எனவே, இப்படையின் தலையாய அல்லது முதன்மையான கடமை, சட்டத்தையும், ஒழுங்கமைதியையும் நிலைநாட்டுவதென்பது தெளிவாகிறது.

அரசமைப்புச் சட்டத்தின்படியும், 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழும் பொது ஒழுங்கமைதியும் காவல் துறையும் மாநிலங்களின் தனி அதிகார வரம்புக்குள் இருந்தன. ஆகவே, 25-வது விதியில் இடம் பெற்ற சட்ட வகையுரை அமைப் பின்படி, மைய அரசு ரிசர்வ் காவல்படையை ராணுவப் படை எனச் சொல்லலாமா அல்லது பொது ஒழுங்கமைதியை நிலைநாட்டும் பொறுப்புடைய படையென்று அதாவது காவல் படையென்று கருதலாமா என்பது தான் பிரச்சினை. இரு தீர்ப்புகளைப் பற்றி இங்கு கூறுவது பொருத்தமாகும். பூரண் என்பவருக்கும் உத்திரப் பிரதேச மாநில அரசுக்குமிடையே நடைபெற்றதொருவழக்கில், (A.I.R. 1955 அல. 370) பிரச்சினை என்னவென்றால், 1948-ம் ஆண்டு உ.பி. ஆயுதம் தாங்கிய காவற்படைச் சட்டம், ஒரு மாநிலத்தின் சட்டமியற்றும் அதிகார வரம்புக்குட்பட்டதா என்பதாகும். மாகாணச் சட்டம், ராணுவப் படைத் தொகுதியை ஏற்படுத் தியது; அது மாகாண அதிகாரப் பட்டியலின் 3-வது பதிவில் சொல்லப்படவில்லை; ராணுவப் படையின் அலுவல்களும் கடமைகளும் காவல் படையைச் சேர்ந்தவையல்ல என்பது தான் வாதமாகும். மாகாணச் சட்டத்தையும், இச்சட்டத் தின் உட் கிடக்கையையும் ஊன்றிப் பரிசீலித்த பிறகு, உயர்நீதி மன்றம் பின்வருமாறு தீர்ப்பு கூறியது: உள் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே இந்த ஆயுதந் தாங்கிய காவற்படையை உருவாக்கியதன் நோக்கமாகும்; ஆகவே, இது ஒரு காவல்படையே. இது சம்பந்தமாக அது மேலும் தெரிவிப்பதாவது—

"பொதுவான கருத்துப்படி, 'காவல்' என்பது 'உள்நாட்டு அமைதி ஒழுங்கை நிலைநாட்டும் கடமை ஒப் படைக்கப்பெற்ற அரசுத்துறை அல்லது குடிமைப்படை' என்பதையே குறிக்கும் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 7-வது இணைப் பட்டியில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பட்டியலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் காண்கை யில், இந்த இனங்களில் எதற்கும், குறுகிய அல்லது எல்லைக் குட்பட்ட பொருள் கொள்ளலாகாது என்பது உறுதியான கொள்கையாகும்."

மேலும், மாநில அரசுக்கும் பாபுலாலுக்குமிடையே நடைபெற்ற வழக்கில் (A.I.R. 1957, ராஜஸ்தான் 28) ஈராயம் (Division Bench) மைய அரசு காவலர் பற்றிய விஷயங்களில் சட்டமியற்ற முடியாது என்று குறிப்பிட்டது,

7. மைய அரசு ரிசர்வ் காவல் படையின் முதன்மையான கடமை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாகும். ஆகவே, அது ஒரு காவல்படையாகவே கருதப்படவேண்டும். மாற்றியமைக்கப்பட்ட 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி, காவல் என்பது, மாகாண அதிகாரப்பட்டியலில் இருந்தது; டொமினியன் சட்டமன்றம் சட்டமியற்றுவதற்கு உரிமை கிடையாது. இதற்குப் பொருத்தமான மசோதாவின் காரண நோக்கவிளக்கக் குறிப்பில் காணும் விளக்கத்தாலோ அன்றி இந்திய அரசு வெளியிட்ட மையச் சட்டத்தொகுப்பில் அதாவது, இந்தியச் சட்டக்கோவையில் 1949-ம் ஆண்டுச் சட்டம், ''ராணுவப்படை'' என்னும் தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டதாலோ, இது குறித்து முடிவு கண்டுவிட்டதாகக் கருதுவதற்கில்லை. ஆனால் சில கருத்துக்கள் இங்குக் கவனத்திற்குரியவை. ராணுவப் படைகளின் மூன்று பிரிவுகளுக்காக இயற்றப்பட்ட மூன்றுசட்டங்களும், ராணுவப்படையினர் செய்யும் குற்றங்களை விசாரணை செய்ய ராணுவ நீதிமன்றங்களை ஏற்படுத்தி மரண தண்டனை உட்பட தண்டனைகள் விதிப்பதற்கும் வகை செய்கின்றன. எல்லைப் பாதுகாப்புப்படையும் மைய ராணுவப் படையே. எல்லைப் பாதுகாப்புப் படை குறித்த 47/1968-ம் எண் மையச்சட்டம், பாதுகாப்புப் படை நீதிமன்றங்கள் மரண தண்டனை உள்ளிட்ட தண்டனைகள் விதிப்பதற்கு வகை செய்கிறது. எனினும் 1949-ம் ஆண்டின் 66-ம் எண் மையச் சட்டம் ராணுவ நீதிமன்றங்களை அமைப்பதற்கு ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. மேற்சொன்ன சட்டத்தின் 16-வது பிரிவின்படி மைய அரசு ஆணை எதுவும் இராதபோது, சிறைத் தண்டனை விதிக்கத்தக்க குற்றங்கள் சாதாரணக் குற்றவியல் நீதிபதிகளால் மட்டுமே விசாரணை செய்யப்படத்தக்கவையாகும். மைய அரசு ரிசர்வ் காவல்படை விதிகளைச் சேர்ந்த 36-வது விதியின்கீழ், மேற்படி சட்டத்தின் 9 அல்லது 10-வது பிரிவின்படி குற்றங்களைக் குறித்து எல்லா நீதிவிசாரணைகளும், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவைக்கிணங்க நடைபெற வேண்டும். சிறைத்தண்டனை பெற்றவர்கள் ஆஜ்மீரில் உள்ள மையச் சிறையில் வைக்கப்படவேண்டும்.

8. மைய அரசு ராணுவப்படை சம்பந்தப்பட்ட மூன்று சட்டங்களும் அப்படையினரின் அடிப்படை உரிமைகளை மாற்றியமைப்பதற்கான வகையுரைகளும் கொண்டுள்ளன என்பதும் கவனத்திற்குரிய மற்றொரு விஷயமாகும். ஆனால் மைய அரசு ரிசர்வ் காவல்படை சம்பந்தப்பட்ட சட்டத்தில், அடிப்படை உரிமைகளை நிறுத்திவைப்பதற்குரிய அத்தகைய

வகையுரை எதுவும் இல்லை. இது அரசமைப்புச் சட்டத்திற்கு முந்தியே இயற்றப்பட்ட சட்டம் என்பதில் ஐயமில்லை. ஆகவே, அடிப்படை உரிமையை நிறுத்தி வைப்பது குறித்து இதில் வகையுரை சேர்ப்பது என்னும் பிரச்சினை, சட்டம் இயற்றப்பட்டபோது எழுந்திருக்காது. ஆனால், சில வட்டாரங்களில் சொல்லப்படுவதுபோல, மைய அரசு ரிசர்வ் காவல் படை, மைய அரசு ராணுவப் படையாக இருப்பின், மைய அரசு ரிசர்வ் காவல் படையினரின் அடிப்படை உரிமைகளை நிறுத்துவதற்கு வகைசெய்து 1949-ம் ஆண்டுச் சட்டத்திலேயே நாடாளுமன்றம் தக்க வகையுரைகளைச் சேர்ப்பதை எதுவும் தடுத்திராது. 1966-ம் ஆண்டு காவல்படைகள் (உரிமைகள் கட்டுப்பாடு) சட்டத்தை (மையச் சட்டம் 33/1966) நாம் நோக்குவோமேயானால் இந்த விஷயம் முடிந்துவிட்டது எனக் கொள்ளலாம். 1966-ம் ஆண்டுச் சட்டத்தின் நீண்ட தலைப்பு 'பொது ஒழுங்கமைதியை நிலைநாட்டும் பொறுப்புடைய படையினரைக்' குறிக்கின்றதேயன்றி ராணுவப்படையினரைக் குறிக்கவில்லை. இது குறித்துத் தக்க வகையுரைகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளபடியால், 1966-ம் ஆண்டுச் சட்டத்தில் ராணுவப் படையினர் என்னும் குறிப்பு அவசியமில்லை என்பது வெளிப்படை. 'காவல்படை உறுப்பினர்' என்னும் சொற்றொடர் 1966-ம் ஆண்டுச் சட்டத்தின் 2 (அ) பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொருள், மேற்சொன்ன இந்தச் சட்டத்தின் இணைப்பட்டியில் குறிப்பிட்டுள்ள ஒரு சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒருவர் என்பதாகும். இந்தச் சட்டத்தின் இணைப்பட்டியில் 1859-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவலர் சட்டம் (மையச் சட்டம் 24/1859) 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவலர் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1888), பல்வேறு மாநிலங்களில் உள்ள காவல்படைகளுக்குச் சம்பந்தப்பட்ட பல்வகையான சட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு பொருத்தமாகக் கொள்ளவேண்டிய பதிவு இணைப்பட்டியிலுள்ள 18-வது பதிவாகும். 18-வது பதிவு 66/1949-ம் எண் மையச் சட்டத்தைக் குறிக்கிறது.

9. மைய அரசு ரிசர்வ் காவல்படை ஓர் இராணுவப் படையென்று வாதமிடும் கருத்து ஏற்புடையதாயின், மைய அரசு ரிசர்வ் காவல் படையை 'பொது ஒழுங்கமைதியை நிலைநாட்டும் பொறுப்புடைய படை' யென்று நாடாளுமன்றம் திட்டவட்டமாகவும் ஆணித்தரமாகவும் ஏன்

வர்ணிக்கிறது என்பதுதான் புரியவில்லை. 1966-ம் ஆண்டு 33-வது மையச் சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 33-வது உறுப்பு பற்றியதாகும். இந்த உறுப்பு இருவகைப் படைகளை பற்றிக் குறிப்பிடுகிறது. ஒன்று ராணுவப் படை; மற்றொன்று பொதுஒழுங்கமைதியை நிலைநாட்டும் பொறுப்புடைய படை. 33-வது உறுப்பின் காரியங்களுக்காக நாடாளுமன்றம், மைய அரசு ரிசர்வ் காவல் படையை காவல் படையென்று குறிப்பிடுகிறது. 33-வது உறுப்பின் காரியங்களுக்காக, மைய அரசு ரிசர்வ் காவல் படை, காவல் படையென்று கருதப்படவேண்டுமாயின், சட்டமியற்றும் அதிகாரப் பட்டியல் பதிவுகளின் வகையுரை காரியங்களுக்காக ராணுவப்படையென்று கருதப்படமாட்டாது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் இதற்கு நிகரான சட்டமியற்றும் அதிகாரப் பதிவுகளின்படி, மைய அரசு ரிசர்வ் காவல் படையை காவல் படையென்றே கொள்ளவேண்டும்.

10. மைய அரசு ரிசர்வ் காவல் படை ஓர் இராணுவப் படையென்னும் கருத்துடையோர், மைய அரசு அதிகாரப் பட்டியலில் *2-வது பதிவையே முக்கியமாக ஆதாரமாகக் கொண்டுள்ளனர். 1949-ம் ஆண்டு மையச் சட்டத்தின் அரசமைப்புச் செல்திறன், அரசமைப்பில் சட்டமியற்றும் அதிகாரப் பதிவுகளையொட்டிக் கருதாமல், 1947-ல் மாற்றியமைக்கப்பட்ட 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் நிகரான பதிவுகளையொட்டி சோதிக்கப்படவேண்டும்.

முதன் முதலில் தொடக்கத்தில் சட்டமாக்கப்பட்ட 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் இணைப்பாட்சி சட்டமியற்றும் அதிகாரப் பட்டியலின் 1-வது பதிவினை அப்பதிவு

* மைய-மாநில உறவுகள்பற்றி நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவின் அறிக்கை, பக்கம் 36; அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நாடாளுமன்றவியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின் அக்டோபர்—டிசம்பர், 1969 இதழில் வெளியான 'மைய மாநில அரசுகள் நிர்வாக உறவு' என்னும் தலைப்புடைய திரு ஆர். எஸ். கே அவர்களின் கட்டுரை, பக்கம் 7-9; புதுடில்லியில் 1970 எப்ரலில் நடைபெற்ற மைய-மாநில உறவு பற்றிய தேசியமாநாட்டில் 'அரசியல் நிருவாக உறவுகள்' என்னும் தலைப்பில் திரு பி. கோவிந்த மேனன் அளித்த அறிக்கை.

ராணுவப் படையினருக்குப் பொருந்துகிற வகையில் 1947-ல் மாற்றியமைத்துக்கொண்ட பதிவோடு ஒப்பிட்டுநோக்கலாம்.

தொடக்கத்தில் சட்டமாக்கியபடி.	1947-ல் மாற்றியமைக்கப் பட்டபடி.
1. இந்தியப் பணியாளரமைப்புச் செலவினுல் பராமரிக்கப்பட்ட மேன்மை தங்கிய மன்னரின் கடற் படை, தரைப் படை, விமானப் படை, இந்திய சமஸ்தானங்களிலாயினும் அல்லது மாகாண அரசுகள் வைத்து வரும் ராணுவ அல்லது ஆயுதம் தாங்கிய காவல் படையிலாயினும் சேருவதற்காகத் திரட்டப்பட்ட படைகளாயிராமல், மன்னரால் இந்தியாவிலே திரட்டப்பட்ட ராணுவப் படை; மேன்மை தங்கிய மன்னரின் படையாக இராமல் ஆனல் இந்தியப் பணியாளரமைப்பில் ஏற்றுவரும் மன்னரது படையைச் சேர்ந்த அல்லது மன்னரது முப்படைகளில் ஒன்றுடன் செயல்படுகின்ற ஓர் இராணுவப் படை......	1. டொமினியன்கடற் படை, தரைப் படை, விமானப் படை, மற்றும் டொமினியன் திரட்டிய அல்லது வைத்து வருகிற ஓர் ராணுவப் படை; டொமினியன் படையாக இராமல் ஆனல் டொமினியன் ராணுவப் படையுடன் இணைந்த அல்லது அதில் ஓர் இராணுவப் படையுடன் செயல்படுகிற ஒரு படை....

தொடக்கத்தில் இருந்த பதிவு தனது ஆளுகையிலிருந்து மாகாண அரசுகள் பேணி வருகிற ராணுவ அல்லது ஆயுதம் தாங்கிய காவல் படையைக் குறிப்பாக நீக்கிவிட்டது; ஆனல், மாற்றியமைக்கப்பட்ட பதிவில் இந்த விலக்கு காணப்படவில்லை என்பதைக் காணலாம். இருந்தபோதிலும், மாகாணங்களில் ஆயுதம் தாங்கிய காவல் படை 1947 ஆகஸ்டு 15-ம் நாளுக்குப் பிறகும் தொடர்ந்து இருந்தது. மாகாண ஆயுதம் தாங்கிய காவல் படை குறித்த உ. பி. சட்டமன்றத்தின் 1948-ம் ஆண்டுச் சட்டம் செல்லத்தக்க சட்டம் என்னும் கருத்துக் கொண்ட A.I.R 1955 அலகாபாத் 370-ல் உள்ள தீர்ப்பை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். மாகாண சட்டமன்ற அதிகாரப் பட்டியலில் காவல் குறித்த பதிவு, ஆயுதந்தாங்கிய காவல் படையையும் சேர்த்துப்

பொருள் கொள்ளப்பட்டது என்பதை இது காட்டுகிறது. மாற்றியமைத்துக் கொள்ளப்பட்ட இணைப்பாட்சி சட்டமன்ற அதிகாரப் பட்டியலின் 1–வது பதிவில் ஆயுதம் தாங்கிய காவல் படை சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதே இதன் உட்கிடக்கையாகும். நமக்குத் தற்போதுள்ள காரியத்துக்கு பொருத்தமாவது, தொடக்கத்தில் சட்டமாகியபடி இணைப்பாட்சிச் சட்டமன்ற அதிகாரப் பட்டியலின் 1-வது பதிவு இரு வகை ராணுவப்படைகளைக் குறிக்கிறது. இதில் ஒன்று இந்தியப் பணியாளரமைப்புச் செலவினுல் பராமரிக்கப்பட்ட மேன்மை தங்கிய மன்னர் படை; மற்றென்று மன்னரால் இந்தியாவில் திரட்டப்படுகிற ராணுவப் படை. 1947-ல் இப்பதிவு மாற்றியமைக்கப்பட்டபோது, இந்த இருகூறு தங்களை அப்படியே வைத்துக் காப்பாற்றி வந்ததாகத் தெரிகிறது; அவ்வாறே மாற்றியமைக்கப்பட்ட பதிவு டொமினியனைச் சேர்ந்த கடற்படை, தரைப்படை, விமானப்படையையும், டொமினியன் திரட்டிய அல்லது வைத்து வருகிற வேறு ஒரு இராணுவப் படையையும் குறிக்கிறது. புதிய பதிவின் முதற் பாகம், தொடக்கப் பதிவின் முதற் பாகத்துக்கு இணையாகச் சொல்லலாம். இரண்டாவது பாகம் அதாவது, 'டொமினியன் திரட்டிய அல்லது வைத்துவருகிற வேறு ஓர் இராணுவப் படை' என்பதை, பழைய பதிவின் இரண்டாவது பாகமாகிய அதாவது 'மன்னர் இந்தியாவில் திரட்டிய ஓர் இராணுவப் படை'க்கு நிகராகச் சொல்லலாம். ஆகவே, 1947-ல் மாற்றியமைக்கப்பட்ட பதிவு, ஆயுதம் தாங்கிய காவல் படையைத் தனது ஆளுகைக்குள் ஏற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்பதே எமது கருத்து. பதிவு முழுவதும் ராணுவப் படை பற்றியே சொல்கிறது ; பதிவு முழுவதும் பயன்படுத்தப்படுகிற சொற்றொடர் 'ராணுவப்படை' என்பதே. முதல் பாகம், டொமினியனைச் சேர்ந்த படையின் முப்பிரிவுகளைக் குறிக்கிறது. இரண்டாவது பாகம் டொமினியன் திரட்டிய அல்லது வைத்துவருகிற ஓர் இராணுவப் படையைக் குறிக்கிறது. இந்தப் பதிவின் பொதுவான நோக்கம், அந்தப் பதிவு 1947 ஆகஸ்டு 15-க்கு முன்பு பயன்படுத்தப்பட்ட காரியங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இனங் கொளல் விதி, (the ejusdem generis rule) ''டொமினியன் திரட்டிய அல்லது வைத்து வருகிற வேறு ஒரு ராணுவப் படை'' என்னும் சொற்றொடருக்கும் பொருள் காண்பதற்குப் பொருந்தும். டொமினியனைச் சேர்ந்த கடற்படை, தரைப்படை, விமானப்படையாயிராமல்

மேற்சொன்னவாறு பொருள் கூறப் பெற்ற ராணுவப் படை, பதிவின்பொருட்டு, ஒரு படையாக இருக்க வேண்டும்; இப்படை, அதன் ஒழுக்க நெறி, அமைப்பு, அலுவல் ஆகியவற்றில் முறையான ராணுவப் படையைப் போன்றதே ஆகும்; இந்தப் பொருள் விளக்கத்தின்படி, முறையான ராணுவப் படையாக இல்லாத ஒரு படை இந்தப் பதிவில் அடங்கும் என்னும் வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை; இதன்படி பார்த்தாலும், காவல் படையை நீக்கியே இந்தப் பதிவுக்குப் பொருள் கொள்ள வேண்டியதாகிறது.

11. 1947-ல் மாற்றியமைக்கப்பட்ட இணைப்பாட்சிச் சட்டமன்றப் பட்டியலின் 1-வது பதிவின் ஆளுகை குறித்து நமது கருத்து, இதற்கு நிகராக அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியில் உள்ள மைய அரசு அதிகாரப் பட்டியலைச்சேர்ந்த 2-வது பதிவு, வரைவு நிலையில் அடைந்த பல்வேறு மாறுதல்களைக் கொண்டு பார்க்கின் மேலும் வலுப் பெறுகிறது. *இப் பதிவு பற்றிய விவாதங்களிலிருந்து, இரு வகைப் படைகள் மட்டுமே உத்தேசிக்கப்பட்டன என்று தோன்றுகிறது. அவையாவன: (1) முறையான ராணுவப் படை, (2) தேசிய மாணவர் படை, பிரதேசப் படை போன்ற ஓரளவு ராணுவம் சம்பந்தப்பட்ட அமைப்புகள். மைய அரசு ரிசர்வ் காவல் படையை உள்ளிட்ட 1949-ம் ஆண்டுச் சட்டம், 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் இணைப்பாட்சிச் சட்ட மன்றப் பட்டியலின் 1-வது பதிவுக்குள் வருவதாகச் சொல்ல முடியாது. அவ்வாறே, காவல் படையை அப் பதிவு விவரிப்பதாகவும் சொல்வதற்கில்லை. இச் சட்டம், டொமினியன் சட்டமன்ற அதிகாரத்தை மீறுவதாகக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

12. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவினரும் காலஞ் சென்ற திரு பி. கோவிந்த மேனன் அவர்களும், மைய அரசுச் சொத்துக்கள் பாதுகாப்பு பற்றியும், அந்தக் காரியத்துக்காக மைய அரசு ரிசர்வ் காவல் படை பயன்படுவது பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். சதித் திட்டத்தினின்றும் மைய அரசுப் பணியாளரையும் மைய அரசுக் கட்டிடங்களையும் பாதுகாப்பதற்காக மைய அரசு ரிசர்வ் காவல் படையைப் பயன்படுத்தலாம் என்று நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழு கூறுகிறது. வேலை நிறுத்தம் போன்றவற்றால் எழும் நிலைமையைப் பற்றியும் திரு மேனன் குறிப்பிட்டுள்ளார். மைய ஆள்வைகள்

* இவ்விவாதங்கள் பற்றிய சுருக்கத்தை இணைப்பு IX-ல் காண்க.

தங்கள் அலுவலகங்களை அல்லது துறைகளை நடத்துவதற்கு அல்லது மைய அரசின் சொத்தினைப் பாதுகாப்பதற்கு மைய ஆள்வைகளுக்கு உதவி செய்ய மாநில அரசு விரும்பாத போது அல்லது இயலாதபோது மைய அரசு ரிசர்வ் காவல் படையைப் பயன்படுத்தலாம் என்று இவர் தெரிவிக்கிறார்*. அரசமைப்புச் சட்டத்தின் 298-வது உறுப்பின்படி, மைய அரசு தன் நிர்வாக அதிகாரத்தின் துணைகொண்டே வர்த்தகம் அல்லது வாணிகம் நடத்தலாம் மற்றும் சொத்தின் உரிமை பெறலாம் வைத்திருக்கலாம் மற்றும் அதனை பிறர்க்கு உரிமையாக்கலாம் மற்றும் எதன் பொருட்டேனும் ஒப்பந்தங்கள் செய்யலாம். ஆனால், மேற்சொன்ன இதே மைய நிர்வாக அதிகாரம், அத்தகைய வர்த்தகம், வாணிகம் அல்லது காரியத்திற்கு நாடாளு மன்றம் சட்டமியற்ற முடியாதெனில் ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தால் சட்டமியற்றப்படுவதற்கு உட்பட்டதாக இருக்கும். மைய அரசு சொத்து உள்ளிட்ட சொத்து பாதுகாப்பு, மாநில அரசின் மிக முக்கியமான அலுவல் பொறுப்பாகிய பொது ஒழுங்கமைதித் துறையின்கீழ் வரும் ஓர் அலுவலாகும். அரசமைப்புச் சட்டத்தின்படி 1949-ம் ஆண்டுச் சட்டத்தின் செல்திறனைப் பற்றிய எமது கருத்துக்களை எடுத்துச் சொல்லியுள்ளோம்.

13. ஏற்கனவே நாங்கள் தெரிவித்துள்ளபடி எங்களுக்கு இது குறித்து ஐயப்பாடு இருப்பினும், 1949-ம் ஆண்டுச் சட்டம் செல்லத் தக்க சட்டம் என்று வைத்துக்கொண்டாலும் மாநிலங்களின் அனுமதியின்றி அங்கு மைய அரசு ரிசர்வ் காவல் படைப் பிரிவுகளை அனுப்புவதிலுள்ள பொருத்தமும் ஏற்புடைமையும் பற்றி, அடுத்து ஆராயத் தலைப்படுவோம். மாநிலங்களில், அவற்றைக் கலந்துகொள்ளாமலும் அவற்றின் விருப்பத்திற்கு மாறாகவும், மைய அரசு ரிசர்வ் காவல் படைகளை நிறுத்தி வேலை வாங்குவதற்கு மைய அரசுக்கு உரிமை உண்டு என்னும் கருத்துக்கு அரசமைப்புச் சட்டத்தின் 355-வது உறுப்பிலுள்ள ஆதாரத்தை நிருவாகச் சீரமைப்பு ஆணைக்குழுவினரும், மையச் சட்ட அமைச்சரும், நம்பியுள்ளனர். திரு. மொரார்ஜி தேசாயும், புது டில்லியில் 1970 மே திங்களில் நடைபெற்ற இந்தியன் பார்லிமென்டரி சங்கக் கருத்தரங்கில் பேசிய

* 1970 ஏப்ரலில் நடைபெற்ற மைய-மாநில உறவு பற்றிய தேசிய மாநாட்டில் "அரசியல் மற்றும் நிர்வாக உறவுகள்" என்னும் தலைப்பில் வாசித்தளித்த அறிக்கையின் 16-வது பத்தி.

போது இந்த 355-வது உறுப்பைக் குறிப்பிட்டு இந்த உறுப்பி லிருந்துதான் நெருக்கடி நிலை அதிகாரங்கள் தோன்று கின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

14. 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் 355-வது உறுப்புக்கு நிகராக எந்த வகையுரையும் இல்லை. 1948 பிப்ரவரியில் வரைவுக் குழு தயாரித்த வரைவு அரசமைப்புச் சட்டத்திலும் இந்த உறுப்புக்கு நிகரான வகையுரை எதுவும் இல்லை. 1948 பிப்ரவரியில் வெளியான வரைவு அரசமைப்புச் சட்டம் பற்றி விவரிக்கையில், வெளி நாட்டு ஆக்கிரமிப்பினின்று அல்லது உள்நாட்டுக் கலவரம் ஏற்படுவதினின்றும் ஒவ்வொரு மாநிலத்தையும் பாதுகாக்கும் பொறுப்பை மைய அரசுக்கு ஏற்படுத்தி வரைவு அரசமைப்புச் சட்டத்தில் சிறப்பு வகையுரை சேர்க்கப்பட வேண்டுமென்று இந்திய சமஸ்தானங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்திய சமஸ்தானங்களில் மக்கள் பிரதிநிதித்துவ அரசு முறையைப் புகுத்துவதற்கு, அப்போதிருந்த மாகாணங்களில் இருந்த மக்களாட்சிச் சக்திகள் கட்டாயப்படுத்துமோ என்கிற அச்சம் இந்திய சமஸ்தானங்களுக்குப் பொறுப்புடையவர்களிடம் இருந்ததன் அடிப்படையில் இந்தக் கருத்து கூறப்பட்ட தாகத் தோன்றுகிறது. இத்தகைய ஒரு நிர்ப்பந்தம் தலை காட்டும்போது மைய அரசு கவனிக்கும் வகையில் அந்த நிர்ப்பந்தத்திற்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதற்கு இக் கருத்து கூறப்பட்டதாகவும் தோன்றுகிறது. மாநிலத்திற்கு, வெளிநாட்டு ஆக்கிரமிப்பினின்றும் மைய அரசு பாதுகாப் பளிக்க வேண்டும் என்றும் மாநில அரசு வேண்டிக் கேட்டுக்கொள்வதன் பேரில், உள்நாட்டுக் கலவரத்தினின் றும், அல்லது கிளர்ச்சியினின்றும், பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா அரசமைப்புச் சட்டங்களின் இதற்கு நிகரான வகையுரைகள் முன் ஆதாரங் களாகச் சுட்டிக் காட்டப்பட்டன. இக் கருத்தை வரைவுக் குழுவும் ஒப்புக்கொண்டது. ஆனால், இதில் உத்தேசிக்கப்பட்ட உறுப்பு, உள்நாட்டு வன்முறையினின்றும், பாதுகாப்பளிக்கு மாறு ஒரு மாநிலம் செய்துகொள்ளும் வேண்டுகோளைப் பற் றிய குறிப்பை நீக்கிவிட்டது. மற்றொரு வகையாகக் கூறுவ தாயின், ஒரு மாநிலம் உள்நாட்டு வன்முறையினின்றும் பாது காப்பு விரும்பிக் கேட்டாலும், கேட்காவிட்டாலும், அத் தகைய பாதுகாப்பு அளிக்கும் அதிகாரத்தை மைய அரசு உடையதாகும். இப்போது 355-வது உறுப்பு எனச் சொல்

லப்படுகிற புதிய உறுப்பு அரசமைப்புச் சட்டமன்றத்தில் 1949 ஆகஸ்டு 3-ம் நாள் கொண்டுவரப்பட்டது. இது, இறுதியாக அரசமைப்புச் சட்டமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

15. அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் IV-வது உறுப்பின் 4-வது பிரிவு, வெளிநாட்டுப் படையெடுப்பினின்றும், சட்டமன்றம் அல்லது (சட்டமன்றம் கூட்ட முடியாதபோது) நிர்வாகம் கேட்டுக்கொள்வதன் பேரில் உள்நாட்டு வன்முறையினின்றும் ஒவ்வொரு மாநிலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் மைய அரசிடம் ஏற்படுத்துகிறது. வெளிநாட்டு அபாயம் ஏற்படும் என்று ஒரு கான்டன் அச்சுறுத்தப்பட்டால், அச்சுறுத்தப்பட்ட 'கான்டன்' அரசு ஏனைய கூட்டாட்சிக் கான்டன்களின் உதவியை நாட வேண்டியதுடன் கூட்டாட்சி ஆள்வைகளுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று சுவிட்சர்லாந்து அரசமைப்புச் சட்டத்தின் 15-வது உறுப்பு சொல்கிறது. உள்நாட்டுக் கலவரத்தைப் பற்றி 16-வது உறுப்பு விவரிக்கிறது. உள்நாட்டுக் கலவரமோ அல்லது மற்றொரு கான்டனால் அச்சுறுத்தப்படும்போதோ அச்சுறுத்தப்பட்ட கான்டன் அரசு கூட்டாட்சி மன்றத்துக்கு உடனடியாக அறிவிப்பு கொடுக்க வேண்டும். ஏனெனில், அப்போதுதான், கூட்டாட்சி மன்றம் அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் அல்லது கூட்டாட்சி சட்டமன்றத்தைக் கூட்ட அழைப்பாணை விடுக்கலாம். ஆஸ்திரேலியா அரசமைப்புச் சட்டத்தின் 119-வது பிரிவில், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும், நிர்வாகம் கேட்டுக்கொள்வதன் பேரில் உள்நாட்டுக் கலவரத்தினின்றும் ஒவ்வொரு மாநிலமும் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. எல்லா இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டங்களிலும், மாநிலத்திலிருந்து வேண்டுகோள் வரப்பெறுவதன்பேரில் மட்டுமே உள்நாட்டுக்கலவரத்தினின்றும்மாநிலங்களுக்கு மைய அரசால் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதுகுறித்து மாநில அரசு வேண்டுகோள் விடுக்காமலேயே, படையெடுப்பு அல்லது ஆக்கிரமிப்பினின்றும் மைய அரசால் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது சரிதான். இக்கருத்தை முதன்முதலில் தெரிவித்த இந்திய சமஸ்தானங்களின் பிரதிநிதிகள், ஒரு மாநிலத்து நிர்வாகம் வேண்டுகோள் விடுத்ததன் பேரில் மட்டும்தான், உள்நாட்டுக் கலவரம் அல்லது கிளர்ச்சியின்போது மைய அரசு தலையிட வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். உள்

நாட்டுக் கலவரம் என்னும் நேர்வில் மாநில அரசு வேண்டு கோள் தேவை என்பதை மட்டும் நீக்கி வகையுரையை வரைவுக்குழுதான் மாற்றியமைத்தது.

16. உறுப்பு 355 உள்நாட்டுக் கலவரத்தை குறிப்பிடு கிறது என்பதைக் காணலாம். 352-வது உறுப்பு உள்நாட்டுக் கலவரத்தையே குறிப்பிடுகிறது. 352-வது உறுப்பைப் பற்றி ஆராய்கையில், பாராளுமன்ற இணைக்குழு 'உள் நாட்டுக் கலவரம்' என்பதற்களித்த விளக்கத்தை கவனத்திற் குக் கொண்டுவந்தோம். தேசீய நெருக்கடி நிலை சாற்றுணை பிறப்பிக்கும் பொருட்டு உள்நாட்டுக் கலவரத்திற்கு அதன் வன்முறையில் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு ஒப்பிடத் தக்க வகையில் பொருள் வரையறை செய்யப்பட வேண்டும் என்று இக்குழு தெரிவித்தது. 355-வது உறுப்பின் கீழ் வருகிற 'உள் நாட்டுக் கலவரம்' என்னும் சொற்றொடருக்கு பொருள் காணவும் இதே பொருள் வரையறைபயன்படுத்தப்பட வேண் டும் என்று கருதுகிறோம். இது சம்பந்தமாகக் கவனத் திற்கொள்ள வேண்டிய மற்றொரு கருத்து, 352-வது உறுப் பின்படி 'உள்நாட்டுக் கலவரம்' என்னவென்பதை முடிவு செய்யும் பொறுப்பு குடியரசுத் தலைவருடைய தீர்வுக்கு விடப் பட்டிருக்கும்போது, 355-வது உறுப்பு எந்த ஓர் ஆள்வையின் தீர்வு பற்றியும் குறிப்பிடவில்லை. அது கூறுவதெல்லாம், ஒரு மாநிலத்தை உள்நாட்டுக் கலவரத்தினின்றும் பாதுகாப்பது மைய அரசின் கடமையாகும் என்பதே. ஒரு மாநிலத்தில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மைய அரசில் அப்போ தைக்கு ஆட்சி புரியும் கட்சியின் விருப்பத்திற்கு ஏற்றதாக இராமல் போகலாம். அத்தகைய நேர்வில் அது உள்நாட்டுக் கலவரமாகக் கருதப்படுதற்கில்லை. ஒரு மாநிலத்தில் மைய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் உள்நாட்டுக் கலவரமாக அமையாது. அரசமைப்புச் சட்டத்தில் இதற்குப் பொருள் கூறியுள்ள முறையிலும், குறிப்பாக நாடாளுமன்ற இணைக்குழு முன்னரே தெரிவித்த விதத்திலிருந்தும் உள்நாட்டுக் கலவரம் எனப் பொருள் கொள்வதற்கில்லை. வெளிநாட்டு ஆக்கிரமிப் பினின்றும் மாநிலத்துக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்றுள்ள மைய அரசு கடமை குறித்து மாற்றமெதுவும் கூடாது என்று கூறும் அதே சமயத்தில், உள்நாட்டுக் கலவரத்தினின்றும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பை மைய அரசு தாமே ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் கூறு கிறோம். சட்டத்தையும் ஒழுங்கமைதியையும் நிலைநாட்டு வதில் அல்லது உயிருக்கும், சுதந்திரத்துக்கும் பாதுகாப்பு அளிப்பதில் மாநிலத்திற்கு இயலாத போது மட்டுமே பாதுகாப்பளிக்கப்பட வேண்டும். அதாவது ஒரு நிலைமை, வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு ஒப்பிடக்கூடிய

அளவுக்குக் கட்டு மீறியிருந்தால் மட்டுமேயன்றி, மற்றப்படி மாநிலத்தின் உள்நாட்டு விவகாரங்களில் மைய அரசு தலையிடக் கூடாது. ஆகவே, சம்பந்தப்பட்ட மாநில அரசிலிருந்து வேண்டுகோள் கிடைத்ததன் பேரிலன்றி மற்றப்படி ஒரு மாநிலத்தில் உள்நாட்டுக் கலவரத்தின்போது மைய அரசு தலையிடாது என்று தெளிவாகவே விளக்கி 355-வது உறுப்பு திருத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். இது, இந்த வகையுரையை 355-வது உறுப்பு அமைக்கப்பட்டதற்கு முன்மாதிரியான ஏனைய இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டங்களின் வகையுரைக்கு ஒத்ததாகச் செய்வதுடன் இந்த வகையுரையை முன்மொழிந்தவர்களுடைய எண்ணத்தையும் நிறைவேற்றும். ஒரு மாநிலம் தனது எல்லைக்குள் அமைதியின்மையும், குழப்பமும் தலைவிரித்தாட இடமளித்து அசட்டையாக இருந்தால், மைய அரசு தலையிட்டு சட்ட ஒழுங்கமைதியை ஏற்படுத்த முடியாது என்பது ஒன்றுமில்லை. மைய அரசு 356-வது உறுப்பை உடனேயே பயன்படுத்தி, இது குறித்து நாம் ஆலோசனை கூறியுள்ள பாதுகாப்புக்குட்பட்டு, தனது நேரடி ஆட்சியின்கீழ் மாநில நிர்வாகத்தை மேற்கொள்ளலாம்.

குடிமை அதிகாரத்துக்கு உதவியாக மைய அரசின் ராணுவத்தையும் அல்லது மற்ற வகையான படைகளையும் பயன்படுத்துவது குற்றவியல் சட்ட நடைமுறைக் கோவை வகையுரைகளை அனுசரித்ததாகும். 355-வது உறுப்பை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்கையில் இதில் இந்தக் கூறு பற்றி இக்குழு விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு மாநிலத்துக்குள்ளேயே அமைதியை நிலைநாட்டுவது மாநிலக் காவல் படையின் பொறுப்பு. ஒரு மாநிலத்தின் சட்ட ஒழுங்கமைதியைக் காப்பதில் மைய அரசின் தலையீடு, அரசமைப்புச் சட்ட வகையுரைகளுக்கு முரணானது எனலாம். எமது கருத்துப்படி பொருள் கொள்ளப்பட்ட 355-வது உறுப்பு கூட, அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநிலத்துக்கென்றே முழுதும் ஒதுக்கப்பட்ட அலுவலாகிய அதாவது அன்றாடக் காவல் பணிக்காக மைய அரசு ரிசர்வ் காவல் படையை நிறுத்திவைக்க மைய அரசுக்குத் துணை புரியாது. ஒரு மாநிலத்தின் வேண்டுகோளின் பேரில் அல்லது அதன் அனுமதியின் பேரிலன்றி மற்றப்படி, ஒரு மாநிலத்திற்கு மைய அரசு ரிசர்வ் காவல் படையை அனுப்பக் கூடாது என்பதுதான் எமது கருத்தாகும்.

அத்தியாயம் XVI.

மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான அமைப்பு.

நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்ட மன்றத் தேர்தலுக்கு ஒவ்வொரு பிரதேசத்தேர்தல் தொகுதிக்காகவும் பொதுவான ஒரு வாக்காளர் பட்டியல் இருக்கவேண்டுமென்றும், சமயம், இனம், சாதி அல்லது பால் அடிப்படையில் வாக்காளர் தொகுதி அமையக்கூடாது என்றும் நமதுஅரசமைப்புச் சட்டம் சொல்கிறது (உறுப்பு 325). நமது அரசமைப்புச் சட்டம் வயதுவந்த எல்லோரும் வாக்களிக்கும் உரிமைக்கு வகை செய்துள்ளது (உறுப்பு 326). இது, வேட்பாளர்களின் தகுதிகளையும், தகவின்மைகளையும் குறிப்பிடுகிறது. தேர்தல் தொகுதிகளை வரையறுக்கவும் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் தனிப்பட்டவகையுரை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1951-ல் தேர்தல் தொகுதிகள் வரையறுக்கப்பட்டன. 1951-ல் வரையறுக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று பரிந்துரைக்கிறோம்.

2. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்கள் இரண்டும், அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், தேர்தல் குறித்து நுண்ணிய வகையில் விவரிக்கின்றன. மாநிலச் சட்ட மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களைப் பொறுத்த வரையில், நாடாளுமன்றம் மாநிலத் தேர்தல்களைக் குறித்த விஷயங்களையும் கவனிக்கவேண்டும் என்பது முறையற்றதாகும். அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தாமலேயே, தேர்தல் குறித்து மாநிலங்களுக்குப் பல அதிகாரங்களை வழங்க முடியும். செய்ய வேண்டியது எல்லாம் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்கள் இரண்டையும் திருத்துவதேயாம். மைய அரசிடமும் அதன் ஆள்வைகளிடமும் இச்சட்டங்களினால் இப்போது ஒப்படைக்கப் பட்டுள்ள அதிகாரங்களை மாநில அரசுக்கும் அதன் அலுவலர்களுக்கும் மாற்றி அமைத்து திருத்தம் கொண்டுவரவேண்டும். ஆனால், தேர்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வை தொடர்ந்து இருந்துவரலாம்.

ஏற்கனவே கூறியபடி, இங்கு வேண்டுவது, தேர்தலும், அதற்குத் தொடர்பான விவகாரங்களையும் குறித்து மாநிலங்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கும் வகையில் தொடர்பான மையச் சட்டங்களில் திருத்தம் கொண்டுவருவதாகும். இவ்விரு மையச் சட்டங்களையும் அவற்றின்கீழ் இயற்றிய விதிகளையும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு மட்டுமே வரையறுக்கப்படவேண்டும் என்பதுதான் எமது கருத்து. மாநிலச் சட்ட மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்கள் குறித்து மாநிலச் சட்டமன்றங்களே தனிச்சட்டங்கள் இயற்றுமாறு விட்டுவிடலாம். மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தொடர்பான விவகாரங்களைப் பொறுத்தமட்டில் 327, 328-வது உறுப்புக்கள் மாநிலச் சட்டமன்றங்களுக்கு சட்டங்களியற்ற அதிகாரமளிக்கின்றன. மாநிலச்சட்ட மன்றங்களுக்கான தேர்தல் குறித்து சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு, மைய அதிகாரப் பட்டியலின் 72-வது பதிவு தனிப்பட்ட அதிகாரம் வழங்கியபோதிலும், நாடாளுமன்றம் ஒரு சட்டத்தில் செய்யும் வகையுரைகளுக்குட்பட்டு, மாநிலச் சட்டமன்றத் தேர்தலுக்கு மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றுவதற்கு, மாநில அதிகாரப்பட்டியலின் 37-வது பதிவு தனிப்பட்ட அதிகாரமளிக்கிறது. ஆகவே, அரசமைப்புச் சட்டம் திருத்தப் படாமலேயே இந்தக் காரியத்துக்காக இப்போதுள்ள சட்டங்களைத் தக்கவாறு மாற்றியமைத்து இங்கு நாம் கருதிய நோக்கத்தை நிறைவேற்றலாம்.

அத்தியாயம் XVII

மாநிலங்களிடையே நீர்த் தகராறுகள்.

மாநிலங்களிடையே ஓடும் ஆறுகள், நதிப்பள்ளத் தாக்குகள் குறித்து எழும் தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்குவதுபற்றி 262-வது உறுப்பு விவரிக்கிறது. 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் இதற்கு நிகராக உள்ள வகையுரைகளுக்கு அதாவது 130 முதல் 133 வரையுள்ள வகையுரைகளுக்கு இந்த உறுப்பு முற்றிலும் வேறுபட்டதே. 131-வது பிரிவின்படி, மாநிலங்களுக்கிடையே எழும் தண்ணீர் தகராறுகளைக் குறித்து முடிவு செய்துவந்தவர் ஆளுநர் தலைவராகும். வல்லுநர் ஆணைக் குழு ஒன்றன் ஆய்வுக்குப் பிறகே ஆளுநர் தலைவர் முடிவெடுக்க வேண்டியிருந்தது. 131-வது பிரிவின்கீழ் ஆளுநர் தலைவர் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் தமது உளத்தேர்வின்படி நடக்கக் கடமைப்பட்டிருந்தார். வரைவு அரசமைப்புச் சட்டத்தில் 130 முதல் 133 வரையுள்ள பிரிவுகளின் வகையுரைகள் அப்படியே சேர்க்கப்பட்டுள்ளன. மேற்படிக் குழுவின் அறிக்கையிலிருந்து எழுகிற சட்டப் பிரச்சினை குறித்து உச்ச நீதி மன்றக் கருத்தைப்பெற வரைவு அரசமைப்புச் சட்டத்தில் வகையுரையும் இருந்தது. ஆனல், இதை அடுத்து, ஏற்கனவே முதலில் உத்தேசிக்கப்பட்ட வகையுரைக்குப் பதிலாக, தற்போதுள்ள 262-வது உறுப்பு அமைத்துக் கொள்ளப்பட்டது. 1935-ம் ஆண்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது கூட, முன்னுள் சென்னை மாநில அரசு, மாநிலங்களிடையே நீர்த் தகராறுகளைக் குறித்து தீர்ப்பு அளிக்க இணைப்பாட்சி நீதி மன்றத்திற்குத் தனிப்பட்ட (exclusive) அதிகாரம் அளிக்கப்படுவது விரும்பத் தக்கதென்று இந்திய அரசின் சீரமைப்பு அலுவலகத்திற்குத் (Reforms Office) தெரிவித்தது. இத்தகைய விசாரணை அதிகாரம், இம் மாநிலத்துக்கும், மைசூர் மாநிலத்துக்குமிடையே ஏற்பட்ட 1892-ம்ஆண்டு ஒப்பந்தத்தைப் போன்ற ஒப்பந்தங்களையும் உள்ளிட்ட வகையில், அரசமைப்புச் சட்டத் தொடக்கத்திற்கு முன்பே செய்துகொண்ட ஒப்பந்தங்களையும் விசாரிப்பதற்கு ஏற்றவாறு விரிவுப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறியது. இத்தகைய ஒப்பந்தங்களுக்கு மைசூர் மாநிலம்

கூறும் '' பொருள் விளக்கம்................என்றுமே தகராறுக்கு மூலகாரணமாக இருக்கிறது.'' இது 1934-ல் மீண்டும் உறுதி செய்யப்பட்டது. தனி வல்லுநர் நடுவர் குழுவின் துணை கொண்டு தன் உளத் தேர்வின்படி நடந்துகொள்ளக் கூடிய ஆளுநர் தலைவர் இந்தத் தகராறைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்திய விவகார அமைச்சர் தெரிவித்தார். இக் கருத்து பற்றி தமது 17—3—1934-ம் நாளிட்ட கடிதத்தில் இவ்வரசு விரிவாக விவரித்துள்ளது. இக்கடிதத்தில், மாநிலங்களிடையேயும் அல்லது இணைப்பாட்சி அரசுக்கும் அதன் மாநிலங்களுக்குமிடையேயும் எழும் தகராறுகள் இணைப்பாட்சிக்கு வெளியே உள்ள ஓர் ஆள்வையின் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும் என்பது இணைப்பாட்சியில் வழக்கமில்லை என்றும் இணைப்பாட்சியின் தத்துவத்துக்கே முரண்பட்டது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆற்று உரிமைகள் குறித்து எழும் எல்லாத் தகராறுகளிலும் தீர்ப்பு வழங்கும் ஆயமாக இணைப்பாட்சி நீதிமன்றம் விளங்க வேண்டும் என்று இவ்வரசு கூறியது.

2. மைய-மாநில உறவை ஆய்வதற்கான நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் கற்றறி குழு இது பற்றி நன்கு விவரித்துள்ளது. மாநிலங்களிடையே தண்ணீர்த் தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்கப் பொருத்தமுடைய ஆள்வையாக இணைப்பாட்சி நீதிமன்றத்தை (Fede.al Court) ஏற்படுத்தக்கூடாது என்பதற்கான காரணங்களை கற்றறி குழு வகைப்படுத்தியுள்ளது. இதற்கு முன், 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் இயற்றப்படுவது சம்பந்தமாக அப்போதைய சென்னை மாநில அரசு சீரமைப்பு அலுவலகத்திற்கு தெரிவித்திருந்த கருத்துகள் அக்குழுவின் முன் இருந்தன. இது குறித்து இணைப்பாட்சி நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கக் கூடாது என்பதற்கு கற்றறி குழு கீழ்க்காணும் காரணங்களைக் காட்டியது :—

(1) தொகுக்கப்பட்ட அல்லது நிலையான சட்டம் இல்லை.

(2) 1935-ம் ஆண்டுக்கு முன்பு சட்ட உரிமைப் படிக்கன்றி சூழ்நிலைக்கு ஏற்ப ஆற்று நீர் வழங்கப்பட்டது.

(3) முன்னாள் இந்திய சமஸ்தானங்கள் இணைப்பும், மாநிலங்களின் சீரமைப்பும் தண்ணீர்ப் பங்கீடு குறித்து சில

முடிவுகளை விளைவித்தன. இத்தகைய முடிவுகளை மீண்டும் பரிசீலிக்க நேரிடலாம்.

(4) தண்ணீர்ப் பங்கீடும், தண்ணீர் வழங்குவதும் பெரிதும் உரிமைகள் அடிப்படையிலில்லாமல் சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்திடவேண்டும்.

1934-ல் அப்போதிருந்த சென்னை மாநில அரசு இணைப்பாட்சி நீதிமன்றத்திற்கு ஆதரவு அளித்து, அந்தக் கருத்துக்கு எதிரான மறுப்புரைகள் பற்றி ஆராய்ந்துள்ளது. இணைப்பாட்சி நீதிமன்றத் தீர்ப்புகளில் அறநெறிப் பொதுச் சட்டக் கோட்பாடுகளே பெரிதும் இடம் பெற்றிருக்கும் என்னும் மறுப்புரை, அத்தகைய தகராறுகள் நியாயமாகவும் பயனுள்ள வகையிலும் முடிவு செய்யப்படவேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் குறிப்பாக ஏற்பாடு செய்வதால் நீக்கப்படும் என்றும் குறிப்பிட்டது.

1935-ம் ஆண்டிற்கு முன்பு செயலில் இருந்த ஏற்பாடுகள் நிலைகுலைந்து போகலாம் என்று கற்றறி குழு மறுப்புரை தெரிவித்துள்ளது; ஆனல், 1935-ம் ஆண்டுக்கு முன்பு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் மதிப்பளிக்கப்படவேண்டும் என்று அன்றைய சென்னை மாநில அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது; மேலும் அவற்றுக்குப் பொருள் விளக்கம் தருவது அல்லது அவற்றை மாற்றியமைப்பது பற்றிய பிரச்சினை மிகவும் நியாயமாகவும், பயனுள்ள முறையிலும் நீர்ப்பகிர்வு செய்வது பற்றிய கோட்பாட்டையொட்டி முடிவு செய்ய வேண்டும் என்று சென்னை மாநில அரசு குறிப்பிட்டது.

3. இச்சிக்கல் குறித்து தீர ஆலோசித்துப் பார்த்த பிறகு நிருவாக சீரமைப்பு ஆணைக் குழுவைச் சேர்ந்த கற்றறி குழு இப்போது உள்ள ஏற்பாடுகளே தொடர்ந்து இருந்து வரலாம் என்பதாகச் சொல்லியது. இதன்படி, மாநிலங்களிடையே தண்ணீர்த் தகராறுகள், 1956-ம் ஆண்டு மாநிலங்களிடையே தண்ணீர்த் தகராறுகள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 33/1956) விசாரிக்கப்பட வேண்டும். மேற்சொன்ன சட்டத்தின்படி, ஒரு மாநிலம் மற்ருெரு மாநிலத்துடன் தண்ணீர் பங்கிடுவது குறித்து எழும் தகராறுகளை விசாரிக்குமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்ளும் போது, மைய அரசு, பேச்சு வார்த்தைகளினல் தீர்வு காண முடியாது என்று கருதினல், தீர்ப்பாயம்

ஒன்றை அமைக்கத்தான் வேண்டும். இது குறித்து மேற் கொள்ளவேண்டிய நடைமுறையைப் பற்றி திரு. கே. தமது கட்டுரையில் விரிவாகக் கூறியுள்ளார். 1956-ம் ஆண்டுச் சட்டத்தின் 11-வது பிரிவுடன் 262-வது உறுப்பைச் சேர்த்துப் பார்க்கையில் அது, மாநிலங்களிடையே தண்ணீர்த் தகராறுகளைப் பொறுத்தமட்டில், உச்ச நீதி மன்றம் மற்றும் ஏனைய நீதி மன்றங்களின் விசாரணை அதிகாரத்தைத் தள்ளிவிடுகிறது. ஆகவே எந்த ஒரு மாநிலமும் இந்த விஷயத்தை எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்ல முடியாது. ஏனைய தகராறுகளைப் பொறுத்த தனிப்பட்ட விசாரணை அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு 131-வது உறுப்பு வழங்கிய போதிலும், தண்ணீர்த் தகராறு குறித்த நிலை இது தான்.

4. இச் சந்தர்ப்பத்தில் எழக்கூடிய மற்றொரு சிக்கல் என்னவெனில், மேற்படி சட்டத்தின் கீழ் தீர்ப்பாயம் அளிக்கும் தீர்ப்பை நிறைவேற்றுவது எவ்வாறு என்பது தான். தீர்ப்பாயத்தின் தீர்ப்பே இறுதியான முடிவு என்றும், தகராறுக்குரிய இருதரப்பினரையும் கட்டுப் படுத்தும் என்றும், அதை இருதரப்பினரும் உடனே செயல் படுத்த வேண்டும் என்றும் அச்சட்டத்தின் 6-வது பிரிவு தெரிவிக்கிறது. இன்னும் கேள்விக்கு உரியதாக இருப்பது என்னவெனில், இந்தத் தீர்ப்பைச் செயல்படுத்துவது எவ்வாறு என்பதேயாம்.

1940-ம் ஆண்டு நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 10/1940) 17-வது பிரிவு சம்பந்தப்பட்ட நீதிமன்றத் திற்குஅளிக்கும் அதிகாரத்தின்படி, அந்த நீதிமன்றம் நடுவரின் முடிவுக்கிணங்கத் தீர்ப்பளித்து ஆணை பிறப்பிக்கலாம் என் பதை இங்குக் குறிப்பிடலாம். இதைப் போன்ற ஓர் ஏற்பாடு 1956-ம் ஆண்டுச் சட்டத்தில் இல்லாததால், எதற்கும் ஒத்துவராத ஒரு மாநிலத்தில் நடுவர் மன்றத் தீர்ப்பை எவ்வாறு செயல்படுத்துவதென்பது பெரிதும் ஐயத்திற் குரியதே. நடுவர் மன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து 131-வது உறுப்பைப் பயன்படுத்தலாம் என்று தமது கட்டுரையில் திரு. கே. கூறியுள்ளார். தகராறில் இரு தரப்பினர்களுக்குமிடையே உள்ள உரிமைகள் யாவும் நடுவர் மன்றத்தால் வெகுவாக விமர்சிக்கப்பட்ட பிறகு, நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தீர்ப்பை நிறைவேற்று வதற்கான சட்ட உரிமையை மாநிலம் தானாகவே பெறுகிறது

என்று இவர் கூறுகிறார். அரசமைப்புச் சட்ட வகையுரைகளின் படியும், மேற்படி சட்டத்தின் 11-வது பிரிவின் படியும் கருதிப் பார்த்ததில் மையச் சட்டத் துறைச் செயலாளருடைய வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தோன்றவில்லை. 11-வது பிரிவு தெளிவாகக் குறிப்பிடுவதாகவும் திட்டவட்டமாகவும் உள்ளது. உச்ச நீதிமன்றமோ ஏனைய எந்த ஒரு நீதிமன்றமோ, மாநிலங்களிடையே எழும் எந்த தண்ணீர்த் தகராறு குறித்தும் எந்த விசாரணை அதிகாரத்தையும் செலுத்த முடியாது எனத் திட்டவட்டமாக இப்பிரிவு தெரிவிக்கிறது. 262-வது உறுப்பை இப்பிரிவுடன் சேர்த்து வாசிக்கும் போது இப்பிரிவில், 131-வது உறுப்பின் கீழ் வழங்கிய விசாரணை அதிகாரமும் அடங்கியுள்ளதாகவே பொருள் கொள்ள வேண்டும். இந்த நிலையைத் தெரிந்து தான் திரு. கே. அவர்களும் 'நடுவர் மன்றத் தீர்ப்பு நிறைவேற்றுவது குறித்து எழும் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு வகை செய்து' 6-வது பிரிவைத் தக்கவாறு திருத்தி அமைப்பதால் நோக்கம் நிறைவேறக்கூடும் என்று கூறி முடிக்கிறார்.

5. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் உரிமைகளைத் தற்போதுள்ள ஏற்பாடுகள் பாதுகாக்கும் வல்லமை உடையனவா என்பது தான் பிரச்சினை. முன்னாள் சென்னை மாநில அரசு 1934-ல் கூறியபடி, எல்லா இணைப்பாட்சிகளிலும், இணைப்பாட்சி நீதி மன்றத்திடம் தான் மாநிலங்களிடை தண்ணீர்த் தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது ; 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் படி, ஆராயும் நிபுணர் குழு ஒன்றின் துணைகொண்டு தம் உளத் தேர்வின்படி இத்தகைய தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டியிருந்தவர் ஆளுநர் தலைவரே. இதற்கென அமைக்கப் படுகின்ற நடுவர் மன்றங்கள் தங்களுடைய தீர்ப்புகளைச் செயல்படுத்தும் வல்லமை பெற்றதாயில்லை. ஒருங்கிணைந்த நீதி விசாரணை மன்றம் இல்லாதபோது, இத்தகைய தகராறுகளுக்குப் பொருந்தத் தக்க பொதுக் கோட்பாடுகளை வகுப்பது இயலாது. எனவே, மாநிலங்களிடையே ஓடும் ஆறுகள் குறித்து எழும் தகராறுகள் எல்லாவற்றிற்கும் உச்ச நீதி மன்றமே தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், அதன் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்குரிய வகையுரைகள் இயற்றப் பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைக்கிறது.

அத்தியாயம் XVIII.

நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள கடற்படுகை

1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் 172(1)(அ) பிரிவின்படி, ஒரு மாகாணத்தில் அமைந்துள்ள நிலங்கள், அம்மாகாண அரசுக்காரியங்களுக்காக மன்னரிடம் நிலைபெற்று இருந்தன. ஒரு மாநிலத்தைச் சேர்ந்த நிலவரை, அதன் எல்லையோடு கூடிய நிலம் மட்டுமல்லாமல், தேசீய நீர் நிலைகளையும் கொண்டதாகும். இதில் மேலும் கடலோர மாநிலங்களில் நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பும் அடங்கும்; ஏரிகள், ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றிலுள்ள தண்ணீர் தேசீய நீர் நிலைகளென்றே கருதப்படுபவையாகும். நிலவரை சார்ந்த நீர்ப் பரப்பு என்பது, கடலோர மண்டலம், அல்லது ஒரு மாநிலத்தைச் சுற்றியமைந்துள்ள இயற்கைப் பகுதியில் உள்ள நீர்ப்பகுதியாகும். அந்த பரப்பு முழுக்கக் கடலோர மாநிலத்திற்கே நிலவரையைப் போலவே சொந்தமாகும்; அதன் மீது அதற்கு முழு ஆதிக்கம் உண்டு; அதிலுள்ள கனிமவளங்களைப் பெறவும், சுரங்கங்கள் அமைக்கவும் அதற்கே உரிமை உண்டு. மாநிலங்களும் அவற்றைச் சேர்ந்த நிலவரைகளும், இந்திய அரசமைபுச் சட்டத்தின் முதலாவது இணைப் பட்டியில் சொல்லியவாறு இருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தின் 1(2) உறுப்பு எடுத்துச் சொல்கிறது. மாநிலங்களின் நிலவரையிலிருந்து நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பு அந்த இணைப்பட்டியில் நீக்கப்படவில்லை. 297-வது உறுப்பு நாட்டின் நிலவரை சார்ந்த கடலின்கீழ் உள்ள நிலங்கள், கனிமவளங்கள் ஏனைய விலைமதிப்புடைய பொருள்கள் யாவும் மைய அரசிடம் நிலைபெறச் செய்கிறது. 297-வது உறுப்பு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படாதிருந்தால், கடற்படுகையும், நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள அடி நிலமும், மேற்பரப்பையும் அடி நிலப்பகுதியையும் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையுடன் மாநிலங்களின் உடைமையாகத்தான் இருந்திருக்கும்.

2. 297-வது உறுப்பைப் போன்ற வகையுரை எதுவும், 1947 அக்டோபரில் அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட வரைவுச் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

வரைவுக் குழு 1948-ல் தயாரித்த வரைவு அரசமைப்புச் சட்டத்திலும் இதற்கு நிகரான வகையுரை இல்லை. இக்கருத்து திரு ஆர்.ஆர், திவாகர், திரு எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி ராவ் ஆகியோருக்குத்தான் முதன் முதலில் தோன்றியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பில் மூன்று கல் தொலையளவுள்ள (three nautical miles) நிலங்கள், கனிமவளங்கள், ஏனைய விலை மதிப்புடைய பொருள்கள் மீது சொத்துரிமை ஆதிக்கம் குறித்து மைய அதிகாரப்பட்டியலில் ஒரு பதிவு சேர்க்க வேண்டும் என்று இவர்கள்கருத்து தெரிவித்தனர். இக்கருத்தையொட்டி, நிலவரை சார்ந்த நீர்ப்பரப்புக்குள் அமைந்த நிலம், கனிமவளம், ஏனைய விலை மதிப்புடைய பொருள்கள் மீது சொத்துரிமையும், ஆதிக்கஉரிமையும் மைய அரசிடம் தான் நிலை பெற்றிருக்க வேண்டும் என்றும் கடலோர மாநிலங்களுக்கு இருக்கக் கூடாது என்றும் எண்ணம் இருந்தால், அதற்குத் தக்கவாறு அரசமைப்புச் சட்டத்தில் தனி வகையுரை சேர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. வரைவுச் சட்டத்தில் தேவையான வகையுரை சேர்ப்பதென்றும் வரைவுக் குழு முடிவு செய்தது.

271-அ என்று இலக்கமிட்ட புதிய வகையுரையை முன்மொழிந்து அரசமைப்புச் சட்ட மன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் பின்வருமாறு கூறினர் :—

''தற்போது கடலோர மாநிலங்களாக இருந்து வருகிற பல மாநிலங்களை இந்திய நிலவரைக்குள் நாம் சேர்க்கவிருக்கிறோம். இத்தகைய மாநிலங்கள் தங்கள் நிலவரை சார்ந்த நீர்ப் பரப்புக்குள் அமைந்துள்ள எந்தப் பொருள் மீதுள்ள உரிமையும் தங்களிடம் நிலைபெறும் என்னும் பிரச்சினையை எழுப்பக்கூடும். வருங்காலத்தில் இது போன்ற வாதம் எழுப்பப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டே இவ்வுறுப்பைச் சேர்ப்பது அவசியமாகிறது.''*

நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் மீது ஓரளவு பொறுப்பாட்சி மைய அரசிடம் நிலைபெற்றிருப்பதாயிருக்க வேண்டும் என்றபோதிலும், கரையோரக் கடலில் எல்லா சொத்துக்கள், பொருள்கள் மீதுள்ள உரிமை மைய அரசிடமே நிலை பெற்றிருக்கக் கூடாது, என்பதாகத் திரு. ஏ. தாணுபிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார். கரையோரக் கடலில் கனிம வளங்கள் மீதுள்ள உரிமையை கடலோர மாநிலங்களிடமிருந்து பிரிக்கக் கூடாது என்றும் அவர் வாதிட்டார். †

* அ. ச. ம. வி. VIII, பக்கம் 887.
† அ. ச. ம. வி. VIII, பக்கம் 888.

இந்த விவாதத்திற்கு விடை பகரும் வகையில் டாக்டர் அம்பேத்கார், புதிய வகையுரையின் நோக்கத்தைப் பற்றி மீண்டும் பின்வருமாறு விவரித்துள்ளார் :—

"சாதாரணமாக ஒரு மாநிலத்து நிலவரை எல்லைகள் நிலவரையோடு முடிவதில்லை என்பதும், அதற்கு அப்பாலும் கடலில் மூன்று மைல் வரை செல்கிறது என்பதும் யாவரும் அறிந்ததே. இது ஒரு பொதுவான கோட்பாடு. அனைத்து நாட்டுச் சட்டம் இதை ஏற்றுக் கொண்டுள்ளது. இப்போது நமக்குள்ள அச்சம்—நான் உண்மையை மறைக்க விரும்பவில்லை—இதுதான்: ஒரு சில கடலோர மாநிலங்கள், எடுத்துக்காட்டாக கொச்சி, திருவாங்கூர், கட்ச் மாநிலங்கள் இந்திய ஒன்றியத்துக்குள் வரலாம். நாம் இப்போது கொண்டு வர முற்படுகிற வகையுரை போன்ற அரசமைப்பு சட்டத்தில் குறிப்பிட்ட வகையுரை இல்லாதிருந்தால் அத்தகைய மாநிலங்கள் இனி இவ்வாறு கூறலாம் ; அதாவது: 'எங்கள் இணைப்பு தொடக்கத்திலிருந்த மாநிலங்களின் நிலவரை மீது மைய அரசுக்கு ஆட்சி அதிகாரம் அளிக்கிறது. ஆனால், எங்கள் நிலவரை சார்ந்த நீர்பரப்பும் மைய அரசு ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டதில்லை! அனைத்து நாட்டுச் சட்டப்படியும், இணைப்புக்கு முன்பு இருந்த நிலைக்கிணங்கவும் எங்களுக்குச் சொந்தமான நில வரை மீது மட்டுமல்லாமல் நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பு மீதும் நாங்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரம் செலுத்து வோம்'.

ஆகவே, எந்த கடலோர மாநிலமாவது இந்திய ஒன்றி யத்தில் சேருவதாயின், அந்தக் கடலோர மாநிலத்தின் நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் உரிமை மைய அரசைச் சேரும் என்று அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாகவே கூறவிரும்புகிறோம். இவ்வகையான பிரச்சினை எவ்வகையான தகராறுக்கோ தீர்ப்புக்கோ என்றுமே இடமளிக்க விடக் கூடாது. இதற்காகவே 271-அ உறுப்பில் இவ்வகை யுரையை செய்ய விரும்புகிறோம்"*.

3. அனைத்து நாட்டுச் சட்டப்படி, நிலவரை சார்ந்த நீர்ப் பரப்பும் அதன் கீழ் அமைந்துள்ள நிலமும் மாநிலங்களிட மல்லாமல், இணைப்பாட்சி அரசிடம் நிலைபெறுது என்பதை யும், இந்த உறுப்பின் ஒரே நோக்கம் நிலவரை சார்ந்த நீர்ப்

* அ. ச. ம. வி. VIII, பக்கம் 892.

பரப்பின் மீது சமஸ்தானங்களுக்குள்ள உரிமையை எடுத்து விடுவது என்பதையும் டாக்டர் அம்பேத்கார் உரைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். டாக்டர் அம்பேத்கார் கருத்துப்படி, 297-வது உறுப்பின் நோக்கம், நிலவரை சார்ந்த நீர்ப் பரப்பின் கீழுள்ள அடி நிலம் மட்டுமேயல்லாது நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பு முழுவதுமே மைய அரசின் ஆளுகைக்குச் செல்லவேண்டும். ஆனல், ஏ.எம்.எஸ்.எஸ்.வி.எம். கம்பெனிக்கும், சென்னை மாநில அரசுக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் (I.L.R. 1953, சென்னை 1175) சென்னை உயர்நீதி மன்றம், 297-வது உறுப்புக்குப் பொருள் கூறுகையில் பின் வருமாறு திட்டவட்டமாகக் கூறியுள்ளது :—

''இவ் வகையுரையின்படி, மைய அரசிடம் நிலை பெறுவது நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள அடி நிலப்பகுதியேயன்றி, நிலவரைச் சார்ந்த நீர்ப்பரப்பன்று. சட்டத்தில் இவை இரண்டையும் ஒரே நிலையில் கருதுவதற்கில்லை.''

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ''மீனளம்'' மாநில அதிகாரப் பட்டியலில் சேர்ந்துள்ள ஓரினமாகும். '' நிலவரை சார்ந்த நீர்ப்பரப்புக்கு அப்பால் மீன் பிடிப்பும் மீனளமும்'' மைய அதிகாரப்பட்டியலில் வருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள தீர்ப்பில் சென்னை உயர் நீதிமன்றம், மாநில அதிகாரப் பட்டியலின் 21-வது பதிவுப்படி, நிலவரை சார்ந்த நீர்ப்ப பரப்பில் மீனளம் குறித்து மாநிலச் சட்டமன்றம் சட்டங்கள் இயற்றத் தகுதியுடையது என்று குறிப்பிட்டுள்ளது.

4. 297-வது உறுப்பு, கண்டத் திட்டினை (Continontalshelf) குறிப்பிடுகிறது. 297-வது உறுப்பு சேர்க்கப்படாதிருந்தால், நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள கடலடிப் பகுதியும், அதிலுள்ள கனிமவளமும் கடலோர மாநிலங்களிடமே நிலை பெற்றிருக்கும். அமெரிக்காவிலும் இதுதான் தற்போது இருந்துவரும் நிலையாகும். எண்ணெய்க் கிணறுகள், கனிம வள எண்ணெய் வயல்கள் (பெட்ரோலியம்), பாறையெண்ணை சுரங்கங்கள், கனிமங்கள் குறித்து மைய அதிகாரப் பட்டியலில் உள்ள சட்டமியற்று பதிவுகள் மாநில அதிகாரப்பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும் என்று மற்ருெரு அத்தியாத்தில் கூறியுள்ளோம். இக்கருத்துக்கிணங்க, இவ்வுரிமையை கண்டத்திட்டுக்கு மட்டும் உரித்தாக்கும் வகையில் 297-வது உறுப்பு மாற்றியமைக்கப்படலாம் என்று பரிந்துரைக்கிருேம்.

அப்போது நிலவரை சார்ந்த நீர்ப்பரப்பின் கீழுள்ள கடலடிப் பகுதியையும் அதிலுள்ள கனிம வளங்களையும் பெறும் உரிமை மாநிலங்களிடம் நிலைபெறும். கண்டத்திட்டில் இயற்கை வளங்களை ஆய்ந்து மேம்படுத்துவதற்கு அமெரிக்காவில் 1953-ம் ஆண்டுச் சட்டம் இணைப் பாட்சி அரசுக்கு அதிகாரமளிக்கிறது என்பதை இங்குக் குறிப்பிடலாம். எமது கருத்து செயல்படுத்தப்படுமாயின், அமெரிக்காவில் இப்போது நிலவுகிற நிலைக்கு இணக்கமாக 297-வது உறுப்பைக் கொண்டுவரும். 'ஆ' பாக மாநிலங்கள் இப்போது இல்லை என்பதால் டாக்டர் அம்பேத்கார் கூறியுள்ள காரணம் இனி எடுபடாது எனக் கூறலாம்.

அத்தியாயம் XIX

மைய அரசு நிர்வாகம்.

தேசிய மட்டத்தில் மைய அரசின் அமைச்சரவை, தலைமை நிர்வாக அமைப்பாகும். நாட்டின் ஒருமைப் பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாக்கும் கருவி யாக மைய அரசின் அமைச்சரவை அமையவேண்டுமென இக்குழு கருதுகிறது.

2. சமயம், மொழி, இனம், பண்பாடு ஆகியவை மிகவும் வேறுபட்டுள்ள ஒரு நாட்டில் இயன்றவரையிலும் நாடாளு மன்ற மரபிற்கு ஒத்தவகையிலும் பல்வேறு வட்டாரங்களுக் கும் மொழிப் பகுதியினருக்கும் மைய அரசின் அமைச்சரவை யில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைமுறையி லுள்ள குடியரசுத் தலைவர் அரசு முறையின்கீழ் நாடாளு மன்ற வகையான அமைச்சரவைக்கு இடமில்லை. அமைச்ச ரவை உண்மையான அதிகாரம் எதையும் செலுத்த முடியாது; ஆயினும் அங்கேகூட அமைச்சரவையின் உறுப் பினர்கள், பல்வேறு வட்டாரங்களுக்குப் பிரதி நிதித்துவம் அளிக்கப்படும் வகையில் அமர்த்தப்படுகின்றனர். குடியரசுத் தலைவருக்கு ஆலோசனைகூற எந்த அமைச்ச ரவையையும் அமெரிக்க அரசமைப்புச் சட்டம் குறிப்பிட வில்லை. அமெரிக்க அமைச்சரவை, முறைப்படியல்லாத அடிப்படையில் மட்டுமே நியமிக்கப்படுகிறது; இது ஓர் அரசியல் அமைப்பு ஆகும். இருந்தும், இயன்றவரையில் விரிவான நிலவரை அடிப்படையினை அது எய்துவதற்கு. முயற்சிகள் செய்யப்படுகின்றன.

3. கனடா அமைச்சரவையின் பெரிதும் குறிப்பிடத்தக்க தன்மையாதெனில் அதன் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத் தன்மையாகும். டொமினியன் முழுவதிலும் வெவ்வேறான மாகாணப் பகுதிகள், சமய, இனப்பற்றுகளையும் பிற பற்றுக் களையும் ஒருங்கிணைக்க இது முயலுகிறது. முதல் தேவை யாதெனில், ஒவ்வொரு மாகாணமும் முடிந்தால் அமைச்ச ரவையில் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது கொண்டிருக்க வேண்டுமென்பதாகும். அமைச்சரவை இவ்வாறு

இணைப்பாட்சித் தன்மையைப் பெறுகிறது. ஒவ்வொரு மாகாணமும் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்னும் மரபு மற்றொரு மரபை உருவாக்கியுள்ளது; அதாவது, இரண்டு பெரும் மாகாணங்களான குபெக், ஒண்டாரியோ ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதிக்கு மேல் இருக்க வேண்டுமென்பதாகும். அமைச்சரவையில் குறைந்தது மூன்று பிரெஞ்சு பேசும் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்பதும் உறுதி செய்யப்படுகிறது. அமைச்சர் நியமனத்தின்போது இனமும் மதமும் கவனமுடன் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. குபெக்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரெஞ்சு பேசும் கனடாவைச் சேர்ந்தவர் மூவர் எப்போதும் ரோமன் கத்தோலிக் மதத்தை சேர்ந்தவராகவும் ஆங்கிலம் பேசும் கனடாக்காரர் ஒருவர் வழக்கமாக புராடெஸ்டண்ட் மதத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கின்றனர். அமைச்சரவையில் பெரும்பாலும் ஐரிஷ் ரோமன் கத்தோலிக்கரும் இருப்பார். பகுதிவாரியான பிரதிநிதித்துவத்தின் பல்வேறு வகை அடிப்படையில் அமைச்சரவையை அமைக்கும் இந்த நடைமுறை, கனடா போன்ற பெரியதும் பலதிறப்பட்டதுமான நாட்டின் இன, மத, கலாச்சார வேறுபாடுகள் நிலவுகின்றதென்ற காரணத்தால் நியாயமானதாகக் கொள்ளப்படுகிறது.

4. ஆஸ்திரேலியாவிலுள்ள லேபர் கட்சி, கன்ட்ரி கட்சி, லிபரல் கட்சி ஆகிய மூன்று பெரும் அரசியல் கட்சிகள், பல மாநிலங்களிலும் அக் கட்சிகளின் அமைப்புகளிலும் அவற்றின் முக்கிய அடித்தளத்தைக் கொண்டுள்ளன. இது, அந்த அரசமைப்புச் சட்டத்தின் இணைப்பாட்சித் தன்மையை வெளிப்படுத்துகிறது. அமைச்சரவையில் கிராமப்புறப் பிரதிநிதிகளும் நகரப்பகுதிப் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் ; இயன்றால், அதில் ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும். ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்ட அமைப்பில் கடன்மன்றம் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இணைப்பாட்சிக்கும் பல மாநிலங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும் அது. இந்த ஒப்பந்தத்திற்கு அரசமைப்புச் சட்டத்திருத்தம் மூலம் சட்ட பூர்வமான தகுதி அளிக்கப்பட்டுள்ளது; காமன்வெல்த் நாடாளுமன்றத்தாலும் மாநிலங்களின் நாடாளுமன்றங்களாலும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் மூலமும் சட்ட பூர்வமான தகுதியளிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள மேலவை (Senate)

நிறைவேற்றும் கடமைகளையே ஆஸ்திரேலியாவில் கடன் மன்றம் நிறைவேற்றுவதாகக் கூறப்படுகிறது. மாநிலங்களின் நலன்களைப் பாதுகாப்பது ஆஸ்திரேலியக் கடன்மன்றம் என்றும் கூறப்படுகிறது. இதில், ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சரும் பல மாநிலங்களின் முதல் அமைச்சர்களும் அல்லது அவர்களின் பிரதிநிதிகளும் இருப்பர்.

5. சுவிட்சர்லாந்தில் உள்ள தேசிய நிர்வாக சபை, இணைப்பாட்சி மன்றமென அழைக்கப்படுகிறது. இதில் இணைப்பாட்சி அவையால் (நாடாளு மன்றம்) நான்கு ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள் உள்ளனர். இந்த வகை நிர்வாகம், குடியரசுத் தலைவர் முறையையோ நாடாளுமன்ற முறையையோ அடிப்படையாகக் கொண்டில்லை. சுவிட்ஸர்லாந்தில், இணைப்பாட்சி மன்றத் தேர்தலில் எழுதி வைக்காத இரண்டு மரபு வழிகள் பின்பற்றப்படுகின்றன. முக்கியமான மாகாணங்களாகிய பெர்ன், ஜுரிச் ஆகியவை அமைச்சரவையில் எப்போதும் பிரதிநிதித்துவம் அடைகின்றன. பிரெஞ்சு மொழி பேசும் மாகாணங்களில் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பெரியதான வாட் (Vaud) என்ற மாகாணம் அமைச்சரவையில் எப்போதும் பிரதிநிதித்துவம் பெற்று வருகிறது. மற்ருெரு மரபு என்னவென்ருல், ஜெர்மென் மொழி பேசும் மாகாணங்களிலிருந்து ஐந்துக்கு மேற்படாத அமைச்சரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதாகும். இவ்வாறு, பிரெஞ்சு மொழி பேசும் மாகாணங்களில் ஒன்று அல்லது இத்தாலி மொழி பேசும் மாகாணம் அல்லது இரண்டும் எப்போதும் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. ரோமன் கத்தோலிக்கர்கள், பிராடெஸ்டண்டுகள் ஆகியோருக்கும், முக்கிய மொழி பேசுவோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்ற வழக்கம் உள்ளது. நாட்டிலுள்ள லிபரல் கட்சி, கத்தோலிக்க கன்சர்வேடிவ் கட்சி, உழவர் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகிய நான்கு அரசியல் கட்சிகளும் அமைச்சரவையில் இடம் பெறுவ்தற்கும் உறுதி செய்யப்படுகிறது.

6. 1950, ஜனவரி 26-ம் நாள் நமது அரசமைப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதிலிருந்து, பத்து அமைச்சரவைகள் மைய அரசில் பதவியில் இருந்துள்ளன. அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் சொந்த இடம் யாதென்பதுபற்றி அல்லது அவர்கள் எந்த இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்

பட்டனர் என்பது பற்றிச் சரியான விவரம் கிடைக்கவில்லை. கைவசமிருந்த விவரத்தைக் கொண்டு, மைய அரசின் காபினட் அமைச்சர்கள் சார்ந்துள்ள மாநிலம் அல்லது மாநிலங்களை அறிய இக்குழு முயன்றது. தோராயமாக ஆராய்ந்ததில் பீகார், குஜராத், மராட்டியம் பஞ்சாப், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் எப்போதும் மைய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெற்று வருகின்றன. 1952, மே, 13-ம் தேதியிலிருந்து 1957, ஏப்ரல், 17-ம் தேதி வரையில் உள்ள காலப்பகுதியில், 20 மையக் காபினட் அமைச்சர்களில் அறுவர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 1962, ஏப்ரல், 10-ம் தேதியிலிருந்து 1964, மே 27-ம் தேதி வரையிலான காலப்பகுதியில் காபினட் மைய அமைச்சர்கள் 24 பேரில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் 6 பேர். தற்போதைய அமைச்சரவை தவிரத் தமிழ் நாடும் 1950, மே முதல் 1952 மே வரையிலான காலப்பகுதி தவிர மேற்கு வங்காளமும் காபினட் அமைச்சர்களால் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. அத்தகைய அமைச்சர்களின் எண்ணிக்கை அவ்வப்போது மாற்றமடைந்திருக்கின்றன. மூன்று அல்லது நான்கு சந்தர்ப்பங்கள்தவிர * மற்ற சமயங்களில் ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களிலிருந்து மைய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அசாம், மத்தியப் பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தானம், ஜம்மு-காஷ்மீர் மாநிலங்கள் அமைச்சரவையில் ஒன்று அல்லது இரண்டு

* பிரதிநிதித்துவம் இல்லாத காலப் பகுதி.

ஆந்திரப் பிரதேசம் : 26—1—50 முதல் 6—5—50 வரை; 6—5—50 முதல் 13—5—52 வரை; 17—4—57 முதல் 10—4—62 வரை.

கேரளம் : 27—5—64 முதல் 9—6—64 வரை; 9—6—64 முதல் 11—1—66 வரை; 11—1—66 முதல் 24—1—66 வரை; 24—1—66 முதல் 13—3—67 வரை; 23—5—70 முதல் இன்று வரை.

மைசூர் : 26—1—50 முதல் 6—5—50 வரை; 6—5—50 முதல் 13—5—52 வரை; 11—1—66 முதல் 24—1—66 வரை; 24—1—66 முதல் 13—3—67 வரை.

சந்தர்பங்களில்தான் † பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. காபினட் அமைச்சர்கள் நியமனத்தில் நிகரான நடைமுறை விதி அல்லது மரபு பின்பற்றப்படுவதில்லையென்பதை இது காட்டுகிறது. எல்லாச் சமயங்களிலும் சில மாநிலங்கள் பிரதிநிதித்துவம் பெறுகையில், நீண்ட காலத்திற்குச் சில மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதில்லை. நமது அரசமைப்புச் சட்டத்தைப் போன்ற அதே வகையான அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ள பிற நாடுகளில் நிலவும் நடைமுறையைக் கருத்தில் கொண்டு பார்த்தால், நாடாளுமன்ற அரசு முறைக்கு ஏற்றபடியும் அதற்கேற்ற எல்லாவிதிகளுக்கு உட்பட்டும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் மைய மட்டத்திலுள்ள அமைச்சரவை அமைப்பை முறைப்படுத்தி மரபு வழிகளை நிறுவுவது நம் தலைவர்களுக்கும் அரசியல் மேதைகளுக்கும் இயலாத ஒன்றல்ல. ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவு எண்ணிக்கையில் மைய அமைச்சரவையில் நியமிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களையும் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளோம். அத்தகைய நடைமுறை எதிர்காலத்திலும் ஏற்படாது காக்கும் பொருட்டு, எந்த ஒரு மாநிலத்தைச் சேர்ந்த காபினட் தகுதிவாய்ந்த மைய அமைச்சர்களின் எண்ணிக்கையும் மொத்த அமைச்சர்கள் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக் கூடாதென்பதை உறுதிப் படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

† பிரதிநிதித்துவம் உள்ள காலப் பகுதி.

அஸ்ஸாம் :	24—1—66 முதல் 13—3—67 வரை; 13—3—67 முதல் இன்று வரை.
மத்தியப் பிரதேசம் :	6—5—50 முதல் 13—5—52 வரை; 13—5—52 முதல் 17—4—57 வரை.
ஒரிஸ்ஸா :	6—5—50 முதல் 13—5—52 வரை.
ராஜஸ்தானம் :	10—4—62 முதல் 27—5—64 வரை.
ஜம்மு—காஷ்மீர் :	13—3—67 முதல் இன்று வரை.

அத்தியாயம் XX

அரசமைப்புச் சட்டத் திருத்தம்.

எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத்திலும், அதனைத் திருத்துவதற்கு வகை செய்வதற்காக எப்போதும் வகையுரை ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டத்தைப் போன்ற ஓர் அரசமைப்புச் சட்டத்தில் இதனைக் காணலாம். மரபுவகையான மற்ற இணைப்பாட்சி அரசமைப்புச்சட்டங்களில் திருத்தம் பற்றிக் காணப்படுகின்ற வகையுரைகளை இப்போது ஆராயலாம்:—

அமெரிக்க ஐக்கிய நாடுகள்—

உறுப்பு V—பின்வரும் நான்கு முறைகள் குறிக்கப்பட்டுள்ளன :—

(1) நாடாளுமன்றத்தின் ஒவ்வோரவையிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் செயற் குறிப்பு நிறைவேற்றப்பட்டு நான்கில் மூன்றுபங்கு மாநிலங்களின் சட்ட மன்றங்களால் ஏற்கப்படுதல்.

(2) நாடாளுமன்றத்தின் ஒவ்வோரவையிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் செயற்குறிப்பு நிறைவேற்றப்பட்டு நான்கில் மூன்று பங்கு மாநிலங்களில் கூட்டப்பட்ட மாநாடுகளால் ஏற்கப்படுதல்.

(3) மூன்றில் இரண்டு பங்கு மாநிலச் சட்ட மன்றங்களால் செயற்குறிப்பு நிறைவேற்றப்பட்டு நான்கில் மூன்று பங்கு மாநிலச் சட்டமன்றங்களால் ஏற்கப்படுதல்.

(4) மூன்றில் இரண்டு பங்கு மாநிலச் சட்டமன்றங்களால் செயற்குறிப்பு நிறைவேற்றப்பட்டு நான்கில் மூன்று பங்கு மாநிலங்களில் கூட்டப்பட்ட மாநாடுகளால் ஏற்கப்படுதல்.

சுவிட்சர்லாந்து—

உறுப்புகள் 119 முதல் 123 வரை.

(1) இணைப்பாட்சி சட்டமன்றத்தின் ஒவ்வோரவையின் பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு மொத்த வாக்குகளில் பெரும்பான்மையுடனும் பெரும்பான்மை

மாகாணங்களில் பெரும்பான்மையுடனும் மக்களின் நேர்முக வாக்களிப்பால் ஏற்கப்படுதல்.

(2) ஐம்பதாயிரம் வாக்காளர்களால் கையொப்பமிடப் பட்ட தொடக்க மனுவின் மூலமான செயற்குறிப்பு. இந்தச் செயற்குறிப்பு ஒரு குறிப்பிட்ட திருத்த வடிவில் இருக்கு மானல் அதை அவ்வடிவிலேயே இணைப்பாட்சி ஆள்வை மக்களின் வாக்களிப்புக்கு அனுப்பவேண்டும்; தேசீயச் சட்ட மன்றப் பேரவை அந்த மனுவில் குறிப்பிட்டுள்ள பொதுக் கோட்பாட்டை அமைத்து ஒரு திருத்தத்தை தயாரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையாக அது உருவெடுத் தால், அத்தகைய திருத்தம் தயாரிக்கப்பட வேண்டுமா என்னும் கேள்வியைச் சட்டமன்றப் பேரவை, முதலில் மக்கள் வாக்கிற்கு வைக்கவேண்டும்; அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டால், பின்னர் திருத்தம் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு நேர்வுக்கும் பெரும்பான்மைபற்றிய அதேதேவைக் குட்பட்டு அதனை மக்கள் வாக்கிற்கு வைக்க வேண்டும்.

இரண்டு அவைகளின் வாக்குகளாலோ ஒரே அவையின் வாக்கினலோ 50,000 வாக்காளர்களின் மனுவினலோ தொடங்கப்பட்டு அரசமைப்புச் சட்டம் முழுமையாகத் திருத்தப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று வகையில் யாதேனுமொன்ருல் கோரப்பட்டால், அந்தச் செயற்குறிப்பு மக்கள் வாக்கிற்கு விடப்படுகிறது. அது ஏற்கப்படுமானல், புதிய அரசமைப்புச் சட்டத்தை வரைவதற்காகச் சட்ட மன்றம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறது; அவ்வாறு திருத்தியமைத்த அரசமைப்புச் சட்டம், பின்னர் மக்கள் வாக்கிற்கு வைக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா—

பிரிவு 128—திருத்தச் செயற்பாடு, மூன்று கட்டங்கள் அடங்கியது. எண்ணியுள்ள சட்டம் இரண்டு அவைகளாலும் முழுமையான பெரும் பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். இரண்டு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட பின்னர், அது இரண்டு மாதங்களுக்குமேல் ஆறு மாதங் களுக்குள் மக்கள் வாக்கிற்கு வைக்கப்படவேண்டும். பெரும் பான்மை மாநிலங்களில் பெரும்பான்மை வாக்காளர்களாலும் காமன்வெல்த்தில் வாக்களிக்கும் அனைத்துவாக்காளர்களின் பெரும்பான்மையாலும் ஏற்கப்பட்டால், ஆளுநர் தலைவரின் இசைவைப் பெற அவரிடம் அளிக்கப்படலாம்.

மேலே கூறப்பட்ட விதிகளுக்கு இரண்டு விலக்குகள் உள்ளன :—

(1) எண்ணியுள்ள சட்டம் ஓர் அவையினுல் மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தாலும்கூட, அந்த அவை அதனை இருதடவை நிறைவேற்றியிருந்து, மற்ற அவை அதனை இரு தடவை தள்ளுபடி செய்திருந்தால், முதலில் குறிப்பிடப்பட்ட அவையினுல் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சிக்கிடையில் குறைந்தது மூன்று மாத இடையீடு கழிந்தபின், ஆளுநர் தலைவர் அதை வாக்காளர்களிடம் வைக்கலாம் ;

(2) நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளுள் ஒன்றில மாநிலத்தின் விகிதப்படியான பிரதிநிதித்துவத்தைக்குறைத்து அல்லது பிரதிநிதிகள் அவையில் (நாடாளுமன்றக் கீழவை) மாநிலத்தின் பிரதிநிதிகளின் குறைந்த எண்ணிக்கையைக் குறைத்து அல்லது மாநிலத்தின் எல்லைகளை அதிகரித்து, குறைத்து அல்லது மற்றபடி மாற்றியமைத்து அல்லது அவை பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை எவ்வகையிலேனும் பாதிப்பதாக இருந்தால் அந்த மாநிலத்தில் வாக்களிக்கும் பெரும்பான்மை வாக்காளர்களுடைய ஒப்புதலின்றி மாற்றம் ஏதும் செய்யக்கூடாது என்பது இரண்டாவது விதிவிலக்கு.

2. முதலில் இயற்றப்பட்ட 1867-ம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம், டொமினியன் நாடாளுமன்றத்தால் அது திருத்தப்படுவதற்கான வகையுரை எதையும் கொண்டிடிருக்கவில்லை. குறித்த சில பொருள்கள் நீங்கலாக மற்றவற்றில் அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு, டொமினியன் நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1949-ல்தான் அந்தச் சட்டத்தைத் திருத்தியமைத்தது. பின்னர் 1951-ம் ஆண்டில் கூட, டொமினியன் நாடாளுமன்றம் முதியோர் ஓய்வூதியம் பற்றிச் சட்டமியற்றுவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டு பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் மாற்றியமைக்கவேண்டியதாயிற்று. அரசமைப்புச் சட்டத்தால் மாகாணங்களுக்கெனத் தனியாக ஒப்படைக்கப்பட்டுள்ள எந்தப் பொருள்கள் குறித்தும் செயல் மேற்கொள்ள டொமினியன் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. துணை ஆளுநர் பதவி நீங்கலாக மற்றவற்றில் மாகாணச் சட்ட மன்றங்கள் அவற்றின் அரசமைப்புச் சட்டங்களில் திருத்தம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

3. அரசமைப்புச் சட்டத்திருத்தம் யாதாயினும் அதன் தன்மை யாதாயினும் அதற்கு உறுப்புச் சட்டமன்றங்கள், மாநாடுகள் அல்லது மக்கள் வாக்களிப்பு மூலமாக இணைப் பாட்சியின் உறுப்புகளினுடைய ஏற்பு குறிப்பிட்ட வீதத்தில் தேவைப்படுகிறது என்பதை அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியாஆகியவற்றின்அரசமைப்புச் சட்டங்களிலிருந்து அறியலாம். ஆகவே, ஏனைய இணைப்பாட்சிகளில் இரட்டை நடவடிக்கைத் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது; பொது அல்லது தேசியச் சட்டமன்றத்தினால் மேற்கொள்ளப் படும் நடவடிக்கை, அதனோடு கூட, உறுப்புகளின்பெரும் பான்மை சட்டமன்றங்களால் அல்லது வாக்காளர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை. மாற்றப்பட முற்படும் வகையுரை என்னவாயினும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒவ்வொன்றுக்கும் இது பொருந்துகின்றது.

4. நமது அரசமைப்புச் சட்டம் அதைத்திருத்த மூன்று வெவ்வேறு முறைகளுக்கு வகை செய்கிறது. அவற்றின்படி, (1) நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் குறைந்த அளவுபெரும்பான்மையினால் திருத்தம் செய்யப்படும்; எடுத் துக்காட்டு 4, 169, 239-அ; (2) நாடாளுமன்றத்தின் ஒவ் வோர் அவையிலும் சிறப்புப் பெரும்பான்மையினால் செய்யப் படும் திருத்தம்; அதாவது, தொடர்புடைய அவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையும், மற்றும் வந்திருந்து வாக்களிக்கும் அவை உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையும்; 368-வது உறுப்பின் வரம்புரையில் குறிப்பிட்டுள்ளவை நீங்கலான மற்றவற்றிற்கு அந்த உறுப்பின் முதல் பத்தி இதற்கு வகை செய்கிறது. (3) மேலே இனம் (2)-ல் விவரிக்கப்பட்டுள்ள முறையில் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் சிறப்புப் பெரும்பான்மையினாலும் அதனோடு, குறைந்தது பாதிக்குக் குறையாத மாநிலங்களின் சட்டமன்றங்களால் ஏற்கப்படுவதனாலும் செய்யப்படும் திருத்தம்; இது, 368-வது உறுப்பின் வரம்புரையில் குறித்துள்ள பொருள்களுக்குப் பொருந்துகின்றது. மாநிலங்களின் ஏற்பு தேவைப்படுகின்ற திருத்தங்கள், குடியரசுத் தலைவர் தேர்தல், ஒன்றியம், மாநிலங்கள் ஆகியவற்றின் நிர்வாக அதிகாரத்தின் அளவு, ஒன்றிய நிலவரைகளுக்கான உயர்நீதி மன்றங்கள், ஒன்றியத் தின் நீதித்துறை, மாநில உயர்நீதி மன்றங்கள், ஒன்றியத் துக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான சட்டமியற்றும்

உறவுகள், சட்டமியற்றும் அதிகாரப்பகிர்வு, நாடாளு மன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் 368-வது உறுப்பினையும் பற்றியனவாகும்.

5. ஓர் இணைப்பாட்சி அமைப்பில், அரசமைப்புச் சட்டத் தின் எந்தத் திருத்தத்திலும் உறுப்பு மாநிலங்கள் எப்போதும முழு அளவில் பங்கேற்பதை உறுதிப்படுத்துவது அவசிய மாகிறது. 368-வது உறுப்பின் வரம்புரையில் கொடுத்துள்ள பட்டியல், மாநிலங்கள் முக்கியமான அக்கறை கொண்டுள்ள வகையுரைகள் அனைத்தையும் கொண்டுள்ளது எனக் கூற முடியாது. சான்றாக, மைய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான சட்டமியற்றும் உறவுகள் பற்றியுள்ள வகை யுரைகள் (பாகம் XI-ன் I-வது அத்தியாயம்) குறைந்தது பாதிப்பங்கு மாநிலங்களின் ஆதரவு இல்லாமல் திருத்தம் செய்யமுடியாது என்று இருக்கையில், இருதிறப்பட்ட ஆள் வைகளுக்கிடையிலான ஆட்சி உறவுகள் பற்றிய (அதே பாகத்தின் II-வது அத்தியாயம்) வகையுரைகள் மாநிலங்களின் இசைவின்றியே நாடாளுமன்றத்தினால் மாற்றியமைக்க முடியும் என்றுள்ளது. மேலும், 268-முதல் 279 வரையுள்ள உறுப்புகளில் ஒன்றியத்துக்கும் மாநிலங்களுக்கும் இடையே வருவாய்ப்பகிர்வு பற்றிய வகையுரைகள் அடங்கியுள்ளன. நாடாளு மன்றத்தின் ஒவ்வோர் அவையிலும் சிறப்புப் பெரும்பான்மைக்குட்பட்டு, ஒன்றியம் இந்த வகையுரைகளை மாற்றியமைக்க முடியும். மாநிலங்களுடன் கலந்தறிவது கூட அவசியமில்லை. இதேபோல, XVII-வது பாகத்தில் ஆட்சிமொழி பற்றிய வகையுரைகளுங்கூட 368-வது உறுப்பின் முதன்மைப் பத்தியின்கீழ் மாற்றம் செய்யப்படுதற்கு உட் பட்டுள்ளன ; மாநிலங்களுக்கு உரிமை ஏதும் இல்லை.

6. அரசமைப்புச் சட்டத்தினை உருவாக்கத் தொடங்கி யதிலிருந்தே, அதனை மாற்றியமைப்பதில் மாநிலங்களுக்கு ஒப்படைக்கத்தக்க பங்கு பற்றி அரசமைப்புச் சட்டத்தை வரைகின்ற பொறுப்பினை ஒப்படைக்கப் பெற்றவர்களால் ஆராயப்பட்டது.* திருத்தம் செய்யும் செயற்பாட்டில் மாநிலங்கள் எந்த அளவிற்குப் பங்கு பெற்றாக வேண்டும் என்பதே இங்கே ஆராயத்தக்கது. 368-வது உறுப்பின் வரம்புரையின்கீழ், பாதிப் பங்கு மாநிலங்களின்

* விவாதங்களின் சுருக்கத்தை X-வது இணைப்பில் காண்க.

ஏற்பு தேவையாக உள்ளது ; அதுவும் அந்த வரம்புரையில் குறிப்பிட்டுள்ள வகையுரைகள் பற்றிய திருத்தங்களுக்கு மட்டுமே தேவையாகவுள்ளது.

7. தற்போது 18 மாநிலங்கள் உள்ளன ; அவற்றில் பாதி எண்ணிக்கை 9. எதிர்க்கின்ற மாநிலங்களின் எண்ணிக்கைகுச் சமமான எண்ணிக்கை கொண்ட மாநிலங்களின் ஆதரவுடன் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யக்கூடிய வாய்ப்புள்ளதை மறுக்க முற்றிலும் இயலாது. ஆகவே, 9 மாநிலங்களின் ஆதரவைக் கொண்டே மற்ற 9 மாநிலங்கள் எதிர்த்தாலுங்கூட திருத்தம் சட்டமாக முடியும் ; அந்தத் திருத்தம் எதிர்க்கின்ற மாநிலங்களுக்குத் தீங்கானதாகக் கூட இருக்கக்கூடும். இவ்வாறு ஏற்படக்கூடிய நிகழ்ச்சி எவ்வளவு அரிதாக இருப்பினுங்கூட, புறக்கணிக்க இயலாது. எந்த நேரத்திலும் மாநிலங்களின் எண்ணிக்கையில் பாதிப் பங்கு என்பது மாநிலங்களின் பெரும்பான்மையாக இருக்கத் தேவையில்லை. மாநிலங்களின் எண்ணிக்கை ஒற்றைப்படை எண்ணாக இருக்கும்போது, ஒரே ஒரு பெரும்பான்மையின் ஆதரவினால் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி விடமுடியும். இணைப்பாட்சிச் செயற்பாடு நடப்பில் இருக்கையில், திருத்தச் செயற்பாட்டினை மிகவும் கடினமானதாக அல்லது மிகவும் எளிதானதாக ஆக்காமல் திருத்தச் செயற்பாட்டில் கணிசமான எண்ணிக்கையான மாநிலங்கள் பங்கேற்கச் செய்வது எப்போதும் பாதுகாப்பானதும் விரும்பத்தக்கதுமாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், நான்கில் மூன்று பங்கு மாநிலங்களால் ஏற்கப்படவேண்டும் ; ஸ்விட்சர்லாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் அரசமைப்புச் சட்டத்திருத்தம் எதற்கும் உறுப்புகளின் பெரும்பான்மையினால் ஏற்கப்படவேண்டியதுடன் பெரும்பான்மை வாக்கினால் மக்கள் ஒப்புதல் மூலம் ஏற்பினையும் பெறவேண்டும் ; அரசமைப்புச் சட்ட ஆலோசகர், 1947 மே 30-ம் தேதியிட்ட தன்னுடைய அறிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் குறையாத உறுப்புகளின் ஏற்பு தேவை என்னும் ஒரு செயற்குறிப்பைக் கூறியுள்ளார். இதேபோன்ற ஒரு கருத்து சர் என். கோபாலசாமி ஐயங்காராலும், சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயராலும் தெரிவிக்கப்பட்டது. எனவே, நான்கில் மூன்று பங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களால் ஏற்கப்படவேண்டும் என்று விதிக்கப்படலாம் என பரிந்துரைக்கின்றோம்.

8. நிலவரையை மாற்றியமைக்கும் செயற்பாடு முற்றுப் பெற்றுவிட்டது என்று இன்னமும் கூறமுடியாது. அசாமின் சார்பு மாநிலமாகிய மேகாலயா இனிமேல் முழு வளர்ச்சி யடைந்த மாநிலமாக ஆகவேண்டியுள்ளது. திரிபுரா, மணிப் பூர் போன்ற ஒன்றியத்தின் மற்ற நிலவரைகள் மாநில நிலை யை அடைய கிளர்ச்சி செய்து வருகின்றன. தெலுங்கானுப் பிரச்சினையும் கூட தோன்றியுள்ளது. எனவே, மாநிலங் களின் எண்ணிக்கை மாறக்கூடியதாகும். இப்போது இருக் கின்ற மாநிலங்களுங்கூட மக்கள் தொகை, வளங்கள் முதலியவற்றில் வேறுபாடுகள் உள்ளன. மிகச்சிறிய மாநிலங் கள், குறிப்பாக மேகாலயா போன்ற சார்பு மாநிலங்களும் ஒன்றியத்தின் நிலவரைகளும் பழையனவும் பொருளாதார வளர்ச்சியில் அல்லது வளங்களில் நன்கு உறுதி பெற்றுள்ளன வுமான மாநிலங்களுக்கு இணையாகா. ஒன்றியத்தைச் சேர்ந்த மாநிலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பினுல், அரண் செய்துள்ள வகையுரைகளை, அதாவது 368-வது உறுப்பின் வரம்புரையில் குறிப்பிட்டுள்ள வகையுரைகளை, திருத்தம் செய்வதை மக்கள் தொகை மிகுந்த மாநிலங்கள் அதாவது, நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்குக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக்கொண்ட மாநிலங்களான உத்தரப் பிரதேசம், மராட்டியம், மேற்கு வங்காளம், பீகார், ஆந்திரப் பிரதேசம், தமிழ் நாடு, குஜராத், மைசூர், மற்றும் ராஜஸ்தானம் ஆகியவை எதிர்த்தாலுங்கூட, மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ள மாநிலங்களின் ஆதரவினுல் அந்த வகையுரைகளை திருத்திவிட முடியும்*. இது நடைமுறையில், 368-வது உறுப்பினுடைய வரம்புரையின் முழுநோக்கத்தை யும் பயனற்றதாக்கிவிடுகிறது. எனவே, நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்கள் ஏற்றுகவேண்டும் என்னும் தேவையோடு கூட, திருத்தத்திற்கு ஏற்பளிக்கின்ற மாநிலங்களின் சட்ட மன்றங்கள் அனைத்து மாநிலங்களினுடைய மக்கள் தொகை யில் நான்கில் மூன்று பங்கிற்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கிற்குப் பிரதிநிதித்துவம் வகிப்பவையாக இருந் தாக வேண்டும் என மேற்கொண்டும் நிபந்தனை குறிக்கப்பட லாம். இதன் பொருட்டான மக்கள் தொகையானது முந்திய கடைசி மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அறியப்

* "இந்திய இணைப்பாட்சியின் உறுதிக்கு அச்சுறுத்தல்கள்" என்ற தலைப் பில் 1970 டிசம்பர் 13-ந் நாளிட்ட 'இந்து' இதழில் திரு. க. சந்தானம் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை.

பொது நிர்வாக இந்திய நிறுவனத்தின் சென்னை மாநிலக் கிளையின் ஆதரவின் கீழ் சென்னையில் 1970 நவம்பர் 27-ம் நாள் டாக்டர் கோ. சுப்பாராவ் ஆற்றிய சொற்பொழிவு.

பட்டு இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ள மக்கள் தொகை என்று பொருளாகும் என வரையறை செய்யலாம். எங்களுடைய செயற்குறிப்பின்படி, அனைத்து மாநிலங்களினுடைய நான்கில் மூன்று பங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகையினால் அவர்களுடைய சட்டமன்றங்கள் மூலமாக ஏற்பளிப்பதாகும். ஆகவே, அந்த மக்கள் தொகையின் குறைந்த அளவுப் பெரும்பான்மையால் அல்ல என்பதை அறியலாம். மாநிலங்களினுடைய மொத்த மக்கள் தொகையின் வெறும் பெரும்பான்மையானது, உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு முதலியவை போன்ற மக்கள் மிகுந்துள்ள மாநிலங்களில் அடங்கிய மக்கள் தொகை என்று மட்டுமே பொருள்படும்; எனவே, மிகுந்த மக்கள் தொகைகொண்ட இந்த மாநிலங்களின் ஆதரவுடன் குறைந்த மக்கள் தொகைகொண்ட மாநிலங்கள் எதிர்த்தாலுங்கூட திருத்தத்தை நிறைவேற்ற முடியும். எங்களுடைய பரிந்துரை ஏற்கப்பட்டு செயல்படுத்தப்படுமானால், அரசமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்கின்ற செயற்பாட்டில் மாநிலங்கள் பங்கேற்கும் உணர்வை அதிகரிக்கும்; தவிர, அரசமைப்புச் சட்டத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தவும் அரசமைப்புச் சட்டத்தில் அவசரக்கோல திருத்தங்கள் செய்யப்படுவதற்குத் தடையாகச் செயல்படவும் இந்தப் பரிந்துரை உதவும்.

9. ஏற்பளிப்புச் செயற்பாட்டினை 368-வது உறுப்பின் வரம்புரையில் குறித்துள்ள வகையுரைகளுக்கு மட்டும் வரையறை செய்வதற்குரிய காரணம் ஏதும் எங்களுக்குத் தெரியவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் வேறு பல வகையுரைகளிலும் மாநிலங்கள் மிக முக்கியமாக அக்கறை கொண்டுள்ளன என்று இந்த அத்தியாயத்தில் முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். நமது அரசமைப்புச் சட்டத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள மற்ற இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டங்களினுடைய வகையுரைகளின் ஒப்புமையின்மீதும், இணைப்பாட்சிக் கோட்பாட்டிற்கு ஏற்பவும், அரசமைப்புச் சட்டத்தில் எந்தத் திருத்தம் செய்தாலும் அதன் தன்மை யாதாக இருப்பினும், அதற்கு நான்கில் மூன்றுபங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் ஏற்பினைப் பெறுவது தேவையாக இருந்தாக வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம். அரசமைப்புச் சட்டத்தின் ஏனைய பல்வேறு வகையுரைகளினால் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் காரணமாக மாநிலங்களைக் கலக்காமல்கூட சாதாரணப் பெரும்பான்மையின்

மூலம் அரசமைப்புச் சட்டத்தைப் பற்பல வகைகளில் திருத்தம் செய்யமுடியும் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமற்றதாகாது. இந்த வகையுரைகளின் சில எடுத்துக்காட்டுக்களை ஏற்கனவே கொடுத்துள்ளோம். எங்களுடைய கருத்துரை 368-வது உறுப்பின் நோக்கெல்லைக்குள் மட்டும் ஏற்படும் திருத்தத்திற்கு மட்டுமே உரியதாகும். 368-வது உறுப்புக்கு இப்போது இருக்கின்ற வரம்புரையில் குறித்துள்ள தன்மைவாய்ந்த திருத்தத்திற்கு மட்டுமல்லாமல், அரசமைப்புச் சட்டத் திருத்தம் எதுவாயினும் நான்கில் மூன்று பங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் ஏற்பு தேவையாகும் வகையில் 368-வது உறுப்பு திருத்தப்படவேண்டும். ஒன்றிய அரசமைப்புச் சட்டக்குழு 1947, ஜூலை 4-ம் நாளிட்ட முதன்மை அறிக்கையில் கண்டுள்ள செயற்குறிப்பின்படி அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒவ்வொன்றுக்கும் ஒன்றியத்து உறுப்புகளின் ஏற்பு அவசியமாக இருந்தது என்பதை அறியலாம். இதுபற்றிய எங்களுடைய பரிந்துரை செயல்படுத்தப்பட்டால், இந், வகையுரை ஒன்றிய அரசமைப்புச் சட்டக் குழுவின் தொடக்கக் கருத்துக்கு இணங்கியதாக ஆகிவிடும்.

10. அரசமைப்புச் சட்டத்திற்கு அந்த உறுப்பின்கீழ் ஏற்கனவே செய்துள்ள திருத்தங்களை நாம் ஆராய்ந்தால் அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒவ்வொன்றிலும் மாநிலங்கள் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை எளிதில் உணரலாம். அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்து 368-வது உறுப்பின்கீழ் இதுவரை 23 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் பதினொன்று—இரண்டாவது (1952), மூன்றாவது (1954), ஆறாவது (1956), ஏழாவது (1956), எட்டாவது (1959), பதின்மூன்றாவது (1962), பதினான்காவது (1962), பதினைந்தாவது (1963), பதினாறாவது (1963), இருபத்து இரண்டாவது (1969) மற்றும் இருபத்து மூன்றாவது (1969) —திருத்தங்களுக்கு மட்டுமே மாநிலங்களால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. மாநிலங்களின் ஏற்பின்றி 368-வது உறுப்பின் கீழ் இயற்றி சட்ட நூல் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற பன்னிரண்டு திருத்தங்களின் வகையுரைகளில் மாநிலங்களுக்குள்ள பற்றினை அந்த வகையுரைகளை நாம் ஆராய்ந்தால் எளிதில் உணரலாம்.

முதலாவது (1951), நான்காவது (1955), மற்றும் பதினேழாவது (1964) திருத்தங்கள்.—வேற்றுமை காட்டுதல், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், சொத்து ஆகியவை குறித்த

குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய வகையுரைகளை (உறுப்புகள் 15, 19, 31) மற்றவற்றுடன் கணிசமான அளவில் அத்திருத்தங்கள் மாற்றியமைத்துள்ளன. கோலக்நாத் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் துணை கொண்டு பார்த்தால், அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம் மிகவும் தெளிவாகப் புலனாகும். எனவே, அடிப்படை உரிமைகளின் எந்தத் திருத்தத்திலும் மாநிலங்கள் பங்கேற்பது, அரசமைப்புச் சட்டத்தின் இணைப்பாட்சித் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

ஐந்தாவது (1955) மற்றும் பதினெட்டாவது (1966) திருத்தங்கள்.— இந்த இரண்டு திருத்தங்களும் மாநிலங்களினுடைய நிலவரை ஒருமைப்பாட்டைப் பாதிக்கின்றன. ஐந்தாவது திருத்தம் அரசமைப்புச் சட்டத்தின் 3-வது உறுப்புக்கு இருந்த வரம்புரைக்குப் பதிலாக புதிய வரம்புரை ஒன்றை அமைத்தது. மாநில நிலவரை பற்றிய எங்கள் அத்தியாயத்தில் 3-வது உறுப்பு பற்றி ஆராயும் வாய்ப்பு நேரிட்டது. அங்கே குறிப்பிட்டது போன்று, 1955-ம் ஆண்டில் திருத்தப்பட்டதற்கு முன்பு இருந்த அந்த வரம்புரை, மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்னுரைப்பதற்கு முன்பு தொடர்புடைய மாநிலங்களின் கருத்துகளை மைய அரசு கேட்டறிய வேண்டிய தேவையைக் குறித்திருந்தது. மைய அரசு செய்ய வேண்டியதெல்லாம், மசோதாவை மாநிலங்களுக்கு அனுப்புவது, மாநிலங்கள் கருத்து தெரிவிப்பதற்கான காலவரையைக் குறிப்பிடுவது, மற்றும் அந்தக் காலவரை முடிந்ததும் மாநிலங்கள் கருத்து தெரிவித்திருந்தாலும் இல்லையென்றாலும் அந்தக் கருத்துக்கள் என்னவாக இருப்பினும் அந்த மசோதா குறித்து நடவடிக்கை மேற்கொள்வது ஆகிய இவற்றுக்கு வகைசெய்வதற்கு அந்த வரம்புரை இப்போது மாற்றப்பட்டுள்ளது. மாநிலங்களின் எல்லைகள், பெயர்கள் முதலியவற்றை மாற்றுவது பற்றிய வகையுரையின் எந்தத் திருத்தத்திலும் மாநிலங்கள் செயல்வகையில் பங்கேற்க வேண்டியதன் தேவையை இது வலியுறுத்துகின்றது.

பதினெட்டாவது திருத்தம் ஒன்றிய நிலவரைகளுக்குப் பொருந்துகின்ற முறைப்படியான திருத்தமாக இருந்தபோதிலும் மாநிலங்களின் பகுதி அல்லது நிலவரை பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் வகையுரையில் செய்கின்ற எந்தத் திருத்தத்திற்கும் அவற்றின் ஏற்பு தேவையாக இருக்கவேண்டும் எனக் கருதுகிறோம்.

ஒன்பதாவது திருத்தம், (1960).—இது, சில நிலவரைகளை பாகிஸ்தானுக்குக் கொடுப்பது பற்றியதாகும். குறித்த சில மாநிலங்களில் சேர்க்கப்பட்டிருந்த நிலவரைகளை அந்நிய நாட்டிற்குக் கொடுத்துவிடுவது பற்றிய வெளிப்படையான எடுத்துக்காட்டாகும். எமது கருத்துப்படி இத்தன்மை யான திருத்தத்தை பாதிக்கப்படும் மாநிலங்களின் இசை வுடன் மட்டுமே செய்ய முற்படவேண்டும்.

பத்தாவது (1961) மற்றும் பன்னிரண்டாவது (1962) திருத் தங்கள்.—இவை, தாத்ரா, நாகர்அவேலி, கோவா, டாமன், டையூ ஆகியவற்றை ஒன்றியத்தின் நில வரைகளாக அமைப்பது பற்றியவை. இங்கேயும் கூட, திருத் தம் செய்யும் விதிமுறையில் மாநிலங்கள் பங்கு கொள்வது ஒற்றுமைப் பிணைப்பை வலுப்படுத்தும் எனக் கருதுகிறோம்.

பதினோராவது திருத்தம், (1961).—இது, குடியரசுத் தலை வர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோர் தேர்தலைப் பற்றி யது. குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற வாக்காளர் மன்றத்தில், மாநிலச் சட்டப் பேரவைகளின் உறுப்பினர் களும் உறுப்பினர்கள் என்னும் உண்மையினையும் மாநிலங் களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர் களைக் கொண்டுள்ள மாநிலங்கள் அவையின் தலைவர் குடிய ரசுத் துணைத் தலைவர் என்னும் உண்மையையும் கருத்தில் கொண்டால் இது தொடர்பான வகையுரைகள் பற்றிய திருத் தம் யாதாயினும் அதனை மாநிலங்களின் ஒத்துழைப்புடன் தான் செய்தாக வேண்டும் என்பதை உணரலாம்.

பத்தொன்பதாவது திருத்தம், (1966).—இது நாடாளு மன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல் களில் அல்லது அவை தொடர்பாக ஏற்படுகின்ற ஐயங்கள் மற்றும் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கான தேர்தல் தீர்ப்பாயங்களை நியமிப்பதை தேர்தல் ஆணைக் குழுவின் வரம் பிலிருந்து விலக்கி 324 (1) உறுப்பினைத் திருத்தியுள்ளது. தேர்தல்கள் நடத்துவதற்கான அமைப்பு குறித்து ஆராய்கை யில்,இந்தப் பொருளிற்கு நாங்கள் ஏற்கனவே கவனம் செலுத் தியுள்ளோம். தன்னாட்சி உறுப்புகளான மாநிலங்கள் தேர் தல்கள் நியாயமாகவும் தடையேதுமின்றியும் நடைபெற உறுதி செய்வதில் ஒன்றியத்தைப் போலவே, மிகுந்த அக்கறை

கொண்டுள்ளன. ஆகவே, தேர்தல்கள் பற்றிய திருத்தம் யாதாயினும் அதனை மாநிலங்களின் இசைவோடு செய்ய முற்படவேண்டும்.

இருபதாவது திருத்தம், (1966):—இந்தத் திருத்தம் கடந்த காலத்தில் செய்யப்பட்ட மாவட்ட நீதிபதிகள் நியமனங்கள் சிலவற்றை செல்லுபடியாக்குகின்ற முறைப்படியான திருத்தமாக இருந்தபோதிலும், சார்நிலை நீதித் துறை, அதாவது மாவட்ட நீதிபதிகள் பதவியிடங்களும் ஏனைய கீழ்நிலை நீதித்துறைப் பதவி இடங்களும் மாநிலங்களின் தனிப்பொறுப்புக்குரியன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்தப் பொருள்கள் பற்றிய திருத்தம் எதனையும் மாநிலங்களின் இசைவோடுதான் செய்ய முற்பட வேண்டும்.

இருபத்தொன்றுவது திருத்தம், (1967):—இது, மொழி பற்றிய வகையுரைகளை நாடாளுமன்றத்தால் எவ்விதம் எளிதில் மாற்றிவிட முடியும் என்பதைக் குறிப்பிடுகின்ற நேர்வாகும். இந்தத் திருத்தம் எட்டாவது இணைப் பட்டியில் சிந்தியை வட்டார மொழிகளுள் ஒன்றுகச் சேர்த்துக் கொண்டது என்பதில் ஐயமில்லை. ஆனல், அந்த இணைப்பட்டியில் இப்போது குறித்துள்ள ஒரு மொழியை நீக்கிவிடவும் இதே முறையைக் கையாள முடியும். மாநிலத்தின் நிலவரை பற்றிய நேர்வுக்கு உள்ளவாறே மொழி பற்றிய வகையுரைகளின் பொருட்டும், மாநிலங்களின் இசைவு இல்லாமல் திருத்தம் செய்ய முற்படக் கூடாது.

11. இதுவரை நாங்கள் ஆராய்ந்த இரண்டு பிரச்சினைகளோடு நிறுத்திக் கொள்கிறேம்: அவையாவன (1) அரசமைப்புச் சட்டமுறையான திருத்தத்திற்கு ஏற்பளிக்கத்தேவையான மாநிலங்களின் அளவு வீதத்தை—அந்த மாநிலங்கள் அனைத்து மாநிலங்களின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கினை அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினைப் பெற்றிருக்க வேண்டும் என்னும் நிபந்தனையுடன்—நான்கில் மூன்று பங்கிற்கு அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகரித்தல் (2) 368-வது உறுப்பின் வரம்புரையில் குறிப்பிட்டுள்ள வகையுரைகளின் திருத்தத்தை மட்டுமல்லாமல் அரசமைப்புச் சட்டத்தின் எந்தத் திருத்தத்தையும் அத்தகைய ஏற்புக்கு உட்படுத்துதல். இவை பற்றிய எங்களுடைய செயற்குறிப்பை ஏற்றுக்கொண்டால்,இந்த உறுப்பினுடைய வரம்புரையின் தொடக்கப் பகுதியை நீக்கிவிடவும் இந்த

உறுப்பின் மையப்பத்தியிலேயே வரம்புரையின் முடிவுப்பகுதியை சேர்த்துக் கொள்ளவும் நேரிடும். அதன்படி, 368-வது உறுப்பு ஓரளவுக்குப் பின்வருமாறு இருக்கும்:—

“ **368 அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான விதி முறை.**—இந்த அரசமைப்புச் சட்டத்திற்குரிய திருத்தம் இதற்கென நாடாளுமன்ற அவை யாதேனும் ஒன்றில் மசோதா ஒன்றை முன்னுரைப்பதன் வழியாக மட்டுமே தொடங்கப்படலாம்; மற்றும், அந்த மசோதா, நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவையாலும், அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையாலும் அந்த அவையில் வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையாலும் நிறைவேற்றப்பட்ட பின்னர் அனைத்து மாநிலங்களினுடைய மக்கள் தொகையில்
நான்கில் மூன்று
மூன்றில் இரண்டு
பங்கிற்குக் குறையாத மக்கள் தொகையினருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும்
ன்கில் மூன்று
மூன்றில் இரண்டு
பங்கிற்குக் குறையாத மாநிலங்களின் சட்டமன்றங்களால் அது குறித்து நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மூலமாக ஏற்பளிக்கப்பட்டிருப்பின், அதைக் குடியரசுத் தலைவரின் இசைவுக்காக அவரிடம் சமர்ப்பித்தாக வேண்டும். அந்த மசோதாவிற்கு அத்தகைய இசைவு அளிக்கப்பட்டதன்மேல், அந்த மசோதாவின் வாசகத்திற்கிணங்க அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்.

விளக்கம்.—இந்த உறுப்பில், ‘மக்கள் தொகை’ என்னும் சொற்றொடர், முந்திய கடைசி மக்கள் தொகைக்கணக்கெடுப்பில் அறியப்பட்டு தொடர்பான இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளவாறான மக்கள் தொகை எனப் பொருள்படும். ”

அத்தியாயம் XXI

பரிந்துரைகளின் சுருக்கம்

எமது பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆட்சி உறவுகள்.

மைய அரசு மாநிலங்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்தல்.—

256, 257, 339 (2) உறுப்புகள் நீக்கப்பட வேண்டும். மாற்றாக, மேற்சொன்ன உறுப்புகள் யாதொன்றின் கீழும் மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் கலந்து அதன் ஒப்புதலுடன் அல்லாமல் எவ்விதக் கட்டளையும் பிறப்பிக்கப்படலாகாது என்று வகை செய்யப்படலாம்.

உறுப்பு *344 (6)*.—இந்த உறுப்பு நீக்கப்பட வேண்டும்.

மாநிலங்களிடை உறவு மன்றம்.—மாநிலங்களிடை உறவு மன்றம் உடனடியாக அமைக்கப்படவேண்டும். இதில் முதலமைச்சர்கள் அனைவரும் அல்லது அவர்களால் நியமிக்கப்படுபவர்கள்இருக்கவேண்டும்; எல்லா மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். தலைமை அமைச்சர் அதன் தலைவராக இருக்க வேண்டும். இம்மன்றத்தில் மைய அமைச்சர் பிறர் எவரும் இருக்கக் கூடாது.

தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒன்று அல்லது பல மாநிலங்களின் நலனைப்பாதிக்கக் கூடியதாயிருக்கிற மசோதா ஒவ்வொன்றும் நாடாளுமன்றத்தில் முன்னுரைக்கப்படுவதற்கு முன்பு மாநிலங்களிடை உறவு மன்றத்திற்கு அனுப்பப் படவேண்டும். இந்த மசோதா முன்னுரைக்கப்படும் சமயத்தில் இம்மன்றத்தின் கருத்துரைகள் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்படவேண்டும்.

தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒன்று அல்லது பல மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையில் மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் கலக்காமல் எந்த முடிவையும் மைய அரசு மேற்கொள்ளக்கூடாது.

பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு போன்ற பொருள்களைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு அளிக்கப்படலாம்.

மாநிலங்களிடை உறவு மன்றத்தின் பரிந்துரைகள் மைய அரசையும் மாநிலங்களையும் பொதுவாகக் கட்டுப்படுத்தும். யாதேனும் ஒரு காரணத்திற்காக அத்தகைய பரிந்துரை எதை யேனும் மைய அரசு தள்ளுபடி செய்தால் அந்தப் பரிந்துரை யுடன் அதைத் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தையும் நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்ட மன்றங்களிலும் வைக்க வேண்டும்.

சட்டமியற்று துறை.

பொது.—அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப் பட்டியிலுள்ள I, III அதிகாரப்பட்டியல்களின் பதிவுகளை மாற்றி அமைப்பதற்காக உயர் அதிகார ஆணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இம் மூன்று பட்டியல்கள் பற்றி இக் குழுவின் பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

அதிகாரப் பட்டியல் I (மைய அரசுப் பட்டியல்).

பதிவு 7.— இந்தப் பதிவு படைக்கலத் தொழில்களை மட்டும் கட்டுப்படுத்தும் வகையில் மேலும் நன்கு வரை யறுக்கப்படவேண்டும்.

பதிவு 32.—மாநிலங்களின் வரி விதிப்பிலிருந்து மைய உடைமைகளுக்கு விதி விலக்களிக்கும் 285-வது உறுப்பு நீக்கப் பட வேண்டும்.

பதிவு 40.—மாநிலங்கள் நடத்தும் பரிசுச் சீட்டுகள் இந்தப் பதிவிலிருந்து நீக்கப்பட்டு மாநில அரசின் அதிகாரப் பட்டி யலில் சேர்க்கப்பட வேண்டும். மாநிலப் பட்டியலில் இந்த இனத்தைச் சேர்க்கும்போது, மற்றொரு மாநில அரசு நடத் தும் பரிசுச் சீட்டு சம்பந்தமாக அல்லது தொடர்பாக அதைத் தடுக்கவோ அல்லது முறைப்படுத்தவோ மாநில அரசுகள் அதிகாரம் பெற்றிருக்கவேண்டும் என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

பதிவு 48.—எதிர் நோக்கு வாணிகங்கள் மாநிலப் பட்டி யலுக்கு மாற்றப்பட வேண்டும்.

பதிவு 52.—தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத் தியந்தியத்தன்மை வாய்ந்த தொழில்களுக்கு அல்லது ரூபாய் 100 கோடிக்கு மேற்பட்ட மூலதனம் தேவையாகும் தொழில் களுக்கு மட்டும் இது வரையறுக்கப்படவேண்டும்.

பதிவுகள் 53, 54, 55.—இம் மூன்று பதிவுகளும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும்.

பதிவு 67.—இந்தப் பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப் பட வேண்டும்.

பதிவு 76.—மாநிலங்களின் கணக்குத் தணிக்கை, மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும்.

பதிவு 84.—சாராயம் அடங்கிய மருந்து மற்றும் அழகு சாதனத் தயாரிப்புகள் மீது ஆயத்தீர்வை விதிக்கும் அதிகாரம் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

அதிகாரப் பட்டியல் II (மாநிலப் பட்டியல்.)

பதிவு 23.—எண்ணெய் வயல்களையும் உள்ளடக்கும் வகையில் இது மாற்றியமைக்கப்படவேண்டும்.

பதிவு 51.—சாராயம் அடங்கிய மருந்து மற்றும் அழகு சாதனத் தயாரிப்புகள் மீது ஆயத் தீர்வை விதிக்க, மாநிலங் களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் இது மாற்றியமைக்கப் படவேண்டும்.

புதிய பதிவு.—மாநிலப் பட்டியலிலுள்ள எந்த ஒரு விவ காரத்தின் காரியத்திற்காகவேனும் வேண்டப்படும் விசாரணை கள் புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றிய சட்டங்களை இயற்று வதற்கு வகை செய்யப் புதிய பதிவு சேர்க்கப்பட வேண்டும்.

அதிகாரப் பட்டியல் III (பொதுப் பட்டியல்).

பதிவுகள் 5, 8, 17, 19, 22, 23, 24, 25, 28, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 42.—இந்தப் பதிவுகள் முழுமையாக மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும்.

பதிவு 45.—இந்தப் பதிவில் உள்ள மாநிலப்பட்டியலைப் பற்றிய குறிப்பு நீக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றம் சட்டம் இயற்றுவதற்கு முன்னர் மாநிலங்களுடன் கலந்தறிதல்.—

பொது அதிகாரப்பட்டியலின் யாதேனுமொரு பதிவு சம் பந்தப்பட்ட எந்த மசோதாவையும் நாடாளுமன்றத்தில் முன் மொழியப்படுமுன் மாநிலங்களிடை உறவு மன்றமும் மா நிலங்களும் கலந்தறியப்படவேண்டும். மசோதா முன்னுரைக் கப்படும்போது மாநிலங்களிடை உறவு மன்றத்தின்

குறிப்புரைகளும் மாநில அரசுகளின் கருத்துரைகளின் சுருக்கத் தொகுப்பும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும்.

எஞ்சிய அதிகாரங்கள்—எஞ்சிய சட்டமியற்றும் அதிகாரமும் வரி விதிக்கும் அதிகாரமும் மாநிலச் சட்ட மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

சட்டமியற்றும் பிற வகையுரைகள்.

உறுப்புகள் 154 (2) (ஆ), 258 (2).—மாநில அரசின் இசைவின்றி எந்த ஒரு மாநிலத்திற்கும் அல்லது அதன் அலுவலர்களுக்கும் அல்லது ஆள்வைகளுக்கும் அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் கொடுத்து அல்லது கடமைகள் விதித்து சட்டம் எதையும் நாடாளுமன்றம் இயற்றக்கூடாது.

உறுப்பு 169 (1).—சட்டமன்ற மேலவைகளை நீக்கும் அல்லது தோற்றுவிக்கும் அதிகாரம், நாடாளுமன்றச் சட்டத்தின் அவசியம் எதுவுமின்றி மாநிலச் சட்டப்பேரவைகளிடமே தனித்து நிலைபெற்றிருக்க வேண்டும்.

உறுப்பு 249.—இந்த உறுப்பு நீக்கப்படவேண்டும்.

உறுப்பு 252.—இந்த உறுப்பின்கீழ் நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்தைத் திருத்தவோ நீக்கவோ மாநிலச் சட்ட மன்றங்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

குடியரசுத் தலைவரின் இசைவுக்காக மாநில மசோதாக்களை ஒதுக்குதல்

உறுப்பு 288(2)-ன் வகையுரையைத் தவிர, குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கும் இசைவுக்கும் மாநில மசோதாக்களை ஒதுக்குவது சம்பந்தப்பட்ட எல்லா வகையுரைகளும் நீக்கப்படவேண்டும்.

ஆளுநர், அவசரச் சட்டங்களைச் சாற்றுதல்: குடியரசுத் தலைவரிடமிருந்து முன் ஏற்பாணைகள் பெறும் அவசியம்—213(1) உறுப்பின் வரம்புரையை, 288(2) உறுப்பின்கீழ் வரும் நேர்வுகளுக்கு மட்டும் வரையறுக்கும் வகையில் மாற்றியமைக்கவேண்டும்.

நிதி பற்றிய உறவுகள்

கூட்டுரும வரி (கார்ப்பரேஷன் வரி), ஏற்றுமதித் தீர்வைகள் உட்படச் சுங்க வரிகள் மற்றும் சொத்தின் மூலதன மதிப்பின்மீது வரி.—பின்வருவனவற்றை, மைய அரசினாலும் மாநிலங்களினாலும் பகிர்ந்து கொள்ளத்தக்க பகிர்வு நிதித் திரட்டில் சேர்ப்பதன் மூலம் மாநிலங்களுக்கு வருவாய் வழங்கும் ஆதாரத்தை விரிவு படுத்தப்படவேண்டும்:—

(அ) கூட்டுரும வரி (கார்ப்பரேஷன் வரி) ;

(ஆ) சுங்க வரிகள் மற்றும் ஏற்றுமதித் தீர்வைகள் ;

(இ) சொத்துக்களின் மூலதன மதிப்பின்மீதான வரி.

ஆயத் தீர்வைகள்.—மைய அரசின் விருப்பத்திற்குட்பட்டு பகிர்ந்தளிக்கத்தக்கதாயுள்ள சிறப்பு வகை, முறைவகை அல்லது பிறவகையான எல்லா ஆயத்தீர்வைகளும் மேல் வரிகளும் மைய அரசும் மாநில அரசுகளும் கட்டாயமாகப் பகிர்ந்து கொள்ளக்கூடியனவாகச் செய்யப்படவேண்டும்.

மாநிலங்களின் இசைவுடன் மட்டுமே கூடுதல் ஆயத் தீர்வைகள் தொடர்ந்திருக்கவேண்டும்.

கூடுதல் ஆயத் தீர்வைகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக மாநிலங்கள் விற்பனை வரியை விதிக்குமிடத்தும் வரி விதிப்பு வீதம் சம்பந்தப்பட்ட வரையிலும் அது விதிக்கப்பட வேண்டிய கட்டத்தைப் பொறுத்த வரையிலும், 1956-ம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 74/1956) 14, 15-வது பிரிவுகளின்படி விற்பனை வரி விதிப்பதற்குத் தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

286-வது உறுப்பின் (3)-வது பகுப்பின் கீழ், நாடாளு மன்றத்திற்குரிய அதிகாரத்தை மாநிலங்களுடன் கலந்தறியாமல் பயன்படுத்தக்கூடாது.

மைய அரசால் விதித்து வசூலிக்கப்பட்டு ஆனால் 269-வது உறுப்பின் கீழ் மாநிலங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வரிகள்.—இந்த வரிகள் ஒவ்வொன்றும் வசூல் பொறுப்பு மாநிலங்களுக்கு விடப்பட்டாலும், மைய அரசால் விதிக்கப்படவேண்டும்.

வருமான வரிமீது மேல்வரி.—மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் மேல்வரி வருமானவரியின் அடிப்படை வீதத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில், கணிசமான பெரும்பான்மை மாநிலங்களின் இசைவுடன் அல்லாமல் மேல்வரி எதுவும் விதிக்கப்படக் கூடாது.

மின்சக்தி பயன்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் மீது வரி விதிப்பதற்கு மாநிலங்களுக்குள்ள அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகள்.—287-வது உறுப்பு நீக்கப்படவேண்டும்.

மானியங்கள்.—திட்டப்பணிச் செலவிற்கும் திட்டச்சார் பற்ற பணிச் செலவிற்கும் மாநில அரசுகளுக்கு மைய அரசு அளிக்கும் மானியங்கள், நிதி ஆணைக்குழு அல்லது அது போன்ற சட்டப்படிக்கான அமைப்பு போன்ற தன்னிச்சையானதும் நடுநிலையானதுமான அமைப்பின் பரிந்துரையின் மீது மட்டுமே அளிக்கப்பட வேண்டும்.

நிதி ஆணைக் குழு.—நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் இரண்டு தரப்பினரையும் அதாவது மைய அரசையும் மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துவதாயிருக்க வேண்டுமென்று அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாய் வகை செய்யப் படவேண்டும்.

நிதி ஆணைக்குழு நிலையான அமைப்பாக இருக்க வேண்டும். அதற்கென்று தனியாகச் செயலகம் இருக்கவேண்டும்.

திட்ட ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினர் நிதி ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படலாம்.

மாநிலங்களின் கடன்களும் கடன்பட்டிருத்தலும்.—மாநிலங்கள் கடன்பட்டிருத்தல் சம்பந்தப்பட்ட முழுப் பிரச்சினையையும் ஆராய நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்படலாம். அமைக்கப்படவிருக்கும் குழு, கடன்களுக்காக மாநில அரசுகள் மைய அரசுக்கு அனுப்பும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆஸ்திரேலியக் கடன் மன்றம் போன்ற ஓர் ஆள்வையை அல்லது உலக வங்கியை யொத்த வளர்ச்சி வங்கியை அமைக்கும் சாத்தியக் கூறினை ஆராயலாம்.

நிவாரண நிதி.—இயற்கைக் கோளாறுகளினால் ஏற்படும் துயர்களிலிருந்து நிவாரணம் பெற ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிதி இருக்கவேண்டும். இந்த நிதி செம்மைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படலாம்.

திட்டமிடுதல்.

திட்ட ஆணைக் குழு.—மைய நிர்வாகத்திற்கோ அரசியல் செல்வாக்கிற்கோ கட்டுப்படக்கூடியதா யில்லாமல் திட்ட ஆணைக்குழு தன்னிச்சையான அமைப்பாகச் செயல்பட

வேண்டும். இக் குறிக்கோளை அடைய, திட்ட ஆணைக் குழு ஒன்றனை நிறுவுவதற்கு வகை செய்து நாடாளு மன்றம் சட்டம் இயற்ற வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் திட்ட ஆணைக் குழு சட்ட முறையான அடிப்படையில் அமைக்கப் பட வேண்டும்.

சட்டத்தால் நிறுவப்படவிருக்கும் திட்ட ஆணைக் குழுவில் பொருளாதாரம், அறிவியல், தொழில் நுட்பம், வேளாண்மை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் நிபுணர்களும் தேசீய நடவடிக்கைகளின் பிற துறைகளில் சிறந்த வல்லுநர்களும் மட்டுமே இடம் பெறவேண்டும். மைய அமைச்சர் எவரும் அதில் இடம் பெறக் கூடாது. இது சார்பாகச் செய்யப்படும் சட்டம், திட்ட ஆணைக் குழு உறுப்பினர்களின் ஊழிய உரிமை, பதவிக்காலம், பணிவரையறைகள் ஆகியவை குறித்து வகை செய்யவேண்டும். இந்தக் குழுவிற்கெனத் தனிச் செயலகம் இருக்கவேண்டும். இப்போதுள்ள திட்ட ஆணைக் குழு நீக்கப்படவேண்டும்.

திட்ட ஆணைக் குழுவின் கடமை, மாநிலங்கள் வகுக்கும் திட்டங்கள் குறித்து அறிவுரை கூறுவதாக இருக்கவேண்டும்.

மாநிலங்கள் துவக்கும் அல்லது மாநிலங்களில் துவக்கப் படும் தொழில் நிறுவனங்களுக்காக மாநிலங்களுக்கு அந்நியச் செலாவணி அளிப்பது தொடர்பாக நிதி ஆணைக் குழுவின் ஆராய்வுக்குப் பரிந்துரைகள் செய்யும் பொறுப்பும் திட்ட ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் தனக்கென திட்ட வாரியம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

திட்டமிடுதலும் வளர்ச்சியும்.—1951-ம் ஆண்டு தொழில் கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டம் (மையச் சட்டம் 65/1951) நீக்கப்பட வேண்டும்; அதற்குப் பதிலாக, தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியத் தன்மை வாய்ந்த அல்லது ரூ. 100 கோடிக்கு மேற்பட்ட மூலதன முள்ள தொழில்கள் மட்டும் மைய அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை என வகையுரை கொண்ட சட்டம் இயற்றப் படவேண்டும்.

உரிமம் வழங்குதல் சம்பந்தப்பட்ட வகையுரைகள் முழு வதும் நீக்கப்படவேண்டும்.

தனியார் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ மாநிலத்திற்குள் புதிய தொழில்களைத் துவங்குவதற்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கவேண்டும்.

அந்நிய நாட்டு ஒத்துழைப்புடனோ அந்த ஒத் துழைப்பு இல்லாமலோ பொதுத் துறையில் (மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் இதில் அடங்கா) தொழில் நிறு வனங்களைத் துவக்கி நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்ட அல்லது துவக்கப் பட்ட தொழில் ஒன்றுக்கு அந்நியச் செலாவணி தேவைப் பட்டால் அது, திட்ட ஆணைக் குழுவைக் கலந்துகொண்டு நிதி ஆணைக்குழு செய்யும் பரிந்துரையின்மீது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படவிருக்கும் ஒருமொத்த மானியம் மூலமாக வழங்கப்படவேண்டும்.

நீதித் துறை.

உச்ச நீதிமன்றம்.—அரசமைப்புச் சட்டப் பிரச்சினைகள் அல்லது மைய அரசுச் சட்டத்தின் பொருள் விளக்கம் சம்பந் தப்பட்டுள்ள வழக்குகளில் மட்டும் உயர் நீதிமன்றத்திலி ருந்து உச்ச நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். இவை நீங்கலாக, ஏனைய சாதாரண மான உரிமையியல், குற்றவியல் அல்லது மற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள பொருள்பற்று யாதாயினும் விதித்துள்ள தண்டனை யாதாயினும் உச்ச நீதிமன்றத்தில் உயர்நீதிமன்றத் திலிருந்து மேல் முறையீடு ஏதும் ஏற்கத்தக்கதாக இருக்கக் கூடாது.

உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிப்பதில், உயர் நீதிமன்றங்களுக்கும் நாட்டினுடைய பல்வேறு பகுதிகளின் வழக்கறிஞர்களுக்கும் இயன்றவரையிலும் திறமைக்குக் குந் தகம் ஏற்படாத வகையிலும் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

உயர்நீதிமன்றங்கள்.—உயர்நீதி மன்றத்தின் நீதிபதியை அரசமைப்புச் சட்டம், 1968-ம் ஆண்டு நீதிபதிகள் (விசா ரணை) சட்டம் (மையச் சட்டம் 51/1968) ஆகியவற்றின் தொடர்புடைய வகையுரைகளில் இப்போது அமைக்கப்பட் டுள்ள நிலைமுறையானவையும் நடைமுறையானவையுமான

பர்துகாப்புகளுக்குட்பட்டு, பதவியிலிருந்து நீக்குவதற்காகக் குடியரசுத் தலைவருக்கு மனு செய்வதற்கான அதிகாரம் மாநிலச் சட்ட மன்றத்தினிடமே உரித்தாக்கப்படவேண்டும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியங்கள், படிகள், விடுப்பு, ஓய்வூதியங்கள் ஆகியவை பற்றிய அதிகாரம்—குறும ஊதியங்கள் அரசமைப்புச் சட்டத்திலேயே அறுதியிடப்படுவதற்குட்பட்டு—மாநிலச் சட்ட மன்றங்களுக்கே உரித்தாக்கப்படவேண்டும்.

உறுப்பு 222 நீக்கப்படவேண்டும்.

உறுப்புகள் 223, 224, 224-அ.—தம்முடைய அமைச்சரவையின் அறிவுரைப்படிச் செயல்படவேண்டியுள்ள ஆளுநரை எப்போதும் கலந்துகொண்டே குடியரசுத் தலைவர் செயல்படுவார் என்பதற்கு வெளிப்படையாக வகைசெய்யும் விதத்தில் இந்த மூன்று உறுப்புகளும் திருத்தப்படவேண்டும்.

மாநிலச் சட்டம் ஒன்றனுடைய யாதேனுமொரு குறிப்பிட்ட வகையுரை, அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்னும் காரணத்தின்மேல் அது உயர்நீதி மன்றத்தில் எதிர்க்கப்படும்போதெல்லாம், அந்த வழக்கை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட—அவர்களில் ஒருவர் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டிய—முழு ஆயத்தினிடம் ஒப்படைப்பதற்காக உயர்நீதி மன்றத்தினிடம் கேட்டுக் கொள்வதற்கான அதிகாரத்தினை மாநில அரசு பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட நீதி ஆயம் தொடர்புடைய சட்டத்தின் ஒவ்வொரு வகையுரையினையும் ஆராயவேண்டும்; அது தன்னுடைய தீர்ப்பை வழங்கியபிறகு அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பாடானது என்னும் காரணத்தின்மேல் அந்தச் சட்டத்தின் வகையுரை எதுவும் எதிர்க்கப்படக்கூடாது.

பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் பற்றிய அல்லது பொருண்மை பற்றிய பிரச்சினை குறித்து உயர்நீதி மன்றத்தின் அறிவுரைக் கருத்தினைக் கேட்டறிய ஆளுநருக்கு அதிகாரமளிக்கப்படவேண்டும்.

ஆளுநர்

எப்போதும் மாநில அமைச்சரவையினைக் கலந்துகொண்டே ஆளுநர் நியமிக்கப் பெறவேண்டும். இக்காரியத்திற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட ஓர் உயர் அதிகாரக் குழுவினைக் கலந்து அந்த நியமனம் செய்யப்பட வேண்டுமென்பது இதற்கு மாற்று ஏற்பாடாக இருக்கலாம்.

ஆளுநர் இரண்டாவது முறை ஆளுநராகப் பதவி வகிக்க அல்லது அரசில் வேறு எவ்விதப் பதவியேனும் வகிக்க தகுதியற்றவராக ஆக்கப்படவேண்டும். உச்ச நீதிமன்றத்தின் விசாரணையின் மூலம் நிருபிக்கப்பட்ட தகாத நடத்தை அல்லது திறனின்மைக்காக அன்றி அவர் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது.

குடியரசுத் தலைவர், ஆளுநர்களுக்கு அறிவுரைத் தொகுப்புகளை அனுப்புதற்கு இயலச் செய்யும்பொருட்டு அரசமைப்புச் சட்டத்தில் திட்டவட்டமான ஒரு வகையுரை அமைக்கப்படல் வேண்டும். இன்னின்ன பொருள்கள் பற்றி ஆளுநர் மைய அரசைக் கலந்தறிய வேண்டும் அல்லது இன்னின்ன பொருள்கள் தொடர்பாக அவருக்கு மைய அரசு கட்டளை அனுப்பலாம் என்பதைக் குறிப்பிட்டு அந்த அறிவுரைத் தொகுப்புகள் வழி முறைகளைக் குறித்தல் வேண்டும். ஆளுநர், மாநிலத்தின் தலைவர் என்னும் முறையில் உளத்தேர்வு அதிகாரங்களைச் செலுத்துவதற்குரிய தருணங்கள் உட்பட அவர் செயல்படுவதற்குரிய கொள்கைகளையும் அந்த அறிவுரைகள் குறிக்கவேண்டும்.

அமைச்சரவை ஆளுநரின் விருப்பிற்குரிய காலத்தின் போது பதவி வகிக்கும் என்று குறிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்ட வகையுரை நீக்கப்படவேண்டும்.

குறிப்பாக, அறிவுரைத் தொகுப்புகள் பின் வருவனவற்றிற்கு வகை செய்தல் வேண்டும் :—

(அ) ஆளுநர் சட்டப் பேரவையில் முழுமையான பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமித்தாக வேண்டும்.

(ஆ) சட்டப்பேரவையில் எந்த ஒரு கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெற்றுள்ளது என ஆளுநர் மனநிறைவு கொள்ளாதபோது, ஒருவரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுப்பதற்காக சட்டப் பேரவையினை அவர் தாமாகவே கூட்ட வேண்டும் ; அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆளுநரால் முதலமைச்சராக நியமிக்கப்பெறல் வேண்டும்.

(இ) அமைச்சர் எவரையேனும் விலக்குவதற்கு முதலமைச்சர் ஆளுநருக்கு தெரிவிக்கும் அறிவுரை ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(ஈ) சட்டப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை முதலமைச்சர் இழந்து விட்டார் என்று ஆளுநருக்கு எப்போதாகிலும் தோன்றிஞல், ஆளுநர் உடனடியாகத் தாமாகவே பேரவையினைக் கூட்டி அவையின் நம்பிக்கையைப் பெறுமாறு அவருக்குக் கட்டளையிட வேண்டும்.

(உ) முதலமைச்சர் நம்பிக்கை பெற முற்படத்தவறிஞல் அல்லது நம்பிக்கை பெற முற்பட்டு அவசியமான வாக்குகளைப் பெறவில்லையென்ருல், ஆளுநர் முதலமைச்சரையும் அவர் தலைமையில் உள்ள அமைச்சரவையினையும் விலக்கிவிட வேண்டும்.

அரசமைப்புச் சட்டம் வெளிப்படையாக வகை செய்கின்ற பொருள்கள் பற்றி மட்டுமே உளத்தேர்வைப் பயன்படுத்த ஆளுநருக்கு உறுப்பு 163(1) அதிகாரம் அளிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். [எடுத்துக்காட்டுகள் உறுப்புகள் 239(2), 371(2), 371 அ (1), (2)].

நெருக்கடி நிலை வகையுரைகள்

ஒரு மாநிலத்திற்குள் ஏற்படும் நெருக்கடிநிலை—உறுப்புகள் 356, 357—இந்த வகையுரைகளை முற்றிலும் விட்டுவிடலாம்.

இதற்கு மாற்ருக, மைய அரசில் உள்ள ஆளுங்கட்சி தன்னிச்சையாகவும் ஒருதரப்பாகவும் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கெதிராக மாநிலங்களின் நலன்களைக் காக்கும் பொருட்டு அரசமைப்புச் சட்டத்திலேயே போதிய பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

அந்த வகையுரைகள் செயற்பாட்டில் இருக்க வேண்டுமென்ருல்—

(1) 356-வது உறுப்பின்கீழ் குடியரசுத் தலைவரின் ஆட்சியினை செயற்படுத்துவது நியாயமாகக்கூடிய ஒரே நிகழ்ச்சி, ஒரு மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும் முற்றிலும் நிலைகுலைந்து அந்த மாநில அரசே அந்த மாநில மக்களின் மற்றும் சொத்தின் நலனையும் பாதுகாப்பையும் பராமரிக்க இயலாமல் அல்லது விருப்பமின்றி இருப்பதாகும்.

(2) உறுப்பு 356 (1)-ல் உள்ள " அல்லது மற்றபடி " என்னும் சொற்களை விட்டுவிட வேண்டும்.

(3) சாற்ருணை பிறப்பிப்பதற்கு முன்பு, குடியரசுத் தலைவர் ஆளுநரின் அறிக்கையை தொடர்புடைய சட்டப் பேரவைக்கு, அந்த அறிக்கைமீது குடியரசுத் தலைவர் குறிக்

கும் கால அளவிற்குள் கருத்தைத் தெரிவிக்கும் பொருட்டு அனுப்புவதற்கு வகைசெய்ய உறுப்பு 356(1)-ல் வரம்புரை சேர்க்கப்படவேண்டும்.

உறுப்பு 365.—இந்த உறுப்பு நீக்கப்பட வேண்டும்.

தேசிய நெருக்கடி நிலை—உறுப்புகள் 352, 354 முதலியவை.—அந்நியருடன் போரோ, அந்நியருடைய ஆக்கிரமிப்போ இருந்தாலன்றி, நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட இந்தக் கடுமையான வகையுரைகள் செயற்படுத்தப்படக்கூடாது.

352-வது உறுப்பில் உள்ள ''உள்நாட்டுப் பூசல்'' என்னும் சொற்றொடர் அந்நிய ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கொப்பான கடுமை வாய்ந்ததாக பொருள்படும் வகையில் விளக்கம் தரப் படவேண்டும்.

உறுப்பு 353 (அ).—இந்த உறுப்பின்கீழ், மாநிலங்களிடை உறவு மன்றத்தை கலந்த பின்னரும் அதன் ஏற்பினைப்பெற்ற பின்னரும் அல்லாமல் கட்டளை எதையும் பிறப்பிக்கக்கூடாது. நெருக்கடி நிலைகளின்போது, இந்த உறுப்பின்கீழ் கட்டளை கள் பிறப்பிக்கப்படலாம். ஆனால், மிக விரைவில் வாய்ப்பு நேரிடும்போது மாநிலங்களிடை உறவு மன்றம் கலந்தறியப் பட்டு அம்மன்றத்தின் பரிந்துரைகளுக்கேற்ப மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நிதி நெருக்கடி நிலை—உறுப்பு 360—இந்த உறுப்பு நீக்கப்பட வேண்டும்.

பொதுமை ஊழியங்கள்

அனைந்திந்திய ஊழிய வகைகள்.—அனைத்திந்திய ஊழிய வகைகளுக்குத் தேர்ந்தெடுத்தல், மாநிலங்களின் கட்டுப்பாட் டின்கீழ் இருக்கின்ற அரசிதழ் பதிவு பெற்ற ஊழியங்களின் உறுப்பினர்களை மாற்றல் மூலமாகச் செய்யப்படவேண்டும் அல்லது நேரடியாகத் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படவேண் டும் ; அல்லது இவ்விரு வகையும் இணைந்த ஒரு முறை கையாளப்பட வேண்டும் ; தேவையானால், ஒவ்வொரு மா நிலத்திற்குள்ளும் தேர்வு ஒன்றும், அவசியம் அல்லது தக்கது எனக் கருதப்பட்டால் மைய அரசு ஊழியர் தேர்வாணைக் குழுவின் மேற்பார்வையின்கீழ், அதற்காக நடத்தப்படலாம்.

வருங்காலத்தில் புதிதாக அனைத்திந்திய ஊழியம் ஏற் படுத்த வழி செய்யும் வகையுரையை 312-வது உறுப்பினின் றும் நீக்கவேண்டும்.

ஊழியர்களை அமர்த்த தேர்ந்தெடுப்பது மாநில வாரியாக இருக்குமென்ற போதிலும், அனைத்திந்திய ஊழிய வகைகளுக்குரிய தேர்வு மொழி ஆங்கிலமாக இருப்பது பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

மைய அரசு ஊழியர்களின் ஊதியங்களை உயர்த்துதல்.—இயன்றவரை, மைய அரசிலும் மாநில அரசிலும் உள்ள அரசுப் பணியாளர்களின் ஊதியங்கள், உள்ளூர் அல்லது தனி நிலைகளுக்குரிய சலுகைகள் அளிக்கப்பட்டு நாடு முழுவதிலும் ஒருபடித்தாக இருக்க வேண்டும்.

மாநில அரசு ஊழியர் தேர்வாணைக்குழு.—மாநில அரசு ஊழியர் தேர்வாணைக் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரை பதவியிலிருந்து நீக்குவதற்கான அதிகாரத்தை உயர் நீதிமன்றத்தின் விசாரணைக்குட்பட்டு மாநிலத்தினிடமே உரித்தாக்கும் வகையில் 317-வது உறுப்பு திருத்தப்படல் வேண்டும்:—

மாநிலத்தின் நிலவரை

ஒரு மாநிலத்தின் நிலவரை ஒருமைப்பாட்டில், பின்வரும் மூன்று மாற்று வகைகளில் யாதேனுமொன்றற்கிணங்க அல்லாமல் எம்முறையிலும் தலையிடக் கூடாது என்று அரசமைப்புச் சட்டத்திலேயே வெளிப்படையாக வகை செய்யப்பட வேண்டும்.

(1) தொடர்புள்ள மாநிலத்தின் இசைவைப் பெற வேண்டும்.

(2) இக் காரியத்திற்கென அமைக்கப்படும் உயர்நிலை நீதிமுறைத் தீர்ப்பாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும்; அதனுடைய தீர்ப்பு எல்லாத் தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

(3) தொடர்புடைய பகுதியின் அல்லது பகுதிகளின் மக்களுடைய கருத்தை தனி வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அறிந்திட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம்

மாநிலங்கள் அவை.—ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமான பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும்; அதாவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மக்கள் தொகை யாதாயினும் பிரதிநிதிகள் சம எண்ணிக்கையில் இருக்க வேண்டும்

மாநிலங்களவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படக் கூடாது.

மக்கள் அவை.—1951-ல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலன்றி மற்றப்படி மாற்றம் செய்யப் படாமல் அவ்வாறே இருக்க வேண்டும் ; மக்கள் தொகை அதிகரித்திருந்தால், பெருமத்திற்குட்பட்டு இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். ஆயினும், 1951-ல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை எந் நிலையிலும் குறைக்கப்படக் கூடாது.

மொழி

நாடாளுமன்ற அவையில், ஆங்கிலத்தில் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப் பட்டியில் குறிக்கப் பட்டுள்ள மொழிகள் யாதேனுமொன்றில் உரை நிகழ்த்துவதற்கான உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப் பட வேண்டும்.

மைய மாநில அரசுகளுக்கிடையேயும் மற்றும் மாநிலங்களுக்கிடையேயும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்.

ஆங்கிலம் உச்சநீதிமன்றத்திலும் உயர்நீதி மன்றங்களிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

மாநிலத்தில் உள்ள மைய அரசின் அலுவலகங்கள் பொது மக்களுடன் அலுவல் தொடர்பு கொள்வதற்கு அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியையே பயன்படுத்த வேண்டும். மாநிலத்தில் அமைந்துள்ள மைய அரசின் அலுவலகங்களால் மாநில அரசோடும் அதன் அலுவலகங்களோடும் மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்புகள் அந்த மாநிலத்தின் ஆட்சிமொழி வாயிலாகவே நடைபெறல் வேண்டும்.

மாநிலத்தில் பணிபுரியும் மைய ஊழிய வகைகளின் உறுப்பினர்கள் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியினை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

வர்த்தகமும் வாணிகமும்

உறுப்பு 302.—இந்த உறுப்பு, மாநிலத்திற்குட்பட்ட வர்த்தகம் மற்றும் வாணிகம் பற்றிய குறிப்பினை நீக்கிடும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

மாநிலங்களுக்கிடையே வர்த்தகத்தின் மீதும் வாணிகத்தின் மீதும் நாடாளுமன்றம் விதிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் நியாயமானவையாக இருக்க வேண்டுமென வெளிப்படையாக வகை செய்யப்பட வேண்டும்.

உறுப்பு 304 (ஆ).—இந்த உறுப்பின் வரம்புரை நீக்கப்பட வேண்டும்.

பொது ஒழுங்கமைதி

மாநிலத்தின் வேண்டுகோள் அல்லது இசைவு இல்லாமல் மைய அரசு ரிசர்வ் காவற்படை எந்த ஒரு மாநிலத்திற்கும் அனுப்பப்படக் கூடாது. இதற்கிணங்க உறுப்பு 355 திருத்தப்பட வேண்டும்.

மாநிலச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான அமைப்பு

1951-ல் எல்லை வரையறுக்கப்பட்ட தேர்தல் தொகுதிகள் தொடர்ந்து இருந்துவர வேண்டும்.

1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (மையச் சட்டம் 43/1950), 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (மையச் சட்டம் 43/1951) ஆகிய இவ்விரு சட்டங்களும், அவற்றின் வகையுரைகளும், அவற்றின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு மட்டும் உரித்தாகும் வகையில் திருத்தப்பட வேண்டும். மாநிலச் சட்டமன்றத் தேர்தல் குறித்து சட்டமியற்றும் அதிகாரம் மாநிலச் சட்டமன்றங்களிடமே விடப்பட வேண்டும்.

மாநிலங்களிடையே நீர்த் தகராறுகள்

மாநிலங்களிடை ஓடும் ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்துவது குறித்து எழும் எல்லாத் தகராறுகள் குறித்தும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும். உச்ச நீதிமன்றம் எடுக்கும் முடிவுகளை நிறைவேற்ற தகுந்த வகையுரைகள் இயற்றப்பட வேண்டும்.

நிலவரை சார்ந்த நீர்ப் பரப்பின் கீழுள்ள கடற் படுகை

மாநிலத்தோடு ஒட்டியுள்ள நிலவரை சார்ந்த நீர்ப் பரப்புக்குள் கடலின் கீழே உள்ள நிலங்கள், தாதுப் பொருள்கள், மதிப்புடைய பிற பொருள்கள் யாவும் அந்த மாநிலத்திற்கே உரியனவாகும் வகையில் உறுப்பு 297 திருத்தப்படவேண்டும்.

மைய அரசு நிர்வாகம்

நாடாளுமன்ற வகையான அரசுக்கும் அதன் தொடர்பானவற்றுக்கும் இணங்க, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் மைய அமைச்சரவை அமையப் பெறுவதற்கு முறையான மரபுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒரே மாநிலத்தைச் சேர்ந்த ' காபினெட் ' தகுதியுடைய மைய அமைச்சர்களின் எண்ணிக்கை, மொத்த அமைச்சர்கள் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படக்கூடாது.

அரசமைப்புச் சட்டத் திருத்தம்

அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தமும், சம்பந்தப்பட்ட வகையுரை எதுவாயினும், நான்கில் மூன்று பங்கு அல்லது குறைந்தது மூன்றில் இரு பங்கு மாநிலங்களின் சட்டமன்றங்களினால் ஏற்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு ஏற்கின்ற மாநிலச் சட்டமன்றங்கள், எல்லா மாநிலங்களிலும் அடங்கிய மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதிக்கோ அல்லது குறைந்தது மூன்றில் இரு பகுதிக்கோ பிரதிநிதித்துவம் வகிப்பனவாக இருக்க வேண்டும்.

பி. வி. ராஜமன்னார்,
தலைவர்.

ஏ. எல். முதலியார்,
உறுப்பினர்.

சென்னை,
மார்ச்சு 10, 1971.

பி. சந்திரா ரெட்டி,
உறுப்பினர்.

இணைப்புகள்

இணைப்பு I

(அத்தியாயம் I-ல் உள்ள பத்தி I-ஐக் காண்க)

வினாப் பட்டியல்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை (ஷரத்துக்களை) வைத்துக்கொண்டு, ஓர் இணைப்பாட்சி (சமஷ்டி) அமைப்பில் மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிலவவேண்டிய உறவு பற்றிய அனைத்தையும் ஆராயவும், மாநில அரசுகளுக்கு ஏற்றபடியான உச்ச அளவு சுயாட்சியினை உறுதி செய்வதற்காக அரசமைப்புச் சட்டத்தில் செய்ய வேண்டிய பொருத்தமான திருத்தங்கள் எவையெனத் தெரிவிக்கவும் இக் குழுவைத் தமிழ்நாடு அரசினர் 1969, செப்டம்பர் 22-ம் தேதியிட்ட 1741-ம் எண் பொது (அரசியல்) துறையின் அரசாணை மூலம் அமைத்துள்ளனர். இக் குழு ஆராய வேண்டியன யாவை என்பதை 1969 நவம்பர் 15-ம் தேதியிட்ட 2836-ம் எண் பொது (அரசியல்) துறையின் அரசாணை அறிவிக்கின்றது. அதில் கேட்டுக்கொண்டுள்ளபடி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தற்போதைய வகையுரைகளை இக் குழு ஆய்தல் வேண்டும். மாநிலத்தின் வரவினங்களைப் பெருக்குவதற்கும், நாட்டின் ஒருமைப்பாட்டு நிலைக்குக் குந்தகமின்றி, நிர்வாகத் துறை, சட்டமியற்று துறை, உயர் நீதிமன்றம் உட்பட நீதித் துறை ஆகியவற்றில் மாநிலத்திற்கு ஏற்றபடியான உச்ச அளவு, சுயாட்சி அமைவதற்கும், தேவையான வழி வகைகளை இக் குழு தெரிவிக்க வேண்டும். எனவே, இப் பொருள் பற்றி ஏற்கனவே ஆய்ந்திருப்போர், இதில் அக்கறை கொண்டுள்ளோர் அனைவரின் கருத்துகளைப் பெற்றறியும் நோக்குடன் இந்த வினாப் பட்டியலைக் குழு வெளியிடுகிறது.

2. இவ் வினாப் பட்டியலில் அனைத்தும் அடங்கிவிடவில்லை. குழுவின் பணிக்குத் தேவையானவை அல்லது பயன்படக் கூடியவை என்று தோன்றுகிற தகவல்கள், குறிப்புகள், யோசனைகள் முதலியவற்றைத் தெரிவிப்பதற்கு இப் பட்டியல் வரையறை விதிப்பதாகாது. அத்தகைய தகவல்கள், குறிப்புகள், யோசனைகள், போன்றவற்றை ' பிற கருத்துரைகள் ' என்னும் தலைப்பின் கீழ் எழுதி, வினாப் பட்டியலுக்கான பதிலுடன் இணைத்து அனுப்பலாம். வினாக்களுக்குப் பதிலளிக்கையில் தாங்கள் கொண்ட கருத்துக்கு ஆதாரமான

மேற்கோள்கள் அல்லது நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தால் அவற்றையும் பதிலில் குறிப்பிடுவது நலமாயிருக்கும். வினாக் களுக்கான பதில்களை " திரு வா. ஆ. வேங்கடாசலபதி, செய லாளர், மைய-மாநில உறவு ஆய்வுக் குழு, 'குறளகம்' (இரண்டாவது மாடி), சென்னை-1 " எனும் முகவரிக்கு இவ் வினாப் பட்டியல் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள் அனுப்பும்படி வேண்டப்படுகிறது.

சென்னை,
பிப்ரவரி 25, 1970.

பி. வி. ராஜமன்னார்,
தலைவர்.

மைய-மாநில உறவு ஆய்வுக் குழு

வினாப் பட்டியல்

அ. மைய-மாநில உறவுக்கு அடிப்படையாக விளங்குவது அரசமைப்புச் சட்டத்தில் அமையும் இணைப்பாட்சி (சமஷ்டி) முறை.

ஆ. ஆட்சித் துறையும், நிர்வாகத் துறையும்.

இ. சட்டமியற்று துறை.

ஈ. நிதி : வரி விதிப்பதற்கான அதிகாரங்கள் ; வருவாய்ப் பங்கீடு ; மையத்திலிருந்து மானியங்களும் கடன்களும்.

உ. நீதித் துறை-உச்ச நீதிமன்றம்-உயர்நீதி மன்றம்.

ஊ. பொதுமை (அரசு) ஊழியங்கள்.

எ. தேர்தல்கள்.

ஏ. ஆய்வுக்குரிய பிற தலைப்புகள்.

மைய-மாநில உறவு ஆய்வுக் குழு

வினாப் பட்டியல்

அ

மைய-மாநில உறவுக்கு அடிப்படையாக விளங்குவது அரசமைப்புச் சட்டத்தில் அமையும் இணைப்பாட்சி (சமஷ்டி) முறை.

1. இந்திய அரசமைப்பு, இணைப்பாட்சி (சமஷ்டி) போலுள்ள ஓர் அமைப்பு என்றே வருணிக்கிறார் பேராசிரியர் வியர் (Prof. Wheare) என்பார். ஒற்றையாட்சிக் (Unitary) கூறுகளைக் குறைவளவில் கொண்ட இணைப்பாட்சி அரசு என்பதை விட, இணைப்பாட்சிக் கோட்பாடுகளைக் குறைவளவு கொண்ட ஒற்றையாட்சி அரசு என்றே இந்தியாவைச் சொல்ல வேண்டும் என்கிறார் அவர். இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? இந்தியாவை ஓர் உண்மையான இணைப்பாட்சி (சமஷ்டி) அரசு ஆக்குவதற்காக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

2. ஒரு நாட்டுக்குப் பொருத்தமான இணைப்பாட்சி அமைப்பு அதன் நில இயல், வரலாறு, மரபு இவற்றின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். அத்தகைய இணைப்பாட்சி அமைப்புக்கு உகந்த முறையில் இந்திய அரசமைப்புச் சட்டம் அமைந்துள்ளதா?

3. "மையத்திற்கும் மாநிலங்களுக்குமிடையே உள்ள உறவு சம நிலையினருக்கிடையே உள்ள உறவின் தன்மையதாகும். அது மேல் நிலையருக்கும் கீழ் நிலையருக்கும் இடையிலுள்ளது போன்றது அன்று. மைய அரசின் அதிகார எல்லைகளுக்குள்ளே இயற்றப்படும், மைய அரசுச் சட்டங்கள், அவற்றோடு முரண்படும் மாநில அரசுச் சட்டங்களை அகற்றி இடங்கொள்கின்றன. ஆனால், இணைப்பாட்சி முறைக்கு ஒத்து மாநிலங்களில் தீர்மானிக்கப்பெறும் கொள்கைகளே ஒவ்வொரு மாநிலத்தின் எல்லையுள் மேலோங்கிநிற்க வேண்டும்". இதுதான் இணைப்பாட்சி முறையமைப்பின் நீர்மையாகும். இந்திய அரசமைப்பு இத்தகைய பண்புகளைக் கொண்டுள்ளதா?

4. மாநில அரசுகளுக்குள்ள சுயாட்சியின் அளவே இணைப் பாட்சி முறையின் உரைகல்லாக அமைகின்றது. இதற் கிணங்கிய இணைப்பாட்சியாக இந்திய அரசமைப்பு இருக் கிறதா ?

5. இந்திய இணைப்பாட்சி முறையில் அதிகாரங்கள் மைய அரசை வலுப்படுத்தும் வகையில் குவிந்து ஒற்றை யாட்சி (Unitary) முறையாகும் அளவில் இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. இதை நீங்கள் ஒப்புக்கொள் கிறீர்களா ?

6. இந்திய அரசமைப்புச் சட்டம் செயற்படும் முறை மைய அரசை வலுவாக்கும் போக்கினைக் கொண்டுள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்களா ? இதற்கான எடுத்துக் காட்டுகளை கூறுவீர்களா ?

7. முன்னேற்றத் திட்டங்களை அமைப்பதால் மைய-மாநில உறவுகளில் ஏற்படும் விளைவு என்ன ? இதனால் மைய அரசின் பக்கம் அதிகாரங்கள் கணிசமான அளவில் குவிவ தற்கு வழியேற்படுகிறது என்று கூறுவது சரியா ? இணைப் பாட்சிக் கொள்கைக்கு இது ஒவ்வுமா ?

8. அரசாங்கக் கொள்கைகளிலும் செயல் திட்டங்களி லும் ஒற்றையாட்சிப் போக்கிற்குச் சாதகமாக அரசியல் கட்சி ஆட்சி முறை எந்த அளவிற்கு இருந்துள்ளது ?

9. ஆளுங் கட்சியினர் முடிவு செய்த கொள்கைகளை மைய அரசினர் ஏற்றுக்கொண்ட பின், எந்த மாநில அரசாவது அக் கொள்கைகளிலிருந்து விலகுவதை, மைய அரசினர் நயப்பதில்லையன்றோ ? எனவே, நடைமுறையில் மாநிலங் களின் சுயாட்சி பாதிக்கப்படுகிறதல்லவா ?

10. ஆளுங் கட்சி செய்யும் முடிவுகளின் அடிப்படையில் மைய அரசின் கொள்கைகள் வகுக்கப்படுவது மாநிலங்களின் தனிப்பட்ட கொள்கைகளுக்குத் தடையூறு ஆகுமன்றோ ?

11. மைய அரசும் மாநில அரசுகளும் ஒரே கட்சியின் ஆதிக்கத்தில் இருப்பதால் மைய-மாநில உறவு செயல்படுவ தற்கு அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாலானதொரு வழி அமைவதாகிறது என்கிறார்கள். சில மாநிலங்களில் வெவ் வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்திருப்பதால் நிலைமையில் கணிச மான மாறுதல் விளைந்துள்ளதா ? அல்லது, அதே நிலைதான் நீடிக்கின்றதா ?

12. (அ) மாநிலங்களுக்கு மட்டுமே சட்டமியற்றும் அதிகாரம் உள்ள காரியத்துறைகளைக் கவனிப்பதற்கென்று மைய அரசிலும் அமைச்சகங்கள் அல்லது இலாகாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, கல்வி, வேளாண்மை ஆகிய மாநிலக் காரியத் துறைகள் இரண்டைக் குறிப்பிடலாம். இவ்வாறான சூழ்நிலை நிலவுவதற்கு நியாயமோ, அவசியமோ இருக்கிறதா? இது விரும்பத் தக்கதா? மாநிலத்தின் சுயாட்சியை இத்தகைய சூழ்நிலை பாதிக்கும் அன்றோ?

(ஆ) மைய அரசில் அவ்வாறான அமைச்சகங்களும் இலாகாக்களும் இருப்பது, எப்படியும், இரட்டிப்பான ஏற்பாடாகவும், தவிர்க்கக் கூடிய செலவிற்கு இடமாகவும் ஆகிறதல்லவா?

(இ) மைய அரசில் அவ்வாறான அமைச்சகங்களும் இலாகாக்களும் இருப்பது தடையில்லாத கருத்துப் பரிமாற்ற வசதி அளிப்பதற்காக என்றால், தேசீய வளர்ச்சிக் குழுவில் கலந்தாலோசிப்பதன் மூலம் அந் நோக்கம் நிறைவுறாதா?

13. தேசப்பாதுகாப்பு, அயல்நாட்டுறவு, செய்தித் தொடர்பு—போக்கு வரத்து, நாணயச் செலாவணி போன்றவை சம்பந்தமான அதிகாரங்களை மட்டும், அத்துறைகளுக்குவேண்டிய நிதியைத்தேடிக்கொள்ளும் அதிகாரத்துடன் மைய அரசுக்கு உரித்தாக்கிவிட்டு, பிற எல்லா அதிகாரங்களும் மாநில அரசுகளுக்கு உரித்தாகுமாறு, அரசமைப்பிலுள்ள அதிகாரங்களை மறு பகிர்வு செய்ய வேண்டுமென்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

14. பின்வருபவை மூன்றும் அரசமைப்பின் மூன்று தூண்கள் எனக் குறிப்பிடப் பெறுகின்றன.

(1) அவ்வப்போதைய அரசு, நாடாளுமன்றம் இவற்றின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டு, நடு நேர்மையுடன் தன்னுரிமையோடு இயங்குகிற நீதித் துறை (Judiciary); (2) ஊழலுக்குச் சிறிதும் இடமில்லாததும் மக்களின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானதுமான அரசு ஊழியர் தேர்விற்கான ஆணைக் குழு (Public Service Commission); (3) நடு நேர்மை வாய்ந்து தன்னுரிமையோடு பணியாற்றும் தணிக்கை முதல்வர் (Auditor-General).

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் இம் மூன்றையும் குறித்து உங்கள் கருத்து ஏதேனும் உண்டா?

ஆ

ஆட்சித் துறையும் நிர்வாகத் துறையும்.

1. ஒரு மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தை அடக்கிச் செலுத்தும் வகையில் சில காரியங்களுக்காக அம் மாநிலத்திற்குக் கட்டளைகள் இடும் அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தின் 11-ம் பகுதியில் 2-ம் அத்தியாயத்தில் மைய அரசுக்கு (யூனியனுக்கு) அளிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அவசியம் உண்டா என்பது மைய அரசின் கருத்தையே முற்றிலும் பொறுத்திருக்கிறது. (அரசமைப்புச் சட்ட உறுப்புகள் 256,257). இந்த வகையுரைகள் மாநிலங்களின் சுயாட்சியைப் பாதிக்கின்றனவா ?

2. மாநிலங்களிடையே ஓடும் ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்துவது பற்றி எழும் பூசல்களைத் தீர்ப்பதற்கும், அதைப் பொறுத்து உச்ச நீதிமன்றம் உட்பட எல்லா நீதிமன்றங்களுக்கும் அதிகாரம் இல்லை என்று அறிவிப்பதற்கும் நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் வகை செய்யலாமென்று அரசமைப்புச் சட்ட உறுப்பு 262 அதிகாரமளிக்கிறது. அதன்படி "1956-ம் ஆண்டு மாநிலங்களிடைத் தண்ணீர்த் தகராறுச் சட்டம் (மைய அரசுச் சட்டம் 33/1956)" நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டிருக்கிறது. அச் சட்டத்தின் 11-வது பிரிவு, மாநிலங்களிடைத் தண்ணீர்ப் பூசல் சம்பந்தமாய் உச்ச நீதிமன்றத்திற்கும் பிற எல்லா நீதிமன்றங்களுக்கும் தீர்ப்பளிக்க அதிகாரமில்லை என்று கூறுகிறது. தண்ணீர்ப் பூசல் தொடர்பாய்ப் பாதிக்கப்படும் மாநிலங்களின் உரிமைகள் எவ்வளவு தூரம் இந்த ஏற்பாடுகளால் பாதுகாக்கப் பெறுகின்றன ? அத்தகைய பூசல்களைத் தீர்க்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்க வேண்டுமென்பது பற்றி உங்கள் கருத்து என்ன ?

3. மாநிலங்களிடை உறவுக் குழு (Inter-State Council) ஒன்றை நிறுவுவதற்கு அரசமைப்புச் சட்ட உறுப்பு 263 வகை செய்கிறது. ஆனால் அந்த மன்றம் செய்யும் முடிவுகளுக்கு அதிகாரத் திறன் இல்லை. அதன் முடிவுகள் மாநில அரசுகளையோ மைய அரசையோ கட்டுப்படுத்துவன அல்ல. அத்தகைய குழுவினால் பயன் ஏதாவது உண்டு என்று நினைக்கிறீர்களா ? அக் குழுவிற்கு மிகுந்த அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று கருதுகிறீர்களா ?

4. ''தொலைவிலமைந்துள்ள மைய அரசிடம் ஆட்சியதிகாரங்கள் குவிந்திருப்பதானது, திறமையின்மைக்கும் மனக்கசப்புக்கும் இடமளிப்பதாய் இருக்கிறது. எனவே, மக்களின் மனம் மைய அரசிற்கு எதிராகத் திரும்புகிறது ''—இவ்வாறு ஆட்சிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ? அவ்வாறு அதிகாரம் குவிவதைத் தவிர்ப்பதற்கு வழி என்ன ?

5. மாநிலம் முக்கியமாய் அக்கறை கொள்ளும் ஒரு காரியத்தைக் குறித்தோ ஒரு மாநிலத்தைப் பொறுத்தோ மைய அரசு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அரசமைப்புச் சட்டத்தின் பல உறுப்புகள் அதிகாரம் அளிக்கின்றன. எடுத்துக்காட்டாக, உறுப்புகள் 150, 213 (1)-ல் வரம்புரைப் பகுதி, 288 (2), 338 (3), 341 (1), 342 (1), 364 (1) அதிகாரமளிப்பதைக் கூறலாம். நமது அரசமைப்பின் அடிப்படையாயுள்ள இணைப்பாட்சிக் கோட்பாட்டைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது மைய அரசிடமிருந்து அந்த அதிகாரங்களை நீக்கி விடுவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும் என்று கருதுகிறீர்களா ? அந்த அதிகாரங்கள் மாநில அரசுக்கு உரித்தாக்கப்பட வேண்டுமா ?

6. (அ) நெடுஞ்சாலைகளைத் தேசீய நெடுஞ்சாலைகள் என்று சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் வழி நாடாளுமன்றம் அறிவிப்பதற்கு மைய அரசின் அதிகாரப் பட்டியலின் எண் வரிசை 23 வகை செய்கிறது. '' 1956-ம் ஆண்டின் தேசீய நெடுஞ்சாலைகள் சட்டம் (மைய அரசுச் சட்டம் 48/1956) '' நாட்டின் சில நெடுஞ்சாலைகளைத் தேசீய நெடுஞ்சாலைகள் என்று அறிவித்திருக்கிறது ; மேலும், அச்சட்டம், மற்ற நெடுஞ்சாலைகளையும் தேசீய நெடுஞ்சாலைகள் என்று அறிவிக்க மைய அரசுக்கு அதிகாரமளிக்கிறது. அச் சட்டத்தின் படி, தேசீய நெடுஞ்சாலைகளை அணைந்துள்ள எல்லா நிலங்களும் அந்த நெடுஞ்சாலைகள் மீது அல்லது அவற்றின் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கிற பாலங்கள் மதகுப் பாலங்கள் (Culverts) ஓடு பாலங்கள் (Causeways) முதலியவைகளும் தேசீய நெடுஞ்சாலைகளைச் சேர்ந்தவை எனக் கொள்ளப்பட்டு மைய அரசுக்கு (ஒன்றியத்திற்கு) உரித்தாக்கப் பெறுவன. மாநில அரசுக்கும், மாநிலத்திலுள்ள தல நிர்வாகத்திற்கும் அத்தகைய நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்துள்ள நிலங்கள், மரங்கள் முதலியவை பற்றிய உரிமையைக் காப்பதற்கு என்ன ஏற்பாடுகள் தேவை ?

(ஆ) இயந்திர நாவாய்கள் சம்பந்தமாக, கப்பல்களைச் செலுத்துவதற்கு உள்நாட்டு நீர்ப் பாதைகளை தேசிய நெடு நீர் வழிகள் (National Waterways) என நாடாளு மன்றம் சட்டத்தின் மூலம் அறிவிக்கலாம் என்று மைய அர சின் அதிகாரப்பட்டியலின் எண் வரிசை 24 வகை செய்கிறது. தேசிய நெடு நீர் வழிகளைக் கட்டுப்படுத்துவதற்கென மாநில அரசுகளின் உரிமையை உறுதிப்படுத்த ஏதேனும் வழிவகை செய்தல் வேண்டுமென எண்ணுகிறீர்களா ?

(இ) பழங்கால நினைவுச் சின்னங்கள், வரலாற்று முக்கி யத்துவம் படைத்த நினைவுச் சின்னங்கள் இவற்றை நாடாளு மன்றம் சட்டத்தின் வழி அல்லது சட்டத்தின் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவித்தால், அந்த நினை வுச் சின்னங்கள் நாடாளுமன்றத்தின் தனித்த அதிகார வரம்பிற்குள் வந்து விடுகின்றன. சில நினைவுச் சின்னங்களைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவித்து, நாடாளுமன்றம் 1958-ம் ஆண்டில் " பழங்கால நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் நிலையிடங்கள் பகுதிகள் பற்றிய சட்டம் (மைய அரசுச் சட்டம் 24/1958) " இயற்றியுள்ளது. அச் சட்டத்தில், மற்ற நினைவுச் சின்னங்களையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று மைய அரசு அறிவிக்க லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தம் நிலவரை (territory) க்குள் அமைந்துள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பழங்கால நினைவுச் சின்னங்களைக் கட்டுக்குள் வைத்துப் பேணிக் காப்பதில் மாநில அரசுகளுக்கும் தக்க உரிமை இருக்க வேண்டும் என்பதற்கு என்ன யோசனை சொல்கிறீர்கள் ?

இ

சட்டமியற்று துறை.

1. அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியி லுள்ள (Schedule) அதிகாரப் பட்டியல்கள் (Lists) I, II, III, இவற்றில் கண்ட சட்டமியற்று அதிகாரப் பகிர்வு, இவை உங்களுக்குச் சரியெனத் தோற்றுகிறதா ?

2. அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பட்டியி லுள்ள அதிகாரப் பட்டியல்களை ஆய்ந்து பார்க்கும்போது மைய அரசின் பக்கம் சாதகமாயுள்ள அல்லது சாய்ந்துள்ள

போக்கு தெரிகிறது. ஒன்றியத்தின் (மைய அரசின்) அதிகாரத்தை விரிவுபடுத்திக் காட்டுவதாயுள்ள வகையுரைகள் எவை ?

3. சட்டமியற்று அதிகாரத்தை மாநிலங்களுக்கு அதிகமாக வழங்குவதற்காக, அதிகாரப் பட்டியல்களை மறு பார்வையிட்டுத் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் ஏதேனும் செய்யவேண்டுமென யோசனை சொல்கிறீர்களா ?

4. பொது அதிகாரப் பட்டியல் (பட்டியல் III) தொடர்ந்து இருந்து வரவேண்டுமென்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? அப்பட்டியல் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டுமா ? இணைப்பாட்சி அமைப்பிற்கிணங்க, பொது அதிகாரப் பட்டியலை நீக்கிவிட்டு, அதில் கண்ட காரியத் துறைகளை மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றிவிடலாம் என்று பரிந்துரை கூறுகிறீர்களா ?

5. பொது அதிகாரப் பட்டியல், மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியல் இவற்றில் குறிக்கப்படாத காரியத் துறைகள் பற்றி, சட்டமியற்றவும் வரிகள் விதிக்கவுமான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாக உரித்தாக்கப்பட்டுள்ளது (அரசமைப்புச் சட்ட உறுப்பு 248 ; I பட்டியலில் வரிசை எண் 97). அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்குப் பதிலாக மாநிலச் சட்டமன்றங்களுக்கு உரித்தாக்க வேண்டும் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? தயவு செய்து பிற நாட்டு அரசமைப்பு வகையுரைகளோடு ஒப்பிட்டு இதுபற்றிய உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

6. மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் தொகுக்கப்பட்டுள்ள எந்தக் காரியத் துறை பற்றியும் சட்டமியற்றும் தனி நிலையான அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டம் 249-வது உறுப்பு அளிக்கிறது. அவ்வாறு சட்டமியற்ற ஒரே ஒரு நிபந்தனை என்னவென்றால், தேசீய நலனுக்கு அது அவசியமென்றோ உசிதமென்றோ நாடாளுமன்ற மேலவையினர் (ராஜ்ய சபையினர்) வந்திருப்போரில் மூன்றில் இருபங்குக்கும் குறையாத எண்ணிக்கையினர் வாக்களித்து ஆதரித்த தீர்மானத்தின் மூலம் அறிவித்திருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் ஆளும் கட்சி வேறாகவும், மையத்தில் மிகப் பெரும்பான்மை பலம் பெற்று ஆளும் கட்சி வேறாகவுமிருக்கும்போது அந்த மாநிலத்திற்கு நலக் கேடான முறையில் அந்த அதிகாரத்தை அமுல் நடத்த

முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா ? இந்த வகையுரை அப்படியே நீடித்திருக்கலாமா ? நீக்கப்பட வேண்டுமா ? திருத்தி அமைத்தால் போதுமா ? திருத்தி அமைப்ப தென்றால் எவ்வாறு அமைக்கலாம் ?

7. நெருக்கடி நிலை சாற்றுணை (Proclamation) ஒன்று செயற்பாட்டில் இருக்கையில் முன்கூறியது போன்ற அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு அரசமைப்புச் சட்ட உறுப்பு 250 வழங்குகிறது. இந்த வகையுரையைப் பொறுத்து உங்கள் கருத்து என்ன ?

8. மாநில அரசுக்கு அல்லது அதன் அதிகாரிகளுக்கும் ஆள்வைகளுக்கும் (authorities) சட்டத்தின் மூலம் அதிகாரங்கள் வழங்கவும் கடமைகள் விதிக்கவுமான அதி காரத்தை அரசமைப்புச் சட்ட உறுப்பு 258 (2) நாடாளு மன்றத்திற்கு அளிக்கிறது. மாநில ஆள்வைகளின் (authorities) இசைவின்றியே நாடாளுமன்றம் இவ்வாறு செய்யலாம். மாநிலத்தைக் கலந்து செய்யவேண்டும் என்ற அவசியமும் இல்லை. மாநிலத்தின் உரிமைகளை இது எவ்வளவு தூரம் பாதுகாக்கிறது ? இது மாநில சுய ஆட்சிக்கு ஒவ்வுமா ?

9. அரசமைப்புச் சட்டம் 252-வது உறுப்பின்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்ட மன்றங்கள் அந்த உறுப்பில் குறிப்பிட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றினால், மாநிலம் சட்டமியற்றுவதற்குரிய ஒரு காரியத் துறை பற்றி நாடாளுமன்றம் சட்டங்கள் இயற்ற முடியும். ஆனால், நாடாளுமன்றம் இயற்றிய அத்தகைய சட்டம் ஒன்றை அதன்பின் எப்போதும் மாநில சட்ட மன்றம் திருத்தமைவு (amendment) செய்யவோ நீக் கவோ இயலாது. அத்தகைய சட்டத்தைத் திருத்தமைவு செய்வதற்கோ நீக்குதற்கோ மாநிலச் சட்ட மன்றத்துக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்பதுபற்றி தங்கள் கருத் தென்ன ?

10. 1935-ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மாகாண அதிகாரப் பட்டியலிலும் பொது அதிகாரப் பட்டியலிலும் இருந்த காரியத் துறைகளில் சில இப்போது மைய அரசின் அதிகாரப் பட்டியலில் அடங்கியுள்ளன. அவற்றை மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற

வேண்டுமென்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? (எடுத்துக் காட்டு: மைய அரசின் அதிகாரப் பட்டியலின் எண் வரிசை கள் 60, 92.)

11. பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழி இன்னதென்று விதிக்கும் அதிகாரம் மைய அரசின் அதிகாரப் பட்டியலின் 66-வது எண் வரிசைப்படி இப்போது நாடாளு மன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

12. வேளாண்மை நிலச் சொத்துகளின் மூலதன மதிப்பின் மீது (Capital value of agricultural assets) வரி விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசிற்குக் கொடுப்பதற்காக யூனியன் பட்டியல் 86-வது எண் வரிசையைத் திருத்தமைவு செய்யலாம் என்று பரிந்துரை கூறுகிறீர்களா?

13. அரசமைப்புச் சட்டத்தின் பல உறுப்புகள், மாநிலம் முக்கியமாய் அக்கறை கொள்ளும் காரியங்களிலும் மாநிலம் சம்பந்தமாகவும் சட்டமியற்ற நாடாளு மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கின்றன. [எடுத்துக் காட்டுகள்: உறுப்புகள் 22(7), 33, 35(அ)(1), 154(2)(ஆ), 158(3), 169(1), 170(3), 171(2), (3), (4), 172(1), வரம்புரை, 172(2), 173(இ), 191(1), (உ), 193, 287, 341(2), 342(2).] இணைப்பாட்சி அரசமைப்பின் தெளிந்த கோட்பாடுகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, நாடாளு மன்றத்திலிருந்து அந்த அதிகாரங்களை நீக்கிவிடுவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும் என்று கருதுகிறீர்களா? அந்தக் காரியத் துறைகள் மாநிலங்களின் சட்ட மன்றங்களுக்கு உரித்தாக்கப்பட வேண்டுமா?

14. அதிகாரப் பட்டியல் I (மைய அரசின் அதிகாரப் பட்டியல்) எண் வரிசைகள் 52, 53, 54 ஆகியவை அதிலேயே தொடர்ந்திருக்கலாமா? அல்லது அவற்றை பட்டியல் II (மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியல்)க்கு மாற்ற வேண்டுமா? உங்கள் கருத்து என்ன?

15. (அ) மாநில மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கென (Con ideration) ஒதுக்குறுத்தி (Reservation) வைக்க வேண்டும் என்கிற ஏற்பாடு, மாநில அரசினுடையவும் அதன் சட்ட மன்றத்தினுடையவும் சுயாட்சிக்கு ஒவ்வும் என்று கருதுகிறீர்களா?

(ஆ) அத்தகைய ஏற்பாட்டை முற்றிலும் அகற்ற வேண்டும் அல்லது திருத்தியமைக்க வேண்டும் என்பதை ஆதரிக்கிறீர்களா ?

16. பொருளாதார சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் வகுப்பது பொது அதிகாரப் பட்டியலில் காணப்படும் காரியத் துறையாகும். ஆனாலும், மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலிலுள்ள சில துறைகள் தொடர்பான முன்னேற்றத் திட்டங்களை உருவாக்குவதிலும் நிறைவேற்றுவதிலும் மேற்பார்ப்பதிலும்கூட உள்ள அதிகாரங்களை மைய அரசே மேற்கொண்டுள்ள நிலை இருக்கிறதா ?

17. மாநில அரசுகளின் அதிகாரப் படடியலிலுள்ள காரியத்துறைகள் குறித்து மைய அரசின் வகையினரது (Central agencies) பொறுப்பு என்ன என்பதுபற்றித் தெளிவாக வரையறுத்து விடுவது அவசியமும் தக்கதும் ஆகுமெனக் கருதுகிறீர்களா ?

18. மாநிலஅரசுகளின் அதிகாரப்பட்டியலிலுள்ள காரியத் துறைகள் குறித்து மைய அரசின் வகையினர் செய்வதற்கென ஒதுக்கக்கூடிய பணிகள் யாவை ?

19. மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் அடங்கியுள்ள கல்வி, மக்கள் உடல்நலம், சமுதாய நலம், பாசனம், உணவு, வேளாண்மை போன்ற காரியத் துறைகளிலும் பிறவற்றிலும், மைய அரசின் சொல் செல்லுமாறு செய்வதற்கு இடமிருக்க வேண்டுமா ? அவைபற்றி அதிகாரமோ ஆணையோ செலுத்துவதற்கும் இடமிருக்க வேண்டுமா ?

20. மாநிலங்களுக்குரிய துறைகளில், மைய அரசு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும், திகழ்ந்து தகவல்கள் தரும் முறையிலும், முழுதமைந்த திட்டம் வகுக்கும் வகையிலும், மதிப்பீடு செய்வதிலும் மட்டுமே இடம் பெற வேண்டும் என்று கூறப்படுகிறது. இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ?

21. மைய அரசு நேரடியாக அக்கறை கொண்டுள்ள அல்லது மைய அரசின் வகையினராக (Agents of the Centre) மாநில அரசுகள் நிறைவேற்றுகிற திட்டங்கள் குறித்தும் கூட மைய அரசின் பொறுப்பைக் குறைவான அளவில் அமைத்துவிட வேண்டியது அவசியமா, தக்கது தானா ?

ஈ

நிதி: வரி விதிப்பதற்கான அதிகாரங்கள்; வருவாய்ப் பங்கீடு; மையத்திலிருந்து மானியங்களும் கடன்களும்.

1. முறை குலையாத இணைப்பாட்சி அமைப்பில் இருந்தாக வேண்டியவை—

(அ) மைய அரசு மாநில அரசு ஒவ்வொன்றும் தத்தம் தனிப்பட்ட காரியப் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான நிதியை ஈட்டுதலுக்கு அதிகாரம்.

(ஆ) அவ்வரசுகளின் நிதியீட்டு அதிகாரங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமன்னியில் செயல்படுதல். இது ஏனென்றால், மைய அரசின் கொடையைப் பெரிதும் நம்பி மாநில அரசுகளிருந்தால், பிற காரியங்களில் அவற்றின் சுயாட்சித் தன்மை வெளித்தோற்றமலே பறிக்கப்படலாம்.

இந்த இரண்டு வரைகூறுகளையும் அரசமைப்புச் சட்டம் உறுதி செய்கின்றதா?

இல்லையெனில், எவ்வாறு அவற்றை எய்தலாம்?

2. வரி இனங்கள் மைய அரசின் அதிகாரப் பட்டியலிலும் (பட்டியல் I), மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலிலும் (பட்டியல் II) திட்டவட்டமாகப் பிரித்துப் போடப்பட்டுள்ளன. வேறெவ்வகை வரியும் விதிப்பதற்கான எஞ்சிய அதிகாரம் பட்டியல் I-ல் 97-வது எண் வரிசைப்படி நாடாளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உங்கள் கருத்தில் இந்தப் பிரிவினை முறையானதாகவும் நேர்மையானதாகவும் தோன்றுகிறதா?

3. மாநிலங்களின் காரியப் பொறுப்புகள், வரை திட்டங்கள் (Schemes), திட்ட வேலைகள் (Projects) இவற்றை நிறைவேற்றப் போதுமான வரவினங்களை பட்டியல் II-ல் குறிப்பிட்டுள்ள வரி இனங்கள் அளிக்கவல்லனவா? தங்கள் கருத்தென்ன?

4. மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரம் விரிவதற்கும், பெருகுவதற்கும் குந்தகமாக பட்டியல் I-ல் காணும் 97-வது எண் வரிசை இருக்கிறதல்லவா?

5. மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காரியப் பொறுப்புகள் விரிவடைந்து வருபவை. அத்துடன் ஒப்பிடும்போது, நிதிஈட்டும் வழி மூலங்கள் விரிவுபெற வகையிலாதவை. சமச்சீரற்ற இந்நிலையைச் சரியாக்குவது எவ்வாறு?

6. இப்போது மைய அரசுக்கு ஒதுக்கியுள்ள வருவாய் மூலங்கள் சிலவற்றை மாநில அரசுகளுக்கு மாற்றிக் கொடுக்கலாம் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? அப்படியானால் எந்தெந்த வருவாய் மூலங்களை மாற்றிக் கொடுக்கலாம் ?

7. மைய அரசுக்கும் (ஒன்றியத்துக்கும்) மாநில அரசுகளுக்குமிடையே வருவாய்களைப் பகிர்ந்தளிக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வகையுரைகள் உள்ளன. பகிர்ந்தளிப்பு உகந்த முறையில் இருக்கிறதென்று நீங்கள் எண்ணுகிறீர்களா ?

8. வருவாய்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தில்,—

(அ) சில தீர்வைகளை மைய அரசு விதித்தாலும், ஒரு மாநிலத்தின் எல்லைக்குள் விதிக்கப்படலாகும் அத்தீர்வையின் மொத்தத் தொகை அம்மாநிலத்திற்கே ஒதுக்கப்படுகிறது.

(ஆ) மைய அரசு (ஒன்றியம்) விதிக்கும் வேறு சில தீர்வைகள், வரிகள் இவற்றிலிருந்து கிடைக்கும் நிகரத் தொகைகள் மாநிலங்களுக்கு ஒதுக்கிவிடப்பட்டு, சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் வகுத்துள்ள கொள்கைகளின்படி மாநிலங்களிடையே பகிர்வு செய்யப்படுகின்றன.

(இ) மைய அரசு விதிக்கும் சில வரிகள் மைய அரசுக்கும் (ஒன்றியத்திற்கும்) மாநிலங்களுக்குமிடையே ஒரு குறித்த முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

(ஈ) மைய அரசு விதிக்கும் ஆயத் தீர்வை (Excise duty) நாடாளுமன்றம் சட்டம் இயற்றுகிறபடி முழுவதுமோ பகுதியோ மைய அரசுக்கும் (ஒன்றியத்துக்கும்) மாநிலங்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்படலாம். அவ்வாறு சட்டமிருந்தால், அச்சட்டம் வகுக்கும் கொள்கைகளின்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை அவற்றிடையே பகிர்ந்தளிக்க இடமுண்டு.

இவ்வாறான பகிர்ந்தளிப்புத் திட்டம் உங்கள் கருத்தில் உகந்ததாய்த் தோன்றுகிறதா ?

9. மைய அரசு விதிக்கும் வேறு எந்த வரிகள், தீர்வைகள் மூலமான வருவாயை மாநிலங்களுக்கு முற்றிலுமாக ஒதுக்கவோ மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்தளிக்கவோ வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

10. வருமான வரிகள் என்பதில் கம்பெனிகள் மீது விதிக்கப்படும் கூட்டுரும வரி (கார்ப்பரேஷன் வரி) அடங்காது என்று அரசமைப்புச் சட்ட உறுப்பு 270 (4) அறிவிக்கிறது. இவ்

வாறு கூட்டுரும வரி விலக்கப்படுதற்கு மாநில அரசுகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதுபற்றி உங்கள் கருத் தென்ன ?

11. 272-வது உறுப்பின்படி, மைய அரசால் (ஒன்றியத் தால்) விதிக்கப்பெறுகிற ஆயத் தீர்வைகளை (Excise duty) மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிரவேண்டு மென்பது கட்டாயமில்லை. கட்டாயமாகப் பகிர வேண்டு மென்பது உங்கள் யோசனையா ? அவ்வாறாயின் தீர்வைகள் அனைத்தையும் பகிர்வதா, சிலவற்றை மட்டும் பகிர்வதா? சிலவற்றை மட்டுமென்றால் அவை யாவை ?

12. உறுப்பு 269-ல் குறிக்கப்பட்டுள்ள வரிகளை மைய அரசு விதித்து வசூலித்து அந்த வருவாயை மாநில அரசு களுக்கு அளிக்க வேண்டும். ஆனால், அவ்வகை வரிகளைச் சரிவர விதித்துப் போதுமான வருமானத்தை மைய அரசு ஈட்டவில்லை என்று குறை கூறப்படுகிறதே, நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ? மாநில அரசுகளுக்கு அந்த வரிகள் பற் றிய அதிகாரத்தை மாற்றிவிட வேண்டுமென்பது உங்கள் யோசனையா ?

13. வருவாயைப் பகிர்ந்தளிப்பதில் நிதி ஆணைக்குழு (Finance Commission) பயனுள்ள பணியாற்றுகிறதாகக் கருதுகிறீர்களா ?

14. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மைய அரசைக் கட்டுப்படுத்துவதில்லை ; கட்டுப்படுத்துவனவாய் அவற்றை ஆக்குதல் உகந்தது என்கிறீர்களா ?

15. மைய-மாநில அரசுகளுக்கிடையும், மாநில அரசு களுக்கிடையும், வருவாய்களை முறையாகவும் சரியாகவும் பகிர்வதற்கு நீங்கள் விரும்பும் வேறுவிதமான மாற்று ஏற்பாடு எது ?

16. எந்தெந்த மாநிலங்களுக்கு உதவியளித்தல் அவசியம் என்று நாடாளுமன்றம் தீர்மானிக்கிறதோ அவற்றுக்கு மைய அரசிலிருந்து மானியங்கள் அளிப்பதற்கு 275-வது உறுப்பு வகை செய்கிறது. வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு மானியத் தொகை அளிக்கப்படலாம்.

மாநிலங்களிடையே வேற்றுமை காட்டுவதற்கு இது இடமளிக்கிறதா ? அதிலும் முக்கியமாக மைய அரசில் ஆளுங்கட்சி வேறாகவும், ஒரு மாநில அரசில் ஆளும் கட்சி வேறாகவும் இருக்கும்போது வேற்றுமை காட்டுவதற்கு இட முண்டல்லவா ?

17. மைய அரசினரின் நிர்வாக ஆணையின்படி நிறுவப் பட்ட "முன்னேற்றத் திட்ட ஆணைக்குழு" (Planning Commission) செய்யும் பரிந்துரைகளின் அடிப்படை யில் முன்னேற்றத் திட்ட மானியங்கள் இப்போது வழங்கப் படுகின்றன. சட்டத்தின் மூலம் வேறொரு குழு ஏற்படுத்தி, திட்ட மானியங்கள் அளிப்பதற்கான கொள்கைகள் வகுப் பதை அக்குழுவிடம் ஒப்படைப்பது விரும்பத்தக்கதா ?

18. நிதி ஆணைக் குழுவிற்கு அப்பணியைக் கொடுக்கலாம் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? அல்லது வேறு குழுவே அமைக்கலாம் என்கிறீர்களா? எனில், அக் குழுவின் அமைப்பு முறை எவ்வாறிருக்க வேண்டும் ?

19. மைய அரசினைச் சேர்ந்த மக்கள் உடல் நலத் துறை யினர் ஒரு மாநில வைத்தியக் கல்லூரிக் கட்டடம் கட்டும் திட்டத்தைப் பார்த்து விட்டு, அக்கட்டடத்து அறைகளின் உயரத்தைக் குறைக்க வேண்டுமென்றும், மைய அரசினர் குறிப்பிடும் அளவுகளில் அறைகள் அமைக்கப்பட்டால் என்ன செலவாகுமோ அதை மட்டுமே மானியமாக அளிக்கப்படும் என்றும் கூறியதாக ஒரு மாநில அரசின் அதிகாரி குறிப்பிடு கிறார். இம்மாதிரி மாநிலத் திட்டங்களில் மைய அரசு குறுக்கிட்ட வேறு நிகழ்ச்சிகள் எவையேனும் உங்களுக்குத் தெரியுமா ?

20. ஒரு மாநிலப் பகுதியில் சீரமைப்புச் செய்வதற் கென்று அம்மாநிலம் தொடங்கியுள்ள வரைதிட்டங்களுக் காக (Schemes) மைய அரசு பெரும் தொகைகள் செலவழிக் கிறது ; அதன் பயன் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கே விளைகிறது. சம்பந்தப்பட்ட பகுதி அல்லது மாநிலம் இச் செலவைத் திரும்பக் கொடுக்கும் பொறுப்பினை எந்த அளவு ஏற்க வேண் டும் ? எந்த அளவிற்கு வளர் நல வரி (Betterment levy) விதிக்கப்படவேண்டும் ?

21. மாநில முன்னேற்றத் திட்ட செலவுகளுக்கு மைய அரசுக் கடன் திட்டங்களிலிருந்து இப்போது பணம் கொடுத்து வரும் முறையில் குறைபாடு ஏதேனும் தெரிகிறதா ?

22. வருவாய் வளமுடைய முன்னேற்றத் திட்டங்களுக்கு மட்டுமே மைய அரசு கடன்கள் கொடுக்க வேண்டும்; வரு வாய் வளம் இல்லாத திட்டங்களுக்கு மூலதன மான்யமாகக் (Capital grants) கொடுத்துதவ வேண்டும். இதனை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?

23. அயல் அரசுகளிடமிருந்து மைய அரசு கடன்கள் அல்லது மானியங்கள் பெறும்போது கைக்கொள்ள வேண்டிய நடைமுறை எவ்வாறிருக்க வேண்டும் ? கடன் வாங்குவது பற்றி மாநில அரசுகளை எந்த அளவிற்கு மைய அரசு கலந்தாலோசிக்க வேண்டும் ? கடன்களை வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்புச் சுமை எல்லா வரி செலுத்துவோர் மீது விழுவதாலும், மாநில அரசுகள் தமக்கென விதிக்கக் கூடிய வரிகளை அதற்காகக் குறைக்க நேரிடுவதாலும் இக் கேள்வி எழுகின்றது.

24. இரண்டு மாநில அரசுகள் அதிகப்பற்றுக வாங்கியிருந்த நூறு கோடி ரூபாய் வரையிலான தொகையை மைய அரசு தள்ளுபடி செய்துவிட்டு, அந்த இழப்பை ஈடுகட்ட நூறு கோடி ரூபாய்க்கு அதிகப்படியாக வரி விதித்ததைப் பார்க்கிறோம். மைய அரசிற்கு இவ்வாறு செய்ய அதிகாரமுண்டா ? மற்ற மாநிலங்களைப் பொறுத்து இது நியாயமாகுமா ?

25. மைய அரசிடம் மாநில அரசுகள் கடன்படுவதுபற்றி உங்கள் யோசனை என்ன ? மாநில அரசுகள் மைய அரசிடம் பெருமளவில் கடன்படுவது மாநில அரசுகளின் சுயாட்சியை எவ்வாறு பாதிக்கின்றது ?

26. ஆட்சிச் சீரமைப்பு ஆணைக்குழு (Administrative Reforms Commission) நியமித்த ஆராய்ச்சிக் குழுவினர் (Study Team) இவ்வாறு கருத்து வெளியிடுகிறார்கள்:—

"இப்போதுள்ள ஆட்சி முறையில் குறைபாடுகளைக் காண்கிறோம். மாநில அரசுகள் பணத்திற்காக அளவு மீறி மைய அரசையே நம்பியிருக்க வேண்டிய நிலை, நிதி பகிர்வதில் கையாளப்படும் தவறான முறை ஆகிய இரண்டு பெருங் குறைபாடுகளைக் காண்கிறோம். மாநிலங்களின் சுய மரியாதைக்குகந்ததாய், அதே சமயம் வலுவான மைய அரசுக் கொள்கைக்கு ஏற்ற வகையில் இம்முறையைச் சீரமைப்புச் செய்தல் வேண்டும்".

அக்குறைபாடுகளை அகற்றுவதற்கு வழிகள் யாவை ?

27. மாநில அரசுகள் பணத்திற்காக மைய அரசை நம்பியிருக்க வேண்டிய நிலை அவற்றின் சுயாட்சியை வேரறுக்கிறது. இதுபற்றி, உங்கள் ஆராய்ச்சி, அனுபவம் இவற்றிலிருந்து கண்டவற்றைக் கூறுங்கள்.

28. ஒரு மாநில அரசின் வசதித் திட்ட வேலை (Project) ஒவ்வொன்றுக்கும், அயல்நாட்டு நாணய மாற்றுகள் பெறுவதற்காகவும், இன்றியமையாத மூலப்பொருள்களைச் சேகரிப்பதற்காகவும், திட்டங்கள் பற்றி இசைவாணை (Sanction) மற்றும் மானியங்கள் பெறுவதற்காகவும் மைய அரசை அம் மாநில அரசு நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஓர் இணைப் பாட்சி அமைப்பு முறைக்கு இது ஒவ்வுமா? முறையாகுமா ?

29. மாநில அரசுகளின் தன்மானம் ஒருபுறமிருக்க, அவற்றின் சுயாட்சியைப் பேணிக் காப்பதற்காக மைய அரசை நம்பியிருக்கும் நிலை மிகக் குறைந்த அளவிலே இருக்க வேண்டியது முக்கியமாகும். இதை எய்துவது எங்ஙனம் ?

30. மைய அரசின் தனி ஆதரவைப் பெற்றுத் தனி முறையில் நடத்தப் பெற வேண்டுமென்று மாநில அரசுகள் ஒன்றுக்கொன்று இயற்கையாகவே போட்டியிட நேரிடுவதைக் கவனித்திருக்கிறீர்களா ? அத்தகைய போட்டி மனப்பான்மை மாநில அரசுகளின் சுயாட்சியைப் பாதிக்கக் கூடும் அன்றோ ?

31. மாநில அரசுகளுக்கு மைய அரசிடமிருந்து இரண்டு வழிகளில் நிதி உதவி கிடைக்கிறது ; ஒன்று, இன்னின்ன வகைக்கு இவ்வளவு என்று முன்னரே உறுதியாக்கப்பட்டு நிதி வழங்குதல் (Assured devolution) ; இன்னொன்று, நிர்வாக ஆணை மூலம் விருப்பம்போல் வழங்கும் மானியம் (Discretionary grant) முன்னேற்றத் திட்ட மானியங்களை விருப்ப மானியத்திற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். உறுதியாக வழங்கும் நிதி உதவியைப் பெருக்கி, விருப்ப மானியம் வழங்குவதில் அரசியல் சட்டப்படி நெறிமுறை உண்டாக்கி மாநில அரசுகள் மைய அரசை நம்பியிருக்கும் அளவைக் குறைக்கலாம். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?

32. பஞ்சம், வெள்ளம், நிலநடுக்கம் முதலிய கொடுமைகள் அடிக்கடி நிகழ்வதால், மைய அரசு மாநில அரசுகளின் வருவாயிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைக் கடன் தீர்க்கும் நிதி (Sinking fund) ஒன்றிற்கென ஒதுக்கி, வேளை வந்தபோது இடர் தீர்வுக்காக அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற யோசனை உங்களுக்குண்டா ? அப்படியானால், மைய அரசும் மாநில அரசுகளும் ஒவ்வொன்றும் தரவேண்டியது எவ்வளவு இருக்க வேண்டும் ?

33. ஒரு மாநிலத்தில் உறுதியற்ற நிதி நிலை விளங்குவதாக சாற்றுரை ஒன்றை (Proclamation of Financial Instability of a State) மைய அரசு விடுத்து மாநில அரசின் பண மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்கு நிறுத்தி வைப்பது, மாநில அரசுக்குக் கட்டளைகள் இடுவது உள்ளடங்கலாக மாநில அரசின் காரியங்கள் குறித்து மிகுந்த அதிகாரத்தை மைய அரசு செலுத்துவதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 360-வது உறுப்பு வகை செய்கிறது. அப்படியொரு ஏற்பாடு தேவையா, ஒழுங்கானதா? உங்கள் கருத்தென்ன?

உ

நீதித் துறை.

உச்ச நீதிமன்றம்.

1. வெவ்வேறான இரண்டு மாநிலங்களில் குடியிருந்து வருகிற அல்லது தொழில் நடத்துகிற அல்லது வேலையில் அமர்ந்திருக்கிற நபர்களிடையே எழும் வழக்குகள் அல்லது, ஒரு மாநில அரசுக்கும் மற்றொரு மாநிலத்தில் குடியிருந்து வருகிற அல்லது தொழில் நடத்துகிற அல்லது வேலையிலமர்ந்திருக்கிற நபருக்குமிடையே எழும் வழக்குகள் அல்லது, மைய அரசுக்கும் (யூனியன்) ஒரு மாநிலத்தில் குடியிருந்து வருகிற அல்லது தொழில் நடத்துகிற அல்லது வேலையிலமர்ந்திருக்கிற நபருக்குமிடையே எழும் வழக்குகள் அல்லது, ஒருமாநில அரசுக்கும் மற்றொரு மாநில அரசுக்குமிடையே எழும் வழக்குகள் அல்லது மைய அரசுக்கும் ஒரு மாநில அரசுக்குமிடையே எழும் வழக்குகள் ஆகிய இவ்வகை வழக்குகளை மட்டும் விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டுமென்று வரையறுப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

உயர் நீதிமன்றம்.

2. (அ) ஓர் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை நியமிக்கும்போது, குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியையும் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் ஆளுநரையும் (Governor), சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று இந்திய

அரசமைப்புச் சட்டத்தின் 217-வது உறுப்பு வகை செய்கிறது. ஆனால், மைய அரசு வரைந்துள்ள நடைமுறைக் குறிப்பில் மாநிலத்தின் தலைமை நீதிபதியும், முதலமைச்சரும் மாநில ஆளுநருடன் கலந்து தமது பரிந்துரையை மைய அரசின் உள்துறை அமைச்சருக்கு அனுப்பவேண்டும் என்றும், அந்த உள்துறை அமைச்சர் இந்தியாவின் தலைமை நீதிபதியுடனும் பிரதம மந்திரியுடனும் கலந்து கொண்டு தேர்ந்தெடுப்பது பற்றிக் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்து நீதிபதிகளின் ஊதியம்—மாநில அரசுகளின் பற்று ஆகுமென்பதைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, மைய அரசின் உள்துறை அமைச்சரும் இந்தியாவின் பிரதம அமைச்சரும் இதில் தலையிடுவது அவசியமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா ?

(ஆ) உயர் நீதிமன்றத்து நீதிபதிகளின் நியமனம், நீக்கம், ஊழியம் சம்பந்தமான நிபந்தனைகள் ஆகியவை பற்றி அனைத்து அதிகாரங்களும் மாநில அரசுக்கே உரித்தாக்கப்பட வேண்டாமா ?

3. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 222-வது உறுப்பின் படி, குடியரசுத் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியைக் கலந்துகொண்டு, நீதிபதி ஒருவரை ஓர் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றோர் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றலாம். அத்தகைய ஏற்பாடு தக்கதென நீங்கள் கருதுகிறீர்களா ? மாநில அரசுகளைக் கலந்துகொள்ள வேண்டுமென்று கூட வகை செய்யப்படாததால் இந்த ஏற்பாடு மாநில அரசுகளைப் புறக்கணிப்பது ஆகாதா ?

4. குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கு அதிகாரமிருப்பது போல, சட்டப் பிரச்சினைகளிலும் அரசமைப்புப் பிரச்சினைகளிலும் உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டறிய ஆளுநருக்கு அதிகாரமிருக்க வேண்டுமென்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

ஊ

பொதுமை (அரசு) ஊழியங்கள்.

1. இப்போதிருந்து வரும் அனைத்திந்திய ஊழிய வகைகளை (All India Services) ஒழித்து விடுவதையும், புதிதாக அனைத்திந்திய ஊழிய வகைகளை உண்டாக்குவதற்கான

அரசமைப்புச் சட்டவகையுரைகளை நீக்கிவிடுவதையும் நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? அவை தொடர்ந்து இருந்து வருவதாயிருந்தால், அந்த ஊழியர்களைப் பொறுத்து மாநிலங்களின் உரிமைகளைத் தக்கவாறு காப்பதற்கான ஏற்பாடுகள் எவையென்று நீங்கள் கருதுகிறீர்கள் ? மைய அரசின் (யூனியனின்) ஆட்சிமொழி இந்தியாக இருப்பதையும் தமிழ் போன்ற வட்டார மொழி மாநிலத்தின் ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ள மாநிலங்களையும் முக்கியமாய் மனத்திற்கொண்டு உங்கள் கருத்தைக் கூறுவீர்களாக.

2. மைய அரசு ஏராளமான உத்தியோகங்களை உண்டாக்கியுள்ளது. ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் உத்தியோகங்களின் எண்ணிக்கை இருமடங்காகவும் மும்மடங்காகவும் பெருகி வருகின்றது. அந்த உத்தியோகங்களுக்கான மாதச் சம்பளம் ரூபாய் ஆயிரத்திலிருந்து மேலேறிக்கொண்டு போகின்றது. மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டுவிட்டதையும், எல்லா நிர்வாகக் காரியங்களுக்கும் வட்டார மொழியை மாநில அரசுகள் ஏற்றுக் கையாளத் தொடங்கியிருப்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இந்த உத்தியோகங்களுக்கான தேர்வுகளைச் செய்து, மாநிலங்களுக்கு நியமித்து அனுப்பும் அதிகாரத்தை ஒன்றிய அரசு ஊழியர் தேர்விற்கான ஆணைக்குழு (Union Public Service Commission) விற்கு வழங்கியிருப்பது சரியென்று நீங்கள் கருதுகிறீர்களா ?

3. மைய அரசினல் தேர்வு செய்யப்பட்டவர்களை மாநிலங்களுக்கு அனுப்புவதில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை எதுவாயிருக்க வேண்டுமென்று நீங்கள் எண்ணுகிறீர்கள் ?

4. இந்தியா எங்கணும் பணிபுரிகிற மைய அரசாங்க ஊழியர்களுக்கு அவ்வரசு பல தடவைகளில் பஞ்சப்படியை உயர்த்தி வந்திருப்பது காண்கிறோம். இதன் இயல்பான விளைவாக மாநில அரசு ஊழியர்கள், தொழில் துறை அல்லது அரசாங்கச் சார்புடைய முகமைத் துறைகளில் பணி செய்யும் மற்றையோர் இவர்களுக்கும் அதேமாதிரி சம்பளங்களும் பஞ்சப்படிகளும் உயர்த்தப்பட்டாலன்றி அவர்களிடம் மனக்குறை இருந்தே தீரும். மைய அரசிற்கொப்ப சம்பளப்படி

உயர்வு செய்ய நேரிடும்போது மாநில அரசுகளுக்கும் அரசாங்கச் சார்புடைய முகமைகளுக்கும் அதிகப்படியான நிதி கிடைக்குமாறு செய்வதற்கு மைய அரசினர் எந்த அளவிற்கு பொறுப்பேற்க வேண்டும் ?

5. மாநில அரசு ஊழியர் தேர்விற்கான ஆணைக்குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரைப் பதவி நீக்கம் செய்ய மைய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை, மாநில அரசின் சுயாட்சித் தன்மைக்கு ஏற்ப, மாநில அரசுக்கே மாற்றிவிட வேண்டாமா ?

எ

தேர்தல்கள்.

1. நியாயமாகவும், நடு நேர்மையாகவும் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நடைமுறைக் காரியங்களை முடிவு செய்வதில் தேர்தல் ஆணைக்குழு (Election Commission) முற்றிலும் நடுநேர்மையும் தன்னுரிமையும் கொண்டு விளங்க வேண்டுமெனக் கூறப்படுகிறது.

உங்கள் கருத்தில் அது அவ்வாறு இருந்திருப்பதாகத் தெரிகிறதா ? மாருக இருந்திருப்பின் சான்று ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா ?

2. மாநிலச் சட்டமன்ற அவையொன்றிற்கான தேர்தல்கள் நடத்துவது பற்றிய அல்லது அதன் தொடர்பான காரியங்கள் குறித்தும், வாக்காளர் பட்டியல் தயாரிப்பது குறித்தும் அதற்குத் தேவையான எல்லாக் காரியங்கள் குறித்தும் மாநிலச் சட்ட மன்றங்களின் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு அதன் பொருட்டுள்ள அதிகாரத்துக்கு இப்போது உட்பட்டதாகும். நாடாளுமன்றம் அதன் பொருட்டு ஏற்பாடு செய்யாதிருந்தால் மட்டுமே மாநிலச் சட்டமன்றம் சட்டங்கள் இயற்ற முடியும். இது குறித்து நாடாளுமன்றம் விவரமான ஏற்பாடுகள் செய்துள்ளது. மேற்சொன்ன காரியங்கள் பற்றியும், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவி பற்றியும் நாடாளுமன்றத்துக்குச் சம்பந்தமின்றி மாநிலச் சட்டமன்றங்கள் சட்டங்களியற்ற அதிகாரங்களைப் பெறுவதற்கு என்ன ஏற்பாடுகள் தேவை ?

ஏ

ஆய்வுக்குரிய பிற தலைப்புகள்.

I. நிலவரை (Territory).

1. (அ) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 1(3) படி, இந்திய நிலவரையில் மாநில அரசுகளின் நிலவரைகளும் மற்றவையும் அடங்குவன. 3-வது உறுப்பின்படி, நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் ஒரு மாநில அரசின் நிலவரையைப் பிரிவினை செய்தோ மாநில அரசுகளின் பகுதிகளைப் பிரித்தோ புதியதொரு மாநிலத்தை உருவாக்கலாம்; ஒரு மாநிலத்தின் பரப்பைக் குறுக்கவோ எல்லைகளை மாற்றமைவு செய்யவோ இடமுண்டு. ஒரே ஒரு நிபந்தனை என்னவென்றால், அவ்வகைக்கான மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரை மீதன்றியும், மசோதாவில் அடங்கியுள்ள புரிவுரை (Proposal) மாநிலம் ஒன்றன் பரப்பு, எல்லை அல்லது பெயரைப் பற்றியிருப்பின் குடியரசுத் தலைவர், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு அதன் நோக்குரையைப் பகருமாறு அனுப்பி வைத்தாலன்றியும் அம் மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்னிட முடியாது. அவ்வகையில் இயற்றப்பட்ட சட்டம் எதனையும் உறுப்பு 368-ஐப் பொறுத்த வகையில் அரசமைப்புச் சட்டத்தின் திருத்தமைவு எனக் கொள்ளக் கூடாது என்று உறுப்பு 4 (2) சொல்கிறது. "குடியரசுத் தலைவர்" என்ற தொடர் உண்மையில் மைய அரசையே குறிக்கும். உறுப்பு 4 (2)—விருந்து விளைவது என்னவென்றால், அரசியல் சட்டத் திருத்தமைப்புச் சட்டம் நிறைவேறுவதற்குத் தேவையானதுபோல, மாநிலம் ஒன்றன் பரப்பைக் குறுக்குவதற்கான அல்லது எல்லைகளை மாற்றியமைப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினர் வாக்களிக்க வேண்டுமென்பது தேவையில்லையாகிறது. சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றத்திற்கு மசோதா அனுப்பப்படுகிறதென்றாலும் அது மைய அரசு செய்த புரிவுரையின் மீது மாநில அரசு நோக்குரை அல்லது கருத்தைத் தெரிவிப்பதற்கு மட்டுமே என்பதைக் கவனிக்க வேண்டும். மாநில அரசின் நோக்குரையை மைய அரசு முற்றிலும் அசட்டை செய்வதற்குத் தடையில்லை. எனவே, இந்த ஏற்பாடுகள் மாநில அரசுகளின் நிலவரை ஒருமைப்பாட்டுக்கு ஒவ்வுகிற முறையில் உள்ளனவா? அதனை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய வழி வகைகள் யாவை?

(ஆ) ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் ஆளுங்கட்சி வேருகவும், மைய அரசில் ஆளுங்கட்சி வேருகவும் இருக்கும்போது மைய அரசு வேற்றுமை காட்டி நடந்து கொள்வதற்கு இந்த ஏற்பாடுகள் இடமளிக்கின்றனவா ?

II. சமயச் சிறுபான்மையினர் அல்லது மொழிச் சிறுபான்மையினர் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் பட்டியல் சாதியினருக்கும் பட்டியல் பழங்குடியினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் தனி வகை ஏற்பாடுகள்.

2. சமயச் சிறுபான்மையினர் அல்லது மொழிச் சிறுபான்மையினர் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் பட்டியல் சாதியினருக்கும் பட்டியல் பழங்குடியினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் தனி வகை ஏற்பாடுகள் செய்கிற அதிகாரம் மாநில அரசுக்கு உரித்தாக்கப்பட வேண்டுமென்பது அவசியம் அல்லது உகந்தது என்று கருதுகிறீர்களா ?

III. ஆளுநர் (Governor)

3. மாநில ஆளுநரை நியமிப்பது குடியரசுத் தலைவர், அதாவது மைய அரசு ஆகும். மாநில அமைச்சகம் ஆளுநரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு கொள்வதற்கான வழிமுறையை உண்டாக்க வேண்டியது அவசியமானது அல்லது உகந்தது என்று கருதுகிறீர்களா ?

4. (அ) ஆளுநருக்கும் மைய அரசுக்குமிடையே உறவு பற்றியும், ஆளுநருக்கும் மாநில அமைச்சரவைக்குமிடையே உறவு பற்றியும் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தமைப்புச் செய்தோ வழக்க நெறியாகச் சிலவற்றைக் கொண்டு வந்தோ கோட்பாடுகள் வகுப்பது சம்பந்தமாய் உங்கள் கருத்தென்ன ?

(ஆ) ஆளுநர் தன் உளத்தேர்வின் (discretion) படி நடக்கக்கூடிய காரியங்கள் எவை, மாநில அமைச்சரவை ஆலோசனையின்படி நடக்க வேண்டிய காரியங்கள் எவை என்று தெளிவாகக் குறிப்பிடுவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தமைவு செய்தோ வேறு எவ்வழியிலோ வகை செய்யவேண்டுமென்பது பற்றித் தங்கள் கருத்தென்ன ?

(இ) அமைச்சரவையின் ஆலோசனைக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் என்று கூறும் வகையுரை ஒன்றை அரசமைப்புச் சட்டத்தில் ஏற்றுவது பற்றி உங்கள் கருத்தென்ன ?

அத்தகைய வகையுரைக்கு விலக்கு ஏதேனும் கூற வேண்டுமா ? அப்படியானால் எக்காரியங்களில் விலக்கு அளிக்கப்படவேண்டும் ?

IV. நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம்.

5. மக்கள் தொகையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு நாடாளுமன்றத்தில் இப்போது இடங்கள் ஒதுக்கப்படுகிறது. அவ்வடிப்படையில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டுமா? எவ்வாறு ?

6. அமெரிக்காவில் உள்ளது போல ஒவ்வொரு மாநிலத்திற்கும் மேலவையில் (ராஜ்ய சபை) சமமான எண்ணிக்கை இடங்கள் ஒதுக்கும் கோட்பாட்டைக் கையாளலாம் என்கிறீர்களா ?

7. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அம் மாநிலத்து மக்கட் தொகையின் அடிப்படையில் மக்கள் அவையில் (லோக சபை) இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் போல குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக கைக் கொள்வதன் விளைவாக மக்கட்தொகை குறையும்போது, முதலில் ஒதுக்கிய இடங்களையும் குறைத்து விட வேண்டுமா ? அல்லது, மாறுதல் செய்யாமல் இட எண்ணிக்கை ஒரே மாதிரியாக விளங்கி வரவேண்டும் என்று யோசனை சொல்கிறீர்களா ?

V. மொழி.

8. எந்த ஒரு மொழியினருக்கும் தகாத ஏற்றமும் பிற மொழியினருக்கு இடர்ப்பாடும் ஏற்படாதவாறு ஆட்சி மொழிப் பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை திருத்தமைவு செய்வது அவசியமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா ?

9. அரசமைப்புச் சட்டமோ இந்தி மொழிக்கே முதலிடம் அளிக்கிறது. நாடாளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தால் மட்டுமே ஆங்கில மொழி ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. நாட்டின் அனைத்து தேசீய மொழிகளும் ஆங்கிலமும் சம மதிப்புப் பெறுவதற்கு என்ன ஏற்பாடுகள் தேவை ?

10. காலஞ்சென்ற பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அளித்த வாக்குறுதியை மைய அரசினர் தக்க முறையில் செயற்படுத்தியுள்ளனரா ?

11. மைய அரசின் ஒரேயொரு ஆட்சிமொழியாகவும், மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையேயும் தொடர்பு மொழியாகவும் ஆங்கிலமே தொடர்ந்து இருப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

12. ஒரு மாநிலத்திற்குள் அமைந்துள்ள மைய அரசினரது அலுவலகங்களில் அம்மாநிலத்தின் ஆட்சிமொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பது குறித்தும், அவை மைய அரசு அல்லது பிற மாநில அரசுகளுடன் தொடர்பு கொள்ளும் போது ஆங்கிலத்தை அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத்தின் ஆட்சிமொழியைப் பயன்படுத்துவது குறித்தும் தங்கள் கருத் தென்ன ?

13. அனைத்திந்திய ஊழிய வகைகளுக்கு நியமனம் செய் தல், மைய அரசு ஊழியர் தேர்விற்கான ஆணைக்குழு நடத் தும் தேர்வுகள் இவற்றைப் பொறுத்து, மொழி சம்பந்தமாய் தங்கள் கருத்து என்ன ?

14. உச்ச நீதி மன்றத்தில் ஆங்கிலம் தவிர வேறு மொழியை நீதிமன்ற மொழியாக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் இப்போதைய அரசமைப்புச் சட்டத்து வகையுரைகளை, உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளில் நாடாளு மன்றம் மாற்றவொண்ணாதபடி ஆங்கிலமே தொடர்ந்து நீடிப் பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில், திருத்தியமைக்க வேண் டுமா ?

15. உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் போன்ற வட்டார மொழிகளைப் பயன்படுத்துவதற்கு மாநில ஆளுநர் கட்டளையிடுவதற்கு முன் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டிருப்பது நியாயமா ?

VI. சொத்து.

16. மாநில அரசுகளின் சுயாட்சிக்கு ஏற்ப, கரையாட்சிக் கடல் (Territorial waters) அல்லது கடற்படுகையில் உள்ள அடிநிலம், தாதுப் பொருள்கள் (கனிப்பொருள்கள்) மதிப் புடைய பிற பொருள்கள் ஆகியவை மைய அரசின் உரிமை யாக இன்றி மாநிலங்களின் உரிமையாக வேண்டுமா ?

VII. வர்த்தகமும் வாணிகமும்.
(Trade and Commerce.)

17. மைய அரசின் உதவியின்றி பொருள்களும் அவற்றின் பயன்களும் நியாயமான முறையில் பரவலாகப் பகிர்ந்து கிடைப்பதற்காக மாநிலத்துக்குள் அல்லது மற்ருெரு மாநிலத்தோடு நடைபெறும் வர்த்தகம், வாணிகம், பண்டங்களை ஓரிடத்திலிருந்து வேறிடத்துக்குக் கொண்டுபோதல் ஆகியவற்றின்மீது கட்டுப்பாடு விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிப்பது அவசியமென்று கருதுகிறீர்களா ?

VIII. திட்டமிடுதலும் வளர்ச்சியும்.

18. உள்நாட்டு அல்லது அயல்நாட்டு உதவியுடன் சில வகைத் தொழிற் துறைகளை வளர்ப்பதற்கு மாநில அரசுகளுக்கு உரிமை கிடையாது என்று அடிக்கடி குறை கூறப்படுகிறது. அயல் நாட்டு உறவு பாதிக்கப்படக்கூடாது என்பதால் அயல் நாட்டு உதவியை மைய அரசின் ஒப்புதலுடன் பெறவேண்டுமென்பது உண்மைதான் என்ருலும், மாநிலங்கள் தம்மிடமுள்ள மூலதனங்களைக் கொண்டு திட்டங்களை நடத்திச் செல்வதை அனுமதியாமலும், அயல் உதவி பெறுவதற்கு ஒப்புதல் அளிக்காமலும் மைய அரசு எந்த அளவிற்குக் கட்டுப்பாடுகள் விதித்து மாநிலத் திட்டங்களில் தலையிடலாம் ?

19. தொழில்களுக்கு உரிமம் (Licence) வழங்குவதிலும் சுரங்கங்களையும் கனிப்பொருள் வளர்ச்சியையும் நெறிமுறைப்படுத்துவதிலும் இப்போது மைய அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரம் மாநில சுயாட்சிக்கு எவ்வளவுமட்டில் ஏற்புடையதாயிருக்கிறது ? மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அது எவ்வளவுமட்டில் அனுகூலமாயிருக்கிறது ? தொழில்களுக்கும் கனிப்பொருள் எடுப்பதற்கும் உரிமம் (Licence) வழங்குவதையும் நிறுத்துவதையும் செய்கிற அதிகாரம் மைய அரசிடம் இருப்பது அவசியமா ? விரும்பத்தக்கதா ? இது மாநில சுயாட்சிக்கு ஒவ்வுவதாய் உள்ளதா ?

20. திட்ட ஆணைக்குழு வெற்றிகரமாகச் செயல்பட்டிருப்பதாக எண்ணுகிறீர்களா ? இல்லையெனில் எங்கெங்கு அது தோல்வியுற்றிருக்கிறது ? மைய அரசின் முன்னேற்றத் திட்டக் குழு ஒன்று நமது பரந்த துணைக்கண்டம் முழுமைக்கும் திட்டங்கள் வகுக்க எந்த அளவுக்கு இயலும் ?

21. தம் நிதி வசதி முதலியவற்றுக்கு உட்பட்டு மாநிலங்கள் முன்னேற்றத் திட்டங்களை வகுக்க வேண்டுமா ? மைய அரசிடம் உதவி கோரப்படும்போது தனி அதிகாரக் குழு திட்டங்களைப் பரிசீலனை செய்தால் அதுபற்றிய முடிவான கருத்து வெளியிடுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டாமா ?

IX. நெருக்கடி நிலைக்கான ஏற்பாடுகள்.

22. (அ) ஒரு மாநிலத்தில் அரசமைப்புச் சீர்குலைவு ஏற்பட்ட காரணத்திற்காக மாநிலத்தின் நிர்வாகம் சட்டமியற்றுதல் இப் பொறுப்புக்களை மைய அரசு ஏற்று நடத்தலாம் என்று அரசமைப்புச் சட்டம் வகை செய்கிறது. மாநில அரசின் சுயாட்சிக் கொள்கைக்கு இது ஒவ்வுமா ? ஆகவே இதனை நீக்கிவிட வேண்டுமா ?

(ஆ) அவசர நிலைச் சாற்றுரை (Proclamation of Emergency) விடுத்தும், மைய் அரசின் நிர்வாக அதிகாரமும் சட்டமியற்று அதிகாரமும் மாநில அரசுக் காரியத் துறைகளுக்கும் நீடித்து, மாநிலங்கள் மைய அரசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுகின்றன. நெருக்கடி நிலைக் காலத்தில் மாநிலங்களின் சுயாட்சியைப் பாதுகாக்க ஏற்பாடுகள் வேண்டுமா ?

X. சட்ட ஒழுங்கமைதி.

23. சட்ட ஒழுங்கமைதி பொறுத்து மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே உள்ள உறவு சம்பந்தமாய் அண்மையில் தீவிரமான வாத எதிர்வாதங்கள் நடந்தன. அத்தகைய உறவுக்கு ஏற்ற வரைமுறைகளைக்கூற இயலுமா ?

24. நாட்டில் நடந்த அண்மை நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக சட்ட ஒழுங்கமைதியையும் நிலைத்த நிதி நிலையையும் எவ்வாறு வலுப்படுத்த வேண்டும் ?

25. ஒரு மாநிலத்தில் சட்ட ஒழுங்கமைதியைப் பேணிக் காப்பது அம் மாநிலத்தின் முக்கியப் பொறுப்பு ஆகும். அவ்வாறிருக்க மைய அரசு ரிசர்வ் காவற் படை (Central Reserve Police Force), மைய அரசு தொழிலாலைகள் பாதுகாப்புப்படை (Central Industrial Security Force) போன்ற காவற் படைகளை ஒரு மாநிலத்தில் கொண்டுபோய் செயல்படச் செய்வது பற்றி உங்கள் கருத்தென்ன ?

26. அயல்நாடுகளை அடுத்து உள்ள மாநிலங்களின் எல்லை பாதுகாப்பிற்கான காவற்படை பொறுப்பையும், அதனால் மாநில அரசுக்கு ஆகும் செலவு முழுவதையும் மைய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?

XI. மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே நல்லுறவு.

27. பலவேறான கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகள் பல மாநிலங்களில் ஆட்சியைக் கைக்கொண்டுள்ளன. அவற்றினின்றும் மாறுபட்ட கொள்கையையுடைய அரசியல் கட்சி மைய அரசில் ஆண்டு கொண்டிருந்தால், மாநிலங்களுக்குத் தேவையான பாதுகாப்புகள் எவையென்று கருதுகிறீர்கள் ?

28. மைய-மாநில நல்லுறவைக் காப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் தேவையா ? அவ்வாறெனில், எத்தகைய திருத்தங்கள் தேவை ? திருத்தங்கள் தேவையில்லை என்றால், இந்நோக்கம் நிறைவேறுவதற்கு வழி என்ன ?

29. மைய-மாநில அரசுகளை வெவ்வேறு அரசியல் கட்சிகள் கைக் கொண்டிருப்பதால் மைய-மாநில உறவு பற்றிய பிரச்சினை முக்கியத்துவம் அடைந்திருக்கிறது. இது பற்றிய சிக்கல்கள் மைய-மாநில அரசுகளில் ஒரே கட்சி ஆட்சி நிலவியபோதும் இருந்தன என்று கூறுவது சரியா ?

30. மாநில சுயாட்சியை உறுதிபடுத்துவதற்காக மைய அரசில் குவிந்திருக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிப்பதனை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ? ஆமெனில் அதை எய்தும் வகையென்ன ?

XII. அரசமைப்புச் சட்டத் திருத்தம்.

31. மாநிலங்களின் பெயர்கள், எல்லைகள், பரப்புகள்; மாநிலங்களின் சட்டமியற்றும் நிர்வாகம் நடத்தும் அதிகாரங்கள்; நாடாளுமன்ற அவைகளில் மாநிலங்களுக்குள்ள பிரதிநிதித்துவம்; மாநிலங்களுக்கு அவசியமான வரிகள், தீர்வைகள் இவை போன்றவைகளில் மிகுந்த அக்கறை மாநிலங்களுக்கு உண்டு. இவற்றை பொறுத்து அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தமைவு செய்வதில் மாநில சட்டமன்றங்களின் இசைவினையும் பெறுவது அவசியமாகும். இதைத் தெளிவுபடுத்தி விளக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் மேலும் திருத்தப்பட வேண்டுமெனக் கருதுகிறீர்களா ?

XIII. இடைக்கால ஏற்பாடுகள்.

32. மேலே கூறப்பட்ட காரியங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வரை, இடைக்காலத்தில், மைய அரசின் நிர்வாக அதிகாரங்களை மேற்கூறிய காரியங்களைக் குறித்து மாநில அரசுகளுக்கு மாற்றிக் கொடுப்பதற்காக அரசமைப்புச் சட்டம் உறுப்பு 258 (1)-ன் வகையுரையைப் பயன்படுத்தலாகும் என்று கருதுகிறீர்களா ?

இணைப்பு II.

(அத்தியாயம் I-ல் உள்ள பத்தி 1-ஐக் காண்க.)

குழுவினரால் விருப்பட்டியல் அனுப்பப்பெற்றவர்களின் பட்டியல்.

I. எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்கள்.

II. எல்லா மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள்.

III. நாடாளுமன்றத்தின் (இரு அவைகளிலுமுள்ள) கட்சிகளின் தலைவர்கள்.

IV. எல்லா மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் (பேரவை மேலவை இரண்டிலும்) உள்ள கட்சிகளின் தலைவர்கள்.

V. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள்.

VI. தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவை, மேலவைகளின் உறுப்பினர்கள்.

VII. நிதி ஆணைக்குழுக்களின் தலைவர்கள்.

VIII. திட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள்.

IX. மைய அரசின் (காபினெட்) அமைச்சர்கள்.

X. எல்லா உயர்நீதி மன்றங்களின் தலைமை நீதிபதிகள்.

XI. எல்லா மாநிலங்களின் அரசுத் தலைமை வழக்கறிஞர்கள்.

XII. ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதிகள்—

டாக்டர் பி. பி. கஜேந்திரகட்கர்.

திரு சர்க்கார்.

திரு கே. என். வாஞ்சு.

திரு சின்ஹா.

டாக்டர் கோ. சுப்பாராவ்.

திரு எஸ். ஆர். தாஸ்.

திரு தாஸ் குப்தா.

திரு முதோல்கர்.

திரு டி. எல். வெங்கடராம ஐயர்.

திரு என். ராஜகோபால ஐயங்கார்.

XIII. தமிழ்நாட்டின் அமைச்சர்கள்.

XIV. (அ) தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வு ஆணைக்குழு.

(ஆ) தலைவர், மைய அரசு ஊழியர் தேர்வு ஆணைக் குழு.

(இ) தலைமைத் தேர்தல் ஆணையாளர்.

XV. நாடாளுமன்றத்தின் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள்—

ஆச்சாரிய ஜே. பி. கிருபளானி.

பேராசிரியர் என். ஜி. ரங்கா.

திரு கே. அனுமந்தையா.

திரு ஜே. எம். லோபோ பிரபு.

திரு பி. ராமமூர்த்தி.

திரு ஜே. முகம்மது இமாம்.

திரு ஆர். தசரதராம ரெட்டி.

திரு தென்னேட்டி விசுவநாதம்.

திரு என். ஸ்ரீகண்டன் நாயர்.

திருமதி நிருலேப் கவுர்.

திரு அரங்கில் ஸ்ரீதரன்.

திரு வி. பி. ராஜு.

திரு எஸ். எம். கிருஷ்ணா.

திரு எம். நாராயண ரெட்டி.

திரு காமேஷ்வர்சிங்.

XVI. தனிப்பட்டவர்கள்—

திரு எச். வி. ஆர். ஐயங்கார்.

திரு ஜே. ஆர். டி. டாடா.

திரு அர்விந்த் என். மஃபத்லால்.

திரு ஜி. டி. பிர்லா.

டாக்டர் ஏ. ராமசாமி முதலியார்.

திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர்.

டாக்டர் பி. கோபால ரெட்டி.

டாக்டர் ஸ்ரீ பிரகாசா.

திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

திரு சி. ராஜகோபாலாச்சாரி.

திரு வி. டி. ஸ்ரீநிவாசன்.

பண்டித இருதயநாத் குன்ஸ்ரு.
திரு எஸ். நிஜலிங்கப்பா.
திரு மொரார்ஜி தேசாய்.
திரு என். சஞ்சீவ ரெட்டி.
திரு எம். அனந்தசயனம் ஐயங்கார்.
திரு பி. சிவராவ்.
திரு எச். வி. காமத்.
திரு என். ஏ. பால்கிவாலா.
டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி.
திரு ஏ. என். சட்டநாதன்.
திரு எஸ். ஓய். கிருஷ்ணசாமி.
திரு ஆர். ஏ. கோபாலசாமி.
திரு துர்க தாஸ் பாசு.
திரு பி. சுந்தரய்யா.
திரு முகம்மது இசுமாயில்.
திரு எம். ஏ. ஸ்ரீநிவாசன்.
திரு பி. கோதண்டராவ்.
திரு கே. காமராஜ்.
திரு சி. சுப்பிரமணியம்.
திரு எம். பக்தவத்சலம்.
திரு டி. சஞ்சீவையா.
திரு அஜாய் குமார் முகர்ஜி.
திரு பிஜு பட்நாய்க்.

XVII. கீழ்க்காணும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள்—

தமிழ்நாட்டில் வெளிவரும் எல்லாச் செய்தித்தாள்கள்.
ஸ்டேட்ஸ்மன்.
அமிர்த பஜார் பத்திரிகா.
இந்துஸ்தான் டைம்ஸ்.
டெக்கான் ஹெரால்டு.
டைம்ஸ் ஆ·ப் இந்தியா.
டெக்கான் கிரானிகிள்.
கரண்ட்.
பிளிட்ஸ்.
ஆந்திர பிரபா.
ஆந்திர ஜோதி.
பிரஜாவாணி.
பிரஜா மாதா.
மாத்ருபூமி.

இணைப்பு III.

(அத்தியாயம் I-ல் உள்ள பத்தி 6-ஐக் காண்க.)

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் மைய-மாநில உறவுகள் குறித்து சிலர் ஆற்றிய உரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்.

1950–51-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தின் பொது விவாதத்தில் கலந்துகொண்டு டாக்டர் ஏ. லட்சுமண சாமி முதலியார் 7–3–1950 அன்று, பின்வருமாறு பேசினர் :—

'' மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பொது விற்பனை வரி பற்றிய விவாதத்தின்போது, மைய அரசு பற்றியும் மைய அரசு, குறிப்பிட்ட ஒரு சட்டம் இயற்றக்கூடிய வாய்ப்பு பற்றியும், அச்சட்டம் இம்மாகாணத்திற்கு விற்பனை வரி மூலம் கிடைக்கக்கூடிய தொகை அளவைப் பெரும்பாலும் குறைத்துவிடக்கூடும் என்பது பற்றியும் எடுத்துக்கூறினர். அரசமைப்புச்சட்டத்தில் அத்தகையதொரு காரியத்துக்காக வகையுரை செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையே. வரி விதிப்பு தொடர்பாக அரசமைப்புச்சட்டத்தில் மைய அரசுக்குப் பல விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மையே. மைய அரசு எடுத்துக்கொண்டுள்ள இந்த வரிவிதிப்பு அதிகாரத்துக்கு எதிராக எதிர்ப்புக்குரல் எழுப்பியவர்களில் நானும் ஒருவன். எங்கள் எதிர்ப்புக் குரல் வலுவற்றதாயிருந்தது. ஏன், நாங்கள் எழுப்பிய எதிர்ப்புக்குரலுக்கு இந்த அவையிலேயே செவிசாய்ப்போர் யாருமில்லை. மறுமுறை இது எழுப்பப்பட்டபோது சிறிதளவிலேயே பயனிருந்தது. மைய அரசு மேற்கொண்டுள்ள வரிவிதிப்பு அதிகாரங்களால் மாநில அரசுகளின் வருவாய்கள் படிப்படியாகக் குறைந்து இறுதியில் ஒன்றுமில்லாமல் போய்விடும். பின் ஒருநாள் மாநில அரசுகள் யாவும் மாவட்டக்கழகங்களாக, நகராட்சி மன்றங்களாக ஆகிவிடும். அந்த நிலையில் அவை, அது வேண்டும், இது வேண்டும் என்று மைய அரசின் கருணைக்காகக் கெஞ்சி இரந்து 'இலவுகாத்த கிளிபோல்' காலங்கடத்த நேரிடும் . . .''

சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில், அவர் 4–5–1957 அன்று ஆளுநர் பேருரை மீது பேசுகையில், ஏனையவற்றுக்கிடையே, குறிப்பிட்டதாவது:—

" . . மைய அரசைப் பொறுத்தவரை, தற்போதைய ஆட்சி அமைப்பில், மாநில அரசு சில கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். உண்மையில், மாநில அரசுகள் தம் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. மைய அரசு செய்யும் காரியங்களில், சில நல்லன என்றோ, சில அத்துணை நல்லன அல்ல என்றோ, மாநில அரசுகள் தெரிவித்தல் இயலாது . . ."

" . . . மைய அரசின் அமைச்சர்களில் சிலர் தாங்கள் கடவுளர்களைப் போன்று அசைக்கமுடியாத நிலை படைத்தவர்களென்று தங்களைக் கருதிக்கொள்ளும் போக்கு உள்ளது; அவர்களுக்கு இணையாகப் பிறரையும் நடத்துவது தங்களால் இயலாதென்று அவர்கள் கருதுகின்றனர். மைய அரசின் அமைச்சர் ஒருவருக்கும் மாநில அரசு அமைச்சர் ஒருவருக்கும் இடையில் வேறுபாடு எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை . . . இதை நான் வேண்டுமென்றே கூறுகிறேன். ஏனெனில், அண்மையில் சில ஆண்டுகளாக மைய அமைச்சர்களிடம் ஒரு துரதிருஷ்டவசமான போக்கைக் கவனித்துவந்துள்ளேன். அவர்கள் மாநிலத்தையும் மாநில மக்களையும் மிகவும் அவமதிக்கும் வகையில் பேசிவந்துள்ளனர் "

சட்டமன்ற மேலவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவராயிருந்த காலஞ்சென்ற டாக்டர் வி. கே. ஜான், ஆளுநர் பேருரையின்மீதான விவாதத்தில் பங்குகொண்டு, சட்டமன்ற மேலவையில் 7-5-1957 அன்று பின் வருமாறு பேசினார்:—

"இந்த மாநிலத்திலும் சரி, அல்லது வேறு எந்த மாநிலத்திலும் சரி, ஒரு திட்டத்தை நிறைவேற்றப்புகும் பொழுது அதற்கு மூன்று தடைகள் உள்ளன. முதலாவது தடை, மாநில அரசுக்கும் மைய அரசுக்கும் இடையில் நிதி வகையில் ஏற்றத்தாழ்வு உள்ளது. நாம் எப்போதும் கடன்கள், மானியங்களை வழங்குமாறு இரந்து நிற்கின்றோம். ஆனால் நாம் என்ன பெறுகிறோம் என்பது நமக்குத் தெரியாது. இந்திய அரசிடமிருந்து நாம் பெருமளவில் கடன் பெற்றுள்ளோம் . . . மாநிலத்துக்கும் மைய அரசிற்கும் இடையே (நிதிவகையில்) ஏற்றத்தாழ்வு உள்ளதன் காரணமாக நாம் திட்டமிட இயலவில்லை . . . நாம் அவர்களிடம் சென்று பிச்சை கேட்க வேண்டியுள்ளது. இம்மன்றத்தின் ஆளுங் கட்சித் தலைவர் அவர்களை இதைப் பதிவு செய்துகொள்ளுமாறு

வேண்டுகின்றேன்—இதைச் சொல்லும்பொழுது எதிர் கட்சி உறுப்பினர் என்றவகையில் மட்டுமன்றி இந்த அவை யின் ஒவ்வொரு உறுப்பினரின் கருத்தையும் எதிரொலிக் கின்றேன் என்றே எண்ணுகின்றேன். மாநில அரசுக்கும் மைய அரசுக்கும் இடையே காணப்படும் இந்த ஏற்றத் தாழ்வு ஒழிந்திடவேண்டும். இரண்டாவது தடை என்ன வெனில் நமது மாநிலத்தின் ஒவ்வொரு துறையிலும் மைய அரசு அதிகம் குறுக்கிடுகின்றது. எதிர்க்கட்சித் தலைவரவர் கள் இதுபற்றிக் கூறினார்கள் . . . இந்திய அரசு மாநில அரசின் நிர்வாகத்தில் குறுக்கிடவேண்டிய அவசியமில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும். இந்திய அரசு, மாநில அரசின் துறைகள் ஒவ்வொன்றிலும், பொருளாதார அல்லது சமுதாய நடவடிக்கை ஒவ்வொன்றிலும் ஏன் குறுக் கிட வேண்டும்? நமது விவகாரங்களை எப்படி நிர்வகிப்பது என்பது நமக்குத் தெரியாதா? நாம் ஏன் திட்டமிட முடிய வில்லை என்பதற்கு இதுவும் மற்றொரு காரணமாகும். இனி, மூன்றாவது காரணம் ஒன்றுண்டு. இந்திய அரசு நமது சொந்தப் பணத்தை ஏராளமாகப் பெற்றுவைத்திருப்பதால், நாம் நம் பணியாளர்களுக்குக் கொடுக்கமுடிந்த சம்பளத்தை காட்டிலும் மிக அதிகமாக அவர்களுடைய பணியாளர்களுக் குக் கொடுக்கின்றது. இதன்விளைவு, நமது அரசு பணியாளர் கள் மனக்குறைவுற்றுள்ளனர். இந்த நிலை ஏன் ஏற்பட வேண்டும்? இது ஒரே நாடு . . . இந்த ஏற்றத்தாழ்வு கட்டாயம் நீங்கவேண்டும். இந்த ஏற்றத்தாழ்வு நீங்க வில்லையாயின், நாம் திட்டமிடவும் நிர்வாகத்தை நடத்தவும் ஒருபோதும் இயலாது என்றே சொல்வேன் . . . மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே காணப்படும் நிதி வகையில் ஏற்றத்தாழ்வு, மாநில அரசின் நிர்வாகத்தில் மைய அரசு குறுக்கிடுதல், மைய அரசு தன் பணியாளர்களுக்கு அதிக ஊதியம் அளித்தல் ஆகிய இம்மூன்று காரணங்களின் விளைவால், நமக்குத் திட்டமிடுதல் என்பது முற்றிலும் இய லாது என்றே நான் கருதுகிறேன். இந்திய அரசு தன்னாட்சி உடைய மாநிலங்களின் கூட்டாட்சியாக விளங்கவேண்டுமா? அல்லது அது மாநில அரசுகள் எவையுமில்லாத தனியொரு அரசாக இருக்கவேண்டுமா? என்பதுபற்றித் தம் நாட் டத்தைச் செலுத்துமாறு நான் இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். நமது மைய அரசு எத்தன்மையது, இது கூட்டாட்சி அரசுமல்ல, அன்றித் தனியொரு அரசுமல்ல. இவையிரண்டின் கலப்பேயாகும். நாம் இருளில் தடுமாறி

நிற்கின்றோம். நான் சொல்லுகின்றேன் : ஒன்று, இவ் வரசை ஒரு கூட்டமைப்பு ஆட்சியாக ஆக்குங்கள்; இல்லை யேல், இதனை முழுமையான ஒரு தனி அரசாக ஆக்குங்கள்.''

1957–58-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெறுகையில், டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார் 3–7–1957 அன்று பின்வருமாறு பேசினார் :—

''மாநிலத்தின் நிதி மற்றும் நிர்வாகம் ஆகிய இரண்டு நோக்கிலும் மாநிலத்தின் எதிர்காலம் குறித்து மிக முக்கிய மான கருத்தினை இங்கு நான் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்கிறேன். எனது உள்ளக்கருத்தை, இதன் மூலம் இங்கு வெளிப்படையாகத் தெரிவிக்கின்றேன். மாநிலத் தன்னாட்சி எவ்வாறு மைய அரசால் படிப்படியாகக்குறைக்கப் பட்டு வருகிறது என்பது பற்றி, மாநில அரசின் பொறுப்பான பதவிகளிலுள்ளோரிடையே நிலைகொள்ளாவுணர்வு பெரு மளவு இருந்து வந்துள்ளது என்பதை, நான் இங்கு குறிப்பிடா திருக்க முடியவில்லை. அடிக்கடி ஆணைகள் அளிக்கப்பட்டுவரு கின்றன. அந்த ஆணைகளும் ஒருமாநிலத்தின் அமைச்சரவைக் குள்ள பெருமையைக் கட்டாயமாகத் தாழ்த்தும் முறையில் அளிக்கப்படுகின்றன. இவற்றில் பல எக்காரணம்பற்றிப் பிறப்பிக்கப்பட்டன என்று கண்டால், இந்த உண்மை புலப்படும். அதாவது, பணப்பெட்டியின் சாவி மைய அரசின் கையில் உள்ளது. நம்முடைய உள்ளாட்சி மன்றங்கள் நம்மிடம் கையேந்தி நிற்பது போல, நாம் மைய அரசிடம் சிறு பங்கினைப் பிச்சையாகப் பெற நிற்கிறோம் . . . துரதிருஷ்டவசமாக, மாநில அரசு தாமாக எதையும் செய்வ தில்லை என்ற கருத்து பரவியுள்ளது. . . . மைய அரசு கருணைகொண்டு தூக்கி எறிவதைப் பெறுவதற்காக மாநில அரசு காத்துக்கொண்டிருக்கவேண்டுமாம். இந்தக் கருத்து பரவியுள்ளதனால் மைய அரசின் கட்டளைகளுக்குப் பணிந்து அதன் விருப்பப்படி நடந்துகொண்டாலேயே அங் கிருந்து 'ஏதாவது' கிடைக்கக்கூடும் என்ற மற்றுமொரு தவறான கருத்து ஏற்பட்டுள்ளது . . . ''

அவர் மேலும் கூறியதாவது—

''நான் ஓரிரண்டு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் உள்துறை அமைச்சகம் சிக்கனத்திட்டங்கள் குறித்து ஆணைகள் பிறப்பித்துள்ளது

என்று கூறப்படுகிறது. அந்த ஆணையில் அரசுக் கார்களில் உள்ள கொடிகளை அகற்றுவதிலிருந்து, அமைச்சர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள், அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செல்கையில் அவர்கள் உடன் செல்வோரின் எண்ணிக்கை, முதலானவை குறித்த விளக்கம்வரை பலவும் குறிப்பிடப் பட்டுள்ளது. என் நண்பரொருவர் இதற்கு முற்றிலும் எதிரான கருத்துக்கொண்டிருந்தார் ; அவர் 'இப்படி யொரு உத்தரவைப் பிறப்பிக்க உள்துறை அமைச்சருக்கு அப்படி என்ன உரிமை உள்ளது?' என்று கேட்டார் . . . மாநில அமைச்சர்களின் பெருமை கௌரவம் இவை பற்றி நான் மிகவும் ஆர்வங்கொண்டுள்ளேன்;ஏனெனில் மாநிலத்துக் குள்ளேயே அவர்கள் மதிப்பும் மரியாதையும் பெற வேண்டி யுள்ளது . . . ''

29–6–1957 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்தபோது நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் ஆற்றிய உரையைக் குறிப்பிட்டு, 4–7–1957 அன்று டாக்டர் ஜான் பேசியதாவது :—

''நிதியமைச்சரவர்கள் உற்பத்திக்குறைவு பற்றியும் விலையேற்றம் பற்றியும் குறிப்பிட்டார்கள் ; அவர்கள் சொன்னார்கள், 'விலைவாசிகள் ஏற்றமும், அயல்நாட்டுச் செலாவணி ஒதுக்க நிதி குறைந்து கொண்டே வருவதும் ஆகிய இரண்டுமே, நம் நாட்டுப் பொருளாதாரத்தை எதிர் நோக்கியுள்ள இருபெரும் பிரச்சினைகள் ஆகும்'. அடுத்து அவர்கள் பேசுகையில், மாநில அரசு மைய அரசின்பால் சார்ந்துள்ள நிலை பற்றியும் பேரவை முன்னர் வைக்கப்பட்ட இந்த வரவுசெலவுத் திட்டம், உண்மையில், எவ்வாறு மத்திய அரசின் வரவுசெலவுத்திட்டத்துக்கு ஒரு இணைப்பாக உள்ளது என்பது பற்றியும், மைய அரசைச் சார்ந்துள்ளதன் காரணத்தால், எவ்வாறு நாம் நமது வருவாய் அல்லது செலவு பற்றித் திட்டவட்டமாகச் சொல்லமுடியவில்லை என்பது பற்றியும், மிகக் கடுமையான சொற்களால் குறிப் பிட்டார்கள்.''

1957-ம் ஆண்டு ஜுலை மாதம் 3-ம் தேதி யன்று டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களின் உரையைக் குறிப் பிட்டு, டாக்டர் ஜான் தொடர்ந்து பேசியதாவது :—

'' நேற்று என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் லட்சுமணசாமி முதலி யாரவர்கள் பேசுகையில் மைய அரசு செய்த

நூற்றுக்கணக்கான நியமனங்கள் பற்றிக் குறிப்பிட்டார். என் கருத்துப்படியும் அரசியல் கற்றறிந்தவர்களின் கருத்துப் படியும், இவற்றுக்கெல்லாம் காரணம் என்னவென்ருல், ஏதாவதொரு வழியில் வாடிக்கையாதரவை உடனடியாகப் பங்கிட்டு வழங்கவேண்டும் என்னும் ஒரு கருத்து நிலவுவதேயாகும். செலவு அதிகரிப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று............. மைய அரசு தன் அதிகாரங்களை விரிவாக்கி வருகின்றது. மாநிலங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு ஒன்றுமில்லை என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகார ஆசை கொண்ட அரசியல் வாதிகள் அங்கே அதிகாரத்துக்கு வந்து விடும்பொழுது, அதனுல் அவர்கள் பொது மக்கள்மீது அதிகாரம் செலுத்துவதோடு மட்டுமன்றி, மாநிலங்கள் மீதும் அதிகாரம் செலுத்துகின்றனர் . . . இவற்றின் விளைவு என்னவென்ருல் மைய அரசு முழு அதிகாரம் பெற்றதாக விளங்குகின்றது. மாநிலம் தொடங்க முற்படுவன எல்லாம் பறித்துக்கொண்டு செல்லப்படுகின்றன. தற்போது ஒவ்வொரு துறையிலும் மைய அரசு தானும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இன்று அவர்களிடம் இல்லாத துறைதான் யாது? அங்கு 41 அமைச்சர்கள் உள்ளனர்; செயலாளர்கள் மிகப் பலர் உள்ளனர் மாநில அரசின் அமைச்சர்களது கண்ணியம், கௌரவம் இவற்றில் மைய அரசு குறுக்கிடுகின்றது. நான் இந்த மாநிலத்தைப் பற்றி மட்டும் கூறவில்லை. இந்தவகையான குறிக்கீடுகளால் ஒவ்வொரு மாநிலமும் தொல்லைப் பட்டுக்கொண்டிருக்கிறது. மைய அரசு தன் கைகளை நாற்புறமும் நீட்டிப் பற்றி இறுக்கியுள்ளது. எனவேதான் நாம் அவர்களிடம் கெஞ்சவேண்டியுள்ளது. அவர்களிடம் நாம் கடன்களும் மானியங்களும் பெறவேண்டியுள்ளது''

''என் அடுத்த யோசனை 'மைய அரசின் அதிகாரங்களை வரையறைப்படுத்துங்கள்' என்பதே. இன்று நிலவும் சூழ்நிலையை நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எதிர்பார்க்கவில்லை என்று என் அனுபவத்தாலறிந்துள்ளேன். மைய அரசின் அதிகாரவரம்பு, வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து, செய்தித்தொடர்புகள் இவற்றுடன் நிற்குமாறு வரையறைப்படுத்துங்கள். சுங்கவரி வருவாய் மட்டும் அதன் பொறுப்பில் இருக்கட்டும். மைய அரசு, தன் பொறுப்பிலுள்ள துறைகளை நிர்வகிப்பதற்காக, மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தேவையானுல் தத்தம்

வருவாயிலிருந்து, தமது பங்கிற்கு ஓர் ஐந்துகோடி ரூபாய் மைய அரசுக்கு அளிக்கட்டும். மைய அரசின் அதிகாரம் இந்தத் துறைகளை நிர்வகிப்பதுடன் நின்றுகொள்ளவேண்டும்; இவற்றுக்கு அதிகமாக எந்த அதிகாரத்தையும் செலுத்தக்கூடாது. அதிகாரங்கள் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். அதாவது, மாநிலங்களுக்குத் தன்னாட்சி அளிக்கப்படவேண்டும் . . . ஐயா, மைய அரசில் தற்போது 41 அமைச்சர்கள் உள்ளனர். ஏனிப்படிப் பணமும் ஆற்றலும் தேவையின்றி வீணடிக்கப்பட வேண்டும் ? நான் மீண்டும் சொல்லுகிறேன், மைய அரசின் அதிகார வரம்பு மூன்று துறைகளுக்குள் அடங்கவேண்டும்— பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு செய்தி போக்குவரத்துத் தொடர்புகள் ஆகியவற்றுக்கு அதன் அதிகாரம் வரையறுக்கப்படவேண்டும். நான் இன்னொரு யோசனையும் கூற விரும்புகின்றேன். நாடாளுமன்றத்தில், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் சமமான பிரதிநிதிகள் இருக்க வேண்டும். மாநிலங்களில், சிறியது, பெரியது என்ற வேறுபாடின்றி நாடாளுமன்ற அவையில் எல்லா மாநிலங்களுக்கும் சரிசமமான அளவு எண்ணிக்கையில், உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இன்று உத்தரப் பிரதேசம்தான் இந்தியாவை ஆள்கிறது ; எனவேதான், இந்தி தேசீய மொழியாகியுள்ளது, நாம் அதனைப் பயிலவேண்டுமென்று கூறுகின்றார்கள். மைய அரசின்மீது ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு மாநில அரசுக்கு கீழ்ப்படிந்துள்ள அளவுக்கு நாம் மைய அரசுக்கு கீழ்ப்படிந்தவர்களாக இருக்கவில்லை. ஒவ்வொரு மாநிலமும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சரிசமமான பிரதிநிதித்துவமும் மைய அரசின் அமைச்சரவையிலும் சரிசமமான பிரதிநிதித்துவமும் பெற்றிருக்குமாயின், நிலைமை பெரிதும் சீரடையும் எனலாம் ''.

அவர் தம் உரையை முடிக்குமுன் மேலும் குறிப்பிட்டதாவது :—

'' இந்த அரசு, தம் நடவடிக்கைகளின் ஒவ்வொரு துறையிலும் மைய அரசு குறுக்கிடாதிருக்குமாறு அதனைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று, நான் இந்த அரசை எச்சரிக்கை செய்திட விரும்புகின்றேன். மைய அரசு மாநிலங்களின் நிர்வாகங்களில் குறுக்கிடுகின்றது. நம்மை நாமே ஆண்டுகொள்ள நாம் தகுதியற்றவர்களா என்ன ? மையஅரசு நமது மாநிலத்தில் ஏன் வரிவசூலிக்க வேண்டும் ? நாம் ஏன் அவர்களிடம் சென்று பணத்தைப் பிச்சை கேட்கவேண்டும்? நாம் ஏன் அவர்களிடம் சென்று

கடன் கேட்கவேண்டும்? அந்தக்கடன்களுக்கு வட்டி ஏன் செலுத்தவேண்டும்? நிதிவாயில்கள் மற்றும் ஏனைய வாயில்கள் அனைத்தும் மாநிலங்களுக்கும் மைய அரசுக்குமிடையில் சற்றும் பொருந்திவராத வகையில் வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட உறவு சரிசெய்யப்பட வேண்டும் ''

காலஞ்சென்ற திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் 1967–68-ம் ஆண்டுக்குரிய திருத்திய வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் பங்குகொண்டு, 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி அன்று மேலவையில் பேசியபோது, பின்வருமாறு கூறினார் :—

'' வரவு செலவுத் திட்டவுரையில், மாண்புமிகு முதலமைச்சர் இரு ஆணைக்குழுக்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் இரு ஆணைக்குழுக்களை நிலையாக ஏற்படுத்த விரும்புகின்றார்—ஓர் ஆணைக்குழு மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலுள்ள நிதிவகை உறவுகளைத் தொடர்ந்து பரிசீலனை செய்து குறைபாடுகளைத் தீர்த்துவைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துரைக்கும்; பிறிதொரு குழு, அரசமைப்பு வகையுரைகளில் தொடர்புடைய இடங்களில் தேவையான திருத்தங்களை எடுத்துரைக்கும். இந்த வகையில் நாமனைவரும் முதலமைச்சரை ஆதரிக்கவேண்டும். இந்திய அரசமைப்பின் 263-வது உறுப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பிறிதொரு முக்கியமான கருத்துரையை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். அந்த உறுப்பின்கீழ், இந்திய அரசு பொதுமக்கள் நன்மை குறித்த எந்தக்கருத்துபற்றியும் தாராளமாக விவாதித்து ஆய்வுசெய்வதற்கு ஆணைக்குழுக்களை நியமிக்கலாம். பொதுமக்களின் நன்மை கருதி குடியரசுத் தலைவர் அப்படியொரு ஆணைக்குழுவை நியமிக்க உத்தரவிடலாம். எனவே, இதுமிக இன்றியமையாத ஒன்றாகும்; அதுவும் பலமாநிலங்களில் காங்கிரசு அல்லாத அரசுகளும் மையத்தில் காங்கிரசு அரசும் ஆள்கின்ற இந்நாளில், இவை தேவைப்படக்கூடியவையாகும். தற்போதைய சூழ்நிலைகளில் மைய அரசு அத்தகைய மன்றத்தை நியமித்து, அதன் துணையால் மாநில அரசுகளுடன் இனி எழக்கூடிய பல பிரச்சினைகளைக் குறித்து விவாதிக்கலாம். இத்தகைய ஆணைக்குழுக்கள் அல்லது மன்றங்கள் அமைப்பதன் மூலம் அந்தப் பிரச்சினைகள் தோன்றுவது தவிர்க்கப்படலாம். அப்படியொரு ஆணைக்குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று நான் உறுதியாகப் பரிந்துரைக்கின்றேன் ''.

இணைப்பு IV.

(அத்தியாயம் IV-ல் உள்ள பத்திகள் 6, 7-ஐக் காண்க.)

வெள்ளை அறிக்கையிலும் பிரிட்டிஷ் பாராளுமன்ற இணைக் குழுவின் அறிக்கையிலும் 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் இருந்த சட்டமியற்று பொது அதிகாரப் பட்டியல் பற்றி உள்ளதன் சுருக்கங்கள்.

இந்தப் பொதுத் துறைக்கு வகை செய்வதன் நோக்கம், பட்டியலில் கண்டுள்ள பொருள்கள் தொடர்பாக, பெரு மளவு ஒரு சீரான பண்பை ஏற்படுத்தித் தர வேண்டும்; அதுவும் நடைமுறைக்குக் கொண்டு வரக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் ஆனால், அதே சமயத்தில் மாகாணச் சட்டமன்றங்கள் தங்கள் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப அமையும் சட்டங்களியற்ற இயலுமாறு செய்யவேண்டும் என்பதும் ஆகும். (பாராளுமன்ற இணைக்குழுவின் அறிக்கை : தொகுதி I, பக்கம் 330, வெள்ளை அறிக்கையின் 114-ஆவது பத்தி)

இந்தியாவிலும், ஏனைய பிற நாடுகளிலும், மையச் சட்ட மன்றத்திற்கென்றே, அல்லது, ஒரு மாகாணச் சட்டமன்றத் திற்கென்றே தனியாகக் குறிப்பிட்டு ஒதுக்கப்படமுடியாத சில பொருள்கள் உள்ளன என்பதை அனுபவம் வெளிப் படுத்தியுள்ளது ; இப்பொருள்கள் குறித்து, மாகாணச் சட்ட மன்றம் வகையுரை செய்வது விரும்பத்தக்கதெனப் பல வேளைகளில் தோன்றினும், சில சந்தர்ப்பங்களில், நாடு முழுவதற்கும் முக்கியச் சட்ட விதிகளில் ஒரு சீரான பண்பு நிலவச் செய்யும் பொருட்டு, அப்பொருள்களில் சிலவற்றினைக் குறித்துச் சட்டமியற்றும் அதிகாரம், மையச் சட்டமன்றங் களுக்கும் இருக்க வேண்டியது அதே போன்று அவசியமாக உள்ளது ; வேறு சில சந்தர்ப்பங்களில், மாகாண முயற்சிக்கு வழிகாட்டவும் அதனை ஊக்குவிக்கவும், மைய அரசுக்கு சில பொருள்களில் சட்டமியற்றும் அதிகாரம் அவசியமாகிறது ; இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாகாணத்துக்குள் எழும் தொல்லைகள் ஒரு மாகாணத்தின் எல்லைகளுக்கு வெளியே பரவுமானால், அல்லது பரவக்கூடுமானால், அப்போதும் அத் தொல்லைகளைக் களைய வகை செய்வதற்காக, மைய அரசுக்குச் சில பொருள்களில் சட்டமியற்றும் அதிகாரம் இருக்க வேண்டு

வது அவசியமாகின்றது. முதல் வகைக்கு எடுத்துக் காட்டாக பெரும் இந்தியச் சட்ட விதிக்கோவைகள் விளங்குகின்றன; இரண்டாவது வகைக்கு எடுத்துக்காட்டாக தொழிலாளர் சட்டம் போன்றவை விளங்குகின்றன ; மூன்றுவது வகைக்கு எடுத்துக்காட்டாக, கொள்ளை நோய்கள் பரவு வதைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான சட்டங்கள் உள்ளன. இந்தியச் சட்டவிதிக் கோவைகளில் வகை செய் துள்ள சட்ட ஒருமைப் பண்பு, மாகாணச் சட்டமன்றங்களின் கூட்டிணக்கமற்ற நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டாலோ, சிதைக்கப்பட்டுவிட்டாலோ அது பெருங்கேடு பயப்பதாக இருக்கும் என்பது எமது கருத்து. இதற்கு மாருக, மாகாணத்திற்கு மாகாணம் உள்ளூர் நிலைமைகள் நிச்சயம் வேறுபடும்; இந்த வகையான பொதுச் சட்டங்களை, மாகா ணத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமையுமாறு அவற்றை அமைத்துக் கொள்ளும் அதிகாரம் மாகாணச் சட்ட மன்றங்களுக்கு இருக்க வேண்டும். (பாராளுமன்ற இணைக்குழுவின் அறிக்கை தொகுதி I. பக்கங்கள் 30—31, பத்தி 51)

இந்தத் துறையில் சட்டமியற்றுவதன் குறிக்கோள்கள், மிக முக்கியமாக, மாகாணத்தின் அக்கறை குறித்த பொருள் களைப் பற்றியே இருக்கும். அந்தச் சட்டத்தை நிர்வகிக்கும் அமைப்பு, பெரும்பாலும், முற்றிலும் ஒரு மாகாண அமைப் பாகவே இருக்கும். இணைப்பாட்சிச் சட்டமன்றம், நடை முறை வசதிகளைக் கருதிப்பார்த்து இத்துறையில் பொதுவாக ஒரு சட்டமியற்றும் கருவியாகப் பயன்படுத்தப்படும் ; இந்த நடைமுறை, தானுக இணைப்பாட்சியின் செயல்வரம்பை விரிவு படுத்தப் புகுமானுல், மாகாணங்கள், அபாயகரமான அளவுக்குத் தங்கள் அதிகார வரம்பு அத்துமீறப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அஞ்சக் கூடும். (பாராளுமன்ற இணைக்குழுவின் அறிக்கை : தொகுதி I, பக்கம் 121, பத்தி 220)

பொதுப் பட்டியல் பற்றிய கொள்கையை ஏற்றுக் கொள் வதற்கான எம்முடைய காரணங்களை ஏற்கனவே விளக்கி யுள்ளோம். ஆனுல் அதன்கண் அடங்கியுள்ள பொருள் கள் தொடர்பாக மைய அரசுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைத் தெளிவாக வரையறுப்பதில் சிக்கலான பிரச்சினை ஒன்று உள்ளது. முதலாவதாக, பொதுப்பட்டியலில் கண்டுள்ள பொருள்கள் குறித்து, மைய அரசுக்கு, இணக்கப்

படுத்தும் அல்லது ஒருமைப் படுத்தும் ஒழுங்குமுறை அதிகாரம் வேண்டியது அவசியமாயிருப்பினும், அப்பொருள்கள் தம் தன்மையில் முக்கியமாக மாகாணத்துக்கேயுரியனவாக இருப்பதோடு, அவை முக்கியமாக மாகாணக் கொள்கைக்கிணங்க உள்ளன என்றும் எமக்குத் தோன்றுகின்றது ; இன்னும் சொல்லப்போனல், முற்றிலும் இணைப்பாட்சிக்குரிய பொருள்களுடன் உள்ளதைக் காட்டிலும் பட்டியல் II-ல் கண்டுள்ள பொருள்களுடன் அவற்றுக்கு மிக நெருங்கிய பொருத்தமுண்டு என்று கூறலாம். *(பாராளுமன்ற இணைக்குழுவின் அறிக்கை : தொகுதி* I, *பக்கங்கள் 144–145, பத்தி 233)*

இணைப்பு V.

(அத்தியாயம் VIII-ல் உள்ள பத்தி 2-ஐக் காண்க.)

ஆளுநரை நியமித்தல் குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

அரசமைப்புச் சட்ட ஆலோசகர் (சர் பி. என். ராவ்) தயாரித்த 30—5—1947-ம் நாளிட்ட குறிப்பு, ஆளுநர் ஒற்றை-மாற்று வாக்கின் மூலம் வீதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைக்கிணங்க மாகாணச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வகை செய்தது. ஆளுநரைத் தேர்ந்தெடுக்கும் முறை குறித்துக் குறிப்பில் அடங்கியிருந்த திட்டம், பின்னர் மாகாண அரசமைப்புச் சட்டக் குழுவால் மாற்றப்பட்டது. 1947 அக்டோபரில் அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், ஆளுநர் ஒரு பொதுத் தேர்தலில், சட்டமன்றப் பேரவைக்கு வாக்களிக்கும் தகுதியுடைய எல்லா நபர்களும் நேரடியாக வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. வரைவுக் குழு 21—2—1948-ம் நாளிட்ட தனது அறிக்கையில் மாற்றுக் கருத்து ஒன்றைத் தெரிவித்ததற்கிணங்க, சட்டமன்றம் நான்கு பேர் கொண்ட பட்டியல் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் ; அந்நால்வருள் ஒருவரைக் குடியரசுத் தலைவர் ஆளுநராக நியமிப்பார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆளுநரும், சட்டமன்றத்துக்குப் பொறுப்புடைய முதலமைச்சரும் மாநில அதிகார பீடத்தில் ஒருங்கே செயல்படுவது அவர்களிடையே அதிகார மோதலை உண்டாக்கக்கூடும் என்று வரைவுக் குழுவில் சில உறுப்பினர்கள் கருதினர் ; ஆகவே, அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கவே இந்த ஏற்பாடு வகுக்கப்பட்டது. அரசமைப்புச் சட்டமன்றம், தொடர்புடைய உறுப்பினை மேற்சொன்ன இரு மாற்று ஏற்பாடுகளுடனும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. ஆளுநர் குடியரசுத் தலைவராலேயே நியமிக்கபடவேண்டும் என்று கோரி ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. வேறுவகையில் சொன்னால் இத்திருத்தம் வரைவுக் குழு அளித்த இரு மாற்று ஏற்பாடுகளையும் தள்ளிவிடக் கருதியது. இந்தத் திருத்தத்துக்குப் பண்டித ஜவஹர்லால் நேரு ஆதரவு அளித்தார். இத்திருத்தம் அரசமைப்புச் சட்ட மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. VIII, பக்கங்கள் 426, 431, 456, 469-ல் காண்க.

இணைப்பு VI.

நெருக்கடிநிலை குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

பிரிவு அ : ஒரு மாநிலத்தில் அரசமைப்புச் சட்ட நிர்வாகம் செயல்படாமல் நின்றுவிடுதல்

(அத்தியாயம் IX-ல் உள்ள பத்தி 2-ஐக் காண்க.)

10—6—1947 அன்று மைய அரசமைப்புச் சட்டக் குழு, மாகாண அரசமைப்புச் சட்டக் குழு இவை இரண்டின் கூட்டுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பின் வருமாறு முடிவு செய்யப்பட்டது. அதாவது : ஒரு மாகாணத்தில் அல்லது மாகாணத்தின் ஏதாவது ஒரு பகுதியில் சமாதானம் அமைதியான வாழ்க்கை ஆகியவற்றுக்குப் பேரிடர் ஏற்பட்டுள்ளது என்று ஆளுநர் கருதினுல், அவர் அதுபற்றி உடனே குடியரசுத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவர், அதன் மேல் மைய அரசுக்கு அளிக்கப் பட்டுள்ள நெருக்கடி நிலை அதிகாரங்களின் கீழ் பொருத்தமான நடவடிக்கை எடுப்பாரெனவும் முடிவு செய்யப்பட்டது. *11—6—1947* அன்று கூடிய மாகாண அரசமைப்புச் சட்டக்குழு இக்கருத்தை ஏற்றுக்கொண்டது. அமைச்சரவையின் அறிவுரையின்றி ஆளுநர் எடுக்கக்கூடிய ஒரே நடவடிக்கை அந்நிகழ்ச்சி பற்றிக் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்புவதே என்று அக்கூட்டத்தில் தெளிவாக்கப்பட்டது. *27—6—1947*-ம் நாளிட்ட மாகாண அரசமைப்புச் சட்டக் குழுவின் அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளதெல்லாம் இது தான் : ஒரு மாகாணத்தில் அல்லது மாகாணத்தின் ஏதாவதொரு பகுதியில் சமாதானம் அமைதியான வாழ்க்கை ஆகியவற்றுக்கு ஏற்படும் எந்தப் பேரிடரையும் தடுப்பது தொடர்பாக, ஆளுநருக்குச் சிறப்பான பொறுப்பு இருக்கவேண்டும்; அந்தச் சிறப்புப் பொறுப்பை நிறைவேற்றுகையில் ஒரு சட்ட நடவடிக்கை அவசியமாயிருந்து அத்தகைய அவசியமான வகையுரையைச் சட்டமாக்குவது இயலவில்லை என்னும்போது,

ஆளுநர் அவசியம் என்று கருதினால், குடியரசுத் தலைவர் அது குறித்துப் பொருத்தமான நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக அவருக்கு அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும்.

மாகாண அரசமைப்புச் சட்டக் குழுவின் அறிக்கை அரசமைப்புச் சட்டமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது, திரு கே. எம். முன்ஷி ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அத்திருத்தம், ஆளுநர் ஒரு மாகாணத்தின் சமாதானம் அமைதியான வாழ்க்கை ஆகியவற்றைக் குலைக்கின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், அவர் தம் அமைச்சர்கள் கூறும் ஆலோசனைக்கிணங்க ஆட்சி நடத்துதல் இயலாதென்றும் தம் உளத்தேர்வின்படி மன நிறைவடைந்தால், அவர் சாற்றுணை ஒன்றின்மூலம் மாகாணத்தில் உள்ள குழுமம் அல்லது ஆள்வை எதுவானாலும் அதனுடைய அனைத்து அதிகாரங்களையோ சில அதிகாரங்களையோ தாமே ஏற்றுக்கொள்ள அவருக்கு இயலுமாறு செய்தது. குடியரசுத் தலைவர் தமக்களிக்கப்பட்டுள்ள நெருக்கடி நிலை அதிகாரங்களின் கீழ்ப் பொருத்தமான நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக ஆளுநரின் சாற்றுணை குடியரசுத் தலைவருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்; மேலும், அந்த ஆணை இரண்டு வாரங்களுக்குப் பின்னர் செயல்பட மாட்டாது; பண்டித எச்.என். குன்ஸ்ரு, திரு முன்ஷி அவர்களின் திருத்தத்தை எதிர்த்தார்; அவர் ஆளுநரின் பணிகள் குடியரசுத் தலைவருக்கு அறிக்கையளித்தல் என்பதுடன் நிற்குமாறு வரையறுத்து ஒரு திருத்தம் கொண்டு வந்தார். பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்கள், பண்டித குன்ஸ்ரு அவர்களின் திருத்தத்துக்கு ஆதரவளித்தார் ஆனால், சர்தார் வல்லபாய் படேல் திரு முன்ஷியின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டார்; அதுவே, பின்னர் அரசமைப்புச் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மைய அரசமைப்புச் சட்டக்குழுவின் அறிக்கை அரசமைப்புச் சட்டமன்றத்தில் பரிசீலனை செய்யப்பட்டபொழுது, திரு க. சந்தானம் பின்வரும் உண்மையைக் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதாவது: மாகாண அரசமைப்புச் சட்டக் குழுவின் அறிக்கை, ஆளுநர் ஒரு நெருக்கடி நிலையில் இரு வார காலத்துக்கு நடவடிக்கை எடுத்து, அது பற்றிக் குடியரசுத் தலைவருக்கு அறிக்கையளிக்க வகை செய்திருக்கையில், மைய அரசமைப்புச்சட்டக் குழுவின் அறிக்கை, குடியரசுத் தலைவர் ஆளுநரின் அறிக்கையையொட்டி

நடவடிக்கை எடுக்க அவருக்கு எந்த அதிகாரமும் அளிக்காமல் விட்டுவிட்டது என்பதே. இதனைச் சுட்டிக்காட்டிய அவர், அதன்படி நெருக்கடி நிலையில் குடியரசுத் தலைவருக்கு உரிய அதிகாரங்கள் பற்றிய தனிப் பிரிவு ஒன்றைச் சேர்த்துக் கொள்ளுமாறு தெரிவித்தார். வேறுவகையில் சொன்னால், திரு சந்தானம் அவர்களின் திருத்தம் இந்த விஷயத்தை ஒரு படி மேலே கொண்டு சென்று இப்பொருள் பற்றி ஆளுநரிட மிருந்து அறிக்கை பெறுவதன் மேல், அல்லது, தாமே முடிவு செய்து குடியரசுத் தலைவர் எடுக்கும் நடவடிக்கைக்கு வகை செய்தது. திரு சந்தானம் அவர்கள் தெரிவித்த வகையுரைக் கிணங்க, குடியரசுத் தலைவர், மாகாண அரசமைப்புச் சட்டத்தை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரமுடையவராவார்; அவர் அப்பொருள் பற்றி இணைப்பாட்சி சட்டமன்றத்துக்கு அறிவிக்க வேண்டியவராவார். மாகாணம் ஒன்றில் நெருக் கடி நிலை தோன்றுங்காலத்து, மைய அரசின் அதிகாரங்கள் தொடர்பாக மைய அரசமைப்புச் சட்டத்தில் சில வகை யுரைகள் இருக்கவேண்டியதன் அவசியத்தை திரு என். கோபாலசாமி ஐயங்கார் ஒத்துக்கொண்டார். இருப்பினும் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவோர் இவ்விஷயம் குறித்து கருதிப் பார்க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

முன்னர் குறிப்பிட்டுள்ள திரு முன்ஷி அவர்களது திருத்தத்தின் கருத்து, 1947 அக்டோபரில் சர் பி.என். ராவ் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 160-ல் சட்ட மொழியில் தரப் பட்டுள்ளது. 1948 பிப்ரவரியில் வரைவுக் குழுவால் இறுதி யாக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 188 ஆளுநருக்கு பின்வரும் அதிகாரத்தை அளிக்கிறது: அதாவது : மாநில அரசின் பணிகளைத் தாமே ஏற்றுக் கொள் ளவும், மாநிலத்தில் உள்ள குழுமம் அல்லது ஆள்வை எது வானாலும் அதன் தொடர்பான அரசமைப்புச் சட்ட வகை யுரை ஒன்று செயல்படுவதை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை நிறுத்தி வைக்கவும் ஆளுநருக்கு அதிகாரமளிக் கிறது. அதன்கண் ஏனைய துணை வகையுரைகளும் அடங்கி யுள்ளன. வரைவு உறுப்பு 188-ல் வழங்கப்பட்டுள்ள அதி காரத்தை ஆளுநர் தம் உளந்தேர்வின்படி பயன்படுத்துவார். வரைவுக்குழு ஏனையவற்றுக்கிடையே இன்னொரு உறுப்பான உறுப்பு 278-ஐச் சேர்த்தது. இதன்கண், ஒரு மாநிலத்தில் அரசமைப்புச் சட்ட நிர்வாகம் செயல்படாமல் நின்று விடுதல் தொடர்பாக அம்மாநிலத்தின் ஆளுநர் சாற்றுரை

ஒன்றைப் பிறப்பிக்கையில், மைய அரசுக்குள்ள அதிகாரங்களைக் குறித்து விளக்குகிறது. மாநில அரசு அல்லது ஒரு மாநில ஆள்வையின் அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் தாமே ஏற்றுக் கொள்ளவும், மாநிலச் சட்ட மன்றத்தின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் மட்டுமே பயன் படுத்தப்பட வேண்டுமென்று அறிவிக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது. வரைவு உறுப்பு 188-ன் கீழ் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட சாற்றுணையைப் பெறுவதன் மேல் மட்டுமே, குடியரசுத் தலைவர், வரைவு உறுப்பு 278-ன் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

(வரைவுக் குழுவால் முடிவு செய்யப்பட்டவாறுள்ள வரைவு அரசமைப்புச் சட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக அரசமைப்புச் சட்டமன்றத்தின் தலைவரால் அமைக்கப்பட்ட) சிறப்புக்குழு 1948-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் தேதியில் நடைபெற்ற அதன் கூட்டத்தில், ஆளுநரைத் தெரிவு செய்யும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதை (அதாவது, ஆளுநர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படவேண்டுமென்பதை) கருத்தில் கொண்டு, ஆளுநர் தம் உளத் தேர்வின்படி அதிகாரங்களைப் பயன்படுத்துவது பற்றிய குறிப்புகள் அனைத்தும் வரைவு அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. சிறப்புக்குழுவின் இந்த முடிவினை யொட்டி, ஆளுநர் தம் உளத்தேர்வின்படி அதிகாரங்களைப் பயன்படுத்த வகை செய்யும் உறுப்பு 188 நீக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டது. 1949-ம் ஆண்டு ஜுலை மாதம் 23-ம் தேதி அன்று, மாகாண முதலமைச்சர்கள் கூடி வரைவுக் குழுவுடன் இப்பொருள்பற்றி விவாதித்தனர். ஐக்கிய மாகாணங்களின் முதலமைச்சர், ஆளுநர் தம் உளத் தேர்வின்படி சாற்றுணையால் தமக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் எவற்றையும் பயன்படுத்தக் கூடாது என்று கூறினார். வரைவு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 278-ல் உள்ளது போல், சட்டமியற்றும் அதிகாரம் ஆளுநரிடம் அளிக்கப்படுவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்திடம் அளிக்கப்பட வேண்டும் என்று திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரி கருதினார். இருப்பினும், இது, மாநிலம் ஒன்றன் தொடர்பாகச் சட்டமியற்றும் பணியை அளிப்பதால் நாடாளுமன்றத்தின் பணிச்சுமையை அதிகரிக்கும் என்று சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் கருதினார். சிறிது விவாதத்துக்குப் பின்னர் இப்பொருள் வரைவுக்குழுவிடம் விடப்பட்டது.

வரைவுக்குழுவின் முடிவிற்கிணங்க, டாக்டர் அம்பேத்கார், வரைவு உறுப்பு 188-ஐ நீக்குவதற்கு ஒரு திருத்தத்தையும் வரைவு உறுப்பு 278-ஐப் புதிதாய் அமைப்பதற்கு ஒரு திருத்தத்தையும் அரசமைப்புச் சட்ட மன்றத்தில் கொண்டு வந்தார். புதிய வரைவு உறுப்பு 278-ன்படி, ஆளுநர் அறிக்கை ஒன்றின் அடிப்படையில் அல்லது வேறுவகையில் மாநிலங்களின் விவகாரங்களில் குறுக்கிடுவதற்கு குடியரசுத்தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது. மாநில அரசினுடையவும் அல்லது மாநிலத்தின் ஆள்வை எதனுடையவும் அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் தாமே ஏற்றுக்கொள்ள முடியும். மாநிலச் சட்ட மன்றத்தின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தினுலோ அல்லது நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டோ பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் அறிவிக்கலாம். இந்த வரைவு உறுப்பில் ஏனைய துணை வகையுரைகளும் அடங்கியிருந்தன. டாக்டர் அம்பேத்கார் கொண்டு வந்த இன்னொரு புதிய வரைவு உறுப்பு, ஒரு மாநிலம் தொடர்பாக இந்தச் சட்டமியற்றும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு அல்லது அவரால் குறிப்பிடப்படக்கூடிய ஒரு ஆள்வைக்குப் பிரித்துக் கொடுக்கும் கருத்துடையது. மிக நீண்ட விவாதங்களின் முடிவாக இந்த வகையுரைகள் இயற்றப்பட்டன; விவாதத்தின்போது, நெருக்கடி நிலை என்ற பெயரில் மாநிலங்களின் தன்னுட்சி அரித்துக் கொண்டு செல்லப்படுகிறது என்று உறுப்பினர்கள் பலரும் கவலை தெரிவித்தனர். உத்தேச உறுப்பின்கீழ், குடியரசுத் தலைவர், அமைதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு ஆபத்து எதுவும் ஏற்படாதிருக்கும்போது கூட, குறுக்கிட முடியும் என்று திரு எச்.வி. காமத் கூறினுர். ஒரு மாநிலத்தின் அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து வைப்பதாகவோ அல்லது ஆட்சி முறைகேடுகளைச் சீர் செய்வதாகவோ கூறிக்கொண்டு, அந்தச் சாக்கில், குடியரசுத் தலைவர் குறுக்கிடக் கூடாதென்றும் அவர் சொன்னுர். அவர் வரைவு உறுப்பில் (உறுப்பு 278) ''அல்லது மற்றபடி'' என்னும் சொற்கள் சேர்க்கப்பட்டிருத்தலைக் குறிப்பாக எதிர்த்தார். பேராசிரியர் சிபன் லால் சாக்சேனு இக் கருத்தை ஆதரித்ததுடன், இந்த உறுப்பில் வகை செய்திருப்பது மாகாண தன்னுட்சியை ஒரு கேலிக் கூத்தாகத் தாழ்த்தி விடும் என்றும் கூறினுர். மாநிலங்களின் விவகாரங்களில் குறுக்கிடுவதற்கு மைய அரசிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம், இணைப்பாட்சிக்கொள்கைக்கு எதிரானது என்றும்,

அது நிர்வாக வகையில் பயன்தருவதோ அல்லது நடைமுறைக்கு இயல்வதோ அல்ல என்றும், டாக்டர் பி.எஸ். தேஷ்முக் கூறினர். பண்டித எச்.என். குன்ஸ்ரு தெரிவித்த கருத்தாவது : மாநிலச் சட்டமன்றத்தில் அரசியல் கட்சிகள் ஏராளமான எண்ணிக்கையில் உள்ளதன் விளைவால் ஏற்படும் நிலையற்ற தன்மை காரணமாக மைய அரசு குறுக்கிடுவது நியாயமாகாது. மைய அரசிற்கு அளிக்கப்படவிருக்கும் அதிகாரம் மிகவும் அபாயகரமானதாகும் ; மாநிலமொன்றில் மனக்குறை ஏற்படும் பொழுதெல்லாம் தம்மைக் காத்துதவ வருமாறு மைய அரசுக்கு முறையீடுகள் விடுக்கப்படும். பண்டித குன்ஸ்ரு அவர்களின் கருத்து, அப்பொருள் பற்றி முடிவு காணுமாறு அதனை மாநில வாக்காளர்களிடம் விட்டு விட வேண்டும் என்பதாகும். பண்டித குன்ஸ்ரு கூறியதாவது : '' மைய அரசு, வாக்காளர்களை அவர்களுக்கெதிராகக் காக்கவேண்டிக் குறுக்கிடும் அதிகாரம் பெற்றிருக்கும். '' மோசமான ஆட்சியை அகற்றிடும் அதிகாரம் வாக்காளர்களிடமே இருக்கவேண்டுமென்றும், அவர்கள் தங்கள் பொறுப்புகளை உணருமாறு செய்திடல் வேண்டும் என்றும், பண்டித குன்ஸ்ரு நம்பினர். வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்தும் உள்நாட்டுக் கொந்தளிப்பிலிருந்தும் ஒரு மாநிலத்தைக் காப்பதற்காக மட்டுமே மைய அரசு குறுக்கிட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினர். சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் இந்த வகையுரையை ஆதரித்தார். உள்நாட்டுக் கலவரங்களில் இருந்தும் உள் விவகாரக் குழப்பங்களிலிருந்தும் மாநிலங்களைக் காக்க வேண்டியது மைய அரசின் கடமை என்றும், இந்த வகையுரை மாகாண அல்லது மாநில தன்னாட்சியின் நலனுக்கு ஓர் அரணாக விளங்குமென்றும் அவர் காரணங் கூறினர். இந்த வகையுரைக்கு ஆதரவாக அவர் வலியுறுத்தித் தெரிவித்த பிறிதொரு காரணம், மாநிலங்களின் குறைகளைத் தீர்க்க மைய அமைச்சரவை பொறுப்பேற்கும் என்பதும், மைய அமைச்சரவை நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக் கடமைப்பட்டது என்பதும் ஆகும். டாக்டர் அம்பேத்கார் இவற்றுக்கு விடையளித்த பின்னர் இந்த வரைவு உறுப்பு அரசமைப்புச் சட்டமன்றத்தால் ஏற்கப்பட்டது.

அ-பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவரங்களை அ.ச.ம.வி. IV, 579, 729, 798-801, 810-812, 818, 1006, 1009-1010 பக்கங்களிலும், அ.ச.ம.வி. IX, 131-180 பக்கங்களிலும் காண்க.

பிரிவு ஆ : தேசிய நெருக்கடி நிலை

(அத்தியாயம் IX-ல் உள்ள பத்தி 13-ஐக் காண்க.)

மைய அரசமைப்புச் சட்டத்தின் தத்துவங்களைப் பற்றி, அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட, 30-5-1947-ம் நாளிட்ட குறிப்புத் தொகுதியில் ஒரேயொரு வகையுரையைத் தவிர, நெருக்கடிச் சூழ்நிலை தொடர்பாக திட்டவட்டமான வகையுரை எதுவும் அடங்கியிருக்கவில்லை. அதில் அடங்கியிருந்த வகையுரை, ஒன்றியம் அல்லது அதில் ஏதாவதொரு பகுதியின் சமாதானம், அமைதியான வாழ்க்கை ஆகியவற்றுக்கு ஏற்படும் பேரிடரைத் தடுப்பதற்கான சிறப்புப் பொறுப்பினைக் குடியரசுத் தலைவருக்கு அளிக்கின்றது. இந்தச் சிறப்புப் பொறுப்பு அடங்கியுள்ள அளவுக்கு, குடியரசுத் தலைவர் தம் அமைச்சரவையை ஒதுக்கி வைத்துவிட்டு அல்லது அவசியமானால் புறக்கணித்துவிட்டு, தமது சொந்த அதிகாரத்தின் பேரில் நடந்துகொள்ளலாம். 1947 ஜூன் திங்களில் சர் என். கோபாலசாமி ஐயங்காரும், சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும் இணைக்குறிப்புத் தொகுதி ஒன்றைத் தயாரித்தனர். அது மைய அரசமைப்புச் சட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அக்குறிப்புத் தொகுதியில், போரினாலோ, உள்நாட்டுக் கலவரத்தாலோ இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய பெரும் நெருக்கடி நிலை நிலவுகிறது என்று சாற்றுரை ஒன்றின் மூலம் அறிவிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கும் வகையுரையொன்றைத் தெரிவித்தனர். குடியரசுத் தலைவர் அவ்வாறு அறிவிப்பதன் விளைவாக, மாநிலச் சட்டமன்றங்களின் அதிகார வரம்புக்குள் அவற்றுக்கென்றேயுள்ள பொருள்கள் தொடர்பாகச் சட்டமியற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பெறுகிறது. ஆளுநரின் நெருக்கடி நிலை அதிகாரங்கள் குறித்து 9-6-1947 அன்று மாகாண அரசமைப்புச் சட்டக் குழுவால் விவாதிக்கப்பட்டதென்றாலும் கூட, அந்த நிலையில், நாடு முழுவதற்கும் ஒழுங்கமைதிக்கு ஆபத்தை விளைவிக்கும் ஓர் நெருக்கடிச் சூழ்நிலை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

1947 அக்டோபரில் அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 102-வது பிரிவினுக்கொப்பான வகையுரை ஒன்று உறுப்பு 182-ஆகச் சேர்த்துக்கொள்ளப்பட்

டது. இவ்வுறுப்பு, போரினாலோ அன்றி உள்நாட்டுக் கலவரத்தாலோ இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பெரும் நெருக்கடி நிலை நிலவுகிறது என்று சாற்றுரை மூலம் அறிவிக்கக் குடியரசுத் தலைவருக்கு இயலச் செய்கிறது. 1948-ல் வரைவுக்குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவில், போரினாலோ அன்றி உள்நாட்டு வன்செயலாலோ இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பெரும் நெருக்கடி நிலை நிலவுகிறது என்று அறிவிக்கக் குடியரசுத் தலைவருக்கு இயலச் செய்யும் வகையுரை (உறுப்பு 275) சேர்க்கப்பட்டது. " உள்நாட்டு வன்செயல் " (domestic violence) என்னும் சொற்றொடர், தற்போதுள்ள 352-வது உறுப்பில் காணப்படவில்லை; அதற்குப் பதிலாக அது " உள்நாட்டுக் கலவரம் " (internal disturbance) என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறது.

275-வது வரைவு உறுப்பு 276-வது, 277-வது வரைவு உறுப்புகளுடன், 1949 ஆகஸ்டில் அரசமைப்புச் சட்டமன்றத்தால் விவாதிக்கப்பட்டது. வரைவு உறுப்பு 276 தற்போது உறுப்பு 353-ஆக உள்ளது; வரைவு உறுப்பு 277 தற்போதுள்ள உறுப்பு 354-க்கு நிகரானது; இவ்வுறுப்பு நிதி ஒதுக்கீடுகள் குறித்த வல்லுநர் குழுவின் பரிவுரையின் மேல் சேர்க்கப்பட்டதாகும்.

1949-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19, 20-ம் நாள்களில் அரசமைப்புச் சட்டமன்றம் 277-வது வரைவு உறுப்பு (தற்போது உறுப்பு 354) குறித்து விவாதித்தது. 277-வது வரைவு உறுப்பால் வழங்கப்படும் அதிகாரங்கள் மாநிலங்களின் தன்னாட்சியைக் குறைத்து, அவற்றை, மைய அரசின் கருணைக்கு ஏங்கி நிற்பனவாகச் செய்துவிடக்கூடும் என்று பல உறுப்பினர்கள் கருதினர். பண்டித குன்ஸ்ரு ஒரு திருத்தம் கொண்டு வந்தார்; அதன்படி, ஒரு நெருக்கடி நிலையின்போது மைய அரசு வருமானவரியில் பங்கிடக் கூடிய பகுதியைப் பிரித்துக் கொடுப்பதை நிறுத்திவைக்க முடியும்; ஆனால், வேறு எந்த வகை வருவாய் வாயிலிலும் குறுக்கிட முடியாது. இந்த வேறு வகை வருவாய்களில், பெரும்பாலும் முத்திரைத்தாள் தீர்வைகள், மருந்துப்பொருள்கள், அழகுசாதனப்பொருள்கள் மீது ஆயத் தீர்வைகள், மரணவரி, ரயில்கட்டணங்கள் மீதும் பிறவற்றின்மீதும் வரிகள் முதலிய இனங்கள் அடங்கும் என்னும் உண்மையையும் அவர் நாட்டத்துக்குக் கொண்டு வந்தார். மாநில அரசுகள் வரிப்பங்கு தங்களுக்குக் கிடைக்கும்

என்ற எண்ணத்தில் செலவு செய்ய முற்பட்ட பின்னர், கூட்டு அமைச்சரவை, அரசமைப்புச் சட்டத்தில் வகைசெய்துள்ள நிதி ஏற்பாடு மாற்றப்படும் என்று அவற்றிடம் கூறி, அவற்றின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துவிடலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அவர், இதனால் கடும் மனக்கசப்பு ஏற்படும் என்று கருத்து தெரிவித்ததுடன் இந்த உறுப்பை 'மைய அரசின் கலப்பற்ற நிதித்துறை ஏகாதிபத்தியத்துக்குப் பொருள் விளக்கமாகவுள்ளதன்றி வேறில்லை' என்றும் வருணித்தார். வேறுசில உறுப்பினர்களும் கூட இந்த வரைவு உறுப்புபற்றிக் குறை கூறினர். இந்த விஷயம் மொத்தமும் மைய அமைச்சரவையால் முடிவு செய்யப்படும் என்று காரணங்காட்டி சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் இந்த உறுப்புக்கு ஆதரவாக வாதிட்டார். டாக்டர் அம்பேத்காரின் மறு மொழிக்குப்பின்னர், வரைவு உறுப்புகள் அரசமைப்புச் சட்டத்துள் சேர்க்கப்பட்டன.

பிரிவு இ: நிதி நெருக்கடி நிலை.

(அத்தியாயம் IX-ல் உள்ள பத்தி 17-ஐக் காண்க.)

அரசமைப்புச் சட்டம் இயற்றும் பணி முடிவடையும் தருவாயில்தான் நிதி நெருக்கடி நிலை பற்றிய வகையுரை குறித்து எண்ணப்பட்டது. இந்த எண்ணம் முதலில் அரசமைப்புச் சட்ட மன்றச் செயலகத்துக்குத் தோன்றியிருக்க வேண்டும் என்றுதெரிகிறது. அச்செயலகத்திலிருந்து 5-9-1949 அன்று நிதி அமைச்சகத்துக்கு முகவரி இடப்பட்டு ஒரு நேர்முகக் கடிதம் வந்தது. அக்கடிதத்தில் இந்தியாவின் நிதிநிலை உறுதிப்பாட்டுக்கு அல்லது இந்திய நாணயச் செலாவணி மதிப்புக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலை எழுந்துள்ளது என்று சாற்றுரை மூலம் அறிவிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளித்து, அரசமைப்புச் சட்டத்தில் வகையுரை செய்யப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அரசமைப்புச் சட்டமன்றச் செயலகத்தால் உத்தேசிக்கப்பட்ட வரைவு உறுப்பு மேலும் கூறுவதாவது: அச்சாற்றுரை செயலில் இருக்கும் காலத்தில், மைய அரசு எந்த ஒரு மாநில அரசுக்கும் உத்தரவுகள் பிறப்பித்து அந்த உத்தரவில்

ஆ-பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. IX, பக்கங்கள் 103-130, 504-523-ல் காண்க.

குறிப்பிடப்படும், நிதிஒழுங்கு விதிகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று உத்தரவிடலாம்; மேலும், இது தொடர்பாக மைய அரசு தேவையானது என்றும் போதுமானது என்றும் கருதக் கூடிய ஏனைய உத்தரவுகளையும் பிறப்பிக்கலாம். அத்தகைய உத்தரவு ஒன்றில், பணமசோதாக்களும் நிதி மசோதாக்களும் அவை மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டபின்னர் குடியரசுத் தலைவரின் ஓர்வுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் ஒரு வகையுரையும் அடங்கலாம். அக்கடிதத்துக்கு அதே மாதம் 8-ம் நாளன்று நிதியமைச்சகம் மறுமொழியனுப்பியது. அம்மறுமொழியில் நிதியமைச்சகம் அவ்வரைவுறுப்பினைக் குறித்து தனது மனநிறைவைத் தெரிவித்தது ; ஆனால், அதே சமயம் அந்த வகையுரைகளை நடைமுறைக்குப் பொருந்தச் செய்வதில் சில இடையூறுகளும் இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியது. மாநிலம் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை, இணைப்பாட்சியின் நிதிநிலை உறுதிப்பாட்டைப் பாதிக்கக் கூடிய வகையில் இருக்குமானல், அல்லது மைய அரசின் நிதிக்கொள்கை அல்லது பொருளாதாரக்கொள்கைக்கு மாறுபட்டதாக இருக்குமானல் அப்பொழுது மாநில அரசுகளுக்கு நிதி விஷயங்களில் உத்தரவுகள் பிறப்பிக்கக்கூடிய நிலையில் மைய அரசு இருக்க வேண்டுமென்று வகை செய்யமுடிந்தால் அது வரவேற்கத் தக்கதாகும் என்று நிதியமைச்சகம் தெரிவித்தது. இந்தக் கருத்துரையை ஏற்றுக்கொண்டால், மாநிலங்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பும் என்றும் எனவே இது நடைமுறைக்கு ஒத்ததல்ல என்றும் வரைவுக் குழு கருதுமானல், அரசமைப்புச் சட்டமன்றச் செயலகம் தயாரித்த வரைவினைச் சேர்த்துக்கொள்வதை நிதியமைச்சர் வரவேற்று ஆதரவளிப்பார் என்று நிதியமைச்சகம் கருத்துத் தெரிவித்தது.

1949-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி அன்று நிதியமைச்சகம் இந்த உறுப்பின் புதிய வரைவு ஒன்றை அரசமைப்புச் சட்ட மன்றச் செயலகத்துக்கு அனுப்பி வைத்தது. இப்புதிய வரைவு, மைய அரசின் நிதிநிலை உறுதிப்பாடு அல்லது மைய அரசின் நிதிக் கொள்கை அல்லது பொருளாதாரக் கொள்கை ஆபத்துக்குள்ளாவதைக் குறிப்பிடுகின்றது. அது நாடுமுழுமைக்கும் மொத்தமாக, நாட்டின் நிதிநிலை உறுதிப்பாட்டுக்கு அல்லது நாட்டின் செலாவணி மதிப்புக்கு ஏற்படும் ஆபத்தைப் பற்றிக்

குறிப்பிடுகின்றது ; ஆனால், நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் அவற்றுக்கு ஏற்படும் ஆபத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அரசமைப்புச் சட்டமன்றச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட வரைவின் ஏனைய வகையுரைகள் அவ்வாறே எடுத்தாளப் பட்டன ; அதாவது, நிதி ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித் தல் குறித்தும், மாநிலங்களின் பணமசோதாக்கள் மற்றும் நிதி மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஓர்வுக் காக ஒதுக்குதல் பற்றியும் மாநிலங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கும் வகையுரைகள் அதன்கண் அமைத்துக்கொள் ளப்பட்டன.

டாக்டர் அம்பேத்கார் 1949-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதி அன்று புதிய வரைவினை அரசமைப்புச் சட்டமன்றத்தில் கொண்டுவந்தார். டாக்டர் அம்பேத்கார் அரசமைப்புச் சட்டமன்றத்தில் கொண்டுவந்த வரைவில் ஒரு வகையுரை சேர்க்கப்பட்டிருந்தது. இவ்வகையுரை, ஒரு நிதி நெருக்கடி நிலையின்போது, மைய அரசு, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம், படிகள் உட்பட, தன் பணியாளர் களின் சம்பளம், படிகளைக் குறைக்கவும் மாநில அரசும் தன் பணியாளர்களின் சம்பளம், படிகளைக் குறைக்குமாறு அதற்கு உத்தரவிடவும் மைய அரசுக்கு இயலச் செய்வதாகும். இவ் வகையுரை, ஏறத்தாழ, அமெரிக்க நாட்டில் நிறைவேற்றப் பட்ட 1930-ம் ஆண்டு தேசிய மறு மலர்ச்சிச் சட்டத்தை (National Recovery Act) அல்லது அதன்கண் கூறப்பட்ட வற்றை ஒத்ததாகும் என்றும் அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தத்தின் விளைவாக அந்நாட்டை நிலைகுலைவித்த பொருளாதார நெருக்கடிகளை யும் நிதி நெருக்கடிகளையும் அகற்றிடும் பொருட்டு இவை போன்ற வகையுரைகளைச் செய்வதற்கு அச்சட்டம் அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளித்தது என்றும் டாக்டர் அம்பேத்கார் விளக்கினார். டாக்டர் அம்பேத்கார் அப்போது நிலவிய இந்தியப் பொருளாதார நிதி நிலைகளைக் குறிப்பிட்டு, அவற்றைச் சமாளிக்க இந்திய அரசமைப்புச்சட்டம் மைய அரசுக்குப்போதுமான அதிகாரம் அளிக்கவேண்டும் என்று கூறினார். திரு கே.எம். முன்ஷி இந்த உறுப்பை ஆதரித்துப் பேசுகையில், நாட்டின் நிலை, செங்குத்தான ஒரு மலை முகட்டின் ஓரத்தில் நிற் பதற்கு ஒப்ப உள்ளது என்று சுட்டிக்காட்டினார். இந்த உறுப்பினுக்குப் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

புத்தகைய ஒரு நிலையில், மாநிலப்பட்டியலில் தன் ஆதிக்கத்தை நீட்டிப்பதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கச் செய்ய வேண்டும் என்று பேராசிரியர் சிபன்லால் சாக்சேனா விருப்பம் தெரிவித்தார்.

பண்டித எச்.என். குன்ஸ்ரு இந்த உறுப்புக்கு எதிர்ப்பினைக் கிளப்பினார். குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் செய்ய முயன்ற வழிகளில், பொருளாதார மந்தத்தைச் சமாளிக்க குடியரசுத் தலைவருக்கு இயலச் செய்யும் எதுவும் இந்த உறுப்பில் கூறப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். இந்தத் திருத்தத்தின் நோக்கம் முழுவதும், செலவினங்களைக் குறைப்பதும் மாநில அரசுகள் அப்போதுள்ள தம் வருவாய் வாயில்கள் எவற்றையும் விட்டு விடாமல் தடுப்பதுமேயாகும் என்று பண்டித குன்ஸ்ரு கூறினார். அவர், மாநிலங்களால் முக்கிய வருவாய் வாயில்கள் எதுவும் தவறாகப் பயன்படுத்தப்பட முடியாது என்று குறிப்பிட்டார்; அத்துடன் மாநிலங்களின் வரவு—செலவுத் திட்டங்களின் மீது முழுமையான கட்டுப்பாட்டைப் பெறவும், மாநில அரசுகள் பின்பற்ற வேண்டிய நிதிக் கொள்கைகள் எவை என்று அவற்றுக்குக் கட்டளையிடும் அதிகாரத்தைப்பெறவும் மைய அரசுக்குள்ள ஆவலை இது காட்டுகிறதே தவிர, இப்புதிய உறுப்பினை அமைத்துக் கொள்வதற்கு வேறு எந்தக் காரணமும் புலப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். திருத்தங்கள் ஏற்கப்படாமல் இந்த உறுப்பு, நாட்டின் தலைமைச் சட்ட நூலான அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றது.

(தேசீய மறுமலர்ச்சிச் சட்டம் என்றொரு சட்டம் எதுவும் அமெரிக்க நாட்டில் செயலில் இருந்ததாகத் தெரியவில்லை. இது தொடர்பாக திரு பி. சிவராவ் எழுதிய ''அரசமைப்புச் சட்டம் உருவாகிய வரலாறு—ஓர் ஆய்வு'' என்னும் நூலில் பக்கம் 821-ல் உள்ள அடிக்குறிப்பு 2-ஐக் காண்க. டாக்டர் அம்பேத்கார், பெரும்பாலும் 1933-ஆம் ஆண்டு தேசீயத் தொழில் மறுமலர்ச்சி சட்டத்தைக் குறிப்பிட்டிருக்கக்கூடும். 1933 ஆண்டு அமெரிக்கச் சட்டம் வேலை நேரத்தைக் குறைக்கவும் ஊதியத்தை உயர்த்தவும் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் இயற்றப்பட்டதாகும். இந்தச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட 'தேசீய மறுமலர்ச்சி நிர்வாகம்' என்னும் அமைப்பு, பொருளாதார மந்த நிலைக்கெதிரான கூட்டு நடவடிக்கையில் விதிமுறைகளை அமைத்துக் கொள்ளத் தொழில் துறையுடன் இணைந்து பணிபுரிவதற்காக

அமைக்கப்பட்டதாகும். ஒன்றியத்தின் உறுப்புகளான மாநிலங்களின் சட்டமன்றங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வரவு—செலவுத் திட்டமிடுவது, மசோதாக்களை நிறைவேற்றுவது போன்ற நிதித்துறை நிர்வாகக் காரியங்களுக்கும், டாக்டர் அம்பேத்கார் முன்மாதிரியாகக் குறிப்பிட்ட அமெரிக்கச் சட்டத்திற்கும் தொடர்பேதும் இல்லை. தொழில் துறையின் ஒருங்கிணைப்புக்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே ஒன்றுபட்ட நல்லுறவை ஏற்படுத்தவும் எடுக்கப்பட்ட ஒருசமூகப் பொருளாதார நிலையைச் சரிக்கட்டுவதற்காக உருவாக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடே அந்த அமெரிக்கச் சட்டம் என்று, பண்டித குன்ஸ்ரு அரசமைப்புச் சட்ட மன்றத்தில் குறிப்பிட்டார். உச்ச நீதிமன்றம், அச்சட்டத்தை அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பளித்தது.)

இ—பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. X, பக்கங்கள் 361-362, 368-373-ல் காண்க.

இணைப்பு VII

(அத்தியாயம் XI-ல் உள்ள பத்தி 2-ஐக் காண்க)

மாநிலத்தின் நிலவரை குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

மாநிலங்களின் பகுதிகள், எல்லைகள் முதலியவற்றை மாற்றியமைப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளிக்கும் வகையுரை ஒன்றை, அரசமைப்புச் சட்ட ஆலோசகர் சர் பி. என். ராவ் தமது குறிப்புத் தொகுதியில் சேர்த்துக் கொண்டார். இவ்வகையுரை 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் 290-வது பிரிவினை ஒட்டி அமைக்கப்பட்டதாகும்; ஆனால் அத்தகைய சட்டம் எதுவும் நிறைவேற்றப்படுமுன்னர் பாதிக்கப்படுகின்ற மாகாணங்களின் சட்டமன்றங்களது சம்மதத்தைப்பெறப்படவேண்டும். அதன்படி 1948 பிப்ரவரியில் வரைவுக்குழுவால் இறுதியாக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டம் பின்வருமாறு வகைசெய்தது: அதாவது, ஏற்கனவேயுள்ள மாநிலம் ஒன்றின் நிலப்பரப்பைப் பிரிப்பதன் மூலம் புதிய ஒரு மாநிலம் அமைக்கப்படுவது, ஏற்கனவேயுள்ள மாநிலமொன்றின் எல்லைகள் மாற்றியமைக்கப்படுவது முதலியவற்றுக்கு முன்னர், பின்வரும் இரு நிபந்தனைகளில் ஏதாவதொன்று நிறைவு செய்யப்படவேண்டும்; அதாவது: எந்த மாநிலத்திலிருந்து அந்த நிலப்பரப்பு பிரிக்கப்பட அல்லது நீக்கப்படவிருக்கிறதோ, அந்த மாநிலத்தின் சட்டமன்றத்திலுள்ள அந்தப் பகுதியின் பிரதிநிதிகளிற் பெரும்பாலோர் இதுகுறித்து குடியரசுத் தலைவரிடம் முறையீடு செய்துகொண்டிருக்கவேண்டும்; அல்லது, இச் செயற்குறிப்பால் பாதிக்கப்படுகின்ற மாநிலத்தின் சட்டமன்றத்தால் இது குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும்.

இக்கருத்தின்மீது அளிக்கப்பட்ட ஆலோசனைகளில் ஒன்று, மசோதாவில் அடங்கியுள்ள செயற்குறிப்பு மாநிலத்தின் எல்லைகள் அல்லது பெயரைப் பாதித்தால், இக்காரியத்துக்காக நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவரப்படுமுன்னர் அந்த மாநில அரசின் சம்மதத்தை முன்னதாகப் பெறவேண்டும். வரைவுக்குழு, மேலும் ஆலோசனை செய்த

பிறகு, தொடர்புடைய மாநிலத்தின் கருத்துக்களைக் கேட்டிருந்தாலே போதும் என்று விதிக்கப்படுமாறு வகையுரையைத் திருத்தியமைத்தது. ஆனால், சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஒரு தனிக்குறிப்பில் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார்; அதாவது ஒரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றியமைப்பது தொடர்பாக சட்டமன்றப் பிரதிநிதிகளிற் பெரும்பாலோரால் முறையீடொன்று செய்யப்பட்டால் ஒழிய, அம் மாநில எல்லைகளை மாற்றியமைப்பதற்குரிய சட்டம் எதுவும் நிறைவேற்றப்படக்கூடாது என்கின்ற வகையுரை செய்யப்படவேண்டுமென்பதாகும். இந்த வகையுரையைத் தெரிவிப்பதற்கு, அவர் ஏனையவற்றுக்கிடையே, கீழ்க்கண்ட காரணங்களை எடுத்துரைத்தார்:—

"இந்த உறுப்பினை விளக்குகையில் ஒருபுறம் தற்போதுள்ள நிலையில் இந்திய மாகாணங்கள் எந்தவொரு அரசமைப்பு விதிகளின் அடிப்படையிலும் அமைந்தவையல்ல என்றும், எனவே, மாநிலங்களின் நிலவரையை மாற்றி அமைப்பதற்குரிய எளியமுறை ஒன்றுக்கு வகை செய்யப்பட வேண்டுமென்றும் ஒத்துக்கொள்ளலாமெனினும், இணைப்பாட்சித் தத்துவங்களுடன் ஒத்ததாயிருக்கின்ற ஏதாவதொரு வகை நிலையானதன்மை பல்வேறு மாநிலங்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்பதும் அவசியமாகும்; இல்லையெனில் மாநிலங்களின் பகுதிகள் என்றென்றும் இடைவிடாது மாறிக்கொண்டேயிருக்கும் நிலை ஏற்பட்டுவிடும்."

1948, நவம்பர் 17, 18-ம் நாள்களில் அரசமைப்புச் சட்டமன்றம் 3-வது உறுப்பைப் பற்றி விவாதித்தது. ஒரு மாநிலத்தின் பெயரை அல்லது எல்லைகளைக் கூட்டுவது, குறைப்பது அல்லது மாற்றியமைப்பது பற்றிய சட்டமன்றச் செயற்குறிப்பு ஒவ்வொன்றும் மாநிலச் சட்டமன்றத்திலேயே தோன்றிவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் ஒரு திருத்தத்தை, பேராசிரியர் கே. டி. ஷா கொண்டுவந்தார். இந்தத் திருத்தத்தின்மீது பேசுகையில், இதற்குச் சரியான நடைமுறை, பாதிக்கப்படுகின்ற மக்களையே கலந்தாலோசிப்பது தான் என்றும், நேரடிப் பொது வாக்கெடுப்பு மூலம் இல்லாவிட்டாலும், சட்டமன்றத்தைக் கலந்தாலோசித்தாவது இதைச் செய்வதே சரியானது என்றும் அவர் குறிப்பிட்டார். இதனால், முக்கியமாகப் பாதிக்கப்படுகின்ற மக்கள் விரும்புகின்ற வகையிலும், அவர்கள் விரும்புகின்ற பொழுதும் மட்டுமே நிலவரையை மாற்றியமைப்பதைச் செய்யவேண்டுமென்றும், மைய அரசு முன்கூட்டியே கொண்டுள்ள கருத்துக்

திணங்க இதைச் செய்தல் கூடாது எனவும் அவர் கூறினர். அந்த நிலையில் நேரடிப் பொதுவாக்கெடுப்புச் செய்யவேண்டு மென்பதே தமது சொந்தக் கருத்து என்று அவர் குறிப்பிட்டார். இந்த வகையுரையின் மறுவரைவிற்கு அதி கார பூர்வமான திருத்தத்தை (மறுவரைவில், அந்நாள் இந் தியச்சமஸ்தானங்களின் நேர்வில் ஒரு சமஸ்தானத்தின் பகுதி அல்லது எல்லைகளை மாற்றியமைப்பதற்கு முன்னர் தொடர் புடைய சமஸ்தானத்தின் சம்மதத்தைப் பெற வேண்டுமென்றும் மற்ற மாநிலங்களைப் பொறுத்த வரை, அதாவது அந்நாள் ஆளுநர்களின் ஆளுகையின் கீழ் இருந்த மாகாணங்களின் நேர்வில் தொடர் புடைய மாநிலத்தைக் கலந்தாலோசித்தாலே போது மானது என்றும் விதிக்கப்பட்டது) கொண்டுவருகையில் டாக்டர் அம்பேத்கார் கூறியதாவது : இதுகுறித்து விவாதிப் பதற்கான ஒரு தீர்மானத்தை, மாநிலச் சட்டமன்றத்தில் வைக்குமாறு, குடியரசுத் தலைவர், முதலமைச்சரை அல்லது ஆளுநரைக் கேட்டுக் கொள்வார் ; எனவே அதன்மூலம், இதுவிஷயத்தில் நடவடிக்கையைத் துவக்கவேண்டிய பொறுப்பு அம்மாநிலச் சட்டமன்றத்தினுடையதாக இருக்கு மேயன்றி, நாடாளுமன்றத்தினுடையதாக இராது என்ப தாகும்.

பேராசிரியர் ஷா கொண்டுவந்த இத் திருத்தத்தை எதிர்த்து திரு க. சந்தானம் பேசுகையில், இத்திருத்தம், மொழிச் சிறுபான்மையர் தங்கள் நிலப்பரப்பைப் பிரிக்க வேண்டுமென்று கேட்கவிடாமல் தடுத்துவிடுவது உறுதி என்று குறிப்பிட்டார். அவர், சென்னை மாநிலத்தையும் அதிலி ருந்து தனி ஆந்திர மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை யும் எடுத்துக்காட்டாகக் கூறினர். பேராசிரியரின் திருத்தம் பெரும்பான்மையரது முழு ஏகாதிபத்தியத்துக்கு வழிகோலு வதாகும் என்று திரு சந்தானம் சுட்டிக் காட்டினர். இந்த விஷயம் தொடர்பான ஒரு தீர்மானத்துக்கு தொடர்புடைய மாநிலம் சாதகமாக இல்லையென்றால், அத்தகைய தீர்மானம் எதுவும் நாடாளுமன்றத்தால் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்று திரு ரோகினி குமார் சௌத் திரி கூறினர். இந்த உறுப்பினைக் கண்டனம் செய்து பேசு கையில், திரு பிரஜேஷ்வர் பிரசாத், இது மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் இருந்து வருவதை ஒழிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாகும் என்றார். அவர் தமது கருத்தை விளக்கும் வகையில் எடுத்துரைத்ததாவது : மைய அரசு

அதிகாரத்தில் உள்ள பெரும்பான்மைக் கட்சி, எந்தவொரு மாகாணத்தையேனும் இல்லாமற் செய்ய விரும்பினால், அது தன் விருப்பத்தை எளிதில் நிறைவேற்ற முடியும்; எவ்வாறெனில் மைய அரசு அந்த மாநிலத்தைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகளை இந்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்து விடலாம்; அல்லது அம்மாநிலத்தை பிறிதோர் அண்டை மாநிலத்துடன் சேர்த்துவிடலாம். விவாதத்துக்குப் பின்னர், 3-வது உறுப்பு அரசமைப்பு சட்டமன்றத்நால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13—10—1949 அன்று 3-வது உறுப்பு பற்றி மேலும் விவாதிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. அரசமைப்பு சட்டமன்றம் 3-வது உறுப்பை ஏற்றுக்கொண்டதையடுத்து நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளால் இதை எடுத்துக்கொள்வது அவசியமாயிற்று. அப்போதைய இந்தியச் சமஸ்தானங்கள் அனைத்தும் அண்டையிலிருந்த மாகாணங்களுடன் இணைக்கப் பட்டன. அல்லது மாகாணங்களுக்கு இணையான நிலையளிக்கப் பட்டன. இப்புதிய நிலைக்குச் செயல் வடிவம் தருவதற்காக அரசமைப்புச் சட்டத்தின் பல்வேறு உறுப்புகளும் திருத்தப் படவேண்டியிருந்தன. 18—11—1948 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட 3-வது உறுப்பின் வரம்புரைக்கு திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒரு அதிகாரபூர்வமான திருத்தம் கொண்டுவந்தார். இத்திருத்தம், ஆளுநர்களின் ஆளுகையின் கீழ் உள்ள மாகாணங்களின் நேர்வுகளில் போல, இந்தியச் சமஸ்தானங்களின் நேர்வுகளிலும் கூட, தொடர்புடைய சட்டமன்றத்தின் கருத்துக்களை அறிந்துகொண்டாலே போதுமானது என்றும் இந்தியச் சமஸ்தானத்தின் இசைவைப் பெறத் தேவையில்லை என்றும் விதிக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. விவாதத்தின்போது திரு எச். வி. படாஸ்கர் இந்த வகையுரையின் வரலாற்றினை எடுத்துரைத்தார். இந்த வகையுரை எவ்வாறு முதன்முதலில் 1919-ம் ஆண்டுச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது என்றும், எவ்வாறு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் சேர்க்கப்பட்ட வகையுரை பயன்படுத்தப்படாமல் கிடந்தது என்றும் சுட்டிக்காட்டினார். ஒரு மாநிலத்தின் பெயர் அல்லது எல்லைகளை மாற்றியமைக்கும் எந்தவொரு சட்டமும், தொடர்புடைய மாநிலத்தின் பிரதிநிதிகளாக உள்ள மக்களவை உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் ஆதரவளிக்கப்பட்டால் மட்டுமே அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படவேண்டும் என்றிருக்குமாறு திரு படாஸ்கர் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

இத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு அவர் கூறிய காரணமாவது : ஒரு மாகாணம் இன்னொரு மாகாணத்திலிருந்து பிரிக்கப்படவேண்டுமென்றால், அல்லது, ஒரு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பகுதி அதிலிருந்து பிரிக்கப்பட்டு இன்னொரு மாகாணத்துடன் சேர்க்கப்படவேண்டுமென்றால், இந்த விஷயம், அவற்றில் ஒரு பகுதியினரது பிரதிநிதிகள் அளிக்கும் வாக்குகளால் முடிவு செய்யப்படக்கூடாது ; மாறாக, இந்த மாற்றத்தால் பாதிக்கப்படுகின்றவர்கள் அனைவராலும் முடிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும். ஆனால், விவாதத்திற்குப் பின்னர் திரு படாஸ்கரின் திருத்தம் ஏற்கக் கூடியதல்ல என்று அரசமைப்புச் சட்டமன்றத்தின் தலைவர் தீர்ப்பளித்தார். திரு. கிருஷ்ணமாச்சாரி கொண்டுவந்த அதிகாரபூர்வமான திருத்தம் அரசமைப்புச் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. VII, 437-440, 446, 463, 465 பக்கங்களிலும் அ.ச.ம.வி. X, 210-213, 215 பக்கங்களிலும் காண்க.

இணைப்பு VIII

(அத்தியாயம் XIV-ல் உள்ள பத்தி 1-ஐக் காண்க)

வர்த்தகமும் வாணிகமும் குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

வர்த்தக, வாணிக சுதந்திரம் குறித்துச் செய்யப்பட வேண்டிய வகையுரைகள் பற்றி அரசமைப்புச் சட்டமன்றம் ஆலோசிக்குமுன்னரே இக்கருத்து புகழ்பெற்ற சட்ட வல்லுநர்கள் சிலராலும், துணைக்குழு ஒன்றினாலும், ஆலோசனைக் குழு ஒன்றினாலும் ஆராயப்பட்டது. சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், 14—3—1947-ம் நாளிட்ட தமது குறிப்பில், சமஸ்தானங்களுக்கிடையிலும் மாகாணங்களுக்கிடையிலுமான வர்த்தக சுதந்திரத்தைக் குறித்த வகையுரைகளை அமைத்துக்கொள்வது பற்றித் தக்க கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கருத்து தெரிவித்தார். திரு கே. எம். முன்ஷி 17—3—1947-ம் நாளிட்ட தமது குறிப்பில், நாட்டு மக்கள் ஒன்றியத்தின் நிலப்பரப்புக்குள் எங்கு வேண்டுமானாலும் சென்று வர்த்தகம் நடத்தும் அடிப்படையுரிமையைப் பெற்றிருக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்தார். அடிப்படையுரிமைகள் மீதான துணைக்குழு, 3—4—1947-ம் நாளிட்ட தனது வரைவு அறிக்கையில் ஒரு பகுப்பைச் சேர்க்குமாறு பரிந்துரைத்தது: அதாவது மைய அரசுச் சட்டத்தால் முறைப்படுத்தப்படுவதற்கு உட்பட்டு, மாநிலங்களுக்கிடையில், உள்நாட்டுப் போக்குவரத்து மூலமாகவோ அல்லது கடல் வழிப் போக்குவரத்து மூலமாகவோ மேற்கொள்ளப்படும் வர்த்தகமும் வாணிகமும் பிற தொடர்பும் சுதந்திரமானதாக இருக்கவேண்டும்; ஆனால் பொது ஒழுங்கு, ஒழுக்கம் அல்லது சுகாதார நலன் கருதி அத்தகைய சுதந்திரத்தின்மீது, மாநிலம், சட்டத்தின் மூலம் நியாயமான தடையை விதிக்கலாம் என்பதே அப்பகுப்பாகும்.

அப்பகுப்பின் பெரும் பகுதி ஆஸ்திரேலிய அரசமைப்புச் சட்டத்தின் 92-வது பிரிவின் அடிப்படையில் அமைந்தது என்று அரசமைப்புச் சட்ட ஆலோசகர் சர் பி. என். ராவ் கூறினார். சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் நாளிட்ட தமது குறிப்பில்

வரைவு அறிக்கை குறித்து விமரிசிக்கும் பொழுது, நாட்டில் பிறபகுதிகளிலிருந்து ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பிற்குள்வரும் சரக்குகள், அம்மாநிலத்திலேயே உற்பத்திச் செய்யப்படும் சரக்குகளின்மீது விதிக்கப்படும் தீர்வைகளிலிருந்தும் வரிகளி லிருந்தும் தப்ப முடியாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று கூறினுர். நெருக்கடி நிலையில் வரையரை கள் விதிக்க மாநிலங்களுக்கு உரிமையுண்டு என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்றும் அவர் விரும்பினுர். 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் நாளிட்ட தனது அறிக்கையில் துணைக்குழு பின்வருமாறு பரிந்துரைத்தது: அதா வது, உள்நாட்டுத் தீர்வைகள், சுங்கவரிகள் என்ற வடிவில் சுமைக்கு ஆட்படுத்தப்படாமல் சுதந்திரமாக வர்த்தகம், வாணிகம், சுதந்திரமாக மற்றும் பிறதொடர்புமேற்கொள்ள நாட்டுமக்கள், உரிமையுடையவர்களாக இருக்கவேண்டும் என்ற போதிலும், சிறிது காலத்துக்குத் தீர்வைகள் மற்றும் வரிகள் விதிப்பதனைத் தொடர்வதற்கு இந்தியச் சமஸ்தானங்களுக்கு இயலும் வகையில் சிலவகையுரைகள் அவசியம் வேண்டுமென்பதாகும். இந்த அறிக்கை, வரைவு அறிக்கையில் கண்ட வகையுரையுடன் இரு வரம்புரை களைச் சேர்த்து இவ்வகையுரையை அமைத்தது. இவ்விரு வரம்புரைகளின்படி மாநிலங்கள், மாநிலத்துக்குள்ளே உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளுக்கும் மாநிலத்துக்கு வெளி யே உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளுக்கும் இடையில் பாகு பாடின்றி, தீர்வைகளும் வரிகளும் விதிக்கலாம்.

அடிப்படையுரிமைகள் பற்றிய ஆலோசனைக் குழு, 1947, ஏப்ரல் 21, 22-ம் நாள்களில் நடைபெற்ற தனது கூட்டத் தில் இவ் வகையுரைகளைப் பரிசீலித்தது. உண்மையான வரு வாய்க் காரியங்களுக்காக வரிவிதிக்க மாநிலங்களுக்கு அதிகார மளிக்கும் வகையுரை செய்யப்படவேண்டுமென்று திரு சி. ராஜகோபாலாச்சாரி கருத்துத் தெரிவித்தார். இந்தியச் சமஸ்தானங்கள் வருவாய்க்காக வரிகளும் தீர்வைகளும் விதிக் கலாம் என்றுல், மாகாணங்களும் அவ்வாறு வரி விதிக்க அதிகாரமளிக்கப்பட வேண்டும் என்று அவர் வாதிட்டார். இது குறித்து சமஸ்தானங்கள் விருப்பம்போல் செய்யலாம் என்று அதிகாரமேதும் அளிக்கப்படவில்லை என்று சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் குறிப்பிட்டார். திரு சி. ராஜ கோபாலாச்சாரி தமது கருத்தை வற்புறுத்திஞர். எனினும், நாட்டில் பல்வேறு மாநிலங்களும் ஒன்றையொன்று சார்ந் துள்ளவை ஆதலால் மாநிலங்களின் தன்னிறைவு என்ற

கொள்கை நாட்டில் அபாயகரமானதென்று சுட்டிக்காட்டி, சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், அவரது வாதத்திற்கு எதிர்வாதமிட்டார். ஆலோசனைக் குழுவின் 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் நாளிட்ட அறிக்கையில், துணைக் குழுவின் இறுதி அறிக்கையில் கண்டிருந்த வகையுரை அவ் வாறே சேர்க்கப்பட்டது. வர்த்தகம், வாணிகம், மற்றும் பிற தொடர்புகளைச் சட்டங்கள் மூலம் முறைப்படுத்த மைய அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. பொது ஒழுங்கு, ஒழுக்கம், அல்லது சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு அல்லது நெருக்கடி நிலையில் நியாயமான வரையறைகளை விதிப்பதற்கும், மற்றும் வரிகளை விதிக்கவும் மாநிலங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. இந்த அதிகாரம், மாநிலங்களால் எந்தவித பாகுபாடான வரியும் விதிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். இந்தியச் சமஸ்தானங்களுக் குத் தனிச்சலுகை காட்டப்பட வேண்டுமென்றும், மற்றும், அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படக்கூடிய பெருமக் கால அளவு வரை, உள்நாட்டுச் சுங்கவரிகள் விதிப்பதைத் தொடர, சமஸ்தானங்களுக்கு அதிகாரமளித்து மைய அரசு, அவற்றுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஆலோசனைக் குழு பரிந்துரைத்தது.

அரசமைப்புச் சட்டமன்றம் இந்த வகையுரையை 1947-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி அன்று ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது. திரு முன்ஷி இரு திருத்தங்கள் கொண்டுவந் தார். நமக்கு அவை மிக முக்கியமானவையல்ல. இப்பகுப்பு திருத்தப்பட்டவாறு, அரசமைப்புச் சட்டமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசமைப்புச் சட்ட ஆலோசகர் 1947 அக்டோபரில் அவரால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், அந்த ஆண்டு மே திங்களில் அரசமைப்புச் சட்ட மன்றத்தால் முடிவு செய்யப்பட்ட இந்த வகையுரையைச் சேர்த்தார். இந்தப் பகுப்பு, இணைப்பாட்சிச் சட்டத்தால் முறைப்படுத்தப்படுவதற்குட்பட்டு, வர்த்தகம், வாணிகம், பிற தொடர்பு முதலியவற்றின் உரிமைக்கு வகை செய்தது. அது பாகுபாடற்ற வரிகளை விதிக்க மாநிலங் களுக்கு அதிகாரமளித்தது. பொது ஒழுங்கு, ஒழுக்கம் அல்லது சுகாதார நலன் கருதி அல்லது நெருக்கடி நிலையில் வரையறை களை விதிப்பதற்கு இணைப்பாட்சிநாடாளுமன்றத்திற்கு அதிகா ரம் அளிக்கப்பட்டது. வரைவுக் குழு, இந்த வகையுரை அமைக்கப்படும் வரிசை முறை குறித்த சில திருத்தங்கள் செய்து, இதனை 1948 பிப்ரவரியில் வெளியிட்ட வரைவு

அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்தது. வரைவு உறுப்பு 244-க்கு உட்பட்டு, நாடு முழுவதும் வர்த்தகம், வாணிகம், மற்றும் பிற வகை தொடர்பு சுதந்திரமானதாக இருக்கவேண்டும் என்று வரைவு உறுப்பு 16 அறிவித்தது. சுருங்கச் சொன்னால், வரைவு உறுப்புகள் 243, 244, 245 ஆகியவை, மாநிலத்துக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள்மீது வரி விதிக்க மாநிலத்துக்கு அதிகாரமளித்தன. ஆனால் அவ்வாறு வரி விதிக்கப்படுகையில், மாநிலத்துக்குள் உற்பத்தியாகும் சரக்குகளுக்கும் மாநிலத்துக்கு வெளியேயிருந்து கொண்டுவரப் படும் சரக்குகளுக்குமிடையில் எவ்விதப் பாகுபாடும் காட்டப் படக் கூடாது என்ற நிபந்தனையும் விதித்தன. பொதுநலனை முன்னிட்டு, வர்த்தக, வாணிகச் சுதந்திரத்தின்மீது நியாய மான தடைகள் விதிக்க மாநிலத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டது. மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம், வாணிகம் தொடர்பான வகையுரைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக ஆள்வை ஒன்றை நிறுவ நாடாளுமன்றத்துக்குரிய அதிகாரம் பற்றிய புதிய வகையுரை ஒன்று மட்டுமே இக் கட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

வரைவு அரசமைப்புச் சட்டம் வெளியிடப்பட்டபொழுது, சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், மாநிலச் சட்டமன்றங் களுக்கு அளிக்கப்பட்டுள்ள குறுக்கிடும் அதிகாரம் மிகக் கடுமையானது என்றும், மூல வரைவில் அளிக்கப்பட்டிருந்ததைக் காட்டிலும் மிகப் பரந்தது என்றும் விமரிசித்தார். 16-வது உறுப்பு அளிக்கின்ற வர்த்தக சுதந்திரத்தை, இந்த வகையுரை முற்றிலும் இல்லாமற் செய்துவிடும் என்று அவர் அச்சம் தெரிவித்தார். மேற்கு வங்காளச் சட்டமன்றமும் இதேபோன்ற கவலை தெரிவித்தது. மாகாணச் சுங்கத்துறைக் கடமைகளைச் செயல்படுத்தும் காரியத்துக்காக, அல்லது தேசீய நலனை முன்னிட்டுப் பண்டங்களின் விலைவாசிகளையும் பண்டங்களைப் பகிர்வு செய்தலையும் கட்டுப்படுத்தும் காரியத் துக்காக மட்டுமே வரையறைகள் விதிப்பது என்ற அளவுக் குள் வர்த்தக வாணிக சுதந்திரத்தின்மீது வரையறைகள் விதிக்கும் மாநில அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று மேற்கு வங்காளச் சட்டமன்றம் பரிந்துரைத்தது. இந்த வகையுரையை அறவே நீக்கிவிடவேண்டுமென்று இந்திய அரசின் தொழில், மற்றும் வழங்கீடு அமைச்சகம் கருத்து தெரிவித்தது. ஆனால் சர் பி. என். ராவ் பின்வரும் காரணம் காட்டி, இந்த வகையுரையை வைத்துக்கொள்வது சரியென்று தெரிவித்தார்; அதாவது வெள்ளத்தால் அன்றி

வேறு வகையால் பயிர்கள் அழிந்துவிடுவதன் விளைவாக ஏற்பட்ட மந்தநிலைக் காலத்தின்போது பொது மக்கள் நலனை முன்னிட்டு, வர்த்தக, வாணிக தடை விதிப்பது, அல்லது கொள்ளைநோய் போன்ற தொத்து நோய்கள் தோன்றிப் பரவும் நிலையில், அண்டை மாநிலமொன்றில் வசிக்கும் மக்களுடன் வாணிகத் தொடர்பு கொள்ளும் சுதந்திரத்துக்குத் தடை விதிப்பது மாநிலத்துக்கு அவசியமாகவிருக்கும் என்று அவர் காரணம் கூறினார்.

1948 டிசம்பரில், அரசமைப்புச் சட்டமன்றத்தில் 16-வது வரைவு உறுப்பு பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வகையுரை அடிப்படையுரிமைகளின் கீழ் ஓர் உறுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை திரு சி. சுப்பிரமணியம் எதிர்த்தார். அவர் கருத்துப்படி உரிமையை நாடாளு மன்றத்தின் சட்டத்திற்கும் மாநிலங்கள் வரையறைகள் விதிப்பதற்கும் நிபந்தனையற்ற முறையில் ஆட்படுத்தியது, உரிமையின் அடிப்படைத் தன்மையையே கெடுத்துவிட்டதாகும். இந்தக் கண்டனத்திற்குப் பதிலளித்து டாக்டர் அம்பேத்கார் பேசுகையில், வர்த்தகம், வாணிகம் ஆகியவற்றை மைய அரசின் அதிகாரப் பட்டியலில் சேர்க்க அனுமதிப்பதற்கு இந்திய சமஸ்தானங்களுக்கு விருப்பமின்மையால் அப்போது தோன்றி நிலவிய அரசியல் சூழ்நிலையின் பின்னணியிலேயே இந்த வகையுரை சேர்க்கப்பட்டது என்று கூறினார். இறுதியில், 16-வது வரைவு உறுப்பு அரசமைப்புச் சட்டமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வரைவு உறுப்புகள் 243, 244, 245 ஆகியவை 1949 ஜூன் திங்களில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரியின் வேண்டுகோளின் பேரில் இந்த உறுப்புகளைக் குறித்துப் பரிசீலனை செய்வது ஒத்திவைக்கப்பட்டது. 1949 செப்டம்பர் திங்களில் டாக்டர் அம்பேத்கார் இப்பொருள் பற்றித் திருத்தங்கள் கொண்டுவந்தார். இந்த உறுப்புகளை நீக்கிவிடவும், அவற்றுக்குப் பதிலாக ஐந்து உறுப்புகளடங்கிய ஒரு புதுப் பாகத்தைச் சேர்க்கவும் அவர் உத்தேசம் தெரிவித்தார். அவற்றில், முதல் உறுப்பு, வர்த்தக, வாணிக சுதந்திரம் பற்றிய பொது விதிகளை விதித்தது. இரண்டாவது உறுப்பு, பொது நலனைக் கருதி, சட்டத்தின் மூலம் வரையறைகள் விதிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளித்தது. மூன்றாவது உறுப்பு, நாட்டின் யாதேனுமொரு பகுதியில் பொருள்கள் பற்றாக்குறையின் மூலம் எழுகின்ற ஒரு சூழ்நிலையைச் சமாளிக்க, ஒரு

மாநிலத்துக்கும் பிறிதொரு மாநிலத்துக்கும் இடையே பாகுபாடு செய்வது அவசியம் என்று நாடாளு மன்றத்துக்குத் தோன்றுகின்றபோதல்லாமல், பிற சமயங்களில் அவ்வாறு பாகுபாடு ஏதும் செய்யாமல் நாடாளுமன்றத்தையும் மாநிலச் சட்டமன்றங்களையும் தடை செய்கிறது. நான்காவது உறுப்பு, மாநிலங்களுக்கிடையேயும் மாநிலத்துக்குள்ளுமான, வர்த்தகம், வாணிகம், மற்றும் பிற தொடர்பு ஆகியவற்றின் மீது பாகுபாடற்ற வரிகளை விதிக் கவும், பொதுமக்கள் நலனை முன்னிட்டு நியாயமான வரை யறைகளை விதிக்கவும் மாநிலச் சட்டமன்றங்களுக்கு அதிகார மளிக்கின்றது. ஐந்தாவது உறுப்பு, இந்த வகையுரைகளைச் செயல்படுத்துவதற்காக நாடாளுமன்றம் ஆள்வை ஒன்றை ஏற்படுத்த வகை செய்கிறது.

மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகமும் வாணிகமும் முற் றிலும் சுதந்திரமானதாக இருக்கவேண்டுமென்று பண்டித தாகூர்தாஸ் பர்காவா கருத்து தெரிவித்தார். டாக்டர் பி. எஸ். தேஷ்முக், இந்தவகையுரைகளின் வரைவு சிக்கலானதென் றும், வர்த்தகம், வாணிகம் பற்றிய கருத்து முழுவதும் ஓர் எதிர்கால நாடாளுமன்றத்தின் கொள்கை முடிவுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்றும் கருதினார். இதற்கு மாறாக, திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நாட்டின் எதிர் காலப் பொருளாதார முன்னேற்றத்தை முன்னிட்டு இந்த வகையுரைகள் அவசியமானவை என்று கூறினார். டாக்டர் அம்பேத்கார் எடுத்துரைத்த வகையுரைகளைச் சேர்த்துக் கொள்வது சரியே என்று சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும் கூறினார். பண்டித தாகூர்தாஸ் பர்காவா கொண்டுவந்த திருத்தங்களிலொன்று, பொது நலனை முன்னிட்டு நாடாளு மன்றம், வர்த்தக, வாணிக சுதந்திரத்தின் மீது விதிக்கக் கூடிய வரையறைகள் நியாயமானவையாக இருக்க வேண்டு மென வகை செய்ய விரும்பியது. திரு கிருஷ்ணமாச்சாரியும் சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும் இத்திருத்தத்தை எதிர்த்தனர். இத் திருத்தத்தை அரசமைப்புச் சட்ட மன்றம் தள்ளிவிட்டது.

இக்கருத்து மீண்டும் 1949 அக்டோபரில் அரசமைப்புச் சட்ட மன்றத்தால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. மேலும் இரண்டு உறுப்புகளைச் சேர்த்துக் கொள்ளு மாறு கேட்கப்பட்டது, அவற்றிலொன்று, அதன்கண் குறிப் பிடப்பட்டுள்ள பெருமக்காலம் வரைக்கும் இந்தியச் சமஸ்தானங்கள் விதித்து வந்த வரிகளையும் தீர்வை

களையும் தொடர்ந்து வசூலிக்க அவற்றுக்கு அதிகாரம் அளிக்கிறது. இரண்டாவது உறுப்பு ஏற்கனவேயுள்ள சட்டங்களைப் பாதுகாக்கிறது. 16-வது வரைவு உறுப்பை நீக்கி விடலாமென்று திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி கருத்து தெரிவித்தபொழுது, அடிப்படையுரிமை பிறிதொரு அதிகாரத்தில் எடுத்தெழுதப்படக் கூடாதென்று காரணங்காட்டி, பல உறுப்பினர்கள் அது நீக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதற்கு பதிலளித்து, சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் பேசுகையில், மாநிலங்களுக்கிடையிலான வர்த்தக, வாணிக சுதந்திரம் குறித்த வகையுரையை அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து பிறிதொரு பகுதிக்கு மாற்றியெழுதுவதானது அதன்கண் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமையின் தன்மையை மாற்றவோ பாதிக்கவோ செய்யாது என்று கூறினார். ஒரு வகையுரையை அடிப்படையுரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் சேர்ப்பதனாலேயே அதற்குக் குறிப்பிடத்தக்க புனிதத் தன்மையெதுவும் வந்துவிடாது என்றும், அது நீதி விசாரணைகுட்படும் தன்மை அது அவ்வாறு வைக்கப்பட்டிருக்குமிடத்தைச் சார்ந்ததாயிராது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இறுதியில், இவ்வகையுரை அரசமைப்புச் சட்ட மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வகையுரைகள் தற்போது பாகம் XIII-ல் உறுப்புகள் 301 முதல் 307 வரையிலும் இடம் பெற்றுள்ளன.

இந்த இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. III, 465—468 பக்கங்களிலும்; அ.ச.ம.வி. VII, 798—800, 802—803 பக்கங்களிலும்; அ.ச.ம.வி. VIII, 819 பக்கத்திலும்; அ.ச.ம.வி. IX, 1123—1126, 1128, 1131—1132, 1138, 1141—1143 பக்கங்களிலும், அ.ச.ம.வி. X, 175—176, 348—352 பக்கங்களிலும் காண்க.

இணைப்பு IX

(அத்தியாயம் XV-ல் உள்ள பத்தி 11-ஐக் காண்க)

மைய அரசின் இராணுவப்படைகள் குறித்து விளக்குகின்ற மைய அரசு அதிகாரப் பட்டியலின் 2-வது பதிவை வரைந்தது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

மைய அரசு அதிகாரங்கள் குழுவின், 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாளிட்ட முதலாவது அறிக்கையில் இது தொடர்பான பதிவு பின்வருமாறு காணப்பட்டது:

''ஒன்றியத்தின் பாதுகாப்புக்காகவும் மைய அரசு மாநில அரசுகள் ஆகியவற்றின் சட்டங்களைச் செயற்படுத்தவும் கப்பற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றைத் திரட்டுதல், அவற்றுக்குப் பயிற்சியளித்தல் அவற்றைப் பேணி வருதல், கட்டுப்பாடு செய்தல் ஆகியவையும் அவற்றில் வேலை வாய்ப்பும்; இந்தியச் சமஸ்தானங்களில், ஏற்கனவே திரட்டப்பட்டுப் பணியிலமர்த்தப்பட்டுள்ள இராணுவப் படைகளின் எண்ணிக்கை, அமைப்பு, கட்டுப்பாடு ஆகியவையும்''.

1947-ம் ஆண்டு ஜுலை மாதம் 1-ம் தேதியன்று நடைபெற்ற மைய அரசு அதிகாரங்கள் குழு, மைய அரசமைப்புச் சட்டக்குழு இவற்றின் கூட்டுக் கூட்டத்தில், மேற்கண்ட பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1947-ம் ஆண்டு ஜுலை 5-ம் நாளிட்ட மைய அரசு அதிகாரங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையில் இந்தியச் சமஸ்தானங்களின் இராணுவப்படை பற்றிய குறிப்பு விளக்கியுரைக்கப்பட்டது; அந்தப் படைகள் மீது அப்போது செலுத்தி வந்த ஒருங்கிணைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் அனைத்தும் தொடர்ந்து பேணி வரப்படவேண்டுமென்பதே விருப்பமாகும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. மேற்சொன்ன பதிவு, அதன் உட்பொருளைப் பாதிக்காத சாதாரணத் தன்மை உடைய, சில எழுத்து மாற்றங்களுடன் பெயர்த்தெழுதப்பட்டது. 1947 அக்டோபரில், அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், இப்பதிவு, சில சிறு மாற்றங்களுடன், மீண்டும் பெயர்த்தெழுதப்பட்டது. இது இந்தியச் சமஸ்தானங்களின் இராணுவப்படைகளைப் பற்றியும்

குறிப்பிட்டது. 1948 பிப்ரவரியில் வரைவுக் குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில், அரசமைப்புச் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட வரைவில் குறிப்பிடப்பட்ட பதிவு, திருத்தங்களுடன் மீண்டும் பெயர்த்தெழுதப்பட்டது ; அத்திருத்தங்களில், அங்குக் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவப் படைகளின் மூன்று பிரிவுகளும் மைய அரசுக்குரியன என்று தெளிவாக்கப்பட்டது; மற்றும், இந்தியச் சமஸ்தானங்கள் பற்றிய குறிப்புக்குப் பதிலாக, முதலாவது இணைப் பட்டியின் பாகம் III-ல் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலங்கள் பற்றிய குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெளிவாக்கப்பட்டது. இந்தியச் சமஸ்தானங்கள் தமது சொந்த, இராணுவப் படைகளைப் பேணி வருவதிலிருந்து அவற்றைத் தடை செய்யும்பொருட்டு, இந்தியச் சமஸ்தானங்களின் இராணுவப் படைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற, அப்பதிவின் இரண்டாவது பகுதி நீக்கப்பட வேண்டும் என்று, வரைவுக்குழுவின் தலைவர் தமது கருத்தை வலியுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சகம் வரைவு அரசமைப்புச் சட்டத்தின் மீது விமரிசனம் செய்து 1949 ஜூனில் தெரிவித்ததாவது : தரைப்படை, கடற்படை, விமானப்படையைத் திரட்டும் அதிகாரம் எதுவும் மாகாணங்களுக்குக் கிடையாது என்று தெளிவாக்கும் பொருட்டு ''ஒன்றியத்தின்'' என்னும் சொற்கள் நீக்கப்படவேண்டும் ; பதிவினுள் '' பிரதேசப் படை, தேசிய மாணவர் படைகள், குடிப்படைகள், சாரணப் படைகள், ஏனைய ஆயுதந்தாங்கிய படைகள் (ஆயுதந் தாங்கிய காவற்படை நீங்கலாக) '' என்னும் சொற்றொடரைச் சேர்த்துக்கொள்ளும் வண்ணம் பதிவு விரிவு படுத்தப்பட வேண்டும் என்பதாகும். சமஸ்தானங்களில் உள்ள இராணுவப்படைகளைக் குறிப்பிடுகின்ற, பதிவின் இரண்டாவது பகுதி நீக்கப்படவேண்டும் என்று கருத்து தெரிவித்து பண்டித எச்.என். குன்ஸ்ருவால் அறிவிப்புக்கொடுக்கப்பட்ட ஒரு திருத்தத்தைப்பற்றியும் பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டது. பாதுகாப்பு அமைச்சகம், சமஸ்தானங்கள் தமது சொந்தப்படைகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா என்னும் வினவை எழுப்பியது. இந்தியாவில் உள்ள இராணுவப்படைகள் அனைத்தையும் மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது மட்டுமன்றி, அவையனைத்தும், மைய அரசுக்கே பற்றுறுதியுடையவைகளாக இருக்குமாறு செய்வது சிறந்ததாகும் என்று தனது கருத்தைத்

தெரிவித்தது ; ஆனால் இவ்விஷயத்தை நிறைவேற்றுவது பற்றிய வாய்ப்பினை இந்திய சமஸ்தானங்களின் விவகார அமைச்சகத்தின் ஆலோசனைக்கு விட்டுவிட்டது. மாநில அதிகார பட்டியலில், மாகாணக் குடிப்படை தொடர்பான ஒரு புதுப்பதிவைச் சேர்ப்பதற்கான திருத்தமொன்றுக்கு திரு க. சந்தானம் அறிவிப்புக் கொடுத்திருந்தார். பாதுகாப்பு அமைச்சகம் இத்திருத்தம்பற்றி விமரிசிக்கையில், இத்திருத்தம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாதென்றும், மாகாணங்கள் "காவல்படை" என்ற சொற்கள் குறிப்பிடும் பொருள் வரையறைக்குள்ளமைந்த படையை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தது. மேலே குறிப்பிட்டுள்ள மைய அரசு அதிகாரப்பட்டியலில் 4-வது பதிவுத் தொடர்பாக தன் குறிப்புகளைப் பார்க்கும்படியும் பாதுகாப்பு அமைச்சகம் கேட்டுக்கொண்டது.

வரைவுக்குழு 1949-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் தேதி அன்று நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு முடிவு செய்தது; அதாவது, இங்கு விவாதத்திற்குட்பட்டுள்ள பதிவு தக்கவாறு திருத்தப்பட்டு, அதன் கண், 1935-ம் ஆண்டுச் சட்டம் முதன் முதலில் இயற்றப்பட்டபோது அதன் ஏழாவது இணைப் பட்டியில், அதிகாரப்பட்டியல் I, பதிவு 1-ல், கண்டுள்ள வகையுரைகளையொட்டி, ஆயுதந்தாங்கிய காவற்படைகள் அல்லது அதுபோன்ற ஏனைய படைகள் இந்திய அரசால் பேணிவரப்படுவது பற்றி ஒரு குறிப்பு சேர்க்கப்படவேண்டும் என்பதாகும் (இங்கு இரண்டு கருத்துகளைக் குறிப்பிட்டாக வேண்டும். முதன் முதலில் இயற்றப்பட்டவாறுள்ள 1935-ம் ஆண்டுச் சட்டத்தில் இணைப்பாட்சிச் சட்டமன்றப் பட்டியலின் பதிவு 1-ல் இருந்து, அப்பதிவில் மைய அரசால் ஆயுதந்தாங்கிய காவற்படை ஒன்று பேணிவரப்படுவது பற்றி எவ்விதக் குறிப்புமில்லை என்பது தெரியவரும். அது இராணுவப்படைகளை மட்டும் குறிப்பிட்டது. உண்மையில் மூலப்பதிவு, தனது பொருள்வரம்பிலிருந்து, மாகாண அரசுகளால் பேணிவரப்படும் இராணுவ, அல்லது ஆயுதம் தாங்கிய, காவல்படையை நீக்கிவிட்டது. குறிப்பிடத்தக்க இரண்டாவது கருத்து யாதெனில், தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப் பட்டியில் உள்ள மைய அரசு அதிகாரப் பட்டியலின் பதிவு 2-ல் இந்திய அரசு ஆயுதம் தாங்கிய காவற்படையொன்றைப் பேணிவருவது பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை).

இணைப்பு X

(அத்தியாயம் XX-ல் உள்ள பத்தி 6—ஐக் காண்க.)

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவது குறித்து விளக்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகளை வரைந்து நிறைவேற்றியது தொடர்பான விவாதங்களின் சுருக்கம்.

அரசமைப்புச் சட்டத்தைத்திருத்துவதற்குரிய பொருத்தமானதொரு விதியை உருவாக்கும் பணி 1946-ம் ஆண்டிலேயே பேராசிரியர் கே. டி. ஷாவால் மேற்கொள்ளப்பட்டது. 1946 டிசம்பர் 22-ம் நாள் அன்று டாக்டர் ராஜேந்திரப் பிரசாதுக்கு அவர் எழுதிய கடிதத்தில், ஷா, அந்த ஆண்டு ஜூலையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் தயாரிக்கப்பட்ட சில பொது நெறிமுறைகளை அனுப்பிவைத்தார். பேராசிரியர் ஷா தெரிவித்த நடைமுறைக்கு இணங்க சில விதி விலக்குகள் நீங்கலாக அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதற்குரிய செயற்குறிப்புகள் அனைத்தும் மைய அரசுச் சட்டமன்றத்திலேயே முதற்கண் தோன்ற வேண்டும்; அவை ஒவ்வொரு அவைகளிலுமுள்ள மொத்த உறுப்பினரெண்ணிக்கையில் குறைந்தது ஐந்தில் மூன்று பங்கு பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அவை, மாநிலங்களின் சட்டமன்றங்கள் அனைத்தாலும், குறைந்தது மூன்றிலிருபங்கு பெரும்பான்மையுடன் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்குக் கூடுதலாக, திருத்தம் சட்டமன்றங்களின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவைப் பெற வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைத்தல், அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர் உரிமைகள் ஆகிய இம்மூன்று இனங்களும் விலக்களிக்கப்பட்டவையாகும். மைய அரசால் எல்லைகளை மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்பு தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத்திலேயே முதற்கண் தோன்றி, மூன்றிலிருபங்கு பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்; அதன் பின்னரே அச்செயற்குறிப்புகள் மையச் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும். அடிப்படையுரிமைகளையும், சிறுபான்மையர் உரிமைகளையும் பாதிக்கும் திருத்தங்களுக்கு குடியரசுத் தலைவரது வேண்டு

கோளின் பேரில் ஒரு பொதுவாக்கெடுப்பு நடைபெற வேண்டும்; அவ்வாக்கெடுப்பில், வயது வந்த குடிமக்களின் அல்லது தொடர்புடைய சிறுபான்மை இனத்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலிருபங்கினரால் அத் திருத்தம் ஏற்பளிக்கப்பட வேண்டும்.

அரசமைப்புச் சட்ட ஆலோசகர், 1947 மார்ச்சு 17-ம் நாளிட்ட தமது கடிதத்தில், உடன் அனுப்பிய வினுப் பட்டியல் மூலம், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற் காகச் செய்யப்பட வேண்டிய வகையுரைகள் குறித்த கருத்துரைகளையும் கருத்துக்களையும் தமக்கு அனுப்பிவைக்கு மாறு கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் தொடர்பான பல்வேறு இணைப்பாட்சி அரசமைப்புச் சட்டங்களின் வகை யுரைகளையும், தென்னுப்பிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடு களின் அரசமைப்புச் சட்டங்களின் வகையுரைகளையும் அவர் விளக்கினுர். வினுக்களுக்கு அனுப்பிய மறுமொழியில், சர்தார் கே. எம். பணிக்கர், ஏனையவற்றுக்கிடையே திருத் தங்கள் மாநிலச் சட்டமன்றங்களினுல் உறுதி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். டாக்டர் எஸ். பி. முகர்ஜி, நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையும், அத்துடன், அரசமைப்புச் சட்ட முறையான மாநாடு ஒன்றன் (Constitutional Convention) மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை அல்லது மாநிலங் களின் சட்டமன்றங்களில் மூன்றிலிருபங்கு பெரும்பான்மை யால் ஏற்று உறுதி செய்யப்படுவது குறித்து ஆலோசனை தெரிவித்தார். ராஜகுமாரி அமிர்த கவுர் பொது வாக் கெடுப்பில் மூன்றில் இரு பங்கினரால் ஏற்றுக்கொள்ளப் படுவது பற்றி ஆலோசனை கூறினுர். டாக்டர் பி. சுப்ப ராயன், அரசமைப்புச் சட்டத்திருத்தமெதுவும் மையச் சட்டமன்றத்தாலேயே செய்யப்பட வேண்டுமென்றும், ஆனுல், மாநிலச் சட்டமன்றத்தின் பரிந்துரையின்பேரில் மட்டுமே அவ்வாறு செய்யப்படவேண்டுமென்றும் தெரிவித் தார். மையச் சட்டமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம் இவற்றிலெதுவேனும் அரசமைப்புச் சட்டத்துக்குத் திருத் தங்களை எடுத்துரைக்க வேண்டும் என்று திரு பி. ஜி. கெர் தெரிவித்தார். அவர், மைய, மாநிலச் சட்ட மன்றங்களின் ஒவ்வொரு அவையிலும் மூன்றிலிருபங்கு பெரும்பான்மை யால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

1947 மே 30-ம் நாளிட்ட குறிப்புத் தொகுதியில் அரசமைப்புச் சட்டமன்ற ஆலோசகர் வகை செய்துள்ளதாவது: ஒரு திருத்தம் மைய நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் எந்தவொரு அவையிலும் தொடங்கப்படலாம்; அத்திருத்தம் அந்த அவையின் மொத்த உறுப்பினர்களது எண்ணிக்கையில் மூன்றிலிரு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட வேண்டும்; அது மாநிலங்களில் மூன்றிலிரு பங்குக்குக் குறையாத சட்டமன்றங்களால் ஏற்கப்பட வேண்டும் என்பதாகும். 1947, ஜூனில் தயாரிக்கப்பட்ட ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை விதிகளைக் குறித்து, சர் என். கோபாலசாமி ஐயங்காரும், சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், திருத்தம், மையச் சட்ட மன்றத்திலுள்ள ஒவ்வொரு அவையையும் சேர்ந்த மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்குப் பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும்; மேலும், மூன்றிலிருபங்கிற்குக் குறையாத மாநிலங்களின் சட்டமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று தமது குறிப்புத் தொகுதியில் கருத்துரைத்துள்ளனர்.

ஒன்றிய அதிகாரங்கள் குழு, ஒன்றிய அரசமைப்புச்சட்டக் குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் 1947 ஜூன் 30-ம் நாள் அன்று நடைபெற்றது. அதன்கண், இக்கருத்து பரிசீலிக்கப்பட்டது. இப்பகுப்பில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டன. ஒரு மாற்றம், நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றிலும் உள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலிருபங்கு பெரும்பான்மை வேண்டுமென்பதற்குப் பதிலாக, அவைக்கு வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் அந்த அளவு பெரும்பான்மை வேண்டும் என்பதாகும். இரண்டாவது மாற்றம், திருத்தத்தை ஏற்க வேண்டிய மாநிலங்களின் எண்ணிக்கையை மூன்றிலிரு பங்கிலிருந்து சரிபாதியாக குறைத்தது. இருப்பினும், இக்கருத்து இறுதியாக முடிவு செய்யப்படவில்லை; இக்கருத்து ஒரு துணைக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது. அப்பரிசீலனை முடிவுறுதிருக்கையில், ஒன்றிய அரசமைப்புச் சட்டக்குழு, 1947 ஜூலை 4-ம் நாளிட்ட தனது அறிக்கையில், அது எடுத்துரைத்தவாறு அப்பகுப்பைப் பெயர்த்தமைத்தது. அதாவது, திருத்தம் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இருபங்குக்குக் குறையாத

பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும்; மாநிலங்களில் குறைந்தது சரிபாதியால் ஏற்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட துணைக் குழு 1947 ஜூலை 11-ம் நாள் அன்று கூடியது. அது பெரும்பான்மையான மாநிலங்களின் சட்டமன்றங்களினுல் திருத்தம் ஏற்கப் படவேண்டும் என்று முடிவு செய்தது. ஒன்றிய அரசமைப்புச் சட்டக்குழு 12—7—1947 அன்று கூடி துணைக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்தது. அது, திருத்தம், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலுமுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரா லும் மேலும், அவை ஒவ்வொன்றிலும் வந்திருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையினராலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. இணைப்பாட்சிச் சட்டமியற்று அதிகாரப் பட்டியல், இணைப்பாட்சி நாடாளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் ஆகியவற்றின் மாறுதல்கள் குறித்த நேர்வு களில் மட்டுமே, இணைப்பாட்சியின் எல்லா மாநிலங்களின் மக்கள் தொகையில் பெரும்பான்மையின் பிரதிநிதிகளாய் விளங்கும் மாநிலச் சட்டமன்றங்களால் திருத்தம் ஏற்கப்பட வேண்டுமென்பது வற்புறுத்தப்படவேண்டியிருந்தது.

13—7—1949-ம் நாளிட்ட துணை அறிக்கை ஒன்று ஒன்றிய அரசமைப்புச் சட்டக் குழுவினுல் அளிக்கப் பட்டது. இந்த அறிக்கை, 12—7—1947-ம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவாறு, அவ் வகையுரையை அவ்வாறே அமைத்துக்கொண்டது. இந்த இனங்கள் 31—7—1947 அன்று அரசமைப்புச் சட்டமன்றத் தால் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சர் என். கோபாலசாமி ஐயங்கார் அவற்றை ஒத்திவைப்ப தற்கு இசையுமாறு மன்றத்தைக் கேட்டுக் கொண்டார்; மாகாண அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்காக, மாகாணச் சட்டமன்றங்களுக்கு அதிகாரம் வழங்குவதற் காகச் செய்யப்படவேண்டிய வகையுரை குறித்து, ஒரு முக்கியமான சிக்கல் எழுந்துள்ளது என்பது அதற்கு அவர் காட்டிய காரணமாகும்.

வரைவுக் குழு, 1948 பிப்ரவரி 6, 9, 10-ம் நாள்க ளன்று நடைபெற்ற அதன் கூட்டங்களில், இவ்வகையுரையை பரிசீலித்தது. 6—2—1948 அன்று நடை பெற்ற கூட்டத்தில்

குழு, 232-வது பகுப்பில் இரண்டு முக்கிய மாற்றங்களைச் செய்து, அதனைப் புதிதாக வரைந்தது. முதல் திருத்தம், சட்டமன்றங்களில் சிறுபான்மை இனத்தினருக்கு இடங்கள் ஒதுக்குவது பற்றியதாகும். இரண்டாவது மாற்றம், பாகம் V-ல் அத்தியாயம் III-ஐத் திருத்துவதற்கு, மாநிலச் சட்டமன்றங்களுக்கு, வரையறுத்த அளவு குறைந்த அதிகாரங்களை வழங்குகிறது. அந்த அத்தியாயத்தில் வரைவு உறுப்புகள் 129 முதல் 158 வரை அடங்குகின்றன ; அவற்றில், மாகாணச் சட்டமன்றங்களின் அமைப்பு, அவற்றில் உறுப்பினர் ஆவதற்குள்ள தகுதிகளும், தகவின்மைகளும் சட்டமன்ற நடைமுறைகள், மாகாணச் சட்டமன்றத் தேர்தல்கள் ஆகியவைகள் விளக்கப்பட்டுள்ளன. மேலே சொன்ன அத்தகைய திருத்தமெதுவும் மாநிலச் சட்டமன்றத்தின் எந்த ஓர் அவையிலும் முதலில் கொண்டுவரப் படலாம் ; அது ஒவ்வொரு அவையிலுமுள்ள மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட பிறகு, நாடாளுமன்றத்தின் ஒவ்வோரவையிலும் அதே பெரும்பான்மை பெற்று நாடாளுமன்றத்தால் ஏற்கப் படவேண்டும் ; அதன் பின்னர் அத்திருத்தம், ஆளுநரால், அல்லது குடியரசுத் தலைவரால் இசைவளிக்கப்பட வேண்டும்.

இவ் வகையுரை, 9—2—1948 அன்று நடைபெற்ற வரைவுக் குழுவின் கூட்டத்தில், அக்குழுவால் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. மாநிலச் சட்டமன்றங்களில் உள்ள அவைகளின் எண்ணிக்கை தொடர்பான அரசமைப்புச் சட்ட வகையுரைகளில் மாறுதல்கள் செய்வதுடன் நிற்குமாறு மாநிலச் சட்டமன்றங்களின் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான அதிகாரம் வரையறுக்கப்பட்டது. 9—2—1948-ம் நாளிட்ட மறு வரைவில், மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா குடியரசுத் தலைவரால் மட்டுமே இசைவளிக்கப்பட வேண்டும் என்றும் வகை செய்யப்பட்டது. தெரிவிக்கப்பட்ட இன்னொரு மாற்றம் யாதெனில், மாநிலச் சட்டமன்றங்களால் திருத்தங்கள் ஏற்கப்படவேண்டியது, மைய அரசுச் சட்டமியற்று அதிகாரப் பட்டியலில் திருத்தம் செய்யும் நேர்வில் மட்டுமன்றி, மாநிலச் சட்டமியற்று அதிகாரப் பட்டியலிலும் பொது அதிகாரப் பட்டியலிலும் திருத்தம் செய்யும் நேர்வுகளிலும் வேண்டுவதாகும் என்பதே.

இவ்வகையுரை, 10—2—1948-ம் நாளன்று நடைபெற்ற வரைவுக் குழு கூட்டத்தில் இறுதியாக்கப்பட்டது. இவ்வாறு இறுதியாக்கப்பட்ட வரைவு 1948 பிப்ரவரியில் வெளியிடப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத்தில் 304-வது உறுப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மாநிலச் சட்டமன்றங்களால் திருத்தங்கள் ஏற்று உறுதி செய்யப்படும் காரியத்துக்காக, அடிப்படை விதியாக, மாநிலங்களின் மக்கள் தொகை பற்றிய குறிப்பை வரைவு உறுப்பு 304 விட்டு விட்டது. இவ்வுறுப்பு, திருத்தங்கள், அப்போது இருந்த மாகாணங்களின் எண்ணிக்கையில் பாதிக்குக் குறையாத மாகாணங்களின் சட்டமன்றங்களாலும், அப்போதிருந்த இந்தியச் சமஸ்தானங்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாதவற்றின் சட்டமன்றங்களாலும் ஏற்கப்படவேண்டும் என்று வகை செய்தது. இவ்வுறுப்பு, மாநிலங்களின் அரசமைப்புச் சட்டத் திருத்த அதிகாரங்களை, ஆளுநரைத் தெரிந்து எடுக்கும் முறைக்கும் சேருமாறு விரிவு செய்தது. வேறுவகையிற் கூறினால் 304-வது வரைவு உறுப்பின்படி, மாநிலச் சட்டமன்றம், இரண்டு விஷயங்கள் தொடர்பாக திருத்தங்களைக் கொண்டுவருவதற்குப் பொருத்தமான அதிகாரம் உடையதாகும்; அவ்விரு விஷயங்களாவன: (1) ஆளுநரைத் தெரிந்தெடுக்கும் முறை; (2) மாநிலச் சட்டமன்ற அவைகளின் எண்ணிக்கை.

அரசமைப்புச் சட்டமன்றம் இவ்வகையுரையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது, இந்தியச் சமஸ்தானங்கள் நாட்டின் நிர்வாக அமைப்புடன் இணைக்கப்பட்டுவிட்டன; அவை, எல்லா நடைமுறைக் காரியங்களுக்கும், மாகாணங்களுடன் சரிசமமாக வைத்து நடத்தப்பட்டன. ஏற்கனவே, ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தது; ஆளுநர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்படும் பேச்சுக்கே இடமில்லை. மாநிலங்களில் மேலவைகளை நீக்குவது அல்லது உருவாக்குவது குறித்த வகையுரை, மாநிலச் சட்டமன்றங்களைப் பற்றிய அத்தியாயத்தின் கீழ் அமைத்துக் கொள்ளப்பட்டது. இந்த மாற்றங்களை முன்னிட்டு, டாக்டர் அம்பேத்கார் 17—9—1949 அன்று, இவ்வுறுப்பின் புதிய வரைவு ஒன்றைக் கொண்டு வந்தார். உறுப்பு 368, இப்புதிய வரைவினைப் பெரிதும் ஒத்துள்ளதாகும்.

மாநிலங்களால் திருத்தங்கள் ஏற்கப்படுவது, மொத்த வாக்காளர்களைக் கொண்டு பொது வாக்கெடுப்பு ஒன்று நடத்துவதன் மூலமாக இருக்க வேண்டுமென்று திரு பிரஜேஷ்வர் பிரசாத் விரும்பினார். அவைக்கு வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை வேண்டுமென்னும் வரம்புரையை திரு மகாவீர் தியாகி எதிர்த்தார். டாக்டர் அம்பேத்கார் மறுமொழி பகர்ந்த பின்னர் இந்த உறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த இணைப்பில் குறிப்பிட்டுள்ள அரசமைப்புச் சட்டமன்றத்தின் விவாதங்களை அ.ச.ம.வி. IV, 109-வது பக்கத்திலும் அ.ச.ம.வி. IX,1643, 1646, 1657, 1659—1663, 1665 பக்கங்களிலும் காண்க.